1 பேதுரு

டுயன் வார்டன்

ஒரு அறிமுகம்

1. வாழ்த்து ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு (1:1-2)
2. இரட்சிப்பு, விசுவாசத்தின் விளைவு (பாகம் 1) (1:3-25)
3. இரட்சிப்பு, விசுவாசத்தின் விளைவு (பாகம் 2) (2:1-10)
4. பாடு அனுபவிக்கும் தேவ பிள்ளைகள் என்ற வகையில் நடந்து கொள்ளுதல் (பாகம் 1) (2:11-25)
5. பாடு அனுபவிக்கும் தேவ பிள்ளைகள் என்ற வகையில் நடந்து கொள்ளுதல் (பாகம் 2) (3:1-22)
6. பாடு அனுபவிக்கும் தேவ பிள்ளைகள் என்ற வகையில் நடந்து கொள்ளுதல் (பாகம் 3) (4:1-11)
7. கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல்: உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள் (பாகம் 1) (4:12-19)
8. கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல்: உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள் (பாகம் 2) (5:1-11)
9. முடிவுக் குறிப்புகள் (5:12-14)

1 பேதுரு
ஒரு அறிமுகம்

அவசியம் என்ற வகையில் ஒரு எழுத்தாளர், தாம் வாழும் காலத்தைப் பிரதிபலிக்கிறார். காலம் கடந்த சத்தியத்தை அவர் அளிக்கிறார் என்றாலும், அவற்றை அவர் வாழும் காலத்து உலகத்தின் சந்தர்ப்பப் பொருளில் அவர் அளிக்கிறார். எழுத்தாளர் எழுதும் ஒவ்வொரு விஷயமும் அவர் வாழும் காலத்து உலகத்தை ஓரளவிற்குப் பிரதிபலிக்கும், ஆனால் அவர் உருவாக்கும் பதிவேடு ஒரு கடிதமாக இருந்தால், எழுத்தாளரும் அவரது தொடக்க வாசகர்களும் வாழும் இடத்தை எழுத்தாளரின் வார்த்தைகள் பிரதிபலிக்கும் என்ற எதிர்பார்ப்பு அதிகரிக்கிறது. எழுத்தாளரும் அதைப் பெற்றுக்கொள்பவர்களும் பொது அனுபவத்தையும் பழக்கவழக்கங்களையும் பகிர்ந்து கொள்ளும்படியும், ஒரே இடங்கள் மற்றும் மக்களை அறிந்துகொள்ளும்படியும், ஒரு கடிதத்தில் ஒருவர், சாதாரணமாக எதிர்பார்க்கிறார். அந்தக் காரணத்தினால், முதல் வாசகர்களுக்கு, எழுத்தாளரின் உலகம் மற்றும் அனுபவங்களைப் பிரதிபலிக்கத் தேவையில்லை அல்லது குறைந்த பட்சம் இலேசான தேவை தான் உள்ளது. இருப்பினும், எழுத்தாளருடனோ அல்லது தோற்றகால வாசகர்களுடனோ தனிப்பட்ட பழக்கம் கொண்டிராத, பின்தொடரும் மற்ற வாசகர்களுக்கு - இரண்டாம் நிலை வாசகர்களுக்கு - இவ்விஷயம் உண்மையாக இருக்காது.

ஒரு கடிதத்தின் இரண்டாம் நிலை வாசகர்கள், அது உண்டாக்கப்பட்ட காலம் மற்றும் இடம் ஆகியவற்றின் சூழ்நிலையில் இருந்து எவ்வளவு தூரம் பிரிக்கப்பட்டு இருக்கிறார்களோ, அவ்வளவுக்கு அவர்கள், அதை எழுதியவர் மற்றும் முதல் வாசகர்கள் ஆகியோரின் உலகத்தைப் பற்றிப் புரிந்துகொள்ள மனவிழிப்புணர்வுடன் முயற்சி மேற்கொள்வதன் அவசியம் அதிக நிச்சயமாக உள்ளது. அது எந்த ஒரு நிருபத்திற்கும், பழைமையானதோ அல்லது நவீனமானதோ, ஏவப்பட்டதோ அல்லது ஏவப்படாததோ உண்மையாகவே இருக்கிறது. நவீன வாசகர்கள், 1 பேதுரு நிருபத்தை அணுகும்போது, அவர்கள் அதை, குவிந்து சேர்ந்த நூற்றாண்டுகள் மற்றும் திணிக்கப்பட்ட கலாச்சார எல்லைகள் ஆகியவற்றின் ஊடே வாசிக்கின்றனர். இதன் எழுத்தாளரையும், அவர் எப்போது வாழ்ந்தார் என்பதையும் கையில் உள்ள இந்தப் பதிவேட்டை எழுத அவரைத் தூண்டியது எது என்பதையும் நாம் அறியும்போது, இந்த நிருபத்தைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதல் வளம் அடையும்.

1 பேதுரு நிருபம் பற்றி நாம் பின்வருவன போன்ற கேள்விகளைக் கொண்டு வருகிறோம்: இதன் எழுத்தாளர், தமது வார்த்தைகளை யார் முதலில் வாசிப்பார்கள் என்று எதிர்பார்த்தாரோ, அந்த முதல் வாசகர்களுடன் அவர் கொண்டிருந்த உறவின் வகையென்ன? குறிப்பிட்ட இந்த மக்களுக்கு, குறிப்பிட்ட இந்த வேளையில் இதன் எழுத்தாளர் இதை எழுதக் காரணமான சுழ்நிலைகள் யாவை? இதன் எழுத்தாளர், இதன் முதல் வாசகர்கள் மற்றும் சுற்றிலும் இருந்த கலாச்சாரம் ஆகியவற்றில் மேலாதிக்கம்

செய்து கொண்டிருந்த மார்க்கரீதியான நம்பிக்கைகள் யாவை? அந்த மக்களின் மீது மேலாதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த எழுதப்படாத சமூக நியதிகளும் பழக்க வழக்கங்களும் யாவை? எழுத்தாளரும் வாசகர்களும் பகிர்ந்து கொண்ட மொழி என்ன? அவர்களின் உலகில் மக்கள் எவ்வாறு பிழைத்தனர்? அவர்கள் எவ்வகையான அரசின்கீழ் வாழ்ந்தனர்? அவர்கள் பகிர்ந்துகொண்ட சமூக நிறுவனங்கள் யாவை? இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றும் இதே போன்ற அக்கறை கொண்ட பல கேள்விகளைச் சுழற்றி விடுகிறது.

மிகத் தொலைவான காலம் மற்றும் இடத்தில் இருந்து நமக்கு வந்துள்ள எந்தப் பதிவேட்டையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், இவ்வகையான தகவல்களை ஆழ்ந்து ஊடுருவி அறிதல் அவசியமாக உள்ளது. இந்தப் பதிவேடு ஒரு கடிதமாக இருக்கையில், அதன் தனிநபருக்குரிய இயல்பினால் இப்படிப்பட்ட ஊடுருவி அறிதல் என்பது விசேஷித்த வகையில் மிகவும் அத்தியாவசியமானதாக உள்ளது. 1 பேதுரு நிருபம் அதிகம் முறைப்படியானதாக இருக்கையில், வழக்கமான ஒரு கடிதத்தில் நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் ஜாக்கிரதையாக வடிவமைக்கப்பட்டுள்ளன, இருந்தாலும் இது ஒரு கடிதமாகவே உள்ளது. 1 பேதுரு நிருபத்தை எழுதியவராலும் அவர் யாருக்கு எழுதினாரோ அவர்களாலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட உலகத்துடன் நாம் எவ்வளவு முழுமையாக ஒன்றாகிறோமோ - அந்த அளவுக்கு, அவர்கள் புரிந்துகொள்ளும்படி பேதுரு விரும்பியதை நம்மாலும் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் புரிந்துகொள்ளும்படி எதிர்பார்க்கப்பட்ட விஷயங்களை நாம் புரிந்துகொள்ளும்போது, இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு இந்த நிருபம் அறிவுறுத்த விருப்பநோக்கம் கொண்டிருப்பது என்ன என்பதை மதிப்பிடும் வழிமுறையை நோக்கி ஒரு முக்கியமான அடிவைப்பை நாம் எடுத்து வைத்திருப்போம்.

ஒரு நிருபம்

பேதுரு எழுதிய முதலாம் நிருபம் பற்றிச் சிலர் வேறுவிதமாக விவாதித்து இருந்தாலும், இது ஒரு கடிதமாகவே உள்ளது. இந்தப் பதிவேட்டின் குறிப்பிடத்தக்க பகுதிகள் தோற்ற காலத்தில் ஒரு கடிதமாக அல்ல, ஆனால் அறிவுறுத்தும் கையேடாகவே எழுதப்பட்டுள்ளன என்று ஒரு சில கல்வியாளர்கள் கூறியுள்ளனர். கிறிஸ்துவுக்குள் புதிதாக மனமாறியவர்களின் பிரயோஜனத்திற்காக ரோமாபுரியில் இது எழுதப்பட்டது என்று கோட்பாட்டளவில் கூறப்பட்டுள்ளது. பேதுரு எழுதிய முதலாம் நிருபம், கிறிஸ்தவராக இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்திற்று என்பதைத் தோற்ற காலத்தில் விளக்கப்படுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது. சிலர், 1 பேதுரு தொடக்கத்தில், புதிதாக மனம் மாறியவர்களுக்கு, ஞானஸ்நானச் சடங்கிற்கான வழிகாட்டும் புத்தகமாக எழுதப்பட்டது என்று சிலர் விவாதித்துள்ளனர்.[1] பிற்பாடு, பக்தியுள்ள சில கிறிஸ்தவர்கள் இந்தப்பதிவேட்டை ஒரு கடித வடிவமாகத் தழுவியெழுதி, அதற்கு அப்போஸ்தலரான பேதுருவின் பெயரைக் கொடுத்து, பரவலாகச் சுற்றுக்கு விட்டனர் என்று கோட்பாடு கூறச் செல்கிறது. உண்மை யாகக் கூறுவதென்றால், இந்தக் கோட்பாடு, பழமைவாத வேதாகமக்

கல்வியாளர்கள் மத்தியில் ஆதரவைப் பெற்றதாக ஒருக்காலும் காணப்படுவதில்லை. காலங்கள் சென்றபோது, விடுதலையியல் கல்வியாளர்களில் பெரும்பான்மையானவர்களும் கூட இதை மறுத்துள்ளனர். இது ஏன் என்பதற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பது சிரமமானதாக இருப்பதில்லை.

ஏவுதல் பெற்றுள்ளமை பற்றிய கேள்விகள் ஒருபுறம் இருக்க, ரோமாபுரியில் பேதுருவிடம் இருந்து தோற்றுவிக்கப்பட்ட ஒரு அறிவுறுத்துதல் அல்லது ஞானஸ்நானம் பற்றிய பதிவேட்டின் உருவத்தை மறைத்து, பின்பு ஆசியா மைனர் பகுதியிலிருந்த சபைகளுக்குப் பரப்ப, எவரொருவரையும் தூண்டியது என்ன என்பதைக் கற்பனை செய்வது கடினமானதாக உள்ளது. 1 பேதுரு நிருபத்தை அனுப்பியவர், அதை ஞானஸ்நான சடங்கிற்கு ஒரு வழிகாட்டியாக அதன் முதல் வாசகர்கள் பயன்படுத்த வேண்டும் என்று நோக்கங் கொண்டிருப்பார் என்றால், அதை ஒரு நிருபமாக உருமறைக்க வேண்டியது ஏன் என்று ஒருவர் வியப்படையக் கூடும். இந்த நிருபத்தை அனுப்பிய நபர் அல்லது நபர்கள், நிருபமாகத் தோன்றும் இதை உண்மையில் ஞானஸ்நான சடங்கிற்கான பதிவேடு உருமாற்றப்பட்டுள்ளது என்று இதன் தொடக்க வாசகர்கள் உணர்ந்து அறிவார்கள் என்று எதிர்பார்த்திருக்கக் கூடுவது எப்படி? இந்தக் கோட்பாட்டை முன்னேறச் செய்தவர்கள் இதற்குத் திருப்திகரமான விளக்கங்கள் எதையும் அளிக்கவில்லை.

1 பேதுரு நிருபத்தின் வாழ்த்து, புத்திமதிகள், ஆறுதல்படுத்தும் வார்த்தைகள், நினைவூட்டுதல்கள் மற்றும் முடிவுரை ஆகிய யாவும், பழங்காலக் கடிதங்களில் பொதுவாகக் காணப்படும் வடிவங்களாக உள்ளன. இத்துடன் கூடுதலாக, சபையின் பழங்காலப் பாரம்பரியம், 1 பேதுரு நிருபம் நமக்கு வந்து சேர்ந்துள்ள கடித வடிவத்தில் இருந்தது என்பதைத் தவிர வேறு எதையும் அறிவதில்லை. 1 பேதுரு நிருபம் கடிதமாகத் தோன்றுதல் தவிர வேறு எந்தப் பதிவேடாகவும் இருக்கும் என்று நம்புவதற்குக் காரணம் எதுவும் இருப்பதில் லை. இருப்பினும், 1 பேதுரு நிருபம் ஒரு ஞானஸ்நான அல்லது ஞான உபதேசப் பதிவேடாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் என்று சந்தேகப்பட்டுள்ள எவரொருவரும், எதிர்பாராத கனியையே உண்டாக்கியுள்ளனர். இது கிறிஸ்தவர்களின் சுய புரிந்துகொள்ளுதல் என்ற உணர்வில், ஞானஸ்நானத்தின் முக்கியத்திற்குக் கவனத்தை ஈர்த்துள்ளது.

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், தங்கள் மனமாற்ற அனுபவத்தை, குறிப்பாகத் தங்கள் ஞானஸ்நானத்தைப் பற்றி நினைவூட்டப்படுகையில், இது விசுவாசம் நிறைந்த, தேவபக்தியுள்ள வாழ்விற்கு, ஊக்குவித்தல் மற்றும் தூண்டுதலைத் தொடர்ந்து தரும் ஒரு ஆதாரமூலத்தை அவர்களுக்கு அளித்தது என்பது உண்மையே. பவுலின் வார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால், பொதுவாக நவீன கால விளக்கவுரையாளர்கள் உணர்ந்து அறிந்துள்ள விஷயங்களைக் காட்டிலும், "மறுஜென்ம முழுக்கு" (தீத்து 3:5) என்பது, பேதுருவின் செய்தியில் அதிகமாகப் பயன்பட்டுள்ளது. இந்தப் பதிவேடு, ஞானஸ்நானச் சடங்கு பற்றிய வழிகாட்டியாகத் தோற்றுவிக்கப்பட்டது என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றாலும், இது உண்மையாக உள்ளது. பேதுரு தமது வாசகர்களுக்கு, மனமாற்றம்/ஞானஸ்நானம் பற்றிய பல குறிப்புகளைத் தரவேண்டும் என்பது மிக அரிதாகவே

எதிர்பார்க்கப்படாததாக உள்ளது (1:4, 23; 2:2, 3; 3:21). பேதுருவோ அல்லது அவரின் முதல் வாசகர்களோ, தங்கள் ஞானஸ்நானத்தைப் பற்றி நினைக்காமல், கிறிஸ்துவுக்குள் தங்கள் மனமாற்றம் பற்றி நினைத்தல் என்பது கேள்விக்கு அப்பாற்பட்டதாக உள்ளது.

இந்த நிருபத்தின் ஒருமைப்பாடு

1 பேதுரு நிருபம் ஒரு ஒருங்கிணைந்த பதிவேடாக உள்ளதா இல்லையா, அதாவது இது ஒரு எழுத்தாளரால் ஒரு சந்தர்ப்பத்திற்காக எழுதப்பட்டதா இல்லையா என்று கேட்பது முக்கியமானதாக உள்ளது. இந்தப் புத்தகத்தின் ஒருமைப்பாட்டைப் பற்றி எழுப்பப்படும் கேள்விகள் பொதுவாக, 1 பேதுரு 4:12ம் வசனத்தைச் சுற்றிச் சுழலுகின்றன. 1 பேதுரு 4:11ம் வசனம் ஒரு துதிப்பாடலாக, துதியின் கூற்றாக, பொதுவாக ஒரு கடிதத்தின் முடிவில் அல்லது குறைந்தபட்சம் அதன் முடிவுக்கு அருகில் பொதுவாக இருப்பதாக உள்ளது. இத்துடன் கூடுதலாக. 4:12-19ல் உள்ள, வாசகர்களின் பாடுகள் பற்றிய விவரிப்பு மிகவும் விரிவாக்கப்பட்டதாக மற்றும் ஒருவேளை, இந்தப் பத்தகத்தில் வேறிடங்களில் காணப்படுவதைக் காட்டிலும் மிகவும் வலிவானதாக உள்ளது. 1 பேதுரு 4:12-5:14 வரையிலான பகுதி மட்டுமே உண்மையான நிருபமாக இருக்கத் தொடங்கிற்று என்ற கருத்தைச் சிலர் கொண்டுள்ளனர். சில காலத்திற்குப் பின்பு, யாரோ ஒருவர், முன்னதாக விவரிக்கப்பட்ட ஞானஸ்நானம் பற்றிய கருத்து யூகத்தை 4:12-5:14 உடன் இணைத்து அதை அப்போஸ்தலரான பேதுருவின் பெயரைக் கொண்டு அனுப்பினார் என்று இந்த விவாதம் கூறிச்செல்கிறது.

1 பேதுரு நிருபம் துணுக்குகளாகவும் துண்டுகளாகவும் தொடங்கிற்று என்ற கருத்தை நெருக்கமாகப் பரிசீலனை செய்யும்போது, அக்கருத்து தோல்வியடைகிறது. முதலாவது, ஒரு துதிப்பாடல் ஒரு பதிவேட்டின் முடிவில் மாத்திரமே காணக்கிடக்க வேண்டும் என்ற சட்டம் எதுவும் இருப்பதில்லை. பவுல் தமது துதிப்பாடல்களில் மிகவும் அழகிய ஒன்றை 1 தீமோத்தேயு 6:15, 16ல் எழுதி, பின்பு தமது நிருபத்தைத் தொடர்ந்து எழுதினார். எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் பாதிப்பகுதி எழுதிய பின்பு, துதிப்பாடல் ஒன்றை அளிக்கப் பவுல் நின்று நிதானித்தார் (எபேசியர் 3:20, 21). மற்றும், 1 பேதுரு 4:12-19ல் உள்ள பாடுகள் பற்றிய விவரிப்பு வலிவானதாக இருக்கையில், இந்த நிருபத்தில் இதற்கு முந்திய பகுதியில் அப்போஸ்தலர், தமது வாசகரின் விசுவாசம் “அக்கினியால் சோதிக்கப்பட்டு இருந்தது” என்று எழுதும்போது கடுமையான பாடுகள் பற்றி மறைமுகமாக விவரித்தார் (1:7).

1 பேதுரு நிருபம் இரண்டு அல்லது அதற்கு அதிகமான பதிவேடுகளாகத் தோற்றுவிக்கப்பட்டு, அவைகள் ஒரு கடிதமாகத் தோன்றும்படி ஒன்றிணைக்கப் பட்டன என்ற யூகமானது அக உணர்வு விவாதங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. இவற்றை உண்மை என்று ஏற்றுக்கொள்வதற்கு வற்புறுத்தும் காரணங்கள் எதுவும் இருப்பதில்லை. பேதுரு தாம் யாருக்கு இந்த நிருபத்தை எழுதினாரோ, அவர்கள் மத்தியில் புதிதாக ஏற்பட்ட துன்பங்கள் பற்றி அவர் அறிந்து பின்பு, 4:12-5:14 வசனப் பகுதியைச் சேர்த்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது, ஆனால் அதுவும்கூட நிச்சயமற்றதாக உள்ளது. 4:12-5:14 வசனப்பகுதிகள், அப்போஸ்தலருக்கு வந்த புதிய தகவல்களுக்குப்

பின்பு, இரண்டாம் அமர்வில் கூட்டப்பட்டிருந்தால், அது இந்தப் பணியின் ஒருங்கமைவை அரிதாகவே வழிவிலக்குகிறது எனலாம்.

இந்த நிருபத்தின் சந்தர்ப்பம்

ஒரு கடிதத்தைப் புரிந்து கொள்வதற்கு, அதை எழுத்தாளர் ஏன் எழுதினார் என்ற கருத்துணர்வைக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அதிகம் இடர்பாடுள்ள காரணி மிக அரிதாகவே உள்ளது. பேதுரு இதை ஏன் எழுதினார்? இதை எழுதக் காரணமானது என்று எந்த சூழ்நிலைகள் இவரது முதல் வாசகர்கள் மத்தியில் மேலோங்கியிருந்தன? வேதாமத்திற்குப் புறம்பே இருந்து கிடைக்கும் வரலாற்று ரீதியான தகவல்களுடன் சேர்த்து, 1 பேதுரு நிருபத்தை மிக நெருங்கி வாசித்தல் என்பது, அந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க நமக்கு உதவக்கூடும். குறுகிய இந்த ஐந்து அதிகாரங்களைக் கவனமாக வாசித்தலானது ஒரு முக்கியமான கவனிப்புக்கு வழிநடத்துகிறது: அப்போஸ்தலர் ஏன் இதை எழுதினார் என்பதைப் புரிந்துகொள்ள, அவரது வாசகர்களின் உபத்திரவம் அதிகமானவற்றைச் செய்கிறது. உண்மையில் உபத்திரவம் என்பதே இந்த நிருபத்தினூடே ஒரு சிவப்பு நூலாக ஓடுகிறது.

பின்தொடரும் பகுதிகளில் நாம், 1 பேதுரு நிருபம் எழுதப்பட்ட காலம் பற்றி ஆராய்வோம், ஆனால் இப்போது நாம், பேதுரு இந்த நிருபத்தை முதல் நூற்றாண்டின் 60 களில் எழுதியிருக்கலாம் என்று கூறுவோம். அது உண்மையாக இருக்கும் பட்சத்தில், அவரது வாசகர்களில் சிலர் பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கிறிஸ்தவர்களாக இருந்திருக்க வாய்ப்புண்டு. காலம் சென்றபோது அவர்களில் சிலர் கிறிஸ்துவுக்குத் தங்கள் முதுகைத் திருப்பியிருந்தனர். மேலும், விசுவாசத்தில் நிலைத்திருந்தவர்களும் நன்கு நிலைத்திருக்கவில்லை. சிலர் ஊக்கமிழந்து போயினர்; அவர்களின் விசுவாசம் அலைவுபட்டிருந்தது. பேதுருவின் வாசகர்கள் தங்கள் கிறிஸ்தவ அனுபவத்தில் உபத்திரவத்தை இணைத்துப் பார்க்க அவர்களுக்கு உதவுவதற்காகப் பேதுரு இந்த நிருபத்தை எழுதினார். அவர்கள் சந்தித்திருந்த உபத்திரவத்திற்குச் சுலபமான விளக்கம் எதையும் அவர் கொண்டிருக்கவில்லை, ஆனால் உலகத்தில் தேவன் தமது சித்தத்தைச் செயல்படுத்திக் கொண்டிருந்தார் என்பதை அவர்கள் உணர்ந்தறிவது முக்கியமானதாக இருந்தது. சில விஷயங்களில் உபத்திரவம் என்பது ஆவிக்குரிய வகையில் உறவு ஏற்படுத்துதலை நிரூபித்திருந்தது. நேர்த்தியான உலோகத்தை (பொன்னை)ப் போன்று, அவரது வாசகர்கள் அக்கினியால் பரிசோதிக்கப்பட்டு சுத்தமானவர்களாகவும் பண்பட்டவர்களாகவும் ஆகியிருந்தனர் (1:7).

அப்போஸ்தலரின் கிறிஸ்தவ சகோதரர்களும் சகோதரிகளும், இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிட்டிருந்தமைக்காக மிகுந்த விலைசெலுத்திக் கொண்டிருந்த காரணத்தால், அப்போஸ்தலர் கவலையடைந்திருந்தார். தேவன், உபத்திரவத்தைத் தடைசெய்ய வல்லவராக இருத்தல் பற்றி அப்போஸ்தலரின் சிந்தையில் கேள்வியெதுவும் இருக்கவில்லை. அவர் ஏன் இவ்வித கேள்வியெதையும் கொண்டிருக்கவில்லை என்பது, தேவன் தமது சித்தத்தைச் செயல்படுத்துவதன் இரகசியங்களில் மறைந்திருந்தது. தேவன் உபத்திரவத்திற்குக் காரணராக இராதிருக்கையில், உபத்திரவத்தின்மூலம் அவர் தமது நோக்கங்களைச்

செயல்படுத்த வல்லவராக இருந்தார். தேவபக்தியுள்ளவர்கள் மத்தியில் உபத்திரவம் என்பது தெய்வீக நோக்கங்களுக்குப் பயன்படும் அளவிற்குக் கூட, மனிதரின் மீறுதல் மற்றும் பாவம் ஆகியவற்றை, மேற்கொள்ளத் தேவன் வல்லவராக இருந்தார். இயேசுவிற்கு நேர்ந்த பாடுகள் ஒரு உதாரரணமாக வைக்கப்பட்டிருந்தது (2:21; 3:17, 18; 4:13). ஆண்டவர் பாடுபட்டதால், அவரது மக்களும் பாடுபட வேண்டும் என்பதை வினோதமானது என்று நினைப்பவர் யார்?

இந்த நிருபத்தின் ஓட்டத்தில் பேதுரு நான்குமுறைகள், தமது வாசகர்களுக்கு உபத்திரவம் ஏற்படும் என்பதை நேரடியாகக் குறிப்பிட்டார் (1:6-9; 3:13-17; 4:12-19; 5:9, 10). விசுவாசிகள் சிறைப்படுத்தப்பட்டு, சித்திரவதைப்பட்டனர் என்று கருத்துத்தெரிவிப்பவையாக இவ்வார்த்தைகள் தோன்றுவதில்லை. மாறாக கிறிஸ்தவரால்லாத அயலகத்தவர் அல்லது ஒருவேளை தங்கள் சொந்தக் குடும்பத்தினரிடத்தில் இருந்தும் வந்த, எதிர்பாராத வெறுப்புணர்வு, சகிக்க இயலாமை மற்றும் புறங்கூறுதல் ஆகியவற்றின்கீழ் அவர்கள் புடைக்கப் பட்டிருந்ததாகக் காணப்படுகின்றன. பேதுருவின் வாசகர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவத்தின் இயல்பைப் பற்றி அவர் ஒருக்காலும் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை, ஆனால் குறிப்புகள் இருக்கின்றன. அவர்கள் தங்களைக் குற்றம் சாட்டுபவர்கள் வெட்கமடையும்படி கண்ணியமான மற்றும் நேர்மையான வாழ்வை வாழும்படி, 2:12 மற்றும் 3:16 ஆகிய வசனங்களில் அவர் வேண்டுகோள் விடுத்தார். அவிசுவாசிகளிடம் இருந்து அவர்கள் பெறும் பழிகூறுதல் அவர்களின் உபத்திவத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பது இங்கு கருத்தாக உள்ளது. கிறிஸ்தவர்கள் புறதெய்வ வணக்கத்திற்குத் தங்கள் முதுகைத் திருப்பியதால், அவர்களுடைய அயலகத்தவர்களில் அவிசுவாசிளாக இருந்தவர்கள், திகைப்படைந்தனர் என்று 4:4ல் அவர் கூறினார். இதன் காரணமாக அவர்களின் அயலகத்தவர்கள் அவர்களை தூஷித்தனர்.

பேதுருவின் வாசகர்களுடைய உடனடியான உபத்திரவம், அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது குடியுரிமை அலுவலகரீதியானதாகவோ இருந்ததாகத் தோன்றவில்லை. இருப்பினும் அரசு அலுவலர்களிடம் இருந்து வரும் உபத்திரவப்படுத்துதல் தொடுவானத்தில் அல்லது அருகில் வந்துகொண்டிருந்ததாகக் குறிப்புகள் இந்த நிருபத்தில் உள்ளன. பேதுரு தமது வாசகர்களை, ஆட்சியாளர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டபோது (2:13-17), அவர் உண்மையான பிரச்சனை ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கக் கூடும். சில கிறிஸ்தவர்கள், ரோம ஆளுகையின் மீது வெறுப்புணர்வு கொண்டிருக்கலாம். கிறிஸ்தவம் புதிதாயிருந்தது. அதிகாரிகள் விசுவாசிகளைக் கூர்ந்து ஆய்வு செய்து, நடைபெற்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வு அல்லது குற்றம் ஆகியவற்றிற்கு அவர்களைப் பழிசாட்டி இருக்கலாம். நவீன உலகத்தில் போன்றே பழங்காலங்களிலும், ஒரு புதிய மார்க்கமானது சந்தேகத்தின் மேகங்களின்கீழ் வந்திருக்க வாய்ப்பு இருந்தது.

இந்தக் தொடக்க காலத்தில், ரோமாபுரியில் இருந்த அதிகார வர்க்க அலுவர்கள் கிறிஸ்தவத்தை அதிகமாய்க் கவனித்தனர் என்பதற்குக் கொஞ்சமே சாட்சியம் உள்ளது. ஆளும் அலுவலர்களிடமிருந்து கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் எந்த அளவிற்கு வந்திருந்தாலும், அவைகள் பேரரசர்கள்

அல்லது மாநில ஆளுநர்களிடம் இருந்து அல்ல, மாறாக உள்ளூர் நகர நீதிபதிகளிடம் இருந்து வந்திருக்கவே வாய்ப்பு உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களைச் சந்தை இடங்களில் விற்பதை அல்லது குடியுரிமை விஷயங்களில் பங்கேற்பதை, உள்ளூர் அலுவலர்கள் கடினமான விஷயமாக்கி இருக்கலாம். பொருளாதார ரீதியான பழிவாங்கும் நடக்கைகள் மற்றும் சமூகரீதியாகக் குற்றம் சாட்டுதல் ஆகியவை, கிறிஸ்தவர்களை (பிறர்) கவனிக்கப் போதுமானதாக இருந்தது. அவரது நாமத்தைத் தரித்துக் கொண்டவர்கள் ஒரு விலை செலுத்த வேண்டியிருந்தது என்பதை அறிந்தனர். கிறிஸ்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த வெட்கக் கேடான நடத்துதலைக் கையாளத் தேவையான ஆவிக்குரிய ஆதார வளங்களை அவர்களுக்குத் தருவதற்காகப் பேதுரு இந்த நிருபத்தை எழுதினார். அவர்கள் எதிர்காலத்தில் சந்திக்க கூடியதாயிருந்த இன்னும் கடினமான சோதனைகளுக்கும்கூட அவர்களைத் தயார்ப்படுத்தப் பேதுரு இந்த நிருபத்தை எழுதினார்.

கிறிஸ்தவர்களின் பாடுகளுடன் கூடுதலாக, இன்னொரு ஆய்வுக்கருத்தும் இதை எழுதியவரின் சிந்தையில் இருந்து வெகுதொலைவில் இல்லை என்பதை, 1 பேதுரு நிருபத்தை நெருக்கமாக வாசித்தல் வெளிப்படுத்துகிறது. இந்த உபத்திரவம் மற்றும் பாடுகள் ஆகியவற்றுடன் உறவுபட்டதாக, புதிய ஏற்பாட்டு முழுவதிலும் எதிரொலிக்கும் ஆய்வுக்கருத்தாக உள்ளது. கர்த்தருடைய மறுவருகை மற்றும் கிறிஸ்தவர்களின் சொந்த மகிமைப்படுதல் ஆகியவை அண்மையில் இருந்ததாக, அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு அறிவித்தார் (1:5, 7, 13; 2:12; 4:7, 13; 5:1, 4, 10). அவர்கள் தாங்கிக்கொண்ட எந்தத் தவறுகளும் பழிவாங்கப்படும். உலகத்தின் நியாயாதிபதியாகவும் அவர்களின் சார்பில் பழிவாங்குபவராகவும் கர்த்தர் திரும்ப வருவார். பேதுரு தமது வாசகர்களின் ஆவல் நிறைந்த நம்பிக்கையைப் புதுப்பிப்பதற்காக எழுதினார் (1:13). கர்த்தருடைய மறுவருகையின் மீதான தைரியமான நம்பிக்கையானது, அவர்களின் விசுவாசத்துடன் இணைந்திருந்த பெரும்வருத்தத்தைக் கையாள அவசியமான பலத்திற்கான ஆதாரமூலமாக இருக்க வேண்டியதாயிற்று (3:14). அப்போஸ்தலரின் முதல் வாசகர்களினுடைய பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கர்த்தரின் மறுவருகை ஆகியவை, 1 பேதுரு நிருபத்தின் இரண்டு ஒருமைப்படுத்தும் ஆய்வுக்கருத்துக்களாக உள்ளன. கர்த்தர் மறுபடியும் வரும்போது, நம்பிக்கைகள் உணர்ந்தறியப்படும் மற்றும் சந்தோஷங்கள் நிறைவாகும் (1:6-9).

பேதுரு இந்த நிருபத்தை எழுதியதற்கான காரணம் பின்வருமாறு தொகுத்துரைக்கப்பட முடியும்: கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகளாக முடிந்தபோது, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர் என்பதை அவர்களுக்கு மறு உறுதிப்படுத்த அவர் விரும்பினார் (4:14, 16). பாடுகள் எதிர்பார்க்கப்பட வேண்டியதாகவே இருந்தது. இந்த உலகம் அறிந்திராத சிலவற்றை, அதாவது இயேசு, கர்த்தராகவும் நியாயாதிபதியாகவும் மீண்டும் தோன்றுவார் என்பதை (காண்க 1:17; 4:17) அவர்கள் அறிந்திருந்த காரணத்தினால் அவர்கள் விடாமுயற்சியுடன் இருக்க முடிந்தது. அவர் மறுபடியும் வரும்போது, மீட்கப்பட்டவர்களுக்கான ஆசீர்வாதங்களை அவர்கள் பகிர்ந்துகொள்வார்கள். பேதுருவின் வாசகர்களுக்கு, “[அவர்கள்] விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை

அடைவார்கள்" (1:9) என்று பேதுரு மறு உறுதிப்படுத்தினார். பவுலைப் போன்று பேதுருவுக்கு, "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று" (ரோமர் 8:18) இருந்தது.

மேலாதிக்கம் செய்யும் இந்த இரு ஆய்வுக்கருத்துகளில் இருந்து வளர்ந்தது என்ற வகையில், பேதுரு உரைத்த மற்ற விஷயங்கள் கிறிஸ்தவ வாழ்விற்கு மையப்பொருளாக இருந்தன. பாடுகள் என்பது குறைகாணும் தன்மையை வளர்க்கும். குறைகாணும் தன்மை என்பது கிறிஸ்தவர்கள், தங்களை இந்த உலகம் நடத்திய அதே வழியில் இந்த உலகத்தை அவர்கள் நடத்துவதற்கு அவர்களை வழிநடத்தும். அவர்கள் பரிசுத்தமும் நலமுமான வாழ்வை வாழவேண்டும், தேவபக்தியற்ற நடத்தைக்கு ஒருக்காலும் தங்களை ஒப்புக்கொடுத்துவிடக் கூடாது என்ற புத்திமதிகளுக்கு அப்போஸ்தலர் மீண்டும் மீண்டும் திரும்பினார் (2:12; 3:8, 9, 17; 4:3, 15). கிறிஸ்தவர்கள் திறந்த முகத்துடனான நேர்மையுடன், பொய்களையும் வஞ்சனைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் வெறுப்புணர்விற்கும் ஏளனத்திற்கும், சாந்தத்துடனும் தயவுடனும் பதில் அளிக்க வேண்டியிருந்தது (3:9). பாடுகள் வரவேண்டும் என்றால், அது கிறிஸ்தவர் அநியாயம் செய்ததால் வருவதாக ஒருக்காலும் இருக்கக் கூடாது என்று பேதுரு வேண்டுகோள் விடுத்தார் (3:17; 4:15). தயவு, ஒப்புக்கொடுத்தல் மற்றும் சேவை செய்தல் ஆகியவை, இந்த உலகத்தின் வெறுப்புணர்வு சகிக்க இயலாத்தன்மை ஆகியவற்றினால் அவர்களிடம் இருந்து பறித்துக்கொள்ளப்பட முடியாத பண்புகளாக இருக்க வேண்டும். தமது வாசகர், பரிசுத்த மக்களாக இருந்தனர் (1:14-16; 2:9), தேவனுடைய ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களாக இருந்தனர் (2:5) என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதற்கு அப்போஸ்தலர் விரும்பினார். பரிசுத்த தன்மை என்பது, இயேசு வாழ்ந்திருந்த வாழ்வைப் போல் வாழ்வதில் அவர்களின் வெற்றிக்கு ஒரு அளவீடாக இருந்தது. வாழ்வின் எல்லா விஷயங்களிலும் இயேசு முன்மாதிரியாக, *hupogrammos,* ஆக இருந்தார். அவரது உதடுகளில் பாவம் இருந்ததில்லை; மனிதர்கள் அவரை வைதபோது, அவர் பதிலுக்கு வையவில்லை (2:21-23). விசுவாசிகளின் உதடுகளில் பாவம் இல்லாதிருக்க வேண்டும்; அவர்களை மனிதர்கள் வையும்போது, அவர்கள் பதிலுக்கு வையக்கூடாது.

இந்த நிருபத்தை எழுதியவர்

சுவிசேஷங்களில் சீமோன் பேதுரு பெரிதும் முக்கியத்துவமாகத் தோன்றுகிறார். மற்ற அப்போஸ்தலர்களில் எவரும், "இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்" கூட (யோவான் 21:7), இயேசுவின் வரலாற்றில், பேதுருவுடன் ஒப்பிடும்படியான இடம் ஒன்றைப் பெற்றிருப்பதில்லை. "பேதுரு" என்ற பெயர் சுவிசேஷங்களில்ல சுமார் எழுபது முறைகள் காணக்கிடைக்கிறது. கூடுதலாக இருபத்தி ஆறு முறைகள் - இவற்றில் பெரும்பான்மையானவை யோவான் சுவிசேஷத்தில் உள்ளன - "சீமோன்" மற்றும் "பேதுரு" என்ற பெயர்கள் ஒன்றாகக் காணக்கிடக்கின்றன. இந்த அப்போஸ்தலர் சீமோன் என்று மாத்திரம் பதினேழு முறைகள் அழைக்கப்படுகிறார், மற்றும் ஒரு முறை சுவிசேஷ நூல்களில் இவர் கேபா என்று அழைக்கப்படுகிறார் (யோவான்

1:42). இதற்கு நேர் எதிராக, அப்போஸ்தலரான யோவான் இருபது முறைகள் மாத்திரமே பேசப்படுகிறார். இயேசுவைத் தவிர வெளியே உள்ள வேறு எவரும் சுவிசேஷப் புத்தகங்களில் பேதுருவைப் போன்று மைய மேடைக்கு வந்திருப்பதில்லை.

இவர் அவசரத்தில் பேசிய தவறான அறிவுறுத்தல், இவரது அலைபாய்ந்த விசுவாசம், இவரது எளிய மனிதப்பண்பு, இவர் நம்பிக்கை வைத்தலைத் தவறாகப் பயன்படுத்தியது ஆகியவற்றைக் குறித்து, இவரைப் பற்றிச் சுவிசேஷப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள வரலாறுகளைக் கூறுவதில், கிறிஸ்தவர்கள் ஒருபோதும் களைப்படைவதில்லை. தண்ணீர்மீது கர்த்தரிடமாய் நடக்கக் தொடங்கியவர் பேதுருதாம், ஆனால் அவரது விசுவாசம் அலைவுபட்டது (மத்தேயு 14:28-33). பிலிப்பி செசரியாவில் பேதுரு, “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்று அறிக்கையிடத் தைரியம் கொண்டிருந்தார் (மத்தேயு 16:16), இதற்குச் சற்றுப்பின்பு அவர் கடுமையான கடிந்துகொள்ளுதலைப் பெற்றார் என்றாலும் (மத்தேயு 16:23), தமது அறிக்கையைத் தைரியமாய்ச் செய்தார். ஆண்டவரை விசாரணை செய்தபோது பேதுரு அங்கிருந்தார். அவர் தமது ஆண்டவரைத் தமது உரிமையாக்கிக் கொள்ளச் சந்தர்ப்பம் தரப்பட்டபோது, நசரேயனாகிய இயேசுவைத் தமக்குத் தெரியவே தெரியாது என்று அவர் மறுதலித்தார் (மத்தேயு 26:69-75). பல நூற்றாண்டுகளுக்கு முன்பு போன்றே இன்றைய நாட்களிலும் பேதுருவின் வரலாறுகள் விசுவாசிகளுக்கு உயிர்ப்பூட்டுகின்றன.

சுவிசேஷப் புத்தகங்கள் முடியும் வேளையில் பேதுருவைப் பற்றிய விஷயங்களை நாம் முடித்துக் கொள்வதில்லை. நடபடிகள் புத்தகத்தின் முதலில் வரும் அதிகாரங்களில், பெந்தெகொஸ்தே நாளுக்கு வழிநடத்திய, மறுரூபமான அப்போஸ்தலரை நாம் எதிர்கொள்கிறோம். அவர் இந்தப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பிரசங்கித்து, யூதர்களுக்கு இராஜ்யத்தின் கதவுகளைத் திறந்து வைத்தார் (நடபடிகள் 2:14-36; காண்க மத்தேயு 16:19). இதற்கும் அப்பால், அவர் கொர்நேலியுவின் வீட்டாருக்குப் பிரசங்கித்ததன் மூலம் புறஜாதியாருக்கு விசுவாசத்தின் கதவை முதன் முதலாகத் திறந்து வைத்தவராக இருந்தார் (நடபடிகள் 10; 11). தொடக்ககால சபையில் அவரது மேன்மைத்துவம், அவரது சாட்சியத்தின் நேர்மையான நம்பகத்தன்மை மற்றும் யூத எதிராளிகளிடம் அவர் தைரியமாக எதிர்த்து நின்றமை ஆகியவை, இயேசு தமது சீஷர்கள் மீது அளித்த வல்லமையை நமக்கு நினைவூட்டுகின்றன. இம்மனிதருக்கு “பேதுரு” அல்லது “கேபா” என்று பெயர்கொடுத்ததில் (யோவான் 1:42) இயேசுவின் ஞானத்தை நாம் நடபடிகள் புத்தகத்தில் காணுகின்றோம், இப்பெயர்கள் முறையே, கிரேக்கு மற்றும் அரமாயிக் மொழிகளில் “பாறை” என்று அர்த்தப்படுகின்றன. மூன்று ஆண்டுகளில் இயேசு, அலைபாய்ந்த ஒரு மீனவரை பலத்தின் கோபுரமாக மாற்றியிருந்தார். இது இயேசுவைப் பற்றிய வரலாற்றில் மாத்திரமல்ல, ஆனால் நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சபையின் தொடக்ககால வரலாற்றிலும் சீமோன் பேதுரு முக்கியமான இடத்தில் இருக்கிறார்.

சுவிசேஷங்கள் மற்றும் நடபடிகள் புத்தகம் ஆகியவற்றில் பேதுருவின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கருத்தாய் ஆராய்ந்தபின்பு, அப்போஸ்தலரின் இரண்டு நிருபங்கள் சிலவேளைகளில் புறம்பே ஒதுக்கப்பட்டு, புதிய

ஏற்பாட்டுப் பதிவேடுகளில் ஏறக்குறைய மறக்கப்பட்டிருத்தல் என்பது வினோதமானதாக உள்ளது.[2] எபிரெயருக்கு எழுதிய நிருபத்திற்கும் வெளிப்படுத்தின விசேஷத்திற்கும் இடையில் இணைக்கப்பட்டுள்ள யாக்கோபு, பேதுரு, யோவான் மற்றும் யூதா ஆகியோர் எழுதிய கத்தோலிக்க நிருபங்கள் (இவற்றை நாம் பொது நிருபங்கள் என்று மாற்றுப் பெயரில் அழைக்கிறோம்) காணாமற்போயிருக்கக் கூடியவைகளாக உள்ளன. ஒருவேளை பவுலின் நிருபங்களினுடைய வல்லமை மற்றும் கிறிஸ்தவ உபதேசத்தை விளக்குவதில் அவைகள் செயல்பட்ட மூழ்கடிக்கும் பணிப்பொறுப்பு ஆகியவை பேதுருவின் நிருபங்களைச் சார்பளவில் புறக்கணித்தலை விளைவித்திருக்கலாம். இந்த புறக்கணிப்பிற்குக் காரணம் எதுவாக இருப்பினும், 1 பேதுரு நிருபம் நமது கிறிஸ்தவ மரபில் ஒரு முக்கிய பாகமாக உள்ளது. ஜெபம் நிறைந்த வகையில் இந்த நிருபத்தைப் படித்தலானது கிறிஸ்தவ விசுவாசத்தை வளப்படுத்த ஒருக்காலும் தவறாது. இந்த நிருபத்தின் செய்தி இது உண்டாக்கப்பட்ட முதல் நூற்றாண்டு உலகின் காலத்தைக் கடந்து நிற்கிறது.

இந்த நிருபத்தின் திறவு வார்த்தைகள், இதன் எழுத்தாளர் என்று நாம் நம்பியிருக்கக் கூடியவரை தெளிவாக அடையாளப்படுத்துகின்றன. இந்த நிருபம் “இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு” என்பவரிடம் இருந்து வருவதாக சாட்சியத்தின் அடிப்படையிலும், இரண்டாம் நூற்றாண்டு சபையின் பொதுவான சாட்சியத்தின் அடிப்படையிலும், சுவிசேஷப் புத்தகங்கள் மற்றும் நடபடிகள் புத்தகம் ஆகியவற்றில் நாம் எதிர்கொள்ளும் அதே பேதுருதாம் தமது பெயர்தாங்கியுள்ள இந்த நிருபத்தை எழுதினார் என்பதில் சிலர் சந்தேகம் கொண்டனர்.[3] எதிர்பார்க்கப்பட்டபடி, சந்தேகம் கொள்பவர்கள் இருந்துள்ளனர், ஆனால் சீமோன் பேதுரு தாம் இதன் எழுத்தாளர் என்பதை உறுதிப்படுத்த ஆதரிக்கும் சாட்சியங்கள் ஏராளமாக உள்ளன.

இந்த நிருபத்தைப் பேதுரு எழுதினார் என்பதில் சந்தேகம் கொண்டுள்ளவர்கள், இது ஒரு கலிலேய மீன்பிடிப்பவரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதைக் காட்டிலும் அதிக மேன்மையான இலக்கியப் பண்பைக் கொண்டுள்ளது என்று விவாதித்துள்ளனர். மேலும் அவர்கள், இந்த நிருபம் பேதுரு ரோமாபுரியில் மரித்த 60 களின் மையக் காலப்பகுதிக்குப் பிந்தியதான சபையின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது என்ற கருத்தையும் பராமரித்தனர்.[4] இத்துடன் கூடுதலாக, அப்போஸ்தலரான பேதுரு இதை எழுதியிருந்தால், கர்த்தருடன் அவருக்கிருந்த தனிப்பட்ட தமது உறவுபற்றிய மறைமுகமான குறிப்புகளுடன் அவர் தமது வேண்டுகோள்களை விடுத்திருப்பார் என்பது நிச்சயம் என்றும் சிலர் விவாதித்துள்ளனர்.

கிரேக்க மொழியில் உள்ள 1 பேதுரு நிருபம், புதிய ஏற்பாட்டில் உள்ள புத்தகங்களில் மிகச்சிறந்த ஒன்று என்பது உண்மையே. இருப்பினும், சில்வானு/சீலா என்பவர் அவரது எழுத்தாளராக அல்லது அமேனுயென்சிஸாக (5:12) இருந்ததாகப் பேதுரு ஒப்புக்கொண்ட உண்மையை நாம் காணாது விடலாகாது. சீலா என்பவர் நடபடிகள் 15:22ல் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். அவர் ஒரு யூதக் கிறிஸ்தவராக இருக்க, அவரது பெயர் கிரேக்க - ரோமக் கலாச்சாரத்தி ன்படியானதாக உள்ளது. எருசலேம் சபையில் இருந்து புறஜாதியாரில்

விசுவாசிகளானவர்களுக்கு, புண்படுத்தக் கூடிய ஒரு நிருபத்தை எடுத்துச் செல்லுதலில் சீலாவின் பணிப்பொறுப்பும் (நடபடிகள் 15) தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரு நிருபங்களிலும் அவர் பவுலுடன் இணைந்திருந்தார் என்ற உண்மையும் (1 தெசலோனிக்கேயர் 1:1; 2 தெசலோனிக்கேயர் 1:1), அவர் கற்றறிந்த, சொல்வளம் கொண்ட கிறிஸ்தவராக இருந்தார் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன. விஷயம் அப்படியிருந்தால், 1 பேதுரு நிருபத்தை எழுதியதில் அவரது பங்குதான் இந்த நிருபத்தின் மேன்மையான கிரேக்க மொழிநடைக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.[5] சீலா பேதுரு கூற எழுதியிருந்தார் என்றால், அவர் பேதுருவின் வாக்கியங்களை ஒரு நல்ல கிரேக்க உரையாக மறுவார்த்தை உருவாக்கம் செய்திருந்தாலும்கூட, இது பேதுருவின் நிருபம் என்றே கூறப்படுவதாக இருக்கும். சீலா ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார் என்பதால் (நடபடிகள் 15:32), 1 பேதுரு நிருபத்தின் ஏவுதலை உறுதிப்படுத்த, பேதுரு கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் அப்படியே எழுதியிருப்பார் என்று ஒருவர் யூதித்தல் அரிதாகவே தேவைப்படுகிறது.

பேதுருதாம் இதை எழுதினார் என்பதற்கான மற்ற மறுப்புகள் பற்றி, 1 பேதுரு நிருபம் 60 களின் மைய காலத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியைப் பிரதிபலிக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு, ஆசியா மைனர் பகுதியின் நாடுகளில் தொடக்க கால சபையின் மேம்பாடு பற்றிப் போதிய அளவை நாம் அரிதாகவே அறிகிறோம். அப்போஸ்தலர், கர்த்தருடனான தமது தனிப்பட்ட உறவைப்பற்றிய மறைமுகமான குறிப்பைத் தராதது ஏன் என்று நம்மால் கூற முடிவதில்லை. இருப்பினும், அவர் தம்மை "கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சி" என்று அழைத்ததை நாம் கவனிக்கிறோம் (5:1; காண்க 2:22, 23). அது போதுமானதாக உள்ளது. கையில் உள்ள சாட்சியத்தைக் கொண்டு பார்க்கையில், இந்த நிருபம் அப்போஸ்தலரான பேதுருவினால் எழுதப்பட்டது என்பதைச் சந்தேகப்படக் காரணம் எதுவும் இருப்பதில்லை.[6]

இதைப் பெற்றுக்கொண்டவர்கள் எங்கு வாழ்ந்தனர்

கலாத்தியருக்கு எழுதிய நிருபம் மற்றும் 1 கொரிந்தியர் நிருபம் ஆகியவற்றில், பேதுருவைப் பற்றி, பவுலின் மறைமுகமான குறிப்புகளைத் தவிர்த்து, புதிய ஏற்பாட்டில் நடபடிகள் 15ம் அதிகாரம்தான் பேதுருவைப் பற்றிய கடைசிக் குறிப்பாக உள்ளது.[7] எருசலேம் கூட்டம் என்று அழைக்கப்பட்ட கூட்டத்தில் கி. பி. 50ம் ஆண்டில் இந்த அப்போஸ்தலர் பேசினார். அதன் பிறகு நடபடிகளில் நாம் அவரைப் பற்றி கேள்விப்படுவதில்லை. கி. பி. 50 மற்றும் இந்த அப்போஸ்தலர் இறந்ததாகக் கூறப்படும் 67 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பதினேழு ஆண்டுகளில் இந்த அப்போஸ்தலர் என்ன செய்துகொண்டு இருந்தார்? பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபத்தில் பேதுருவைப் பற்றிய வேதனையான குறிப்பு ஒன்றுள்ளது. கொரிந்து நகரின் சபையில் இருந்த பல்வேறு குழுக்களில் "கேபாவைச் சேர்ந்தவர்கள்" என்று உரிமை பாராட்டிய குழு ஒன்று இருந்தது (1 கொரிந்தியர் 1:12). பேதுரு கொரிந்து நகரில் இருந்திருந்தாரா? அவர் அங்கு இருந்தார் என்று பவுல் கூறவில்லை. கேபா குழுவினர் எருசலேம் அல்லது வேறு எங்கிருந்தாவது கொரிந்து நகருக்கு வந்து சேர்ந்திருக்கலாம். "கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள்" என்று

உரிமை பாராட்டிய குழு ஒன்றும் இருந்தது என்பதை நாம் கவனிக்கிறோம். இயேசு அந்த நகரில் இருந்திருக்கவில்லை, குறைந்தபட்சம் அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் அங்கிருந்ததில்லை என்பது தெளிவு. பேதுரு கொரிந்து நகரில் இருந்தாரா இல்லையா என்பது நிச்சயமற்றதாக உள்ளது, ஆனால் பலஸ்தீனத்தின் சுற்றுவட்டாரங்களுக்குப் புறம்பே பேதுரு முனைப்பாக ஊழியம் செய்திருந்தார் என்பதைப் பவுலின் மறைமுகக் குறிப்பு கருத்தாக உணர்த்துகிறது. 1 கொரிந்தியர் 9:5ம் வசனம், பவுலைப் போன்றே பேதுருவும் பயணம் செய்யும் ஊழியக்காரரானார் என்பதற்கு மேலும் சாட்சியம் அளிக்கிறது.

ஆசியா மைனர் பகுதியில் பேதுரு காலத்தைச் செலவிட்டிருந்தார் என்று நாம் சற்று தைரியமாகக் கூற முடியும். அவர் தமது நிருபத்தில், தற்போதய நாடான துருக்கியை உள்ளடக்கும் அக்காலத்து ரோமானிய மாகாணங்கள் நான்கைக் குறிப்பிட்டார். பொந்து மற்றும் பித்தினியா ஆகிய பெயர்கள் 1 பேதுரு 1:1 ல் தனியாகப் பட்டியலிடப் பட்டிருக்கையில், இவ்விரு பகுதிகளும் கி. மு. முதல் நூற்றாண்டில். பாம்ப்பே என்பவர் பகுதியை ஒருங்கமைவு செய்தபோது, ஒரே ரோம மாகாணமாக இணைக்கப் பட்டிருந்தது. இந்தப் பகுதிகளில் சிதறி இருந்த சபைகளில் பேதுரு நேரில் சந்தித்துப் பழகி இருந்தகாரணத்தினால் இந்த சபைகளுக்குப் பேதுரு இந்த நிருபத்தை எழுதினார் என்று யூகித்தல் நியாயமானதாக உள்ளது. பவுல் ஊழியப்பயணம் செய்த அதே காலகட்டத்திலேயே பேதுருவின் ஊழியப்பயணங்களும் நடைபெற்றிருக்கலாம். பேதுருவும் அவரது உடன் ஊழியர்களும் ஆசியா மைனரின் பரந்த பகுதிகளில் சபைகளை நிலைநாட்டி இருந்தால், அதுவே அவர் "பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்க[ளுக்கு]" இந்த நிருபத்தை எழுதியதற்குக் காரணமாக இருக்கும் (1:1).

இந்த மாகாணங்கள் பட்டியல் இடப்பட்டுள்ள வரிசை முறை, கவனிக்கத் தக்கதாக இருக்கலாம். சில்வானு/அல்லது சீலா (5:12) அல்லது வேறு யாரோ ஒரு கிறிஸ்தவச் செய்தியாளர், வடக்கு மத்திய பொந்து நாட்டில் கருங்கடல் கரையில் அமையப்பெற்றிருந்த சினோப் என்ற நகருக்கு ஒரு கப்பலில் சென்றிருக்கலாம். அவர் கலாத்தியா மாகாணத்தின் வழியே, தெற்குமுகமாய்ப் பயணமாகி இருக்கலாம், அங்கிருந்து தென்கிழக்கில் கப்பதோக்கியாவுக்குச் சென்று, ஆசியாவிற்குள் வடக்கு முகமாய்ப் பயணப்பட்டு, அங்கு அப்பகுதியில் உள்ள கடல்துறைமுகங்கள் ஒன்றில் ஒரு கப்பலில் ஏறியிருக்கலாம். (பின்தொடரும் பக்கத்தில் உள்ள வரைபடத்தைக் காணவும்). அந்தச் செய்தியாளர் சென்ற இடங்கள் எல்லாவற்றிலும் அவர், விசுவாசிகளைக் கண்டிருப்பார், அவர்களுக்குப் பேதுருவின் வார்த்தைகளை வாசித்திருப்பார். இந்தத் தொடக்க காலத்திலேயே ஆசியா மைனர் பகுதி முழுவதிலும் சிறு சிறு குழுக்களாகக் கிறிஸ்தவர்கள் சிதறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

பேதுருவினால் குறிப்பிடப்பட்ட மாகாணங்கள் ஒரு பெரிய புவிப்பரப்பை உள்ளடக்கி இருந்தன. அங்கிருந்த மக்கள், பல்வகைப்பட்ட சமூக, மக்களின மற்றும் மொழிகள் பேசும் குழுக்களாக இருந்தனர். ரோமானிய அதிகாரம் ஏறுமுகமாயிருந்த மேற்கத்திய மாகாணங்களாகிய ஆசியா மற்றும் பித்தினியா ஆகியவை, கிறிஸ்தவம் உதயமாவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே

தங்களின் கடைசி அரசர்களினால் ரோமாபுரிக்கு கையளிக்கப்பட்டிருந்தன. பொந்து, கலாத்தியா மற்றும் கப்பத்தோக்கியா ஆகியவை படையெடுப்பினால் ரோமப் பேரரசுடன் இணைக்கப்பட்டிருந்தன.

கி. மு. 133ல் ரோமர்கள் ஆசியாவைச் சேர்த்துக் கொண்டபின்பு வந்த முதல் பத்து ஆண்டுகளில், இந்த மாகாணம், பேராசை பிடித்த ரோமானிய வரிவசூல் செய்பவர்களின் கைகளில் மிகவும் பயங்கரமாக உபத்திரவப்பட்டது. ரோம அதிகாரங்களை எதிர்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது அந்த மாகாணத்து ஜனங்கள் அதை சாதகமாக எடுத்துக் கொண்டார்கள். கி.மு. 88க்குப் பின்பு சுமார் இருபது ஆண்டுகளாக, பொந்து தேசத்து அரசராயிருந்த ஆறாம் மித்திரிடேட்ஸ் என்பவர், யுத்தம் செய்ததினால் அந்த மாகாணத்தைப் பெரிதும் தொல்லைக்கு உள்ளாக்கினார். ஆசியாவில் இருந்த பெரும்பான்மையான நகரங்கள் பொந்து தேசத்து அரசருடன் இணைந்து ரோமாபுரிக்கு எதிராகத் தங்கள் பங்கைக் கையளித்தன. கி. மு. 60 களில், ரோமானிய சட்டசபையானது, மித்திரிடேட்ஸை தீர்மானமாகக் கையாளும்படி பாம்ப்பே என்பவருக்கு உத்தரவிட்டது. இந்த ரோமானியப் படைத்தளபதி, பொந்து தேசத்து அரசரைப் புறம்பே துரத்தி, ஆசியாவின் தெற்குக் கடற்கரையில் எங்கும், கடற்கொள்ளையர்களின் ஆதிக்கப்பகுதிகளில் இருந்து அவர்களை வெளியேற்றி, பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது இந்தத் துணைக்கண்டம் கொண்டிருந்த அதே மாகாண எல்லைக்கோடுகளில் இதை ஒருங்கமைவு செய்தார். மித்திரிடேட்ஸ்களின் படையெடுப்பை ஆதரித்த நகரங்களை ரோமாபுரி கடுமையாகக் கையாண்டது. கி.மு. 75ல் பித்தினியாவின் கடைசி அரசர், தமது இராஜ்யத்தை ரோமாபுரியின் அமைச்சரவைக்கும் அதன் மக்களுக்கும் கையளித்தார்.

மித்திரிடேட்ஸுக்குப் பின்பு, ஆசியா மைனரின் நகரங்கள் சமாதானத்திற்காக ஏங்கின, ஆனால் அவைகள் நிவாரணம் எதையும் கண்டடையவில்லை. கி. மு. 44ல் சீஸர் கொலைசெய்யப்பட்டபின்பு, ரோமானிய உள்நாட்டு யுத்தங்கள் தொடங்கின. ரோமானியப் படைத்தளபதிகளும் பிரபுக்களும் தங்கள் படைகளுக்கு நிதியுதவி அளிப்பதற்காக, ஆசியாவின் நகரங்களுக்கு இரக்கமற்ற வகையில் வரிவிதித்தனர். யுத்தங்கள் ஓய்ந்தபோது, கி. மு. 27ல் அகுஸ்து என்பவர் பேரரசராக உதித்தார். இவர் ரோமானியர்களின் யுத்தகடவுளான ஜானஸ் என்பவரின் கோவில் கதவுகளை மூடியவராகவும் பாக்ஸ் ரோமாவை (ரோமாபுரியின் சமாதானத்தை) நிர்மானித்தவருமாக இருந்தார். அகுஸ்து அரசன் கொடுமையான வரித்தொல்லைகளை நிறுத்தி, ஆசியா, பித்தினியா நகரங்களில் நிலையான அரசாங்கங்களை நிறுவ உதவினான். ஆசியாவின் இளைப்படைந்த குடியிருப்புகள் அவரைத் தெய்வீகமானவர் என்று உயர்த்தின. அகுஸ்துராயனின் மாட்சிமைதாங்கிய ஆட்சித் தொடக்கத்தில் இருந்து பேதுரு தமது முதலாம் நிருபத்தை எழுதிய காலம் வரையிலுமான ஒரு நூற்றாண்டு இடைவெளியின்போது, ஆசியா தனது வளமையை மறுபடியும் பெற்றுக்கொண்டது. அது பேரரசின் இரத்தினங்களில் ஒன்றாக இருந்தது.

ஆசியா மற்றும் பித்தினியா/பொந்துவுக்கான ரோமானிய ஆளுநர்கள், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டனர். அவர்கள் ரோமாபுரியின் முதன்மை நிர்வாக அலுவலரான கான்ஸலுக்காக [தூதருக்காக] செயல்பட்டதால்

புரோகான்ஸல்கள் அதாவது, ஆளுநர்கள் என்று அழைக்கப்பட்டனர், ஆளுநர்கள் ஒரு ஆண்டு பதவிக்காலத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் அலுவல் காலத்தில் செல்வந்தர்கள் ஆகும்படி எதிர்பார்க்கப்பட்டனர், உண்மையில் அவர்கள் அவ்வாறே செல்வந்தர்கள் ஆயினர். நடபடிகள் புத்தகத்தில் செர்கியுபவுல் (13:7) மற்றும் கல்லியோன் (18:12) என்ற இரண்டு ஆளுநர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆசியா மற்றும் பித்தினியா/பொந்து போன்ற மிகப்பழைய, சமாதானம் நிறைந்த மாகாணங்கள், ரோமானிய அமைச்சரவையின் நிர்வாகத்தின் கீழ் இருந்த காரணத்தினால், அவைகள் அமைச்சரவை சார்ந்த மாகாணங்கள் என்று அழைக்கப்பட்டன. இவ்விரு மாகாணங்களுமே தங்களுக்குள், கிரேக்கு பேசும் எண்ணற்ற நகரங்களைக் கொண்டிருந்தன. முதல் நூற்றாண்டில், ஆசியாவின் ஆளுநர் ஆவதற்குச் செலுத்தப்படுவதைக் காட்டிலும் ரோமானிய அமைச்சரவைக்கு உயர்ந்த விலை எதுவும் செலுத்தப்படவில்லை.

சற்றுகாலத்திற்கு, கலாத்தியாவும் கப்பத்தோக்கியாவும், ரோமானி-யர்களின் முகமை அரசர்களால் ஆளப்பட்டிருந்தன, பாலஸ்தீனத்தின் பெரிய ஏரோது ஒரு முகமை அரசராகியிருந்தார். கி.மு. 25ல் கலாத்தியா ரோமானிய மாகாணத்திற்குள் ஒருங்கமைக்கப்பட்டிருந்தது. கி. பி. 17ல் இதே விதி கப்பத்தோக்கியாவின் மேலும் விழுந்தது. கலாத்தியா கப்பத்தோக்கியா என்ற இரு மாகாணங்களும், பேரரசரின் நேரடி ஆளுகையின்கீழ் இருந்தன. அவைகள் பேரரசின் எல்லைகளுக்கு நெருக்கமாக இருந்த காரணத்தால், அவற்றில் அல்லது அவற்றிற்கு அண்மையில், ரோமானிய சேனைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அமைச்சரவைக்கு அல்ல ஆனால் பேரரசருக்கே இந்த சேனைகள் விசுவாசமாக இருந்தன. கலாத்தியா மற்றும் கப்பத்தோக்கியா போன்ற மாகாணங்களை ஆளுகை செய்வதற்குப் பேரரசர் தனிப்பட்ட சேனை அதிபதிகளை அனுப்பினார். அவைகள் ராஜரீக மாகாணங்கள் என்று அழைக்கப்பட்டன.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டின்போது, இந்த மாகாணத்தின் வடபகுதியில் குடியமர்ந்த கவுல்கள் என்ற மக்களினத்தின் பெயரில் இருந்து, கலாத்தியா மாகாணம் தனது பெயரைப் பெற்றிருந்தது. இந்த மாகாணத்தின் தெற்குப்பகுதியில் அந்தியோகியா, லீஸ்திரா போன்ற நகரங்கள் இருந்தன, இவற்றின் அரசும் மொழியும் இவற்றை கிரேக்க - ரோமானியப் பகுதிகளாகக் குறித்தன. கப்பத்தோக்கியா என்பது அந்தப் பகுதியின் கழிமுகத்தில் இருந்தது. இந்த மாகாணத்தில் கிரேக்க - ரோமானிய முக்கிய நகரங்கள் எதுவும் இருக்கவில்லை. கப்பத்தோக்கியாவின் மக்களில் பெரும்பான்மையானவர்கள், மலையின் பகுதிகளில் ஒருங்கமைக்கப்பட்ட சிறு கிராமங்களில் வாழ்ந்தனர்.

ஆளுநராக இருந்தாலும் அல்லது பேரரசரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியாக இருந்தாலும், ரோமானிய ஆளுநர் என்பவர் சாதாரணமாக, பேரரசின் பொது மக்களின் அன்றாட விஷயங்களில் சிறு பணியையே செயல்படுத்தினார். நகரங்கள் தங்களுக்குச் சொந்தமான பொதுக்கட்டிடங்களைத் தாங்களே பராமரித்தன, காவல்படையை நிர்வகித்தன மற்றும் பொது வேலைகளுக்காகவும் ரோமாபுரிக்கு வரிசெலுத்துவதற்காகவும் தாங்களே வரிவிதித்தன. அவர்கள் பல்வேறு குழுக்களால் மேற்பார்வை இடப்பட்டனர், பொதுப்பணிகளுக்கென்று ஒரு குழுவும், வர்த்தகத்தை மே

ற்பார்வை இடுதலுக்கென்று இன்னொரு குழுவும், இதுபோன்ற பல்வேறு குழுக்களும் இருந்தன. நகரங்களில் சமாதானம் இருக்கும் வரையிலும் மற்றும் வரிகள் செலுத்தப்பட்டு இருக்கும் வரையிலும், ரோமாபுரியில் இருந்து சிறிதளவே தலையீட்டை அல்லது உதவியை அவைகள் எதிர்பார்த்தும் பெற்றுக்கொண்டும் இருந்தன. ஆசியா மற்றும் பித்தினியா/பொந்து போன்ற வளமான மாகாணங்களில், பேரரசின் எல்லைகளுக்குள் நன்கு வளம் பெற்றிருந்த பகுதிகளில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சேனைகள் எதுவும் இல்லை மற்றும் ஒரு சில ரோமானியப் போர்ச்சேவகர்களே அங்கு இருந்தனர். ரோமானிய வற்புறுத்துதலுக்கு விரைவாக, தடையின்றி இணங்குவதற்கு, அங்கு தங்கியிருந்தவர்களுக்கு, ரோமாபுரி அதிகாரம் கொண்டிருந்தது மற்றும் அதைப் பயன்படுத்த அது தயங்காது என்ற அறிவே போதுமானதாக இருந்தது. 2:13-17ல் பேதுருவின் வார்த்தைகள், அரசாங்கத்தின் பன்முனைப் படிநிலை முறைமை என்ற பின்திரைக்கு எதிரே எழுதப்பட்டன. ஆளும் அதிகாரிகளில் சிலர் ரோமானியர்களாகவும் சிலர் உள்ளூர் வாசிகளாகவும் இருந்தனர்.

1 பேதுரு நிருபத்தின் தொடக்க வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணங்களின் கலாச்சாரங்கள், மார்க்கங்கள் மற்றும் பொருளாதார நிலைகள் பல்வகைப் பட்டவையாக இருந்தன. நகரங்களின் கிரேக்கக் கலாச்சாரத்தின் பொதிவுகள் இருந்தன. ஆசியா முழுவதிலும் பித்தினியா மற்றும் பொந்து தேசத்தின் கடற்கரை நெடுகிலும், நகரங்கள் எண்ணற்றவையாகவும் வளம்பொருந்தியவையாகவும் இருந்தன. கலாத்தியா மற்றும் கப்பத்தோக்கியா என்ற மையப்பகுதியின் நாடுகளில் நகரங்கள் கொஞ்சமாகவும் சிறியவையாகவும் இருந்தன. பவுலைப் போன்றே பேதுருவும், பிரசங்கித்தலின் தமது முதல் முயற்சிகளை இந்த நகரங்களை நோக்கித் திருப்பினார் என்று யூகித்தல் நியாயமானதாக உள்ளது. வர்த்தக சாலைகளில் அமைந்திருந்த நகரங்கள், ஜெப ஆலயங்களைக் கொண்டிருந்து இருக்கக் சாத்தியக்கூறு இருந்தது, அவைகள் சுவிசேஷம் ஆரம்ப நிலையில் கேள்விப்படும் சந்தர்ப்பத்தைப் பெற்றன. கிறிஸ்துவுக்கு முதல் முதலாக மனமாறியவர்கள் பெரும்பாலும் ஜெப ஆலயங்களில் இருந்தே வந்திருக்கையில், அவர்களைத் தொடர்ந்து, தேவபக்தியுள்ள புறஜாதியார் வந்தனர், இவர்களில் சிலர் யூதர்களின் வழிகளை மதித்திருந்து, ஜெப ஆலயங்களில் கிறிஸ்தவ போதகர்கள் தோன்றும் முன்பு அடிக்கடி அங்கு வந்திருந்தனர். பேதுருவின் வாசகர்களில் ஒருசிலராவது, புறதெய்வ வணக்கப் பின்னணியில் இருந்து கிறிஸ்துவினிடம் வந்திருந்தனர் என்பதை அவரது வார்த்தைகள் தெளிவாக்குகின்றன (1:14, 18).

பேதுருவின் வாசகர்களில் பெரும்பான்மையான மக்கள், ஏராளமான கடவுள்களை ஆராதித்து வந்த மக்களிடையே வாழ்ந்திருந்தனர். அவர்களில் சிலர், கிரேக்கத் தெய்வமான பாந்தியனுக்குப் பாரம்பரியமான பக்தர்களாக இருந்தனர், ஆனால் மற்றவர்கள் சொந்த மண்ணில் வேர்கொண்டிருந்த, மா, மென் அல்லது சிபெல் போன்ற விநோதமான பெயர்களைக் கொண்டிருந்த தெய்வங்களுக்குப் பக்தர்களாக இருந்தனர். ஏதோ ஒரு காலகட்டத்தில், மார்க்க நடைமுறைகள் மந்திரவாதமாகவும் மூடநம்பிக்கையாகவும் தேய்ந்து போயிற்று. பேதுருவினால் குறிப்பிடப்பட்ட தேசங்களின் மக்கள் மத்தியில் மூடநம்பிக்கை மலிந்து கிடந்தது என்பதைச் செய்விளக்கப்படுத்தும் பழங்காலச் சாட்சியங்கள் ஏராளமாக உள்ளன.

புனித ஊற்றுகள், புனித மரத்தோப்புகள் மற்றும் அசுத்த ஆவிகளும் அடிக்கடி வந்துபோகும் பகுதிகள் ஆகியவை எல்லா இடங்களிலும் இருந்தன. சில இடங்கள், மக்கள் தங்கள் வியாதிகளில் இருந்து குணமாக்கப்படும் இடங்களாகக் கருதப்பட்டன. மற்ற இடங்களில், தனிநபர் ஒருவர் ஒரு எழுதுபலகை அல்லது பலகையில், ஒரு விரோதிக்கு எதிராக சாபம் ஒன்றை எழுதி, அதை பூமிக்கடியில் புதைத்து வைத்து, தமது கோரிக்கையை இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிகள் நிறைவேற்றும் என்று எதிர்பார்ப்பார். பவுலின் பிரசங்கத்தினுடைய செல்வாக்கின் கீழ் வந்து சேர்ந்த எபேசு நகரத்து மக்கள், ஏராளமான எண்ணிகையிலான தங்கள் மாயவித்தைப் புத்தகங்களைக் கொண்டு வந்து அவற்றை எரித்துப் போட்டதைப் புதிய ஏற்பாட்டு மாணவர்கள் நினைவுக்குக்கொண்டுவருவார்கள் (நடபடிகள் 19:19).

தேவர்களை ஆராதித்தல் என்பது, ஆசியா மைனர் பகுதி முழுதிலும் உள்ள சமூக வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்தது. தேவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட பலிகளைச் செலுத்துதல், பண்டிகைகள் அல்லது விளையாட்டுகள் ஆகியவற்றில் இருந்து விலகி இருத்தல் என்பது பொதுவான குற்றமாக இருந்தது, களியாட்டுச் சடங்குகள் அல்லது பலிசெலுத்தும் சடங்காச்சாரங்களில் பங்கேற்கக் கிறிஸ்தவர்கள் மறுத்தபோது, அவர்கள் புறதெய்வ வணக்க சமூகத்துடன் உடனடியான முரண்பாட்டிற்கு உள்ளாயினர். விவசாய விளைபொருட்களைப் பொதுச்சந்தையில் விற்றல் அல்லது தோல் தொழில் அல்லது ஒரு பானைவிற்கும் கடை போன்ற சிறு வியாபாரங்களைச் செய்தல் என்பது கிறிஸ்தவர்களுக்குக் கடினமானதாயிற்று.

பேதுரு அறிந்திருந்த உலகத்தில் கிறிஸ்தவம் புதிதும் வினோதமுமாக இருந்தது. விசுவாசிகள் தங்கள் மீது பொதுமக்கள் வன்கண் கொண்டிராதபடி தங்கள் பலத்தினால் இயன்றவரையில் முயற்சி செய்கையில், அதில் இடர்ப்பாடு கொண்டிருந்தனர், விளக்கப்படாத திருட்டு அல்லது மர்மமான மரணம் ஒரு பகுதியில் ஏற்பட்டால், புறதெய்வ வணக்க சமூகம் அந்த நகரில் உள்ள புதிய மார்க்கத்தின் மீது அந்தப் பழியைப் போட முயற்சி செய்தது. அந்த சம்பவத்திற்குக் கிறிஸ்தவர்களே ஆணிவேராக இருந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை என்பதாக அவர்கள் முடிவு செய்தனர். ஒரு பூமியதிர்ச்சியோ அல்லது பஞ்சமோ ஏற்பட்டால், தங்கள் தெய்வங்களுக்குச் செலுத்தப்பட்ட சடங்காச்சாரங்களைக் கிறிஸ்தவர்கள் புறக்கணித்ததால் தான் அவ்வாறு ஏற்பட்டது என்று அவர்கள் மீது பழிபோடுதல் சுலபமானதாக இருந்தது. 1 பேதுரு நிருபத்தின் மையக் கருத்துப் பொருளான, உபத்திரப்படும் விசுவாசிகள், உலகத்தின் சந்தர்ப்பப் பொருளில் தங்களைப் போன்ற விசுவாசிகள் வாழ்ந்த பகுதிகளினால் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

எழுதப்பட்ட காலம்

இந்த நிருபத்தில், "உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும், ... உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" என்று பேதுரு கூறும் இடமான 5:13 மாத்திரமே, பேதுரு இதை எப்போது எழுதியிருப்பார் என்பதற்கு இந்த நிருபம் தரும் ஒரே குறிப்பாக உள்ளது. பாபிலோன் என்று அழைக்கப்பட்ட ஒரு இடத்தில் பேதுரு இருந்தார் என்பதே இந்தத் கூற்றை நாம் அர்த்தம் எடுத்துக்கொள்ளும் இயல்பான வழியாக

உள்ளது. அந்த இடத்தில் பேருதுவின் துணைவர்களாக இருந்தவர்கள் தங்கள் வாழ்த்துக்களை அனுப்பினர் என்பதே இதன் அர்த்தமாகக் காணப்படுகிறது (5:13க்கான விளக்கங்களைக் காணவும்). பாபிலோன் என்பது ஐப்பிராத்து நதியின் கரையில் அமைந்த புகழ்பெற்ற நகரமாக, கி.மு. 587ல் எருசலேமை அழித்து யூதமக்களை அடிமைத்தளைக்கு இழுத்துச் சென்ற பேரரசின் மையமாக இருந்தது. "பாபிலான்" என்ற வார்த்தையை அந்தப் புகழ் பெற்ற நகரத்திற்கான குறிப்பாக எடுத்துக்கொள்ளுதலே முதல் மனச்சாய்வாக உள்ளது. இருப்பினும், இந்தப் பெயரை நேரடியாக அவ்வாறு எடுத்துக் கொள்ளுதலில் பிரச்சனைகள் உள்ளன.

முதலாவது, ரோமப்பேரரசின் கிழக்குப் பகுதியுடன் அல்ல ஆனால் மேற்குப்பகுதியுடன் பேதுருவை இணைவுபடுத்துதல் என்பது தொடக்ககால சபையின் பாரம்பரியத்தில் சீரானதாக உள்ளது. பாபிலோன் தூரகிழக்கில் இருந்தது. இத்துடன் கூடுதலாக, பழங்கால உலகத்தில் இருந்து வரும் சாட்சியம் அரிதாக இருக்கையில், பேதுரு இந்த நிருபத்தை எழுதிய வேளையில், பாபிலோன் என்பது குறிப்பிடத்தக்கதல்லாத ஒரு சிறு கிராமமாகவே இருந்தது.[8] மேலும், ரோமாபுரியின் வீழ்ச்சியைப் பற்றி அப்போஸ்தலரான யோவான் குறிப்பிடும்போது, பாபிலோன் என்ற இயற்பெயரை அவர் பயன்படுத்தும் இடமான, வெளிப்படுத்தின விசேஷம் 18:2 ஐ நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், 1 பேதுரு நிருபத்தில் பாபிலோன் பற்றிய குறிப்பை நேர்ப்பொருளில் எடுத்துக்கொள்வதற்கு நாம் குறைவான நிச்சயம் கொண்டவர்கள் ஆகிறோம். கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டுடன் கொண்டிருந்த பழக்கத்தின் காரணமாக, பாபிலோன் என்பது அவர்களுக்கு, பகைமை, தேவபக்தியின்மை, புலன் இன்பம் துய்த்தல் மற்றும் அடக்குமுறை ஆகியவற்றின் அடையாளமாக இருந்தது.[9] வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவானைப் போன்று, பேதுரு ரோமாபுரியை, அதன் ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய விஷயங்களில் பாபிலோனுக்குச் சமானமாக இருக்கக் கண்டார் என்பது உறுதி. பெரிய ஆப்பிள் என்பதை நியூயார்க் நகராக அடையாளப்படுத்தும் அமெரிக்கர்களைப் போன்றே பேதுருவின் வாசகர்களும் பாபிலோன் என்பதை ரோமாபுரி என்பதாக அடையாளம் கண்டிருக்க வாய்ப்புள்ளது.

கடந்து செல்லுகையில் நாம், சீரமைப்பின் காலக்கட்டத்தில், ரோமன் கத்தோலிக்கத்தை உக்கிரமாக வெறுத்தவர்கள், பேதுரு ஒருக்காலும் ரோமாபுரிக்குச் சென்றதே இல்லை என்று வாதிடுதலின் மூலம், பேதுரு முதல் போப்பாக இருந்தார் என்ற உரிமைகோருதலைச் சொல்லாததாக்குவதற்கு நாடினர். சீர்திருத்த காலத்தில் இருந்த சிலர் 1 பேதுரு 5:13ல் உள்ள "பாபிலோன்" என்ற வார்த்தையை நேர்ப்பொருளில் எடுத்துக் கொண்டு, முதல் நூற்றாண்டு உலகத்தின் கிழக்குப்பகுதியில் இருந்துகொண்டு பேதுரு தமது முதல் நிருபத்தை எழுதினார் என்ற கருத்தைப் பராமரித்தனர். இந்தக் கருத்து, தற்காலங்களில்கூடச் சில வட்டாரங்களில் தொடருகிறது. இருப்பினும், சாட்சியங்கள் இதற்கு எதிராகவே உள்ளன. சீலாவும் மாற்கும் (5:12, 13) மேற்கத்திய சபைகளுடன் இணைவு கொண்டிருந்த பெயர்களாக உள்ளன என்பதை மற்ற விஷயங்களின் மத்தியில் நாம் கவனிக்கிறோம். முதல் நான்கு நூற்றாண்டுகளில் சபையின் எழுத்தாளர்கள், பேதுருவின் மரணத்தைப் பற்றிப்

குறிப்பிடுகையில் அந்த அப்போஸ்தலர் ரோமாபுரியில் மரித்தார் என்றே கூறி, பொதுவான சாட்சியம் அளிக்கின்றனர்.

நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சபை வரலாற்றாளர் ஈசூபியஸ் அவர்கள், நீரோ பேரரசராக இருந்த காலத்தில், பேதுருவும் பவுலும் ஏறக்குறைய ஒரே வேளையில் வேதசாட்சியாக மரித்திருந்தனர் என்று புரிந்துகொண்டிருந்தார். கி. பி. 68ல் நீரோ தற்கொலை செய்துகொண்டார். பேதுரு எவ்வளவு காலம் ரோமாபுரியில் இருந்தார் என்பதை அறிதல் இயலாததாக இருக்கையில், ஆசியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவம் பற்றிய தகவல்களைப் பெறுவதற்காக, அவர் சற்றுக் காலம் ரோமாபுரியில் இருக்க வேண்டியது அவசியமாக இருந்திருக்கும். அவரது வாசகர்கள் கிறிஸ்தவர்களாகி சற்றுக்காலம் கடந்திருந்தது என்பது நிச்சயம், இந்தக் காலமானது உபத்திரவங்கள் தங்கள் வேலையைத் தொடங்கப் போதுமானதாக இருந்தது. உபத்திரவங்கள் ரோமாபுரியில் உண்டாக்கப்பட்டன என்று காட்டும் குறிப்பு எதுவும் இல்லை; இந்தத் தொடக்ககாலத்தில், உபத்திரவங்கள் பேரரசு முழுவதிலும் பரந்திருக்கவில்லை. இருப்பினும் புதிய மார்க்கத்தை சகித்துக் கொள்ள இயலாத உள்ளூர் வட்டாரங்களில் இருந்து, புறக்கணிக்கப்படுதல் மற்றும் நிதிசார் நிர்ப்பந்தம் ஆகியவை ஏற்பட்டதைக் கிறிஸ்தவர்கள் உணரத்தொடங்கினர் என்பதில் சந்தேகம் இல்லை. கடைசியாக, பேதுரு தமது நிருபத்தில் குறிப்பிட்டிருந்த சபைகள், மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு முதிர்ச்சியடையச் சற்றுகாலம் எடுத்துக்கொண்டன (காண்க 5:1). இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தைக் குறித்து நாம் உறுதியாக எதுவும் கூற இயலாது என்றாலும், 1 பேதுரு நிருபம் கி. பி. 65 க்கு அண்மையில் எழுதப்பட்டது என்று கூறுதல் ஒரு நல்ல யூகமாக உள்ளது.

இந்த நிருபத்தின் வடிவமைப்பு

தொடக்க அழைப்புக்குப் பின்னர் (1:1, 2), பேதுரு தமது சொந்த சிந்தையையும் தமது வாசகர்களின் சிந்தைகளையும், மீட்பு, நம்பிக்கை மற்றும் அந்த வேளையின் சிரமங்களினூடே அவர்களை நிலைநிறுத்திய வாக்குத்தத்தம் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்கு வரைமுறைப்படுத்தினார். சொற்றொடருக்குப் பின் சொற்றொடர், முடிவுக்காலத்தை, நம்பிக்கை உணர்ந்தறியப்படும் கடைசி வேளையை, நினைத்துப் பார்க்கும்படி வாசகர்களைக் கொண்டுவந்தது: "ஜீவனுள்ள நம்பிக்கைக்கு ... ஜெநிப்பிக்கப்படுதல்" (1:4), "அழியாத சுதந்தரம்" (1:4), "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்பு" (1:5), "உங்கள் ஆத்துமரட்சிப்பு" (1:9), "இந்த இரட்சிப்பு" (1:10), "இயேசுகிறிஸ்து வெளிப்படுதல்" (1:13), "இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும்" (1:17), "அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்" (1:18), "இந்தக் கடைசிக் காலங்களில்" (1:20), "உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி" (1:21).

1:3-2:10 என்பது இந்த நிருபத்தின் முதன்மைப் பகுதியாக உள்ளது. பேதுருவின் வாசகர்கள், கிறிஸ்துவைத் தழுவிக்கொண்ட மக்களாக இருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன என்று அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார். அவரை அறிவதற்கு முன்னர் அவர்கள், அறியாமையில்,

மாம்ச இச்சைகளின்படி வாழ்ந்திருந்தனர் (1:14). கிறிஸ்துவுக்குள் அவர்கள் தேர்ந்துகொள்ளப்பட்ட சந்ததியாக, தேவனுக்குச் சொந்தமான மக்களாக ஆகியிருந்தனர் (1:1, 2; 2:9, 10). அவர்கள் புதிதாகப் பிறந்திருந்தபடியால், வாழ்வு ஒரு ஊழியமாக, ஒரு நோக்கம் கொண்டதாக மற்றும் ஒரு முடிவைக் கொண்டதாக ஆகியிருந்தது. அவர்கள் தங்களின், வீணான முந்திய வாழ்வில் இருந்து விடுதலையாக்கப்பட்ட நிலையில், கர்த்தருடன் இணைதலை முன்னெதிர் நோக்கியிருந்தனர்.

கர்த்தருடைய மறுவருகை பற்றிப் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டியபின்பு, தமது வாசகர்களுக்கு இன்னும் முழுமையான கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு வழிகாட்டும் புத்திமதிகள் பக்கமாய்த் தமது கவனத்தைத் திருப்பினார். இந்த நிருபத்தில் 2:11-4:11 என்ற பகுதியானது, யாக்கோபு நிருபத்தில் அடிக்கடி காணப்படும் கட்டளைகள் போன்றவற்றால் நிரப்பப் பட்டுள்ளது: "நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்" (2:12); "கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படியுங்கள்" (2:13); "சுயாதீனமுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்" (2:16); "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்" (2:17); இன்னும் பிற. இந்தப் பகுதியில் கர்த்தருடைய மறுவருகை மறக்கப்பட்டிருந்தது போன்று இருப்பதில்லை (2:12; 4:7). கர்த்தருடைய மறுவருகை என்ற அஸ்திபாரத்தில் இருந்தே பேதுரு தமது புத்திமதிகளை அளித்தார். அதுபோன்று, பேதுரு தமது வாசகர்களின் உபத்திரவங்களைப் புறக்கணித்ததாகவும் தோன்றவில்லை (3:13, 14). உபத்திரவப்படுதல் என்பது விசுவாசம் நிறைந்த தன்மைக்கு, புதுப்பிக்கப்பட்ட அழைப்பின் அடிப்படையாக உள்ளது.

4:12-5:11 என்ற இந்த நிருபத்தின் நிறைவுப் பகுதியில், பேதுரு தாம் 1:3-2:10ல் குறிப்பிட்டிருந்த ஆய்வுக்கருத்துக்களுக்குத் திரும்பினார். உபத்திரவப்படுதல் என்பது புதுப்பிக்கப்பட்ட வலிவுடன் மேல் எழுகிறது. 4:11ம் வசனமானது, வழக்கமாக ஒரு பதிவேட்டின் முடிவில் காணப்படும் துதியுடன் முடிவடைவதாலும், 4:12-5:11ன் மொழிநடை மிக அதிகமான உபத்திரவத்தைச் சுட்டிக்காட்டுவதாலும், பேதுரு தமது நிருபத்தை 4:11ல் முடித்திருக்க நோக்கங் கொண்டிருந்தார் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். 1 பேதுரு நிருபத்திற்கு இரண்டு பதிப்புகள் இருந்தன என்று ஒரு கல்வியாளர் கருத்துக் கொண்டுள்ளார். இவற்றில் முதல் பதிப்பு, சார்பளவில் மென்மையான உபத்திரவங்களைச் சகித்திருந்த கிறிஸ்தவர்களுக்கானதாக இருந்தது. 1 பேதுரு 1:1-4:11 வரையில் எழுதப்பட்ட நிருபத்தைப் பெற்றுக்கொண்ட விசுவாசிகள் இவர்களே. இரண்டாம் பதிப்பு கடுமையான உபத்திரவங்களைச் சகித்திருந்த கிறிஸ்தவர்களுக்கானதாக இருந்தது. 1 பேதுரு 1:1, 2 மற்றும் 1 பேதுரு 4:12-5:14 வரையில் எழுதப்பட்ட நிருபத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் இவர்களே.[10] பேதுரு தமது நிருபத்தை எழுதி முடித்து வைத்தபின்பு, தமது வாசகர்கள் புதிதாய் எழும்பிய பயங்கரமான உபத்திரவத்தினால் வேதனைப்பட்டது பற்றி கூடுதல் தகவல்களைப் பெற்றார் என்று மற்றவர்கள் விவாதித்துள்ளனர். அதை மனதில் கொண்ட அவர், தமது எழுத்துக்குத் திரும்பி, 4:12-5:11 வசனப்பகுதியை முடிவு வசனப்பகுதியாகக் கூட்டினார் என்று அவர்கள் கூறுகின்றனர்.[11] இவ்விரு கருத்துக்களுமே ஆழ்ந்து சிந்திக்கத் தகுதியானவைகளாக இருக்கையில்,

உறுதியான முடிவை மேற்கொள்வதற்கு, பேதுரு இந்த நிருபத்தை எந்த சூழ்நிலைகளின் கீழ் எழுதினார் என்பது பற்றிய நமது அறிவு மிகவும் மட்டானதாக உள்ளது. 1 பேதுரு 4:12-5:11 வசனப்பகுதியானது இந்த நிருபத்தின் முற்பகுதியில் உறுதியாய்த் தோன்றாத அளவுக்கு வலிவாக, பேதுரு நிருபத்தின் வாசகர்களுடன் உபத்திரவத்தை நமக்கு முன்பாகக் காட்சிப்படுத்துகிறது என்பது தெளிவு.

பேதுரு தமது வாசகர்களில் எவரும், கிறிஸ்தவர் என்ற வகையில் உபத்திரவப்படுதலினால் வெட்கப்படக் கூடாது என்று உறுதிப்படுத்தினார் (4:16). இது புதிய ஏற்பாட்டில் "கிறிஸ்தவர்" என்ற வார்த்தை காணப்படும் மூன்று இடங்களில் ஒன்றாக உள்ளது (காண்க நடபடிகள் 11:26; 26:28). இப்படிப்பட்ட புறம்பான அழுத்தங்களில் கிறிஸ்தவர்கள் எவ்வாறு பதில்செயல்செய்ய வேண்டும்? "தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு" (4:19) ஒப்புக்கொடுத்தலின் மூலம் பதில்செயல் செய்ய வேண்டும். மூப்பர்களுக்கு உதவிகரமாக இருக்கும் அறிவுறுத்துதலின் வார்த்தைகளை உட்செருகிய அப்போஸ்தலர் (5:1-4), தமது வாசகர்கள் தாழ்மையுடனும் தெளிந்த சிந்தையுடனும் இருக்க வேண்டும் என்று புத்திமதி கூறினார் (5:5-11), மற்றும் அவர் தமது நிருபத்தை முடி-விற்குக் கொண்டு வந்தார் (5:12-14). பின்வரும் வரைகுறிப்பு இந்த நிருபத்தைப் பகுத்தாய்வு செய்வதில் உதவியாக இருக்கும்.

வரைகுறிப்பு

I. வாழ்த்து: ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு (1:1, 2)

II. இரட்சிப்பு: விசுவாசத்தின் விளைவு (1:3-2:10)
- அ. "ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி ... ஜெநிப்பிக்கப்பட்டோம்" (1:3-5)
- ஆ. "பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுதல்" (1:6-9)
- இ. "தீர்க்கதரிசிகள் செய்த ஊழியம் நமக்கே" (1:10-12)
- ஈ. பரிசுத்த ஜனம் (1:13-16)
- உ. பயத்துடன் நடந்துகொள்ளுதல் (1:17-21)
- ஊ. அழிவில்லாத வித்தினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தல் (1:22-25)
- எ. "புதிதாய்ப்பிறந்த குழந்தைகளைப் போல" (2:1-3)
- ஏ. கிறிஸ்து, ஜீவனுள்ள கல்; கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய மாளிகை (2:4-8)
- ஐ. அந்தகாரத்தில் இருந்து ஒளியினிடத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் (2:9, 10)

III. தேவனுடைய மக்களாக உபத்திரவப்படுபவர்கள் என்ற வகையில் நடந்துகொள்ளுதல் ன்எவ்வாறு?தி (2:11-4:11)
- அ. "அந்நியரும் பரதேசிகளும்" (2:11, 12)
- ஆ. கீழ்ப்படிதல்: கிறிஸ்தவ வாழ்வின் வலிவார்ந்த ஒரு பகுதி (2:13 -3:7)
    1. ஆளுகை செய்யும் அரசு அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல்

(2:13-17)

2. எஜமானர்களுக்குக் கீழ்ப்படிதல் (2:18-20)
3. சிலுவையின் மீது இயேசுவின் கீழ்ப்படிதல் (2:21-25)
4. மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் (3:1-6)
5. மனைவிகள் தங்கள் கணவர்களால் கனப்படுத்தப்படுதல் (3:7)

இ. நீதிக்காக உபத்திரவப்படுபவர்கள் மீது ஆசீர்வாதம் (3:8-17)

1. தேவனுடைய ஆசீர்வாதங்களால் கோரப்படும் பரிசுத்த வாழ்வு (3:8-12)
2. உங்கள் இருதயங்களில் கிறிஸ்துவைப் பரிசுத்தம் பண்ணுதல் (3:13-17)

ஈ. நமது பாவங்களுக்காகக் கிறிஸ்துவின் மரணம் (3:18-22)

உ. மாம்சத்திற்கு எதிராக [உங்கள் சிந்தையில்] ஆயுதம் தரித்துக்கொள்ளுதல் (4:1-3)

ஊ. புறதெய்வ வணக்கத்தார் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருத்தல் (4:4-6)

எ. முடிவு சமீபமாயிருத்தல் (4:7-11)

IV. கிறிஸ்துவின் பாடுகளை பகிர்ந்து கொள்ளுதல் (4:12-5:11)

அ. கிறிஸ்துவின் பாடுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் (4:12-16)

ஆ. உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு ஆத்துமாவை ஒப்புவித்த (4:17-19)

இ. மூப்பர்களை ஊக்கமூட்டுதல் (5:1-4)

ஈ. தாழ்மையை அணிந்து கொள்ளுதல் (5:5-8)

உ. உலகம் முழுவதிலும் உங்களுக்குள்ள சகோதரத்துவம் (5:9-11)

V. முடிவுக் குறிப்புரைகள் (5:12-14)

நடைமுறைப் பயன்பாடு

1 பேதுரு நிருபத்தின் செய்தி, தங்கள் வாழ்வை எவ்வாறு தொடுகிறது, அது தங்கள் விசுவாசத்திற்கு எவ்வாறு பங்களிக்கிறது மற்றும் அது தங்களைப் பாவத்தில் இருந்து திரும்பி நீதியுள்ள வாழ்வு வாழும்படி எவ்வாறு ஊக்குவிக்கிறது என்பதைக் கிறிஸ்தவர்கள் அறிய விரும்புகின்றனர். இவ்வகையான பாடங்கள் 1 பேதுரு நிருபத்தில் வசனத்திற்கு வசனம், சொல்லப்போனால் வார்த்தைக்கு வார்த்தை வெளியோடி வருகின்றன. என்றாலும், சில பாடங்கள், 1 பேதுரு நிருபத்தை முழுமையாக ஒரு நிருபம் என்ற வகையில் ஆய்வு செய்வதில் இருந்து வருகின்றன.

கர்த்தருடைய மறுவருகை

கர்த்தருடைய மறுவருகையுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளைப் பற்றிய விபரமான விளக்கங்களை, புதிய ஏற்பாட்டின் எந்த எழுத்தாளரும் விபரமாகத் தருவதில்லை. இதற்கு மாறாக, அவரது வருகையின் மறைவான கருத்துக்கள் பற்றிக் கிறிஸ்தவர்கள் தெளிந்த புத்தியுடனும் சிந்தனை நிறைவுடனும் ஆழ்ந்து கருத வேண்டும் என்று அவர்களைப் பேதுருவும் மற்றவர்களும் வேண்டிக்

கேட்டுக்கொண்டனர்.

(1) கர்த்தர் மறுபடியும் வருவார் என்பதால், வாழ்வின் சலிப்புகள், அக்கறைகள் மற்றும் ஏமாற்றங்கள் ஆகியவை சகித்துக்கொள்ள சுலபமாக உள்ளன. உடலுக்கு வயதாகும்போது, பாவத்தைப் புறம்பே ஒதுக்குவது கடினமாகும்போது, உலகத்தில் வெறுப்பும், கசப்பும் அதிகமாகும்போது, அது யாவும் முடிவுக்கு வரும். வாழ்வின் சோதனைகள் யாவும் சற்றுக்காலமே இருக்கும். கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை வைப்பவர்களுக்கு முன்னால் நித்திய வாழ்வு உள்ளது (1:6).

(2) கர்த்தர் மறுபடியும் வருவார் என்பதால், ஒரு நபர் தேவையில் உள்ள அயலகத்தாருக்கு உதவுகிறாரா இல்லையா என்பது பொருட்படுத்தப் படக்கூடியதாக உள்ளது. ஒருவர் மற்றவர்களுடன் உண்மை பேசி நியாயமாக நடக்கிறாரா இல்லையா என்பது பொருட்படுத்தப் படக்கூடியதாக உள்ளது. வாழ்வானது ஒரு இலக்கை நோக்கிச் செல்வதால், அது ஒரு அர்த்தத்தையும் திசையையும் கொண்டுள்ளது.

(3) கர்த்தர் மறுபடியும் வருவார் என்பதால், இந்த உலகத்தின் விஷயங்களில் தேவன் நேரடியாக ஈடுபடுகிறார் என்ற உறுதிப்பாட்டைக் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ளனர். அவர் தமது பிள்ளைகளை ஒருக்காலும் விட்டுவிடவோ அல்லது கைவிடவோ மாட்டார் (5:7). கிறிஸ்துவின் முதலாம் வருகை மற்றும் இரண்டாம் வருகை ஆகியவற்றிக்கு இடைப்பட்ட காலத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் இப்போதே ஒரு இராஜ்யத்தைக் கொண்டுள்ளனர், இருப்பினும் இனி வெளிப்படுத்தப்பட்ட வேண்டிய இராஜ்யம் ஒன்றும் உள்ளது.

உபத்திரவமும் சந்தோஷமும்

1 பேதுரு நிருபமோ அல்லது வேதாகமத்தில் வேறு எந்தப் புத்தகமோ, குற்றம் அறியாத மக்கள் சிலவேளைகளில் துன்புறுவது ஏன் என்பதற்கு விரிவான விளக்கம் தருவதில்லை. இதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய சில கருத்துக்களை, 1 பேதுரு நிருபம் கிறிஸ்தவர்களுக்கு அளிக்கிறது.

(1) தேவனுடைய மக்கள் தங்கள் சொந்த தவறுகளினால் உபத்திரவப்படுவதில்லை, ஏனெனில் உலகம் முழுவதும் சாத்தானுடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. பிசாசானவன் ஆத்துமாக்களைப் பட்சிக்க நாடுகிறான் (5:8). உலகத்தில் ஏராளமானபேர் பிசாசின் பிடியின்கீழ் சிக்கியுள்ளனர். பிசாசுக்கு இணக்கமானவர்கள், கிறிஸ்துவின் நற்தன்மைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்துள்ளவர்களை எதிர்த்து அவர்களை உபத்திரவப் படுத்துவதில் வியப்பெதுவும் இல்லை.

(2) சில உபத்திரவங்கள், பாவத்தின் நேரடி விளைவாக உள்ளன. விஷயம் அப்படி இருக்கையில், கிறிஸ்தவர்கள் மனந்திரும்ப வேண்டும். இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவரான தேவன் மன்னிப்பார். தேவனுடைய பிள்ளைகள் மனந்திரும்பி அவரிடமாய்த் திரும்பும்போது, சில விஷயங்களில், இந்த வாழ்வில் உபத்திரவப்படுதல் என்பது நீக்கிப்போடப்படும். பேதுரு தமது வாசகர்கள், தீமை செய்வதால் பாடுபடுபவர்களாக ஒருக்காலும் இருக்கக் கூடாதபடி வாழவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் (2:11, 12; 4:15, 16).

(3) கிறிஸ்தவர்கள் பாடுபடும்போது, அவர்கள் இயேசுவின்

உதாரணத்தைப் பின்பற்றுகின்றனர். இயேசு இந்த உலகத்திற்காகப் பாடுபட்டார் (2:24). அவரைப் பின்பற்றுபவர்களும், மற்ற மக்கள் விசுவாசத்திற்குள் வரவேண்டும் என்பதற்காக அவரது பாடுகளில் பங்கேற்க வேண்டும் என்பதில் ஒரு கருத்து உள்ளது.

பேதுருவைப் பற்றிய வசீகரமான வரலாறு

கனவு ஒன்றைக் கொண்டிருந்த கிறிஸ்தவரைப் பற்றிய கதை ஒன்றுள்ளது. அவர், தூதர் ஒருவரால் நடத்தப்பட்ட பரலோகத்திற்கான சுற்றுப்பயணம் ஒன்றில் தாம் கலந்து கொண்டதாகக் கனவு கண்டார். தாம் கண்ட காட்சிகளைப் பாராட்டிய வண்ணம் தேவனுக்குத் துதியை ஏறெடுத்துக் கொண்டே அவர் நடந்து செல்லுகையில், அவர் தமது வலது புறத்தில் ஒன்றுகூடியிருந்த மக்கள் குழு ஒன்றைக் கண்டார். அவர் தமது வழிகாட்டி தூதரிடத்தில், "இந்த மக்கள் யார்? அவர்கள் எந்த மனிதரைச் சுற்றிச்சூழ்ந்து கொண்டிருக்கின்றனர்?" என்று கேட்டார். தூதர் அதற்கு, "அங்கு பேசிக் கொண்டிருக்கும் மனிதர் பவுல் ஆவார். அவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்ட தேவனுடைய ஆச்சரியமான கிருபைகளைப் பற்றி விளக்கம் தருகிறார்" என்று பதில் உரைத்தார். அதற்கு அம்மனிதர், "இந்தக் குழு என்ன விட அதிகம் கற்றவர்களும் அதிகம் நீதிமான்களுமாகவும் உள்ளவர்களைக் கொண்டுள்ளது, நான் அங்கு இருக்க இயலாது" என்று தமக்குத் தாமே நினைத்துக் கொண்டார்.

அவர்கள் இன்னும் சற்றுத் தூரம் பயணம் சென்றனர், அங்கு அவரது இடது புறத்தில் இன்னொரு குழுவானது ஒரு போதகரைச் சுற்றிச் சூழ்ந்திருந்தது. அவர் தமது வழிகாட்டியிடம் "இவர்கள் யார்?" என்று திரும்பவும் கேட்டார். அதற்குத் தூதர், "இங்கு பேசிக்கொண்டிருப்பவர், அப்போஸ்தலரான யோவான் ஆவார். அவர் தாம் கர்த்தருடைய மார்பில் சாய்ந்துகொண்டிருந்த அந்த இரவின் நினைவுகளைப் பற்றிப் பேசுகிறார். தேவன் தமது மக்கள் ஒவ்வொருவர்மீதும் அன்புகூருதல் பற்றி அவர் இந்தத் கூட்டத்தாருக்குக் கூறுகிறார்" என்றார். அப்போது அந்த மனிதர் கடந்து சென்றார். இந்த மக்கள் பக்தியுள்ளவர்களாகவும் நல்லவர்களாகவும் இருந்தனர். தாம் அங்கு இருக்க இயலாது என்று அம்மனிதர் உணர்ந்தார்.

அவர்கள் நடந்து செல்லுகையில், அவர் மூன்றாவதாக ஒரு குழு கூடியிருப்பதைக் கண்டார். அவர், "இந்த மக்கள் யார்?" என்ற அதே கேள்வியைத் திரும்பவும் கேட்டார். அதற்கு வழிகாட்டி, "அது அப்போஸ்தலரான பேதுரு ஆவார். அவர் இந்த மக்களுக்குத் தாம் கர்த்தரை மறுதலித்த இரவு பற்றிக் கூறிக்கொண்டிருக்கிறார்" என்றார். அம்மனிதர் தமக்குதாமே, "நான் நிற்கலாம் என்று நினைக்கிறேன். பேதுரு கூறும் விஷயத்துடன் என்னை உறவுபடுத்த முடியும்" என்று நினைத்தார். இந்த கதையானது வசீகரமானதாக உள்ளது, ஆனால் இது, விசுவாசம் மற்றும் சந்தேகம் ஆகியவற்றிற்கும், அப்போஸ்தலரான பேதுருவின் வைராக்கியம் மற்றும் பலவீனம் ஆகியவற்றிற்கும் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள மன ஈர்ப்புப் பற்றி விளக்குகிறது.

குறிப்புகள்

[1]*1 பேதுரு நிருபத்தை இவ்வாறு விளக்கியுரைத்தல், மற்றவர்கள் மத்தியில் மிகவும் முன்னேற்றத்திற்கு உரியதாக இருந்தது,* by Frank L. Cross, *1 Peter: A Pascal Liturgy* (London: A. R. Mowbray & Co. Ltd., 1954). *அவர் மட்டான எண்ணிக்கையில் பின்பற்றாளர்களைக் கொண்டிருந்தார்.* [2]John H. Elliott, "The Rehabilitation of an Exegetical Step-Child: 1 Peter in Recent Research," *Journal of Biblical Literature* 95 (June 1976): 243–54. 1976 *க்குப் பின்பு இந்த நிருபத்தின் மீது மிக மேன்மையான விளக்கவுரைகள் உண்டாக்கப்பட்டுள்ளன.* [3]*தொடக்ககால சபையின் சாட்சியத்திற்கு, பின்வரும் புத்தகத்தில் காணவும்:* J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), xxxii. [4]*பேதுரு ரோமாபுரியில் மரித்தார் என்பதற்கான சாட்சியம் மிக முந்தியதும் பலமானதுமாக உள்ளது. ரோமாபுரியின் கிளமெண்ட் என்பவர், பேதுரு அந்த நகரத்தில் வேதசாட்சியாக மரித்தார் என்று கருத்துத் தெரிவித்தார்* (*1 Clement* 5.4). *இக்னேஷியஸ் என்பவரும் இதையை குறிப்பிட்டார்* (Ignatius *Romans* 4.2). *ஈசூபியஸ் என்பவர், ரோமாபுரியின் காயு என்பவரும் கொரிந்து நகரின் தியோனிசியு என்பவரும் இதே விளைவைப் பெற்றனர் என்று குறிப்பிட்டார்* (Eusebius *Ecclesiastical History* 2.25). [5]*சீலா இந்த நிருபத்தை எழுதவில்லை ஆனால் இதைத் கொண்டு சென்றவராக இருந்தார் என்று, வெயன் குரூடென் அவர்கள், பலமான கருத்தை ஏற்படுத்தியுள்ளார்.* (Wayne A. Grudem, *The First Epistle of Peter: An Introduction and Commentary,* Tyndale New Testament Commentaries, vol. 17 [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988], 23–24.) *எட்வர்டு கோர்டென் செல்வின் அவர்கள், சீலாவே இந்த நிருபத்தை எழுதியவராக இருந்தார் என்று நம்பத்தகுந்த வகையில் விவாதித்துள்ளார். 1 பேதுரு நிருபத்தில் காணப்படும் உயர்வான கொய்னி கிரேக்க மொழிநடையானது, அப்போஸ்தலர், சீலாவையோ அல்லது வேறு யாராவது ஒருவரையோ, இதை எழுதியவராகக் கொண்டிருப்பார் என்ற கருத்து உள்ளாகத் தெரிவிக்கிறது. 1 பேதுரு நிருபத்தில் தெளிவாகத் தெரியவரும் மொழியின் நிபுணத்துவத்திற்கு நேரத்தையோ அல்லது ஆதாரமூலங்களையோ, கலிலேய மீனவர் ஒருவர் கொண்டிருப்பார் என்பது சாத்தியமற்றதாக உள்ளது.*) (Edward Gordon Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text, with Introduction, Notes, and Essays,* Thornapple Commentaries, 2d ed. [London: Macmillan & Co., 1947; reprint Grand Rapids, Mich.: Baker Book House, 1981], 11–16.) [6]*2 பேதுரு 1:16-18ல் மறுரூபமாகிய நிகழ்வுபற்றிப் பேதுருவின் மறைவான குறிப்பு, பேதுரு இதை எழுதியிருக்க முடியாது என்பதற்கு ஆதாரமாக விமர்சகர்களால் பயன்படுத்தப்படுதல் என்பது ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. சுவிசேஷத்தில் உள்ள இப்படிப்பட்ட நிகழ்வுகள் மீது, அப்போஸ்தலர் செயற்கையாக ஆர்வம் கொண்டிருக்க மாட்டார் என்று அவர்கள் வாதிடுகின்றனர். விமர்சகர்கள் இரு வழிகளையும் கொண்டிருக்க இயலாது.* [7]*நடபடிகள் புத்தகம் எழுதப்படுவதற்கு முன்னரே பவுல் நிருபங்களை எழுதியதாகத் தோன்றுகிறது, ஒரு கருத்தில் நடபடிகள் புத்தகம் புதிய ஏற்பாட்டில் பேதுருவைப் பற்றிய கடைசிக் குறிப்பாக உள்ளது. இருப்பினும், நடபடிகள் வரலாற்றை விவரிக்கும் சொற்றொடர்களில், பிற்பாடு பவுல் தமது நிருபங்களில் பேதுருவைப் பற்றிக் குறிப்பிட்டபோது, அது நடபடிகள்* 15*ன் எடுத்துரைப்பிற்குப் பிந்தியதாக இருந்தது.* [8]Strabo *Geography* 16.1.5. [9]*சகரியா* 5:5-11*ல், "துன்மார்க்கம்" ஒரு மரக்காலில் வைக்கப்பட்டு, சிறகுள்ள இரண்டு பெண்களால், "சிநெயார்" தேசத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டது. சிநெயார், அதாவது பாபிலோன் என்பது இஸ்ரவேலில்*

இருந்து நீக்கப்பட்ட எல்லா துன்மார்க்கத்திற்கும் இருப்பிடமாக இருந்தது.

[10]C. F. D. Moule, "The Nature and Purpose of 1 Peter," *New Testament Studies* 3 (November 1956): 10.

[11]*உதாரணத்திற்கு, பின்வரும் புத்தகத்தில் காணவும்:* J. W. C. Wand, *The General Epistles of St. Peter and St. Jude* (London: Methuen & Co., Ltd., 1934), 13.

1

வாழ்த்து: ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு

(1:1, 2)

அப்போஸ்தலர் தமது நிருபத்தை முறைப்படி தொடங்கினார். அவர் தம்மை ஒரு அமைதலான, ஆடம்பரமற்ற முறையில் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டார். இதன் எழுத்தாளர், தாம் எழுதுவது கேட்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதை, இந்த சுய அடையாளப்படுத்துதலும் கண்ணியமான திறவு வசனங்களும் தெளிவாக்குகின்றன. அவரது வார்த்தைகள் கட்டளையிடும் வகையைச் சேர்ந்தவையல்ல; அவர் தம்மை (பிறர்) தனிப்பட்ட முறையில் பின்பற்றுதலுக்காகவோ அல்லது தம் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காகவோ எழுதவில்லை. சபையை ஊக்குவிப்பதற்காகவும், தொடர்ந்து ஏற்பட்ட துன்பத்தைக் கையாள்வதற்கு ஆதார மூலங்களை அவர்களுக்கும் கொடுப்பதற்காகவும், கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தை மறுவலியூட்டுவதற்காகவும், வாழ்வில் பரிசுத்தத்தை ஏவுவதற்காகவும் அவர் இந்த நிருபத்தை எழுதினார். நிருபத்தின் துவக்கவரிகள், தொடர்ந்து வருபவைகளுக்கு அடித்தளத்தை அமைக்கின்றன.

தொடக்க வாழ்த்து (1:1, 2)

1இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில், 2பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது; கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.

வசனம் 1. *எழுத்தாளர் தம்மை இரு வகைகளில் அடையாளப்படுத்திக் கொண்டார்:* ***இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்*** *மற்றும்* ***பேதுரு.*** *அவரது பிறப்புப் பெயர் சீமோன் அல்லது மிகவும் ஏற்புடைய வகையில் சிமியோன் என்பதாக இருந்தது (நடபடிகள் 15:14; 2 பேதுரு 1:1 இது பழங்காலத்திய கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் உள்ளது), இது யூதர்களின் மத்தியில் ஒரு பொதுவான பெயராக இருந்தது. இதே பெயர் கொண்ட மற்றவர்களில் இருந்து அவரை வித்தியாசப்படுத்துவதற்காக, அவர்*

யோனாவின் மகனான சீமோன் என்று அழைக்கப்பட்டார் (பர்யோனா; மத்தேயு 16:17), (யோவான் 1:42). இந்த அப்போஸ்தலரின் முந்திய தலைமுறைகள் பற்றி இதைவிட அதிகமாக வேறொன்றையும் நாம் அறிவதில்லை.

மனித வலிமைக்குள் பண்பு வாய்ந்த உட்கண்ணோக்குடன், இயேசு முதன்முறையாக சீமோனைச் சந்தித்தபோது, அவருக்கு ஒரு புதிய பெயரைக் கொடுத்தார். இவரை “கேபா” என்று இயேசு அழைத்தார் (யோவான் 1:42). “கேபா” என்ற அரமாயிக் வார்த்தையை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கும்போது “பேதுரு” என்றாயிற்று. இயேசு தமிழ் மொழிபேசியிருந்தால் அவரை (பேதுருவை) “பாறை” அல்லது “கல்” என்று அழைத்திருப்பார். நியாயப்பிரமாணத்திலும் சங்கீதங்களிலும் தேவனை ஒரு கன்மலை (பாறை) என்று இஸ்ரவேல் மக்கள் கூறினர்.[1] தேவன் நிலையானவராக, நம்பகமானவராக, மாறாதவராக இருக்கிறார். கந்தல் உடுத்திய, பாங்கற்ற நிலையற்ற இந்தக் கலிலேய மீனவர், எவ்வாறு மாறக்கூடும் என்பதை இயேசு உணர்ந்து அறிந்தார். இயேசுவின் பிரசன்னத்திற்கு வந்த பின்பு, யோனாவின் மகனான சீமோன், பலம் மற்றும் நிலைப்புத்தன்மையின் பாறையாக மாற்றப்படுவார். யோனாவின் மகனாகப் பிறந்த சீமோன் என்ற இம்மனிதர், தம்மைப் பேதுரு என்று அடையாளப்படுத்தியதில் மகிழ்ச்சியடைந்தார். அவரது வாசகர்கள் அவரை இப்பெயரால்தான் அறிந்திருந்தனர்.

பேதுரு தமது இரண்டாம் நிருபத்தில் தம்மை, “இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு” என்று அடையாளப்படுத்திக் கொண்டார் (2 பேதுரு 1:1). பவுலும் கூட சில வேளைகளில் இதே வார்த்தைகளைக் கொண்டு தம்மை விவரித்தார் (ரோமர் 1:1; தீத்து 1:1). பேதுரு தமது முதலாம் நிருபத்தைத் தொடங்குகையில், “இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன்” என்று தம்மைப் பற்றிக் கூறுதல் அவருக்குப் போதுமானதாக இருந்தது. இயேசு, இந்த உலகத்தில் தமது சாட்சிகளாகவும் பிரதிநிதிகளாகவும் இருக்கும்படி அறிவுறுத்த மற்றும் கட்டளையிடப் பன்னிரெண்டுபேரைத் தம்மைச் சுற்றிலும் ஒன்றுகூட்டினார் (லூக்கா 6:13). இந்தப் பன்னிரண்டு பேருக்கு “அப்போஸ்தலர்கள்” என்ற பட்டப்பெயரை மத்தேயுவும் மாற்குவும் ஆளுக்கு ஒருமுறை மாத்திரமே குறிப்பிட்டனர் (மத்தேயு 10:2; மாற்கு 6:30). இவ்வார்த்தை லூக்கா சுவிசேஷத்தில்தான் அடிக்கடி காணப்படுகிறது. இந்தப் பன்னிரண்டு பேரும் இயேசுவுக்கு சாட்சிகளாக, குறிப்பாக அவரது உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகளாகத் தோன்றிய இடத்தில், “அப்போஸ்தலர்கள்” என்று பொதுவாக அழைக்கப்பட்டுள்ளனர் (நடபடிகள் 1:8; 2:32; 3:15). பேதுரு தமது முதலாம் நிருபத்தில், தாம் வெறுமையான கல்லறையையும் உயிர்த்து எழுந்திருந்த கர்த்தரையும் கண்டிருந்ததை மறவாது குறிப்பிட்டார் (5:1).

இந்த நிருபத்தின் முதல் வாசகர்களுக்கு, பேதுரு ஒரு அப்போஸ்தலராக இருந்தார் என்பதை நினைவூட்டுதல் மிக அரிதாகவே தேவைப்பட்டது. கிறிஸ்தவ வட்டாரங்களில் ஒரே ஒரு பாறை தான் இருந்தார். அவர் யார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். பேதுரு தம்மை ஒரு அப்போஸ்தலன் என்று குறிப்பிட்டபோது, அவர் தாமும் மற்றவர்களும் தங்கள் அருகில் இயேசு

இருக்க, கலிலேயாவில் சுற்றித்திரிந்த ஆண்டுகளைப் பின்னோக்கித் தமது நினைவில் அக்காலத்தைச் சென்று அடைந்தார். பேதுருவின் வார்த்தைகள் வரலாற்றில் வேரூன்றி இருக்கின்றன. இயேசு ஒரு கண்டுபிடிப்பாகவோ, கற்பனைத் தோற்றமாகவோ, உடலற்ற கருத்தாகவோ இருக்கவில்லை. அவர் மாம்சமும் இரத்தமும் உடையவராயிருந்தார். அப்போஸ்தலர் என்ற வகையில் அவர் (பேதுரு) இயேசுவுடன் இருந்திருந்தார். பேதுரு, அவரது (இயேசுவின்) வார்த்தைகளைக் கேட்டு, அவரைக் கண்டு, மற்றும் அவர் (இயேசு) ஒரு தொழுநோயாளியைத் தொட்டு குணமாக்கியதைக் கண்டிருந்தார், மற்றும் அவர் (இயேசு) சிலுவையில் அறையப்பட்டதற்கும், அவரது உயிர்த்தெழுதலுக்கும் சாட்சியாக இருந்தார். இது உண்மையாய் இருந்ததாலும் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு ஊழியக் கட்டளை ஒன்றைக் கொடுத்திருந்ததாலும், பேதுருவின் வார்த்தைகள் அதிகாரம் உள்ளவையாக இருந்தன. இந்த அப்போஸ்தலர், தமது நிருபமானது தேவனுடைய மக்களை உருப்படுத்தும்படி எதிர்பார்த்தார். நூற்றாண்டுகளினூடே இது அவர்களைத் தொடர்ந்து உருப்படுத்தி வருகிறது. உண்மைக் கருத்தில், பேருதுவின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளாக உள்ளன.

பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, மற்றும் பித்தினியா ஆகிய ரோமானிய மாகாணங்களில் வாழ்ந்த சீஷர்களைப் பேதுரு தமது நிருபத்தில் குறிப்பிட்டார். பொந்துவும் பித்தினியாவும் தெளிவாய்க் குறிப்பிடப்பட்ட பூகோள ரீதியிலான இரண்டு மாகாணங்களாக இருந்த போதிலும், இவற்றை ரோமர்கள் ஒரே மாகாணமாக ஒன்றிணைத்திருந்தனர், மேற்கூறப்பட்ட ஐந்து பெயர்களும், ரோமானியர்கள் நிர்வாக மாவட்டங்கள் நான்கையே குறிப்பிட்டன. இந்த நான்குமே பெரிய மாகாணங்களாக இருந்தன. இவையாவும் ஒன்று சேர்ந்து, ஏறக்குறைய ஆசியா முழுவதையும் அல்லது நவீன காலத்திய துருக்கி நாட்டின் முழு நிலப்பகுதியையும் கொண்டிருந்தன. (இப்பகுதி பற்றிய அதிகமான தகவல்களுக்கு, *அறிமுகப் பாடத்தைப்* பார்க்கவும்.)

பேதுரு இந்த நிருபத்தை எழுதிய காலமான மத்திய 60 களில், ஆசியா மைனர் பகுதியில் எத்தனை சபைக் குழுமங்கள் இருந்தன அல்லது எவ்வளவு கிறிஸ்தவர்கள் இருந்தனர் என்பது தெளிவாகத் தெரிவதில்லை. ஆசியாவின் மாகாணத்தில் பல நூற்றுக்கணக்கான, ஒருவேளை ஒருசில ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இருந்திருக்கலாம். பவுலின் ஊழியத்தின் மூலம், கலாத்தியாவில் ஒரு சில சபைக் குழுமங்கள் உண்டாகியிருந்தன என்று நாம் அறிகிறோம். இந்தத் தொடக்க காலத்தில், பொந்து பித்தினியா அல்லது கப்பத்தோக்கியா பகுதிகளில் ஊழியம் ஏதேனும் செய்யப்பட்டிருந்தது பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை. இந்த மாகாணங்களின் பரந்து விரிந்த பகுதிகளில் பேதுருதாமே ஊழியம் செய்து பிரசங்கித்து இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. அந்தப்பகுதி முழுவதிலும் அப்போஸ்தலரின் வார்த்தைகளைக் கேட்கக் கூடிய கிறிஸ்தவர்கள் இருப்பார்கள் என்று அவர் எதிர்பார்த்தார்.

வசனம் 2. பேதுரு தமது தொடக்கக் குறிப்பை விளக்கியுரைக்கத் தொடர்ந்தார். அவர்களுக்கு தாங்கள் யாராக இருந்தனர், கிறிஸ்துவை தழுவியிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்திற்று என்பவை பற்றிய முழுமையான புரிந்து கொள்ளுதல் தேவைப்பட்டது. அவர்கள், **பிதாவாகிய**

தேவனுடைய முன்னறிவின் படியே தேர்ந்து கொள்ளப்பட்டிருந்த மக்களாயிருந்தனர். கிறிஸ்தவர்கள், புற தெய்வ வணக்கம் அல்லது யூதமார்க்கம் என்ற எந்தப் பின்னணியில் இருந்து வந்திருந்தாலும், இஸ்ரவேலுக்குத் தம்மை வெளிப்படுத்திய அதே தேவன்தாம் நசரேயனாகிய இயேசுமூலமாகத் தம்மை வெளிப்படுத்தினார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியிருந்தது மிகவும் முக்கியம் என்று பேதுரு நம்பினார். இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்தல் என்பது புதிய கடவுளை அறிவித்தலாக இருக்கவில்லை. மற்றும், சபையை நிலைநாட்டுதல் என்பது உலகத்திற்குத் தேவன் திடீரெனக் கொண்டு வந்த திட்டமல்ல. அவரால் "தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்" இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசத்தை அறிக்கையிடச் சூழ்ந்த போது, கடந்து போன காலங்களில் முன்னறியப்பட்டிருந்த தேவனுடைய நோக்கங்கள், உணர்ந்து அறியப்பட்டன.

புதிய ஏற்பாட்டை எழுதிய ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் "தேவனுடைய முன்னறிவு" பற்றி எழுதியபோது, குமாரனுக்குள் வெளிப்படுத்தப்பட்ட இரட்சிப்பு பற்றிய அவரது (தேவனுடைய) "முன்னறிதல்" என்பதே நிலையான பாடப் பொருளாயிருந்தது. இது அவரது சபையான புதிய இஸ்ரவேலைப் பற்றிய முன்னறிவாக உள்ளது. எதிர்மறையாக உரைப்பதென்றால், தனி நபர்களின் நித்திய அடைவிடம் பற்றி தேவனுடைய முன்னறிதல் குறித்துப் புதிய ஏற்பாடு அக்கரையற்று உள்ளது எனலாம். சிலருக்கு ஆக்கினைத்தீர்ப்பையும் மற்றவர்களுக்கு இரட்சிப்பையும் தேவன் முன்குறித்து வைத்திருப்பதில்லை. தனிநபர்கள் அல்ல, ஆனால் சபை என்பதே தேவனுடைய "முன்னறிவின்" கருப்பொருளாக உள்ளது. சபை என்பது தேவனுடைய பிந்திய சிந்தனையல்ல என்பதைத் தமது வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பேதுரு விரும்பினார். அது தேவனுடைய சிந்தையில் என்றென்றும் இருந்தது. இயேசு கிறிஸ்துவின் சபையொன்று இருக்க வேண்டும், அதில் இஸ்ரவேல் மாத்திரமல்ல ஆனால் மனிதகுலம் முழுவதும் இருக்க வேண்டும் என்று தேவன் முன்னறிந்து முன்குறித்திருந்தார். அதுபோல, தேவன் "நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்" என்று பவுல் எழுதியபோது (எபேசியர் 1:6), "நம்மை" என்பது தனிநபர்கள் என்றவகையில் அல்ல. ஆனால் "நம்மை" என்பது தேவன் முன்குறித்திருந்த ஒரு மக்கள் கூட்டமாகவே இருந்தது.

ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே *(en hagiasmōi pneumatos)*, என்ற சொற்றொடர், "ஆவியானவரின் பரிசுத்தத்திற்குள்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது, இது தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் ஆவியானவரின் முகமையினால் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளதை அறிவிக்கிறது.[2] இதே சொற்றொடர் 2 தெசலோனிக்கேயர் 2:13லும் உள்ளது. அங்கு NASB வேதாகமத்தில் "through sanctification by the Spirit." என்றுள்ளது. ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுதலை, சுவிசேஷத்தின் சத்தியம் மீதான விசுவாசத்துடன் பவுல் இணைத்தார். பேதுரு இதை இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலுடன் இணைத்தார். இவ்விரண்டு அப்போஸ்தலர்களுமே, ஒரே உண்மை நிலையை மாறுபட்ட வார்த்தைகளில் விளக்கப்படுத்தினர். சுவிசேஷத்தின் அழைப்பை கேட்டு விசுவாசி கீழ்ப்படியும்போது அவரை ஆவியானவர் பரிசுத்தமாக்குகிறார். கீழ்ப்படிதல் உள்ள விசுவா-

சியின் வாழ்வில் ஆவியானவர் வந்து தங்குகிறார் (நடபடிகள் 2:38) மற்றும் தேவபக்தியுள்ள வாழ்வில் அவரை ஆதரிக்கிறார். விசுவாசியின் வாழ்வு தேவனுடைய சுயபரிசுத்தத்தின் பிரதிபலிப்பாய் இருப்பதில் அவர் "பரிசுத்தவான்" என்று குறிப்பிடப்படுகிறார் (1 பேதுரு 1:15, 16). அவர் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவராக இருப்பதற்கு ஆவியானவரால் பிரித்துவைக்கப்பட்டுள்ளதால் பரிசுத்தமாயிருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரால் விசுவாசிக்கு அளிக்கப்பட்ட பரிசுத்தமாக்கப்படுதலானது, **கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும்** *என்ற விளைவை ஏற்படுத்திற்று.* NASB *வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு, "இயேசுகிறிஸ்துவின்" (Iēsou Christou) என்ற சொற்றொடரை, கீழ்ப்படிதல் மற்றும் தெளிக்கப்படுதல் என்ற இரண்டு விஷயங்களுடனும் இணைத்துப் பொருள் கொள்வதாக உள்ளது. கிரேக்க மொழியில் (தமிழ் வேதாகமத்தில் உள்ளது போன்று) "இயேசு கிறிஸ்துவின்" என்ற சொற்றொடர் "தெளித்தல்" என்ற விஷயத்துடன் மாத்திரம் இணைவுபடுத்தப்பட்டுள்ளது. கீழ்ப்படிதல் என்பதைத் தனித்து நிற்கும் கருத்தாக எடுத்துக் கொள்ளுதல் மிகச்சிறப்பாக இருக்கும். ஆவியானவரின் பரிசுத்தமாக்கும் பணியானது, "கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும்" ஆனதாக உள்ளது. பரிசுத்தமாக்குதல் என்பது கிறிஸ்தவர் மீது செய்யப்படுகிற மந்தமான செயலாக இருப்பதில்லை என்று பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டினார். விசுவாசியானவர், தேவனுடைய சித்தமே தமது சொந்த சித்தமாகும்படிக்கு, தேவனுடைய சித்தத்தை அரவணைத்துக் கொள்கிறார். ஒருபுறம், பழைய கிறிஸ்தவக் கீர்த்தனையொன்றின் வார்த்தைகளான "யாதுமற்ற ஏழைநான் ... உம் சிலுவை தஞ்சமே"[3] என்பவை உறுதிப்படுத்துவது போல், கிறிஸ்து பரிசுத்தமாக்குகிறார் (1 கொரிந்தியர் 1:30). மறுபுறம், பரிசுத்தமாகுதல் என்பது விசுவாசியின் மீது சுமத்தப்படும் ஒழுக்கரீதியான கட்டளையாக உள்ளது. இது கீழ்ப்படிதல் ஆகும். கிறிஸ்தவராயிருத்தல் என்பது இறுக்கத்திற்குள் வாழுதலாக உள்ளது: (1) கிறிஸ்துவே பரிசுத்தமாக்குகிறார். (2) "கிறிஸ்துவின் செய்தியை ஏற்றுக் கொண்டு அதன்படி வாழுதல் என்ற மனித முடிவு" என்பதிலிருந்து பரிசுத்தமாகுதல் வருகிறது.[4]*

"அவருடைய இரத்தம் தெளிக்கப்படுதல்." இதே முன்மொழிதலால் ஆளுகை செய்யப்பட்ட, விசுவாசி பரிசுத்தமாக்கப்படுதல் என்பது கீழ்ப்படிதலுக்கானதாகவும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதலுக்கானதாகவும் உள்ளது. பேதுரு கண்டிப்பான கிறிஸ்தவக் கருத்துக்களை இஸ்ரவேல் மக்களின் மார்க்க வாழ்வில் ஆழமாக வேரூன்றியிருந்த உருவகத்துடன் ஒன்றுகலக்கத் தொடர்ந்தார். இரத்தம் சிந்துதல் என்பது இஸ்ரவேல் மக்களுக்கு, பரிசுத்தமாக்கப்படுதல் அற்பமான காரியமல்ல என்பதை நினைவூட்டுவதாக இருந்தது. மக்கள் மீதும் தகன பலிபீடத்தின் மீதும் மோசே ரத்தத்தைத் தெளித்தார் (யாத்திராகமம் 24:6, 8), மற்றும் ஆசாரியர்கள் பீடத்தின் மீது இரத்தத்தைத் தெளிக்க வேண்டியிருந்தது (லேவியராகமம் 3:2). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "நியாயப்பிரமாணத்தின்படி, கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" என்று எழுதினார் (எபிரெயர் 9:22).

ஒருவர் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுதல் என்பது முற்றிலும் ஆவிக்குரிய கருத்தாக உள்ளது. உண்மையில் இரத்தம் என்பது கறைப்படுத்துவதாக உள்ளது; அது சுத்திகரிப்பதில்லை. இதற்கு மறுபுறத்தில், தண்ணீர் சுத்தி கரிக்கும் பொருளாக உள்ளது. இவ்வாறாக, சுத்திகரிக்கும் தண்ணீர் பற்றியும் மோசேயின் நியாயப்பிரமாணம் அறிந்துள்ளது. எண்ணாகமம் 19 ல் சிகப்புநிறக் கிடாரியைக் கொண்டு செய்யப்படவேண்டிய சடங்காச்சாரத்தை நியாயப்பிரமாணம் முன்வைக்கிறது. சடங்காச்சாரரீதியாக தீட்டானவர்களைச் சுத்திகரிப்பதற்கு, சிகப்புக் கிடாரியை எரித்த சாம்பலுடன் தண்ணீர் கலந்த கலவையை ஆசாரியர்கள் தயாரிக்க வேண்டியிருந்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இரத்தந்தெளிக்கப்படுதலையும் தண்ணீரால் கழுவப்படுதலையும் ஒன்றாக இணைத்த பின்வரும் வசனம் அதிகம் ஆர்வத்தி ற்குரியது: "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும் சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையான இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" (எபிரெயர் 10:22). பேதுருவும் கூட, தமது வாசகர்களின் மறுபிறப்பு பற்றி, அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற போது உணர்தறிந்த ம றுபிறப்பு பற்றி கூற விரைவில் கடந்து வரவிருந்தார்.

இந்த ஒருசில வார்த்தைகளுடன் அப்போஸ்தலர், பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசுகிறிஸ்து மற்றும் பரிசுத்தமாக்குதலின் தேவனுடைய முகவரான பரிசுத்த ஆவியானவர் ஆகியோருடைய ஆசீர்வாதங்களை வேண்டி அழைத்தார். தேவன் ஒருவரேயென்று கிறிஸ்தவர்கள் உறுதிப்படுத்துகின்றனர், ஆனால் அவரது ஒருமைத்தன்மை மூன்று நபர்களில் காட்சியாகிறது: பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர். தேவனுடைய ஒருமைத்துவம் என்பது யூதர்களுக்கு, விசுவாசத்தின் கடையாணியாக இருந்தது. இது இன்னும் இவ்வாறே இருக்கிறது. தேவன் ஒருவராயிருந்தும் அவர் மூன்று நபர்களாயிருப்பது எப்படி என்று விளக்குவதற்கு, கோட்பாட்டளவிலான கலந்துரையாடல் எதையும் புதிய ஏற்பாடு தருவதில்லை. புதிய ஏற்பாட்டின் மற்ற எழுத்தாளர்களைப் போன்றே, பேதுருவைப் பொருத்த மட்டிலும் கூட, திரித்துவம் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய கொள்கையாக இருந்தது. சபையானது தனது மிகத் தொடக்க வரலாற்றில் இருந்தே கொள்கை குறித்துப் போராடியுள்ளது. திரித்துவம் பற்றிய விளக்கங்கள் ஏராளமாயிருந்தாலும் அவைகள் திருப்திப் படுத்துதலில் குறைவுபடுபவையாகவே உள்ளன.

திரித்துவம் ஒப்பீட்டளவில் சிறிதளவே கவனத்தைப் பெற்றுள்ளது ஏன்? வேதாகமம் இவ்வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை என்பது ஒரு காரணமாக உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் Barton W. Stone அவர்கள் செல்வாக்கு மிகுந்த சுவிசேஷப் பிரசங்கியாராக இருந்தார். புதிய ஏற்பாட்டு சபையை மீளக் கட்டுவதற்கான அமெரிக்கநாட்டு இயக்கத்தி ன் மீது ஸ்டோன் அவர்களின் ஊழியத்தின் நிழல் பெரிய அளவில் விழுந்தி ருந்தது. அவரது பெயரை ஒருக்காலும் கேள்விப்பட்டிராதவர்களும் மிக அரிதாகவே அவரைப் பற்றி உணர்ந்தறியக் கூடியவர்களாவும் இருந்த பலர்மீது அவர் செல்வாக்குச் செலுத்தினார். திரித்துவம் என்ற கருத்தைக் குறித்து எதையும் செய்யாதிருக்கவே ஸ்டோன் விரும்பினார். அது இசைவிணக்கம் அற்றதாயிருந்தது என்ற கருத்தை அவர் பராமரித்தார். திரித்துவம் என்பது

அத்தியாவசியமான கிறிஸ்தவ உபதேசமாக இருந்தது என்பதைத்தவிர, வேறு எந்த விஷயத்திலும் கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் இருவர் கருத்து ஒருமித்து இருப்பதில்லை என்பதாகக் காணப்படுகிறது. எவரொருவராலும் விளக்கியுரைக்கப்பட இயலாத ஒன்று அத்தியாவசியமான கிறிஸ்தவ உபதேசமாக இருக்கக் கூடுவது எவ்வாறு? என்று ஸ்டோன் கேட்டார்.[5] விசுவாசிகள் மத்தியில் ஒருமைப்பாடு நிலவ வேண்டும் என்பதற்காக, திரித்துவம் பற்றிய நிலைப்பாடு எதையும் மேற்கோள்ளாதிருக்க ஸ்டோன் விரும்பினார். இதேநிலையை இன்றைய நாட்களில் சபையில் பலர் பின்பற்றுகின்றனர். இருப்பினும் பேதுரு தெளிவாக்கியபடி, "திரித்துவம்" என்ற வார்த்தை வேதாகமத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அந்தக் கருத்து அங்கு (வேதாகமத்தில்) உள்ளது. தேவன் ஒருவராகவும் அதே வேளையில் மூவராகவும் இருக்கிறார் என்பது எவ்வாறு என்று புரிந்து கொண்டிருப்பதாக எந்தக் கிறிஸ்தவரும் கூற இயலாவிட்டாலும், தேவன் பிதாவாகவும், குமாரனாகவும் மற்றும் பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார் என்று பேதுருவுடன் சேர்ந்து நாம் உறுதிப்படுத்தலாம்.

தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *parepidēmos,* என்ற வார்த்தையின் பயன்பாடு, பழைய ஏற்பாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு ஆய்வுக் கருத்தை எடுத்தாளுகிறது. பேதுரு, 1:17ல் தமது வாசகர்கள் "இங்கே (இந்த பூமியில்) … சஞ்சரித்தல்" *(paroikia)* என்று எழுதுவார். 2:11ல் அவர் "அந்நியர்களும், பரதேசிகளும்" என்று அவர் குறிப்பிட்டார், இங்கு *paroikos* மற்றும் *parepidēmos* என்ற இரண்டு வார்த்தைகளையும் பயன்படுத்தினார். கானான் நாட்டில் நிலையற்றுச் சுற்றித்திரிபவராக ஆபிரகாம் வாழ்ந்த காலம் நோக்கி இக்கருத்து பின்செல்கிறது. சாராள் இறந்தபோது அவரை அடக்கம் செய்ய ஆபிரகாமிடம் நிலம் இல்லை. அங்கிருந்த மக்களிடம் அவர், "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன்" என்று கூறினார் (ஆதியாகமம் 23:4; காண்க எபிரெயர் 11:13). இந்த ஆய்வுக்கருத்து, தேவனிடத்தில் "பரதேசிகளும் புறக்குடிகளுமாக" இருக்கும்படி அழைக்கப்பட்ட இஸ்ரவேல் மக்களிடத்திலும் தொடர்ந்தது (லேவியராகமம் 25:23; காண்க சங்கீதம் 39:12). இயேசு கிறிஸ்துவுக்கு உரியவர்கள் இந்த உலகத்தை இல்லிடமாய்க் கொண்டிருப்பதில்லை என்பதைப் பேதுருவின் வார்த்தைகள் நினைவூட்டுகின்றன. இங்கு அவர்கள் இவ்வுலகத்தைக் கடந்து செல்லும் திருப்பயணிகளாக உள்ளனர். கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்துடன் மிகவும் பிணைப்பட்டவர்கள் ஆகி விடக்கூடாது என்பது அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக உள்ளது. கர்த்தர் தமது மகிமையுடன் திரும்பி வரும்போது, அவர்களின் நிரந்தரமான இல்லிடம் வெளிப்படுத்தப்படும்.

1 பேதுரு மற்றும் யாக்கோபு ஆகிய இரண்டு நிருபங்களுமே தங்களின் வாசகர்களை **சிதறியிருக்கிற** அல்லது "கலைந்திருக்கிற" *(diaspora)* மக்கள் என்று குறிப்பிடுகின்றன. புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை காணப்படும் மற்றொரு இடம் யோவான் சுவிசேஷம் (யோவான் 7:35) மட்டுமே ஆகும், அங்கு அது, பலஸ்தீனத்தை விட்டுப் புறம்பே சென்று வாழ்ந்திருந்து, கிரேக்க மொழியைப் பேசிய யூதர்களைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்த் (LXX), வேதாகமத்தில் (இது கிரேக்க மொழி பேசிய யூதர்கள் மத்தியில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது),

"diaspora" என்ற வார்த்தை, புறஜாதியாருக்கிடையில் சிதறியிருந்த இஸ்ரவேல் மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (உபாகமம் 28:25; எரேமியா 41[34]:17). "சிதறியிருக்கிறவர்கள்" என்பது, பேதுரு மற்றும் யாக்கோபு ஆகிய இருவருக்குமே, கிரேக்க - ரோமானிய உலகத்தில் சிதறப்பட்டு இருந்த கிறிஸ்தவர்களாவர், ஆனால் இது அதைக்காட்டிலும் அதிக அர்த்தம் கொண்டிருந்தது. பேதுருவின் வாசகர்கள் தங்கள் பரலோக இளைப்பாறுதலில் இருந்து பிரிந்திருக்க நேர்ந்தது பற்றிப் பேதுரு புரிந்து கொண்டிருந்தார். மீட்பின் நாளுக்காக அவர்கள் காத்திருந்தனர். Paul S. Minear அவர்கள், "சபையானது 'சிதறியிருக்கிற பரதேசிகள்' என்று குறிப்பிடப்பட்டபோது (யாக்கோபு 1:1; 1 பேதுரு 1:1) இவற்றை எழுதியவர்கள், பாலஸ்தீனத்தில் அல்ல ஆனால் பரலோக நகரில் கிறிஸ்தவர்கள் சென்று சேராமல் இன்னும் இந்த பூமியில் வாழ்ந்திருந்தனர் என்பதையே தங்கள் சிந்தையில் கொண்டிருந்தனர்" என்று சரியாக உற்றுநோக்கினார்.[6] கிறிஸ்துவை அறிதல் என்பது, கர்த்தருக்குப் பிரியமானதில் இருந்து தொடர்பு துண்டிக்கப்பட்டு இருத்தலை உணர்ந்தறிந்து, தற்காலத்தில் மக்களைப் பிரியப்படுத்துதல் ம ற்றும் இயக்குதல் ஆகிய விஷயங்களில் இருந்து தங்களைத் துண்டித்துக் கொள்ளுதலை குறிக்கிறது.

பேதுரு, தமது வாசகர்களில் புறஜாதியாரும் கலந்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தார் என்பதே பேதுருவின் நிருபம் யாக்கோபுவின் நிருபத்தில் இருந்து மாறுபட்டுள்ள விஷயமாகும் (1:14, 18 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்). இப்பாடக் கருத்தின் மீது கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்றாலும், யாக்கோபு தமது வாசகர்களில் எவரும் புறஜாதி யாராக இருப்பார் என்று எதிர்பார்த்ததாகத் தோன்றுவதில்லை. குறிப்பிட்ட புவியியல் பகுதியில் சிதறியிருந்தவர்களை குறிப்பிட்டார் என்ற வகையிலும் பேதுரு யாக்கோபுவில் இருந்து வேறுபடுகிறார். பேதுருவைப் பொறுத்தம ட்டில், அவர் குறிப்பிட்ட ரோமமாகாணங்களில் இருந்த யூத மற்றும் புறஜாதி விசுவாசிகளே "சிதறியிருந்தவர்கள்" ஆவர். இந்தச் சொற்றொடர் கிறிஸ்தவர்களுக்கு ஒரு உருவக அணியாக உள்ளது. யாக்கோபுவைப் பொறுத்தமட்டில், குறிப்பாக யூதக் கிறிஸ்தவர்களே "சிதறியிருந்தவர்கள்" ஆவர். இச்சொற்றொடரை யூதர்கள் பயன்படுத்திய நுட்பமான வழியில் யாக்கோபுவும் பயன்படுத்தினார். அவர் கானான் தேசத்தில் வாழ்ந்திராத யூதர்களைக் குறிப்பிட்டார்.

பேதுரு தமது வாசகர்களை இருவார்த்தைகளைக் கொண்டு விவரித்தார், அவை ஒவ்வொன்றுமே, ஆவிக்குரிய மறைவான கருத்துக்கள் நிரம்பி வழிபவையாக உள்ளன. அவர்களை அவர், "தெரிந்துகொள்ளப்பட்ட" வர்கள் என்று அழைத்தார், மற்றும் அவர்களை அவர் "பரதேசிகள்" என்றும் அழைத்தார். இவ்விரு வார்த்தைகளிலும் இருந்து பாய்ந்தோடி வரும் செல்வவளம், பழைய ஏற்பாட்டில் இவற்றில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. பழைய ஏற்பாட்டில் இருந்து அவர் காண்பிக்கும் மேற்கோள் ம ட்டுமே, கிறிஸ்தவத்தை அது இஸ்ரவேலில் கொண்டுள்ள வேர்களுடன் பிணைக்கும் கயிறுகளாக இருப்பதில்லை. உலகமே பழைய ஏற்பாட்டில் நிலைகொண்டிருந்தது என்று பேதுரு நினைத்தார். கடந்தகாலத்தில் இருந்த தீர்க்கதரிசிகள், நியாயப்பிரமாணிகர்கள், மற்றும் ஞானமுள்ள மனிதர்கள்

ஆகியோரின் வெளிப்படுத்துதலில் இருந்து, குறிப்பிட்டதக்க வார்த்தைகள், கருத்துக்கள், மற்றும் புத்திமதிகள் ஆகியவற்றை இந்த அப்போஸ்தலர் தரவழைத்தார். இந்தச் செயல்முறையில் அவர், பழைய ஏற்பாட்டு வார்த்தைகளையும் ஆய்வுக் கருத்துக்களையும் விரித்துரைத்து, அவற்றிற்கு தனிச்சிறந்த கிறிஸ்தவ வண்ணத்தைக் கொடுத்தார்.

"பரதேசிகள்" மற்றும் இவ்வார்த்தையுடன் நெருங்கிய இணைவு பெற்ற அர்த்தச் சொற்களாக 1:17 மற்றும் 2:11ல் காணப்படும் சொற்கள் ஆகியவற்றின் கலந்துரையாடலை நாம் தேக்கி வைத்துக் கொள்வோம். இவ்வேளையில் நாம், **தெரிந்து கொள்ளப்பட்ட** என்ற வார்த்தையை ஆய்வு செய்ய விரும்புகிறோம். யூதர்கள் தங்களைத் தாங்களே அடையாளப்படுத்திக்கொள்வதற்கு, "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" என்பதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த சொற்றொடர் வேறு எதுவும் இல்லை. அவர்கள், தேவன் தேர்ந்து கொண்டிருந்த மக்களாயிருந்தனர். வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களிடத்தில் மோசே, "அவர் உன் பிதாக்களில் அன்புகூர்ந்தபடியால், அவர்களுடைய பின்சந்ததியைத் தெரிந்து கொண்டார்" என்று கூறினார் (உபாகமம் 4:37). நியாயப்பிரமாணிகர், "... கர்த்தர் உன் பிதாக்கள் மேல் அன்புகூரும் பொருட்டு ... அவர்களுக்குபின் அவர்களுடைய சந்ததியாகிய உங்களை ... சகல ஜாதிகளுக்குள்ளும் தெரிந்து கொண்டார்" என்றும் கூடுதலாகக் கூறினார் (உபாகமம் 10:15).

"தெரிந்துகொள்ளப்பட்ட" என்பது யூதர்களுக்கே குறிப்பாகப் பயன்படுத்தப்பட்டதால், (சங்கீதம் 105:6), அவர்கள் தாவீது மற்றும் அவர் சந்ததியின்கீழ் மற்றும் மிக சமீபத்தில் மக்காபேயர்கள் மற்றும் அவர்களின் சந்ததியின்கீழ் அரசியல் அமைவு பெற்ற மக்களினமாக இருந்தபடியால், மற்றும் கிறிஸ்துவின் செய்தியானது எல்லா மக்களிடங்களுக்கும் உரியதாக இருப்பதால் (மத்தேயு 28:19), "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" என்ற வார்த்தையை, கிறிஸ்தவர்கள் (பழுவைக் குறைக்க) தூக்கியெறிவார்கள் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். அவர்கள் அதைச் செய்யவில்லை என்பது தெளிவு. இயேசுகிறிஸ்துவின் சபையானது இஸ்ரவேலின் நேரடியான ஆவிக்குரிய விரிவாக்கமாக உள்ளது. *Eklektos* என்ற கிரேக்க வார்த்தை, "தேர்ந்துகொள்ளப்பட்ட" அல்லது "தெரிந்துகொள்ளப்பட்ட" என்று பல்வேறு வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுலோ (ரோமர் 8:33; கொலோசெயர் 3:12; தீத்து 1:1) அல்லது பேதுருவோ, கிறிஸ்தவர்கள் தேவனால் "தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக" இருந்தனர் என்பதை மறந்துபோகும்படி அனுமதிக்கவில்லை.

தெரிந்துகொள்ளப்படுதல் என்ற செயல்முறையில் கிறிஸ்தவர்கள் செயல் எதுவும் செய்யாதிருப்பதாக நினைக்கும்படி அவர்கள் சோதிக்கப்படுகின்றனர். அவர் எதுவும் செய்வதில்லை; அவர் வெறுமனே அமைதியாக அமர்ந்து கொண்டு தம்மைத் தேவன் தேர்ந்துகொள்ள அனுமதிக்கிறார். தெரிந்துகொள்ளப்படுதல் என்பதை சிலர் இருதயத்தில் ஏற்படும் ஆவிக்குரிய விழிப்புணர்வுடன் - அவர் மீட்கப்பட்டிருப்பதையும் அதனால் அவர் தேவனுக்கு உரியவராயிருக்கிறார் என்பதையும் உள்ளாக உணரும் அனுபவத்துடன் - இணைவுபடுத்துகின்றனர். இக்கருத்துடன் இணைவு பெற்ற உபதேசம் ஒன்று, தேவன் நித்தியகாலமாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்களைத் தேர்ந்துகொண்டுள்ளார் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. ஒருவர், தேர்ந்துகொள்ளப்பட்டவராகவோ

அல்லது தேர்ந்துகொள்ளப்படாதவராகவோ இவ்வுலகத்தில் பிறக்கிறார் என்று கூறப்படுகிறது. தேவனுடைய ராஜரீக, நித்திய உத்தரவின்படி/நியமத்தின்படி ஒருவர் தேர்ந்துகொள்ளப்பட்டோ அல்லது தேர்ந்துகொள்ளப்படாமலோ இருப்பதால், அவர் (மனிதர்) தமது நிலைப்பாட்டை மாற்ற எதுவும் செய்ய இயலாது (எனப்படுகிறது).

இப்படிப்பட்ட கருத்துக்கள், மக்கள் பற்றிய கருத்தைப் புறக்கணிக்கும் படி, தனிநபர் மீது அதிக கவனம் குவிக்கின்றன. இவ்விஷயத்தில் தேவனுடைய முன்னறிதல் என்பது, "சபையை இருக்கும்படி கொண்டுவருவதில் அவரே தொடக்கச் செயலை மேற்கொண்டார் என்று கூறும் வழியாக உள்ளது" என்றுரைத்த I. Howard Marshall அவர்களின் கூற்று சரியாகவே உள்ளது.[7] தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள் என்ற கருத்து பழைய ஏற்பாட்டில் இருந்து உதிக்கிறது. இஸ்ரவேல் என்பது தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களினமாக இருந்தது, ஆனால் இஸ்ரவேல் மக்களினத்தில் தனிநபர்கள் சிலர் மிகவும் தேவ பக்தியற்றவர்களாக இருந்தனர். தனிநபர்கள் தேவபக்தியற்று இருத்தல் என்பது, தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள் என்ற வகையில் அவர்களின் நிலைப்பாட்டை மாற்றவில்லை. தனிநபர் தேவபக்தியற்றுப் போகும்போது, அவர் என்றென்றைக்கும் தேவனுடைய சமூகத்திலிருந்து துண்டிக்கப்படுவார், ஆனால் இஸ்ரவேல் மக்களினம் தேர்ந்துகொள்ளப் பட்டதாகவே நிலைத்திருந்தது.

அவ்வாறே, இஸ்ரவேலின் தேர்ந்துகொள்ளப்பட்ட நிலைப்பாட்டின் ஆவிக்குரிய சந்ததியான சபையும், "தேர்ந்துகொள்ளப்பட்ட" என்ற குறிப்புப் பெயரை மகிழ்வுடன் அனுபவிக்கிறது. தனிநபர் ஒருவரின் விசுவாசமானது செயல்படும்படி அவரை வற்புறுத்தும்போது, அவர் சபையில் அங்கம் வகிக்கிறார் மற்றும் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுடன் இருக்கிறார். தேவனுடைய அழைப்பில் "எதிர்த்து நிற்க இயலாத" கிருபை என்று எதுவும் இருப்பதில்லை. தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாக இருத்தல் என்பது, இரட்சிப்பின் உலகளாவிய அளிப்பிற்குத் தனிநபர் தரும் நேர்மறையான பதில்செயலின் பாகமாக உள்ளது. பவுல், "... நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும். சத்தி யத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதி முதல் தேவன் உங்களைத் தேர்ந்துகொண்டபடியினாலே, ... எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" என்று எழுதினார் (2 தெசலோனிக்கேயர் 2:13, 14). ஒருவர், சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அது அறிவிப்பதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிகிற போது, "தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுடன்" இருக்கும்படி தமது செயல்பாட்டை மேற்கொள்கிறார். எவர்களுடைய விசுவாசம் கீழ்ப்படியும்படி வற்புறுத்துகிறதோ, அவர்களை தேவன் தமது கிருபையினால் தேர்ந்துகொள்கிறார் - (எபேசியர் 2:8). தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்கு சொந்தமான சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் (நடபடிகள் 2:47).

பேதுரு தமது முன்னுரைக் கூற்றுகளை முடித்த நிலையில், தமது முறைப்படியான வாழ்த்தை உரைத்தார். **கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது,** கிரேக்க மொழியில் இதே வார்த்தைகளைக் கொண்டு இந்த அப்போஸ்தலர் தமது இரண்டாவது நிருபத்தைத்

தொடங்கினார் (2 பேதுரு 1:2). பவுல் தமது நிருபங்களில் "கிருபையும் சமாதானமும்" என்ற வார்த்தைகளை வழக்கமாகப் பயன்படுத்தினார். அவைகள் தமது வாசகர்களுக்குப் பெருக வேண்டும் என்ற விருப்பத்தைப் பேதுரு கூடுதலாகக் கூறினார். ஒரு கருத்தில் இவ்வார்த்தைகள் சம்பிரதாயமானவையாக இருந்தன. இவற்றை உரைத்தபோது பேதுரு இவற்றின் அர்த்தம் பற்றி மிகவும் சிந்தித்திருக்க வாய்ப்பு இல்லை. இன்னொரு கருத்தில், இவ்வார்த்தைகள் சம்பிரதாயமானவை என்பதைக் காட்டிலும் அதிகம் பொருள் நிறைந்தவையாக இருந்தன. தேவனுடைய கிருபையுள்ளதும் இலவசமானதுமான கொடைகள், அத்துடன் தேவசமாதானம் ஆகியவை இந்தத் கிறிஸ்தவர்களின் வாழ்வில் நிரம்பவேண்டும் என்ற தமது இருதயப்பூர்வமான வாழ்த்துக்களைப் பேதுரு இவர்களுக்கு அறிவிக்க விரும்பினார்.

நடைமுறைப் பயன்பாடு

தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகள் (1:1, 2)

இஸ்ரவேல் மக்களுக்கு மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த போது, சில வேளைகளில் அவர் ஒரு தடையைத் தொடர்ந்து "இதைச் செய்கிறவன் தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போவான்" என்ற வார்த்தைகளைக் கூறினார். உதாரணமாக, விக்கிரக ஆராதனைக்குத் தண்டனையைத் தேவன் இவ்வாறு அமைத்தார்:

> நான் அந்த மனிதனுக்கும் அவன் குடும்பத்துக்கும் விரோதமாக எதிர்த்து நின்று, அவனையும், அவன் பிறகே மோளேகை விபசார மார்க்கமாய்ப் பின்பற்றின யாவரையும், தங்கள் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போகப் பண்ணுவேன். அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம்போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்து நின்று, அவனைத் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப் பண்ணுவேன் (லேவியராகமம் 20: 5, 6).

ஒருவர் தம் ஜனத்தில் இருந்து அறுப்புண்டு போகுதல் என்பதைக் காட்டிலும் வேறு அதிகம் கடுமையான தண்டனை எதுவும், பழங்காலத் தூர கிழக்கு நாடுகளின் நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட சமூக அமைவில் இருந்ததில்லை. ஒருநபர் நாடுகடத்தப்படும்படி வற்புறுத்தப்படுதல் என்பது கடுமையான தண்டனையாக இருந்தது. யூதேயா நாடு பாபிலோனால் வெற்றி கொள்ளப்பட்ட போது, அதன் மக்களினம் முழுவதும் தனது சொந்த இடத்தில் இருந்து அந்நியநாட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டவர்களாக இருந்தனர். நாடுகடத்தப்பட்டு பாபிலோனில் இருந்தவர்களில் ஒருவர், "கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?" என்று புலம்பினார் (சங்கீதம் 137:4).

பரதேசியாயிருத்தல் என்ற பாடக்கருத்து வேதாகமத்தில் ஆழமாக ஓடுகிறது. கானானுக்குள் ஆபிரகாம் அந்நியனும் பரதேசியுமாகப்

பிரவேசித்தார். அவர் அந்த நாட்டில் மக்களில் எவருக்கும் உரியவராக இருக்க வில்லை, அவரது மனைவி சாராள் இறந்த வேளை வந்தது. உயிருள்ளவர்கள் நடமாட முடியும், ஆனால் மரித்தவர்களால் நடமாட முடியாதே. ஆகையால் அடக்கம் செய்வதற்குரிய ஒரு துண்டு நிலம் அவருக்குத் தேவைப்பட்டது, கானானில் இருந்த குடிகளிடத்தில் ஆபிரகாம் தமது சூழ்நிலையைப் பின்வருமமாறு விளக்கப்படுத்தினார்: "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமமாய் இருக்கிறேன்; ... உங்களிடத்தில் எனக்குச் சொந்தமாக ஒரு கல்லறைப் பூமியைத் தர வேண்டும்" (ஆதியாகமம் 23:4).

அந்நியராயிருந்தது, சொந்தநாட்டில் இல்லாதிருந்தது பற்றிய ஆபிரகாமின் உணர்வு இஸ்ரவேல் மக்களை விட்டு ஒருக்காலும் நீங்கவில்லை. பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு ஆபிரகாமின் சந்ததியாரை மோசே எகிப்தில் இருந்து வெளியே வழிநடத்திச் சென்றார். வனாந்தரத்தில் அவர் தேவனிடமிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்று அவர்களுக்குக் கொடுத்தார். அதன் அளிப்புகளில் ஒன்றாகப் பின்வருவதும் இருந்தது: "தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; நீங்கள் பரதேசிகளும் என்னிடத்தில் புறக்குடிகளுமாயிருக்கிறீர்கள்" (லேவியராகமம் 25:23). இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டில் குடியமருவார்கள், ஆனால் அங்கு அவர்கள் ஒருக்காலும் முழுமையும் இல்லிடம் கொண்டிருக்க மாட்டார்கள்.

தாவீதின் வாழ்வு முடிவை நெருங்கிக் கொண்டிருந்த போது, அவர் எருசலேமில் தேவாலயம் கட்டத் தயாரிப்புப் பணியை மேற்கொண்டார். அரசர் கர்த்தரை ஸ்தோத்தரித்து, பின் வருமாறு ஜெபித்தார், "உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப் போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம்" (1 நாளாகமம் 29:15). அரசர் தமது சங்கீதங்கள் ஒன்றில், இதே சிந்தனையை ஒன்றாக உருவாக்கினார்: "கர்த்தாவே என் ஜெபத்தைக் கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவி கொடும்; என் கண்ணீருக்கு மௌனமாயிராதேயும்; என் பிதாக்களெல்லாரையும் போல நானும் உமக்கு முன்பாக அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன்" (சங்கீதம் 39:12).

கடந்து செல்பவர், பரதேசி, அந்நியர் என்ற வளமான பின்னணிக்குப் பின்னால், பேதுரு தமது வாசகர்களைக் குறிப்பிட்டார். இந்த நிருபத்தின் முதல் வாசகர்கள் தங்களின் விசுவாசத்தின் நிமித்தம் துன்புற்றுக் கொண்டிருந்தனர். இதன் விளைவாக அவர்கள் பின்வரும் மூன்று சத்தியங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார்.

<u>முதலாவது, தேவன் மீது விசுவாசம் கொண்டுள்ள மக்கள் இந்த உலகத்தில் ஒருக்காலும் தங்கள் நிறைவான இல்லிடத்தை கொண்டிருந்ததில்லை மற்றும் அதைக் கொண்டிருக்கவும் மாட்டார்கள்.</u> அவர்களின் வாழ்வு, அவர்களின் உயர் நோக்குகள், தேவன் மீதான அவர்களின் விசுவாசம் ஆகியவை அவர்கள் வாழும் காலங்களுக்குப் பொருந்துவதில்லையென்று அவர்கள் உணர்வு கொண்டால், அவர்கள் மாண்பு மிக்கவர்களுடன் தோழமையில் பங்கேற்கின்றனர் என்றாகிறது. இதுவே முதல் நூற்றாண்டில் தேவபக்தியுள்ளவர்களின் வழியாயிருந்தது; இது இன்றும் அவ்வாறே உள்ளது.

இந்த நிருபத்தின் முதல் வாசகர் வாழ்ந்த உலகமானது, நவீன உலகத்திலிருந்து வேறுபட்டிருந்ததைக் காட்டிலும் அதிகமாக அதை (நவீன உலகத்தை) போன்றதாகவே இருந்தது. ஒழுக்கவீனம் மிகுந்திருந்தது. ஒரு

மனிதர் அடிமைப்பெண் ஒருத்தியை விலைக்கு வாங்கிய போது, அவள் அவரது உடமையாயிருந்தாள். அடிமைகள் தங்களுக்கிடையில் திருமணம் செய்து கொள்ளுதல் தடை செய்யப்பட்டிருந்தது, பல அடிமைகள் இருந்தனர், விவாகரத்து மற்றும் கருக்கலைப்பு ஆகியவை பொதுவான விஷயங்களாயிருந்தன, விரும்பப்படாத குழந்தைகள் பஞ்ச பூதங்களுக்கு இறையாக்கப்பட்டன. வன்முறை கொந்தளித்தது, பேதுருவின் வாசகர்கள் வாழ்ந்திருந்த, கிரேக்க மொழி பேசும் உலகம், அதிக உணர்வைத் தூண்டும் ரோமானியர்களின் பொழுதுபோக்கைத் தழுவிக் கொண்டிருந்தது. பொது அரங்க சாலைகளில் வாள் போர் செய்பவர்களின் காட்சிகள் அரங்கேறின. கொடிய மிருகங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மனிதர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட அவைகள் அவர்களுடன் சண்டையிட்டன; மிகவும் அடிக்கடி அவைகள், தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியை எதிர்கொண்டன, அவர்களின் தற்பாதுகாப்பிற்காக ஒரு கத்தியோ அல்லது ஒரு வலையோ அவர்களின் கையில் கொடுக்கப்படும். கிறிஸ்தவர்கள் வெகு சுலபமாக சுகவீனத்தை உணர்ந்த அந்த உலகில், வன்முறை, கொடூரம் மற்றும் ஒழுக்கவீனம் ஆகியவை பரந்திருந்தன. அவர்கள் தங்களை அந்நியர்களாக உணர்ந்தனர்.

இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான இதன் நடைமுறைப் பயன்பாடு கடினமானதாக இருப்பதில்லை, நகரத்துத் தெருக்களில் போதை மருந்திற்கான போராட்டம் வெடிக்கிறது. ஆபாச இலக்கியம், விபசாரம் மற்றும் பாலுறவிற்காக அடிமைப்படுத்துதல் ஆகியவையும் நவீன உலகத்தில் அரிதான விஷயமல்ல. இரவு வேளை செய்தி ஒளிபரப்புகள் கிறிஸ்தவர்கள் தங்கள் தலைகளை வேதனையுடன் ஆட்டும்படி செய்கின்றன. மக்கள் கிறிஸ்துவைப்பற்றி எவ்வளவு தீவிரமாக சிந்தனையை மேற்கொள்கின்றனரோ, கிறிஸ்தவர்கள் நாசரேத்தூர் இயேசுவைப் போலிருக்க எவ்வளவு தீவிரமாக செயல்படுகின்றனரோ, அவ்வளவுக்கு அவர்கள் இந்த உலகத்தைப் பொறுத்தமட்டில் பரதேசிகளும், கடந்து செல்பவர்களுமாயிருப்பதை உணர்கிறார்கள் மற்றும் தொடர்ந்து உணர்வார்கள்.

இரண்டாவது, பேதுருவின் வாசகர்கள் உபத்திரவத்தை எதிர்கொண்டிருந்த நிலையில், அவர்கள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டிருந்ததை அறியவேண்டும் என்று பேதுரு விரும்பினார். தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருத்தல் என்பது, கடைக்குச் செல்லும் ஒருவர் ஒரு உடையைத் தேர்ந்தெடுக்கையில் அந்த உடை சும்மா இருப்பது போல, ஒரு செயலற்ற நிகழ்வு என்று நினைக்கலாம். தேர்ந்து கொள்ளப்படுவதற்காக ஒருவர் செயல் எதுவும் செய்யாமல் காத்திருக்கிறார். பாவியோருவர் மரணத்தில் இருந்து கிறிஸ்துவுக்குள் ஜீவனுக்கு கடந்து வருகையில், தேவனே எல்லாவற்றையும் முனைந்து செய்கிறார் என்ற கருத்தைக் கொண்டுள்ள மிகப்பரவலான உபதேசம் மார்க்க உலகத்தில் உள்ளது. தேவன் தேர்ந்துகொள்கிறார். தேவன் விசுவாசத்தைக் கொடுக்கிறார். தேவன் இரட்சிப்பை உத்தரவாதப்படுத்துகிறார். பாவியாயிருப்பவர் செய்ய வேண்டியவையாகக் கேட்டுக் கொள்ளப்படுவது எதுவும் இல்லை.

பாவங்களில் மரித்தநிலையில் இருந்து கிறிஸ்துவுக்குள் ஜீவன் பெறும் நிலைக்குக் கடந்து வருதல் என்பது முற்றிலும் செயலற்ற கருத்தா? பேதுரு இவ்வாறு நினைக்கவில்லை. 1 பேதுரு நிருபத்தை எழுதிய இதே அப்போஸ்தலர் (முன்பு) பெந்தெகொஸ்தே நாளன்று தமது முதல் சுவிசேஷப்

பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். அதன் முடிவுப் பகுதிக்கு அவர் வந்தபோது, அந்தப் பிரசங்கத்தைக் கேட்ட கூட்டத்தார், தாங்கள் செய்ய வேண்டியது என்ன என்று கேட்டனர். அவர்கள் மனந்திரும்பி, தங்கள் பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று பேதுரு அவர்களிடம் கூறினார் (நடபடிகள் 2:38). அவர்கள் சிலவற்றைச் செய்ய வேண்டியிருந்தது. பின்வரும் தனிச்சிறப்பான கூற்றை லூக்கா கூடுதலாகக் கூறினார்: "இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான்" (நடபடிகள் 2:40). KJV வேதாகமத்தில், "அவகேடான இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" என்றுள்ளது. இந்த இரண்டு வாசிப்புகளிலுமே, பேதுருவின் உரையைக் கேட்டவர்கள் செய்யவேண்டிய சிலவிஷயங்கள் இருந்தன என்று அவர்களுக்குப் பேதுரு அறிவுறுத்துகிறார்.

மனித குடும்பத்தை மீட்பதற்கு தொடக்கச் செயலைத் தேவன் மேற் கொண்டுள்ளார் என்பது உண்மையே. மனிதர்கள் பாவத்தில் இழந்து போகப்பட்டிருந்த போது, அவர்கள் நம்பிக்கையற்று இருந்த போது, தேவன் செயல்பட்டார். தேவன் விசுவாசம் நிறைந்த ஆபிரகாமை அழைத்தார். அடிமைத் தளையில் இருந்த மக்களை அவர் எகிப்தில் இருந்து வெளியே நடத்திச் சென்றார். மீட்பரின் வருகைக்கு மனிதர்களைத் தயார்ப்படுத்துவதற்காக, அவர் இந்த உலகத்தைப் பண்படுத்தினார். அவர் தமது ஒரே பேறான குமாரானை அனுப்பினார். இவையாவும் உண்மையே, ஆனால் முடிவில், தேவனுடைய இந்த அழைப்பு மனிதரின் பதில் செயல் ஒன்றினால் பதில் அளிக்கப்படவேண்டும். கிறிஸ்துவினிடத்தில் வருகிறவர் முற்றிலும் செயல்படாதவராக இருப்பதில்லை, மீட்பின் செய்தியைக் கேட்கும் போது, இயேசுவே கிறிஸ்து என்று விசுவாசிக்கும்போது, மற்றும் தங்கள் விசுவாசத்தின்படி செயல்படும்போது, கிறிஸ்தவர்கள், தேவனால் தேர்ந்துகொள்ளப்படுகின்றனர்.

மூன்றாவது, பேதுரு குறிப்பிட்ட துன்புற்ற கிறிஸ்தவர்கள், தாங்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருப்பதை அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார். தேவனுடனான அவர்களின் உறவும், இயேசு கிறிஸ்துவில் அவர்கள் பகிர்ந்து கொண்ட நம்பிக்கையும் "ஆவியானவரின் பரிசுத்தமாக்கும் செயலின்" மூலமாக வந்திருந்தது. Sanctified என்றால் made holy என்பதாகிறது. அது தேவனுக்கென்று பிரித்தெடுத்து வைக்கப்படுதலாக உள்ளது. இந்த நிருபத்தை முதன் முதலாக வாசித்த கிறிஸ்தவர்களை தேவன் தேர்ந்துகொண்டது மாத்திரமின்றி, அவர்களை அவர் தமது பரிசுத்த மக்களாகவும் ஆக்கினார்.

இழந்துபோகப்பட்ட ஒரு பாவி, சுவிசேஷத்தைக் கேள்விப்படுகிறார், அதன் செய்தியை விசுவாசிக்கிறார், மற்றும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறார், தேவன் அவரை அல்லது அவளைப் பரிசுத்தமாக்குகிறார். பரிசுத்தமாக்குதல் என்பது ஒரு நபர் தமக்குத்தாமே செய்து கொள்ளக் கூடிய விஷயமல்ல. இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் தேவன் (நம்மை) பரிசுத்தம ாக்குகிறார். தேவனால் பரிசுத்தமாக்கப்பட்ட மக்கள் பரிசுத்தவான்களாக உள்ளனர். அவர்கள் தேவனுடைய பரிசுத்தர்களாக உள்ளனர். பெரும்பாலான கிறிஸ்தவர்கள், "நான் பரிசுத்தமாயிருக்கிறேன்" என்று கூறத்தயங்குகின்றனர். பேதுரு இவ்விதத் தயக்கம் எதையும் கொண்டிருக்க

வில்லை. கிறிஸ்தவராயிருத்தல் என்றாலே பரிசுத்தமாயிருத்தல் என்றே அர்த்தமாகிறது. புதிய ஏற்பாட்டில் உள்ள மற்ற எல்லாப் புத்திமதிகளையும் போலவே, பேதுருவின் புத்திமதியும் பின்வருவதாகவே உள்ளது: தேவன் உங்களைப் பரிசுத்தமாக்கியுள்ளபடியால், அதன்படியே நீங்கள் பரிசுத்தமான மக்களைப் போன்றே வாழுங்கள். பரிசுத்த தன்மை என்பது மனிதத் தகுதியைச் சார்ந்திருப்பதில்லை. இருப்பினும் விசுவாசம் நிறைந்த வகையில் வாழுதல் என்பது, விசுவாசம் நிறைந்த பதில் செயலைக் கேட்கிறது. இதைப் பவுல் நன்றாகக் கூறினார்: "நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோமர் 2:13).

தொகுப்புரை: இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்கள், தேவபக்தியற்ற மக்களின் எதிர்ப்பை எதிர் கொண்டுள்ளனர். சிலவேளைகளில் உபத்திரவம் என்பது மற்றவற்றைக் காட்டிலும் உடல்ரீதியாக அதிகமானதாக உள்ளது; சிலவேளைகளில் இது அதிகம் மனோரீதியானதாக உள்ளது. அது எப்போதுமே உள்ளது. பேதுரு தமது வாசகர்களுக்கு, எதிர்ப்பிலிருந்து தப்பிக்கொள்ளும் புகலிடம் எதையும் வாக்குறுதி அளிக்கவில்லை. அவர்களிடம் அவர் பின்வருமாறு விவாதித்தார்: (1) கிறிஸ்தவர்கள் உபத்திரவப்படும்போது, தேவனுடைய பரிசுத்தவான்களின் நீண்ட வரிசையில் நிற்கின்றனர். இந்த யுகத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் இல்லிடத்தில் இருத்தல் கடினம் என்பதைத் தேவனுடைய மக்கள் எப்போதும் புரிந்து கொண்டுள்ளனர். அவர்கள் இந்த உலகத்தில் பரதேசிகளாக, கடந்து செல்பவர்களாக, அந்நியர்களாக இருக்கின்றனர். (2) அவர்களைப்பற்றி இந்த உலகம் நினைப்பது எதுவாக இருப்பினும், அவர்கள் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களாக இருக்கின்றனர். (3) தேவன் அவர்களைப் பரிசுத்தராக்கியுள்ளார்கள். அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருப்பதால் பரிசுத்தமான வாழ்வை வாழவேண்டும்.

குறிப்புகள்

[1]*உபாகமம் 32:30, 31; சங்கீதம் 18:2, 31, 46; 19:14; 28:1; 31:2, 3; 42:9; 62:2, 7; 71:3; 78:35; 89:26; 92:15: 94:22; 95:1; 144:1.* [2]"ஆவியானவர்" என்ற வார்த்தை இலக்கணரீதியாக கிரேக்க மொழியில் ஆறாம் வேற்றுமைத் தொகையாக உள்ளது. இது தனிப்பட்டவகையில் ஆறாம் வேற்றுமைத் தொகையாக உள்ளது. [3]A. M. Toplady, "Rock of Ages," *Songs of the Church,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [4]J. Ramsey Michaels, *1 Peter*, Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 12. [5]*பர்ட்டன் W ஸ்டோன் அவர்கள் The Christian Messenger என்ற தமது பத்திரிகையில் பல்வேறு வேளைகளில், திரித்துவம் என்ற கருத்தைப்பற்றி விவாதித்துள்ளார். 1830 ஜூலை இதழில் (169-173) உள்ள கட்டுரை குறிப்பிடத்தக்கதாகும். திரித்துவம் பற்றிய ஸ்டோன் அவர்களின் நிலைபற்றி ஒரு தொகுப்புரையை பின்வரும் புத்தகத்தில் காணவும்:* James DeForest Murch, *Christians Only: A History of the Restoration Movement* (Cincinnati: Standard Publishing, 1962), 92. [6]Paul S. Minear, "Holy People, Holy Land, Holy City: The Genesis and Genius of Christian Attitudes," *Interpretation* 37 (January 1983): 28. [7]I. Howard Marshall, *New Testament Theology: Many Witnesses, One Gospel* (Downers Grove, Ill.: InterVarsity Press, 2004), 644.

2

இரட்சிப்பு, விசுவாசத்தின் விளைவு (பாகம் 1)

(1:3-25)

பேதுரு, தமது வாசகர்கள் இஸ்ரவேலுக்கு நேரடி பின் தொடர்ச்சியாக நிற்க வேண்டும் என்று கருதினார் என்பது தொடக்க வசனங்களில் இருந்து தெளிவாகிறது. அவர்கள் தேவனால் "தேர்ந்து கொள்ளப்பட்ட" மக்களாயிருந்தனர். அவரது வாசகர்களில், யூதர்களும் புறஜாதியார்களும் இருக்கலாம் என்றிருக்கையில், இவ்விருசாராருமே இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுடன் கொண்டிருந்த உறவினாலேயே அவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களாக இருந்தனர். தேவனுடைய மக்களைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் புரிந்து கொள்ளுதலுக்குள் அப்போஸ்தலரின் வார்த்தைகள் ஆழமாய்ச் சென்று சேர்ந்தன, ஆனால் விரைவிலேயே பழைய ஏற்பாட்டின் கருத்துக்கள் போதாதவைகளாக இருந்தன. அவரது வாசகர்கள் ஒரு புதுப்பிறப்பை அனுபவித்து இருந்தார்களே! அவர்களின் ஜீவனுள்ள நம்பிக்கை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மீது அடிப்படை கொண்டிருந்தது. அவர்களின் சுதந்தரம் நித்தியமானதாக, பரலோகத்தில் வைக்கப்பட்டிருந்தது, விசுவாசத்தின் மூலமாக அவர்கள், கடைசிக் காலத்தில் வெளிப்படுத்தப்படவிருக்கும் இரட்சிப்பை எதிர்நோக்கியிருந்தனர்.

"ஜீவனுள்ள நம்பிக்கைக்கு மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல்" *(1:3-5)*

[3]நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. [4]அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். [5]கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக, விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு, அந்த சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

__வசனம் 3.__ இதன் தொடக்க வார்த்தைகள், இஸ்ரவேலின் தேவ பக்தியிலும் அதன் ஜெப ஆலயப் பாரம்பரியத்திலும் வேர்கொண்டுள்ளன, ஆனால் பேதுரு மேலும் விரிவாக உரைத்தார். **தேவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாக இருக்கிறார்** *என்பதி*

லேயே அவரது ஸ்தோத்திரத்திற்குரிய தன்மை அப்போஸ்தலருக்கு அதிகம் முழுமையாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. நாசரேத்தூர் இயேசு என்ற மனிதருக்கு தேவன் தனிப்பட்ட வகையில் "பிதா" வாக இருக்கிறார் என்று பேதுரு உறுதிப்படுத்தினார், மற்றும், இந்த நாசரேத்தூர் இயேசு "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாக" இருக்கிறார். நாசரேத்தூர் இயேசு மனித உருவில் வாழ்ந்தபோது அவரது கர்த்தத்துவம் தெளிவாக இருந்தது, ஆனால் அது, தேவனுடைய வலது பக்கத்தில் இருந்து ஆளுகை செய்யும்படிக்கு அவர் உயர்த்தப்பட்டதினால் மேலும் அறிவிக்கப்பட்டது. இவ்வாறு பேதுரு, பழைய ஏற்பாட்டின் மீதான தமது நிலைப்பாட்டை, புதியதை நோக்கித் தமது வாசகர்களை நீளச் செய்வதற்கு எடுத்துமேற்கொண்டார்.

கிறிஸ்துவுக்குள் தேவனுடைய வெளிப்படுத்துதலின் புதிய தன்மையைப் பேதுரு நீட்டித்து உரைத்தபோது, இஸ்ரவேலுக்கு தேவனுடைய வெளிப்படுத்துதலின் மீது அவர் மேற்கொண்ட உறுதியான நிலைப்பாடு குறித்த பேதுருவின் வார்த்தைகள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. இஸ்ரவேலின் பயபக்தியானது, புத்திமதிகள் அல்லது துதியை **ஸ்தோத்திரம் உண்டாவதாக** என்ற வார்த்தைகளைக் கொண்டு தொடங்குதலை அடிக்கடி பொருத்தமாகக் கண்டறிகிறது. சாலேமின் ராஜாவான மெல்கிசேதேக்கு, "... உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக" என்று அறிவித்தார், பின்பு அவர் "... உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று கூடுதலாகக் கூறினார் (ஆதியாகமம் 14:19, 20). அபிகாயிலிடம் தாவீது தமது வார்த்தைகளை, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று கூறித் தொடங்கினார் (1 சாமுவேல் 25:32). சங்கீதக்காரர்கள் அடிக்கடி, இவ்வார்த்தையைக் கர்த்தரைத் துதிக்கப் பயன்படுத்தினர் (சங்கீதம் 28:6; 31:21; 41:13; 66:20; 68:19, 35). எருசலேமுக்குள் இயேசு நுழைந்த போது மக்கள் கூட்டம், "கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று ஆர்ப்பரித்துக் கூறிற்று (மத்தேயு 21:9).[1] பேதுரு பயன்படுத்திய இதே இலக்கணரீதியான கட்டமைப்பைப் பயன்படுத்திய சகரியா, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்று அறிவித்தார் (லூக்கா 1:68). நிறைவாக, பேதுருவினுடையதைப் போன்ற சொல்விளக்கங்களை, 2 கொரிந்தியர் 1:3 மற்றும் எபேசியர் 1:3 ஆகிய வசனங்களில் பவுல் பயன்படுத்தினார்.

பேதுரு தமது வாசகர்களுக்கு, இயேசு மரித்தோரிலிருந்து எழுந்து வந்திருந்தார் என்பது குறித்து அப்போஸ்தலர்களும் மற்றவர்களும் கொடுத்த நிச்சயமான சாட்சியத்தின்மீது அவர்களின் (வாசகர்களின்) நம்பிக்கை அஸ்திபாரம் பெற்றிருந்தது என்று உறுதிப்படுத்தினார். தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் மத்தியில் இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது, பெருந்திரள் மக்கள் கூட்டத்தின் சித்தபிரம்மைக்குச் சாட்சியாயிருக்கவில்லை. உண்மையான காலத்தில், வரலாற்றுப் பக்கங்களில், (இயேசு மரித்த) மூன்றாம் நாளில் அவரைத் தேவன் மீண்டும் உயிர்ப்பித்தார். அவர் நாற்பது நாட்கள் அளவாகத் தமது சீஷர்களுக்குத் திரும்பவும் தரிசனமாகி அவர்களுக்குப் போதித்தார் (நடபடிகள் 1:3). **இயேசு கிறிஸ்து மரித்தோரில் இருந்து எழுந்ததிலேயே** கிறிஸ்தவ நம்பிக்கை உள்ளது. கர்த்தரின் உயிர்த்தெழுதலினால் புதிய பிறப்பும் (மறுஜென்மமும்)

ஜீவனுள்ள நம்பிக்கையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. 1 பேதுரு 3:21ல் ஞானஸ்நானமும் நல்மனச்சாட்சிக்கான வேண்டுகோளும் "இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலேயே" உள்ளன என்று குறிப்பிடுதல், கருத்துக்குப் புறம்பானதாக இருப்பதில்லை.

தேவன் ஸ்தோத்திரிக்கப்பட வேண்டியவராக இருக்கிறார். இரட்சிப்பதற்கான தொடக்க ஊக்குவிப்புப் பணியைத் தேவன் மேற்கெண்டுள்ள காரணத்தினால் அவர் தமது மக்களால் எப்போதும் ஸ்தோத்தரிக்கப்பட வேண்டியவராக இருக்கிறார். அது அப்போஸ்தலரும் அவரது வாசகர்களும் தேவனுடன் கொண்டிருந்த உறவுமுறையின் மூலமான **அவரது மிகுந்த இரக்கமாக** உள்ளது. தேவன் "தமது மிகுந்த இரக்கத்தினால்" செயல்படவும், தமது மகன் இயேசுவை மீட்பராக அனுப்புவதன்மூலம் மக்களைச் சென்றடையவும் தேர்ந்து கொண்டிருந்தார் என்பதால் அவர்கள், கிறிஸ்துவிற்குள் நம்பிக்கையையும் அவரது வாக்குத்தத்தத்தையும் பகிர்ந்து கொண்டனர்.

பழையதன் மீது பேதுரு புதியதைக் கட்டத் தொடர்ந்தார். தேவன் ஸ்தோத்தரிக்கப் பட்டவர், மிகுந்த இரக்கமுள்ளவர் என்பவை, புதிய அல்லது பிரம்மிக்கச்செய்யும் கருத்துக்களை மிக அரிதாகவே கொண்டமை ந்து இருந்தன. அவை இஸ்ரவேலின் கடந்த காலத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தன, ஆனால் அடுத்த சிந்தனை புதியதாக இருந்தது.[2] யூதர் தமது பிறப்பினாலேயே தேவனுடைய மக்களுக்கான ஆசீர்வாதத்தில் பங்கு பெற்றார். அவரது தாய் அவரைப் பிறப்பில் கொண்டுவந்த போதும், அவர் பிறந்த எட்டாம் நாளில் அவரது தந்தை அவருக்கு விருத்தசேதனம் செய்வித்த போதும், அவர் தேவனுடைய மக்கள் சமூகத்தின் பாகமானார். பேதுருவின் வாசகர்களுடைய நிலை அவ்வாறு இருக்க வில்லை! அது உடல் ரீதியான பிறப்பாக இருக்கவில்லை, ஆனால் அது கிறிஸ்தவ சமூகத்தில் அவர்கள் பங்கு பெற்றதை விளைவித்தது என்ற வகையில், ஆச்சரியம் நிறைந்த பிறப்பாகவே இருந்தது. அவர்கள் **மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தனர்**. அவர்களின் இந்தப் புதிய பிறப்பின் மூலமாக அவர்களைத் தேவன் தமது மக்களின் எண்ணிக்கைக்குள் கூட்டியிருந்தார்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், கிறிஸ்தவரல்லாத வாழ்விலிருந்து கிறிஸ்தவ வாழ்விற்கு மாற்றம் அடைதலை விவரிக்க, தீவிரமான சொற்றொடர்களைப் பயன்படுத்தினர். பவுலுக்கு இது, மிக அடிக்கடி, மரித்தல் என்பதன் ஒப்புவமையாக இருந்தது. இருப்பினும், வாழ்வின் புதிய தன்மையைக் கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவித்தல் என்பதன் சிந்தனையானது, பவுலின் எழுத்துக்களில் இல்லாமற் போகவில்லை; இந்தப் பாடக் கருத்தை அவர் ரோமர் 6:3, 4ல் கொண்டுவந்தார், விசுவாசியானவர் புதிய ஜீவனுள்ளவராக நடந்துகொள்ளும்படிக்கு ஞானஸ்நானத்தில் ம ரிக்கிறார். அவர் கிறிஸ்துவுடன் உயிர்ப்பிக்கப்படும்படிக்கு அவருடன் அடக்கம் செய்யப்படுகிறார் (*sunthaptō*) தேவனுக்கு முன்பாக கிறிஸ்தவரின் மாற்றம் பெற்றநிலைக்கு மாறிய அவரது வாழ்வுக்கும் சாட்சியளிக்கும் பலவிஷயங்களில், புதுப்பிறப்பு என்பது ஒரு உருவகமாக உள்ளது.

யூத அதிகாரிகளில் ஒருவரான நிக்கொதேமுவுடன், புதிய பிறப்பு பற்றிய இயேசுவின் உரையாடலை யோவான் பதிவு செய்தார் (யோவான் 3:1-8). அது

"தண்ணீரினாலும் ஆவியானவரினாலும்" பிறப்பதாக உள்ளது என்று இயேசு கூறினார் G. R. Beasley-Murray அவர்கள், "... இவ்வார்த்தைகளில் [*ex hudatos,* 'of water'] ஞானஸ்நானம் தவிர வேறு ஏதேனும் குறிப்பு உள்ளது எனத் தீவிரமாகக் கருத்துக் கொள்ளுதல் கடினமாக உள்ளது" என்று அறிவித்தபோது, அவர் நிச்சயமாக மிகச் சரியானதையே கூறினார்.[3]

மறுஜென்ம முழுக்கு பற்றி, அதாவது மறுபிறப்பைக் கொண்டுவரும் முழுக்கு பற்றிப் பவுல் எழுதியபோது, தண்ணீர் ஞானஸ்நானமே அவர் கண்ணோக்கில் இருந்தது (தீத்து 3:5-7)[4] யாக்கோபு 1:18ல் ஞானஸ்நானம் பற்றிய மறைமுகமான குறிப்பு ஒன்று உள்ளது. பேதுரு, பவுல், யோவான் மற்றும் யாக்கோபு ஆகியோருக்கு, ஞானஸ்நானமும் புதியபிறப்பும் பிரிக்கப்பட இயலாதவையாக இருந்தன. J. N. D. Kelly அவர்கள் [1 பேதுரு 1:3-5] ன் (இவ்வார்த்தை மறுபிறப்பிற்கான குறிப்பு) "ஞானஸ்நானம் பற்றிய குறிப்பு தவற்றதாக உள்ளது" என்று குறிப்பிட்ட போது அவர் சரியான கூற்றையே கூறினார்.[5]

புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் வெறுமனே உடல்ரீதியான செயலாக இருப்பதில்லை. அதைவிட அதிகமானதாக உள்ளது. மனம் வருந்தும் விசுவாசி, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல் என்ற செயல் செய்யும் போது, அந்த விசுவாசியின் பாவங்களை எடுத்துப் போடுதல் என்ற செயலை தேவன் தாமே செய்கிறார். சிலவேளைகளில் நாம் கேள்விப்படுகிறபடி, ஞானஸ்நானம் என்பது, வெறுமனே, "உள்ளான கிருபையின் புறம்பான அடையாளமாக" மாத்திரம் இருப்பதில்லை. ஞானஸ்நானம் என்பது ஒருவர் தேவனுக்குள் நிலைநிற்பதை உத்தரவாதப்படுத்துகிற மந்திரவாதச் செயல்முறையாக இல்லாதிருக்கையில், அது கிறிஸ்தவப் புதுப்பித்தலுக்கு ஒரு பின் சிந்தனையாக இருப்பதும் இல்லை, ஞானஸ்நானம் என்பது விசுவாசியின் ஆவிக்குரிய பதில் செயலாக உள்ளது. அது மனந்திரும்பிய அல்லது சீர்திருத்தம் பெற்ற வாழ்வு என்பதைக் காட்டிலும் அதிகமாக, தகுதியின் செயலாக இருப்பதில்லை. விசுவாசியானவர் விசுவாசம் மற்றும் மனந்திரும்புதல் ஆகியவற்றினால் தமது இருதயத்தை ஆயத்தம் செய்திருக்கையில், அவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது அவரது பாவங்கள் கழுவப்படுகின்றன என்பது தேவனுடைய வாக்குத்தத்தமாக இருக்கிறது (நடபடிகள் 22:16). இரட்சிப்பு மற்றும் ஜீவன் ஆகியவற்றிக்கான தேவனுடையவாக்குத்தத்தம் விசுவாசித்தில் செயல்படுதல் மற்றும் ஞானஸ்நானத்தில் கர்த்தரைச் சந்தித்தல் ஆகியவற்றில் விசுவாசி கொண்டுள்ள மனவிருப்பத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது.

ஒருவர் மறுபடியும் பிறத்தல் என்பது **ஜீவனுள்ள நம்பிக்கைக்கானதாக** உள்ளது என்று பேதுரு கூறினார். கிறிஸ்தவ "நம்பிக்கை" யுடன் "ஜீவனுள்ள" என்ற பெயர் உரிச்சொல்லை அப்போஸ்தலர் இணைத்தது ஏன் என்பது தெளிவற்றதாக உள்ளது, ஆனால் இதன் சாத்தியக் கூறுகளைப் பற்றிச் சிந்தித்தல் கடினமாக இருப்பதில்லை, கிறிஸ்தவ "நம்பிக்கை" என்பது "ஜீவனுள்ளதாக" இருப்பதாக விவரிக்கையில், பேதுரு பின்வரும் இரண்டு விஷயங்களைத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம்: (1) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல். சிலுவையில் அறையப்பட்ட கர்த்தர் (மீண்டும் உயிரோடு எழும்பி) உயிருடன் இருப்பதால், கிறிஸ்தவ "நம்பிக்கை" என்பது "ஜீவனுள்ளதாக" இருக்கிறது. (2) இதற்கு மறுபடியும், "நம்பிக்கை" என்பது வளருவதாக, விசுவாசிக்குள்ளாக

வாழ்கிறதாக இருப்பதால், அது “ஜீவனுள்ளதாக” இருக்கலாம். கிறிஸ்தவ வாழ்வில் இன்னும் உய்த்துணரவேண்டியது இருந்தது என்பதைப் பற்றிய சில விஷயங்களை பேதுருவின் வாசகர்களுக்கு நம்பிக்கை நினைவூட்டிற்று (காண்க ரோமர் 8:24, 25). பேதுருவின் வாசகர்களுக்கு அந்தப் புதிய பிறப்பு அர்த்தப்படுத்திய ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எல்லாவற்றிலும், இயேசுவின் நிமித்தம் அவர்கள் அவ்வேளை சகித்திருந்த உபத்திவத்தைப் பற்றிப் பேதுரு அறிந்திருந்தார். கிறிஸ்தவ நம்பிக்கையை உணர்ந்தறிதலுக்கு கிறிஸ்தவர்கள் அவற்றைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தனர்.

1 பேதுரு நிருபத்தை “நம்பிக்கையின் நிருபம்” என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். பேதுருவுக்கும் அவரது வாசகர்களுக்கும் மற்றும் எல் லாக் கிறிஸ்தவர்களுக்குமே, கர்த்தரின் மறுவருகை, கிறிஸ்தவ நம்பிக்கையின் உச்ச வளர்ச்சி முக்கியமானதாக உள்ளது என்பது உண்மையே. முதலாம் அதிகாரத்தில் மூன்று முறையும் மூன்றாம் அதிகாரத்தில் ஒருமுறையும் “நம்பிக்கை” என்ற வார்த்தை காணப்படுகிறது, ஆனால் நம்பிக்கை என்பது இந்த நிருபத்தின் மேலாதிக்கம் செலுத்தும் ஆய்வுக் கருத்தாக அல்ல ம ாறாக ஒரு பின்னணிக் கருத்தாகவே உள்ளது. ரோமர் 8:24, 25ல் “நம்பிக்கை” என்ற வார்த்தை ஐந்து முறைகள் காணப்படுகிறது. நம்பிக்கை என்பது புதிய ஏற்பாடு முழுவதிலும் ஒரு முக்கியமான ஆய்வுக் கருத்தாக உள்ளது, அது ம ற்ற இடங்களைக் காட்டிலும் 1 பேதுரு நிருபத்தில் குறைவானதாக இருப்பதில் லை.

வாழ்வு பற்றிய இருள் நோக்கும் வெறுப்பு மனப்பான்மையுமே, கல்வி மற்றும் அதினால் பெறப்பட்ட உலகில் எண்ணிக்கைகளின் அடையாளங்களாக இருக்கும் ஒரு உலகத்தில், கிறிஸ்தவர்கள் தங்கள் தலைகளை உயர்த்தி நம்பிக்கையுடன் உள்ளனர், இதேபோன்று ஒலிக்கும் இலத்தீன் வார்த்தைகளான *dum spiro, spero* என்பவற்றைக் கொண்டு புனையப்பட்ட பழைமையான இலத்தீன் சொற்றொடர் ஒன்றுள்ளது. அதை மொழிபெயர்த்தால், “நான் சுவாசிக்கும் போது நான் நம்புகிறேன்” என்று வரும். கற்பனை உலக சமூகங்கள், அல்லது மரபுப் பொறியியல் அல்லது அற்புதமான மருந்துகள் ஆகியவற்றைக் கண்டறிதலில் கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கையை வைப்பதில்லை. உலகப்பிரகாரமான மனிதர் கல்லறையைக் கடந்து செல்லுகையில் தமது விசில் ஒலியைத் தொடருவார் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் நம்பிக்கையானது சற்று மாறுபட்ட விஷயத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. “நம்பிக்கைகளும் கனவுகளும் பெரும்பாலும் அடைக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் உள்ள, வாழ்வின் மாறும் சூழ்நிலைகளில் கிறிஸ்தவ நம்பிக்கை தனது வேர்களைக் கொண்டிருப்பதில்லை. மாறாக அது … தேவனே வரலாற்றின் கர்த்தராக இருக்கிறார் என்ற ஆழமான உறுதிப்பாட்டில் இருந்து எழும்புகிறது.”[6] மனித குலத்தின் அடைவிடமானது நல்ல தேவனின் கரங்களில் கிடக்கிறது. “அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல: ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்கு பொறுமையோடே காத்திருப்போம்” (ரோமர் 8:24, 25).

வசனம் 4. பழையதையும் புதியதையும் பேதுரு முயற்சியின்றியே

ஒன்றிணைக்கும்படிக்கு, பேதுரு சிந்தையானது, இஸ்ரவேல் மக்களின் அனுபவங்களில் ஆழமாக நிலைகொண்டிருந்தது. அந்த இஸ்ரவேல் மக்கள் தேவனிடத்தில் இருந்து ஒரு சுதந்தரத்தை *(klēronomia)* கொண்டிருந்தனர் என்பது யூதர்களின் சுயபுரிந்து கொள்ளுதலில் ஒரு பாகமாக இருந்தது. கானான் நாடு அவர்களின் சுதந்தரமாக இருந்தது. இஸ்ரவேல் மக்களுக்கு, "கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற அந்த நல்ல தேசம்" (உபாகமம் 4:21). பற்றி மோசே நினைவூட்டினார். பழைய ஏற்பாட்டில் ஏற்கனவே, இஸ்ரவேல் மக்களின் சுதந்தரமானது கானானைக் காட்டிலும் அதிகமானதாகவே இருந்தது, தேவனே அவர்களின் சுதந்தரமாக இருந்தார். சங்கீதக்காரர், "கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்" என்று அறிக்கையிட்டார் (சங்கீதம் 16:5). புதிய இஸ்ரவேலான கர்த்தரின் சபையானது, இஸ்ரவேல் மக்கள் அனுபவித்து இருந்ததைக் காட்டிலும் அதிக மகிமையுள்ள **ஒரு சுதந்தரத்தைக்** கொண்டிருந்ததை அது (சபை) அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார். இஸ்ரவேல் மக்கள் தங்கள் நாடு பாழாக்கப்பட்டதைக் காண வாழ்ந்திருந்தனர். உலகப் பிரகாரமான விஷயங்கள் அழிந்து தேய்பவையாக உள்ளன. இதற்கு நேர்மாறாக, கிறிஸ்தவ நம்பிக்கையானது **பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ளது.** இந்த சுதந்தரம் **அழியாததும் மாசற்றதுமாயிருக்கிறது. இது வாடிப்போவதில்லை.** கர்த்தரின் தரிசனத்தை எதிர்நோக்கி கிறிஸ்தவர்கள் ஏங்கியிருந்ததை அப்போஸ்தலர் குறிப்பிட்டார்.

வசனம் 5. ஜீவனுள்ள நம்பிக்கைக்கென்று மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்குப் பரலோகத்தில் சுதந்தரம் வைக்கப்பட்டுள்ளது, இவர்கள் **தேவனுடைய பெலத்தினால் காக்கப்பட்டுள்ளனர்.** இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பிய அதே பெலம் (1:3) கிறிஸ்துவுக்குள்ளானவர்களைக் காக்கிறது. தேவன் தமது மக்களுக்கென்று சுதந்தரம் ஒன்றைப் பரலோகத்தில் வைத்துக் காத்திருக்கிறார் அல்லது "வைத்திருக்கிறார்" (1:4; *tēreō*) அதே வேளையில் அவர் தமது மக்களையும் காக்கிறார் அல்லது "பாதுகாக்கிறார்" *(phroureō)*, பிந்திய இவ்வார்த்தை அடிக்கடி, இராணுவத்தில் சந்தர்ப்பப் பொருளில் பயன்படுத்தப்பட்டது. தேவன் இரட்சிப்பை உத்தரவாதப்படுத்துபவராக இருக்கிறார், அவர் தமது மக்களைக் காப்பதற்கு மனவிருப்பம் உள்ளவராகவும் காக்கக் கூடியவராகவும் இருக்கிறார்.

கிறிஸ்தவர்களின் பக்கமாய் தேவனுடைய வல்லமை இருந்தாலும், இணக்கத்திற்கான சந்தர்ப்பத்தை இன்னமும் அவர்கள் கொண்டிருப்பதில்லை. அவர்களின் பகுதியில் **விசுவாசம் என்பதன் மூலமாகத்தான்,** காப்பதற்கான தேவனுடைய வல்லமை செயல்துடிப்புடன் உணர்ந்தறியப்படுகிறது, விசுவாசம் என்பது செயலற்ற சார்ந்திருத்தல் அல்ல. அது விசுவாச நிறைவின் செயல் துடிப்பான உணர்வில் நம்பிக்கை வைத்தல் என்று அர்த்தப்படுகிறது. கீழ்ப்படிதலுக்கென்றே கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் (1:2). தேவன் தமது வல்லமையினால், கிறிஸ்தவர்களுக்கு வைக்கப்பட்டுள்ள சுதந்தரத்தையும் தங்கள் வாழ்வை செயல்முனைப்புடன் இணங்கச் செய்பவர்களையும் பாதுகாக்கிறார். F. J. A. Hort அவர்கள், "தெய்வீக பெலப்படுத்துதலை இயக்கத்திற்குக் கொண்டுவருகிற மனிதநிலையே விசுவாசம் ஆகும்" என்று கூறினார்.[7]

தேவனுடைய ஆசீர்வாதங்களில் பேதுருவின் வாசகர்கள் ஏற்கனவே பங்கேற்று இருந்தனர் என்பதில் உணர்கருத்து ஒன்றுள்ளது, ஆனால் அவர்கள் எதிர்கொண்டிருந்த சோதனைகள், எல்லா ஆசீர்வாதங்களும் உணர்ந்தறியப்படவில்லை என்பதற்குச் சாட்சியாக இருந்தன, ***கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்காகத்*** *தேவன் அவர்களைப் பாதுகாத்தார். "ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற" என்ற வார்த்தையைக் கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது, கர்த்தர் தோன்றுதலை வரவேற்கவும், தங்கள் சுதந்தரத்தை உரிமை கோரவும் "ஆயத்தமான" நிலையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தனர், இந்த நிருபத்தின் பிற்பகுதியில் பேதுரு, "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்று எழுதவிருந்தார் (4:7). அப்போஸ்தலருக்கும் அவரது வாசகர்களுக்கும், "கடைசிக்காலம்" என்பது கர்த்தர் தரிசனமாக இருந்த உறுதியான தருணமாயிருந்தது, அதை எதிர்நோக்கி அவர்கள் வாழ்ந்தனர். "கடைசிகாலம்" என்ற வார்த்தைக்கு வெளிப்படுத்துதலின் கருத்துணர்வு கொண்ட கிரேக்க வார்த்தையைப் பேதுரு பயன்படுத்தினார், கிறிஸ்து "வெளிப்படுத்தப்படும்" போது, மனிதகுலம் அறிந்திருக்கிறபடி, வரலாற்றின்முடிவை அது அர்த்தப்படுத்தும்.*

"பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்" (1:6-9)

6இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். 7அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். 8அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து, 9உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்.

நான்கு முறைகளில் (1:6-9; 3:13-17; 4:12-19; 5:9, 10) இந்த முதலாவது இடத்தில், பேதுரு தமது நிருபத்தில், தமது வாசகர்களின் அப்போதய உபத்திரவத்திற்கு, விரிவாக்கப்பட்ட ஒரு பகுதியை (1:6-9) அர்ப்பணித்தார். Paschō, ("உபத்திரவப்படுதல்") என்ற வார்த்தை, 1 பேதுரு நிருபத்தில் பன்னிரெண்டு முறைகள் காணப்படுகிறது, இது புதிய ஏற்பாட்டில் இதைப் போன்ற வேறு எந்தப் புத்தகத்தில் உள்ளதைக் காட்டிலும் மிக அதிகமான எண்ணிக்கையாகும். துக்கம் அல்லது சோதிக்கப்படுதலைக் குறிக்கும் மற்ற வார்த்தைகள் கூடுதலாக ஐந்துமுறைகள் காணப்படுகின்றன. பேதுருவின் வாசகர்கள் தங்களுக்கு நேரிடும் உபத்திரவங்களை, தேவனுடைய இராஜரீக ஆளுகை என்ற உருப்பெருக்கிகளின் மூலம் கண்ணோக்க வேண்டும் என்று அவர்களைப் பேதுரு ஊக்குவித்தார். உடனடியாக

கருத்துநோக்கில், சோதனைகள் அவர்களின் விசுவாசத்தைப் பெலப்படுத்தக் கூடும். நீண்ட கண்ணோக்கில், அவர்களின் விசுவாசத்திற்குத் தேவன் உரிமையை நிலைநிறுத்துவார், சகித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஜீவகிரீடம் வெகுமதியாகக் கிடைக்கும்.

வசனம் 6. அடித்தளத்தை ஆயத்தப்படுத்தியிருந்த பேதுரு, தமது வாசகர்களின் உபத்திவங்களை நேரடியாகக் குறிப்பிடத் தயாரானார். உபத்திரவம் இங்கு பாடக்கருத்தாக இருந்தாலும், புலம்பல் அல்ல ஆனால் மகிழ்ச்சி என்பதே நாளின் முறையாயிருந்தது. இதிலே *(en hōi)* என்ற வார்த்தையைக் கொண்டு சந்தோஷத்திற்கான காரணத்தை அவர் தொகுத்துரைத்தார். 1 பேதுரு நிருபத்தில் வேறு சில இடங்களிலும் இதே சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது (2:12; 3:16, 19; 4:4), ஆயினும் NASB வேதாகமத்தில் இவைகள் இதைப்போன்று மொழிபெயர்க்கப்படவில்லை. இச்சொற்றொடரை அவர் பயன்படுத்திய மற்ற இடங்களில் உள்ளது போன்றே, இவ்விடத்திலும், "இதிலே" என்ற பிரதிப்பெயர்ச்சொல், குறிப்பிட்ட எந்த விஷயத்தையுமல்ல, ஆனால் இதுவரையில் கலந்துரையாடப்பட்டுள்ளவற்றைப் பொதுவான கருத்தில் குறிக்கிறது. இந்த நிருபத்தின் வாசகர்கள், தாங்கள் மறுபடி ஜெநிப்பிக்கப்பட்டதில், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம் ஜீவனுள்ள நம்பிக்கையைக் கொண்டிருப்பதில், மற்றும் தங்களின் வாடாத சுதந்தரத்தில் மிகவும் சந்தோஷம் அடைந்தனர்.

அவசியமானதால் என்ற வார்த்தை, தவறாக வழிநடத்தக் கூடுவதாக உள்ளது. இதன் கருத்தளவில், சோதனைகள் அவரது வாசகர்களுக்கு நடைபெற்ற அல்லது நடைபெறாதிருந்த சில விஷயங்கள் ஆகும் என்பது இங்கு பாடக் கருத்தாயிருப்பதில்லை. கெல்லி அவர்கள் இச்சொற்றொடரை, "இது இவ்வாறு இருக்க வேண்டியதால்" என்று மொழிபெயர்த்தார்.[8] இங்கும் இந்நிருபத்தின் வேறிடங்களிலும், கிறிஸ்தவர்கள் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்பட்டனர். அவர்கள், தங்களின் விசுவாசத்திற்கு ஒரு விலை செலுத்திக் கொண்டு இருந்தனர். பரிசுத்தமான மக்கள், பாவத்தினால் ஆளுகை செய்யப்பட்ட உலகத்தில் வாழும் போது, உலகம் அவர்களை வெறுக்கிறது, இதன் காரணமாக சோதனைகள் வருதல் அவசியமாயிற்று, கிறிஸ்தவர்களின் உபத்திவங்களுக்கான காரணம் பற்றிய முக்கியமான உட்கண்ணோக்கு ஒன்றை 1 யோவான் 3:12ல் யோவான் கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்தார். காயீன் தனது சகோதரன் ஆபேலைக் கொலை செய்தது ஏன் என்று அவர் கேள்வி கேட்டார். பின்பு அவரே, "தன் [காயீனின்] கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தம்தானே" காயீன் தன் சகோதரனைக் கொலைசெய்தான் என்று பதிலும் அளித்தார். பரிசுத்தத்தை விரும்பி நாடுபவர்ளை இந்த உலகம் வெறுக்கிறது, எனவே கிறிஸ்தவர்களுக்கு சோதனை ஏற்படுதல் அவசியமாகிறது. இவைகள் (சோதனைகள்) கிறிஸ்தவவாழ்வின் உடன்துணையாக இருக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்தார் என்ற கருத்தில் தெய்வீக அத்தியாவசியமாக இருப்பதில்லை.[9]

பேதுருவின் வாசகர்கள் எதிர்கொண்டிருந்த சோதனைகளின் இயல்பு பற்றி அவர் குறிப்பிடவில்லை. அவர்களுக்குப் பலவகையான சோதனைகள் நேரிட்டு இருக்கலாம். மிதமிஞ்சிய சோதனைகளாக, கிறிஸ்தவர்கள் சித்தரவதை

செய்யப்பட்டு அல்லது கொலைசெய்யப்பட்டு இருக்கலாம். இந்த நிருபத்தின் பிற்பகுதியில் பேதுரு அப்போஸ்தலர், தமது வாசகர்கள் அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்கும்படி வேண்டிக் கொள்ளுதல் அவசியம் என்று உணர்ந்தார் (2:13-17). அது, கிறிஸ்தவர்களுக்கும் குடிமை அதிகாரத்திற்கும் இடையில் மிக உயர்வானதற்கும் சற்றே குறைந்த உறவுமுறை இருந்தது என்று கருத்துத் தெரிவித்திருக்கலாம்.[10] அவர்களைச் சுற்றிலும் இருந்தவர்கள் அவர்களைக் கடிந்து கொண்டனர் அல்லது ஏளனம் செய்தனர் என்பது உபத்திரவத்தின் இன்னொரு வகையாக இருக்கலாம். சமூக முறைநெறிகள் மாறுகின்ற பொழுது, சமூகம் எதிர்கொள்ளும் அசௌவுகரியங்கள் எதற்கும் காரணமான புதிய மக்கள் அல்லது கொள்கை மீது பழிதூற்றுதல் பொதுவான விஷயமாகவே உள்ளது.

இதற்கு மாற்றாக, பேதுருவின் வாசகர்கள் பொருளாதாரரீதியான சோதனைகளினால் உபத்திரவப்பட்டிருக்கலாம். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் சந்தைகளில் வர்த்தம் செய்தலில் சில வேளைகளில் இடர்ப்பாட்டைக் கண்டனர். அவர்கள் உற்பத்தி செய்து உள்ள மற்றும் தயாரித்த பொருள்களை விற்க இயலாதபோது அவர்களின் அன்றாட பிழைப்பு அச்சுறுத்தலுக்கு ஆளாயிற்று. சோதனைகள் எதுவாயிருந்தாலும், பேதுருவும் அவரது வாசகர்களும் சந்தோஷத்திற்கான சந்தர்ப்பத்தைக் கொண்டிருந்தனர். கிறிஸ்துவின் மறுவருகையில் கிறிஸ்தவர்கள் தங்கள் முழுமையான சுதந்தரத்தை விரைவில் உணர்ந்தறிவோம் என்ற நம்பிக்கையில் சந்தோஷம் அடைந்தனர். காலம் குறுகியதாக இருந்தது என்பதற்கு சோதனைகள் அடையாளமாயிருந்தன (4:7); ஆகவே, அவைகள் (அவர்களின்) சந்தோஷத்திற்குக் காரணமாயிருந்தன. அவர்கள் அந்த வேளையில் கடினமான சூழ்நிலைகளை எதிர் கொண்டிருந்தாலும், சந்தோஷம் மேலாதிக்கம் செலுத்திற்று.

வசனம் 7. *உபத்திரவம் என்பது மனிதகுலத்திற்கு உலகளாவிய பங்காக உள்ளது. ஆனால் ஒருவர், தம்மை உபத்திரவத்திற்கு உள்ளாகும்படி தேவன் தேர்ந்து கொண்டது ஏன் என்ற யூகத்தினால் அலைக்கழிக்கப்படும்போது அது பெருந்துன்பமாக உள்ளது. பேதுரு, தமது நண்பர்களின் சோதனைகள், அவர்களின் விசுவாசம் வெளிப்படுவதற்கு நிருபணமாகும் என்று எழுதிய விஷயம் (அவர்கள்) எதிர்பாராததாக இருந்தது (காண்க யாக்கோபு 1:2, 3). யோபுவை "ஆறுதல்படுத்த" வந்தவரான எலிப்பாஸ், "இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான்; ஆகையால் சர்வவல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும். அவர் காயப்படுத்திக் காயங்கட்டுகிறார்; அவர் அடிக்கிறார், அவருடைய கை ஆற்றுகிறது" என்று கூறினார் (யோபு 5:17, 18). இந்த விளக்கம் குறித்து அந்த (யோபு என்ற) முற்பிதா உற்சாகம் அடையவில்லை. இதற்கு யோபு, "அவர் புசலினால் என்னை முறிக்கிறார்; முகாந்தரமில்லாமல் அநேகம் காயங்களை எனக்கு உண்டாக்குகிறார்" என்று பதில் கொடுத்தார் (யோபு 9:17).*

பச்சிளங்குழந்தைகளையும் வயதுமுதிர்ந்தோரையும் சித்தரவதை செய்தல் உள்ளிட்ட சோதனைகள், தேவனுக்குப் புகழ்ச்சியும் மகிமையும் உண்டாக்கும் என்பது உண்மையா? தேவன் சோதனைகளை அந்த நோக்கத்திற்காக அமைத்துவைத்தாரா? அப்படிப்பட்டதொரு முடிவானது, பேதுருவின் வார்த்தைகளை

மிக நீண்ட தூரத்திற்கு இழுக்கிறது. சோதனைகளுக்கான காரணம் ஒரு விஷயமாக உள்ளது; சோதனைகளின் விளைவு இன்னொரு விஷயமாக உள்ளது. தேவன், தாம் மகிமைப்படும்படிக்கு (விசுவாசிகளுக்கு ஏற்படும்) சோதனைகளுக்கு அவர் காரணமாவதில்லை. தேவனுடைய மக்கள் உபத்திரவப்படும்போது கூட. உலகத்தின் மீது தேவனுடைய ராஜரீகமான ஆளுகை, அவருக்குப் புகழ்ச்சியைக் கொண்டு வரும் என்று பேதுரு கூறினார். கெல்லி அவர்களின் மொழிபெயர்ப்பு மீண்டும் உதவி நிறைந்ததாக உள்ளது: "... விசுவாசமானது பொன்னைக் காட்டிலும் அதிக விலைமதிப்பு உடையதாகக் காணப்படலாம் ... அது உங்கள் புகழ்ச்சியையும் மகிமையையும் அதிகமாக்குகிறது ..."[11] உபத்திரவம் என்பது தேவனுடைய மகிமையை விளைவிக்கும் வகை பற்றி விவரிக்கப் பவுல் இன்னும் மேலே சென்றார்:

> அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது (ரோமர் 5:3-5).

(பொன்) உலோகம் அக்கினி உலையின் மூலம் பரிசோதிக்கப்படுதல் என்பதைத் தேவனுடைய மக்கள் படும் உபத்திரவத்திற்கு ஒப்பிடுதல், தீர்க்கதரிசனப் புத்தகங்களில் பொதுவான விஷயமாக உள்ளது (ஏசாயா 1:25; 48:10; எரேமியா 6:29, 30; எசேக்கியேல் 22:18). ஜான் ஸ்டாட் அவர்கள், "வாழ்வின் ஏமாற்றங்களும் சலிப்புகளும், தனிமையும், பாடுகளும் வேதனையும், நம்மைக் கிறிஸ்துவைப் போலாக்க வேண்டும் என்ற நமது அன்பான பிதாவின் தீர்மானத்தின்படி அனுமதிக்கப்படும் சிட்சையாகும் என்பதே அவற்றைப் புரிந்து கொள்வதற்கான ஒரே வழியாக உள்ளது" என்று எழுதினார்.[12]

கிறிஸ்தவ விசுவாசம் என்பது ஒருவர்/ஒருத்தி கொண்டுள்ள அல்லது இல்லாதுள்ள ஒரு மாற்றம் இல்லப்பண்பாக இருப்பதில்லை. சிறைச்சாலை அதிகாரி ஞானஸ்நானம் பெறுவதற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது (நடபடிகள் 16:33). அவர்கொண்டிருந்த விசுவாசம் அந்த வேளையில் போதுமானதாயிருந்தது, ஆனால் அதன் பின் பல ஆண்டுகளாகக் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்தபிறகு, அவரது விசுவாசத்தின் பண்பில் கணிசமான அளவு மாறுதலை ஒருவர் எதிர்பார்ப்பார். உபத்திரவங்களைச் சகித்துக் கொள்ளுதலும், கர்த்தருடனான உயிருள்ள உறவு ஒன்றை அனுபவித்தலும் விசுவாசத்தின் பண்பைக் கட்டியெழுப்புகின்றது. சோதனைகள் நேரிடும்போது கிறிஸ்தவர்கள் அகம்மகிழ்கின்றனர், ஏனென்றால் அவர்கள் அவிசுவாசத்தின் கசடுகளை எரித்து அழிக்கின்றனர். சோதனைகள் விசுவாசத்தின் உண்மைப்பண்பை வெளிப்படுத்துகின்றன, ஆனால் அவைகள் மிகவும் ஆழமான விசுவாசத்தையும் உற்பத்தி செய்கின்றன. கிறிஸ்தவர்கள், "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரே அறிகிற அறிவிலும் வளர" வேண்டும் என்று புத்தி கூறி இந்த

அப்போஸ்தலர் தமது இரண்டாவது நிருபத்தை முடித்தார் (2 பேதுரு 3:18). விசுவாசம் சோதனைகளினால் தூய்மைப்படுத்தப்படுகையில், கிறிஸ்தவர்கள் கிருபையிலும் அறிவிலும் வளருகின்றனர்.

1:7 மற்றும் 1:5 லும் கூட, பேதுரு தமது வாசகர்களுக்கு **இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுதலை** நினைவூட்டினார். கர்த்தருடைய மறுவருகை என்பது பேதுருவின் சிந்தனையில் இருந்து ஒருக்காலும் தொலைவில் இருக்கவில்லை. "இயேசு கிறிஸ்து வெளிப்படுதல்" நடைபெறும் பொழுது, கிறிஸ்தவருடைய விசுவாசத்தின் "நிருபணம்" அல்லது "உண்மைத்தன்மை" என்பது, அவர்களின் சொந்த மற்றும் கர்த்தரின் புகழ்ச்சி, மகிமை மற்றும் கனம் ஆகியவற்றை மீளக்கூட்டுவிக்கும். தேவன் தமது மக்களின் வாழ்வில் பரிசுத்தத்தைக் கொண்டு வந்துள்ளதால், புகழ்ச்சியும், மகிமையும் கனமும் அவருக்கே செலுத்தப்படும். அதேவேளையில் அவர், உண்மையான விசுவாசம் கொண்ட மக்களுக்குப் புகழ்ச்சியையும் மகிமையையும் கனத்தையும் நிரப்புவார், பேதுரு, தமது வாசகர்கள் கர்த்தருடைய உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும் என்று விரும்பினார், எபிரெயர் 12:1, 2 ம் வசனங்கள், "... விசுவாசத்தைக் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு ... அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்" என்று கூறுகின்றன.

வசனம் 8. அப்போஸ்தலர், தமது வாசகர்கள் இயேசுவில் கொண்டிருந்த மகிழ்ச்சி மற்றும் அவரது தரிசனத்திற்கு அவர்கள் ஏங்கிகாத்திருந்தது, ஆகியவற்றைப் பற்றி அவர்களுக்கு நினைவூட்டினார், இருப்பினும் அவர்கள் **அவரைக் காணாமலிருந்தும்** விசுவாசத்தை அவர் மறைக்கவில்லை, பேதுருவின் வாசகர்கள், தங்கள் அனுபவங்களைப் பேதுருவின் சொந்த அனுபவங்களுடன் வேறுபடுத்தி ஒப்பிடும்படி அவர் விரும்பியிருக்கச் சாத்தியமில்லை. எடுத்துக் காட்டாக, அவர்கள் மாம்சத்தில் இயேசுவைக் கண்டிருந்ததில்லை, ஆனால் அவர் அவ்வாறு கண்டிருந்தார். அப்போஸ்தலர் தமது இரண்டாவது நிருபத்தில், நேரெதிர்க் கருத்தை ஏற்படுத்தினார் (2 பேதுரு 1:16), ஆனால் இதில் அவரது சொந்த சாட்சியமானது மிகவும் மறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (1 பேதுரு 2:23, 24; 5:1).

இந்த சகோதரர்கள் இயேசுவை மாம்சப் பிரசன்னத்தில் கண்டு அனுபவித்து இருந்ததில்லை, ஆனால் அவர் மாம்சப்பிரகாரமாக அவர்கள் மத்தியில் இருந்தது போன்று அவரை அவர்கள் அன்புகூர்ந்தனர் என்பது உறுதி. இலக்கண ரீதியாக, **அன்பு, விசுவாசம்**[13] மற்றும் **மிகுந்த சந்தோஷம்** என்ற வார்த்தைகள் கட்டளைச் சொற்களாக இருக்க முடியும், இவற்றின் மொழிபெயர்ப்பு, "நீங்கள் அவரைக் காணாதிருந்தும் அவரில் அன்புகூருகிறீர்கள், நீங்கள் தற்காலத்தில் அவரைக் காணாதிருந்தும், அவர்மீது விசுவாசம் கொண்டு மிகுந்த சந்தோஷம் அடைகிறீர்கள்" என்று இருக்கும். இருப்பினும், கட்டளைச் சொற்கள் சந்தர்ப்பப் பொருளில் அழகற்ற வகையில் பொருந்துபவைகளாயிருக்கும், மற்றும் ஒருவேளை அவை புறக்கணிக்கப்பட வேண்டியவையாக இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. வினைச் சொற்களைக் கட்டளைச் சொற்கள் என்பதற்கு மாறாக உறுதிப்பாடுகள் என்ற வகையில் நாம் எடுத்துக் கட்டளைச் சொற்கள் என்பதற்கு மாறாக உறுதிப்பாடுகள் என்ற

வகையில் நாம் எடுத்துக் கொள்வோமென்றால், கிரேக்க நிகழ்கால வினைச் சொல்லானது, பேதுருவின் வார்த்தைகளுக்கு வண்ணமூட்டுகிறது: "நீங்கள் அவரைக் கண்டிருக்கவில்லை, ஆனால் அவர்மீது அன்புகூரத் தொடருகிறீர்கள். நீங்கள் இப்போது அவரைக் காணாதிருந்தும், விசுவாசிக்கத் தொடருகிறீர்கள் மற்றும் சந்தோஷமாயிருக்கத் தொடருகிறீர்கள். உங்கள் சந்தோஷம் விளக்கப்படுத்தப்பட இயலாததாக உள்ளது, மற்றும் அது தற்போதய கணத்தைச் சகித்துக்கொள்ளும் மகிமையால் உற்சாகமூட்டப்படுகிறது."

விசுவாசிகள் உபத்திரவப்படும்போது, எதிர்காலத்திற்கான நம்பிக்கை அவர்களுக்கு ஊக்கம் தரும் வேளையில், அவர்கள் நிகழ்காலத்தில் கர்த்தருடன் ஒரு உறவையும் அனுபவிக்கின்றனர். கிறிஸ்துவை அனுபவிக்கவும், அவர்மீது அன்புகூரவும், அவரது அன்பில் இதமாய்க் குளிர்காயவும், அவரைக் கண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மனித குலம் செலுத்தும் அன்பைத் தேவன் விரும்புகிறார் என்பது வேதாகமத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க வெளிப்படுத்துதல்களில் ஒன்றாக உள்ளது. இந்த அண்டம் முழுவதற்கும் தேவனாக இருப்பவர், தமது படைப்புப் பற்றி அறிந்திருப்பது மட்டுமின்றி, அதை அவர் அன்புகூருகிறார் என்பதை உணர்ந்தறிதல் திகைப்புக்குரியதாக உள்ளது. அவரது படைப்பு அவர்மீது அன்புகாண்பித்தாலும் காண்பிக்காவிட்டாலும், அதை அவர் பராமரிக்கிறார் என்பது புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. இருந்தாலும், அதுவே வேதவசனங்களின் உலகளாவிய சாட்சியமாக உள்ளது. ஷேமா (உபாகமம் 6:4) என்பது, யூத மற்றும் கிறிஸ்தவ விசுவாச அறிக்கைகளின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது. மோசே, தேவனுடைய ஒருமைத்துவத்தை உறுதிப்படுத்திய பின்பு, "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" என்று கூடுதலாகக் கூறினார் (உபாகமம் 6:5). அதுவே கட்டளைகள் எல்லாவற்றிலும் பெரியதாக உள்ளது என்று இயேசுதாமே கூறினார் (மாற்கு 12:29, 30). ஏதேனும் ஒரு கருத்தில், தேவனுக்கு மனிதகுலத்தின் அன்பு தேவைப்படுகிறதா? மனிதரின் அன்பு தேவனுக்குத் தேவைப்படுகிறது என்பதைக் காட்டிலும் அதை அவர் விரும்புகிறார் என்று அறிக்கை செய்வதில் கிறிஸ்தவர்கள் அதிக ஆறுதல் அடைகிறார்கள். இன்னமும் நாம், இந்த விருப்பம் என்பது ஏதேனும் ஒரு காலத்தில் தேவையை மறைமுகமாகக் குறிப்பிடுகிறதா? என்று கேட்டாக வேண்டும். கேள்விகளுக்கு நாம் எப்படிப் பதில் அளித்தாலும், பேதுரு இதைப் பற்றிப் பின்வருமாறு தெளிவாகக் கருத்துத் தெரிவித்தார்: தேவனுடன் வலிவான உறவு ஒன்றைக் கொண்டிருக்க, அவர்மீது நாம் அன்புகூர வேண்டும். பேதுருவைப் பொருத்த மட்டில், தேவன் மீது அன்புகூருதலும் இயேசுவின் மீது அன்புகூருதலும் ஒரே விஷயமாக இருந்தது.

புதிய ஏற்பாடு முழுவதிலும், அன்பு மற்றும் விசுவாசம் ஆகியவற்றின் நெருக்கமான இணைவு காணப்படுகிறது. இந்த இரு வினைச்சொல் கருத்துக்களும், ஒன்றுபோல் இராவிட்டாலும், 1 கொரிந்தியர் 13 போன்ற வசனப்பகுதிகளில் தெளிவாகக் காணப்படுவது போன்று, இவைகள் இரண்டும் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. ஒருமுறை மாத்திரம் வரும் எச்சவினையில் (idontes, "கண்டிருந்து") இருந்து நிகழ்கால வினைக்கு (horōntes,

"காணுகிறீர்கள்") கடந்து செல்லுதல் என்பது தொடர்ந்து நடைபெறும் நிகழ்வான காணுதல் மீது கவனம் குவிக்க அழைக்கிறது. பேதுரு தெளிவான விஷயத்தைக் கவனித்தார்: "நீங்கள் அவரை இப்போது காணாதிருந்தும் அவரை விசுவாசிக்கிறீர்கள்." துண்டிக்கப்பட்ட விசுவாசத்தைப் பேதுரு தம் வாசகர்களுக்கு உறுதிப்படுத்தினார் என்பது அரிது. "விசுவாசித்தல்" என்ற சொல் "நம்பிக்கை வைத்தல்" என்று அர்த்தப்படும்படியாகவே அதைப் பேதுரு பயன்படுத்தினார். "நீங்கள் இயேசு கிறிஸ்துவை அன்புகூர்ந்து அவர்மீது உங்கள் நம்பிக்கையை வைக்கிறீர்கள்." அன்பும் நம்பிக்கையும் உறுதியாகப் பிணைக்கப்பட்டுள்ளன.

அன்பு மற்றும் நம்பிக்கை ஒன்றாக இணைக்கப்படும்போது விளைவை உண்டாக்குகிறது: **சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து.** எட்வர்ட் கோர்டன் செல்வின் அவர்கள், கிறிஸ்துவைப் பற்றிய மனிதப் புரிந்து கொள்ளுதலின் நான்கு படிநிலைகளை அடையாளம் கண்டறிந்தார். முதலாவது நம்பிக்கை, அதைத் தொடர்ந்து இயல்பான அனுபவம். மூன்றாவது விசுவாசம், மற்றும் நான்காவது "விசுவாசம் புதிய வகையான கண்ணோக்கில் கடந்து செல்லுகையில் ஏற்படும் பேரின்ப தரிசனம்."[14] விசுவாசியினால் அனுபவிக்கப்படும் சந்தோஷத்தைப் புரிந்து கொள்வதைக் கடினமானதாக அவிசுவாசி கண்டறிகிறார், மற்றும் விசுவாசி, தமது சந்தோஷத்தை அவிசுவாசி பாராட்டக்கூடிய அளவுக்குத் தகுந்த சொற்றொடர்களில் விளக்கப்படுத்துதலில் சிரமம் கொண்டுள்ளார். கிறிஸ்தவரின் சந்தோஷம் "சொல்லிமுடியாதது" என்று இருந்தாலும், அது எப்போதும் ஒளிவீசக்கூடியதாக, "மகிமையால் நிறைந்த" தாக அவரைக் சுற்றிச் சூழ்ந்து கொள்கிறது, மற்றும் அவர் செய்யும் எல்லா செயல்களும் கிறிஸ்துவின் பிரசன்னம் என்ற ஒளி வட்டத்திற்குள் உள்ளன.

வசனம் 9. 6 முதல் 9 வரையிலான வசனங்களை NASB வேதாகமம், கிரேக்க மொழியைப் பின்பற்றி பன்மை வாக்கியமாக மொழிபெயர்க்கிறது. பேதுரு குறிப்பிட்ட கிறிஸ்தவர்கள், **உங்கள் [தங்கள்] விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள் [அடைகின்றனர்]** என்ற வகையில் இருந்தனர். பேதுருவின் [முதல்] வாசகர்களுக்கு, ஆத்தும இரட்சிப்பு என்பது எதிர்கால நம்பிக்கையாக, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உணர்ந்தறியப்படப் போவதாக இருந்தது, ஆனால் இரட்சிப்பு என்பது, உண்மைநிலையில் அனுபவிக்கப்படும் விஷயம் என்ற கருத்துணர்வும் இருந்தது. அதன் நிறைவான உணர்தறிதலை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்த நிலையிலும் அதை அவர்கள் பெற்றனர்.

புதிய ஏற்பாட்டில் "இரட்சிப்பு" என்பது, சாத்தியமான அளவு மிகநெருக்கமான வழியில், விசுவாசத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" என்று பவுல் எழுதினார் (எபேசியர் 2:8). விசுவாசம் என்பது செயல்முனைப்பான கருத்தாக உள்ளது. முற்றிலும் சீர்கெட்ட நிலையில் உள்ள மனிதர் கிறிஸ்துவை விசுவாசித்தல் என்ற வகையில் கண்ணியமான சிலவற்றைச் செய்யக்கூடுவது எவ்வாறு சாத்தியம் என்பதைக் குறித்துப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தங்களை வறுத்திக் கொள்ளவில்லை. மனிதர்கள் சீர்கெட்ட நிலை என்ற பெட்டியில் அடைபடும்போது, விசுவாசம் என்பது பிரச்சனையாக உள்ளது.

புதிய ஏற்பாட்டில் விசுவாசிக்கப் பல நல்ல காரணங்கள் இருந்ததால் மக்கள் அதை விசுவாசிக்கின்றனர் (1) மரித்தோரில் இருந்து உயிர்த்து எழுந்ததன் மூலமாக இயேசு, கிறிஸ்துவாக இருப்பதாக அறிவிக்கப்பட்டார் (ரோமர் 1:5). (2) இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் கண்ணால் கண்ட சாட்சியங்கள் புறக்கணிக்கப்படக் கடினமானவையாக இருந்தன (யோவான் 21:24). (3) விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டார் (கலாத்தியர் 3:2; 4:6).

விசுவாசத்தின் விளைவாக, இரட்சிக்கப்பட்டவர்களின் முழுநபர்த்துவமும், அவர்களின் "ஆத்துமாக்களும்" இன்னும் வெளிப்படுத்தப்பட உள்ள முழுமைத்துவத்தில் நித்திய ஜீவனுடைய மகிமையை அடையும். ஆத்துமா என்பது ஒரு மனிதருடைய இருப்பில் இருந்து பிரிக்கப்பட்டுள்ள பாகமாக இருப்பதாகப் புரிந்துகொள்ளப் படக்கூடாது. முழுநபருமே இரட்சிக்கப்படுகிறார்.

தீர்க்கதரிசிகளால் ஊழியம் செய்யப்பட்டது *(1:10-12)*

***10**உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்; **11**தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்த போது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். **12** தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.*

பேதுருவின் வாசகர்கள், தாங்கள் உபத்திரவம் அடைந்து கொண்டிருந்ததையும் தாங்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் சுதந்தரம் தேவனுடைய பிந்திய சிந்தனைல்ல என்பதையும் அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார். அவர்கள் அதை அறிந்திருந்தாலும் அல்லது அறியாதிருந்தாலும், சரித்திர நிகழ்வினூட தேவன் தமது சித்ததை செயல்படுத்திக் கொண்டிருந்தார்

வசனங்கள் *10-12*. தேவனுடைய நோக்கங்கள் மற்றும் அவரது வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றின் நிறைவேற்றமாக இயேசு இருக்கிறார் என்பது, சுவிசேஷச் செய்தியின் முக்கியமான கூறாக உள்ளது. இயேசுவும் மற்றவர்களும் அடிக்கடி தீர்க்கதரிசனங்கள் பற்றிக் குறிப்பிட்டனர். மேசியாவின் வருகையைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் கூறியவைகள், இயேசு என்ற நபரிலும் அவர் கட்டிய சபையிலும் நிறைவேற்றம் பெற்றன. தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்க வில்லை என்பதை நாம் காணாது விட்டுவிடலாம். முதல் நூற்றாண்டின் சபையின் வாழ்வில்

அக்காலத்து தீர்க்க தரிசனங்கள் முக்கியமான பங்கு பணியாற்றின. சபையானது, "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்" என்றோ (எபேசியர் 2:20), அல்லது "இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" என்றோ (எபேசியர் 3:6), அல்லது "அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் ... ஏற்படுத்தினார்" என்றோ (எபேசியர் 4:13), பவுல் எழுதியபோது, அவர் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது தெளிவு. ஆவியானவரின் வரங்களைப் பற்றிக்கலந்துரையாடுகையில் பவுல், "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும் ... ஏற்படுத்தினார்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 12:28). அகபு. யூதா மற்றும் சீலா ஆகியோர் உட்பட, தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்பட்ட குறிப்பிட்ட மனிதர்களை (வேதாகமத்தில்) நாம் எதிர்கொள்கிறோம் (நடபடிகள் 11:27, 28; 15:32). கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பற்றிக் கிறிஸ்தவர்களுக்கு யோவான் எச்சரிக்கை செய்தபோது (1 யோவான் 4:1), சபையானது உண்மைத் தீர்க்கதரிசிகளைப் பற்றி அறிந்திருந்தது என்பது மறைமுகமாகக் குறிப்பாக இருந்தது.

பேதுரு சிந்தையில் கொண்டிருந்த தீர்க்கதரிசிகள் என்பவர்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் என்று நாம் துரிதமாக யூகிக்கலாகாது. செல்வின் அவர்கள், இங்கு கவனத்தில் இருந்தவர்கள் கிறிஸ்தவத் தீர்க்கதரிசிகளே என்று நம்பி ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் விவாதித்தார்.[15] ஒருவேளை கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் (1:10) உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்கள் (1:12) என்பவர்களாக இருக்கலாம். தீர்க்கதரிசிகளைப் பற்றி வாசகர்கள் புரிந்து கொண்டிருந்தது என்ன என்பதையே 10ம் வசனத்தின் விளக்கம் பெரிதும் சார்ந்திருப்பதால், பவுலின் விவாதங்களைத் திரும்பவும் கவனித்தல் என்பது தகுதியுடையதாக இருக்கும்.

முதலாவது நாம் NASB வேதாகமம் மொழிபெயர்ப்பிற்கும் would come என்ற வார்த்தைகளைக் கூட்டியுள்ளபோது, அவைகள் சாய்வெழுத்துக்களில் இருந்தாலும், அது தேவையற்ற வகையில் இவ்விளக்கத்தை அளிக்கிறது என்பதை உற்றுநோக்குகிறோம், கிரேக்க மொழியில் இவ்வார்த்தைகள் இல்லை. சாத்தியமான வரையிலும் நேர்ப்பொருளில் மொழிபெயர்க்கப்படும்போது, 1 பேதுரு 1:10ம் வசனம், "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிதனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்" என்று வாசிக்கப்படுகிறது. இயேசுவைப் பற்றியும் அவரது சபையைப் பற்றியும் பேசிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் பற்றிப் புதிய ஏற்பாடு அடிக்கடி குறிப்பிடுகிறது, ஆனால் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள் என்று பேதுரு கூறியிருக்க வேண்டும் என்பது எதிர்பாராததாக உள்ளது.

தீர்க்கதரிசிகள் எதைப் பரிசோதனை பண்ணினார்கள்? எழுதப்பட்ட ஆதாரமூலங்களில் இருந்து ஒரு செய்தியை அவர்கள் நாடினார் என்று பேதுரு அர்த்தப்படுத்தினாரா? ஒருவேளை தீர்க்கதரிசிகளின் பரிசோதனைக்கு எழுதப்பட்ட ஆதாரமூலங்கள் கருப்பொருளாக இருந்திருக்கும் என்று

வார்த்தைகள் வற்புறுத்தாது இருக்கலாம், ஆனால் அவற்றை இவ்வாறு எடுத்துக் கொள்ளுதல் இயல்பானதாக உள்ளது. எழுதப்பட்ட அல்லது வாய்மொழியான ஆதாரமூலங்களைப் பரிசோதித்தல் என்பது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் செய்த விஷயமாகத் தோன்றுவதில்லை என்பதால் இது கேள்வியொன்றை எழுப்புகிறது. பவுலைப் போன்று (கலாத்தியர் 1:1), அவர்கள் தங்கள் செய்தியைக் கர்த்தரிடத்தில் இருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டதாக உறுதிப்படுத்தினர் (காண்க ஆமோஸ் 7:14, 15). பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் தங்கள் செய்திகளைத் தங்கள் காலத்திற்கு முந்தி எழுதப்பட்ட ஆதார மூலங்களில் இருந்து பெற்றிருக்கவில்லை என்றால், கிறிஸ்து, சபை மற்றும் சபை வாழ வேண்டிய சூழ்நிலை ஆகியவற்றைப் பற்றிப் பழைய ஏற்பாட்டு சாட்சியங்களைப் புதிய ஏற்பாட்டு காலத்தில் இருந்த தீர்க்கதரிசிகள் ஆராய்ந்தனர் என்று ஒருவர் சுலபமாக யூகிக்க முடியும். உதாரணமாக, தெசலோனிக்கேயில் இருந்த ஜெப ஆலயத்தில் பவுல், "கிறிஸ்து பாடுபடவும் ... வேண்டியதென்று ... காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தி" (நடபடிகள் 17:2, 3) வேதவாக்கியங்களில் இருந்து கருத்துரைத்து விவாதித்தார்.

இத்துடன் கூடுதலாக, தீர்க்கதரிசிகள் ஊழியத்தை அவர்களில் இருந்த கிறிஸ்துவின் ஆவியானவர் வழிநடத்தினார் என்று பேதுரு எழுதினார். இங்கு பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கருத்தாய்வின் கீழ் இருக்கின்றனர் என்றால், அவர்களுக்குள் தேவனுடைய ஆவியானவர் இருக்கிறார் என்றோ அல்லது அவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்றோகூடப் பேதுரு எழுதுவதை ஒருவர் எதிர்பார்க்க முடியும். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளில் கிறிஸ்துவின் ஆவியானவர் செயல்பட்டார் என்று பேதுரு கூறவேண்டும் என்பது எதிர்பார்க்கப்படாததாக உள்ளது. அது சாத்தியமற்றதாக உள்ளது; ஆனால் கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிருத்தலைப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கு உரித்தாக்குதல் என்பது புதிய ஏற்பாட்டில் முக்கியதுவம் அற்றதாக உள்ளது. இதற்கு மாறாக, புதிய ஏற்பாட்டின் காலத்தில் உள்ள தீர்க்கதரிசிகளுக்கு "தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர்" என்பதைப் பேதுரு உரித்தாக்குதலை ஒருவர் எதிர்பார்க்கலாம்.

1 பேதுரு 1:11ம் வசனத்தில், கிரேக்க மொழியில் விளக்கப்படுத்தக் கடினமான ஒரு சொற்றொடர் உள்ளது, எனவே இது மொழிபெயர்ப்புக்குச் சிரமமானதாக உள்ளது. இந்தப் பிரச்சனையானது அதிக விபரமாகக் கலந்துரையாடப் பட்டுள்ளது, ஆனால் அப்போதைக்கு, NASB வேதாகமத்தில் இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள் என்ற சொற்றொடர் வரும் இடத்தைக் கவனிக்கவும். தீர்க்கதரிசிகள் ஒரு நபரைக் குறித்து, அதாவது இயேசு கிறிஸ்துவைக் குறித்து விசாரித்தனர் என்று இச்சொற்றொடர் மறைமுகமாக உணர்த்த வேண்டிய அவசியம் இல்லை ஒருவேளை அவர்கள், தொடக்ககால விசுவாசிகளின் கிறிஸ்தவ அனுபவத்தை விளைவித்த "காலத்தையும் சூழ்நிலைகளையும்" ஆராய்ந்திருக்கலாம்.

தீர்க்கதரிசிகளில் இருந்த ஆவியானவர், கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளை முன்னறிவித்தார் என்று பேதுரு கூறினார், இது இப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதாகக் காணப்படுகிறது. தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் உபத்திரவங்களை முன்னறிவித்திருந்தால், அவர்கள் நிச்சயமாகவே பழைய

ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளாகவே இருந்திருப்பார்கள். இருப்பினும் இவ்விடத்தில் *ta eis Christon pathēmata*. என்ற கிரேக்கச் சொற்றொடரே உள்ளது. இது கிறிஸ்துவின் பாடுகளைக் குறிப்பதாக இருந்தால், கிரேக்க வாசகர், *ta ton Christon pathēmata* அல்லது அதைப் போன்ற சொற்றொடரை எதிர்பார்ப்பார். இவைகள் உண்மையில் 4:13 மற்றும் 5:1 ஆகிய வசனப்பகுதி களில் பேதுரு பயன்படுத்திய வார்த்தைகளாக உள்ளன. *Eis Christon* என்ற வார்த்தைகள், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "கிறிஸ்துவின்" உபத்திரவத்தைச் சுட்டிக்காண்பிப்பதற்கு மிகவும் வழக்கத்திற்கு மாறானவைகளாக உள்ளன. *Eis aphesin tōn hamartiōn* என்பது "பாவமன்னிப்பிற்கென்று" என்பதற்குச் சமமாக உள்ள இடமான நடபடிகள் 2:38ல் உள்ளது போன்று, "கிறிஸ்துவுக்கு" என்பதே உண்மையில் பேதுருவின் வார்த்தைகளாக உள்ளன. கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட உபத்திரவங்கள் என்பவை 1 பேதுரு நிருபத்தின் முக்கியமான பகுதி யாக உள்ளது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளும்போது, "கிறிஸ்து [வின்நிமித்தம் வாசகர்களு] க்கு உண்டாகும் பாடுகள்" என்ற மொழிபெயர்ப்பு இந்த நிருபத்தின் பரந்த சந்தர்ப்பப்பொருளுக்கு நேர்த்தியாகப் பொருந்துகிறது. புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், "கிறிஸ்துவுக்காக" விசுவாசிகள் உபத்தி வப்படும் காலம் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பற்றிய முன்னு ரைத்தல்களுக்கு இயேசுவின் வார்த்தைகளையும் பழைய ஏற்பாட்டையும் ஆராய்ந்து பார்க்கும் சாத்தியக்கூறு நியாயமானதாக மாத்திரமல்ல சாத்தியம ானதாகவும் உள்ளது.

கிறிஸ்துவுக்கென்று படும் உபத்திரவங்களையும் அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தனர் என்று பேதுரு கூறினார். NASB மற்றும் NIV வேதாகமங்கள் இதை நேர்ப்பொருளில் மொழிபெயர்த்துள்ளன. "மகிமைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கப் பெயர்ச்சொல் பன்மைச் சொல்லாக உள்ளது. இந்தக் குறிப்பு, இயேசுவின் உயிர்த்தெழுதல் அல்லது பரத்துக்கேறுதலின்போது அவருக்குத் தேவன் கொடுத்த மகிமைக்கான குறிப்பாக உள்ளது என்றால், பேதுரு இவ்விடத்தில் பன்மைச் சொல்லைப் பயன்படுத்தியது வினோதமாக இருக்கிறது. இதற்கு மறுபுறம் அப்போஸ்தலர், விசுவாசிகள் கொண்டிருந்த விவரிக்க இயலாத சந்தோஷத்தைக் குறிப்பிடுகிறார் என்றால், "மகிமையின் நிறைவு" என்பது (1 பேதுரு 1:8), கர்த்தர் வரும்போது கிறிஸ்தவர்களுக்கு உரியதாக இருக்கும், அப்படியென்றால் பன்மைச் சொல்லை நாம் எதிர்பார்க்கலாம். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் மகிமைகளை முன்னுரைத்திருந்தனர் என்பதைக் காட்டிலும், புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு காத்திருக்கும் "மகிமையை" முன்னுரைத்திருந்தனர் என்பது அதிகம் ஏற்புடையதாக உள்ளது. இந்தக் காரணங்கள் யாவற்றிற்காகவும், 1:10-12ன் பாடக்கருத்தான தீர்க்கதரிசிகள் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளே என்று நினைப்பது மிகச்சிறந்ததாக உள்ளது. பின்தொடரும் விளக்கவுரை அந்த அடிப்படையிலேயே செல்லும்.

1:10ல் உள்ள இரட்சிப்பு என்ற வார்த்தை, முந்திய வசனத்தில் இருந்து எடுத்தாளப்படுகிறது. ஆத்துமாக்களின் இரட்சிப்பு என்பதே கிறிஸ்தவ விசுவாசத்தின் விளைவாக உள்ளது. புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் ஊழியம் பற்றி நாம் சிறிதளவே அறிகிறோம். அகபு என்பவர் இங்கு

எவ்வகையிலாவது சுட்டிக்காண்பிக்கப்படுவார் என்றால் (நடபடிகள் 11:27, 28; 21:10, 11), முன்னறிவித்தல் என்பது, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கு இருந்ததைக் காட்டிலும் அதிகமாகப் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கு மிகவும் முக்கியமான கூறாக இருந்தது.[16] அகபு காட்சியில் தோன்றியபோது, அது சபையின் வரலாற்றின் தொடக்ககாலமாக, ஒருவேளை பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு பதினைந்திற்கும் குறைவான ஆண்டுகளாக இருந்திருக்கும். அகபு அறிமுகப்படுத்தப்பட்ட வழக்கமான வழியானது, சபையின் வாழ்வில் ஏற்கனவே தீர்க்கதரிசிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் எதிர்காலத்தை முன்னுரைத்தது மட்டும் இன்றி, தேவனுடைய வெளிப்பாடு மலர்ந்து விரிகையில், சபையின் ஓட்டத்திற்கான தகவல்களை நாடி, பழைய ஏற்பாட்டையும் இயேசுவின் வார்த்தைகளையும் கவனமாக ஆராய்ந்தனர். சபையில் தீர்க்கதரிசிகள் இருந்தனர் என்பது இயேசுவின் வார்த்தைகளையும் செயல்களையும் எழுத விரும்பிய விசுவாசிகளுக்கும் செயலூக்கம் அளித்தது என்பது மிக அரிதாகவே நினைக்க இயலாததாக உள்ளது. தீர்க்கதரிசிகளில் நாம், சபை சுவிசேஷப் புத்தகங்களை உண்டாக்கியது எவ்வாறு மற்றும் ஏன் என்பதற்கு விளக்கத்தைப் பெறலாம்.

புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், எழுதப்பட்ட மற்றும் வாய்மொழியான ஆதாரமூலங்களைப் பற்றிய தங்கள் ஆய்வின் அடிப்படையில், "உங்களுக்கு உண்டான கிருபையை" (1:10) பற்றிப் பேசியிருந்தனர். "கிருபை" என்ற வார்த்தையை, "கிருபையுள்ள தன்மை" அல்லது "ஈர்க்கும் தன்மை" என்ற அர்த்தத்தில் இலக்கியக் கருத்தில் பேதுரு பயன்படுத்தியதாகக் காணப்படுகிறது. கெல்லி அவர்கள், இது "இரட்சிப்பு இறுதிவிளைவாக இருக்கும் தேவனுடைய கிருபையுள்ள முழுச் செயலாக" உள்ளது என்று எழுதினார்.[17] தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருந்த கிருபை "உங்களுக்கு" (*eis humas*), அதாவது பேதுருவின் வாசகர்களுக்கு உரியதாக இருந்தது. இந்தக் கிறிஸ்தவர்கள், யூதத்துவமல்ல ஆனால் புறஜாதிப்பின்னணியையே பெரிதும் கொண்டிருந்தனர் (1:14, 18ன் விளக்கவுரையைக் காணவும்).[18] புறஜாதியாரின் கேள்விமீது (உதாரணமாக, நடபடிகள் 11:2, 3; 15:5; 21:20; கலாத்தியர் 5:4) தொடக்ககால சபை பலத்துடன் போராடிற்று என்பதை, நடபடிகள் மற்றும் கலாத்தியர் நிருபம் ஆகியவை தெளிவாக்குகின்றன. புறஜாதியார் கிறிஸ்தவர்கள் ஆகும் தங்கள் வழியில் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட வேண்டுமா? இந்தக் கருத்தைப் புறக்கணித்தவர்களுக்கும் பவுலுக்கும், ஆதரவு தெரிவித்ததில் யூதப்பின்னணியைக் கொண்ட புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், முக்கியமானவர்களாக இருந்திருக்கலாம். சபையின் தொடக்க காலத்தில் இருந்தே, தேவனுடைய கிருபையில் புறஜாதியார் பங்கேற்க வேண்டும் என்று சபையில் இருந்த தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர் என்று பேதுரு கூறுவதாகக் காணப்படுகிறது.

தீர்க்கதரிசிகள், "தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் ... இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்." 11ம் வசனத்தை மொழிபெயர்ப்பாளர்கள் கையாண்ட வகையில் மொழிபெயர்ப்புகள் மாற்றம் அடைந்துள்ளன. NIV வேதாகமத்தில் "trying to find out the

time and circumstances"; என்றுள்ளது; KJV வேதாகமம் இதேபோன்று கருத்தைக் கொண்டுள்ளது. *Eis tina ē poion kairon.* என்பது கடினமான சொற்றொடராக உள்ளது. *Tina* என்ற வினாப் பிரதிப்பெயர்ச்சொல் "என்ன நபர்" என்ற அர்த்தம் கொண்டு தனிப்பட்ட வகையில் நிலைநிற்கலாம் அல்லது அது "என்ன அல்லது என்ன வகையான காலம்" என்று அர்த்தப்படும் *poion kairon,* வார்த்தையுடன் இணைந்து உயத்துணரப்படலாம். இந்தப் பிந்திய கருத்தைப் புரிந்துகொண்ட நிலையில், கிறிஸ்துவுக்காகக் கிறிஸ்தவர்கள் உபத்திரவப்படுதலின் காலத்தையும் அது எவ்வகையான சூழ்நிலைகளின்கீழ் நடைபெறும் என்பதையும், புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் ஆராய்ந்தனர் என்பதே இங்கு கருத்தாலோசனையாக உள்ளது. இதற்கு முந்திய வழியில் புரிந்துகொண்ட நிலையில், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் யார் என்று ஆராய்ந்தனர். இலக்கணரீதியான இந்தச் சொற்றொடர் இவ்விரண்டில் எவ்வழியிலும் புரிந்துகொள்ளப் படலாம். எந்தவகையிலான மொழிபெயர்ப்பாக இருந்தாலும் சந்தர்ப்பப் பொருளில் இருந்து விவாதிக்கப்பட வேண்டும். இவ்விடத்தில் பேதுருவின் கருப்பொருளாக இருந்தவர்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளே என்று சந்தர்ப்பப்பொருள் விவாதிக்கிறது. விஷயம் அவ்வாறு இருக்கும் என்றால், NIV அல்லது KJV வேதாகமத்தில் மொழிபெயர்ப்பு தேர்ந்துகொள்ளப்படுகிறது. "கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும்" என்ற சொற்றொடரைப் பற்றி நாம் ஏற்கனவே கலந்துரையாடினோம். "கிறிஸ்துவுக்கும் உண்டாகும் பாடுகள்" என்பதைக் காட்டிலும் "கிறிஸ்துவுக்காக உண்டாகும் பாடுகள்" என்ற மொழிபெயர்ப்பு, இலக்கணம் மற்றும் சந்தர்ப்பப் பொருள் ஆகியவற்றில் மிகமேன்மையாகச் செயல்படுகிறது என்று நாம் நம்புகிறோம். "கிறிஸ்துவுக்காக உண்டாகும் பாடுகள்" என்ற மொழிபெயர்ப்பை நாம் தழுவும்போது, அதைத் தொடர்ந்து "மகிமைகள்" என்பது, இந்த யுகத்தில் முடிவில் கிறிஸ்தவர்கள் பெற முன்னெதிர் நோக்கியுள்ள மகிமைகள் என்பதாகவே பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது.

1:10-12ன் விளக்கவுரையானது, *ta eis Christon pathēmata,* என்ற வார்த்தைகள் "கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகள்" அல்லது "கிறிஸ்துவுக்காக உண்டாகும் பாடுகள்" இவ்விரண்டில் எதைக் குறிக்கின்றன என்ற வாசகர்கள் புரிந்துகொள்ளும் வழியில் பொருந்தியுள்ளது, கேள்விகள் சிக்கலானவைகளாக உள்ளன, ஆனால் பல காரணங்களுக்காக, "கிறிஸ்துவுக்காக உண்டாகும் பாடுகள்" என்பது தேர்ந்துகொள்ளப் படக்கூடியதாக உள்ளது. காரணங்களின் தொகுப்பு பின்தொடருகிறது: (1) தீர்க்கதரிசிகளின் ஊழியம் பற்றி நாம் அறிந்துள்ள வகையில், கிறிஸ்துவின் சொந்தப் பாடுகளைப் புரிந்துகொள்தற்குப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் வேதவசனங்களில் ஆராய்ந்து பார்த்ததைக் காட்டிலும் அதிகமாக, கிறிஸ்துவுக்காகப் பாடுகளை அனுபவித்தல் பற்றிப் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் வேதவசனங்களைஆராய்ந்து விசாரித்திருப்பதற்கு அதிகம் வாய்ப்பு உள்ளது. (2) புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் கிரியை செய்த கிறிஸ்துவின் ஆவியானவர் என்பது முழுமையாகப் புரிந்துகொள்ளப்படக் கூடியதாக உள்ளது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளில் "கிறிஸ்துவின் ஆவியானவர்" கிரியை செய்தார் என்று

பேதுரு கூற வேண்டும் என்பது எதிர்பாராத விஷயமாக உள்ளது. (3) Eis என்ற கிரேக்க முன்னிடைச் சொல்லுக்கு "கிறிஸ்துவுக்காகப் பாடுகள்" என்ற மொழிபெயர்ப்பானது "கிறிஸ்துவின் பாடுகள்" என்பதைக் காட்டிலும் மேன்மையான கருத்துணர்வை அளிக்கிறது. (4) கர்த்தர் திரும்ப வரும்போது கிறிஸ்தவர்கள் அனுபவிக்கவிருக்கும் மகிமைகள் என்ற கருத்தைப் பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்றால், "மகிமைகள்" என்ற பன்மைச் சொல் இயல்பானதாக உள்ளது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்பு என்ன நடந்தது என்பதைக் குறிக்குமென்றால் இந்தப் பன்மைச்சொல் வழியுறுத்தப்பட்டதாக உள்ளது எனலாம். இந்தக் காரணங்களினால், புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளையே பேதுரு குறிப்பிட்டார் என்று புரிந்து கொள்ளுதல் மேன்மையானதாக உள்ளது.[19]

கிறிஸ்துவுக்காகப் பாடுகள் அனுபவிக்கும் காலம் மற்றும் வகை பற்றிய தீர்க்கதரிசிகளின் ஆய்வில், தேவன் அவர்களுக்கு, தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே, இவைகளைத் தெரிவித்தார்களென்று வெளிப்படுத்தினார் (1:12). பரிசுத்தவான்களுக்குச் சேவை செய்தல் என்பதே அவர்களுடைய ஊழியத்தின் நோக்கமாக இருந்தது, பவுல் தம்மை அப்போஸ்தலர் என்றும் தீர்க்கதரிசி என்றும் கருதினார் (1 கொரிந்தியர் 14:5, 6). அவர் தமது பிரசங்கத்தலின் மூலமாகக் கிறிஸ்துவை அறிய வந்திருந்தவர்களுக்குத் தமது பணிப்பொறுப்பு இவ்விரு வகையிலும் இருந்தது என்பதைப் புரிந்து கொண்டிருந்தார். "நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்" (1 கொரிந்தியர் 9:19). கிறிஸ்தவர்கள் விசுவாசம் நிறைந்தவர்களாக நிலைத்திருக்க வேண்டும் என்றால், தாங்கள் பெற முடிந்த எல்லா ஊக்குவிப்புகளையும் அவர்கள் பெற்றுக்கொள்ளுதல் அவசியமாக உள்ளது. இயேசுவின் நிமித்தம் பாடு அனுபவித்தவர்களுக்கு அவர் எச்சரிக்கையையும் ஆசீர்வாதத்தையும் அளித்திருந்தார் (மத்தேயு 5:10-12). மனம் மாறியவர்களுக்குக் காத்திருந்த பாடுகள் பற்றிப்பவுல், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" என்ற வார்த்தைகளுடன் அவர்களை ஆயத்தப்படுத்தினார் (நடபடிகள் 14:22). சபையின் வளர்ச்சி மற்றும் அது அவிசுவாசிகளிடம் இருந்து பெறும் எதிர்ப்பின் இயல்பு ஆகியவற்றைப் பற்றித் தீர்க்கதரிசிகள் முன்னதாக ஆராய்ந்தபோது, அவர்கள் தங்களுக்குத் தாங்களே சேவை செய்துகொள்ளுதல் என்ற சோம்பேறித்தனமான ஆர்வத்துடன் திருப்தி அடையவில்லை. அவர்கள் கற்றுக்கொண்ட விஷயங்கள் கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கு மறுவலிவூட்டுதல் மூலம் அவர்களுக்கு (கிறிஸ்தவர்களுக்கு) பணிசெய்தன. அவைகள் (ஆராய்வுகள்) விசுவாசிகள் தங்கள் சொந்த பாடுகள் மற்றும் தேவன் கிருபையாய் அளித்திருந்த இரட்சிப்பு ஆகியவற்றுக்கு இடையில் உள்ள உறவைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவின.

பேதுருவின் வாசகர்களுக்குத் தீர்க்கதரிசிகள் சேவை செய்திருந்த மற்ற வழிகளும் இருந்தன. நிகழ்வுகளின் எதிர்கால விரிதல்களை அவர்கள் ஆராய்ந்தது மட்டுமின்றி, பேதுருவின் வாசகர்களுக்கு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது என்ற வகையிலும் அவர்கள் சேவை செய்தனர். அவர்களுக்குத் தீர்க்கதரிசிகள், சுவிசேஷத்தைப் பரலோகத்திலிருந்து

அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே பிரசங்கித்தனர். பழைய ஏற்பாட்டில் இருந்தது போன்றே, புதிய ஏற்பாட்டிலும் தீர்க்கதரிசிகள் தங்கள் சமகால மக்களுக்குச் செய்தியைக் கொண்டிருந்தனர். பேதுருவின் வாசகர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்த எல்லாரும் தீர்க்கதரிசிகளாக இருந்தனர் என்று யூகிக்கத் தேவையில்லை, மற்றும் தீர்க்கதரிசிகள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை என்றும் நாம் யூகிக்கத் தேவையில்லை. தீர்க்கதரிசிகள் செய்தவைகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலும் இருந்தது. தீர்க்கதரிசிகளின் ஊழியம் "பரிசுத்த ஆவியானவரால்" மேற்பார்வை செய்யப்பட்டது என்று பேதுரு குறிப்பிட்டது தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. தீர்க்கதரிசிகள் செய்த ஊழியத்தில் அவர்கள், பரிசுத்த ஆவியானவரிடம் இருந்து வல்லமையையும் வழிகாட்டுதலையும் எதிர்பார்த்து பெற்றுக்கொண்டனர். கிறிஸ்தவர்களுக்குப் பகிர்ந்து தரப்பட்ட ஆவியானவரின் கொடைகளில், தீர்க்கதரிசனம் உரைத்தலும் இருந்தது (1 கொரிந்தியர் 12:10). அந்த வரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள், பேதுருவின் வாசகர்கள் கேள்விப்பட்ட செய்தியை அறிவித்திருந்தனர்.

பிந்திய சிந்தனை போன்று ஒலிக்கும் ஒரு கூற்றில் பேதுரு, தூதர்கள் உற்றுப்பார்க்க ஆவலாக இருந்த விஷயங்களைக் கூடுதலாகக் கூறினார். வேதாகமத்தில் தோன்றுகின்றனர் என்பதுதான் தூதர்களைக் குறித்து நாம் கூறக்கூடிய விஷயமாக உள்ளது. அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தேவன் நியமித்திருந்தாரோ, அவற்றைச் செய்பவர்களாக அவர்களை நாம் கண்டறிகிறோம். அவர்கள் தேவனுடைய செய்தியாளர்களாக உள்ளனர். அதற்கும் அப்பால், நாம் பெற்றுக்கொண்டுள்ள சொற்பமான தகவல்களின் அடிப்படையில் தூதர்கள் பற்றிய இறையியலைக் கட்டி எழுப்புதல் என்பது இடர்ப்பாடுள்ளதாக இருக்கிறது. கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட விஷயங்களை உற்றுப்பார்க்கத் தேவதூதர்கள் ஆசையாயிருந்தனர் என்று பேதுரு கூறியபோது, சுவிசேஷ செய்தியின் பிரபஞ்ச விகிதங்களை அவர் அடிக்கோடிட்டார். வாசகர்களை இரட்சித்திருந்த செய்தியின் தனிச்சிறப்பை இவ்வார்த்தைகள் அவர்களுக்குக் கூறுகின்றன. தூதர்களின் இடத்தையோ தேவனுடைய சிக்கனத்தையோ குடைவு ஆராய்ச்சி செய்யும்படி பேதுரு நம்மை அழைக்கவில்லை; இவற்றின் தோற்றம்பற்றி யூகிக்கப் பேதுரு நம்மை அழைத்திருக்க வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது. தீர்க்கதரிசிகள் சுவிசேஷத்தைக் கிறிஸ்தவர்களுக்கு அறிவித்தபோது, அவர்கள் கிறிஸ்தவர்களுக்குக் கொண்டுவந்திருந்த ஆசீர்வாதங்கள், அதன் நிறைவேற்றத்திற்காகக் கடந்த காலத்தில் மிகவும் ஏங்கிக் காத்திருந்த தூதர்களுக்கு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. தூதர்களுக்கு மறுக்கப்பட்ட விஷயங்கள் இப்போது விசுவாசிகளால் உணர்ந்தறியப் பட்டிருந்தன என்பதே இங்கு மறைமுகமான கருத்தாகும்.

பரிசுத்தமான மக்கள் (1:13-16)

13 ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசுகிறிஸ்து

வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். [14]நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, [15]உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். [16]நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

புதிய ஏற்பாடு முழுவதிலும், கர்த்தருடைய மறுவருகையும் இந்த உலகத்திற்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பும், நேர்மையான ஒழுக்க நடக்கைக்கு வேண்டுகோளாகச் செயல்படுகிறது. இது வேறு எவ்விடத்தில் இருப்பதைக் காட்டிலும் 1 பேதுரு நிருபத்தைப் பொறுத்தமட்டில் குறைவான உண்மையாக இருப்பதில்லை. கிறிஸ்தவர்கள் (தங்களுக்கு ஏற்படும்) சோதனைகளின் மத்தியில் "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது (அவர்)களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிரு"க்க வேண்டும்.

வசனம் 13. *அப்போஸ்தலர், தமது வாசகர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பையும் மாசற்ற சுதந்திரத்திற்குத் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும்பற்றி அவர்களுக்கு நினைவூட்டினார். மேலும் அவர்கள் எதிர்கொண்டிருந்த அப்போதய சோதனைகளுக்கான காரணத்தையும் அவர் கண்டறிந்து அதற்கு விளக்கமும் அளித்தார். எல்லா மக்களிலும் கிறிஸ்தவர்கள், மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக, மிகவும் பாராட்டுவதற்கு உரியவர்களாக உள்ளனர். இது யாவும் அவர்களுக்கு, அவர்கள் கேள்விப்பட்டிருந்த சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டபடி, தேவனுடைய கிருபையால் வந்திருந்தது, இவை யாவற்றையும் தொடர்ந்து ஆகையால் என்ற வார்த்தை வருகிறது. அவர்கள் பெற்றிருந்த கிருபையின் விளைவாக, அவர்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு செயல்பாட்டிற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் அவர்களுக்கு (தமது வாசகர்களுக்கு) கூறினார். இந்த வேண்டுகோளானது, அவரது வாசகர்களுக்கு, நினைவூட்டுதல் மறைவாக இருப்பினும், இஸ்ரவேல் மக்களின் வரலாற்றில் அவர்கள் கொண்டிருந்த வேர்களை நினைவூட்டிற்று. இந்தச் சிந்தனையை* NASB *வேதாகமம் நவீன ஆங்கில மரபுச்சொற்றொடரில் மொழிபெயர்த்துள்ளது.* KJV *வேதாகமம்* "gird up the loins of your mind" *(இது தமிழில் மிகச் சரியாக "நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்று மொழிபெயர்த்து, பழங்கால மரபுச் சொற்றொடரை மிகச்சரியாகப் பாதுகாத்துள்ளது. இங்கு, மக்களை, காற்றும் உலர்வுமான தட்பவெப்ப நிலையில் இருந்து பாதுகாக்கும்படி வடிவமைக்கப்பட்ட, தளர்வான அலைந்தோடும் ஆடைகளை அவர்கள் அணிதல் என்பதே சித்தரிப்பாக உள்ளது. இந்த ஆடைகள், ஓய்வான, அன்றாட நடவடிக்கைகளுக்கு மிகமேன்மையானவையாக இருந்தன, ஆனால் இவைகள், ஒருவருக்கு விரைவாக நடமாடுதல் அவசியமாகும்போது தடங்கலானவையாக இருந்தன. தீவிரமான வேலை அல்லது துரிதமான பயணம் ஆகியவற்றிற்கு, தளர்வான ஆடைகளை அணிந்திருந்தவர்கள் "அவற்றை அரைகட்ட" அதாவது, அவற்றைத் தங்களைச் சுற்றி இறுக்கமாக இழுத்து அல்லது பிணைத்து வைக்க*

வேண்டி இருந்தது. பழங்கால அண்மைக் கிழக்கு நாடுகளில் வாழ்ந்த மக்கள், அந்தப் பகுதியின் வெப்பக் காற்றை அனுபவித்திருந்தனர், எனவே தளர்வான ஆடைகளை அணிந்து கொண்டு வேலை செய்ய முயற்சித்தல் எப்படி இருக்கும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர் (யாத்திராகமம் 12:11; 1 இராஜாக்கள் 18:46; 2 இராஜாக்கள் 4:29; 9:1; யோபு 38:3; லூக்கா 17:8).

பேதுரு தமது வாசகர்களைச் செயல்பட அழைப்பதற்கு பேச்சு உருவகத்தைப் பயன்படுத்தினார். கிறிஸ்தவராக இருத்தல் என்பது நித்திய சுதந்தரம் பற்றிய நம்பிக்கையில் குளிர்காய்தலை விட அதிகம ானதாக இருந்தது; அது அவர்களுக்குத் தேவன் அளித்திருந்த கிருபையுள்ள கொடையைப் பற்றிச் சிந்தித்தலைக் காட்டிலும் அதிகமானதாக இருந்தது. அவர்கள் பகிர்ந்துகொண்டிருந்த நம்பிக்கை, அவர்கள் அழைக்கப்பட்டிருந்த, கண்ணியமான, தேவபக்தியுள்ள, பரிசுத்த வாழ்விற்கு அவர்களை ஊக்குவிக்கும் தூண்டுதலாக இருந்தது. அவர்கள் வாழும்படி கர்த்தர் வற்புறுத்திய அளவிற்கு அந்த வாழ்வை அவர்கள் வாழ்ந்தனர், அவர்கள் இப்போதுகூட சுதந்தரத்தின் ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு அதன் முழுமைத்தன்மை யை விரைவில் உணர்ந்தறியும் அளவுக்கு அவர்கள் அந்த வாழ்வை வாழ்ந்தனர்.

காலம், கலாச்சாரங்கள் மற்றும் மொழிகள் ஆகியவற்றினூடே பேச்சு உருவகத்தை எடுத்துச் செல்லுதலின் சிரமத்தை, NASB வேதாகம மொழிபெயர்ப்பு விவரிக்கிறது. மூலப்பதிவேட்டின் சுவையைப் பாதுகாப்பதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் எவ்வளவு மனவிருப்பமாக இருந்தனர் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டி இருந்தது. இவ்வசனப்பகுதியை "உங்கள் அரையைக் கட்டிக்கொண்டு" என்று நேரடியாக மொழிபெயர்த்தவர்கள், பழங்கால உலகத்தின் வழக்கங்களுக்குப் பழக்கமாகும்படி இன்றைய நாட்களின் வாசகர்களைக் கேட்டுக்கொள்கின்றனர். இல்லையென்றால், பேச்சு உருவகம் எதையும் அர்த்தப்படுவதாக இருக்காது. "Prepare your minds for action" என்றோ அல்லது அதைப்போன்ற வார்த்தைகளைக் கொண்டோ இதை மொழிபெயர்த்தவர்கள், நவீன வாசகர் தாமே விவரிக்கும் வகையில் இந்த மரபுச் சொற்றொடரை விளக்கியுரைக்க மனவிருப்பமாக உள்ளனர். இவ்விஷயத்தில் வாசகர், உடைகள் பற்றிய பழங்காலப் பழக்கவழக்கங்களைப் புரிந்துகொள்ளச் சிறிதளவு செய்தலே தேவையாக உள்ளது. மொழிபெயர்ப்பின் இவ்விரு தத்துவங்களுக்கும் உதாரணம் ஏற்படுத்தப்பட முடியும்.

எனவே, தெளிந்த புத்தி, அர்ப்பணிப்பின் ஒருமைத்தன்மை ஆகியவற்றிற்கான கிறிஸ்தவ அழைப்பின் நிலையை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு, விசுவாசிகள் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். *Nepho¯*, என்ற வினைச்சொல்லின் தமிழ் அர்த்தமான "தெளிந்த புத்தி" என்பது. கிரேக்க மொழியிலும்கூட, "மதுபானம் பண்ணாது சுயாதீனமாக இருத்தல்" என்றே அர்த்தப்படுகிறது. இருப்பினும் இவ்விரு மொழிகளிலும், இது "சுய கட்டுப்பாட்டைச் செயல்படுத்துதல்," "சமானநிலையில் தீவிரமாயிருத்தல்" என்ற உருவக அர்த்தத்தையும் கொண்டுள்ளது. மனித வாழ்வு என்பது கருத்தூன்றிச் சிந்திக்கப்பட வேண்டியதாக உள்ளது என்பதைப் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவு படுத்துவதற்காக இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார், வாழ்வு என்பது நிலைதிரிந்த விஷயம் அல்ல, ஆனால் அது கருத்தூன்றிச் சிந்திக்க வேண்டிய விஷயமாக உள்ளது. தனது

அவிசுவாசத்தைத் தீவிரமாக மேற்கொள்ளும் அவிசுவாசிக்கு, வாழ்வு என்பது கருத்தூன்றிய விஷயமாக இருப்பதில்லை. அது துன்பமானதாகவோ அல்லது இன்பமானதாகவோ இருக்கலாம், ஆனால் கருத்தூன்றிய விஷயமாக அவருக்கு இருப்பதில்லை. வாழ்விற்கு எல்லையற்ற அர்த்தம் ஒன்று இல்லை என்றால், வாழ்வைப் பற்றிக் கருத்தூன்றிச் சிந்திக்கக் காரணமே இல்லை, தெளிந்த புத்தியுடன் இருப்பதற்கும் காரணம் எதுவும் இருப்பதில்லை.[20] "நாளைப் பற்றிக்கொள்ளுங்கள்" என்று நன்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ள, *carpe diem,* என்ற இலத்தீன் சொற்றொடருக்கு அந்நியமற்றதாக இருந்த பாவம் நிறைந்த, விதிவசனமாக வாழ்வுநடை கொண்டிருந்த கிரேக்க - ரோமானிய உலகத்தில், பேதுருவும் அவரது வாசகர்களும் வாழ்ந்திருந்தனர். உதவியற்ற மனிதர்களின் செலவில்கூட, நாளை மகிழ்வுடன் அனுபவியுங்கள் என்பதே அந்த உலகின் தத்துவமாக இருந்தது. நாளைத்தவிர பற்றிக் கொள்ள வேண்டியது வேறு எதுவும் இருக்கவில்லை. நாளுக்கு அப்பால், கல்லறையின் நித்திய இருள்தன்மை உள்ளது. இப்படிப்பட்ட சிந்தனை கொண்ட ஒரு உலகத்தில், தெளிந்த புத்தியுடன் இருக்க வேண்டும் என்பதற்கான வேண்டுகோள்கள், மிதமிஞ்சியதாக அல்லது கேலிக்கு இடமானதாக இருக்கின்றன.

விசுவாசமும் தெளிந்த புத்தியும், சகோதரர்கள் இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு [அவர்களுக்கு] அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கும்படி அவர்களுக்கு புத்திகூறும்படி பேதுருவை வழிநடத்திற்று. இது கட்டளைகளின் வரிசையில் முதலாவதாக உள்ளது.[21] அவர், "பரிசுத்தராயிருங்கள" (1:15), "பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்" (1:17) மற்றும் "ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" (1:22) என்பவற்றைக் கூடுதலாகக் கூறவிருந்தார். இங்கும் புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களிலும் "நம்பிக்கை" என்பது, தெளிவற்ற மனவிருப்பமாக இராமல், தைரியத்துடன் எதிர்பார்த்தலாக உள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட விஷயத்தினால் தீர்மானிக்கப்பட்ட வாழ்வின் ஓட்டத்தை அமைக்கிறது. நம்பிக்கை என்பது பரிசுத்தமான வாழ்வைக் கட்டியெழுப்ப ஒரு அஸ்திபாரமாக உள்ளது.

கிறிஸ்தவ நம்பிக்கை யாவும், கிறிஸ்து வெளிப்படுதல் பற்றிய எதிர்பார்ப்பில் ஒன்று குவிகிறது. சில சந்தர்ப்பப் பொருள்களில் "இயேசு கிறிஸ்து வெளிப்படுதல்" என்பது கிறிஸ்துவிடமிருந்து வரும் செய்தி ஒன்றைக் குறிக்கிறது (கலாத்தியர் 1:12; வெளிப்படுத்தின விசேஷம் 1:1); ஆனால் இங்கு இது, 1:7ல் செய்வது போன்றே, காலத்தின் முடிவில் இயேசு தோன்றுதலை அர்த்தப்படுத்துகிறது. அப்போது அவர் தமது எல்லா மகிமையிலும் வெளிப்படுவார். "நம்பிக்கை," "கிருபை" மற்றும் "வெளிப்பாடு" ஆகியவை இந்த வாக்கியத்தின் மூன்று முக்கியமான வார்த்தைகளாக உள்ளன. இவை மூன்றும், அந்த வரலாறு ஏதோ ஒரு இடத்தை நோக்கிச் செல்வதை உறுதிப்படுத்துகின்றன. படைப்பின் ஆதாரமூலமாக தேவன் இருக்கிறார் என்பதைப் போன்று, படைக்கப்பட்டவர்கள் எங்கு செல்கின்றனர் என்பதையும் அவர் தீர்மானிக்கிறார். கிருபையுள்ள கர்த்தரின் தோற்றத்துடன் மனிதகுல வரலாறு முடிவடையும் என்பதை அறிந்தவர்களாகக் கிறிஸ்தவர்கள் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கின்றனர். இயேசு கிறிஸ்து வெளிப்படுதல் என்பது கிறிஸ்தவர் தமது நம்பிக்கையைத் தைரியமாக வைத்துள்ள

கிருபையைப் போன்றதாகவே உள்ளது. இயேசுகிறிஸ்துவின் வருகையுடன் தரப்படும் நியாயத்தீர்ப்பில் தேவன் தம்மையே வெளிப்படுத்தும்போது நம்பிக்கை உணர்ந்தறியப்படும். வெளிப்படுத்துதல் என்பதே தேவனுடைய கிருபையாக அதாவது அவரது கிருபையுள்ள செயலாக இருக்கிறது.

வசனம் 14. *பேதுரு மற்றும் யாக்கோபு ஆகிய இருவருடைய செய்தியும் ஒன்றுபோல உள்ளன. விசுவாசம் தனது இயல்பினாலேயே செயல்படுதலைத் தவிர்க்க இயலாதது ஆக்குகிறது என்பதை யாக்கோபு நிருபத்தின் வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் (யாக்கோபு) விரும்பினார். கீழ்ப்படிகிற பிள்ளைகள் சாயலில், அந்தப்பரிசுத்தமானது இயல்பாகவே கீழ்ப்படிதலைத் தவிர்க்க இயலாதது ஆக்குகிறது என்பதை, கிறிஸ்தவர்கள் அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார், இதை நாம் வரைவளவில் பின்வருமாறு குறிப்பிடலாம்:*

விசுவாசம்: செயல்படுதல்:பரிசுத்தமாகுதல்:கீழ்ப்படிதல்

(அல்லது, "பரிசுத்தமாகுதல்" என்பதற்கு "கீழ்ப்படிதல்" எப்படியோ, அப்படியே "விசுவாசம்" என்பதற்கு "செயல்படுதல்" உள்ளது.)

1:2, 1:14 மற்றும் 1:22 ஆகிய வசனங்களில், கீழ்ப்படிதலும் பரிசுத்தமாகுதலும் எழுதுகோலின் ஒரே வீச்சில் வருகின்றன. பேதுரு தமது வாசகர்களை "கீழ்ப்படிகிற பிள்ளைகள்" என்று அழைத்தார், ஏனெனில் கீழ்ப்படிதல் அவர்களில் பண்புப்படுத்தப்பட வேண்டியதாக இருந்தது.[22]

1 பேதுரு நிருபத்தின் வாசகர்கள் எந்த அளவுக்கு "கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்தார்களே, அந்த அளவுக்கு அவர்கள் ***முன்னே*** *[தங்கள்] அறியாமையினாலே* ***கொண்டிருந்த இச்சைகளின்படியே இனி நடவாமல்*** *இருப்பார்கள்". கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இந்த உலகத்தின் நடக்கையை ஆளுகை செய்யும் மாம்சத்தின் இச்சைகளில் இருந்து புறம்பே திரும்ப வேண்டும் என்பது 4:2ல் அப்போஸ்தலர் ம றுபடியும் திரும்பி வரவிருந்த ஒரு ஆய்வுக்கருத்தாக இருந்தது. இவ்விடத்தி லும் 4:2லும் "இச்சைகள்" என்று மொழியெர்க்கப்பட்டுள்ள epithumia என்ற வார்த்தை நல்ல மற்றும் மோசமான மனவிருப்பங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படலாம். பொல்லாத மனவிருப்பங்களைக் குறிக்கவே பேதுரு இந்தப் பெயர்ச்சொல்லைச் சீர்பொருத்தமாகப் பயன்படுத்தினார். எந்த வகையிலும் இந்த வார்த்தை பாலுறவு விருப்பங்களைக் குறிப்பதோடு ம ட்டுப்படுத்தப்படுவதில்லை. இவ்வார்த்தையின் வினைச்சொல் வடிவம் தூதர்களின் மனவிருப்பத்தைக் குறிப்பதற்கு 1:12 ல் நேர்மறையாகப் பயன்படுத்தப்பட்டது.*

அவர்களின் முந்திய வாழ்வு நடை பற்றிய குறிப்பானது, பேதுருவின் வாசகர்கள் பெருமளவில் புறஜாதியில் இருந்து மனமாறியவர்களாக இருந்தனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. தாமே ஒரு யூதராயிருந்த பேதுரு, மற்ற யூதர்கள் முன்னே தங்கள் ***அறியாமையினாலே*** *இச்சைகள் கொண்டிருந்தனர் என்று எழுத வாய்ப்பு இல்லை. யூதர்கள் "தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது" என்ற நிலையில் இருந்தார்கள் (ரோமர் 3:2). அவர்களின் வாழ்வு அறியாமை உள்ளதாக இருந்திராது.*

பேதுருவின் வாசகர்கள் ."... நடவாமல்" இருக்க வேண்டும் என்று, பேதுரு கூறியபோது, புதிய ஏற்பாடு முழுவதிலும், இங்கும் ரோமர் 12:2லும் மாத்திரமே காணப்படும் suschēmatizomai,[23] *என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தினார். இங்கும் 2:1 லும், 1 பேதுரு நிருபத்திற்கும் ரோமர் 12:1, 2 ற்கும் இடையில் வினைச்சொல் ஒற்றுமைகள் நிலவுகின்றன. ரோமருக்கு பவுல் எழுதிய நிருபத்தைப் பேதுரு வாசித்திருக்கவும் பவுலின் சொல்விளக்கங்கள் சிலவற்றைத் தமது சொந்த நிருபத்தில் பேதுரு பயன்படுத்தி இருக்கவும்கூட வாய்ப்புள்ளது. விசுவாசிகள் தங்கள் முந்திய வாழ்விற்குத் தங்களை இழுத்துச் செல்லும் வகையில் தங்கள் மாம்ச இச்சைகளை அனுமதிக்கக் கூடாது என்ற கருத்தைப் பேதுருவின் வார்த்தைகள் தருகின்றன (காண்க 4:2). 4:3ல் அவர், அவர்களைப் பண்புப்படுத்திய பல விஷயங்களைப் பட்டியலிட்டார் (காண்க கலாத்தியர் 5:19-21). இச்சொற்றொடரை மிகாயேல் அவர்கள், "ஒருகாலத்தில் உங்களை இயக்கிக்கொண்டிருந்த மனத்தூண்டுதல்களுக்கு இணங்கிப்போய்விடாதீர்கள்" என்று மொழிபெயர்த்தார்.*[24] *அவர்கள் இவ்வாறு செய்ய வேண்டுமென்றால், முன்பு அவர்களைப் பண்புப்படுத்தியிருந்த மற்றும் தங்கள் காலத்தில் வாழ்ந்த மற்றவர்களைப் பண்புப்படுத்திய வாழ்வின் வகையினுள், அவர்கள் தங்களை வடிவமைக்க அல்லது வார்ப்பிக்கப்பட்டவர்களாகக் காண்பார்கள். அவர்கள் நம்பிக்கைவைத்திருந்த கர்த்தரை விட்டுப் பிரிந்தவர்களாக அவர்கள் தங்களைப் காண்பது மிகமோசமானதாக இருக்கும்.*

பேதுரு தமது வாசகர்களின் முந்திய பொல்லாத இச்சைகளை, அவர்களின் முந்திய "அறியாமையுடன்" இணைத்தார் என்பது குறிப்பிடத் தக்கதாக உள்ளது. தேவனை அறியத்தவறிய புறஜாதியார் உலகமானது பாவத்தில் ஆழ்ந்து கிடந்திருந்தது. பாவத்தை அறியாமையுடன் சமப்படுத்துதல் தவறாக இருக்கையில், ஒளியூட்டப்பட்ட மனமானது. அழிந்துபோன வாழ்வு, பரிதவிப்பான நிலை மற்றும் தேவனிடத்தில் இருந்து பிரிக்கப்படுதல் என்ற பாவத்தின் விளைவுகளை புரிந்துகொள்ளும் என்பதும் உண்மையாக உள்ளது. பாவமும் அறியாமையும் படுக்கைத் தோழர்களாக உள்ளன. பேதுருவின் வாசகர்கள் இன்னமும் அறியாமையில் இருக்க வில்லை. அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருந்தது (1:12). அவர்கள் தங்களின் மாம்ச இச்சைகளைப் பின்பற்றுதல் என்பது அறியாமையை அங்கீகரித்தலாக இருந்திருக்கும்.

வசனம் 15. *அவர்களின் முந்திய அறியாமைக்கு நேரெதிராக, பலத்த எதிர் இணைப்புச் சொல்லைப் பயன்படுத்தியதும் பிரதிப்பெயர்ச்சொல்லை வலியுறுத்தியதும் ஆகிய இரு செயல்களில், பேதுரு* **உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்** *என்று அவர்களுக்குப் புத்திகூறினார். தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது பரிசுத்தமாகுதலுக்கு அத்தியாவசியமான விஷயமாக உள்ளது. 14ம் வசனத்தில் உள்ள கீழ்ப்படிதலுக்கான அழைப்பு, 15ம் வசனத்தில் உள்ள பரிசுத்தமாகுதலுக்கான வேண்டுகோளுடன் சமானமாகிறது. கீழ்ப்படிதல் உள்ள பிள்ளைகளாயிருத்தல் என்பது "பரிசுத்தமாயிருத்தல்" என்பதாக உள்ளது. தேவன் பரிசுத்தத்தின் தர அளவையாக இருக்கிறார். அவரது பரிபூரணத்துவம் கிறிஸ்தவ வாழ்வின் இலக்காக உள்ளது. இயேசு,*

*"**பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்**" என்று கூறினார் (மத்தேயு 5:48). கிறிஸ்து என்ற நபரில், தேவனுடைய பரிசுத்தமும் பரிபூரணத்துவமும் மாம்சத்தில் வாழ்ந்திருந்தன. ஆகையால் அவரது வாழ்வு விசுவாசிகளுக்கு மாதிரியாக உள்ளது, "**நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்**" (1 பேதுரு 2:21). "நான் மனிதன் தான்" என்பது போன்ற சொற்றொடர்களைக் கொண்டு கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களுக்குச் சாக்குப்போக்குச் சொல்ல உரிமை கொண்டிருப்பதில்லை. நாம் மனிதர்கள் என்பதைத் தேவன் உணர்ந்தறிகிறார் என்பதே சுவிசேஷத்தைப் பற்றிய குறிப்பிடத்தக்க விஷயமாக உள்ளது. அவர் மனிதர்களின் சீரழிவை உணர்ந்தறிகிறார், ஆனால் அவரது கிருபையினால் மீட்பரை அனுப்பினார். கிருபையினால் இரட்சிப்பு உண்டு, ஆனால் தேவனுடைய கிருபை தானாகவே வரும் என்று யூகித்துக் கொள்ளக்கூடாது. பரிசுத்தம் என்பதே மனித வாழ்வின் இலக்காக உள்ளது. கிருபைக்குக் கிறிஸ்தவர்களை வசப்படாத வகையில் இழுக்கிற ஒருவரின் சொந்த முயற்சிகளின் மூலம் பரிசுத்தத்தை அடைய விரும்புதல் என்பது தோல்வியாக முடிவடைகிறது.*

தேவன் கிறிஸ்தவர்களைத் தமது சொந்த தொடக்க ஊக்கத்தில் "அழைத்தார்" என்ற காரணத்தால், கிறிஸ்தவர்கள் இரட்சிப்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவித்தனர் என்று கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலர் நினைவூட்டினார். பேதுருவின் வாசகர்கள், தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாக இருந்தனர் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுதல் மூலம் பேதுரு தமது நிருபத்தைத் தொடங்கினார். இருப்பினும் இது, அவர்கள் தேவனுடைய செயலினால், தங்கள் சுய மனவிருப்பத்தைச் சாராது அழைக்கப்பட்டிருந்தனர் என்று கூறுதலாக இராது. அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட போது, அவர்கள் இந்த அழைப்பைப் பெற்றுக்கொண்டனர் (1:12). ஒரு குழந்தை வெளியில் விளையாண்டுகொண்டு இருக்கிறது, அதை தாயார் இரவு உணவு உண்ண அழைக்கிறார், அப்போது அந்தக் குழந்தை தனது தாயாரின் அழைப்பை புறக்கணிக்கலாம் (சிலவேளைகளில் பிள்ளைகள் இதைச் செய்கின்றன), அல்லது அது வீட்டினுள் வந்து தனது குடும்பத்துடன் உணவு மேஜையில் அமரலாம். அந்தக் குழந்தை விளையாண்டுகொண்டே இருக்கும் வரையிலும், அது அழைக்கப்பட்டவர்கள் மத்தியில் இராது. அது உள்ளே வந்து உண்பதற்கு அமர்ந்தால், அப்போது அது அழைக்கப்பட்டவர்கள் மத்தியில் இருக்கும். (சுவிசேஷத்தை) கேள்விப்பட்டவர்கள், தேவனால் அழைக்கப்பட்டவர்கள் மத்தியில் இருக்க வேண்டும் என்றால், கீழ்ப்படிதல் என்ற அர்த்தம் நிறைந்த பதில்செயல் தேவைப்படுகிறது.

"பரிசுத்தம்" என்பதற்கு "தேவனுக்கென்று பிரித்துவைக்கப்படுதல்" என்ற பள்ளிப்பிள்ளையின் விளக்கம் உதவிநிறைந்ததாக உள்ளது. இருப்பினும், தேவன் பரிசுத்தராக இருக்கிறார் என்ற விஷயத்தில் இருந்து, இந்த விளக்கத்தின் போது மற்றதன்மை தெளிவாகிறது. தேவன் தேவனுக்கென்று பிரித்து வைக்கப்பட்டுள்ளார் என்று கூறுதல் உதவிநிறைந்ததாக இராது. தேவனுடைய காலம் மாறாது நிற்கும் தன்மை மற்றும் அவரது பயபக்திக்குரிய

மாட்சிமை ஆகியவற்றினால் அவரது பரிசுத்த தன்மை தெளிவாய்ப் புலப்படுகிறது. ஆனால் இந்த சந்தர்ப்பப்பொருளில், பேதுரு தேவனுடைய ஒழுக்கத்தின் பரிபூரணத்தன்மைக்குக் குறிப்பாக முக்கியத்துவம் அளித்துக் குறிப்புக் கொடுத்தார். தேவனுடைய பரிசுத்ததன்மையானது, பேதுருவின் வாசகர்கள் முன்பு வாழ்ந்திருந்த அறியாமைக்கு எதிர்கோட்பாடாக உள்ளது (1:14). மற்ற தனிநபர்களை மக்கள் தங்கள் வசதிக்கேற்றபடி பயன்படுத்திக் கொள்ளும் விஷயங்களாகக் கருதி, அடிக்கடி நடந்துகொள்வது போல, தேவன் நடந்து கொள்வதில்லை, விரோத உணர்வுடனோ அல்லது வஞ்சக எண்ணத்துடனோ தேவன் ஒருக்காலும் செயல்படுவதில்லை. அவர் தமது படைப்புகளின் நலவாழ்வை மாத்திரமே நாடுகிறார். அதனால்தான் கிறிஸ்தவர்கள் தங்கள் (தங்கள்) **நடக்கைகளெல்லாவற்றிலேயும்** பரிசுத்தராயிருக்க வேண்டும். "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்துகொள்ளுகிறோம், நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1 யோவான் 5:2, 3) என்று எழுதியபோது யோவான், தேவனுடைய பரிசுத்த தன்மையை உணர்ந்தறிந்தார். குரூடெம் அவர்கள், பரிசுத்ததன்மை என்பது "தேவன் மற்றும் அவரது பரிசுத்த தன்மையை, இருதயம் மற்றும் மனம் ஆகியவற்றின் அடியில் பாய்ந்து செல்லும் ஊக்கமான மகிழ்ச்சி என்ற வகையில் பராமரித்தல்" என்பதாக உள்ளது என்று கூறினார்.[25]

வசனம் 16. இவ்விடத்தில் அப்போஸ்தலர், லேவியராகமம் 11:44, 45ஐக் குறிப்பிட்டார். தேவனுடைய பரிசுத்தம் இன்றி, நல்லது பொல்லாதது, சரியானது தவறானது போன்ற கருத்துக்களைப் புரிந்து கொள்ள வழியில்லை, அவைகள் குறைவான விளக்கம் உடையவைகளாகவே இருந்திருக்கும். தேவன் பரிசுத்தராயிருப்பது போன்றே கிறிஸ்தவர்கள் பரிசுத்தராயிருக்க வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டபோது, தேவனுடைய பரிசுத்த தன்மையே, ஒழுக்க நெறி மற்றும் ஒழுக்கப்பண்பு ஆகியவற்றின் அடிப்படையாக உள்ளது என்று அவர் உறுதிப்படுத்தினார்.[26] தேவன் நல்லவராக இருக்கிறார் என்பதே நாம் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு நிறைவான காரணமாக உள்ளது. பரிசுத்தம் என்பது விசுவாசிகளுக்கும், ஒழுக்கவீனம் மற்றும் இவ்வுலகத்தின் கோட்பாடுகள் ஆகியவற்றில் இருந்து பிரிந்திருக்க வேண்டும் என்றே அர்த்தப்படுகிறது. இது, தேவனுடைய மகிமைக்கென்று ஒருவர் தமது பிரியங்களையும் நடத்தையையும் முற்றிலும் எவ்விதப்பிற ஒதுக்கீடும் இன்றி ஒப்புக்கொடுத்தலாக உள்ளது.[27]

1:13ல் உள்ள தெளிந்த புத்திக்கான அழைப்பிற்கும், 1:16ல் உள்ள பரிசுத்தத்திற்கான அழைப்பிற்கும் மற்றும் 1:17ல் உள்ள பயத்துடன் இருப்பதற்கான அழைப்பிற்கும் இடையில் உறவு ஒன்றுள்ளது. இந்த மூன்று கருத்துக்களும் தேவனுடைய இருப்பில் தங்கள் பகுத்தறிவிற்கேற்ற விளக்கத்தைக் காணுகின்றன. தேவன் பரிசுத்தராயிருக்கிறார் என்று கூறுதலானது, பாவியைச் சிறுமைப்படுத்தி வெட்கக் கேட்டிற்குள்ளாக்குகிற நடத்தையின் வகைகள் எல்லாவற்றில் இருந்தும் அவர் முற்றிலும் விடுதலையாயிருக்கிறார் என்று அர்த்தப்படுகிறது. அவர் சத்தியமாக, அன்பாக,

நல்லவராக இருக்கிறார் மற்றும் எவ்வித சமரசமும் இன்றி இதுபோன்ற மற்ற பண்புகளின் திரள்களையும் அவர் கொண்டுள்ளார். அவரது பரிசுத்ததன்மையானது கிறிஸ்துவின் சீஷர்களின் பரிசுத்தத்திற்கு ஏவுதலாகவும் முன்மாதிரியாகவும் உள்ளது. தேவனை அறிந்து கொள்ளுதல் என்பதே கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய முதல் கடமையாக உள்ளது. பின்பு, அவர் தேவனை அறிந்திருப்பதால், தாம் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை அறிகிறார். இறையியலில் இருந்தே ஒழுக்கநெறி பாய்ந்தோடி வருகிறது.

பயத்துடன் நடந்துகொள்ளுதல் (1:17-21)

***[17]அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி
நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால்,
இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்.
[18]உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான
நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும்
மீட்கப்படாமல், [19]குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின்
விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.
[20]அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த்
தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில்
வெளிப்பட்டார். [21]உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி,
அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்.***

தேவன் அன்பான தகப்பனாகவும் பயங்கரமான நியாயாதிபதியாகவும் இருக்கிறார். இவ்விரு சித்தரிப்புகளுமே, கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்தின்மீது மாதிரியாக்கப்பட்ட நற்தன்மையுள்ளவாழ்வை வாழும்படிக்குக்கிறிஸ்தவர்களுக்கு ஊக்குவித்தல்களை அளிக்கின்றன.

வசனம் 17. *பேதுரு* ***நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால்*** *என்று எழுதியபோது. தேவனைப் பிதாவாகத் தொழுதுகொள்ளத் தேர்ந்துகொள்வதா இல்லையா என்பது கருத்தாக இருக்கவில்லை. மாறாக உண்மையில் அவர்கள் தேவனை இவ்வாறே தொழுது வந்தனர் என்பதே அவரது முன்கருத்தாக இருந்தது. "நீங்கள் தேவனைப் பிதாவாகத் தொழுதுகொண்டுவரத் துணிவதால்" என்பதும் இங்கு ஒரு ஆலோசனையாக இருப்பதில்லை. இந்த வாக்கியத்தின் "ஆல்" விகுதி உண்மையாக உள்ளது என்று பேதுரு யூகித்தார். "இது உண்மையாக உள்ளதென்றால், மற்றும் நீங்கள் … தொழுதுகொண்டிருந்தால்." விசுவாசியைத் தேவன் அழைத்துள்ளதால் (1:15), ஆதரவு மற்றும் உதவி ஆகியவற்றிற்காக விசுவாசி தேவனைக் கூப்பிடலாம் அல்லது வேண்டிக் கொள்ளலாம்.*

தேவனின் தகப்பன் என்ற நிலைப்பாடு பழைய ஏற்பாட்டில் அறியப்படாததாக இருக்கவில்லை (சங்கீதம் 82:6; ஓசியா 11:1). இருப்பினும் இயேசு, தேவனை தகப்பன் என்ற வகையில் வெளிப்படுத்தியபோது, தேவனுக்கும் அவரது படைப்பிற்கும் இடையில் இருந்த, தனிப்பட்ட, இயங்குகிற, நெருக்கமான உறவைக் கூடுதலாக எடுத்துரைத்தார். இது ஒருவேளை, (கெத்செமெனே) தோட்டத்தில் இயேசு தமது ஜெபத்தில்

“அப்பா” என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதால் (மாற்கு 14:36) தெளிவாகியிருக்கலாம், இவ்வார்த்தை கிரேக்கமொழி பேசும் சபைகளுக்குக் கடத்தப்பட்ட அரமாயிக் மொழியின் மிகப்பிரியமான வார்த்தையாக இருந்தது (ரோமர் 8:15; கலாத்தியர் 4:6). பேதுருவைப் பொருத்தமட்டில், தேவன் உலகத்தை மென்மையாக இயங்க வைக்கும் நபர்த்துவமற்ற சக்தியாகவோ அல்லது மனிதகுலத்தை மாற்றி மாற்றி துன்பப்படுத்தி மற்றும் அவர்களுக்குத் தயவுசெய்யும் சீயெஸ் போன்று பயங்கரமான தெய்வமாகவோ இருக்கவில்லை.

தேவன் தம்மை அன்பு செய்பவர்களுக்குப் பிதாவாக இருக்கிறார், ஆனால் பேதுரு உரைத்த அடிப்படைக் கருத்து அதுவல்ல. மாறாக, 17ம் வசனத்தின் முடிவில் உள்ள கட்டளைக்குப் பின்திரை என்று இது யூகிக்கப்பட்டது. தேவனுடைய பரிசுத்த தன்மை மற்றும் தேவனுடைய பிதாத்துவத்தன்மை ஆகியற்றைப் பேதுரு குறிப்பிட்டார், ஆனால் தேவன் நியாயாதிபதியாகவும் இருப்பதைத் தமது வாசகர்களுக்கு நினைவூட்ட அவர் தயங்கவில்லை. தேவனை பிதாவாகவும் நியாயாதிபதியாகவும் ஒரே வேளையில் நினைத்துப் பார்ப்பதில் பழங்கால மக்கள் பிரச்சனை எதையும் கொண்டிருக்க மாட்டார்கள். இது பிதாவாகிய தேவனுக்கு முன்பாக கீழ்ப்படிதலில் முழங்கால் படியிட்டு நிற்க விசுவாசிக்குப் பொருந்தும் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். அன்பான தேவன், பட்சிக்கிற அக்கினியாக சர்வ வல்லமையுள்ள தேவனாகவும் இருக்கிறார் (உபாகமம் 4:24; எபிரெயர் 12:29).

தேவன் மீது அன்புகூருவதற்கு கிறிஸ்தவர்கள், மாம்சம் மற்றும் பாவம் ஆகியவற்றின் மோசம் போக்கும் செல்வாக்குகளில் இருந்து விடுதலையாக இருக்கும் கோட்பாட்டளவிலான உலகத்தில் இருந்தால், தேவபக்தியுள்ள வாழ்விற்கு ஊக்குவித்தல் என்ற வகையில் பயந்திருக்கும்படி கேட்டுக் கொள்ள அவசியம் இருக்காது. அதனால்தான் யோவான், “பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்” என்று கூறமுடிந்தது (1 யோவான் 4:18). பூரணத்தன்மைக்காகக் கிறிஸ்தவர்கள் பிரயாசப்படுகின்றனர், ஆனால் அதே வேளையில் அவர்கள் பாவத்தின் மோசம்போக்கும் செல்வாக்குகளின் மத்தியில் வாழ்கின்றனர். அதனால்தான் விசுவாசிகளுக்குப் பேதுரு **பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்** என்று கூறினார், கிறிஸ்தவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்பது பரிசுத்தமான வாழ்வை வாழ்வதற்கு ஒரே ஒரு ஊக்குவிப்பாக இருப்பதில்லை, ஆனால் அதுவும் ஒரு ஊக்குவிப்பாக உள்ளது. தேவனுடைய இராஜரீகமான நியாயத்தீர்ப்பு இந்த யுகத்தில் வெளிப்பட்டிருப்பது உண்மையாக இருக்கையில், இந்த யுகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைப் பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்தார். “கடைசிக்காலத்திலே” இரட்சிப்பு வெளிப்படும்போது, தேவன் நியாயாதிபதியாக இருப்பார் (1:5).

ஒவ்வொரு நபருடைய செயலுக்கும் தேவனுடைய பட்சபாதம் இல்லாத தீர்ப்பை பேதுரு குறிப்பிட்டது தற்செயலாக இருத்தல் அரிது. இயேசு எவரொருவரையும் வேறுபடுத்துவதில்லை என்று பரிசேயர்கள் ஒப்புக்கொண்டு அவரை அணுகியபோது, அவர்கள் வஞ்சகத்துடன் செயல்பட்டாலும். உண்மையையே பேசினர்: “நீர் முகதாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லை”

(மத்தேயு 22:16). தேவனுடைய பாரபட்சமற்ற தன்மையின் முன்னிலையில் யாக்கோபு, தமது சீஷர்கள் பட்சபாதம் காண்பித்ததை முரண்பாடானதாகக் கண்டறிந்தார் (யாக்கோபு 2:1-4). "பெரிய மனிதர்கள்" மற்றும் "அற்பமான ம னிதர்கள்" உள்ளனர் என்பதைக் காட்டிலும் வேறு எதுவும், மனித சமூகத்தில் அதிகமாக உலகளாவிய பொது விஷயமாக இல்லை எனலாம். "பெரிய ம னிதர்கள்" என்போர், பொருளாதார அல்லது அரசியல் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துகின்றனர். அவர்கள் மற்றவர்களிடம் இருந்து பணிவிணக்கத்தை எதிர்பார்க்கின்றனர் மற்றும் அதைப் பெற்றுக் கொள்கின்றனர். உலகத்தின் பார்வையில் "அற்பமான மனிதர்களாக" இருப்பவர்கள், பின்வரும் ஆறுதலைக் கொண்டுள்ளனர்: தேவன் பட்சபாதம் இல்லாதவர். அவர் பட்சபாதம் இல் லாதவராக இருப்பதால், கடைசிநாள் என்பது மாபெரும் திருப்புதலைக் கொண்டு வரும். செல்வந்தனிடத்தில் ஆபிரகாம், "மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்" என்று கூறினார் (லூக்கா 16:25). கடைசிநாளில் மக்கள் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, முன்வரிசையின் படிகள் என்று எதுவும் இராது. தேவன், **பட்சபாதமில்லாமல் ... நியாயந்தீர்க்கிறார்** என்று பேதுரு தெளிவாக்கினார்.

கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவர் அல்லாதவர்களையும் நியாயந்தீர்ப்பதில் தேவன் வித்தியாசம் எதையும் ஏற்படுத்துவதில்லை என்று இவ்வசனப்பகுதி மறைமுகமாய்க் குறிப்பிடுவதாக ஏர்னெஸ்ட் பெஸ்ட் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[28] அது பேதுருவின் கருத்தைப் பொறுத்தமட்டில் எதுவும் செய்வதற்கில்லை என்பது உறுதி. கிறிஸ்தவர்கள் பரிசுத்தமான வாழ்வை வாழ வேண்டும் என்று அப்போஸ்தலர் புத்திகூறினார். தேவன் நியாயாதிபதி யாக இருக்கிறார் என்பதை நினைவூட்டுதல் மூலம் அவர்களுக்கு அவர் புத்திகூறினார். மேலும் தேவன், ஒவ்வொரு நபரும் செய்த செயல்களுக்கு ஏற்ற வகையில் நியாயந்தீர்ப்பார். பவுலும் இதே கருத்தைக் கூறினார், "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்தி ற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2 கொரிந்தியர் 5:10). தேவனுடைய கிருபையினாலேயே இரட்சிப்பு உண்டாகிறது, எவரொருவரும் பரலோகத்தி ற்குச் செல்லும் வழியைத் தாமே ஈட்ட இயலாது என்பது உண்மையாக இருக்கையில், மனிதருடைய செயல்களின் அடிப்படையில்தான் தேவனு டைய நியாயத்தீர்ப்பு உள்ளது என்பதும் உண்மையாக உள்ளது. யாக்கோபு உறுதிப்படுத்தியபடி, விசுவாசம் மற்றும் ஒருவர் நடந்துகொள்ளும் விதம் ஆகிய இரண்டும் பிரிக்கப்பட இயலாதவையாக உள்ளன (யாக்கோபு 2:17).

இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் என்ற மொழிபெயர்ப்பிற்குப் பின்னால், *paroikia* என்ற கிரேக்க வார்த்தை உள்ளது. *Paroikia* என்ற வார்த்தை, 1:1ல் பரதேசிகளுக்கு என்று மொழிபெயர்க்கப்பட்ட *parepidēmos*, என்ற வார்த்தையின் அதே அர்த்தத்தைக் கொண்டுள்ளது. உலகப்பிரகாரமான கிரேக்க சமுதாயத்தில் இவ்வார்த்தைகள், குடியுரிமை இல்லாது ஒரு நகரில் வாழ்பவர்களைக் குறித்தது. ஒருவேளை பேதுருவின் வாசகர்களில் பலர், தாங்கள் வாழ்ந்த இடங்களில் உண்மையில் குடியுரிமை இல்லாதவர்களாக

இருந்திருக்கலாம்.[29] நகர அரசுகளுடன் அவர்களின் உறவு எப்படிப்பட்டதாக இருந்தாலும், பேதுருவும் அவரது வாசகர்களும் தாங்கள் வாழ்ந்த பொருளாதார உலகத்திற்கு நிரந்தரமான பட்டப்பெயர் எதையும் கொண்டிருக்கவில்லை. இவ்வார்த்தைகள், கானானில் தேசாந்திரியாகச் சுற்றித்திரிந்த ஆபிரகாமை நோக்கிப் பின்னாக நடைபோட்டுச் செல்கின்றன. அந்த முற்பிதா, சாராளின் உடலைப் புதைக்கும் இடம் ஒன்றை வாங்க விரும்பியபோது, அந்த நாட்டில் நிரந்தரக் குடிகளான மக்களிடத்தில் இருந்து அவர் ஒரு குகையை விலைகொடுத்து வாங்க வேண்டியிருந்தது, ஏத்தின் புத்திரரிடத்தில் "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன் ... உங்களிடத்தில் எனக்குச் சொந்தமாக ஒரு கல்லறைப் பூமியைத் தரவேண்டும்" என்று அவர் கூறினார் (ஆதியாகமம் 23:4). பேதுருவின் வாசகர்களைப் போன்றே இஸ்ரவேல் மக்களும், தேவன் தாமே கட்டி எழுப்பிய நகரத்திற்குச் செல்லும் வழிப்போக்கர்களாக இருந்தனர் என்பதை, அவர்கள் (இஸ்ரவேல் மக்கள்) மறப்பதற்கு அனுமதிக்க மாட்டார் (லேவியராகமம் 25:23; 1 நாளாகமம் 29:15; சங்கீதம் 39:12; எபிரெயர் 11:10).

வசனம் 18. இங்கு பாடப்பொருள் 1:15, 17ல் இருந்து தொடர்கிறது. பின்வரும் இரு காரணங்களின் நிமித்தம், கிறிஸ்தவர்கள் உயர் ஒழுக்கமுள்ள தளத்தின்மீது வாழவேண்டியுள்ளது: (1) தேவனுடைய பரிசுத்த தன்மை விசுவாசிகளின் பகுதியில் பரிசுத்த தன்மையைக் கட்டாயப்படுத்துகிறது மற்றும் (2) தேவன் நியாயாதிபதியாக இருக்கிறார். பிதாவாக இருக்கும் தேவன் நியாயாதிபதியாகவும் இருக்கிறார். இப்போது அப்போஸ்தலர், தேவபக்தியுள்ள வாழ்விற்காக மூன்றாவது ஊக்குவித்தலை அறிமுகப்படுத்தினார்: அவர்கள் கிரயத்திற்கு வாங்கப்பட்டிருந்தனர். அவர்கள் மீட்கப்பட்டிருந்தனர். அப்போஸ்தலர், தமது சகோதரர்களும் சகோதரிகளும், தேவனால் வாங்கப்பட்ட மக்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். **அவர்கள் அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படவில்லை என்பதை அறிந்து** பயத்துடன் நடந்துகொள்ள வேண்டி இருந்தது. அவர்களின் மீட்பு கணிசமான செலவினால் வந்திருந்தது. "அறிந்திருக்கிறீர்களே" என்ற எச்சவினை "நீங்கள் அறிந்திருப்பதால்" அல்லது "நீங்கள் அறிந்திருக்கும் காரணத்தினால்" என்ற நுட்பமான வேறுபாட்டைக் கொண்டிருக்கலாம். இவ்விரண்டில் எந்த விஷயத்திலும், பேதுருவின் வாசகர்கள் மீட்கப்பட்ட மக்கள் ஆக்கப்பட்டதற்கு ஏற்றபடி நடந்துகொள்ளும்படி பேதுரு விரும்பினார். சாராம்சத்தில் அவர், "நீங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காகத் தேவன் உங்களைக் கிரயம் கொடுத்து வாங்கினாரோ, அவ்வாறே இருங்கள்" என்று கூறினார்.

சிலுவையின் மீது நடந்தது என்ன என்பதை விசுவாசிகள் புரிந்து கொள்வதில் உதவுவதற்கு, புதிய ஏற்பாடு பல உருவகங்களை அளிக்கிறது. விசுவாசிகளின் ஆத்துமாக்களை மீட்கும் கிரயத்தைச் செலுத்துவதற்காகக் கிறிஸ்து மரித்தார் என்பது அவற்றில் ஒன்றாக உள்ளது.[30] பேதுருவின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு, "மீட்கப்படுதல்" (*lutroomai*) என்பது பொதுவாக, யுத்தக்கைதிகளுக்கு மீட்புக்கிரயம் அல்லது அடிமையை விடுதலையாக்குவதற்கு விலை செலுத்துதல் என்பதைக் குறிப்பிட்டது. "மீட்கப்படுதல்" என்பதற்குப் பேதுரு பயன்படுத்திய கிரேக்க வினைச்சொல், கிறிஸ்தவ வட்டாரத்தில்

கருத்தாகத் தெரிவிக்கும் அதனுடைய அடிக்கடியான பயன்பாடு போன்று புதிய ஏற்பாட்டில் பொதுவாக பயன்படுத்தப்படவில்லை. இந்த வினைச்சொல், லூக்கா 24:21; தீத்து 2:14; 1 பேதுரு 1:18 ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளது. இதன் உறவுப் பெயர்ச்சொற்கள் கூடுதலாக ஐந்து இடங்களில் உள்ளன (மத்தேயு 20:28; மாற்கு 10:45; லூக்கா 1:68; 2:38; எபிரெயர் 9:12). இதேபோன்ற அர்த்தம் கொண்ட வார்த்தைகள், "மீட்கும்பொருள்" அல்லது "மீட்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகளாக வேறிடங்களில் காணப்படுகின்றன (ரோமர் 3:24; 1 கொரிந்தியர் 1:30; எபேசியர் 1:7; கொலோசெயர் 1:14; 1 தீமோத்தேயு 2:6; எபிரெயர் 9:15).

இயேசுதாமே, "மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்று கூறினார் (மத்தேயு 20:28; மாற்கு 10:45). சிலுவை மரணம் அவசியமாயிருந்தது ஏன்? மனிதருடைய பாவங்களுக்கு விலைக்கிரயமாக சிலுவை ஆனது எப்படி? மற்றும் ஆட்டுக்குட்டியானருடைய இரத்தத்தினால் பாவம் அழிக்கப்பட்டது எவ்வாறு? என்பவற்றைத் தேவன் மாத்திரமே அறிகிறார். இரத்தப்பலி செலுத்துதல் என்ற கருத்து, பழங்கால உலகத்தில் ஆராதிப்பவருக்கும் தெய்வத்திற்கும் இடையில் ஒரு இணைப்பைக் கட்டுவித்தது.[31] கிறிஸ்தவர்கள், சிலுவை மீது இயேசுவின் மரணத்தினுடைய தனிச்சிறப்பைப் பற்றித் தியானிக்கையில், அவர்களை வழிநடத்த உதவுகிற முக்கியமான வார்த்தைகளாக, "மீட்பு," "ஒப்புரவு" (2 கொரிந்தியர் 5:19) மற்றும் "கிருபாதாரபலி" (1 யோவான் 2:2) ஆகியவை உள்ளன. "பரிகாரபலி" என்ற வார்த்தைக்கான ஆங்கில மொழிபெயர்ப்புகள், இவ்வார்த்தையைப் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளின் பயன்பாட்டுடன் பொதுவாகச் சுருக்கி வைத்துக் கொண்ட போதிலும், இது ("பரிகாரபலி") கனிசமான தனிச்சிறப்புக்கொண்ட நான்காவது வார்த்தையாக உள்ளது.[32]

கிறிஸ்தவர்கள், **வீணான நடத்தையினின்று** விலைகொடுத்து மீட்கப்பட்டுள்ளனர். பேதுருவின் வாசகர்கள், தேவனுடன் ஒரு எதிர்கால வாழ்விற்காக "மீட்கப்பட்டு" இருத்தலுடன் கூடுதலாக, உலகம் பின்பற்றும் பரிதாபமான வாழ்வு வழியில் இருந்தும் "மீட்கப்பட்டு" இருந்தனர். இது, "வாழ்வின் வழி, நடத்தை, நடக்கை" என்று அர்த்தப்படுகிற *anastrophē*, என்ற வார்த்தையைப் பேதுரு பயன்படுத்தும் இரண்டாவது வேளையாக உள்ளது. இது 1:15ல் பயன்படுத்திய அதே வார்த்தையாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை காணப்படும் பதிமூன்றில் எட்டு இடங்கள் பேதுருவின் நிருபங்களில் காணப்படுகின்றன. பேதுருவுக்கு இவ்வார்த்தை முக்கியமான ஒன்றாக இருந்தது என்பது தெளிவு. தேவனைக் கனப்படுத்துவதற்கும் நித்திய சுதந்தரத்தில் பங்கேற்பதற்கும் மாத்திரம் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமான வாழ்வை வாழவேண்டும் என்பதல்ல, ஆனால் கிறிஸ்தவர்கள் தேவபக்தியுள்ள நடத்தைக்குக் குறைவாக எதையும் காண்பிப்பார்கள் என்றால், அவர்கள் எதிர்கொண்ட சோதனைகள் மிகவும் மோசமாகி விடுமே என்ற அக்கறையும் அங்கு இருந்தது.

பேதுரு குறிப்பிட்ட, ஆசியாவில் இருந்த கிறிஸ்தவர்களின் வீணான வாழ்வு, **முன்னோர்களால் பாரம்பரியமாய்** (அவர்கள்) அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று **பெறப்பட்டிருந்தது**. சிலுவையில் இயேசு,

கிறிஸ்தவர்களை அவர்களின் முந்திய மதிப்பற்ற கைவிடப்பட்ட வாழ்வில் இருந்து மீட்டெடுத்தார். அவர்களின் பிதாக்கள் "வீணான" நடத்தையுடன் வாழ்ந்தனர் என்பது, இந்த நிருபத்தின் (தொடக்க) வாசகர்கள் பெரும்பகுதியும் புறஜாதிகளாக இருந்தனர் என்பதற்கு இன்னொரு சுட்டிக்காண்பித்தலாக உள்ளது. கடந்த காலங்களில் யூதரற்றவர்களாக இருந்த அவர்களின் பிதாக்கள், தேவனுடைய மக்களின் சுதந்தரத்தின் பங்கு எதில் இருந்தும் துண்டிக்கப்பட்டிருந்தனர். ஒரு யூதரோ அல்லது யூதமார்க்கத்தில் அமைந்தவரோகூட, மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழான வாழ்வைப் பற்றி, "வீணாண" வாழ்வின் வழி என்று ஒருக்காலும் பேச மாட்டார்.

வசனம் 19. மக்கள் விலையுயர்ந்தது என்று எதைக் கருதினாலும் சரி, பொன்னோ அல்லது வெள்ளியோ, மனித மதிப்பீடோ, அவர்களின் செல்வம் யாவையுமோகூட, அவர்களைப் பாவத்தின் மோசம்போக்கும் வல்லமையில் இருந்து மீட்க இயலாது. கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் மீட்பு, கிறிஸ்துவின் **விலையேறப்பெற்ற இரத்தத்தை** விலையாகக் கொடுத்து வாங்கப்பட்டது. பொன்னும் வெள்ளியும் அழிந்துபோகக் கூடியவையாக, மாறக்கூடியவையாக இந்த உலகத்தைச் சேர்ந்தவையாக உள்ளன. பொன்னும் வெள்ளியும், அழியாத, மாசற்ற, வாடாத சுதந்தரத்தை அளிக்க இயலாது (1:4). கிறிஸ்துவின் இரத்தம் அழியாததாக உள்ளது, அதில் அவர் செலுத்திய மீட்பின் கிரயம், மனிதர் செய்யும் எந்த விஷயத்தினாலும் மோசம் போக்கப்படவோ, நீர்த்துப்போகப்படவோ அல்லது ஒன்றுமற்றதாக்கப்படவோ முடியாது. மீட்பிற்குச் செலுத்தப்பட்ட விலையினால் அதன் மாபெரும் தன்மையை அளிப்பதால், கிறிஸ்தவர்கள் தேவபக்தியுள்ள வாழ்வை வாழ வல்லமை நிறைந்த ஊக்குவிப்பைக் கொண்டுள்ளனர்.

மோசேயின் நியாயப்பிரமாணம் மற்றும் சிலுவையில் இயேசுவின் மரணம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட இரத்தப்பலிசெலுத்துதல்களுக்கு இடையில் ஒரு நேரடியான உறவு இருந்தது என்று பேதுரு நம்பினார். யூதர்கள் மற்றும் ரோமர்கள் ஆகியோர், தாங்கள் தாம் மக்கள் இனத்தின் பிரதிநிதியாக இருந்தது போன்று செய்த கூட்டுச்சதியினால் இயேசு கொலை செய்யப்பட்ட போது, அவர் **குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி** போல் இருந்தார். பேதுரு இவ்விடத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியைக் குறிப்பாகத் தமது சிந்தையில் கொண்டிருந்தாரா? இதற்குப் பதிலானது எவ்வகையிலும் நிச்சயமற்றதாக உள்ளது. முதலாவது, யாத்திராகமம் 12ம் அதிகாரத்தில் பஸ்காவைக் கடைப்பிடித்தல் பற்றிய அறிவுறுத்தல்களை ஒருவர் வாசிக்கும்போது, மீட்பு என்பது அவரது சிந்தையில் தோன்றும் முதலாவதுவிஷயமாக இருப்பதில்லை. ஆட்டுக்குட்டியைக் கொன்று புசித்தல் என்பது, இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் தங்களைத் தேர்ந்து கொண்டு எகிப்தில் இருந்து விடுவித்தார் என்பதை நினைவூட்டும் இந்த விடுதலை, ஆட்டுக்குட்டியானவரால் செலுத்தப்பட்ட மீட்பின் விலையுடன் எந்த உறவையும் கொண்டிருப்பதில்லை என்பதாகக் காணப்படுகிறது. ஆட்டுக்குட்டி பழுதற்றதாக இருக்க வேண்டும் என்பது உண்மையே (யாத்திராகமம் 12:5), ஆனால் பழுதற்ற ஆட்டுக்குட்டிகளைப் பலியாகச் செலுத்துதல் என்பது பலிசெலுத்தும் சடங்குகளின் பகுதியாக இருந்ததே தவிர, பஸ்காவைப்

பொறுத்த மட்டில் எதுவும் செய்வதாக இருக்க வில்லை (எண்ணாகமம் 28:3, 9, 11).

இரண்டாவது, பஸ்காவுக்குக் குறிப்பிட்ட ஒரு ஆட்டுக்குட்டி தேவைப்படவில்லை. பலிப்பொருள் என்பது மந்தையில் உள்ள மிருகங்களில் சிறியவற்றில் ஒன்றாக இருக்க வேண்டியிருந்தது, அது வெள்ளாட்டுக் குட்டியாக அல்லது செம்மறி ஆட்டுகுட்டியாக இருக்கலாம். மூன்றாவது, பேதுருவின் வாசகர்கள் ஒழுக்கரீதியாக நேர்மையான வாழ்வை வாழ வேண்டும் என்பது பேதுருவின் அக்கறையாக இருந்தது (1:14, 15). கிறிஸ்துவின் மாசற்ற மற்றும் குற்றமற்ற வாழ்வானது கிறிஸ்தவ நடக்கைக்கு ஒரு மாதிரி என்ற வகையில் முக்கியமானதாக இருந்தது. பழைய ஏற்பாட்டு பலிகளில் செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டிகளின் மீதல்ல, ஆனால் இயேசுவின் பண்பின்மீதே பேதுருவின் அக்கறை இருந்தது. நான்காவது, வெள்ளாட்டுக்குட்டி என்ற உருவகம், பஸ்கா சடங்கில் அல்ல, மாறாக ஏசாயா 53ல் பயன்படுத்தப்பட்டதால், அந்த உருவகத்தைப் பேதுருவும் பயன்படுத்தினார் என்பதாகக் காணப்படுகிறது. அவர் ஏசாயா 53ம் அதிகாரத்தின் வார்த்தை அமைப்பை, 1 பேதுரு 1:22-25ல் மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார்.

மேலே பட்டியலிடப்பட்டுள்ள காரணங்களுக்காக, பஸ்கா ஆட்டுக்குட்டியானது பரிசுத்த வாழ்விற்கான பேதுருவின் புத்தி கூறுதலுடன் நேரடித் தொடர்பு கொண்டிருப்பதில்லை என்று கூறலாம். மற்றும், "ஆட்டுக்குட்டி" என்பதில் இருந்து "பஸ்கா" என்பதற்கு நாம் கடந்து செல்லுகையில், அது கிறிஸ்துவுக்கான குறிப்பாக உள்ளது என்றறிந்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு குறிப்படையாளமாக இது உள்ளது (யோவான் 1:29; வெளிப்படுத்தின விசேஷம் 5:6 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பலமுறைகள்). இயேசுவை "நமது பஸ்கா" என்று பவுல் குறிப்பிட்டார் என்பது உண்மையே (1 கொரிந்தியர் 5:7), ஆனால் ஆட்டுக்குட்டிக்கு அங்கு குறிப்பு எதுவும் இருப்பதில்லை. (சில மொழிபெயர்ப்புகள், உதாரணமாக NRSV மற்றும் NIV வேதாகமங்கள், இவ்வார்த்தையைத் தேவையின்றி உட்செருகுகின்றன.) உண்மையில் பவுல், இயேசுவை எந்த இடத்திலும் ஆட்டுக்குட்டி என்று குறிப்பிடவில்லை. இயேசு மற்றும் பஸ்கா ஆட்டுக்குட்டி ஆகியோருக்கு இடையில் தெளிவான இணைவு, யோவான் 19:36ல் மாத்திரமே காணப்படுகிறது, அங்கு அப்போஸ்தலர் யாத்திராகமம் 12:46ஐ மேற்கோள் காண்பித்தார், அதில் இயேசுவின் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படவில்லை என்பது நிறைவேற்றம் அடைந்தது. பஸ்கா ஆட்டுக்குட்டியின் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படக்கூடாது. அத்துடனும்கூட, பஸ்கா ஆட்டுகுட்டியை அதன் உவமைத்தொடர்பான எல்லாக் குறிப்புகளுடனும், ஆட்டுக்குட்டி என்ற வகையில் இயேசுவைக் குறிப்பதாகப் பயன்படுத்துதல் என்பது நிச்சயமற்றதாக உள்ளது.

வசனம் 20. *பேதுரு தமது குறிப்பைக் கொண்டு தேவனுடைய முன்னறிவை (1:2) தெளிவாக்குகையில், கிறிஸ்து மற்றும் அவரது சபை நிலைநாட்டப்படுதல் ஆகியவற்றைச் சுற்றிலும் நிகழ்ந்த எல்லா நிகழ்வுகளும் தேவனுடைய பிந்திய சிந்தனையாக இருக்கவில்லை; அது எதிர்பாராத திட்டமாக இருக்கவில்லை.* ***இயேசு உலகத்தோற்றத்திற்கு முன்னே***

குறிக்கப்பட்டவராயிருந்தார் என்று அப்போஸ்தலர் கூறினார். பேதுரு உறுதிப்படுத்தியபடி, இயேசுவின் நபர்த்துவம் என்பதேகூட தேவனுடைய முன்னறிவாக இருக்கையில் இயேசுவுடன் கூட, தேவனுடைய மீட்பின் செயல்பாடுகள் பற்றி முன்னறிவும் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டன என்று கூறுதல் அநேகமாகப் பாதுகாப்பானதாக இருக்கலாம். "இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வரவேண்டும் என்பது மாத்திரம் அல்ல, ஆனால் அவர் ஒரு குறிப்பிட்ட பணிப்பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதும் நித்திய காலமாக முடிவுசெய்யப்பட்டிருந்தது."[33] இருப்பினும் அந்த சலுகையுடன்கூட, தேவன் கிறிஸ்துவுக்குள் மனிதகுல மீட்பிற்காகத் திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளார் என்ற உறுதிப்பாட்டுக்கு, தேவன் முன்னறிந்துள்ளார், ஒவ்வொரு நபருடைய தனிப்பட்ட அடைவிடம் பற்றியும் மிகக்குறைவாகவே முன்தீர்மானித்தார் என்ற முடிவுக்குக் கடந்து செல்லுதல் என்பது கணிசமான தாவலாக உள்ளது. கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் மீட்பு நித்திய விளைவு உடையதாக உள்ளது என்பதே கிறிஸ்தவர்களுக்கு உறுதிப்பாடாக உள்ளது. தமது இரத்தத்தைச் சிந்திய இயேசு, முடிவற்ற காலத்திற்கு தேவனுடன் நிலைத்திருக்கிறார். "உலகத்தோற்றத்திற்கு முன்னே" என்பது புதிய ஏற்பாட்டில் வழக்கமாக உள்ளது போன்று, உலகம் படைக்கப்பட்டதைச் சமானப்படுத்துகிறது (மத்தேயு 25:34; யோவான் 17:24; எபேசியர் 1:4; எபிரெயர் 4:3).

இந்த நித்திய இயேசுதாம், உலகத்தோற்றம் முதல் முன்னறியப்பட்டிருந்தார், **இவர் உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்.** இந்த வெளிச்சத்தில்தான், விசுவாசிகள் தாங்கள் சகித்த சோதனைகளைப் பற்றிக் கருத்துணர்வை ஏற்படுத்த முடிந்தது. உபத்திரவம் என்பது தேவன் அவர்களை மறந்துவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டுதலாக இருக்கவில்லை. அவர்கள் அவருக்கான மக்களாக இருக்கத் தேர்ந்துகொள்வதற்குத் தேவனுடைய நித்திய திட்டத்தில் பங்கு பெற்று இருந்தனர். இயேசுவின் வருகை "உங்களுக்காக" இருந்தது. "கடைசிக் காலங்களில்" என்பவை கிறிஸ்தவர்கள் வாழும் காலங்களாக உள்ளன. கிறிஸ்துவின் தரிசனத்தைக்கொண்டு தேவன் தீர்மானமாகச் செயல்பட்டிருந்தார். மனித மீட்பைப் பொறுத்த மட்டில், தேவன் செய்யாமல் விட்டு வைத்த திட்டம் என்று வேறு எதுவும் இல்லை. பேதுருவும் அவரது வாசகர்களும் கடைசி காலங்களில் வாழ்ந்தனர், மற்றும் இருபத்தியோராம் நூற்றாண்டில் வாழும் கிறிஸ்தவர்களாகிய நாமும் கடைசி காலங்களில் வாழ்கிறோம், மற்றும் மனிதகுலத்தின் வாழ்வு இந்தப் பூமி என்ற கோளில் நீடித்து இருக்கும் நாட்கள் யாவும் கடைசி காலங்களாகவே இருக்கும்.

இது கடைசி காலங்களாக இருக்கும் காரணத்தினால், கர்த்தரின் மறுவருகை, நியாயத்தீர்ப்பு மற்றும் நித்தியம் ஆகியவை எந்த வேளையிலும் திடீரெனத் தோன்றலாம் என்று விசுவாசிகள் எதிர்பார்க்கலாம். "கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று" பவுல் எழுதியபோது (2 தீமோத்தேயு 3:1), அவர் தமது சொந்த நாட்களைப் பற்றி எழுதினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "இந்தக் கடைசி நாட்களில்" தேவன் தமது குமாரன் மூலமாகத் திருவுளம் பற்றினார் என்று உறுதிப்படுத்தினார் (எபிரெயர் 1:2), அவர் தாம் வாழ்ந்தபோது இருந்த நாட்கள் பற்றி எழுதினார்.

பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் பற்றிப் பவுல், "உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும் படி எழுதப்பட்டும் இருக்கிறது" என்று கூறினார் (1 கொரிந்தியர் 10:11). இதை எதிர்மறையாக உரைப்பதென்றால், புதிய ஏற்பாட்டில் "கடைசி காலங்கள்" அல்லது "கடைசி நாட்கள்" என்பதை நாம், கர்த்தருடைய தரிசனத்திற்கு முற்பட்ட வெளிப்படுத்துதலின் காலம் ஒன்றைக் குறிப்பதாகப் புரிந்துகொள்ளக் கூடாது. ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சி, பரவசநிலை மற்றும் இதைப்போன்ற கண்டுபிடிப்புகள் பற்றிய மறைமுகமாக குறிப்புகள் எதுவும் இருப்பதில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் கடைசி நாட்களில் வாழ்கிறோம், கடைசி நாட்கள் நிறைவேறும்போது, தேவனுடைய சித்தப்படி கர்த்தர் மறுபடியும் வருவார். நியாயத்தீர்ப்பும் நித்தியமும் தொடரும்.

வசனம் 21. இயேசு "உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்" என்று 20ம் வசனத்தில் பேதுரு கூறியிருந்தார், தெளிவுபடுத்தும் தேவை ஒன்று உள்ளது. யாருக்காக இயேசு வெளிப்பட்டார்? **தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக** என்று அப்போஸ்தலர் கூறினார். தேவன் அளித்துள்ள இரட்சிப்பு தனிப்பட்ட நபருக்குரியதாக உள்ளது. யாரோ ஒரு மக்களுக்காக அல்ல, ஆனால் "விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக" அதாவது பேதுருவின் வார்த்தைகளை வாசிப்பவர்களுக்காக, இயேசு கிறிஸ்து நபர்த்துவத்தில் வந்தார். NASB வேதாகமம் "விசுவாசிகள்" என்று மொழிபெயர்க்கும்போது, கிரேக்க வசனத்திற்கு உண்மையுள்ளதாக இருக்கிறது, ஆனால் புதிய ஏற்பாட்டில் விசுவாசம் என்ற வார்த்தை நம்பிக்கை வைத்தலை அணுகுதலின் கருத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. REB வேதாகமம் இதை, "அவர்மூலமாக நீங்கள் தேவனிடத்தில் நம்பிக்கை வைக்க வந்திருக்கிறீர்கள்" என்று மொழிபெயர்க்கிறது. அவர்கள் தேவன்மீது விசுவாசம் கொண்டனர், ஆனால் பிதாவை இயேசு வெளிப்படுத்தியிருந்ததால் அவர்கள் அந்த விசுவாசம் கொண்டிருந்தனர், எனவே ஆசிய கிறிஸ்தவர்கள் விசுவாசிகள் ஆனது "அவர் (இயேசு) மூலமாகவே" என்பதாக இருந்தது. இந்தக் கூற்றும் யோவான். 14:1, 6ம், ஒரே சிந்தனையுள்ள உலகில் இருந்து வந்தன என்பது தெளிவு.[34] நசரேயனாகிய இயேசுவின் மூலமாகவே தேவன்மீது விசுவாசம் உண்டாகிகிறது, ஏனெனில் (1) கடந்த காலத்தில் எந்தத் தீர்க்கதரிசியும் அல்லது ஞானியும் செய்திராத வகையில், இயேசு பிதாவை அறியச் செய்தார் (யோவான் 7:28, 29; 15:15). (2) மனிதர்கள் தேவனுடன் ஐக்கியம் கொண்டிருக்கும்படி, பாவத்தின் தடையை இயேசு நீக்கினார் (ரோமர் 5:1; 1 யோவான் 1:7). (3) இந்த நிகழ் காலத்தில்கூட, இயேசு தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் பரிந்து பேசுகிறார் (1 தீமோத்தேயு 2:5; எபிரெயர் 7:25).

அப்போஸ்தவர் ஏற்கனவே, இயேசுவின் மரணத்தை அர்த்தப்படுத்தும் வகையில் அவரது இரத்தம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். இந்த இடத்தில் அவர், கிறிஸ்துவின் மரணத்தை அறிவிக்கும் செய்தி தோல்வியின் வெற்றியல்ல ஆனால் வெற்றியின் செய்தியென்றும், மரணத்தின் செய்தியல்ல ஆனால் ஜீவனின் செய்தி என்றும் தெளிவாக்கினார். **தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்.** இயேசு "பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து

உயிர்த்தெழுந்ததினாலே பலமாய்ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்" (ரோமர் 1:5) என்று உறுதிப்படுத்திப் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தைத் தொடங்கினார். அவர் விசுவாசத்தின் அடிப்படை அறிக்கையை முன் அமைத்தார், இதை நாம் கிறிஸ்தவத்தின் மார்க்கக் கொள்கை என்றுகூடக் கூறலாம்: "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார்" (1 கொரிந்தியர் 15:3, 4). இயேசு மரித்து அதன் பின்பு தேவனுடைய வல்லமையினால் உயிர்ப்பிக்கப்பட்டு, மனிதர்கள் மத்தியில் மீண்டும் தோன்றினார் என்பதே, கிறிஸ்தவர்கள் தேவன்மீது கொண்டுள்ள விசுவாசத்திற்கும் நித்திய வாழ்வு கிடைக்கும் என்று ஆவலுடன் நம்பியிருப்பதற்குமான கருப்பொருள் ஆகும். இயேசுவின் உயிர்த்தெழுதல் அல்லது அவர் இப்போது அமர்ந்து ஆளுகை செய்யும் இடமான தேவனுடைய வலது பாரிசத்திற்கு அவர் உயர்த்தப்பட்டமை என்பதே அவருக்குத் தேவன் கொடுத்த "மகிமை" யாக உள்ளது (நடபடிகள் 2:33; ரோமர் 8:34; 1 கொரிந்தியர் 15:25). இயேசு அனுபவித்த மகிமை என்பது அவரைப் பின்பற்றுவோர் அவருடன் பகிர்ந்துகொள்ளும் மகிமையாக உள்ளது (1:8, 11).

உங்கள் விசுவாசம் மற்றும் நீங்கள் தேவனுக்குள் இருக்கிறீர்கள் என்ற உங்கள் நம்பிக்கை ஆகியவையே, விசுவாசிகள் நிமித்தம் இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் செய்திருந்த எல்லா செயல்களின் விளைவாக உள்ளது. "விசுவாசம்" மற்றும் "நம்பிக்கை" என்ற வார்த்தைகள் அர்த்தத்தில் ஒன்றுபோல் உள்ளன, அதிலும் "விசுவாசம்" என்பது நம்பிக்கை வைத்தலாகப் புரிந்துகொள்ளப்படும் போது இவ்விரு வார்த்தைகளும் ஒரே அர்த்தம் உடையவையாகத் தோன்றுகின்றன, இருப்பினும் இவை ஒவ்வொன்றும் தமது சொந்த வட்டாரத்தைக் கொண்டுள்ளன. "விசுவாசம்" என்பது கிறிஸ்தவர்கள் வாழும் தற்போதய சூழ்நிலைகளில் அவர்களின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் விசுவாசத்தினாலே தேவனால் காக்கப்பட்டுள்ளனர் என்று முன்னதாகக் குறிப்பிட்ட பேதுரு, "அவரை நீங்கள் காணாமலிருந்தும்" என்றும் கூடுதலாக அவ்விடத்தில் கூறினார் (1:5, 8). "விசுவாசம்" என்பது தேவன் மீது நம்பிக்கை வைத்தலை, அனுபவரீதியான சாட்சியம் இல்லாத நிலையிலும் அவரைச் சார்ந்திருத்தலை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. இதற்கு மறுபுறத்தில், "நம்பிக்கை" என்பது எதிர்காலம் சார்ந்ததாக உள்ளது. கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களை ஏற்கனவே உரித்தாக்கிய நிலையில், ஜீவனுள்ள ஒரு நம்பிக்கை (1:3) எதிர்காலத்தை நோக்கியும் விசுவாசிகளுக்குத் தேவன் வைத்துள்ள நித்திய சுதந்தரத்தை நோக்கியும் நீட்டிக்கப்படுகிறது.

அழிவில்லாத வித்தினாலே ஜெநிப்பிக்கப்பட்டிருத்தல் *(1:22-25)*

[22]ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே

ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்; [23]அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.

> **[24]மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. [25]கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே.**

கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கம் பற்றி அப்போஸ்தலர் இரண்டாம் முறையாகக் குறிப்பிட்டார் (1:3, 23). "நீங்கள் ... மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்று அவர் கூறினார். மக்களின் பாவங்களைத் தேவன் மன்னித்து, தமக்குச் சொந்தமானவர்களாக அவர்களை எண்ணும்போது, தேவன் அவர்களுக்குள் ஏற்படுத்தியதைச் சிந்தித்துப் பார்த்தல், கிறிஸ்தவர்களின் வாழ்விற்கு அவசியமாக உள்ளது.

வசனம் 22. *மூன்றாவது முறையாகப் பேதுரு, தமது வாசகர்களின்* ***கீழ்ப்படிதல்*** *பற்றிக் குறிப்பிட்டார் (1:2, 14, 15, 22); கீழ்ப்படிதலும் பரிசுத்தமாகுதலும் ஒரே துணித்துண்டாக இருத்தல் மூன்றாம் முறையாக உறுதியாயிற்று.* ***சுத்தமாக்கிக்கொள்ளுதல்*** *என்பது கிரேக்க மொழியில், முழுமை பெற்ற எச்சவினைச் சொல்லாக உள்ளது ....* ***யிருக்கிறபடியால்,*** *என்ற தனிச்சலுகையோ அல்லது "இருக்கும் காரணத்தால்" என்ற காரணகாரிய விளைவோ, எச்சவினையின் வலிவாக இருக்கலாம். தனிச்சலுகையின் வலிவையே NASB வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் விரும்பித் தேர்ந்தனர்: "சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால்." 1:2, 3 மற்றும் 1:22 ஆகிய இரு வசனப் பகுதிகளிலும், கீழ்ப்படிதலும் பரிசுத்தமாகுதலும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதலின் நினைவூட்டுதலுக்கு வழிநடத்துதல் என்பது தற்செயலானதாக இருத்தல் மிகவும் அரிது.* ***சத்தியம்*** *என்பது அங்கீகரிக்கப்பட வேண்டிய முன்மொழிதல்களைக் காட்டிலும் மேலானதாக உள்ளது. சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமாக உள்ளது. பேதுருவின் வாசகர்கள் கீழ்ப்படிந்திருந்த சத்தியம் என்பது கருத்துப்பொருளாக மாத்திரம் இருந்த சத்தியமல்ல. குறிப்பாக அவர்கள் சுவிசேஷ சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தனர்; அவர்கள், தங்களுக்காக இயேசு மரித்திருந்தார் என்ற சத்தியத்தை விசுவாசித்திருந்தனர், மற்றும் அவர்கள் அந்த சத்தியத்தில் உள்ளாக மறைந்திருந்த கட்டளைக்குப் பதில் செயல் செய்தனர். அவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்திருந்த அதே வேளையில் புதிதாய்ப்பிறந்தவர்களாகவும் தேவனுடைய இராஜ்யத்திற்கென்று பரிசுத்தப் படுத்தப் பட்டவர்களாகவும் இருந்தனர். பேதுருவைப் பற்றி, ரெய்மன்ட் C. கெல்சி அவர்கள் "அவரது வாசகர்கள், பணிவிணக்கமான கீழ்ப்படிதலில் சுவிசேஷத்திற்குப் பதில் செயல் செய்தவேளையாக, சத்தியத்தின் கேட்புகளுக்கு அவர்கள் இணங்கிய வேளையை அவர் பின்னோக்கிக் கவனித்தார்"[35] என்று எழுதினார்.*

கிரேக்க முற்றுவினைச்சொல், கடந்த காலத்தில் தொடங்கி தற்போது

வரையில் விளைவுகளைக் கொண்டுள்ள ஒரே செயலைக் குறிக்கிறது. பேதுரு தமது வாசகர்களுக்கு, "உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால்" என்று கூறினார். முற்று வினைச் சொல்லின்பயன்பாடு மூலமாக அப்போஸ்தலர், தமது வாசகர்களை அவர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருந்த காலத்தைப் பின்னோக்கிக் கவனிக்கக் காரணமானார். பல ஆண்டுகளுக்கு முன்பு பேதுரு, எருசலேமில் மாபெரும் மக்கள் கூட்டத்தினரை நோக்கி, அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்பிக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறியிருந்தார் (2:38). ஏறக்குறைய மூவாயிரம் பேர் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தபோது, அவர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டனர் என்றும் அவர்களின் ஆத்துமாக்கள் தூய்மையாக்கப்பட்டன என்றும் பேதுரு அறிவித்தார். மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் என்பதைப் பவுல், "மறுஜென்ம முழுக்கு" அதாவது ஒரு புதிய பிறப்பு என்று குறிப்பிட்டார் (தீத்து 3:5). புதிய பிறப்பு என்பது, தண்ணீருக்குள் ஞானஸ்நான அடக்கம் பண்ணப்படுதல் என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகிறது, ஆனால் தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுதல் இன்றி புதிய பிறப்பு எதுவும் இல்லை. இந்த நிருபத்தை தொடக்கத்தில் வாசித்தவர்கள், சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்ததன் மூலம் தங்கள் ஆத்துமாக்களைத் தூய்மைப்படுத்தியிருந்தால், அப்போஸ்தலர் தமது வாசகர்களை, மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட மக்களைப் போன்று நடந்துகொள்ளும்படி வேண்டிக் கொண்டார்.

கிறிஸ்தவர்கள் **மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, [தங்கள்] ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்** கொண்டவர்களாயிருக்கிறபடியால் **சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூரும்படி** அவர்களைப் பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டார். கெல்லி அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> எழுத்தாளர், புறதெய்வ வணக்க வாழ்வில் வழிக்கு எதிரானது என்ற வகையில், ஜீவனுக்குரிய வழியைக் கிறிஸ்தவர்களுக்கு விளக்கப்படுத்துதல் என்ற தமது பணிப்பொறுப்பில் இருந்து விலகிச் சென்றிருப்பதாகக் காணப்படலாம் (1:15, 17, 18). இப்போது அவர் அதற்கு மறுபடியும் திரும்புகிறார், இங்கு அவர், பரிசுத்தம் மற்றும் தேவபயம் ஆகியவற்றுடன் சகோதர இரக்கத்தையும் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்களின் அடையாளம் என்ற வகையில் கூடுதலாகக் கூறுகிறார்.[36]

ஒருவரின் ஆத்துமாவைத் தூய்மையாக்குதல் என்பது, ஒருவர் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுதல் என்பதைவிட அதிகமானதாக இருப்பதில்லை. கண்டிப்பாய்ப் பேசுவதென்றால், பேதுருவின் வாசகர்கள், தங்களைத் தூய்மைப்படுத்தி இருக்கவில்லை; மாறாக இயேசு "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி (என்ற வகையில்) விலையேறப்பெற்ற இரத்தத்தைச்" சிந்தி மீட்டிருந்ததால் (1:19), தேவனே அவர்களைத் தூய்மையாக்கியிருந்தார். (இருப்பினும்) இன்னமும், சத்தியத்திற்குக் கீழ்ப்படிதல் பற்றி முடிவெடுத்தல் என்பதை அவர்களே செய்ய வேண்டியிருந்தது, பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கித்த பின்பு, "இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை

இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்திசொன்னான்" என்று லூக்கா பதிவுசெய்தார் (நடபடிகள் 2:40).[37] விசுவாசிகளின் கீழ்ப்படிதல் உள்ள பதில் செயல், பாவமன்னிப்பை விளைவித்த பயன்விளைவுள்ள செயலாக உள்ளது.

பேதுரு தமது வாசகர்களுக்கு, அவர்கள் சுவிசேஷ செய்தியின் கட்டளைக்குப் பதில் செயல் செய்திருந்தபோது - அவர்கள் விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றிருந்தபோது - ஒருவர் மற்றவரிடம் "அன்பை" அவர்கள் பகிரிந்து கொண்டதைக் காட்டிலும் அதிகம் அடிப்படையான சட்டம் எதையும் கொண்டிராத மக்களின் ஐக்கியத்தை அதி கம் அடிப்படையான சட்டம் எதையும் கொண்டிராத மக்களின் ஐக்கியத்தை அவர்கள் தழுவிக்கொண்டிருந்ததை நினைவூட்டினார். பவுலைப் போன்று (1 கொரிந்தியர் 13:13; 1 தெசலோனிக்கேயர் 1:3). பேதுருவும் "விசுவாசம்," "நம்பிக்கை" (1:21) மற்றும் "அன்பு" ஆகியவற்றை, கிறிஸ்தவ வாழ்வு வெளிப்பாய்ந்து வரும் உள்ளான சக்திகள் என்ற வகையில் அவற்றை முன் அமைத்தார் விசுவாசிகளுக்கு மத்தியிலான அவர்களின் நடக்கைக்கு, ஒருவர் ம ற்றவரை மதித்தல், கனப்படுத்துதல் மற்றும் கவனித்துக் கொள்ளுதல் என்பதைக் காட்டிலும் அதிக முக்கியமான சட்டம் வேறு எதுவும் இருப்பதில்லை. இயேசு, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்று கூறியிருந்தார் (யோவான் 13:35). யோவான் கூடுதலாக, "நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதை நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது" என்று கூறினார் (1 யோவான் 3:11).

Philadelphia என்பதே "சகோதர அன்பு" என்பதற்குப் பேதுரு பயன்படுத்திய வார்த்தையாகும், இவ்வார்த்தையின் உச்சரிப்புப் போன்ற பெயரைக் கொண்டுள்ள ஒரு நகரம், அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ளது. 3:8ல் இந்த வார்த்தையை அவர் திரும்பவும் பயன்படுத்தினார். சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்திருத்தல், தங்கள் ஆத்துமாவைத் தூய்மைப்படுத்தியிருத்தல் என்பது, சகோதர சகோதரிகளான எல்லாரும் சமமானவர்களாக உள்ள ஒரு சமூகத்தைக் தழுவிக்கொண்டிருக்கும் அதே வேளையில் இருக்க வேண்டியவையாகும். மனிதகுலத்தின்மீது இயேசு கொண்டிருக்கும் அதே வேளையில் இருக்க வேண்டியவையாகும். மனிதகுலத்தின்மீது இயேசு கொண்டிருக்கும் அன்பினால் அவர் மனித உருவெடுத்தார் (யோவான் 3:16). கிறிஸ்துவின் சீஷர்கள், ஒரு கருத்தமைவில், கர்த்தருடைய உதாரணத்தைப் பின்பற்றி மனிதகுலம் முழுவதையும் நேசிக்க வேண்டும். இன்னமும், விசுவாசிகளின் குடும்பத்திற்குள் இருக்கும் அன்பு பிணைப்பு என்பது, எல்லார் மீதும் உணரப்பட்ட அன்பின் வலிவாக்கமாக அல்லது ஒருமுகக் குவிப்பாக உள்ளது (கலாத்தியர் 6:10). பேதுருவின் சிந்தனை பின்வருமாறு இருந்தது. உங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பகிர்ந்து கொள்பவர்கள்மீது உண்மையான அன்புகூர வேண்டும் என்று உங்களைப் பொறுப்பேற்கச் செய்யும் ஒரு செய்திக்கு நீங்கள் கீழ்ப்படிந்திருப்பதால், நீங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பததற்காகத் தேர்ந்துகொள்ளப் பட்டீர்களோ, அவ்வோறே இருங்கள் மற்றும் உங்கள் இருதயத்தில் இருந்து ஒருவர் மற்றவர் மீது ஊக்கமான அன்புகூருங்கள்.

அன்பு பற்றிய அப்போஸ்தலரின் இரண்டாவது குறிப்பில் அவர்

agapao என்ற வினைச்சொல்லிற்குக் கடந்து சென்றதில் குறிப்பான தனிச்சிறப்பு எதுவும் இல்லை. "பேதுரு, சகோதர சிநேகத்தையும் ஒருவர் மற்றவர்மீது காண்பிக்கும் அன்பையும் சமமான சொல்விளக்கங்களாகப் புரிந்து கொண்டார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை."[38] அவர் தமது வாசகர்களை, சத்தியத்திற்கு அவர்கள் கீழ்ப்படிந்தபோது தேவன் அவர்களை ஆக்கியிருந்தபடி, தூய்மையாக்கப்பட்ட பரிசுத்தவான்களாக இருக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டார். "ஊக்கமாய்" என்ற வார்த்தை பேதுருவின் கட்டளையில் சேர்க்கப்பட்ட தனிச்சிறப்பான கூடுதல் வார்த்தையாக உள்ளது. கிரேக்க மொழியில் இவ்வார்த்தை, வலிவைக் கூட்டும்படி வாக்கியத்தின் கடைசிப்பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. விசுவாசிகள் ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள அன்பு, நிலையானதாக, நீர்த்துப்போகாததாக, வெளிக்காண்பிக்க ஆவர் உள்ளதாக இருக்க வேண்டும். இரண்டாம் நூற்றாண்டில் இருந்த, தவறான வழியில் சென்ற புறதெய்வ வணக்கக்காரர்கள், கிறிஸ்துவின் பெயரை அணிந்துகொண்டிருந்த சகோதரத்துவ சமூகம் பற்றி அறிந்திருந்தனர், கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவர்மீது கொண்டிருந்த சுயதியாகமான அர்ப்பணித்தல் பற்றி, அவர்கள் சிலவேளைகளில் வஞ்சப்புகழ்ச்சியாகப் பாராட்டினர். பிற்பாடு பேதுரு, தமது நிருபத்தை விவரித்துரைக்கையில் (2:17; 5:9) சகோதரத்துவம் பற்றிய கருத்திற்குத் திரும்பி வந்தார்.

வசனம் 23. முந்திய வசனத்தில் பேதுரு, தமது வாசகர்கள் பரிசுத்தமாக்கப்படுதலை விவரிக்க முற்றுவினைச்சொல்லைப் பயன்படுத்தியிருந்தார். இங்கு அவர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டதை விவரிக்க முற்று வினைச்சொல்லை அவர் திரும்பவும் பயன்படுத்தினார். **அழிவுள்ள வித்தினாலே அல்ல, ... அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.** அவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தமை மற்றும் அவர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் ஆகிய இரண்டும், ஒருவர் மற்றவர் மீது உண்மையான அன்புகூருதலை விளைவிக்க வேண்டியிருந்தது. சத்தியத்திற்குக் கீழ்ப்படிதல், பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் ஆகியவை தனித்து நிற்கும் கருத்துக்கள் அல்ல. ஒவ்வொரு வார்த்தையும் மற்ற இரண்டு வார்த்தைகளையும் மறைமுகமாக உணர்த்துகின்றது. முன்னதாக அப்போஸ்தலர், ஜீவனுள்ள நம்பிக்கைக்குக் கிறிஸ்தவர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளனர் என்று கூறியிருந்தார் (1:4). இங்கு, அவர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருந்ததை **என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்துடன்** அவர் பிணைத்தார்.

மறுபடி பிறத்தல் பற்றி நிக்கொதேமுவுடன் இயேசு பேசியபோது, அவர் புதிய பிறப்பை, ஞானஸ்நானத்துடனும் ("தண்ணீரினால் பிறத்தல்"; யோவான் 3:5) பரிசுத்த ஆவியானவருடனும் பாதுகாப்பாகப் பிணைத்தார். (புதிய பிறப்பு பற்றிய விஷயங்களுக்கு 1:3ன் மீதான விளக்கங்களைக் காணவும்.) 1:3ல், புதிய பிறப்பு என்பது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மூலமானதாக இருந்தது. இங்கு அது, தேவனுடைய வல்லமையினால் இயேசு உயிர்ப்பிக்கப்பட்டிருந்தார் என்ற செய்தியாகிய, அழியாத வசனத்தின் மூலமானதாக உள்ளது. வசனத்துடன் சமானப்படுத்தப்படாதிருக்க வேண்டும் என்று இருக்கையில், ஆவியானவர்

வசனத்தினுள்ளும் வசனத்தின் மூலமாகவும் செயல்படுகிறார். நல்வாய்ப்பு கருத்தொன்றில் இருந்து காணுகையில், அவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டிருந்த சுவிசேஷமே வசனமாக இருந்தது (1:12). இன்னொரு கருத்தில் காணுகையில், அது பரிசுத்த ஆவியானவரின் அசைவாடும் வல்லமையாக இருந்தது. வசனத்தின் உருவாக்கும் வல்லமை பழைய ஏற்பாட்டு வாசகர்கள் நன்கு அறிந்த விஷயமாயிருந்தது. தேவனால் பேசப்பட்ட வசனத்தின் மூலமாக, உலகம் நிலவத் தொடங்கிற்று (ஆதியாகமம் 1:3), மற்றும் அதன் மூலமாகவே மனிதர்களின் விஷயங்களைத் தேவன் ஆளுகைசெய்தார் (சங்கீதம் 33:9). ஆவியானவரால் ஏவப்பட்ட வசனத்தின் மூலமாக, கிறிஸ்தவர்கள் மறுபடியும் பிறக்கின்றனர். வேதவாக்கியங்கள் தமக்குள்ளாகவே ஜீவனுள்ள தன்மையைக் கொண்டிருப்பதைப் பேதுரு புரிந்து கொண்டார், அவற்றை ஏவுகிறவரும் ஆளுகிறவருமான ஆவியானவர் ஜீவனுள்ளவராக இருப்பதால், அவ்வசனங்களும் ஜீவனுள்ளவையாக இருக்கின்றன. வசனம் ஜீவனுள்ளதாக இருப்பது மட்டுமின்றி, அது தொடர்ந்து ஜீவனுள்ளதாக இருக்கும். அது என்றென்றைக்கும் நிற்கிறது.

வசனம் பேசப்பட்டதாகவோ அல்லது எழுதப்பட்டதாகவோ இருக்கலாம், ஆனால் இவ்விரு விஷயங்களிலும் அது விளைவுகளைக் கொண்டுவரும் வல்லமையைப் பெற்றுள்ளது. ஆவியானவர் தமக்கு விருப்பமான இடத்திற்கு கடந்து செல்வது போன்று (யோவான் 3:8), வசனமும் அற்புதமான சக்தி என்ற வகையில் மக்களின் இருதயங்களில் அசைவாடுகிறது. அது வாழ்வை மாற்றுகிறது. "அவர் சித்தங்கொண்டு ... நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்" (யாக்கோபு 1:18). ஆவியானவர் இல்லாத நிலையில் வசனத்தின் செயல்பாட்டையோ அல்லது வசனம் இல்லாத நிலையில் ஆவியானவருடைய செயல்பாட்டையோ பற்றிப் பேசுதல் என்பது அர்த்தமற்றதாக உள்ளது. கிறிஸ்தவர்களை மறுபடியும் ஜெநிப்பித்த அழிவில்லாத வசனமானது, பேதுருவின் வாசகர்கள் பரிசுத்தமாக்கப்படுதலை விளைவித்ததான, அவர்கள் கீழ்ப்படிந்திருந்த சத்தியமாகவே உள்ளது. வசனம் என்ற "அழிவில்லாத" வித்தைப் பேதுரு மனித உற்பத்தியின் "அழிவுள்ள" வித்துடன் நேரெதிராக ஒப்பிட்டார். யோவான் 1:13ல் உள்ளது போன்று, மனித வித்திற்கும் தெய்வீக வித்திற்கும் இடையில் உணர்வுள்ள நேரெதிர் வேறுபாடு இருக்கிறது. இந்த உலகத்தில் மனித வாழ்வுடன் தொடர்புடைய யாவும் நிலையற்றவையாக இருக்கின்றன. அவைகள் வேகமாய்ப் பறக்கின்றன, அவைகள் நீடித்திருக்க மாட்டா. புதுப்பிறப்பைத் தரும் துரித வல்லமை கொண்ட வித்தானது நிலையானதும் நித்தியமானதுமாக உள்ளது. அவர் இங்கு தர விரும்பிய நேரெதிர் வேறுபாடு பின்வரும் வசனத்தில் தெளிவாகிறது.

வசனம் 24. என்றென்றைக்கும் நிற்கிறதும், அழிவில்லாததுமான தேவனுடைய வசனம் என்ற வித்துவைக் கருவியாக்கமாகக் கொண்டுள்ள புதிய பிறப்பானது, ஏசாயா 40:6-8 வசனப்பகுதியைப் பேதுருவின் சிந்தைக்குக் கொண்டு வந்தது (சங்கீதம் 103:15-17 உடன் ஒப்பிடவும்). இவ்வசனப்பகுதி, தேவனுடைய வசனம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறது என்ற முந்திய வசனத்தின் உறுதிப்பாட்டை ஆதரித்து மறுவலிவூட்டுகிறது. ஏசாயா தீர்க்கதரிசனத்தின் வசனப்பகுதியை யாக்கோபுவும் மறைமுகமாய்க் குறிப்பிட்டார் (யாக்கோபு 1:11), ஆனால் கர்த்தரின் சகோதரர் இதை,

மாறுபட்ட ஆனால் தொடர்புடைய கருத்து ஒன்றை ஏற்படுத்தக் குறிப்பிட்டார். இந்தக் குறிப்புரை செப்துவஜிந்த் LXX வேதாகமத்தில் இருந்து வருகிறது, இருப்பினும் பேதுரு அதில் ஒருசில சிறு மாற்றங்களை ஏற்படுத்தினார். இயேசுவின் பிறப்பிற்குச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, பழைய ஏற்பாடு எபிரெயர் மொழியில் இருந்து கிரேக்க மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. செப்புவஜிந்த் வேதாகமம கிரேக்க - ரோமானிய உலகம் முழுவதிலும் சிதறியிருந்த யூதர்கள் மத்தியில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவந்தது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் தமிழ் வாசிக்கும் வாசகர் ஒருவருக்கும இதைப் போன்ற மொழிபெயர்ப்பு நூல்கள் தேவைப்படுதல் போன்றே, அவர்களுக்கு அவர்கள் பேசும் மொழியில் ஒரு மொழிபெயர்ப்பு வேதாகமம் தேவைப்பட்டிருந்தது.

ஏசாயா 40:6-8 வசனப்பகுதியானது தீர்க்கதரிசியின் சந்தர்ப்பப் பொருளில் நோக்கம் ஒன்றைக் கொண்டுள்ளது, இது பேதுருவைக் குறிப்பாக அக்கறை கொள்ளச் செய்யவில்லை. ஏசாயா குறிப்பிட்ட மக்கள், நாடுகடத்தப்பட்டவர்கள் என்ற வகையில் பாபிலோன் நாட்டில் நலிவுற்று இருந்தனர். அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் மீது தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கை முழுவதையும் விட்டுக்கொடுக்கும் சாத்தியக்கூறு இருந்தது - அவர்கள் தேவனையேகூட விட்டுவிடக்கூடிய நிலையில் இருந்தனர். அவர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்புவதற்குத் தேவன், வனாந்தரத்தில் பாதையை ஆயத்தம் பண்ணியதை அவர்களுக்கு நினைவூட்டி, அவர்களை ஆறுதல்படுத்த, தேவன் தீர்க்கதரிசியை அனுப்பினார். மனிதர்களின் வல்லமைகள் வரும் போகும்; அரசுகள் எழும் விழும். எல்லா மாம்சமும் புல்லைப் போல் இருந்தது. தேவனுடைய வசனமான அவரது வாக்குத்தத்தம் உண்மைநிறைந்ததாக இருந்தது. அது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

ஆசியா நாட்டில் தங்கள் விசுவாசத்திற்காகத் துன்புற்றுக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களை விவரிக்க ஏசாயா நோக்கம் கொண்டார் என்ற உரிமைகோருதலை எதையும் பேதுரு ஏற்படுத்தவில்லை. மாறாக, தேவனுடைய வசனம் ஒருக்காலும் ஒழிவதில்லை என்ற வாக்குத்தத்தத்தில் பேதுரு, ஏசாயாவின் தோற்றகால வாசகர்களுக்கு உண்மையாக இருந்தது போன்றே தமது வாசகர்களுக்கும் உண்மையாயிருந்த ஒரு கொள்ளையைக் கண்டார். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்ட வசனப்பகுதி, மனிதர்களும் அவர்கள் செயல்கள் யாவையும் கொண்டுள்ள பரிதாபமான உறுதியற்ற நிலையை அடிக்கோடு இடுகிறது. மக்கள் நிரந்தரமான மற்றும் அறைகூவல் குறைவாக விஷயங்களுக்காக ஏங்குகின்றனர், ஆனால் மாம்தமெல்லாம் புல்லைப்போலவு ... மிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. மாம்சமும் அதன் மகிமையும் ஒன்றுபட்ட ஆய்வுக்கருத்து எதையும் தருவதில்லை, அழியும் என்ற நிச்சயத்துவம் தவிர மனித அனுபவத்திற்கும் புல்லுக்கும் பொதுவான பண்பு வேறு எதுவும் இருப்பதில்லை. மாம்சம் உலருகிறது. அதன் மிகவும் புகழப்படத்தக்க மற்றும் மேன்மையான பண்புகள் யாவும் வீழ்ந்து மறக்கப்பட்டுக் கிடக்கின்றன. ஏசாயாவின் உரையைக் கேட்டவர்களோ அல்லது பேதுருவின் உரையைக் கேட்டவர்களே, தங்கள் நம்பிக்கையை மனித வடிவமைப்புகளின் மீது வைக்கும் ஞானம் கொண்டிருக்க மாட்டார்கள். தேவனும் அவரது செய்தியும்

மாத்திரமே வாழ்வின் நீடித்திருக்கும் உண்மை நிலைகளாகும்.

வசனம் 25. *தேவனும் அவரது சுய வெளிப்பாடுமே, வாழ்விற்கு இசைவிணக்கத்தையும், அர்த்தத்தையும் நோக்கத்தையும் தருகின்றன(ர்). மனித அனுபவம் மற்றும் மனித மகிமையைப் போலின்றி, தேவனும் அவரது வசனமும் என்றென்றும் நிலைத்திருக்கின்றன(ர்). 1:23ல் உள்ள (logos, "வசனம்") என்பதில் இருந்து 1:25ல் உள்ள (rhēma, "வசனம்") என்பதற்கு ஆர்வமுள்ள மாறுதல் ஒன்று காணப்படுகிறது. இந்த இந்த சந்தர்ப்பப் பொருளில் இவ்விரு வார்த்தைகளும் ஒருபொருள்தரும் வார்த்தைகளாக உள்ளன. (rhēma, என்ற) பிந்திய வார்த்தை LXXல் பயன்படுத்தப்பட்டுள்ளது. வார்த்தைகளில் உள்ள மாற்றம் பேதுரு ஏற்படுத்திய கருத்தில் செயல்விளைவு எதையும் கொண்டிருப்பதில்லை. இது, "ஜீவனுள்ளதும் என்றென்றைக்கும் நிலைத்திருப்பதுமான தேவனுடைய வார்த்தையாக [logos]" உள்ளது, இதை பேதுரு ஏசாயா 40:8ம் வசனம் தேவனுடைய வசனம் [rhēma] என்று அழைக்கிறது. இதைப் பேதுரு என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் "கர்த்தருடைய வசனம்" என்று கூறினார் அதுவே அவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டு வந்துது.*

பேதுரு 1:22ல் இருந்து மேல்செல்லும்போது அவரது சிந்தனையின் தொடர்ச்சி கவனிக்காமல் விடப்படக்கூடாது. சத்தியத்திற்குக் கீழ்ப்படிதல் மூலமாகவே கிறிஸ்தவர்கள் தங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரித்திருந்தனர். அவர்கள் கீழ்ப்படிந்திருந்த சத்தியம், தேவனுடைய வசனமான அழிவில்லாத, ஜீவனுள்ள வார்த்தைகளில் உள்ளாக இருந்தது. சத்தியற்குக் கீழ்ப்படிதல் மூலமாக அவர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தனர். "என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற கர்த்தருடைய வசனமாகிய" சத்தியமும் பேதுருவின் வாசகர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட வசனமும் ஒன்றே. காலம் மற்றும் வெளியினூடே எங்கும், இதே சத்திய வசனம் பிரசங்கிக்கப்படும்போது, கிறிஸ்தவர்கள் அதே விளைவை எதிர்பார்க்கலாம். மக்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டு நித்திய சுதந்தரத்தில் பங்கேற்பார்கள்.

நடைமுறைப்பயன்பாடு

பரிசுத்தமும் ஞானஸ்நானமும் (1:3-25)

1 பேதுரு நிருபத்தில் ஒருமுறை (3:21ல்) மாத்திரம் "ஞானஸ்நானம்" என்ற வார்த்தை இருந்தாலும், வேதாகமத்தைக் கவனமாகப் படிக்கும் மாணவர்கள், இந்த நிருபத்தில் ஞானஸ்நானம் என்பதே அதிகம் ஆதிக்கம் செலுத்தும் ஆய்வுக்கருத்து என்பதை நீண்டகாலமாக அங்கீகரித்து உணர்ந்துள்ளனர். ஞானஸ்நானமும் புதிய பிறப்பும் சமானப்படுத்தப்படுபவையாக இராத அதே வேளையில், அவைகளின் நெருக்கமான பிணைப்பும் நீக்கப்போடப்பட இயலாது. விசுவாசி ஒருவர் ஞானஸ்நானம் பெற்றபோது, அவரது புதிய பிறப்பு கனிதரும் நிலைக்கு வந்தது. ஞானஸ்நானம் பெற்று வெளிவரும் விசுவாசி ஒருவர் "புதிய ஜீவனுள்ளவராக" நடக்க வருகிறார் (ரோமர் 6:4) என்று பவுல் கூறியபோது, அவர் இந்தப் பேச்சு உருவகத்தை இன்னும் ஒருபடி மேலாக எடுத்துச் சென்றார். 1 பேதுரு 1:4 மற்றும் 1:23 ஆகிய வசனங்களில் பேதுரு, முறையே "மறுபடியும் ஜெநிப்பித்தார்" மற்றும் "அழிவுள்ள வித்தினாலே அல்ல ... அழிவில்லாத வித்தினாலே" என்ற வார்த்தையைப் பயன்படுத்திய போது,

கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைக் குறிப்பிட்டார் என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது.

உடனடி மன ஆறுதல் என்பதே நவீன முதலாளித்துவத்தின் இயக்கு சக்தியாக உள்ள ஒரு உலகத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்கிறோம், மற்றும் இப்படிப்பட்ட உலகத்தில் நாம் பரிசுத்தமாக இருக்க வேண்டும். பேதுருவின் வாசகர்களைப் பொறுத்தமட்டில், கிறிஸ்தவர்கள் என்ற வகையில் அவர்கள் அறிந்திருந்த பரிசுத்தமான வாழ்விற்கும் அவர்களின் பழைய இழிவான வாழ்வான அவிசுவாச வாழ்விற்கும் இடையில் தெளிவற்ற எல்லைக்கோடு இருக்கவில்லை. ஒருவேளை இந்த இடத்தில், நவீன உலகத்திற்கும் பேதுருவின் காலத்தில் இருந்த உலகத்திற்கும் இடையில் வேறுபாடு உள்ளது எனலாம். நவீன உலகத்தில் பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தம் இல்லாததற்கும் இடையில் உள்ள கோடானது அடிக்கடி மங்கிப்போனதாகிறது. சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள் இந்த எல்லைக்கோட்டின் மங்கிய தன்மைக்குப் பங்களிக்கின்றனர். உலகம் அழைக்கும்போது சிலர், "நிச்சயமாகவே, இந்த வேடிக்கை எல்லாவற்றையும் நாம் தணிக்கவேண்டும் என்ற அவசியமில்லை அல்லவா? பரிசுத்தம் பற்றிய விஷயத்தை நாம் மிகவும் தூரத்தில் எடுத்துச் செல்ல வேண்டாமே" என்கின்றனர். நவீன அடைமொழிகள் யாவற்றிலும் மிகவும் பயங்கரமான "[மத] வெறியர்" என்ற பட்டப்பெயரின்மீது இந்த உலகம் தங்களைத் தூக்கிலிடும் என்று அஞ்சுவதாகக் காணப்படும் கிறிஸ்தவர்கள் உள்ளனர். அரசரின் பிள்ளைகளாக இருப்பது பற்றி நாம் தீவிரமாகச் சிந்திப்பதாக யாரேனும் ஒருவர் நினைக்கலாம்.

நமது உலகத்தில் உள்ள புலனுணர்வுக்கு விடப்படும் வேண்டுகோள் எங்கும் பரவியுள்ளதைக் காணுதல் என்பது, பெரும்பான்மையான விசுவாசிகளைக் கவலைப்படவும் ஊக்கம் இழக்கவும் செய்கிறது. பழங்காலத்து இஸ்ரவேல் மக்களுக்கு யோசுவா கூறிய வார்த்தைகள் நவீனகால சபைக்குப் பொருத்தமாகாதா என்று நான் வியப்படைவதுண்டு: "நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள்; அவர் பரிசுத்தமுள்ள தேவன், அவர் எரிச்சலுள்ள தேவன்; ..." (யோசுவா 24:19). நாம், பரிசுத்தமாயிருப்பதற்கான அறைகூவலுக்கு ஏற்புடையவர்களாக இருக்கிறோமா? இந்தக் கேள்விக்கு நாம் எவ்வாறு பதில் அளிப்போம் என்பதைப் பற்றிய நிச்சயம் எனக்கு இல்லை. மோசே பின்வருமாறு பதில் அளித்தார்: "நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல.... நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது" (உபாகமம் 30:11, 14).

பரிசுத்தமற்ற இந்த உலகத்தில் பரிசுத்தமாயிருக்க விசுவாசி போராடுகையில், புத்துணர்வைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு ஆதாரமூலங்களைப் பேதுரு கையளித்தார். இவற்றில் முதலாவது, பரிசுத்த நகருக்குப் பயணமாகும் சகபயணிகளுக்குச் சகோதர அன்பைக் கொடுத்தல் மற்றும் அவர்களிடம் இருந்து சகோதர அன்பைப் பெறுதல் ஆகியவற்றில் பரிசுத்த தன்மை ஆதரவைக் கண்டறிகிறது. பேதுருவின் வாசகர்களினுடைய தூய்மையும் கீழ்ப்படிதலும், உண்மையான அன்பில் இருந்து விளைந்திருந்தது என்று பேதுரு அறிந்திருந்தார், ஆனாலும் அவர்களுக்கு "சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" என்று அவர் மேலும்

புத்திகூறினார் (1 பேதுரு 1:22).

இரண்டாவது, பரிசுத்தம் என்பது நித்தியமானதாக உள்ளது; உலகத்தின் மதிப்புகளும் மாம்சப்பிரகாரமானவைகளும் தற்காலிகமானவையாக உள்ளன. அழிவில்லாத வித்தினாலே விசுவாசிகள் ஜெநிப்பிக்கப்பட்டதாகப் பேதுரு கூறினார். மனிதருடைய மகிமை யாவும் அவர் [மனிதர்] தமது வாழ்விற்காகக் கொடுக்கும் யாவும், அவரது செல்வம் யாவும், அவரது கற்றல் யாவும், அவரது நல்வேளைகள் யாவும் - இவை யாவையும் புல்லின் மலர் போன்று வாடி வீழ்ந்து விடும். தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். "உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே" (1:25).

பேதுரு தமது வாசகர்கள், உலகப்பிரகாரமாக மற்றும் உணர்வுப்பூர்வமாக, தவறாக நடத்தப்படுதலில் இருந்து விடுதலை எதையும் அளிக்கவில்லை. இதற்கு நேர்மாறாக, விஷயங்கள் இன்னும் மோசமாகக் கூடும் என்றே அவர் கூறினார். அப்போஸ்தலரின் வாசகர்களுக்கு என்ன வந்தாலும், அவர்கள் தேவனுடைய மக்களாக இருக்கின்றனர், மற்றும் தேவனுடைய மக்கள் பரிசுத்தமானவர்களாக இருக்கின்றனர் என்று அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். கர்த்தருடைய நாமத்தை அறிந்திருப்பவர்கள் பரிசுத்தமான வாழ்வை வாழவேண்டும் என்பதைக் காட்டிலும் பெரிய தேவை வேறு எதுவும் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் இல்லை. உடன்பாடு அல்லது சாக்குப்போக்கு ஆகியவற்றிற்கு இடம் இல்லை. இன்றைய நாட்களில் பாவமானது தனது கைகளில் நம்மைத் தழுவிக்கொண்டு, நாம் யாவரும் மனிதர்கள் தானே என்று நமக்குக் கூறுகிறது. நம்மிடத்தில் இருந்து நாம் அதிகமாக எதையும் எதிர்பார்க்க இயலாது. இதன் விளைவாக, இன்றைய நாட்களில் அடிக்கடி, கிறிஸ்தவர்கள் பரிசுத்த தன்மையை வாழ்வின் விருப்பத் தேர்வாக உண்மையில் ஒருக்காலும் கருதுவதில்லை. தேவன் பரிசுத்தமான மக்களை மீட்டிருக்கிறார் என்பதை உணர்ந்தறிதல் தெளிவானதாக உள்ளது.

அழிவுள்ள வஸ்துக்களினால் மீட்கப்படாமல் (1:18, 19)

புத்திசாலித்தனமானவையாக, நவீனமானவையாக மற்றும் தைரியமானவையாக இருப்பதாகத் தோன்றும், நமது தற்கால உலகம் கற்பனை செய்கிற பல விஷயங்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்வை நசுக்கி சந்தோஷத்தை ம ாற்றிப்போட்ட அதே அறியாமையின் வெறும் இருப்புகளாகவே உள்ளன. ம ாம்சப்பிரகாரமானவைகளைச் சிந்தையின்றிப் பின்பற்றுதல் என்பது நம்மை அடிமைப்படுத்தி அழிக்கிறது. பேதுரு தமது இரண்டாவது நிருபத்தில் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுபவர்கள் கேட்டுக்கு அடிமைகளாக இருந்தனர் என்று எழுதினார்: "எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே" (2 பேதுரு 2:19).

1 பேதுரு நிருபத்தில் அப்போஸ்தலர், அவர்கள் [கிறிஸ்தவர்கள்] அறிந்திருந்த, அடிமைத்தனத்திற்குள்ளாக்கும், பலவீனமாக்கும் அவர்களின் முந்திய வாழ்விற்கும், கிறிஸ்துவுக்குள் அவர்கள் மகிழ்வுடன் அனுபவித்த சுயாதீனத்திற்கும் இடையில், கூர்மையான ஒரு மாறுபாட்டை வரைந்தார். பேதுருவின் வாசகர்கள் "மீட்கப்பட்டிருந்தனர்" என்பதை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். "மீட்கப்படுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள

வார்த்தை, பிணையத்தொகை ஒன்றைச் செலுத்துதலுக்கு, உலகப்பிரகாரமான எழுத்தாளர்களால் கிரேக்க உலகத்தில் பயன்படுத்தப்பட்டது. கொள்ளையர்கள் அல்லது வழிப்பறிக்காரர்கள் கையில் அகப்படும் செல்வந்தர் அல்லது அதிகாரம் உள்ள நபரிடம் பெருந்தொகை ஒன்று பிணைப்பணமாக கேட்கப்படும். ரோம வரலாற்றாளரான சுயூட்டோனியல் அவர்கள், கி.மு. 74ல் ஜூலியஸ் சீஸரின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வை எடுத்துரைத்தார், அவ்வேளையில் ஜூலியஸ் சீஸர் சொல்லாமல் கலையைக் கற்பதற்காக ரோது தீவிற்குச் சென்றிருந்தார் வழியில் அவரது கப்பல் கடற்கொள்ளையர்கள் கைகளில் அகப்பட்டது. இளைஞரான சீஸர் தம்மை மீட்கும் பிணையத்தொகையாக ஐம்பது தாலந்துகள் பொன்னைப்பெற்று வரும்படி மிலேத்து நகருக்கு ஆட்களை அனுப்பிவைத்தார். மிலேத்து நகரத்தார் அதைச் செலுத்தினர், பின்பு கடற்கொள்ளையர்கள் சீஸரை விடுவித்தனர்.

செல்வந்தர்களுக்கும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் பிணையத்தொகையாக வெள்ளியும் பொன்னும் இருந்தது, ஆனால் பேதுருவின் வாசகர்கள் அதைக்காட்டிலும் விலையேறப்பெற்ற பொருளைக் கொண்டு வாங்கப்பட்டிருந்தனர் என்பதை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். மாம்சத்தின் இச்சை என்ற அடிமைத்தனத்தில் இருந்து அவர்களைக் கிரயம் கொள்ளக் கொடுக்கப்பட்ட பொருள், தேவனுடைய குமாரனின் விலையேறப்பெற்ற இரத்தம் என்பதைக் காட்டிலும் குறைவாக இருக்கவில்லை (1 பேதுரு 1:18, 19). இதைப் பவுல், 2 கொரிந்தியர் 5:21ல் பின்வருமாறு சொல்லமைத்தார்: “நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.”

குறிப்புகள்

[1]“Be” அல்லது “is” என்ற வினைச்சொல் 1 பேதுரு 1:3 மற்றும் மத்தேயு 21:9 ஆகிய வசனங்களில் இடப்பட வேண்டியுள்ளது. Eulogemenos என்ற முழுமை எச்சவினைச்சொல், மத்தேயு 21:9ல் “ஸ்தோத்தரிக்கப்பட்டவர்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அதே வேளையில் பேதுரு eulogetos என்ற பெயர் உரிச்சொல்லைப் பயன்படுத்தினார். வினையெச்சம் என்பது வினைப் பெயர் உரிச்சொல் ஆகும். “ஸ்தோத்தரிக்கப்பட்டவர்” என்ற அறிவித்தலுக்கும் “ஸ்தோத்திரம் உண்டாவதாக” என்ற கட்டளைக்கும் இடையில் உள்ள வேறுபாடு மிகச்சிறிதானதாகவே உள்ளது. [2]ரபீக்கள் என்பவர்கள் சிலவேளைகளில், யூதமார்க்கத்து அமைந்தவரை புதிதாய்ப்பிறந்த குழந்தையுடன் ஒப்பிட்ட வேளையில், புதிய பிறப்பிற்குப் புதிய ஏற்பாடு தரும் குறிப்புகளில் அடிப்படை ஒழுக்க மற்றும் ஆவிக்குரிய புதுப்பித்தல் உள்ளாக இருக்கிறது என்ற கருத்தை அவர்கள் மிகவும் அரிதாகவே உருவாக்கினர். சாட்சியத்தை நன்கு ஆய்ந்தபின்பு G. R. பீஸ்லீ - முர்ரே அவர்கள், தனிநபரின் ஆவிக்குரிய வாழ்விற்கு மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் என்ற கருத்தின் நடைமுறைப்பயன்பாடானது, “கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன்னர், யூதத்துவம் மற்றும் கிரேக்கப்பண்பாடு ஆகிய இரண்டிலும் வழக்கமற்றதாக இருந்தது” என்று முடிவு செய்தார் (G. R. Beasley-Murray, *Baptism in the New Testament* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1962], 227.) [3]Ibid., 228. [4]ஜார்ஜ் எல்டன் லேடு அவர்கள், “தத்தெடுத்தல் மூலமாக அல்ல, மாறாக மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் மூலமாக, விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகளாகின்றனர் என்ற

கருத்தைப் பவுல் கொண்டுள்ளார் (ரோமர் 8:15)" என்று எழுதியபோது அவர் [ஜார்ஜ் எல்டன் லேடு] ஒருபகுதி மாத்திரமே சரியானவராக இருந்தார். (George Eldon Ladd, *A Theology of the New Testament,* 2d ed. [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1993], 664.) தத்தெடுத்தல் (சுவிகாரம்) மற்றும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் என்ற இரண்டு ஒப்புவமைகளையும் பவுல் பயன்படுத்தினார், இதை தீத்து 3:5 தெளிவாக்குகிறது. ரோமர் 8:15, 16ல் சுவிகாரம் என்ற ஒப்புமையைப் பயன்படுத்தியதில் பவுல், கிறிஸ்து மூலமாக விசுவாசிகள் தேவனுடன் கொண்டுள்ள உறவின் தனித்தன்மையை அவர்களுக்கு மறுபடியும் உறுதிப்படுத்தினார். ரோமர் 6:1-4 மற்றும் தீத்து 3:5 ஆகிய இரு வசனப்பகுதிகளிலும், ஒருவர் கிறிஸ்தவராகும்போது கொண்டுவரப்படுகிற அடிப்படைமாற்றம் என்பதே பாடப்பொருளாக இருந்தது. ஒருபுறத்தில் இது, பழைய மனிதனை மரிக்கச் செய்தலை அர்த்தப்படுத்துகிறது, மறுபுறத்தில் இது மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதலை அர்த்தப்படுத்துகிறது. [5]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude,* Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 46. [6]David Ewert, *And Then Comes the End* (Scottsdale, Pa.: Herald Press, 1980), 173. [7]. J. A. Hort, *The First Epistle of St. Peter I.1—II.17: The Greek Text with Introductory Lecture, Commentary, and Additional Notes* (New York: Macmillan Co., 1898), 38. [8]Kelly, 46. [9]See J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 29. [10]அரசுகள் பற்றிய பவுலின் புத்திமதியானது, புதிய ஏற்பாட்டு இல்லச்சட்டங்கள் மறுபடியும் கூறப்படுதல் என்று நீக்கிப்போடப் பட்டுவிடக்கூடாது. எபேசியர் 5; 6 மற்றும் கொலோசெயர் 3; 4 ஆகிய அதிகாரங்களில் காணப்படும் சட்டங்களில் அரசாங்கம் பற்றிய குறிப்பு எதுவும் அடங்கியிருப்பதில்லை. இல்லம் பற்றிய நேரடியான சட்டங்கள் பேதுருவின் வாசகர்களுக்கு அவசியமானவையாகவும் அவர்கள் அக்கறை கொள்பவையாகவும் இருந்தன என்பதால் அவற்றைப் பேதுரு தழுவியமைத்தார்.

[11]Kelly, 46. [12]John Stott, *The Contemporary Christian* (Leicester, U.K.: Inter-Varsity Press, 1992), 157. [13]எச்சவினை என்பது கட்டளையின் வலிவைக் கொண்டிருக்கலாம், குறிப்பாக கட்டளைகளின் வரிசை ஒன்றில் பயன்படுத்தப்படும்போது அவ்வாறு கொண்டிருக்கலாம். [14]Edward Gordon Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text, with Introduction, Notes, and Essays,* Thornapple Commentaries, 2d ed. (London: Macmillian & Co., 1947; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 131. [15]Ibid, 260. See also Duane Warden, "The Prophets of 1 Peter 1:10–12," *Restoration Quarterly* 31 (First Quarter 1989): 1–12. பெரும்பான்மையான விளக்கவுரைகள், இவ்வசனப்பகுதியில் தீர்க்கதரிசிகளைப் பற்றி உரைக்கும்போது, செல்வின் அவர்களின் விளக்கங்களைக் குறிப்பிடுகின்றன, அவ்வாறு குறிப்பிட்டாலும் அவரை மறுத்துரைப்பதற்காகவே அவைகள் அவ்வாறு செய்கின்றன. அவைகள் வெற்றிகரமானவையா அல்லவா என்பது கேள்விக்குத் திறக்கப்பட்டுள்ளது. மிக்காயேல்ஸ் நினைப்பதாகக் காணப்படுவது போன்று, 1:10ல் *eis humas* என்பதற்கு வேண்டுகோள் விடுத்தல் மூலம் பிரச்சனை தீர்த்துவைக்கப்படவில்லை. (Michaels, 44.) 1:10ல் உள்ள கிருபை என்பது கிறிஸ்தவர்கள் நிமித்தமானது, இது 1:11ல் கிறிஸ்துவினிமித்தம் பாடு அனுபவித்தல் போன்றதாக உள்ளது. [16]புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் சபைகளில் உறுப்பினர்களாக இருந்தனரா (ஒருவேளை 1 கொரிந்தியர் 12ல் இது சுட்டிக் காண்பிக்கப்பட்டிருக்கலாம்) அல்லது (யோவானின் நிருபங்களில் உபதேச நூல்களிலும் கருத்தாகத் தெரிவிக்கப்படுவது போன்று) தேசாந்திரிகளாக இருந்தனரா என்ற கேள்விக்குள் மிகுந்த கல்வித்துவம் வாய்ந்த பணிசென்றுள்ளது.

இதைப்பற்றி மேலும் படிப்பதற்கு David Hill, *New Testament Prophecy* (Atlanta: John Knox Press, 1979), 104–9 *என்ற புத்தகத்தில் காணவும்.* [17]Kelly, 59. [18]*ஹோர்ட் அவர்கள், "ஆதரவு மற்றும் ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகியவை, புறஜாதியார் உடன்படிக்கைக்குள் அனுமதிக்கப்படுதலில் காண்பிக்கப்படும் ஆதரவை விசேஷமாய் அர்த்தப்படுத்திற்று" என்று எழுதினார்.* (Hort, 49.) [19]நேரெதிரான ஒரு கண்ணோட்டத்திற்கு Wayne A. Grudem, *The First Epistle of Peter: An Introduction and Commentary,* Tyndale New Testament Commentaries, vol. 17 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 69–71 *என்ற புத்தகத்தில் காணவும்.* Grudem *அவர்கள் இவ்வசனப்பகுதியின் இலக்கணத்தை வலிவாகக் கையாளுதல் என்பது வாசிக்க வேதனை நிறைந்ததாக உள்ளது. கேள்விகளை அவர் பலவீனமாக நடத்தியமை என்பது, செல்வின் இந்த வசனப்பகுதியைச் சரியாகப் புரிந்து கொண்டுள்ளாரோ என்ற வலிவான விவாதமாக உள்ளது.* [20]தேவன்மீதான *விசுவாசமின்மை இல்லாதிருத்தலில் உள்ள கண்ணியத்திற்கு ஏங்குதல், ஆல்பர் கேமஸ் போன்ற ஒரு எழுத்தாளரைப் பற்றிய மனம் ஈர்க்கும் விஷயமாக உள்ளது.* "The Myth of Sisyphus" *என்ற புத்தகத்தில் கேமஸ் அவர்கள், "ஒவ்வொன்றையும் விளக்கப்படுத்தும் அந்த உலகளாவிய காரணப்பொருள், நடைமுறைரீதியான அல்லது ஒழுக்கரீதியான, அந்த அந்த வகைகள் யாவும், கண்ணியமான மனிதர் ஒருவரைச் சிரிக்கச் செய்யப்போதுமானவைகளாக உள்ளன" என்று உறுதிப்படுத்தினார்.* (Albert Camus, *The Myth of Sisyphus, and Other Essays,* trans. Justin O'Brien [New York: Vintage Books, 1955], 16.) *ஹெடோனிஸ்டுகளின் வழக்கமான நாத்திகவாதம் போலின்றி, கேமஸ் அவர்கள் வாழ்வை முகத்தில் முற்றிலுமாகக் காணவும் தேவனை மறுக்கவும் தைரியம் கொண்டு இருந்தார். மனித வாழ்வை அர்த்தமற்றதாக, வருத்தம் நிறைந்ததாக மற்றும் நம்பிக்கையற்றதாக அவர் கண்டார்.*

[21]*இத்துடன் கூடுதலாக, சந்தர்ப்பப்பொருளானது, "உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு" (1:13) மற்றும் "இனி நடவாமல்" (1:14) என்ற கிரேக்க எச்சவினைகள் கட்டளைகளின் வலிவுடன் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.* [22]*எபிரெயருக்குரிய மரபுச்சொற்றொடருக்கு 2 சாமுவேல் 7:10ஐக் காணவும், அதில் "எபிரெய மொழியில் உள்ள நியாயக்கேட்டின் மக்களால்" என்ற எச்சவினைச்சொல் ஆங்கிலமொழிபெயர்ப்பில்* "wicked" *என்பதற்கு பின்னால் நிற்கிறது (மத்தேயு 8:12, "ராஜ்யத்தின் புத்திரரோ" மற்றும் எபேசியர் 2:3 "கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" ஆகியவற்றை ஒப்பிடவும்).* [23]*வேதவசனப்பகுதியில் suschēmatizomenoi என்றுள்ளது, இது நுட்பமாகப் பயன்படுத்தப்படும் எச்சவினைச்சொல்லாக உள்ளது, ஆனால் இங்கு இது ஒரு கட்டளையின் வலிவுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [24]Michaels, 51. [25]Grudem, 79. [26]Ibid, 80. [27]Ladd, 564. [28]Ernest Best, *1 Peter,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 87. [29]John H. Elliott, *Home for the Homeless: A Sociological Exegesis of 1 Peter, Its Situation and Strategy* (Philadelphia: Fortress Press, 1973), 42. [30]*பேதுரு பயன்படுத்திய வார்த்தை, பிணையத்தொகை அல்ல விடுதலையைக் குறிப்பதாகவே இருந்தது என்பது நன்கு விவாதிக்கப்பட்டுள்ளது.* (Best, 89.)

[31]*பழைய ஏற்பாடு மற்றும் புறதெய்வ உலகம் ஆகிய இரண்டிலும் "குடும்பம்" என்பதற்கான lutroomai என்ற வார்த்தையைப் பற்றிய முழுமையான கலந்துரையாடல் ஒன்றை ஃபிரான்சீஸ் ரைட் அவர்கள் அளித்தார்.* (Francis Wright Beare, *The First Epistle of Peter: The Greek Text with Introduction and Notes,* 3d ed. [Oxford: Basil Blackwell, 1970], 103–5.) [32]NASB *வேதாகமம், புதிய ஏற்பாட்டில் "பரிகாரம்" என்ற*

வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை. KJV வேதாகமத்தில் ரோமர் 5:11ல் ஒரு முறை இவ்வார்த்தை உள்ளது. (தமிழில் இது ஒப்புரவாகுதல் என்று உள்ளது.) NRSV வேதாகமம் இவ்வார்த்தையை ரோமர் 3:25; எபிரெயர் 2:17 ஆகிய இரு வசனங்களில் பயன்படுத்துகிறது. NIV வேதாகமத்தில் இவ்வார்த்தை ரோமர் 3:25; எபிரெயர் 2:17; 9:5 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. [33]Michaels, 66–67. [34]Robert H. Gundry, "'Verba Christi' in 1 Peter; Their Implications Concerning the Authorship of 1 Peter and the Authenticity of the Gospel Tradition," *New Testament Studies* 13 (July 1967): 339–40. [35]Raymond C. Kelcy, *The Letters of Peter and Jude,* The Living Word Commentary, vol. 17 (Austin, Tex.: R. B. Sweet Co., 1972), 38. [36]Kelly, 78. [37]NASB வேதாகமம், நடபடிகள் 2:40ல் ஒருமுறை மாத்திரம் நிகழ்வதை உரைக்கும் செயப்பாட்டு கட்டளையை, "மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" என்று நேரடியாகக் கூறுகிறது. எனவே, "கேட்பவர்கள் முற்றிலும் செயல்படாதவர்களாக இருக்கும் ஒரு செயலைச் செய்யும்படி இன்னொருவர் எவ்வாறு அவருக்கு அர்த்தம் நிறைந்த வகையில் கட்டளையிடுவார்?" என்ற கேள்வி எழுகிறது, "கேள்விப்பட்டிருங்கள்," "பெற்றுக்கொள்ளுங்கள்" மற்றும் இவை போன்ற செயப்பாட்டுக் கட்டளைகள், "நீங்கள் கேள்விப்பட்டவர்களாயிருங்கள்" அல்லது "நீங்கள் பெற்றுக்கொண்டவர்களாயிருங்கள்" என்ற செயப்பாட்டு வலிவையே கொண்டுள்ளது, அதுவே நடபடிகள் 2:40ல் பேதுரு அர்த்தப்படுத்தியதாக உள்ளது. அவர், தமது வாசகர்கள் தாங்கள் இரட்சிக்கப்பட அனுமதிக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்தினார். விஷயம் அப்படி இருந்தது என்றால், அவர்களின் சொந்த முடிவு பங்களிக்க வேண்டிய சிலவற்றைச் செய்யும்படி அவர்களுக்குப் பேதுரு கட்டளையிட்டார் என்றாகிறது. இந்தக்கருத்தில்தான் பேதுருவின் உரையைக் கேட்டவர்கள் "தங்களை இரட்சித்துக்கொள்ள" வேண்டியிருந்தனர். [38] Michaels, 75.

3

இரட்சிப்பு, விசுவாசத்தின் விளைவு (பாகம் 2)

(2:1-10)

இரண்டாவது அதிகாரம் தொடங்குகையில் பரிசுத்தமாயிருத்தல் பற்றிய பாடக்கருத்து தொடருகிறது. சகோதர அன்பும் சத்தியத்திற்குக் கீழ்ப்படிதலும் இன்றி பரிசுத்தமாயிருத்தல் இருக்க இயலாது. இத்துடன் கூடுதலாகப் பேதுரு, பரிசுத்தமாயிருத்தல் என்பது ஒரு மனநிலை அமைவு என்பதைத் தமது வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். இது விசுவாசியின் மனச்சான்றில் ஊடுருவிப்பரவும் சிந்தித்தல் மற்றும் நடத்தல் ஆகியவற்றின் வழிமுறையாக உள்ளது. பரிசுத்தமாயிருத்தல் என்பது ஒரு மன அமைவாக உள்ளது, ஆனாலும் அதைக் காட்டிலும் அதிகமானதாகவும் உள்ளது. இது நடத்தையின் வழிமுறையாகவும் உள்ளது.

"புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல" (2:1-3)

[1]இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால் [2]சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, [3]நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.

வசனம் 1. பேதுரு பயன்படுத்திய நிபந்தனை வாக்கியம், அதன் "ஆல்" பகுதி (நிபந்தனை) உண்மையாக உள்ளது என்பதை யூகிக்கிறது. பேதுருவின் வாசகர்கள் தங்கள் சொந்த அனுபவத்தில் இருந்து, **கர்த்தர் தயையுள்ளரென்பதை** தாங்கள் **ருசிபார்த்திருந்ததைக்** கூற முடியும் என்று பேதுரு யூகித்தார். NRSV வேதாகமம் "if indeed you have tasted that the Lord is good." என்ற சொற்றொடரைக் கொண்டு இவ்வார்த்தைகளின் கருத்துணர்வை பிடித்துவைக்கிறது. இந்தச் சொற்றொடரை "கர்த்தர் தயவுள்ளவர் என்று நீங்கள் ருசிபார்த்து இருப்பதால்" என்று மொழிபெயர்த்தால், அது இலக்கைத் தவற விடாது. எப்போதுமே பகுத்தறிதல் கொண்டிருத்தல் என்ற உருவகமான பாலைக் கொண்டு இரட்சிப்பு போஷிக்கப்பட்டிருந்தது, ஆனால் அதுவேஎல்லாமுமாகஇருக்கவில்லை. அவர்கள்(1)தாங்கள்புதிதாய்ப்பிறந்ததையும் (2) கர்த்தர் தயவுள்ளவர் என்ற தங்கள் அனுபவத்தையும் சிந்தித்துப் பார்க்கையில், அவர்களின் இரட்சிப்பு அதிக நிச்சயமானதாகவும் அவர்களின் விசுவாசம் அதிகம் சுய திருப்தி உள்ளதாகவும் ஆயிற்று. சங்கீதம் 34:8ம் வசனம்,

1 பேதுரு 2:2ன் உணர்வை ஒரு கட்டளை என்ற வகையில் அளிக்கிறது: "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." மீண்டும் 3:10-12ல் பேதுரு சங்கீதம் 34ஐ ம றுகண்ணோட்டமிட்டிருந்தார்.

கிறிஸ்தவர்கள் கர்த்தரை அனுபவிக்கப் பல வழிகள் உள்ளன. விசுவாசிகள் அவரது வல்லமை அல்லது அவரது இரக்கம் அல்லது அவரது கோபம் என்பதை ருசிபார்க்கலாம். சங்கீதக்காரர் கர்த்தருடைய வார்த்தைகளின் இனிமையை அனுபவித்தார்: "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமை யானவைகள்" (சங்கீதம் 119:103). யோபு பெருந்துன்பத்தை ருசிபார்த்தார்: "என் நாவிலே அக்கிரமம் உண்டோ? என் வாய் ஆகாதவைகளைப் பகுத்தறியாதோ?" (யோபு 6:30). தேவனுடன் பேதுருவின் வாசகர்களுக்கு உண்டான அனுபவங்களைப் பற்றிப் பொதுவாகப் பேசும்போது, "கர்த்தருடைய தயவு" என்ற வார்த்தையே அவரது சிந்தைக்கு வந்தது, அதையே அவர் பயன்படுத்த விரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பின்தொடரும் வசனங்களில் பேதுரு, நசரேயனாகிய இயேசுவையே "கர்த்தர்" என்று அழைத்தார். அப்போஸ்தலரின் வாசகர்கள் இயேசுவை அறிந்தி ருந்தபடியால், அவர்கள் தேவனுடைய தயவை ருசிபார்த்திருந்தனர்.

பேதுருவின் வாசகர்களினால் சகிக்கப்பட்டிருந்த உபத்திவத்தின் சந்தர்ப்பப் பொருளில் பார்க்கும் போது, அப்போஸ்தலர் கர்த்தருடைய சிட்சையை அல்லது கர்த்தருடைய சினத்தைப் பற்றிப் பேசினார் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். "தயவு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள chrestos, *என்ற வார்த்தை, "கிறிஸ்து" என்பதற்கான* Christos, *என்ற வார்த்தையின் எழுத்து ம ற்றும் ஒலி ஆகியவற்றில் ஒத்துப்போகிறது. அடிமைகளின் உரிமையாளர்கள் சிலவேளைகளில் தங்கள் அடிமைகளுக்கு, "தயவு" என்று அர்த்தப்பட்ட* chres-tos, *என்ற பெயரை இட்டனர். முற்காலத்தில் இருந்த ரோம எழுத்தாளர்கள் சிலர், கிறிஸ்தவத்தைப் பற்றி அறிந்தநிலையில் இவ்வார்த்தைகளைக் குழப்பினர். அவர்கள் அடிமையின் பெயர்கொண்ட ஒரு கடவுளைக் கிறிஸ்தவர்கள் ஆராதித்ததாக நினைத்தனர். "தயவு" என்ற பெயரை இயேசு மனப்பூர்வமாகச் சூட்டிக்கொண்டாரா என்பதைப் பற்றி ஒருவர் சந்தேகப்படுகிறார். கர்த்தர் தயவுள்ளவர் என்பதே பேதுரு தமது வாசகர்களிடம் எதிர்பார்த்த உலகளாவிய அனுபவமாக இருந்தது.*[1]

__வசனம் 2.__ கிறிஸ்தவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிதல் மூலம் தங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரித்து இருப்பதால், அவர்கள் அழிவில்லாத வித்தினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருப்பதால், அவர்கள் தங்களைத் தேவன் ஏற்படுத்தியபடியே பரிசுத்தமான மக்களாக இருக்க வேண்டும். "நீங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காகத் தேவன் உங்களை உண்டாக்கினாரோ, அவ்வாறே இருங்கள்" என்பது புதிய ஏற்பாட்டின் மற்றொரு இடத்திலும் காணப்படும் ஆய்வுக்கருத்தாகும் (உதாரணம ாக, ரோமர் 12:1, 2). பரிசுத்தமாயிருத்தல் என்பது, விசுவாசிகள் __சகல துர்க்குணத்தையும், சலகவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விடுதல்__ என்பதையும் கேட்கிறது. இப்படிப்பட்ட வழியான வாழ்வைப் புறம்பே தள்ளி ஒழித்துவிடுதல் என்பது இலேசாக எடுத்துக்கொள்ளக் கூடிய விஷயம்

அல்ல. இது பேதுருவின் வாசகர்களை, அவர்கள் தங்கள் முன்னோர்களிடம் இருந்து சுதந்தரித்துக் கொண்டிருந்த பழைய வாழ்வைக் (1:18). அவர்களின் சமகாலத்தவர்களால் தொடர்ந்து தழுவிக் கொள்ளப்பட்டிருந்த வாழ்வை கைவிடும்படி கேட்டுக் கொண்டது. ஒரு மனிதர் தமது உடைகளைக் களைந்து போடுதல் போன்று அவர்கள் தங்கள் பழைய வாழ்வைக் களைந்து போட வேண்டும் என்று அவர்களைப் பேதுரு கேட்டுக்கொண்டார். கர்த்தர்மீது விசுவாசம் கொண்டிருத்தல் மாத்திரம் அல்ல, ஆனால் அவரைப்போன்று வாழவேண்டும் என்று புதிய கிறிஸ்தவர்களைப் பவுல் வேண்டிக் கேட்டுகொண்ட போது, இதே பேச்சு உருவகத்தை, "களைந்துபோடுதல்" என்ற இதே வார்த்தையையும் கூட அவர் பயன்படுத்தியிருந்தார் (எபேசியர் 4:22-24; கொலோசெயர் 3:8-10).

ரோமர் 6:3, 4ல் பாடக்கருத்து வேறுபட்டிருப்பதில்லை. அங்கு, விசுவாசிகள் பரிசுத்த வாழ்வை வாழும்படி வேண்டிக் கேட்டுக்கொள்வதற்குப் பவுல், மரணத்தையும் மரித்தோரில் இருந்து உயிர்த்து எழுதலையும் பயன்படுத்தினார். ரோமர் 6ல் பவுல் எழுதியது போன்றே, பேதுரு தமது வாசகர்களுக்கு அவர்களின் ஞானஸ்நானம் பற்றிய தனிச்சிறப்பை நினைவூட்டினார். பவுல் ஞானஸ்நானத்தைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கையில் பேதுரு மிகவும் மறைவாகக் குறிப்பிட்டார். பவுலைப் பொறுத்தமட்டில் "பழைய பாவமனிதனுக்கு மரித்தல்" என்பது எதைத் குறிப்பிட்டதோ அதையே, பேதுருவைப் பொறுத்தமட்டில், "மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல்" (1:3, 23) மற்றும் "புதிதாய்ப்பிறந்த குழந்தைகள்" (2:2) ஆகிய இரண்டும் குறிப்பிட்டன என்பது நிச்சயம். பேதுருவின் வாசகர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருந்ததால், அவர்கள் பழையவற்றைப் பின்விட்டுச் செல்ல வேண்டும் என்று அவர் வேண்டிக் கேட்டுக்கொண்டார். சாராம்சத்தில் அவர், "நீங்கள் பழைய மனிதனைக் களைந்து போட்டுள்ளதால், தொடர்ந்து பழைய மனிதனாக இராதீர்கள். நீங்கள் என்னவாக வேண்டும் என்பதற்காகத் தேவன் உங்களைப் படைத்தாரோ, அவ்வாறே இருங்கள்" என்று கூறினார்.

நேர்மறை மற்றும் எதிர்மறை நடக்கை ஆகிய இரண்டையுமே, வார்த்தைகளின் பட்டியலைக் கொண்டு, புதிய ஏற்பாடு பொதுவாகத் தொகுத்துரைக்கிறது. இந்த நிருபத்தின் இன்னொரு இடத்தில் பேதுரு இவ்வழிமுறையைப் பயன்படுத்தினார் (3:8, 9; 4:3, 15; 5:2, 3). பவுலும்கூட இப்படிப்பட்ட தொகுப்புரைப் பட்டியலை அடிக்கடி பயன்படுத்தினார் (ரோமர் 1:29-32; 2 கொரிந்தியர் 12:20; கலாத்தியர் 5:19-23). எந்த ஒரு விஷயமும், பேதுருவின் வாசகர்களைப் பண்புப்படுத்தியதாக அவர் அறிந்திருந்த காரணத்தினால், அவர்கள் அதைக் குறிப்பாக நீக்கிப்போட வேண்டும் என்று அந்த விஷயத்தைப் பேதுரு தேர்ந்தெடுத்து இருக்க வாய்ப்பில்லை. அவைகள் மக்களின் பெரும்பான்மையான குழுக்களை விவரித்தலைக் காட்டிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பேதுருவின் வாசகர்களை விவரிப்பதில்லை. விசுவாசிகளின் கூட்டத்திற்குள் கலகத்தைத் தூண்டும் குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டுள்ளதால் அவற்றை அவர் பட்டியலிட்டார். அந்தக் கருத்தமைவில், இந்தப் பட்டியல் 1:22ன் பின்தொடர்ச்சியாக உள்ளது. கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரைத் தங்கள்

இருதயத்தில் இருந்து உண்மையாக அன்புகூர வேண்டியிருந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் அன்புகூர்ந்த காரணத்தால், அவர்கள் இப்படிப்பட்ட வகையான விஷயங்களைத் தங்களிடத்தில் இருந்து அகற்றிப்போட வேண்டி இருந்தது. பேதுரு பயன்படுத்திய ஒவ்வொரு வார்த்தையும் போதுமான அளவுக்கு ஆராயப்பட பல பக்கங்கள் கொண்ட விளக்கங்கள் தேவைப்படும். இவை பற்றிய சுருக்கமான விளக்கம் பின்வருகிறது:

"துர்க்குணம்" (*kakia*) என்பது பெரும்பாலும், ஒழுக்கநெறிக்கு எதிராக அமைவுபெற்றுள்ள பொல்லாங்கான தன்மைக்கான பொதுவான வார்த்தையாக உள்ளது. இது ஒழுக்கரீதியாக சீர்கேடு என்பதை மனதிற்குக் கொண்டுவருகிறது. பக்குவமற்ற, வடிவுசிதைந்த ஒழுக்க இயல்பிற்கான ஒரு வார்த்தையை, மற்றவர்களை பொல்லாத எண்ணம் அல்லது விருப்பத்தோடு கண்ணோக்கும் மன இயல்பிற்கான ஒரு வார்த்தையைப் பேதுரு பயன்படுத்தினார். யாக்கோபு, இவ்வார்த்தையை "ஏராளமான" ["abundant"] அல்லது "முழு அளவும்" ["the full extent of"] என்று அர்த்தப்படும் பெயர் உரிச்சொல்லைப் பயன்படுத்தினார் (யாக்கோபு 1:21). இது தமிழ் மொழியில் "எல்லாவித" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பேதுரு செய்தது போன்று, யாக்கோபு இதே வினைச்சொல்லைப் பயன்படுத்தி, ஆடையைக் களைவது போன்று களையப்பட வேண்டிய பொல்லாங்கான குணங்களின் முழு வீச்சு பற்றி எழுதினார். "துர்க்குணம்" (*dolos*) என்பது எல்லாவிதமான வஞ்சகமான ஏமாற்று வேலையையும் உள்ளடக்குகிறது. இது சூழ்ச்சியை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. இயேசுவைப் பற்றிய வகையில், அவரே கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டிய மாதிரியாக இருக்கிறார், "அவரது வாயில் வஞ்சனை காணப்படவில்லை" என்று பேதுரு கூறினார் (2:21, 22).

"கபடம்" (*hupokrisis*) என்ற வார்த்தை உலகப்பிரகாரமான கிரேக்க சமூகத்தில், ஒரு மேடையின் மீது இருக்கும் நடிகருக்குப் பயன்படுத்தப்பட்டது. ஒரு பாத்திரத்தில் ஏற்று நடித்தல் என்பதே இதன் நேரடிப்பொருளாகும். இயேசு, தம்மை எதிர்த்து நின்ற போதகர்களை "மாய்மாலக்காரர்கள்" என்று அழைத்தார். அவர்கள் செய்தவை, அவர்கள் தங்களைப் பற்றி அறிவித்துக் கொண்டதற்குச் சீர்பொருத்தமாக இருக்கவில்லை (மத்தேயு 23:13-33). மாய்ம ாலம் என்பது வெளிப்படையாக அறிவிக்கப்படாத நோக்கம் (1 தீமோத்தேயு 4:2) மற்றும் ஒருவர், தாம் கொண்டிராதவற்றைக் கொண்டிருத்தலாக நடிக்கக் காரணமான மனநிலை (கலாத்தியர் 2:13) ஆகிய இரண்டையும் குறிக்கப் பயன்படுகிறது. ["Envy"] "பொறாமை" (*phthonos*) என்பது, அர்த்தத்தில் ["jealousy"] "ஐயுறவு" என்பதைப் போன்றதாக இருந்தாலும். அதே விதம ானதாக இருப்பதில்லை. ஐயுறவு என்பது மற்றொருவர் கொண்டுள்ள பொருள்கள் அல்லது பண்புகளை ஒருவர் விரும்பும் காரணத்தினால் கொண்டுள்ள பொல்லாத மனவிருப்பமாக இருந்தால், பொறாமை என்பது, இன்னொரு நபர் கொண்டுள்ள ஆசீர்வாதங்கள், திறன்கள், அங்கீகாரங்கள் அல்லது புகழ்ச்சி ஆகியவற்றின் வெறும் உண்மையினாலேயே ஏற்படுகிற பொல்லாத மனவிருப்பமாக உள்ளது. "புறங்கூறுதல்" (*katalalia*) என்பது இன்னொருவரை, வாய்மொழியாகத் தூற்றுதலாக, (பொய்யாக அல்லது வேறுவிதமாக) புகழ்ச்சியைக் குறைத்தலாக உள்ளது.

1:22ல் அப்போஸ்தலர் வேண்டிக்கேட்டுக்கொண்ட "சுத்த

இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருதல்" என்பதற்கு ஒவ்வாத அவர்களின் தன்மையே இவ்வார்த்தைகள் யாவற்றிற்கும் பொதுவான காரணியாக உள்ளது. இருப்பினும் அவர்கள் மற்ற அக்கறைகள் கொண்டிருந்தனர் என்பதற்கு வாய்ப்புள்ளது. பேதுரு குறிப்பிட்ட இந்தக் கிறிஸ்தவர்கள் அநீதியான வகையில் துன்புற்றுக் கொண்டிருந்தனர், அது அவர்கள் தங்களைத் துன்புறுத்தியவர்கள் மீது, துர்க்குணம் கொண்ட நிலை, புறங்கூறுதல், பொறாமை கொள்ளுதல் மற்றும் வெறுத்தல் ஆகியவற்றைக் கொண்டு பதில் செயல் செய்யும்படி அவர்களைச் சோதித்தது. அவர்கள் இந்த உணர்வுகளை எந்த அளவுக்குத் தங்களுக்குள் தேக்கி வைத்திருந்தார்களோ, அந்த அளவுக்கு ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டிருந்தனர். இவைகள் பாவியையே அழித்துப் போடுகிற பாவங்களாக உள்ளன.

இத்துடன் கூடுதலாக சிலவேளைகளில், ஒருவர் மற்றவருக்கு எதிராக உள்ளாகத் திரும்புதல் மற்றும் தவறாக நடத்துதல் ஆகியவற்றிற்கு, புறம்பே தவறாக நடத்தப்படுதலின் அழுத்தங்கள் காரணமாகின்றன. விசுவாசிகள் தங்கள் சலிப்புகளில் சிலவற்றை, கிறிஸ்துவுக்குள்ளான தங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் ஆகியோரை நோக்கித் திருப்புதல் என்பது மிகவும் அரிதாகவே, கற்பனைக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. புறங்கூறுதல், வஞ்சனை மற்றும் உண்மையற்ற தன்மை ஆகியவை, பேதுரு அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்த சகோதர அன்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும். கிறிஸ்தவர் அல்லாதவர்களுடனோ அல்லது ஒருவர் மற்றவருடனோ, விசுவாசிகள் கொண்டிருந்த உறவுமுறையில், அவர்கள் இந்த உலகத்து மக்களைப் பண்புப்படுத்தி வாழ்வின் வழிகளைக் கைவிட வேண்டியிருந்தது. அவர்கள் பரிசுத்தமான வாழ்வை வாழ வேண்டியிருந்தது (1:15, 16). பரிசுத்தமாக வாழுதல் என்பது, கிறிஸ்தவர் அல்லாதவர்களுடனான அவர்களின் தொடர்புகள் மற்றும் விசுவாசிகள் கொண்ட சபையாகிய சரீரத்திற்குள் அவர்களின் உறவுகள் ஆகிய இரண்டிலும் தேவபக்தியுடன் அவர்கள் வாழவேண்டும் என்று வற்புறுத்திற்று. பரிசுத்தமாக வாழுதல் என்பது இங்கு பேதுரு பட்டியல் இட்டுள்ள எந்த குணத்துடனும் ஒத்துப்போகாததாக இருந்தது.

வசனம் 3. பேதுரு 1:23ல் தாம் தொடங்கியிருந்த ஜெநிப்பிக்கப்படுதல் என்ற ஒப்புவமைக்குத் திரும்ப வந்தார். அந்த அளவுக்கு இது தெளிவாக உள்ளது. இருப்பினும் 1 பேதுரு நிருபத்தைப் படிக்கும் மாணவர்களில் சிலர், "ஒழித்துவிட்டு" (2:2) என்ற சொற்றொடரும் **புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல இருத்தலும்,** பேதுரு எழுதிய ஆசியாவின் சபைகளில் அப்போது இருந்த ஒரு நடைமுறையை விவரிக்கிறது, ஆனால் இது இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டில் இருந்த சபையின் ஆதார மூலங்களில் இருந்து நன்கு அறியப்படுகிறது என்று நம்புகின்றனர். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்திற்குப் பின்பு, குறைந்தபட்சம் இல இடங்களில், ஞானஸ்நானம் பெற்றவர்கள் துணியெதுவும் அணியாமல் அதைப் பெற்றனர் என்று அறிகிறோம். அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பின்பு அவர்களுக்குப் புதிய சுத்தமான உடை தரப்பட்டது. J. N. D. கெல்லி அவர்கள், இந்த நடைமுறை "மன ஈர்ப்புள்ள ஒரு சடங்கை ஏற்படுத்திற்று" என்ற கருத்தைக் கொண்டிருந்தார். பழைய உடைகளை களைந்து போட்டு, புதிய உடைகளை

அணிதல் என்பது "[ஞானஸ்நானம் பெறும்] அவர்/அவள் தனது கடந்தகாலத்தின் தகுதியற்ற வாழ்வைக் கைவிட்டு அறியாக்குழந்தைப்பருவம் போன்று ஒரு புதிய வாழ்வை ஏற்றுக்கொள்ளுதலின் அடையாளங்களாக" இருந்தன.[2] கெல்லி அவர்களின் விவாதங்கள் இலேசாக ஒதுக்கப்பட இயலாதிருக்கையில், இவ்வசனப்பகுதியை மிகவும் அதிகமான நேரடியான அர்த்தத்தில் வலியுறுத்தி, இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் வளர்க்கப்பட்டிருந்ததான, ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னர் உடைகளைக் களைதல் என்ற பாரம்பரியம், இவ்வசனபகுதி இந்த நடைமுறையைப் பிரதிபலிப்பதாகக் கூற வாய்ப்புள்ளது.

அவர்கள் பல ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்களாக இருந்திருந்தாலும் அல்லது கிறிஸ்தவர்கள் ஆகி, ஒரு சில நாட்களே கடந்திருந்தாலும், அவர்கள் **திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருக்க வேண்டியிருந்தது.** "வாஞ்சையாயிருங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *epipotheō* என்ற வினைச்சொல் பலத்த சொல்லாக உள்ளது. இது ஒரு தாயின் மார்பில் இருந்து தனக்கு வேண்டிய பாலைப் பெற, பசியுடன் உள்ள குழந்தைபோன்று சக்தியுடன் ஏங்குதல் என்று அர்த்தப்படுகிறது. கிறிஸ்தவராக இருத்தலுக்கு ஒருவர் வளருதல் தேவைப்படுகிறது இயல்பான இந்த உடல் வளர உணவு அளிக்கப்படுதல் அவசியமாயிருப்பது போன்றே, ஆவியும் போஷிக்கப்பட வேண்டும். வளராதிருத்தல் என்பது கிறிஸ்தவருக்கு விருப்பத் தேர்வாக இருப்பதில்லை. ஒரு விசுவாசி வளருவார் அல்லது அவர் [ஆவிக்குரிய வகையில்] மரித்துப் போவார். வசனத்தின் மூலமாக அவர்களுக்குள் துரிதப்படுத்தப்பட்டிருந்த தேவபக்தியுள்ள ஏக்கங்கள், போஷிப்பில்லையேல் மரித்துப் போய்விடும். சுவிசேஷத்தினால் போஷிக்கப்படுவதன் மூலம் அவர்கள் வளருவார்கள். இதே போன்ற ஒரு குறிப்புடன் பேதுரு தமது இரண்டாவது நிருபத்தை முடித்தார்: "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" (2 பேதுரு 3:18).

"களங்கமில்லாத பால்" என்பதே கிறிஸ்தவர்கள் வாஞ்சையாயிருக்க வேண்டிய விஷயமாக உள்ளது. "களங்கமில்லாத" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, இதற்கு முந்திய வசனத்தில் "கபடம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு நேரடியான எதிர்வார்த்தையாக உள்ளது. ஆங்கில மொழியில் பிடிக்கக் கடினமான வார்த்தை விளையாட்டு ஒன்றை, அப்போஸ்தலர் இங்கு பயன்படுத்தினார். 2:2ல் பேதுரு, தமது வாசகர்கள் சகல "கபடத்தையும்" அல்லது "வஞ்சகத்தையும்" (*dolos*) ஒழித்துவிட வேண்டும் என்று கூறியிருந்தார். 2:3ல் அவர்கள் "களங்கம் இல்லாத" (*adolos*) பாலின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும் என்று கூறினார். அவர்களைப் போஷித்த, வசனமாகிய பால் சகல "களங்கத்தில்" இருந்தும் நீங்கலாக இருந்தது, அதாவது அது "சுத்தமானதாக" இருந்தது. பேதுருவின் வாசகர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டிருந்த சுவிசேஷம் (1:25) சுத்தமானதாக, கபடத்தில் இருந்து நீங்கலானதாக, களங்கம் இல்லாததாக இருந்தது. அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் மற்ற போதகர்களும் அது எவ்வாறு இருக்கும்படி முன்நிறுத்தினார்களோ, அதைக்காட்டிலும் அதிகமானதாகவோ அல்லது குறைவானதாகவோ அது இருக்கவில்லை

என்ற காரணத்தினால், அது களங்கமில்லாததாக இருந்தது. கபடத்திற்குப் புகழ்பெற்ற போதகர்கள்/தத்துவஞானிகள் ஆகியோர் கிரேக்க - ரோமானிய சந்தையிடங்களுக்கு அடிக்கடி வந்தனர். இப்படிப்பட்ட போதகர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களுக்கும் இடையில் குழப்பம் எதுவும் இருக்கக் கூடாது என்று பேதுரு விரும்பினார்.

"திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால்" என்று தமிழ் வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடர், NASB வேதாகமத்தில் "pure milk of the word" என்று தரவழைக்கப்பட்டுள்ளது, இது NRSV மற்றும் NIV வேதாகமங்களில் "pure spiritual milk" என்று தரவழைக்கப்பட்டுள்ளது. NASB வேதாகமம் KJV வேதாகமத்தைப் போன்றே இந்தச் சொற்றொடரைத் தரவழைக்கையில், அது நவீன மொழிபெயர்ப்புகள் மத்தியில் தனித்துச் சிறப்புடன் நிற்கிறது. "திருவசனமாகிய" (NASB) அல்லது "ஞான" (NRSV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *logikos* என்ற சொற்றொடரானது, ஒரு விஷயம் கவனமாக முழுமையும் சிந்திக்கப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தும் பெயர் உரிச்சொல்லாகும்; எனவே இது பகுத்தறிவுடையதாக அல்லது சிந்தனை நிரம்பியதாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை காணக்கிடக்கும் இன்னும் ஒரே ஒரு இடமான ரோமர் 12:1ல் இது, தேவனுக்கு ரோமானியக் கிறிஸ்தவர்கள் ஏறெடுக்க வேண்டிய ஆராதனை ஊழியத்தின் வகையை விவரித்தது. அவர்கள் "புத்தியுள்ள ஆராதனையை" ஏறெடுக்க வேண்டியிருந்தது, இது அவர்கள் தங்கள் ஊழியத்திற்குத் தங்களை அர்ப்பணித்தவர்களாக இருக்க வேண்டும் அல்லது அவர்களின் ஊழியம் ஆவிக்குரிய ஊக்குவிப்பு கொண்டதாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்திற்று. *Logikos* என்பது, பகுத்தறிவு சார்ந்த மற்றும் சிந்தனை நிறைந்த என்பவை பொருள்சாராக் கருத்துக்களாக இருந்ததால், அதன் விரிவாக்கமானது, நேரடி அர்த்தத்தின் கருத்தணர்வு இன்றி ஆவிக்குரிய வகையிலுள்ள பொருள் என்று கூறப்படலாம்.[3] 1 பேதுரு 2:3ன் சந்தர்ப்பப் பொருளில் இவ்வார்த்தை, நியாயமான, பகுத்தறிவான மற்றும் சிந்தனை நிறைந்த வலிவை அதிகம் கொண்டுள்ளதா அல்லது ஆவிக்குரிய மற்றும் நேரடிப் பொருளற்ற கருத்தைக் கொண்டுள்ளதா என்பதே மொழிபெயர்ப்பாளர்களுக்கான கேள்வியாக உள்ளது. முந்திய கருத்திற்கு NASB வேதாகமம் மிகச்சிறப்பானது என்றால், பிந்தியதற்கு NRSV மற்றும் NIV வேதாகமங்கள் மிகச்சிறப்பானவையாக உள்ளன.

NASB வேதாகமம், நல்ல காரணத்தைக் கொண்டு, "சுத்தமான, நியாயமான பால்" என்பது போன்ற சொற்றொடர்களைக் கைவிட்டுள்ளது. அதற்குப்பதிலாக, "pure milk of the word" என்ற சொற்றொடரைக் கொண்டு, பகுத்தறியும் சிந்தனையின் கருத்தைப் பிடிக்க, மொழிபெயர்ப்பாளர்கள் முயற்சிசெய்துள்ளனர். *Logos* மற்றும் *rhema* ஆகியவற்றின் உடனடி சந்தர்ப்பப் பொருளில் பேதுருவின் பயன்பாடு, இவ்விரு சொற்களையும் "வார்த்தை" என்று மொழிபெயர்த்துள்ளது, இது இவ்வசனத்தில் உள்ள *logikos* என்பது காரணம் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவற்றின் கருத்தைக் கொண்டுள்ளது என்று விவாதிக்கிறது. மற்றும் நேரடி அர்த்தமற்ற வகையில் பேசப் பேதுரு விரும்பியபோது, அவர் *pneumatikos* என்ற இன்னொரு வார்த்தையைப் பயன்படுத்தினார். அப்போஸ்தலர் பேதுரு, 1 பேதுரு 2:5ல்

“ஆவிக்கேற்ற பலிகள்” என்பதைக் குறிப்பிட்ட போது இந்த வார்த்தையையே பயன்படுத்தினார். கடைசியாக, யாக்கோபு மற்றும் பேதுரு ஆகியோருக்கு இடையிலான உறவு நேரடியான இலக்கியச் சார்பு கொண்டிராதிருக்கையில், இவ்விரு நிருபங்களும் ஒரே சிந்தை கொண்ட உலகத்தில் இருந்து வந்துள்ளன. இவ்வார்த்தையை யாக்கோபு பயன்படுத்திய வழியானது, இதைப் பேதுரு பயன்படுத்திய வழியைப் புரிந்துகொள்ள நமக்கு உதவக்கூடும். யாக்கோபு தமது புத்திமதியைத் தொடர்ந்து, “உங்களை உள்ளத்தில் நாட்டப்பட்டதா ... யுமிருக்கிற வசனத்தை ... ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று கூறி தேவபக்தி யற்ற நடக்கையைப் புறம்பே தள்ளும்படி கூறினார் (யாக்கோபு 1:21). இந்த ஆலோசனைகள் NASB வேதாகம மொழிபெயர்ப்புக்கு ஆதரவாக அளவீடுகளைத் தொடுகின்றன.

பேதுரு, *logikos* என்ற வார்த்தையினால் தரப்படும் சிறு நுட்ப வேறுபாடுகளின்மீது சொல்லாடல் செய்ய விருப்பம் கொண்டிருக்கலாம். அவர்கள் ஏங்க வேண்டியிருந்தது ஆவிக்குரிய பாலாக, அதாவது பொருள்வகையில் இல்லாததாக, ஆனால் பகுத்தறியக் கூடியதாக இருந்தது. கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கைக்கு ஒரு காரணத்தைக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பேதுரு வலியுறுத்தினார் (3:15). அவரது வாசகர்கள் கேள்விப்பட்ட செய்தியானது அவர்களின் உணர்வுகளுக்கு அதிகமாய் வேண்டுகோள் விடுத்தது. அது எபிரெய வேதவசனங்களின் ஆதரவையும் கிறிஸ்தவ தீர்க்கதரிசிகள் மற்றும் பிரசங்கியார்களுக்குத் தரப்பட்ட வாய்மொழி சாட்சியங்களின் ஆதரவையும் கொண்டிருந்தது (1:12, 25). தேவனுடைய வெளிப்படுத்துதல் என்ற பாலினால் போஷிக்கப்பட வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் வாஞ்சையாக இருக்கும்போது, **“இரட்சிப்பின் அம்சத்தில் நீங்கள் வளரும்படி”** என்பதே பேதுருவின் சாட்சியமாக இருந்தது.

“இரட்சிப்பு” என்பது தேங்கி நிற்கும் பண்பு அல்ல என்பதை அப்போஸ்தலர் தெளிவாக்கினார். ஒருவர் புதிய காலணி ஜோடி ஒன்றைப் பெற்று அதன்பின்பு அவற்றைப் பயன்படுத்துதல் போன்று இரட்சிப்பைப் பெறுவதில்லை. பேதுருவின் வாசகர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் மீட்கப் பட்டிருந்தாலும், அவர்கள் “இரட்சிப்பைப் பொறுத்த மட்டில் இன்னும் வளர” வேண்டியிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவைப் பற்றி இன்னும் அதிகமாய் அறிவதும், அவர்மீது இன்னும் முழுமையாகத் தங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைப்பதும் அவசியமாயிருந்தது. அவர்கள் 2:2ல் பட்டியலிடப்பட்டுள்ள குணங்களை ஒழிப்பதன் மூலம் கர்த்தரைப் போலாவதில் வளர வேண்டி இருந்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதி யவரின் வார்த்தைகளில் கூறுவதென்றால், **“ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம்விட்டு ... பூரணராகும்படி கடந்துபோவோமாக”** (எபிரெயர் 6:1). பேதுருவின் வாசகர்களுக்கு, கிறிஸ்தவத் தீர்க்கதரிசிகளும் போதகர்களும் இரட்சிப்பை அறிவித்திருந்தனர் (1:12, 25), ஆனால் அவர்கள் இன்னமும் வளர வேண்டியிருந்தது. சிறு பிள்ளைகளுக்குப் போல் அவர்களுக்குப் பால் தேவைப்பட்டது. அவர்கள் பெற்றுக்கொண்ட செய்தியானது, நேரடி அர்த்தத்தில் அல்ல ஆனால் ஆவிக்குரிய வகையில் பாலாக இருந்தது, ஆனால் அது அவர்களின் காரண

அறிவுக்கு வேண்டுகோள் விடுத்த செய்தியாகவும் இருந்தது, இது காரணத்திற்கு வேண்டுகோள் விடுத்ததால், இது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வேண்டியவற்றை அளித்தது.

கிறிஸ்து, ஜீவனுள்ள கல்; கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய வீடு (2:4-8)

4*மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், *5*ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்தஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். *6*அந்தப்படியே: இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. *7*ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று; *8*அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்.

பின்தொடரும் வசனங்களில், கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்வு என்ற கருத்தில் இருந்து கல் என்ற உருவகத்திற்கு மாறுதல் என்பது எதிர்பாராததாக உள்ளது. பலம் மற்றும் நிலைப்புத்தன்மை ஆகியவற்றிற்கு உருவகமாகக் கற்கள் பயன்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளைத் தேர்ந்தெடுத்த அப்போஸ்தலர், அவற்றைக் கிறிஸ்துவுக்கும் அவரது மக்களுக்கும் நடைமுறைப்படுத்தினார். இயேசு மூலைக்கல்லாக, புறக்கணிக்கப்பட்ட கல்லாக மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட கல்லாக இருக்கிறார். மற்றும் அவரது மக்கள் தேவனுடைய ஆலயத்தில் கற்களாக இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்போன்று தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளும்போது, அவரது பண்புகளில் பங்கேற்கின்றனர். ஜீவனுள்ள கற்கள் என்ற வகையில் அவர்கள் தேவனுடைய ஆலயத்தின் கட்டுமானத்தில் பயன்படுகின்றனர்.

வசனம் 4. *1 பேதுரு நிருபத்தின் இப்பகுதி முழுவதிலும், பேச்சு உருவகங்கள் அடிக்கடி வருவதாகவும் வண்ணம் மிக்கவையாகவும் உள்ளன. மாம்சம் புல்லைப் போன்றதாக உள்ளது; மனிதனின் மகிமை அதன் மலரைப் போன்றதாக உள்ளது (1:24). புதிதாய்ப்பிறந்த குழந்தைகளின் எல்லா வாஞ்சையோடும் கிறிஸ்தவர்கள் பாலை விரும்ப வேண்டியவர்களாக உள்ளனர் (2:2). இயேசு,* ***மனுஷரால் தள்ளப்பட்டதாயுனும் … ஜீவனுள்ள கல்லாக*** *இருக்கிறார்.*[4] *பேதுருவின் வாசகர்களும் கர்த்தரைப் போன்றே "ஜீவனுள்ள கற்களாக" இருக்கின்றனர். அவர்கள் "ஆவிக்கேற்ற*

மாளிகையாக" அல்லது வேறுவகையில் கருதுவதென்றால், அவர்கள் "பரிசுத்தஆசாரியக்கூட்டமாக" இருக்கின்றனர் (2:5). ஒவ்வொரு ஒப்புவமையும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதைப் பற்றிய கூடுதல் முகப்பு ஒன்றை ஆழ்ந்து சிந்திக்கும்படி விசுவாசிகளுக்கு அறைகூவல் விடுக்கிறது. இதற்கு வண்ணம் சேர்க்கும் வகையில் பிந்திய வசனங்களில், கிறிஸ்தவர்கள் "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும்" மற்றும் "பரிசுத்த ஜாதியாயும்" உள்ளனர் என்று பேதுரு கூறினார் (2:9). அப்போஸ்தலரின் வாசகர்கள், தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள் என்ற வகையில் தங்களுக்கும். தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் மக்களுக்கும் இடையில் தொடர்ச்சி ஒன்றைக் காணக்கூடும்படிக்கு அப்போஸ்தலர் இந்தப் பேச்சு உருவகங்களைத் தேர்ந்தெடுத்தார்.

2:4க்கு முன்னதாக பேதுரு, சோதனையின் முகத்தில் கிறிஸ்தவ வாழ்வின் பரிசுத்தம் என்ற பாடக் கருத்தின் மீது கவனம் செலுத்தியிருந்தார், இப்போது அவர், சமூகம் என்ற வகையில் விசுவாசிகள் மீது மிகவும் வெளிப்படையாகத் தமது கவனத்தைத் திருப்பினார், மற்றும் கிறிஸ்தவத்தைச் சார்ந்துள்ள மக்களின் அறிக்கை மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அதை விவரித்தலை ஆழ்ந்து சிந்தித்தார்

கிறிஸ்தவர்கள் "ஜீவனுள்ள கல்லாகிய" இயேசுவினிடம் வந்தவர்கள் என்ற வகையில் விவரிக்கப் பட்டுள்ளனர். இயேசு "விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்" லாக இருக்கிறார் என்று பிந்திய வசனம் ஒன்றில் (2:6). பேதுரு கூடுதலாகக் கூறினார். இந்த ஒப்புவமையைக் கொண்டு பேதுரு அர்த்தப்படுத்தியது என்ன என்பதில் சற்று நிச்சயமற்றதன்மை உள்ளது. யோயாக்கீம் ஜெரேமியா அவர்கள், "மூலைக்கல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை அஸ்திபாரக்கல்லைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தைக் கொண்டிருந்தார். இந்த ஒப்புவமை, ஒரு கட்டிடத்தின் முக்கியமான கல் அல்லது உச்சக்கல்லைக் குறிக்க அதிக வாய்ப்புள்ளது என்று அவர் வாதிட்டார்.[5] பேதுரு தமது வாசகர்கள் இயேசுவை (1) அஸ்திபாரக்கல்லாக அல்லது (2) உச்சக்கல்லாக, எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பியிருந்தாலும், அது அந்த அப்போஸ்தலர் இவ்விடத்தில் ஏற்படுத்திய கருத்தில் சிறிதளவே மாற்றத்தை ஏற்படுத்தும். முக்கியமான கல் என்ற வகையில் இயேசு மனிதகுலத்திற்குத் தேவனுடைய கனிதரும் விளைவு யாவற்றையும் கொண்டுவந்திருக்கிறார் அல்லது அவர்மூலமாக விசுவாசத்தின் விளைவு நிறைவாக உணர்ந்தறியப்படுகிறது என்று விசுவாசிகள் புரிந்து கொள்வார்கள். இருப்பினும் ஜெரேமியாவின் கூற்று சரியானதுதானா என்பதில் சந்தேகம் உள்ளது. எபேசியர் 2:20ல் பவுல் "முலைக்கல்" என்ற இதே வார்த்தையைப் பயன்படுத்தினார், அங்கு சந்தர்ப்பப் பொருளானது, "அஸ்திபாரக்கல்" என்பதே அர்த்தமாக உள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது. மற்றும் 1 பேதுரு 2:6ல் "மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்" என்பதே வார்த்தை அமைவாக உள்ளது. கல்லை வைத்தல் என்பது அஸ்திபாரக் கல்லையே குறிப்பிடுகிறது.

இயேசு அல்லது அவரைப் பின்பற்றுபவர்கள் "ஜீவனுள்ள கற்களாக" இருந்தனர் என்று கூறுதலானது, முதல் மனப்பதிவில் ஒரு

முரண்தொடையாகத் தோன்றுகிறது. கற்கள் உயிரற்றவையாக உள்ளன. "உயிரற்ற கல்" என்பது "ஜீவனுள்ள கல்" என்பதைக் காட்டிலும் அதிகமாகப் புரிந்துகொள்ளப்படக் கூடிய ஒப்புவமையாக உள்ளது. இருந்தபோதிலும், பேதுரு "ஜீவனுள்ள கல்" என்ற ஒப்புவமையைத் தழுவிக்கொண்டார். அவரது வார்த்தைகள், கட்டுவோரால் புறக்கணிக்கப்பட்ட கல் என்ற, புதிய ஏற்பாட்டில் நன்கு பழக்கப்பட்ட ஒரு ஆய்வுக்கருத்திற்குத் திரும்பின (சங்கீதம் 118:22; மத்தேயு 21:42; மாற்கு 12:10; லூக்கா 20:17; நடபடிகள் 4:11). அப்போஸ்தலர் தமது வாசகர்கள், சபையின் வாழ்விற்கு இயேசு மூலைக்கல்லாக இருக்கிறார் என்பதை அறிய வேண்டும் என்று விரும்பினார். அவரே விசுவாசமும் நடக்கையும் அளக்கப்பட வேண்டிய தர அளவையாக உள்ளார். இயேசு அஸ்திபாரக்கல்லாக. மூலைக்கல்லாக இருக்கிறார் என்பது சிறிதளவே சிரமத்திற்குக் காரணமாகிறது, ஆனால் கர்த்தர் "ஜீவனுள்ள கல்லாக" இருக்கிறார் என்பது அழுத்தமான ஒப்புவமையாக உள்ளது. பேதுரு தட்டிக்கழிக்கவில்லை. வாழ்வு என்பது தேவனுடைய உள்ளான பண்பாக இருக்கையில், கிறிஸ்துவைப் பொறுத்த மட்டிலும்கூட அது அவ்வாறே உள்ளது (யோவான் 1:4). மரித்த இயேசுவை அல்ல, ஆனால் உயிர்த்தெழுந்த கர்த்தரையே கிறிஸ்தவர்கள் தொழுதுகொள்கின்றனர். அவர் தமது சபையின் வாழ்வில் துடிப்பாக ஈடுபாடு கொண்டுள்ளார். அவரது மக்கள் அவரைத் தொழுதுகொள்ளும்போது, அவர் அதைக் கேட்டு செயல்படுகிறார். இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் வாழ்கிறார்; அங்கிருந்து அவர் திரும்பவும் வருவார், அப்போது நம்பிக்கை உணர்ந்து அறியப்படும். இயேசு வாழ்கிறார்; இயேசு ஒரு கல்லாக இருக்கிறார். ஒவ்வொரு ஒப்புவமையும் கிறிஸ்தவர்கள் தாங்கள் தொழுதுகொள்ளும் கர்த்தரைப் பற்றிப் புரிந்துகொள்ளுதலில் வளர உதவுகிறது.

அவரிடத்தில் சேர்ந்தவர்கள் என்ற அளவின் அடிப்படையில் கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களைக் கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர். பேதுரு பயன்படுத்திய "சேர்ந்த" *(proserchomai)*, என்ற அதே வினைச்சொல், எபிரெயர் 4:16ல் "அண்டையிலே சேரக்கடவோம்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." தேவனிடத்தில் சேருவதற்குத் தேவனால் அழைக்கப்படுதலை இலேசாக எடுத்துக்கொள்ளல் ஆகாது. தேவனுடைய பரிசுத்தமான பிரசன்னத்தில் இருத்தல் என்பது பயபக்திமிக்க செயலாக உள்ளது. ஆலயத்தில் தேவனை ஏசாயா கண்டபோது, பயம் அவரை [ஏசாயாவை] மேற்கொண்டது. "ஐயோ! அதமானேன், ... சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே" (ஏசாயா 6:5). ஏனெனில் ஆரோனுடைய மகன்களிடம் கண்டறியப்பட்டபடி, ஒரு ஆசாரியரும்கூட பயபக்தியற்ற நிலையில் கிட்டிச் சேருதல் என்பது இடர்ப்பாடுள்ள விஷயமாக இருந்தது (லேவியராகமம் 10:1, 2). ஜெபத்திற்காகவோ அல்லது ஆராதனைக்காகவோ, தேவனுடைய பிரசன்னத்திற்குள் வருதல் என்பது ஒருக்காலும் சிறிய விஷயமாக இருப்பதில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள் அவரிடத்திற்குத் தைரியத்துடன் வருகின்றனர். கிறிஸ்தவர்கள் சேவிக்கும் மீட்பர், மனித மாம்சத்தில் வந்து மனிதரின் பாவத்திற்காக மரித்தார்; அவர் இரக்கமுள்ளவர்

என்பதை அவர்கள் ருசி பார்த்துள்ளனர். ஜீவனுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வருதல் என்பது அச்சம் நிறைந்ததாக இருக்கலாம், ஆனால் மத்தியஸ்தரான கிறிஸ்துவுடன் ஒரு விசுவாசி எப்போதும் "அவரிடத்தில் கிட்டி சேரலாம்."

மனிதர் தேவனிடத்தில் கிட்டிச்சேர உதவியாக உள்ள "ஜீவனுள்ள கல்" என்பது "மனுஷரால் தள்ளப்பட்டதா" யிருந்தது என்பது முரண்பாடாக உள்ளது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11). இயேசு, கட்டுவோரால் தள்ளப்பட்ட கல்லாக இருந்தார் என்று அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு நினைவூட்டியபோது, அவர் கர்த்தருடைய வழிகாட்டுதலைப் பின்பற்றினார் ஆனால் தேவன் அவரை தமது வீட்டின் மூலைக்கல்லாகத் தேர்ந்து கொண்டிருந்தார் (லூக்கா 20:17). இயேசு, ***தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற*** *ஜீவனுள்ள கல்லாக இருக்கிறார் என்பது, அவர் மனிதரால் ஏற்றுக்கொள்ளப்பட்டாரா அல்லது தள்ளப்பட்டாரா என்பதைக் காட்டிலும் அதிகம் முக்கியமானதாக உள்ளது. மற்ற மொழிபெயர்ப்புகளில்* "chosen and precious" *என்றுள்ளது* (NRSV; *காண்க* KJV; NIV). *"தெரிந்துகொள்ளப்பட்டது" என்ற வார்த்தையை ஏற்கனவே அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்குப் பயன்படுத்தியிருந்தார் (1:2). இயேசு தேர்ந்துகொள்ளப் பட்டவராகவும் விலையேறப்பெற்றவராகவும் இருந்தபோதிலும் மனிதரால் தள்ளப்பட்டார், பேதுருவின் வாசகர்கள் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாகவும் அவருக்கு விலையேறப் பெற்றவர்களாகவும் இருந்தாலும் அவர்கள் மனிதரால் தரப்பட்ட உபத்திரவங்களைச் சகித்துக் கொண்டு இருந்தனர் என்பதே இங்கு மறைகருத்தாக உள்ளது. அவர்களின் பாடுகளும் சோதனைகளும் தேவன் அவர்களைக் கைவிட்டிருந்தார் என்பதற்கு அடையாளங்களாக இருக்கவில்லை. அவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிக்கொண்டிருந்தனர் (2:21).*

வசனம் 5. ஆவிக்கேற்ற மாளிகை *என்ற வார்த்தைகளைப் பேதுரு பயன்படுத்தியபோது, தமது வாசகர்கள் எருசலேமின் தேவாலயத்தை நினைக்க வேண்டும் என்று விரும்பினாரா என்பதில் கொஞ்சம் சந்தேகம் உள்ளது. பழைய ஏற்பாட்டில் "மாளிகை" (வீடு) என்பது தேவாலயத்திற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும்.*[6] *யூதர்களின் சமூகத்திற்கும் அவர்களின் தேசீய இருப்பிற்குமான குவிய இடம் என்ற வகையில் தேவாலயத்துடனான உறவை முறித்துக் கொள்ளுதல் என்பது யூதர்களுக்குக் கடினமான விஷயமாயிருந்தது (நடபடிகள் 6:13, 14). தேவன் தேர்ந்துகொண்ட மக்களுடனான அவரது உறவின் மிகக்குறிப்பிடத்தக்க காரணியான தேவாலயம் இயேசுவின் உடலினால் இடமாற்றப்படும் என்று அவரே குறிப்பிட்டிருந்தார் (யோவான் 2:19-21). தேவாலயம் என்பது, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் ஒரு நிறுவனமாகவும் யூதர்களின் தேசீய வாழ்வாகவும் இருந்தது. அந்தக் கருத்தைக் கிறிஸ்தவர்கள் ஏன் கைவிடக்கூடாது? கிறிஸ்தவர்கள் யார் என்பதைப் பற்றிய முக்கிய விஷயங்களை அவர்களுக்குத் தேவாலயம் போதிக்க முடியும் என்பதே பேதுருவைப் பொறுத்தமட்டில் இதற்குப் பதிலாக இருந்தது. இயேசு "ஜீவனுள்ள கல்லாக" இருக்கிறார் என்று*

கூறிய நிலையில் அப்போஸ்தலர், கிறிஸ்தவர்கள் "ஆவிக்கேற்ற மாளிகையாக ... கட்டப்பட்டுவருகிறீர்கள்" என்று கூறுவதன் மூலம் கட்டிட ஒப்புவமையைத் தொடர்ந்து எடுத்துரைத்தார்.

தேவனுடைய ஆலயம் என்ற கருத்து, புதிய ஏற்பாடு ஒப்புவிக்க மறுக்கும் பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் தேவாலயம் என்பது, தேவன் தமது நாமத்தை வைத்து தமது பிரசன்னத்தை அறியச்செய்த இடமாக இருந்தது போன்று, புதிய ஏற்பாட்டிலும் ஒரு தேவாலயம் என்பது தேவன் வாசம்செய்யும் இடமாக உள்ளது. தேவாலயம் என்பது தொடர்ந்து இருக்கலாயிற்று. தேவாலயக் கட்டிடத்தில் கற்கள் மாட்சிமையானவையாக இருந்தன (மாற்கு 13:1), புதிய தேவாலயத்தில் **ஜீவனுள்ள கற்களாக** இருத்தல் என்பது எல்லையற்ற வகையில் அதிகம் விலையேறப் பெற்றவையாக உள்ளது. தேவனுடைய மாளிகையின் கற்கள், பொன்னினாலும் விலையேறப்பெற்ற ஆபரணங்களினாலும் ஜொலிப்பதற்கு மாறாக விசுவாசத்தினாலும் கிறிஸ்தவ வாழ்வின் நற்தன்மையினாலும் அழகூட்டப்படுகின்றன. சபையானது, நன்கு கட்டப்பட்ட மாளிகை போன்று தேவன் வாசம் பண்ணும் ஆலயமாக உள்ளன என்பது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பயன்படுத்த விரும்பிய ஒப்புவமைகளில் ஒன்றாக இருந்தது (1 கொரிந்தியர் 3:16, 17; எபேசியர் 2:21; எபிரெயர் 3:6).

பேதுரு தமது நிருபங்கள் இரண்டிலும் எவ்விடத்திலும் "சபை" என்ற வார்த்தையை ஒருக்காலும் பயன்படுத்தவில்லை என்பது ஆர்வத்திற்குரிய/ கவனிக்கத்தக்க விஷயமாக உள்ளது. அதே வேளையில் இந்த அப்போஸ்தலர், கிறிஸ்தவ வாழ்வின் சமூக இயல்பைப் பற்றி மிகத்துல்லியமாக அறிந்திருந்தார். 5ம் வசனத்தில் அவர், கிறிஸ்தவர்களை ஒட்டுமொத்தமாக "ஆவிக்குரிய மாளிகை" என்று கூறியதன்மூலம் அவர், கிறிஸ்தவத்தின் சக சார்ந்திருத்தலைக் குறிப்பிட்டார். 5:2ல் அவர்களை அவர் "தேவனுடைய மந்தை" என்று அழைத்தார். கர்த்தருடைய சபையை "ஆவிக்கேற்ற மாளிகை" என்று பேதுரு அழைத்தபோது அவர் சபையைப் பற்றிக் கூற மனவிருப்பம் கொண்டிருந்து என்ன என்பது முற்றிலும் தெளிவாகத் தெரிவதில்லை. "ஆவிக்குரிய" என்பது புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சாத்தியமான அர்த்தங்களில் பின்வருபவை உள்ளடங்குகின்றன: (1) சபை உலகப்பிரகாரமான பொருள்களினால் அமைக்கப்படுவதில்லை என்ற காரணத்தினால் அது "ஆவிக்குரிய மாளிகையாக" உள்ளது. "ஆவிக்கேற்ற பலிகள்" (மேலும் 2:5), "ஞானக்கன்மலை" (1 கொரிந்தியர் 10:4), மற்றும் "ஆவிக்குரிய சரீரம்" (1 கொரிந்தியர் 15:44) ஆகிய இடங்களில் இவ்வார்த்தையின் அர்த்தம் அதுவாகவே காணப்படுகிறது. (2) கிறிஸ்தவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கிறார் என்று பவுல் உறுதிப்படுத்தினார் (ரோமர் 8:14-16). சபையில் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருப்பதால் அது "ஆவிக்கேற்ற மாளிகையாக" இருக்கலாம். (3) சபையைப் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகிறார் என்பதால், அது "ஆவிக்கேற்ற மாளிகையாக" உள்ளது என்பது இங்கு சிந்தனையாக இருக்கலாம். நியாயப்பிரமாணம் (ரோமர் 7:14) அல்லது வரங்கள் (1 கொரிந்தியர் 12:1) ஆவிக்குரியவைகளாக இருந்தது போன்று, இது (சபை) ஆவிக்குரியதாக உள்ளது - ஏனெனில் தேவன் சித்தம் கொண்டதை நிறைவேற்ற அவைகள்

ஆவியானவரால் பயன்படுத்தப்பட்ட கருவிகளாக இருந்தன. இவற்றில் மூன்றாவது சாத்தியக்கூறு மிகச்சிறந்த ஒன்றாக உள்ளது. சபையினுள்ளும் சபையின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் செயல்படுகிறார் என்பதால், தேவனுடைய மக்கள் ஜீவனுள்ள கற்களால் ஏறப்படுத்தப்பட்ட "ஆவிக்கேற்ற மாளிகையாக" உள்ளனர்.

"ஆவிக்குரிய" என்ற வார்த்தையைப் பற்றி ஒருவர் புரிந்து கொள்வது எது என்பது, **கட்டப்பட்டுவருகிறீர்கள்** என்ற வினைச்சொல் பற்றிய அவரது விளக்கத்தின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தும். இது "நீங்கள் கட்டப்பட்டு வருகிறீர்கள்" என்ற ஒரு சாதாரண கூற்றாக இருக்கலாம் அல்லது "நீங்களே கட்டப்படுங்கள்" என்ற ஒரு கட்டளையாக இருக்கலாம். இந்த இடத்தில் கிரேக்க மொழியில், குறிப்புரைத்தல் அல்லது கட்டளையிடுதல் ஆகியவற்றின் வினைச்சொற்களுக்கு இடையில் வித்தியாசம் எதுவும் ஏற்படுத்தப்படுவதில்லை. NRSV வேதாகமம் வினைச்சொல்லை கட்டளையாக எடுத்துக் கொள்கிறது, அதே வேளையில் NASB வேதாகமம் இதை குறிப்புரைத்தலாக எடுத்துக்கொள்கிறது. NASB வேதாகமம் சிறப்பான விஷயத்தைக் கொண்டுள்ளது. விசுவாசிகள் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய வாழ்வில் பங்கேற்கும்போது, தேவனுடைய மகிமைக்காக "ஆவிக்குரிய மாளிகையாக" அவர்களைக் கட்டி எழுப்புவதற்குப் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மத்தியில் செயல்படுகிறார்.

பல்வண்ணக் காட்சி காட்டும் கருவி ஒன்றைப் போல், பேதுரு தமது உருவகங்களைக் கற்களில் இருந்து தேவாலயத்திற்கும், பலிகளைச் செலுத்தும் ஆசாரியர்களுக்கும், பலிகளுக்கும்கூட மாற்றினார். விசுவாசிகள் கற்களாக, தேவாலயமாக மற்றும் **பரிசுத்த ஆசாரியக்கூட்டமாக** உள்ளனர். மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆசாரியர்கள், மக்களுக்கும் தேவனுக்கும் இடையில் நின்றனர். ஆசாரியர்கள் மாத்திரமே பலிசெலுத்த முடிந்தது. இஸ்ரவேலின் முதல் அரசரான சவுல், தாம் ஆசாரியராக இராதிருந்தும் பலிகளைச் செலுத்தியதால் தேவனுக்குப் பிரியமற்றுப்போனார் (1 சாமுவேல் 13:8-14). இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் ஆசாரியர்களாக இருக்கவில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஆசாரியர்களாக உள்ளனர். எல்லா விசுவாசிகளுக்குமான ஆசாரியத்துவம் என்பது சீர்படுத்துதலுக்கு மாபெரும் கூவுதல்களில் ஒன்றாக உள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 1:6), ஆயினும் இந்தக் கருத்து நியாயப்பிரமாணத்தில் அறியப்படாமலிருக்கவில்லை (யாத்திராகமம் 19:6; காண்க ஏசாயா 61:6). இஸ்ரவேல் மக்கள் சார்பில் காணிக்கை செலுத்துவதற்குத் தேவனுடைய சமூகத்தில் செல்லும் சிலாக்கியம் பெற்றிருந்த ஆரோனின் குமாரர்கள் போன்று, கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த காணிக்கைகளைச் செலுத்துவதற்குக் கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் தைரியமாக வரமுடியும். தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல. அவரது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது சுய உரிமையில் ஆசாரியராக இருப்பதால், அவர்கள் ஒவ்வொருவரும் அவரிடத்தில் சென்று சேர முடியும்.

விசுவாசிகள் "ஆவிக்குரிய மாளிகை" க்குள் கட்டியெழுப்பப்படுவது போன்றே, **அவர்கள் இயேசுகிறிஸ்து மூலமாகத் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தவும் வேண்டும்.** "பலி" என்பதற்கான கிரேக்க மற்றும் எபிரெய வார்த்தைகள் இரண்டுமே இரத்த பலிசெலுத்துதலைக்

குறிக்கின்றன. பலி என்பது கொல்லப்பட்ட மிருகமாக இருந்தது, ஆனால் இவ்வார்த்தை தேவனுக்குச் செலுத்தப்படும் மற்ற விஷயங்களையும் உருவகமாகக் குறிப்பிடப்பயன்பட்டிருக்க வாய்ப்புள்ளது. சங்கீதக்காரர் "நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு" (சங்கீதம் 50:14); "பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்" (சங்கீதம் 51:16) என்று எழுதினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" என்று எழுதியபோது, இரத்தப்பலியைத் தமது சிந்தையில் கொண்டிருக்க வில்லை என்பது தெளிவு (எபிரெயர் 13:15).

வேதாகமம் கிரேக்கு மற்றும் எபிரெயு ஆகிய மொழிகளில் இருந்து இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட போது, இலத்தீன் மொழிபெயர்ப்பில் "பரிசுத்த கொடை," "தேவனுக்குச் செலுத்தப்படும் கொடை" என்று அர்த்தப்படும் *sacrificium,* என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. "இரத்தப்பலி" என்று அர்த்தப்படும் ஆங்கில வார்த்தை இல்லாத நிலையில், ஆங்கில மொழிபெயர்ப்புகள் இலத்தீன் மொழியில் இருந்து கடன்பெற்ற "sacrifice" என்ற வார்த்தையைக் கொண்டு இங்கு அர்த்தத்தைத் தரவழைத்தன. அது ஒரு மோசமான தெரிவாக இருப்பதில்லை. Sacrifices என்பவை உண்மையில் தேவனுடைய மக்கள் அவருக்குக் கொடுக்கக் கொண்டு வந்த கொடைகளாக இருந்தன. பிரபலமான பயன்பாட்டில் "sacrifice" என்பதன் அர்த்தம் அசைக்கப்பட்டது என்பது துரதிர்ஷ்டவசமானது. "தேவனுக்கு ஒரு பரிசு கொடுத்தல்" என்பதே இதன் அர்த்தமாக உள்ளது, ஆனால் பெரும்பான்மையான நவீனகால மக்களுக்கு "sacrifice" என்பது "ஒருவர் சிலவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்தல்" என்றே அர்த்தப்படுகிறது. sacrifice என்பது ஆராதிப்பவர் தமக்குத்தாமே மறுத்துக் கொள்ளுதல் என்பதன் மீது கவனம் குவிப்பதாக இருக்கக் கூடாது, மாறாக கொடுத்தல் மூலம் அவர் வெளிப்படுத்த விரும்பும் அவரது விருப்பத்தின் மீதே கவனம் குவிப்பதாக இருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் தேவனுக்கென்று எதையும் கொடுக்க விருப்பமாயிருத்தல் என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். தேவனுக்குக் கொடுப்பதற்குத் தேவன் நம்மை அனுமதிக்கிறார், ஏனெனில் கொடுத்தல் என்பது அன்பு தன்னையே வெளிப்படுத்தும் நிகழ்வில் உள்ளாகப் பொதிந்துள்ளது.

வசனம் 6. அப்போஸ்தலர் தமது நிருபத்தின் வசனங்கள் 4 மற்றும் 5 ஆகியவற்றில் தாம் உறுதிப்படுத்தியவற்றை, பழைய ஏற்பாடாகிய **வேதம்** பற்றிய குறிப்பு மறுவலிவூட்டும் என்று நினைத்தார். இஸ்ரவேலுக்குத் தேவனுடைய வெளிப்பாட்டில், நசரேயனாகிய இயேசுவைக் கிறிஸ்தவர்கள் கண்டனர். பேதுரு, வசனங்களின் குழு ஒன்றை அளித்தார்: ஏசாயா 28:16; சங்கீதம் 118:22; ஏசாயா 8:14. இவ்வசனப் பகுதிகளின் பொதுவான ஆய்வுக்கருத்து, பழைய ஏற்பாட்டில் இவற்றின் காட்சி அமைவிலோ அல்லது இவைகள் போதிப்பவற்றிலோ இருப்பதில்லை. மாறாக அது [பொதுவான ஆய்வுக்கருத்து], இவைகள் "கல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தும் வகையில் இருக்கிறது. முதல் வசனப்பகுதியான ஏசாயா 28:16, LXX, (செப்துவஜிந்த்) வேதாகமத்தின் மிகச்சரியான குறிப்பல்ல, ஆனால் அதே வார்த்தைகள் பலவற்றை இது கொண்டுள்ளது. இவ்வசனத்தின் கடைசிச்

சொற்றொடரான "விசுவாசிக்கிறவன் ..." என்பது LXX வேதாகமத்தில் இருந்து வந்துள்ள வார்த்தையாக உள்ளது. இதே வசனப்பகுதியை ரோமர் 9:33ல் பவுல் குறிப்பிட்டார், அங்கு அவர் இதை ஏசாயா 8:14 உடன் ஒன்றிணைத்தார். இயேசு யூதர்களால் வெறுக்கப்பட்டிருந்தார் என்பதே இந்தக் குறிப்பைக் கொண்டு பவுல் ஏற்படுத்திய கருத்தாகும்.

சந்தர்ப்பப் பொருளில் ஏசாயா 28:16ஐ ஆய்வு செய்யும் வாசகர், அந்தத் தீர்க்கதரிசி "ஆகையால் எருசலேமிலுள்ள இந்த ஜனத்தை ஆளுகிற" வர்களைப் பற்றி எழுதியிருந்தார் என்பதை விரைவில் காண்பார்கள் (ஏசாயா 28:14). அவர் இஸ்ரவேலின் மார்க்கத் தலைவர்களைப் பற்றிப் பேசினார். தீர்க்கதரிசி மூலமாகத் தேவன், அப்போதய ஆட்சியாளர்களுக்கு நேரெதிராக இருக்கும் இன்னொரு ஆட்சியாளரைத் தரப்போவதாக வாக்களித்தார், அவர் "நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக" வைப்பார் (ஏசாயா 28:17). இதை எழுதிய போது ஏசாயா இயேசுவைத் தமது சிந்தையில் கொண்டிருந்தாரா? இதை அறிய வழியெதுவும் இல்லை, ஆனால் ஏவுதல் பெற்றிருந்த அப்போஸ்தலரான பேதுருவும் இந்தத் தீர்க்கதரிசியும், தேவன் **சீயோனில்** வைத்த **விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்** உண்மையில் இயேசுவே என்பதில் மனநிறைவு கொண்டிருந்தனர். மூலைக்கல் என்ற வகையில் இயேசு, தேவன் தமது மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்பினாரோ அவை யாவற்றிற்கும் அளவுகோல் ஆனார். கட்டிடத்தில் உள்ள ஒவ்வொரு ஜீவனுள்ள கல்லாகிய கிறிஸ்தவர்கள் யாவரும், அந்த மூலைக்கல் லுடன் தாங்கள் கொண்டுள்ள உறவின் மூலமாகத் தேவனுடனும் தங்கள் சகவிசுவாசிகளுடனும் தங்கள் உறவைத் தெளிவாகப் புரிந்து கொள்கின்றனர். அதே வேளையில் பேதுரு, ஏசாயா 28:16ஐக் குறிப்பிடுவதன் மூலமாக, மாம்சப் பிரகாரமான இஸ்ரவேலுக்கும் ஆவிக்குரிய இஸ்ரவேலுக்கும் இடையிலான தொடர்பை விவரித்து, தேவன் கிறிஸ்துவுக்குள் அடிப்படையில் புதிதான சிலவற்றைச் செய்துள்ளார் என்பதைச் செயல்விளக்கப்படுத்தினார். ஏர்னெஸ்ட் பெஸ்ட் அவர்கள், கிறிஸ்துவுக்குள் "தேவன் புதிதான சிலவற்றைச் சிருஷ்டித்தார், அது மனிதகுலத்தின் மீட்பு ஆகும்" என்று எழுதினார்.[7]

"சீயோன்" என்பதைப் பற்றித் தக்க வகையில் பேசுவதென்றால், அது தேவாலயம் அமைந்திருந்த மலையுச்சியின் தெற்குப்பகுதியில் இருந்து வெளியே நீண்டிருந்த, தாவீதின் நகரமாகும் (2 சாமுவேல் 5:7). காலங்களினூடே, சாட்சியத்தினால், இந்தப் பெயர் எருசலேம் முழுவதற்கும் வழங்கப்பட்டு வந்தது (சங்கீதம் 102:21), பின்பு இது குறிப்பாகத் தேவாலயம் அமைந்திருந்த மலைக்கும் வழங்கப்பட வந்தது (ஏசாயா 8:18; மீகா 4:7). இயேசுவும் அவரில் விசுவாசம் கொள்பவர்களும் "ஆவிக்கேற்ற மாளிகையில்" "ஜீவனுள்ள கற்களாக" இருக்கின்றனர் என்று அப்போதுதான் பேதுரு உறுதிப்படுத்தி இருந்திருத்ததால், இவ்வசனத்தில் "சீயோன்" என்பது தேவாலய மலைக்கான குறிப்பாக இருக்க வாய்ப்பு உள்ளது.

"சீயோனில்" வைக்கப்பட்ட **தெரிந்துகொள்ளப்பட்ட கல்லான** இயேசுவைப் பொறுத்தமட்டில், **அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை** என்று பேதுரு கூறினார். அவர் *ou mē* என்ற பலமான அழுத்தமான எதிர்மறைச் சொல்லைப் பயன்படுத்தினார். அவர்மீதுள்ள விசுவாசத்தின் விளைவாக வெட்கப்படுதல் ஏற்படச்

சாத்தியக்கூறு எதுவுமே இருப்பதில்லை. NASB வேதாகமத்தில் "disappointed" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *kataischunō,* என்ற கிரேக்கச் சொல் பொதுவாக (தமிழ் வேதாகமத்தில் உள்ளது போன்று) "வெட்கப்படுவதில்லை" என்று தரவழைக்கப்படுகிறது. NIV வேதாகமத்தில் "will never be put to shame" என்றுள்ளது. ஒருவர் தமது விசுவாசத்தைக் கிறிஸ்துவின்மீது வைக்கும்போது, சிறுமைப்படுதல் மற்றும் வெட்கப்படுதல் ஆகியவை ஏற்படச் சந்தர்ப்பமே ஏற்படுவது இல்லை. கிரேக்க - ரோமானிய உலகத்தில், "வெட்கம்" என்பது இதற்கான ஆங்கில வார்த்தை தெரிவிக்கும் கருத்தைக் காட்டிலும் அதிகமான சமூக உள்ளடக்கக் கருத்தைக் கொண்டிருந்தது. தற்கால ஆங்கிலத்தில் வெட்கம் என்பது பெரும்பாலும் உள்ளான, உளவியல் சார்ந்த உணர்வாக உள்ளது. பேதுரு வாழ்ந்திருந்த கிரேக்க உலகத்தில் இருந்தவர்கள், வெட்கம் என்பதை, ஒருவர் தமது சமகாலத்தவர்களின் அல்லது ஒருவேளை தேவனின் முன்பாக அவமானமாக உணருதலின் வகையில் நினைத்திருப்பார்கள்.

வசனம் *7.* NASB வேதாகமத்தில் **this precious value, then, is for you who believe,** ["மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன்"] என்றுள்ள இடத்தில் "Therefore the honor is to you believers" என்பதே இன்னும் சிறப்பான மொழிபெயர்ப்பாக இருக்கும் என்று பல விளக்கவுரையாளர்கள் நினைக்கின்றனர். அந்தத் தரவழைப்பு இலக்கணத்திற்கு மிகச்சரியாகப் பொருந்துவது மட்டுமின்றி, அது *2:6*ன் முடிவில் உள்ள "வெட்கம்" என்பதற்கு நேர்த்தியான எதிர்மறையையும் அளிக்கிறது. இந்த மொழிபெயர்ப்பின் சார்பாக வாதாடியவர்களில் ஃபிரான்சீஸ் ரைட் பியர் அவர்களும் இருந்தார். அவர், "விசுவாசிகளுக்குத் தரப்படும் கீர்த்தியானது, தேவன் கிறிஸ்துவுக்குத் தந்த கீர்த்தியாகவே உள்ளது, அவருடன் [கிறிஸ்துவுடன்] அவர்கள் ஆவிக்கேற்ற மாளிகையின் கட்டுமானத்தில் ஒன்றிணைக்கப் பட்டுள்ளனர்" என்று எழுதினார்.[8] பியர் அவர்கள் இந்தச் சொற்றொடரைப் புரிந்து கொண்டிருந்த விதத்தில் இருந்து வேறுபட்ட வகையில் இதை NASB வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் புரிந்துகொண்டிருந்தனர். அவர்கள், கிறிஸ்தவர்களுக்கு இயல்பாகச் சேரும் "விலையேறப்பெற்ற" என்பது சீயோனின் விலையேறப்பெற்ற கல்லாகத் தேவன் அவர்களை வைத்தமையே என்று புரிந்துகொண்டனர்.

சங்கீதம் *118:22* (LXX ல் *117:22*) ஐச் சுட்டிக்காண்பித்தல் என்பது **கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கு** ஏற்படும் விளைவை விவரிக்கிறது. மத்தேயு *21:42*ல் இயேசு, சங்கீதத்தைக் குறிப்பிட்டார், மற்றும் அதை பேதுரு, நடபடிகள் *4:11*ல் குறிப்பிட்டார். இவ்விரு இடங்களிலும், கட்டுவோர்களாக இருந்த யூதத் தலைமைத்துவம் இயேசுவைப் புறக்கணித்தனர் என்பதே விஷயமாக இருந்தது, இங்கு பேதுரு ஏற்படுத்திய கருத்து, இயேசு ஏற்படுத்திய அல்லது அவர் [பேதுரு] நடபடிகள் *4:11*ல் ஏற்படுத்திய கருத்தில் இருந்து அடிப்படையில் வேறுபட்டிருக்கவில்லை. **கல்லாகிய கிறிஸ்துவைப் புறக்கணித்த** யூதத்தலைமைத்துவமே இன்னும் **கட்டுவோர்களாக** இருந்தது. விஷயம் அப்படி இருந்த போதிலும், பெருமளவில் புறஜாதியாரின் உலகத்திற்கு முன்னால், தள்ளப்பட்ட கல்லையே தேவன் **மூலைக்கல்லாக்கினார்** என்று பேதுரு அறிவித்தார். "பிரதான மூலைக்கல்" என்பதே இந்தக் கிரேக்கச் சொற்றொடரின் மிகநேரடியான அர்த்தமாக உள்ளது (KJV; ASV).

"பிரதான மூலைக்கல்" என்பது தன்னில்தானே ஒரு முக்கிய கல்லைக் குறிப்பிட்டாலும் 2:6ல் குறிப்பிடும் சீயோனில் வைக்கப்பட்ட மூலைக்கல் என்பதிலிருந்து பிரதான மூலைக்கல் வித்தியாசமாக அர்த்தப்பட அவசியமற்றதாயிருக்கிறது. இந்த சந்தர்ப்பப் பொருளில், இந்த வசனத்தில் முன்பு (2:6) "மூலைக்கல்" மற்றும் பிறகு (2:7) "இடறுதற்கேதுவான கல்" என்பன, "பிரதான மூலைக்கல்" என்பதும் "மூலைக்கல்" என்பதும் ஏகார்த்தமுள்ளதாக இருக்கிறது என்பதைக் குறிக்கிறது. ஒரு கல் கட்டுமான உயரத்தில் ஒரு பிரதான கல்லில் இடறிவிழுதல் என்பது ஒருவருக்கு சிரமமானதாக இருக்கும். தேவன் இயேசுவை "மூலைக்கல்ல" ாக்கினார் என்பது விசுவாசியாதவர்களுக்கு ஒரு சாட்சியாயிருக்கிறது. தேவன் இயேசுவின் வாழ்விலும் தம்முடைய ஜனங்களின் வாழ்விலும் கிரியை செய்து கொண்டிருந்தார் என்று அது அறிவித்தது.

வசனம் 8. தமிழ் [வேதாகமத்தில்] 7ம் வசனத்தின் கடைசிப்பகுதியாக உள்ள **இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று** என்பது, எபிரெய மொழியில் இருந்து கிரக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தில் ஏசாயா 8:14ன் தளர்வான தரவமைப்பாக உள்ளது. ஏசாயா தீர்க்கதரிசி மூலமாகப் பேசிய தேவன், தாம் பரிசுத்தமானவரும் அஞ்சப்படத் தக்கவருமாக இருப்பதாக உறுதிப்படுத்தினார். சூழ்ச்சிகளை வடிவமைப்பவர்கள் அஞ்சப்படத் தக்கவர்கள் அல்ல. தேவன் மீது நம்பிக்கையாக இருப்பவர்களுக்கு அவர் புகலிடமாக இருக்கிறார், ஆனால் யூதாவிலும் இஸ்ரவேலிலும் இருந்தவர்களுக்கு அவர் இடறுதற்கேதுவான கல்லாக ஆனார். ஏசாயாவின் இந்த வார்த்தைகள் பேதுருவின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்குப் பொருத்தமாக இருப்பதைப் பேதுரு கண்டார். தேவன் இயேசுவை மூலைக்குத் தலைக்கல்லாக்கியது மட்டுமின்றி, விசுவாசியாதவர்களைக் குற்றப்படுத்துகிற, அவர்கள் இடறிவிழுவதற்கு ஏதுவானவராகவும் ஆக்கினார். மக்களின் இருவகையினர் மாத்திரமே இருப்பதாகப் பேதுரு நினைத்தார். இயேசுவில் விசுவாசம் கொண்டவர்கள் மற்றும் இடறுபவர்கள் மற்றும் விசுவாசியாமல் இருப்பவர்கள்.

8ம் வசனத்தின் நிறைவுப்பகுதி கடினமானதாக உள்ளது. நேர்ப்பொருளில் இது, "Unto which also they were placed." (அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்) என்று வாசிக்கப்படுகிறது. சீர்திருத்த இறையியலாளர்கள், இவ்வசனத்தில் தனித்தனி நபருக்குரிய முன்குறிப்பிட்ட அடைவிடத்தைக் காண்பதற்கு விரைந்திருக்கின்றனர். பேதுரு எழுதிய நிருபம் முழுவதிலும் அவர் தமது வாசகர்களைக் கீழ்ப்படியவும், பாவத்தில் இருந்து மனந்திரும்பவும், தெளிவான சிந்தையைக் காத்துகொள்ளவும், ஊக்கமாய் நம்பியிருக்கவும் மற்றும் இதுபோன்ற பிற விஷயங்களைச் செய்யவும் அழைத்திருக்கிறார். என்பதே இந்த விதமான விளக்கவுரைக்குப் பிரச்சனையாக இருக்கிறது காலம் கடந்த நித்தியத்தில் தேவனுடைய இராஜரீக ஆளுகையின் செயல்பாடு ஒன்றினால், நித்திய வாழ்விற்கோ அல்லது நித்திய அழிவிற்கோ பேதுருவின் வாசகர்கள் தனித்தனியே நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்றால், அப்போஸ்தலருடைய புத்திமதிகள் ஏளனத்தின் ஒலியாக இருந்திருக்கும். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஏற்கனவே அவர் தீர்மானித்துள்ள நிலையில்,

அவற்றைச் செய்யுமாறு மக்களை அழைத்தல் என்பது எந்தக் கருத்தறிவையும் ஏற்படுத்தாது. NASB வேதாகமம் "இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்" **[to this doom they were also appointed]** என்ற சொற்றொடரில் உள்ள "doom" என்ற வார்த்தையைச் சாய்வெழுத்துக்களில் குறிப்பிடுகிறது. சாய்வெழுத்துக்களில் ஒரு வார்த்தை வரும்போது அது மொழிபெயர்ப்பாளர்களால் அங்கு தரப்பட்டது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.

தேவன் தமது குமாரனை மீட்பராக அனுப்பியபோது கூட, சிலர் **இடறுவார்கள்** மற்றும் **கீழ்ப்படியாமல் இருப்பார்கள்** என்று அவர் முன்னறிந்தார் என்பது பேதுருவின் அர்த்தமாக உள்ளது. சிலர் இடறுவார்கள் என்பது பேதுருவின் வாசகர்களுக்குத் திகைப்படையும் வேளையாக இருந்திருக்காது. கீழ்ப்படியாமைக்கென்றே முன்குறிக்கப்பட்டிருந்த சிலர் என்ற வகையில் தனிநபர்களைப் பற்றிப் பேதுரு தமது சிந்தையில் கருத்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக அவர், சிலர் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வார்கள் மற்றும் சிலர் இடறுவார்கள் என்ற முழுமையான விழிப்புணர்வுடன் மனித மீட்பிற்கான தேவனுடைய திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தினார்.

இருளில் இருந்து வெளிச்சத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் (2:9, 10)

9 நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். 10 முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.

சபை மற்றும் இஸ்ரவேல் மக்கள் ஆகியோருக்கு இடையில் உள்ள தொடர்ச்சியானது பேதுருவின் சிந்தையில் இருந்து ஒருக்காலும் தூரத்தில் இருக்கவில்லை. தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டு எகிப்தில் இருந்து வெளியே அழைக்கப்பட்ட மக்களினத்துடன் கிறிஸ்தவர்களைச் சமானப்படுத்துதலுக்கு அப்பால் அப்போஸ்தலர் சென்றார். கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது தேர்ந்துகொள்ளப்பட்ட சந்ததிக்குள் பங்கேற்றிருத்தல் என்பதாகும், ஆனால் இது ஆரோனின் ஆசாரியத்துவத்தில் பங்கேற்றலாகவும் உள்ளது. ஒரு மக்களினம் என்ற வகையில் இஸ்ரவேலின் பரிசுத்த தன்மை அடிக்கடி மிகமோசமாகப் பிழைபட்டது. கிறிஸ்துவின் ஊழியமோ அவை எல்லாவற்றையும் மாற்றிப்போட்டது. மக்களாக இல்லாதிருந்து இப்போது மக்களாக இருப்பவர்கள் தேவனுடைய மக்களாகி இருக்கின்றனர்.

வசனம் 9. இவ்வாக்கியத்தின் தொடக்கத்தில் வலிவான **நீங்களோ** என்பது உள்ளது. கீழ்ப்படியாதவர்கள் கிறிஸ்துவின் மீது இடறினார்கள் என்று

கூறியபின்பு உடனே பேதுரு, "நீங்களோ" [ஆங்கில வேதாகமத்தில் இது "But you," என்றுள்ளது], மற்றும் அவர்கள் முற்றிலும் வேறுபட்டிருந்தனர் என்று அவர்களுக்குக் கூறினார். NASB, வேதாகமத்தில் உள்ளபடி, கிறிஸ்தவர்களைப் பற்றி நான்கு ஒப்புவமைகளை அப்போஸ்தலர் பயன்படுத்தினார். இந்தப் பெயர்ச்சொற்கள் ஒவ்வொன்றும் பண்புத் தொகை ஒன்றைக் கொண்டுள்ளது: **சந்ததி தெரிந்துகொள்ளப்பட்டதாக உள்ளது, ஆசாரியக்கூட்டம் ராஜரீகமானதாக உள்ளது, ஜாதி** [மக்களினம்] **பரிசுத்தமானதாக உள்ளது, மற்றும் ஜனங்கள் தேவனுக்குச் சொந்தமான ஜனமாக** உள்ளனர். ஒரு யூதக்கிறிஸ்தவர் தமது சிந்தித்தலை கணிசமாக மாற்றும்படி இந்த ஒப்புவமைகள் கேட்டுக்கொள்ளும். யூதர்களின் சுயமனச்சாட்சிக்கு, அவர்களைத் தேவன் தேர்ந்து கொண்டார் என்பதைக் காட்டிலும் அதிகம் அடிப்படையான விஷயம் எதுவும் இல்லாதிருக்கலாம். இஸ்ரவேல் மக்கள் மாத்திரமே தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாகத் தனித்து நின்றனர். மற்ற மக்களினங்கள் அவ்வாறு தேர்ந்துகொள்ளப்படவில்லை. தாமே ஒரு யூதராக இருந்த பேதுருவேகூட, முழு மனிதகுலத்தினாலும் பகிர்ந்து கொள்ளப்படாத அழைப்பு எதையும் இஸ்ரவேலுக்கு அனுமதிக்க மாட்டார். ஒவ்வொரு நாடு மற்றும் மக்களிலும் அழைப்பை ஏற்றவர்கள் கிறிஸ்துவின் மூலமாக "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாக" உள்ளனர். கொர்நேலியுவுக்கும் அவரது வீட்டாருக்கும், "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல ... எந்த ஜனத்திலாயினும் அவருக்குப்பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்" என்று அப்போஸ்தலர் கூறியிருந்தார் (நடபடிகள் 10:34, 35).

இஸ்ரவேலின் வரலாற்றில் மிக ஆழமான வேர்களைக் கொண்ட கருத்துக்களையும் சொற்றொடர்களையும் எடுத்து அவற்றை இயேசு கிறிஸ்துவின் சபையாகிய "புதிய இஸ்ரவேல்" என்ற உடன்பாடுகளில் மறுபடியும் வெளிப்படுத்துதல் என்பது பேதுருவுக்கு வழக்கமானதாகவே இருந்தது. "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி" என்ற முதல் பெயர் உரிச்சொல்/பெயர்ச்சொல் இணைவானது நியாயமானவகையில் நேர்ப்பொருள் கூறுவதாக உள்ளது. பேதுரு தமது வாசகர்களை ஏற்கனவே "தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்" என்று அழைத்திருந்தார். 2 எஸ்ட்ராஸ் என்று புரொட்டஸ்டன்டுகளால் பொதுவாக அழைக்கப்படும் தள்ளுபடி ஆகமம் ஒன்றில், மக்கள் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாக இருந்தாலும், அசாதாரணமான பெருந்துன்பங்களைச் சகித்திருந்தனர் என்று எஸ்ரா தேவனிடத்தில் முறையிட்டார். தமது ஜெபத்தில் அவர், இஸ்ரவேல் மக்கள் தேவனால் "தேர்ந்துகொள்ளப்" பட்டிருந்த நிலையைத் தேவனுக்கு நினைவூட்டினார்.

> "என் எஜமானரும் கர்த்தருமானவரே, பூமியின் மீதுள்ள சகல காடுகளிலும் அவற்றின் மரங்களிலும், நீர் ஒரு திராட்சச் செடியைத் தேர்ந்துகொண்டீர்; இந்த முழு உலகிலும் உள்ள நிலங்களில் இருந்து நீர் ஒரு மனையைத் தேர்ந்துகொண்டீர்; உலகின் எல்லா மலர்களிலும் இருந்து நீர் ஒரு லில்லி மலரைத் தேர்ந்துகொண்டீர். கடலின் ஆழங்கள் யாவற்றிலும் இருந்து நீர் உமக்காக ஒரு நதியை நிரப்பியிருக்கிறீர், மற்றும் கட்டப்பட்டுள்ள

> எல்லா நகரங்களிலும் இருந்து நீர் உமக்குச் சொந்தமாக சீயோனைப் பிரித்து வைத்தீர். படைக்கப்பட்ட எல்லாப் பறவைகளிலும் இருந்து நீர் புறாவை உமக்காகப் பெயரிட்டீர், மற்றும் வடிவமைக்கப்பட்ட எல்லா மிருகங்களிலும் இருந்து நீர் செம்மறி ஆடு ஒன்றைத் தேர்ந்து கொண்டீர். எண்ணற்ற மக்களினங்களில் இருந்து நீர் ஒரு மக்களினத்தை உமக்காகத் தத்து எடுத்துக் கொண்டீர், தேர்ந்துகொள்ளப்பட்ட இந்த மக்களினத்திற்கு நீர் மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக அங்கீகரிக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தீர்."[9]

பேதுருவைப் பொறுத்தமட்டில், நேர்ப்பொருளில் இஸ்ரவேல் என்ற மக்களினம், தாங்கள் மாத்திரமே தேவனிடத்தில் சென்று சேரக் கொண்டிருந்ததாக உரிமைகோரிய வழியைக் கைவிடவேண்டி இருந்தது. அப்போஸ்தலர் தம்முடைய வாசகர்கள், யூதர்களானாலும் புறஜாதியாரானாலும், தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாகக் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்பட்டனர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார்.

இரண்டாவது பெயர் உரிச்சொல்/பெயர்ச்சொல் இணைவாக "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்பது சிக்கலானதாக உள்ளது. "ராஜரீகமான" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*basileion* என்ற) வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறொரு இடமான லூக்கா 7:25ல் மாத்திரம் காணப்படுகிறது. அங்கு அது ஒரு பெயர்ச்சொல்லாக "அரசர்மாளிகைகளிலே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மற்றும் "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்ற சொற்றொடரில் பேதுருவின் வார்த்தை அமைப்பு நாம் எதிர்பார்க்கிறபடி இருப்பதில்லை. "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி" மற்றும் "பரிசுத்த ஜாதி" ஆகிய இரண்டு சொற்றொடர்களிலும் பெயர் உரிச்சொல் பெயர்ச்சொல்லைத் தொடருகிறது. (கிரேக்க மொழியில் பெயர் உரிச்சொல் தான் மாறுதல் செய்கிற பெயர்ச்சொல்லைப் பின்தொடர்ந்தோ அல்லது அதற்கு முன்னாலோ வரலாம்.) "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்ற சொற்றொடரின் விஷயத்தில், இது எதிர்மறையாக உள்ளது, அதாவது, "ராஜரீகமான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லானது பெயர்ச்சொல்லுக்கு முன்னால் வருகிறது. இம்மூன்று சொற்றொடர்களும் இணையாக இருக்க வேண்டும் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" (*basileion hierateuma*) என்பது இதன் அர்த்தம், சம அளவில் உறுதியில்லாத வகையில் குறிப்பிடப்பட்டுள்ள, LXX, (செப்துவஜிந்த்) வேதாகமத்தின் யாத்திராகமம் 19:6ல் இருந்து வருகிற சொற்றொடராகும்.

கவனமான சிந்தனைகள், இந்தச் சொற்றொடரை மொழிபெயர்ப்பாளர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம் என்ற சாத்தியக்கூறுக்கு வழிநடத்துகின்றன. லூக்கா 7:25ல் உள்ளது போன்று "ராஜரீகமான" என்ற வார்த்தையை "அரசர் மாளிகைகள்" என்று அர்த்தப்படும் பெயர்ச்சொல்லாக எடுத்துக்கொண்டு, இவ்விரு வார்த்தைகளுக்கு இடையில் ஒரு கமாவை வைத்து, "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், அரசர் மாளிகைகளாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் ..."[10] என்ற மொழிபெயர்ப்பை ஒருவர் அடைந்திருக்கலாம்.

பேதுரு கிறிஸ்தவர்களை, "ஆவிக்கேற்ற மாளிகையாக" கட்டப்படும் "ஜீவனு ள்ள கற்கள்" என்று ஏற்கனவே அழைத்துள்ள நிலையில், இந்த விளக்கம் ஈர்ப்புடையதாக உள்ளது. இருப்பினும் *basileion* என்பது ஒரு பெயர் உரிச்சொல்லாக இருக்கலாம் என்பது உண்மையாக உள்ளது. "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்பது இதன் அர்த்தம் என்றால், அரசரின் ஊழியத்தில் அதாவது இயேசுவுக்குச் செய்யும் ஊழியத்தில், விசுவாசிகள் ஆசாரியத்துவம் கொண்டுள்ளனர் எனப் பேதுரு கூறுகிறார் என்றாகிறது. கிறிஸ்தவர்களுக்கு அவர் அரசருக்குரிய பண்புகளைக் குறிப்பிடுவதில்லை.

பேதுரு, தமது வாசகர்கள் தனித்தனியே ஆசாரியர்களாக இருந்தனர் என்றல்ல, ஆனால் "ஆசாரியக்கூட்டமாக" இருந்தனர் என்றே கூறினார். இவ்விரண்டிற்கும் இடையில் ஒரு வேறுபாடு உள்ளது. "ஆசாரியக்கூட்டம்" என்பதைப் பற்றிய சுயமான புரிந்துகொள்ளுதல், சமூகத்திற்குள் ஆசாரியத்துவப் பணிகளைச் செயல்படுத்துவதில் இருந்து தரவழைக்கப்படுகிறது. "ஆசாரியக்கூட்டம்" என்பது சபையை அதன் சங்கத்துவ முழுமையில் சிந்தித்தலின் விவரிப்பாக உள்ளது. இது "மக்களினம்" ["ஜாதி"] மற்றும் "நாடு" ("ஜனம்") ஆகியவற்றிற்கு இணையானதாக உள்ளது. இஸ்ரவேல் மக்களினத்திற்குப் புறம்பே ஆரோனின் ஆசாரியத்துவம் செயல்படுத்தப்படவில்லை என்பது போன்றே, விசுவாசிகள் கூட்டம் இன்றி "ஆசாரியத்துவத்தை" செயல்படுத்துதல் இல்லை. "ஆசாரியக்கூட்டம்" என்ற வார்த்தையைப் பேதுரு இருமுறை பயன்படுத்தினார் (2:5, 9), ஆனால் இவ்விரு இடங்களின் சந்தர்ப்பப் பொருள்களும் இவ்வார்த்தைகளை மாறுபட்ட வகையில் விளக்கப்படுத்துகின்றன. 2:5ல் பேதுரு, ஆசாரியத்துவத்தின் கடமை களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார், அது தேவனுக்குப் பிரியமான பலிகளைச் செலுத்துதலாக இருந்தது. 2:9ல் ஆசாரியர்களின் கடமைகள் என்பதைக் காட்டிலும் அதிகமாக, ஆசாரியர்களாக இருத்தலின் சிலாக்கியம் என்பதே, "ஆசாரியக்கூட்டம்" என்பதன் கருத்தாக உள்ளது. பேதுருவின் ஒப்புவமை கள் யாவையும் சிலாக்கியங்களைப் பற்றியவையாக உள்ளன. ஏனென்றால், அவைகள் விசுவாசிகளின் சமூகத்தில் பகிரப்படுகின்றன, கிறிஸ்தவர்கள் "தேர்ந்துகொள்ளப்பட்ட சந்ததியாக, இராஜரீகமான குடிகளாக, ஆசாரியத்துவக் கூட்டமாக, பரிசுத்த ஜாதியாக" இருப்பதற்குத் தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக எண்ணுகின்றனர்.

விசுவாசிகள் "தேவனுக்குச் சொந்தமான மக்களாக" இருப்பதாலும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சொற்றொடர் ஏசாயா 43:20, 21 உடன் ஒத்த தன்மையைப் பகிர்ந்துகொள்கிறது. ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகத்தில் தேவன், "நான் தெரிந்துகொண்ட என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்தில் தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால், ... இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள்" என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். இஸ்ரவேல் மக்கள் தேவனால் தேவனுக்கென்று தாங்கள் உண்டாக்கப்பட்டதைப் புரிந்து கொண்டது போல, கிறிஸ்தவர்கள் தங்களைத் தேவனுக்குச் சொந்தமான மக்கள் என்று புரிந்துகொள்ள வேண்டும். அவரே அவர்களைத் தேர்ந்துகொண்டார். கிறிஸ்தவர்கள் தங்களைப் பற்றிய அவதூறுகளில் மூழ்கும்போது அல்லது அவர்களின் தோல்விக்காக

அவர்களை அவிசுவாசிகள் ஏளனம் செய்யும் போது, தேவன் அவர்களைத் தம்முடையவர்கள் என்று உரிமை கோருதலை அவர்கள் நினைவுகூர வேண்டும். இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களைப் பின்வருமாறு புகழும் அளவுக்குச் சென்றார்: "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; ... நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத்தேயு 5:13, 14).

ஒரு நோக்கத்திற்காகவே கிறிஸ்தவர்கள் தேவனுக்கு உரியவர்கள் ஆக்கப்பட்டுள்ளனர். மனித மீட்பு, பாவ மன்னிப்பு, நித்தியஜீவன் - இவையாவும் கிறிஸ்தவராக இருத்தலில் அடங்கியுள்ளன - என்பவை மனிதரின் மகிமைக்காக அல்ல ஆனால் தேவனுடைய மகிமைக்கானவையாகவே உள்ளன. அது உங்களை ... **வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு** என்ற நோக்கத்தை கொண்டுள்ளது. போட்டிநடைபெறும் களத்தில் இருக்கும் கருத்துக்களின் மத்தியில் கிறிஸ்தவம் தமது தேவைக்கு மிக நன்கு பொருந்தும் என்பதற்காக அதைத் தேர்ந்தெடுக்கும் நபர் ஏற்கனவே தோல்வி அடைந்து விட்டார். கிறிஸ்தவர்கள் தேவனுடைய "புண்ணியங்களை" அறிவிக்கும்படியாகவே தாங்கள் இருக்கிற பிரகாரம் உள்ளனர். மக்களை அவர்களின் நம்பிக்கையிழந்த நிலை மற்றும் பெரும்வருத்தம் ஆகியவற்றில் இருந்து கிறிஸ்து விடுவிக்கிறார், அல்லது பேதுரு கூறியபடி, **அந்தகாரத்தினின்று தம்முடைய** [தேவனுடைய] **ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரும்படியாக** [தேவன்] விடுவிக்கிறார். விசுவாசிகள் தங்களையே மறந்து தேவனுடைய மகிமையை நாடும்போது மாத்திரமே தேவனுடைய ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர் என்பது முரண்பாடு போலத் தோன்றும் உண்மையாக உள்ளது.

வசனம் *10.* அப்போஸ்தலருடைய வாசகர்கள் தேவனுக்குச் சொந்தமான மக்களாக இருந்தனர் என்ற விஷயத்தில் அவர்களின் தைரியத்தை மறுவலியூட்டுவதற்குப் பேதுரு, பழைய ஏற்பாட்டில் மொழிநடை மற்றும் உருவகம் ஆகியவற்றை வரைவதைத் தொடர்ந்தார். ஜனங்கள் என்பதற்கு அவர் பயன்படுத்திய *(laos)* என்ற வார்த்தை, இஸ்ரவேல் மக்களுக்குப் பயன்படுத்த எதிர்பார்த்த வார்த்தையாக உள்ளது யூதரல்லாத மக்களைக் குறிப்பது *(ethnos* என்ற) வார்த்தையாகும். ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில் இருந்து பேதுரு வார்த்தை சொல்லுக்குச் சொல் அப்படியே குறிப்பிடவில்லை, ஆனால் இவ்வார்த்தைகள் அந்த எட்டாம் நூற்றாண்டுத் தீர்க்கதரிசியின் சிந்தனை உலகில் இருந்து தரவழைக்கப்பட்டன. அவர் [பேதுரு], ஓசியாவின் வார்த்தைகளை அந்தத் தீர்க்கதரிசி பயன்படுத்திய அதே வகையில் மிகச்சரியாகப் பயன்படுத்தத் தாம் விரும்பியதற்கான எவ்வித குறிப்பும் இன்றி, தமது வாசகர்களின் சூழ்நிலைக்கேற்ப ஓசியாவின் வார்த்தைகளைத் தழுவியமைத்தார். ஓசியாவின் தீர்க்கதரிசனமானது, அவரது மனைவியும் பிள்ளைகளும் அடையாளங்களாகவும் முன்குறிப்பிடுதல்கள் ஆகவும் ஆகும் அளவுக்கு மிகவும் தனிப்பட்டதாக இருந்தது. அவரது மனைவி கோமேர் என்பவள் "சோரஸ்திரீ" யாக இருந்தாள் (ஓசியா 1:2), அவள் அவருக்கு ஒரு மகளைப் பெற்றாள், அந்த மகளுக்கு "லோருகாமா" என்று அவர் பெயரிட்டார் (ஓசியா 1:6) மற்றும் அவள் [கோமேர்] அவருக்கு ஒரு மகனைப் பெற்றாள், அவனுக்கு "என் ஜனமல்ல" என்று அவர் பெயரிட்டார் (ஓசியா 1:9). இஸ்ரவேலின் பாவத்தைத் தேவனுடைய இரக்கம் நிறைவில் வெற்றிகொண்டது. "நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைத்து, இரக்கம்

பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்; என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள்" (ஓசியா 2:23).

ஓசியாவின் வார்த்தைகளைக் கடனாகப் பெற்ற பேதுரு, அவற்றில் தமது பெருமளவு வாசகர்களான புறஜாதிக் கேட்பாளர்களுக்கு மறு உறுதிப்பாடு பற்றிய ஒரு செய்தியைக் கண்டார். **முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்** என்று அவர் கூறினார். இஸ்ரவேல் மக்களின் விக்கிரக ஆராதனை மற்றும் ஒழுக்கவீனம் ஆகியவற்றிற்காக அவர்களுக்கு நியாயத்தீர்ப்பை அறிவிக்க பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியின் செய்தியில் இருந்து பேதுருவின் செய்தி மாறுபட்டுள்ளது. அதேவேளையில் தேவனுடைய இரக்கம் ஒருக்காலும் முடிவதில்லை என்று இஸ்ரவேல் மக்களுக்கு ஓசியா மறு உறுதிப்பாடு கொடுத்தார். தேவன் தமது மக்கள்மீது மறுபடியும் பரிதாபம் கொள்ளும் நாள் ஒன்றை அவர் முன்னதாகக் கண்டார்.

பேதுருவின் வார்த்தைகளில் நியாயத்தீர்ப்பு எதுவும் இல்லை என்ற விஷயத்தில் அது ஓசியாவின் செய்தியில் இருந்து மாறுபட்டது. புறஜாதியார் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் இரக்கம் ஆகியவற்றைப் பற்றி அதற்கு முன்பு அறியாதிருந்தனர், ஆனால் இப்போது அவர்கள் தேவனுடைய மக்களாகவே மாறியிருந்தனர். பேதுருவைக்காட்டிலும் மிகநுணுக்கமாகப் பவுல், ரோமர் 9:25, 26ல் ஓசியா தீர்க்கதரிசனம் பற்றிக் குறிப்பிட்டார்; ஆனால் பவுலைப் பொறுத்த மட்டில், ஓசியாவின் வார்த்தைகள், "யூதரிலிருந்துமாத்திரமல்ல, புறஜாதிகளிமிருந்தும்" தேவனுடைய மக்கள் உள்ளனர் (ரோமர் 9:24) என்பதைச் செயல்விளக்கப்படுத்தின. ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் பேதுரு வாசித்திருந்தார் என்றால்- மற்றும் இதற்கு நல்லதொரு சாத்தியக்கூறு உள்ளது - பவுல் சிந்தனை அவருக்குத் தகவல் அறிவித்திருக்க வாய்ப்புள்ளது. பவுல் மற்றும் பேதுரு ஆகியோரின் எழுத்துக்களின் சொல் அமைவு மற்றும் காரண அறிவு ஆகியவற்றில் உள்ள சில ஒற்றுமைகள், இவ்விரு அப்போஸ்தலர்களும் பகிர்ந்துகொண்ட பொதுவான சிந்தனை உலகத்தைப் பண்புப்படுத்துகின்றன; ஆனால் அது, 1 பேதுரு மற்றும் ரோமருக்கு எழுதிய நிருபம் ஆகியவற்றிற்கு இடையில் அடிக்கடி வரும் தொடர்புக் கருத்துக்களுக்குக் குறிப்பாகக் காரணமாகாது.

நடைமுறைப் பயன்பாடு

நம்பிக்கையின் கல்லான இயேசு (2:4-8)

வேதாகமத்தை எழுதிய எழுத்தாளர்கள் வாழ்ந்த இடம் மற்றும் நிலப்பகுதி ஆகியவற்றைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையில் இருந்து கற்றுக்கொண்டு மதிக்கப்பட வேண்டிய, வேதாகமத்தைப் பற்றிய விஷயங்கள் உள்ளன. மத்திய தரைக்கடலில் கிழக்கு முனையானது வெப்பமான உலர்ந்த பகுதியாகும். நல்ல விவசாய நிலங்கள் அரிதாக இருந்தன. பாசனத்திற்குப் பயன்படும் பெரிய நதிகள் எதுவும் அங்கில்லை, மற்றும் அதன் பெரும்பான்மையான பகுதி பாலைவனமாக இருந்தது. பாலைவன நிலங்கள் வேதாகமத்தில்

"வனாந்தரம்" என்று அழைக்கப்படுகின்றன.

இஸ்ரவேல் மக்கள் குடியேறும்படி அழைக்கப்பட்ட நிலமானது பல குறைவுகளைக் கொண்டிருந்தது. ஆனால் அதில் குன்றுகள் ஏராளமாக இருந்தன. இயற்கையான இந்த ஆதாரமூலத்தை பயனப்படுத்தும் வழிகளை இஸ்ரவேல் மக்கள் கண்டறிந்தனர் என்பதில் சிறிதளவே ஆச்சரியம் உள்ளது. அவர்கள் கற்களை ஆயுதங்களாகவும் கட்டிடம் கட்டும் பொருளாகவும் பயன்படுத்தினர். மேலும் அவர்கள் தங்களுக்கும் தேவனுக்கும் இடையில் உள்ள உறவை விளக்கப்படுத்த, கல் ஒப்புவமைகளின் திடத்தன்மையையும் கண்டறிந்தனர் என்பதில் திகைப்பு எதுவும் இல்லை.

உபாகமம் மற்றும் சங்கீதங்கள் ஆகியவற்றில், தேவன் தாமே சிலவேளைகளில் கன்மலை என்று அழைக்கப்பட்டுள்ளார். அவர் இஸ்ரவேலுக்குக் கன்மலையாக, அசைக்க முடியாத, நிலைப்புத்தன்மை கொண்ட ஒருக்காலும் தவறாத பலமாக இருந்தார். மோசே, "கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம் பண்ணுவேன்; நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள். அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்" என்று பாடினார் (உபாகமம் 32:3, 4).

நாட்டின் கன்மலைகளில் இருந்து தரவழைக்கக்கப்பட்ட ஒப்புவமைகள் புதிய ஏற்பாட்டிலும் தொடருகின்றன. இயேசுவே கிறிஸ்து என்று பேதுரு அறிக்கை செய்தபோது, அவரது அறிக்கை கன்மலையாக (கல்லாக) இருந்தது என்றும் அந்த நிச்சயமான அஸ்திபாரத்தின்மீது தமது சபையைக் கட்டுவதாகவும் கர்த்தர் கூறினார். "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத்தேயு 16:18). அப்போஸ்தலர், கிறிஸ்துவின் ஊழியம் மற்றும் பணியை விவரிக்கப் பாறையின் பேச்சு உருவகங்களைத் தரவழைத்தபோது, அவர் கர்த்தரின் ஒப்புவமையினால் ஏவப்பட்டிருக்கலாம்.

(1) *இயேசுவே கிறிஸ்தவர்கள் வாழவேண்டிய வழிக்கு நிச்சயமான வழிகாட்டியாகவும் மாதிரியாகவும் இருக்கிறார் என்பதால் அவர் கல்லாக இருக்கிறார்* (2:6). அவர் வழியைச் சுட்டிக்காட்டி, தமது சீஷர்கள் தேவனை எவ்வாறு சேவிக்க வேண்டும் என்பதற்கு ஒரு உதாரணத்தையும் அளித்தார். இயேசு கல் என்பதைக் காட்டிலும் மேலாக இருக்கிறார்; அவர் ஒரு மூலைக்கல்லாக இருக்கிறார். பேதுரு தமது கருத்தை ஏற்படுத்த ஏசாயா 28:16 ன் வார்த்தைகளைத் தரவழைத்தார்: "இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்."

இஸ்ரவேல் நாட்டில் அன்றும் இன்றும் மரங்கள் பல இருந்ததில்லை. மரம் என்பது அசாதாரணமான மற்றும் விலையுயர்ந்த கட்டுமானப் பொருளாக உள்ளது. மரவேலைப்பாட்டிற்குப் பதிலாக, இஸ்ரவேலில் இருந்த கைவினைஞர்கள் திறன்வாய்ந்த கல் கொத்தர்கள் ஆனார்கள். அவர்கள் கல்லை கற்காரை தேவைப்படாத அளவுக்கு மிகவும் நுணுக்கமாக வடிவமைத்தனர். இயேசு தச்சு வேலை செய்பவராக இருந்தார் என்று பொதுவாக நினைக்கப்

பட்டிருக்கையில், *tektōn* என்ற கிரேக்க வார்த்தையை, "கல் கொத்தர்" என்று மொழிபெயர்த்தலே மிகச்சிறந்த வகையாக இருக்கும் என்று இப்போது பலர் நம்புகின்றனர். இன்றைய நாட்களில் எருசலேமில், சட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒருவர் கட்டிடம் கட்ட விரும்பினால், அவர் அதைக் கற்களாலேயே கட்டியாக வேண்டும். எருசலேம் என்பது கற்களால் கட்டப்பட்ட நகரமாக உள்ளது. பழங்கால உலகிலும் இதுவே உண்மையாக இருந்தது.

பேதுரு வாழ்ந்த காலத்தின்போது, உலகம் முழுவதிலும் இருந்த யூதர்கள், எருசலேமில் மகா ஏரோது கட்டிய மாபெரும் தேவாலயத்தைப் பற்றி அறிந்திருந்தனர். அதன் மாட்சிமையையும் அழகையும் யூதரல்லாதவர்கள் கூட பாராட்டிப் புகழ்ந்தனர். சாலோமோன் அரசரால் கட்டப்பட்டிருந்த தேவாலயம் இருந்த மலைக்குன்றின் இயற்கையான மேடுகளை ஏரோது விரிவாக்கியிருந்தார். அவர் நியமித்திருந்த கட்டுமானப் பணியாளர்கள், அணைச்சுவர் ஒன்றைக் கட்டுவதற்கு கனமான கற்களைப் பயன்படுத்தினர். ஏரோது நியமித்த கட்டிடப்பணியாளர்கள், தேவாலயத்தை மாத்திரமல்ல ஆனால் அதன் உயர்ந்த முற்றத்தைச் சுற்றிலும் ஒரு பெரிய மண்டபத்தையும் கட்டுவதைச் சாத்தியமாக்கினர். இவையாவையும் கற்காளாலேயே கட்டப்பட்டன. அவற்றில் பலவற்றைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டி எடுத்துள்ளனர். ஏரோது தாம் செய்வித்த கற்களின் மூலைப்பகுதி களைச் சுற்றிலும் தனிப்பட்ட வகையில் வளைவுகளைக் கொண்டு குறிப்பிடச் செய்தார். அவற்றை அடையாளம் காண்பதில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களுக்குப் பிரச்சனை எதுவும் இருப்பதில்லை.

ஏசாயா 28:16ஐப் பேதுரு குறிப்பிடும் வசனங்களுக்கு முன்னதாக அவர், கல் பற்றிய ஒப்புவமையை விரிவாக்கினார். கிறிஸ்து ஒரு கல்லாக இருப்பதால், ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு கருத்தறிவில் அவரது திடத்தன்மையில் பங்கேற்பதாகப் பேதுரு கூறினார். கிறிஸ்தவர்கள் தங்கள் கர்த்தருடன் இணைந்து தேவன் வாழும் இல்லத்தை ஏற்படுத்துகின்றனர். ஒவ்வொரு விசுவாசியும் அந்த வீட்டில் ஒரு ஜீவனுள்ள கல்லாக இருக்கிறார் (காண்க 1 பேதுரு 2:4, 5).

கிறிஸ்தவர்கள் பாறைகளாகவும் இருக்கின்றனர். இன்றைய நாட்களில் சமூகத்தில் அஸ்திபாரங்கள் நொறுங்குபவையாகக் காணப்படுகின்றன. இருப்பினும், கிறிஸ்துவை மூலைக்கல்லாகக் காண்பவர்களுக்கு இந்தப்பிரச்சனை இருப்பதில்லை. கிறிஸ்தவக் கணவர்கள் தங்கள் மனைவியரைக் கனம் செய்கின்றனர். மனைவியர் தங்கள் கணவர்களை மதிக்கின்றனர். அவர்கள் இருவரும் தங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற அறிவிலும் போதனையிலும் வளர்கின்றனர். அவர்கள் தங்கள் அயலகத்தவர்களை நன்கு நடத்துகின்றனர். அவர்களின் வார்த்தைகள் பாறை போன்று திடமானவையாக இருக்கின்றன, நேர்மை என்பது அவர்களின் அடையாளக் குறியாக உள்ளது. அவர்கள் வாழும் வழியானது அவர்களை அசைக்கப்பட இயலாதவர்களாகக் குறிக்கிறது. இயேசு திடமான பாறையாக உள்ளார், அவரே கிறிஸ்தவ விசுவாசம், நம்பிக்கை மற்றும் தைரியமான இளைப்பாறுதல் ஆகியவற்றின் பலத்த அஸ்திபாரமாக இருக்கிறார் என்று பேதுருவின் வார்த்தைகள் கருத்துக் தெரிவிக்கின்றன, பூமியதிர்ச்சிகள் கட்டிடத்தை அசைக்கலாம், ஆனால் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வை எதன்மீது கட்டி எதன்மீது தங்கள் நம்பிக்கையை வைக்கிறார்களோ, அந்த

அஸ்திபாரத்தைப் பாதாளத்தின் வாசல்கள் அசைக்க முடியாது. நூற்றாண்டுகள் கடந்துள்ளன, மக்களினங்கள் வந்து செல்கின்றனர், மலைகள் உயர்ந்து கடலுக்குள் உருகி விழுகின்றன, ஆனால் கற்பாறையான கிறிஸ்து, இஸ்ரவேலின் தேவனைப் போன்றே, என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்து நிற்கிறார் (காண்க சங்கீதம் 102:25-27).

(2) *இயேசு அஸ்திபாரக் கல்லா இருக்கிறார், ஆனால் அவர் தள்ளப்பட்ட கல்லாகவும் இருக்கிறார்* (2:7). மூலைக்கல் என்ற வகையில் இயேசுவிடம் இருந்து, இன்னொரு ஒப்புவமையான தேவனுடைய வீட்டில் அஸ்திபாரக்கல் என்பதற்குப் பேதுரு கடந்து சென்றார். இவ்வேளையில் அவர் சங்கீதம் 118:22ல் இருந்து கருத்தைத் தரவழைத்தார். யூதர்களை இயேசு எதிர்நின்று அவரை அவர்கள் புறக்கணித்தபோது, இயேசுதாமே இந்த சங்கீதத்தைக் குறிப்பிட்டிருந்தார். "இயேசு அவர்களை நோக்கி: வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்" (மத்தேயு 21:42).

இயேசு சங்கீதம் 118ஐக் குறிப்பிட்டபோது, அவர் யூத மக்களினத்தின் தலைவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். வேதவசனத்தின் மாணவர்கள் என்ற வகையில் அவர்கள், எல்லாருக்கும் மேலாக, தேவனுடைய கிறிஸ்துவைப் புரிந்து உணர்ந்து ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அவர்கள், அவரைத் தள்ளிவிட்டு ஏளனம் செய்தனர், மற்றும் அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு அவர்களே காரணக்கருவிகளாக இருந்தனர். இயேசு தள்ளப்பட்ட கல்லாக இருந்தார். சங்கீதத்தின் விரிவான நடைமுறைப் பயன்பாட்டைப் பேதுரு ஏற்படுத்தியதாகக் காணப்படுகிறது. யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்தனர், ஆனால் அதற்கும் அப்பால், உலகத்து மக்களிலேயே அதிக ஞானமும் மேன்மையும் உள்ளவர்கள் அவரைப் புறக்கணித்தனர்.

தேவனே இயேசுவை வீட்டின் மூலைக்கல்லாக்கினார். அவரை மனிதர்கள் புறக்கணித்தனர் மற்றும் அவர்கள் அவரைத் தொடர்ந்து புறக்கணித்துக் கொண்டுள்ளனர். உலகத்தின் சிறிய அற்பமான விஷயங்களைத் தேவன் எடுத்தார். அவர் ஒரு தாழ்மையான கலிலேய ஊழியக்காரரை சபையின் மூலைக்கல்லாக்கக் கூடியவராக இருந்தார். அப்போஸ்தலர்களான பேதுருவும் பவுலும் சாதாரண சிந்தை கொண்டவர்களாக இருந்தனர். இன்னொரு சந்தர்ப்பப் பொருளில் பவுல், பலவீனமும் சிறுமையுமானவர்கள் மூலமாகத் தேவன் கிரியை செய்கிறார் என்று முரண்பாட்டு மெய்யுரையாக நியாயமாக வெளிப்படுத்தினார். உலகமானது அதன் அரசர்களை, அதன் வீண்பகட்டை, அதன் ஆடம்பரத்தைக் கொண்டிருக்கட்டும், பவுல் சிறுமைப்பட்டவர்களுடன் அமர்ந்து அவர்களுடன் சேர்ந்து, தேவன் தமக்கு உதவிசெய்ய, அவர் இந்த உலகத்தை வெற்றிகொள்வார். "அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (2 கொரிந்தியர் 12:10). என்று அவர் கூறினார். தொடர்ந்து அப்போஸ்தலர், "ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்; அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம்"

என்றும் கூறினார் (2 கொரிந்தியர் 13:4).

(3) *இயேசு இடறுதலுக்கான கல்லாக, குற்றம் உணர்த்தும் கல்லாக இருக்கிறார் (2:8).* பேதுரு, ஏசாயா 28:16ஐக் குறிப்பிட்டுக்காட்டி, இயேசு மூலைக்கல்லாக இருக்க வேண்டும் என்பதைக் கண்டறிந்தார். அவர் சங்கீதம் 118:22ஐக் குறிப்பிட்டுக்காட்டி, அவர் தள்ளப்பட்ட கல்லாக இருக்க வேண்டும் என்பதையும் கண்டறிந்தார். இந்த இடத்தில் அப்போஸ்தலர் ஏசாயா தீர்க்கதரிசனத்திற்குத் திரும்பினார். "அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார்; ஆகிலும் இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார்" (ஏசாயா 8:14). இதேபோன்ற கூற்று ஒன்றைப் பவுல் விளக்கப்படுத்தினார்: "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1 கொரிந்தியர் 1:23). பவுலுக்குக் குறிப்பாக இடறுதலின் கன்மலையாக இருந்தது சிலுவையே ஆகும் (காண்க கலாத்தியர் 5:11).

ரோமர்கள் அதிகாரத்தை மதித்தனர். அறிவும் உலகஞானமும் கொண்ட ரோமர்கள் கிறிஸ்தவம் பற்றி முதலில் கேள்விப்பட்டபோது, அது ஒரு நேர்த்தியான நகைச்சுவையாக இருந்தது என்று நினைத்தனர். கிறிஸ்தவர்களின் இந்த மீட்பர் ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்டிருந்தார். அவர் ஆராதனைக்குத் தகுதிவாய்ந்தவர் என்று யூகிப்பது எவ்வளவு மதியீனமாக இருக்கும்! யூதர்களுக்கு இயேசு மற்ற காரணங்களினால் ஒரு இடறுதலுக்கேற்ற கல்லாக இருந்தார். மோசேயின் நியாயப்பிரமாணத்தில், இயேசுவே கிறிஸ்துவாக இருந்தார் என்பதற்கான எந்த எதிர்பார்ப்பையும் குறைத்துப்போடும் வசனப்பகுதி ஒன்று இருந்தது. "[மரத்திலே] தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்" என்று மோசே கூறினார் (உபாகமம் 21:23; காண்க கலாத்தியர் 3:13). இயேசு முக்கியமான ஒருவராக இருந்தார் என்ற கருத்தில், யூதரும் புறஜாதியாகும் ஒன்றுபோலவே இடறினர். அவர்களைப் பொறுத்தமட்டில், சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனிதர் தேவனுடைய குமாரனாக இருக்க முடியும் என்று நினைத்தல் சிந்தையற்றதாக இருந்தது.

இயேசு இடறுதலுக்கான கல்லாக இருந்தார் என்று பேதுரு பேசியபோது, அவர் வலியுறுத்தத்தை மாற்றினார். உலக மக்கள் தங்கள் பாவங்களை நேசித்ததாலும் தேவனுடைய பங்காக இராதிருக்க விரும்பியதாலும் இயேசுவின் போதனைகள் மீது இடறல் அடைந்தனர். அவர்கள் தங்கள் சொந்த விருப்பங்களைப் பின்தொடர விரும்பினர் (காண்க 1 பேதுரு 2:8). உலகத்தில் பல மக்களுக்கு, சிலுவையானது தொடர்ந்து இடறுதலுக்கான கல்லாக உள்ளது. ரோமப் பேரரசின் உலகம் போன்றே, இன்றைய நாட்களின் மக்கள் செல்வம், புகழ் மற்றும் அதிகாரம் ஆகியவற்றைத் தேடும்போது, அவர்களுக்குச் சிலுவை பொருத்தமற்றதாக உள்ளது. அவர்கள் கூறினாலும் கூறாவிட்டாலும், மக்கள் பலரின் வாழ்வானது சிலுவை ஒரு இடறுதலுக்கான கல்லாக உள்ளது என்றே அறிவிக்கிறது.

தொகுப்புரை. பழைய ஏற்பாட்டில் இருந்து தரவழைத்த வகையில் பேதுரு, தமது உலகத்தின் கற்களை, இயேசுவைப் பற்றியும் அவருடன் நமது உறவு பற்றியும் நமது புரிந்து கொள்ளுதலை வளப்படுத்தப் பயன்படுத்தினார்

(1) இயேசு நற்தன்மை மற்றும் தேவபக்தி ஆகியவற்றிற்கான தகுதியான மற்றும் மாறாத மாதிரியாக இருப்பதால், அவர் ஒரு கல்லாக (கல்லைப்போன்று உறுதியாக) இருக்கிறார். (2) இயேசு, தள்ளப்பட்ட கல்லைப் போன்று இருக்கிறார். (3) இயேசு இடறுதலுக்கான கல்லாக குற்றப்படுத்தும் பாறையாக இருக்கிறார்.

குறிப்புகள்

[1]*இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த வரலாற்றாளரான சுயூட்டோனியஸ் என்பவர், கிலவுதியு பேரரசர் காலத்தின் போது ரோமாபுரியில் வாழ்ந்த யூதர்களின் மத்தியில் ஏற்பட்ட கலகம் பற்றிய எழுதும்போது, வார்த்தைகளைக் குழப்பியிருக்கலாம். இந்தக் கலகமானது, Chrēstos (கிரேக்கு மொழி) என்பதற்குச் சமமான அர்த்தம் கொண்ட Chrestus (இலத்தீன்) என்ற ஒருவரால் தூண்டப்பட்டது என்று சுயூட்டோனியஸ் எழுதினார். கிறிஸ்துவின் செய்தி அறிமுகப்படுத்தப்பட்ட போது யூத சமூகத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. சுயூட்டோனியஸ் அவர்கள் நிச்சயமற்ற வகையில் பெயர்களைக் குழப்பியிருப்பதாகத் தோன்றுகிறது.* Suetonius *The Lives of the Caesars: Claudius 25.4. என்ற புத்தகத்தில் காணவும்.* [2]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude, Black's* New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 84. [3]*வால்ட்டர் பாவர் அவர்கள் காலத்திய இலக்கியத்தின் பயன்பாட்டைக் குறிப்பிட்டு, 1 பேதுரு 2:2ல் இவ்வார்த்தை "ஆவிக்கேற்ற" என்று மிகச்சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக வாதிட்டார்* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker [Chicago: University of Chicago Press, 2000], 598.) *இருப்பினும், பாவர் அளித்த குறிப்புகளிலும்கூட, இவ்வார்த்தை காரணம் அல்லது பகுத்தறிவு ஆகியவற்றின் சிறு கூறில் இருந்து நீக்கப்பட்ட தூய்மையான "ஆவிக்கேற்ற" என்பதை அர்த்தப்படுத்துவதில்லை. மொழிபெயர்ப்பாளர்கள் இதை "ஆவிக்கேற்ற" என்று தரவழைக்கத் தீர்மானித்ததால், இந்த கிரேக்க வார்த்தை தனது சிந்தனை நிறைந்த பகுத்தறிவை இழப்பதில்லை.* [4]*பேதுருவின் பெயரான Petros என்பது "கல்" என்று அர்த்தப்படுகையில், "கல்" என்பதற்கு 2:8 தவிர, இவ்வசனங்கள் முழுவதிலும் lithos என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. பேதுரு இந்த வசனங்களை எழுதுகையில், தமது சொந்தப் பெயரின் அர்த்தத்தைச் சிந்தித்தார் என்று கூற வாய்ப்பு இல்லை.* [5]Joachim Jeremias, "a Okrogwniai aos," in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 1:792. [6]*"மாளிகை" ("வீடு") என்ற சொற்றொடர் 1 மற்றும் 2 நாளாகமங்கள், எஸ்தர், நெகேமியா மற்றும் சில தீர்க்கதரிசனப் புத்தகங்களில், பல இடங்களில் ஆலயத்தைக் குறிக்கிறது. சங்கீதங்களில் இதன் பயன்பாடு, குறிப்பிட்ட அந்த சங்கீதம் எழுதப்பட்ட காலத்தைப் பொறுத்து, ஆசாரிப்புக் கூடாரத்தையோ அல்லது தேவாலயத்தையோ குறிக்கக் கூடும்.* [7]Ernest Best, *1 Peter,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 105. [8]Francis Wright Beare, *The First Epistle of Peter: The Greek Text with Introduction and Notes,* 3d ed. (Oxford: Basil Blackwell, 1970), 124. [9]2 Esdras 5:23–27 (REB). [10]See Edward Gordon Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text, with Introduction, Notes, and Essays,* Thornapple Commentaries, 2d ed. (London: Macmillan & Co., 1947; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 166.

4

பாடு அனுபவிக்கும் தேவ பிள்ளைகள் என்ற வகையில் நடந்து கொள்ளுதல் (பாகம் 1)

(2:11-25)

பழைய ஏற்பாட்டில் அதிகமான பகுதிக்கு ஒரு மக்களினத்துவக் காட்சியமைப்பைக் கொடுத்த நிலையிலும், இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டின் முக்கியத்துவத்தைக் காண்பித்த நிலையிலும், 1 பேதுரு நிருபத்தில் சொந்த நாட்டைக் கண்டறிதலின் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தும் உணர்வுகளைக் கண்டறிதல் சிலவகையில் திகைப்புக்கு உரியதாக உள்ளது. ஆபிரகாம் கானான் நாட்டில் பரதேசியாகச் சஞ்சரித்தார். கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தினூடே கடந்து மாத்திரம் செல்கின்றனர். பேதுருவின் வாசகர்கள் இந்த பூமியின்மீது தற்காலிகக் குடிகளாக இருக்கின்றனர் என்றும் அவர்கள் பூமி என்ற இந்த கோளைக் கடந்து செல்லும் விருந்தினர்களாக இருக்கின்றனர் என்றும் பேதுரு குறிப்பிட்டார்.

"அந்நியர்களும் பரதேசிகளும்" (2:11, 12)

[11]பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகி, [12]புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதம ாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

வசனம் 11. இந்த இடத்தில் இந்நிருபத்தின் போக்கு மாறுகிறது. கிறிஸ்தவராக இருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் புரிந்து கொள்வதில் வாசகர்களுக்கு உதவிய நிலையில் பேதுரு, இந்த நிருபத்தின் கடைசிப் பகுதி வரையிலும் எடுத்துச் செல்லப்படும் நடைமுறை வாழ்விற்கான புத்திமதிகளை அளிக்க இங்கிருந்து தொடங்கினார். **உங்களுக்குப் புத்திசொல் லுகிறேன்** என்று அவர் கூறினார். கிரேக்க - ரோமக் கலாச்சாரத்திற்குள்ளாக, ஒழுக்கவீனம் அதிலும் குறிப்பாக பாலுறவுரீதியான ஒழுக்கவீனம் எந்த அளவுக்கு சிக்கலாக்கியிருந்தது என்பது தரப்பட்ட நிலையில், கிறிஸ்துவின் வசனம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறபடி, பாவத்தை முற்றிலுமாகத்

துடைத்துப் போடுதலைச் செய்யக் கிறிஸ்தவர்கள் போராடினார் (4:1, 2). மாம்ச இச்சைகள் சுலபமாக விட்டுவிடப்படுபவையாக இருக்கவில்லை. அவர்களின் குடியிருப்பு இந்த உலகத்தில் இல்லை என்பதை அவர்களுக்குப் பேதுரு மறுபடியும் நினைவூட்டினார். மனித விஷயங்களின் வெளிப்புறங்களில் அவர்ககள் நின்று, உலகத்தையும் அதன் வழிகளையும் சார்ந்திராதவர்களாக இருந்த அவர்களின் முன்னணி நிலையை அவர்கள் உணர்ந்து அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்கள் தாங்கள் வாழ்ந்த நாட்டினூடே கடந்து செல்கிற **அந்நியர்களும் பரதேசிகளுமாக** இருந்தனர். அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் இந்த உலகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தவர்களால் துன்புறுத்தப்பட வாய்ப்பு இருந்தது. உலகம் அவர்களை வெறுக்கலாம், ஆனால் தேவன், பேதுரு மற்றும் அவர்களின் சகோதர சகோதரிகளுக்கு, அவர்கள் **பிரியமானவர்களாக இருந்தனர்.**

கிறிஸ்தவர்கள் "தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாக" உள்ளனர், அவர்கள் "பிரியமானவர்களாக" உள்ளனர், ஆனால் அவர்கள் "அந்நியர்களும் பரதேசிகளுமா" கவும் உள்ளனர். பரலோகமே அவர்களின் தாய்நாடாக உள்ளது. 1:2ல் பேதுரு தமது வாசகர்களை "பரதேசிகள்" என்று அழைத்திருந்தார், ஆனால் NASB வேதாகமம் இந்த வசனத்தில் *parepidēmos* என்ற அதே கிரேக்கச் சொல்லை "அந்நியர்கள்" என்று மொழிபெயர்க்கிறது. "பரதேசிகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள இதே போன்ற ஒரு வார்த்தை 1:17ல் "இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும்" என்ற இடத்தில் தரவழைக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் உள்ளது போன்று, ஒரு நாட்டைச் சுதந்தரித்துக் கொள்ளுதல் என்ற நோக்கம் புதிய ஏற்பாட்டில் அவ்வளவு முக்கியமானதாக இராவிட்டாலும், கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழும் நாட்டைப் பொறுத்த மட்டில் ஒரு பொறுப்புக் கொண்டுள்ளனர். குறைந்த பட்சம் இப்போது கிறிஸ்தவர்களின் வேர்கள் அவர்கள் வாழும் நாட்டில் உறுதியாக நடப்பட்டுள்ளன. தேவன் இந்த உலகத்தைப் படைத்து அதை நல்லது என்று அழைத்ததை அவர்கள் அறிந்துள்ளனர். படைக்கப்பட்ட எல்லாவற்றையும் பராமரிப்பவர்கள் என்ற வகையில் தங்களின் பொறுப்பை அவர்கள் உணர்ந்து அறிந்துள்ளனர். நல்ல அரசாங்கத்திற்கு அவர்கள் பொறுப்புள்ள குடிமகன்கள் என்ற வகையில் பங்களிக்கின்றனர். உதவியற்றவர்களுக்கும் தேவையில் உள்ளவர்களுக்கும் அவர்கள் நீதியை வற்புறுத்துகின்றனர்.

மனித சமூகத்திற்குப் பங்களிக்கும் உறுப்பினர்கள் என்ற வகையில் தாங்கள் செய்ய வேண்டிய கடமையைத் தவிர்ப்பதற்குக் கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு எந்த அடிப்படைத் தளங்களையும் தரவில்லை. அதே வேளையில், பழைய பாடல் ஒன்றின் "here we are but straying pilgrims"[1] என்ற வரிகளில் உள்ள வார்த்தைகளைப் பற்றிக் கிறிஸ்தவர்கள் அறிந்துள்ளனர். சார்லஸ் H. H. ஸ்கோபி அவர்கள், "அங்கு, [கானான்] நாட்டில் தேவனுடைய பிள்ளைகள் வேரூன்றிய தன்மைக்கும் அவர்கள் பரதேசிகளாயிருக்கும்படியான அழைப்பிற்கும் இடையில் வேதவசனத்தின் நிலையான போராட்டம்/இறுக்கம் ஒன்று உள்ளது" என்று நன்கு உற்றுக்கவனித்துள்ளார்.[2] இந்த போராட்டம்/இறுக்கம் என்பது பழைய இஸ்ரவேல் மக்களிடத்தில் உள்ளதைக் காட்டிலும் குறைவாகப் புதிய இஸ்ரவேல் மக்களிடம் இருக்கச் சான்றெதுவும் இல்லை.

முதல் நூற்றாண்டின் மத்தியதரைக்கடல் பகுதி உலகத்து மக்களுக்கு, நாடல்ல நகரமே அரசியல் பற்றிற்கு உரியதாக இருந்தது. குடிமக்கள், அதிலும் குறிப்பாக செல்வாக்குள்ள மக்கள், தங்கள் நகரில் இருந்த பெருமையைப் பற்றி அதிகம் தீவிரமாயிருக்க மனம் சாய்ந்தனர்.[3] ரோமர்கள் வருவதற்கு முன்னர், ஜனநாயக நகரங்களின் குடிமக்கள் யாவரும், நகரத்து விஷயங்களில் சமமான வாக்களிப்பைக் கொண்டிருந்தனர். குடிமக்களோடும் கூட, ஒரு நகரமானது குடியுரிமை இல்லாமல் அங்கு தங்கியிருப்பவர்களையும் கொண்டிருக்கும். வணிகர்கள் மற்றும் பிறர் தலைமுறை தலைமுறையாக அங்கு தங்கியிருக்கலாம். இருப்பினும் அவர்கள் குடியுரிமை அற்றவர்களாக இருப்பார்கள். பேதுருவின் வார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால், அவர்கள் [நகரத்து] வாசல்களில் "அந்நியர்களும் பரதேசிகளுமாக" இருந்தனர். பேதுரு பயன்படுத்திய வார்த்தைகள் அவரது வாசகர்களுக்கு, (1) வார்த்தைகளின் பழைய ஏற்பாட்டுப் பயன்பாட்டிலிருந்து (1:17க்கான விளக்கத்தைக் காணவும்) மற்றும் (2) அப்போதைய உலகத்தில் அவ்வார்த்தைகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட வகையில் இருந்து விளக்கப்படுத்தப்பட்டன.

பேதுருவின் வாசகர்கள், தங்கள் குடியிருப்பைப் பரலோகத்தில் கொண்ட மக்களாக இருந்ததால், அவர்கள் மாம்சஇச்சைகளை விட்டு விலகி இருக்க வேண்டியிருந்தது. J. ராம்சே மிக்காயேல்ஸ் அவர்கள் இந்தச் சொற்றொடரை "உங்கள் இயல்பான தூண்டுதல்களைத் துறந்துவிடுங்கள்" என்று மொழிபெயர்த்தார்.[4] "இயல்பான தூண்டுதல்கள்" பொல்லாதவைகளாக உள்ளன என்பதற்கான கருத்து ஆலோசனை எதுவும் பேதுருவின் வார்த்தைகளில் இருப்பதில்லை. உணவிற்கான விருப்பம், சுயநிறைவு அல்லது பாலுறவு ரீதியான வெளிப்பாடு ஆகியவை தங்களிலேயே தவறானவைகளாக இருப்பதில்லை. ஒரு நபர் மற்றவருடைய செலவில் சுயநிறைவை அடையும்படி விருப்பங்கள் தூண்டுகிறபோதுதான், அந்த விருப்பங்கள் மாம்ச இச்சைகள் ஆகின்றன. துறக்கப்பட வேண்டிய "மாம்ச இச்சைகள்" என்பவற்றில் பாலுறவுரீதியான ஒழுக்கக் கேடும் உள்ளடங்குகிறது, ஆனால் ஆத்தும ாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மற்ற இச்சைகளும் உள்ளன. அவற்றில் சிலவற்றை அப்போஸ்தலர் ஏற்கனவே பட்டியல் இட்டிருந்தார் (காண்க 2:1). பவுல், "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது" என்று எழுதினார் (கலாத்தியர் 5:17).

இந்த உலகத்தில் தங்கள் குடியிருப்பைக் கொண்டுள்ளவர்கள், புலன் இன்பம் அல்லது மற்றவர்கள் மீது அதிகாரம் ஆகியவற்றிற்கான மன விருப்பங்களால் தூண்டப்பட்டனர். ஆனால் விசுவாசிகளோ, மற்றவர்களின் செலவில் சுயநிறைவைக் கொண்டுவந்து மனத்தூண்டுதல்களில் இருந்து புறம்பே திரும்ப வேண்டியிருந்தனர். ஒருவேளை பேதுரு, தமது முதல் வாசகர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவங்களை நோக்கி ஒரு கண் வைத்தவராக, இந்தப் புத்திமதிகளை அளித்திருக்கலாம். இந்த உலகமானது தனது உறுப்பினர்களிடத்தில் இருக்கலாம் என்று அனுமதித்து இருந்த அதே வகையான விஷயங்கள் கிறிஸ்தவர்களிடமும் உள்ளன என்று அவர்களைக் குற்றம் சாட்ட சாத்தியமான இடம் கொடுத்துவிடாதபடி அவர்கள் [கிறிஸ்தவர்கள்] வாழ வேண்டும் என்று அவர் (பேதுரு) விரும்பினார்.

இந்த ஒரு இடத்தில் மட்டுமே பேதுரு "ஆத்துமா" (*psuchē*) என்ற

வார்த்தையை ஒருமையில் பயன்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் "ஆத்துமா" என்ற வார்த்தை அடிக்கடி, "ஒரு நபர்" என்பதைத் தவிர அதிகமாக அர்த்தப்படுவதில்லை (உதாரணமாக, "Awe came upon everyone." என்று NRSV வேதாகமமும், "எல்லாருக்கும் பயமுண்டாயிற்று" என்று தமிழ் வேதாகமம் மொழிபெயர்த்துள்ள இடமான நடபடிகள் 2:43ஐக் காணவும்.) ஒரு இடத்தில் இயேசு, ஆத்துமாவை சரீரத்திற்கு மேல் எதிராக அமைத்தார்: "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்" (மத்தேயு 10:28). "ஆத்துமா" மற்றும் "ஆவி" ஆகியவற்றின் அர்த்தம் நெருங்கி இருக்கும் வேளைகளும் உள்ளன. இவ்விடத்தில் பேதுரு, "ஆத்துமா" என்ற வார்த்தையை, மனித இயல்பில் உள்ள, கண்ணியம் மற்றும் தேவபக்தி ஆகியவற்றிற்கான உயர்குறிக்கோளை நோக்கிச் சாயும் மனத்துண்டுதல்களைக் குறிக்கப் பயன்படுத்தியிருப்பதாகக் காணப்படுகிறது. "மாம்ச இச்சைகள்" என்பவை உடலில் இருந்து தனிப்படப் பிரிக்கப்படாதவை போலவே, ஆத்துமா என்பது உடலில் இருந்து பிரிக்கப்பட்டு தனிப்பட்டதாக இருக்கும் விஷயம் அல்ல.

வசனம் 12. 1 பேதுரு 2:12 மற்றும் 3:16 ஆகியவற்றிற்கு இடையில் உள்ள இணைகருத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இந்த நிருபம் முழுவதிலும் அப்போஸ்தலர், தமது வாசகர்களின் நடக்கை (*anastrophe*), வாழ்வின் நடத்தை பற்றி அக்கறை கொண்டிருந்தார் (1:14-19). கிறிஸ்தவர்களின் நடத்தை அவர்களைச் சுற்றிலும் இருந்த புறதெய்வக் கலாச்சாரத்தாருக்குத் தோற்றம் தந்தது என்பதைப் பற்றி அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்று பேதுரு எதிர்பார்த்தார். சட்டநிபுணர்கள் ஒரு மூதுரைக் கொண்டுள்ளனர்: "சட்டம் நியாயமானதாக இருப்பது மாத்திரமல்ல, அது நியாயமானதாகத் தோன்றவும் வேண்டும்." தோற்றங்கள் முனைப்பாக எதிர்பார்க்கப்படுகின்றன. புறதெய்வ வணக்கத்தார் கண்களுக்கு சபை தோற்றமளித்த வகை பற்றிப் பவுலும் அக்கறை கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 10:32; கொலோசெயர் 4:5). இயேசு, "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறியபோது தமது சிந்தையில் முற்றிலும் மாறுபட்ட ஒரு விஷயத்தைக் கொண்டிருந்தார் (மத்தேயு 6:1). தேவனைக் கனப்படுத்துதல் என்பதற்கு மாறாக, சுயபுகழ்ச்சிக்கான மனவிருப்பத்தினால் ஊக்குவிக்கப்பட்ட நீதியுள்ள நடத்தை கொண்டிருத்தல் பயனற்றதாக உள்ளது. **புறஜாதிகளுள்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று** பேதுரு கூறியபோது, அவர் தேவனுடைய மகிமையையே சிந்தையில் கொண்டிருந்தார்.

"புறஜாதிகள்" என்ற வார்த்தையை ஒரு யூதர் பயன்படுத்தியபோது, அதன் மூலம் யூதரல்லாதவர்கள் என்பதை அவர் அர்த்தப்படுத்தினார். நான்கு சுவிசேஷங்களிலும் இவ்வார்த்தை இவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளது (உதாரணமாக மத்தேயு 10:5). பேதுரு மற்றும் பவுல் ஆகியோருக்கு, "யூதத்துவத்தன்மை" என்பது மாம்ச வம்சாவழியினாலோ அல்லது விருத்தசேதனம் மற்றும் நியாயப்பிரமாணத்தைச் சடங்காச்சாரமாகக் கடைப்படித்தல் ஆகியவற்றினால்கூட விளக்கப்படுத்தப் படவில்லை. யூதராயிருத்தல் என்பது தேவனுடைய மக்கள் மத்தியில் இருத்தல் என்று அர்த்தப்படுத்தியது என்றால், கிறிஸ்துவைத் தழுவிக்கொண்டவர்களே

உண்மையான யூதர்களாக இருந்தனர் என்றாகி இருக்கும் (ரோமர் 2:28, 29). விஷயம் அப்படி இருக்கும் என்றால், "புறஜாதியார்" என்பது ஒரு புதிய அர்த்தம் கொண்டிருத்தலும் அவசியமாக உள்ளது. பேதுரு இந்த வார்த்தையைப் பயன்படுத்திய வகையில் இது யூதரல்லாதவரை அல்ல ஆனால் கிறிஸ்தவரல்லாதவரையே அர்த்தப்படுத்துகிறது. கிறிஸ்தவரல்லாதவருக்கு ஆங்கிலத்தில் "pagans" என்ற வார்த்தை காணப்படுகிறது. இந்த வித்தியாசத்தைப் பிடித்துவைக்கச் செய்யப்பட்ட முயற்சியே, NIV வேதாகமத்தில் *ethne* என்ற வார்த்தை சுவிசேஷங்களில் காணப்படும்போது அதை "Gentiles" என்று மொழிபெயர்க்கக் காரணமானது, ஆனால் இவ்வசனத்தில் அதே வார்த்தையை "pagans" என்று மொழிபெயர்க்கவும் அதுவே காரணமாயிற்று.

1:6-8ல் பேதுரு, கிறிஸ்தவர்கள் சகித்துக் கொண்டிருந்த சோதனைகளைக் குறிப்பிட்டார். இப்போது அவர் அந்த சோதனைகள் கொண்டு வந்தவற்றைப் பற்றிக் குறிப்புக் கொடுத்தார். அந்த வேளை வரையிலும், கிறிஸ்தவம் ஒரு சட்டவிரோதமான மார்க்கம் என்ற அலுவலகரீதியான உத்தரவு ரோமாபுரியில் இருந்து வந்திருக்கவில்லை, ஆனால் அது [கிறிஸ்தவம்] புறதெய்வ சமூகத்திற்குப் புதியதாகவும் அந்நியமானதாகவும் இருந்தது. விசுவாசிகள், தாங்கள் மற்றவர்களின் இரகசிய இகழ்ச்சி பேச்சுக்கும் மோனமான எண்ணத்திற்கும் ஆட்பட்டிருந்ததாகக் கண்டனர். **புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில்** என்ற வார்த்தைகளினால் பேதுரு அர்த்தப்படுத்தியது என்ன என்பதைப் புரிந்துகொள்ளச் சிறிதளவு கற்பனையே தேவைப்படுகிறது. "விரோதமாய்ப்பேசுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல்லின் பெயர்ச்சொல் வடிவமானது, அப்போஸ்தலரின் வாசகர்கள் ஒழித்துப்போட வேண்டிய விஷயங்களாகக் கூறப்பட்டவற்றின் மத்தியில் இருந்தது ("சகலவித புறங்கூறுதலையும்" 2:2). கிறிஸ்தவர்கள் புறங்கூறப்பட்டிருந்தாலும் அதே வகையாகப் பதில்செய்யக் கூடாதிருந்தனர்.

பேதுருவின் வாசகர்கள் புறங்கூறப்படுவார்கள் என்ற விஷயம் பேதுருவின் கவலைக்கு உரிய விஷயமாக இருக்கவில்லை. அதை அவர் எதிர்பார்த்தார். புறங்கூறும் குறிப்பு எந்த வகையிலும் உண்மையாக இருந்துவிடலாகாது என்பதே அவரது அக்கறைக்குரிய விஷயமாக இருந்தது. அதுமட்டும் அல்ல, அவர் தமது வாசகர்களின் பரிசுத்தமான வாழ்வானது, அவிசுவாசிகளிடம் இருந்து வரும் புறங்கூறுதலான குறிப்புகளில் உள்ள விஷயங்களை உடனடியாக மதிப்பற்றதாக்கும் வகையில் மிகவும் தெளிவானதாக இருக்க வேண்டும் என்று அவர் [பேதுரு] விரும்பினார். **உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படியான சிந்தைகொண்ட நியாயமான எண்ணமுள்ள புறதெய்வ வணக்கத்தார்** இருப்பார்கள். 1:6-8ல் அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு நேரிட்ட சோதனைகளைக் குறிப்பிட்டார்; இங்கு அவர் புறங்கூறப்படுதலினால் அவர்களுக்கு நேரிட்ட சோதனைகளைப் பற்றி மிகவும் குறிப்பாக ஆழ்ந்து சிந்தித்தார். இவ்விரு இடங்களிலும் சோதனைகளின் விளைவுகள் கிறிஸ்தவ நடக்கையுடன் சேர்ந்து, தேவனுக்கு மகிமையை விளைவிப்பதாக இருந்தது. அவரது மகிமையும் கிறிஸ்தவர்கள் பழியில் இருந்து விடுவிக்கப்படுதலும், "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது" (1:7) என்ற

"சந்திப்பின் நாளிலே" உணர்ந்தறியப்படும்.

புதிய ஏற்பாட்டில் இந்த இடத்தில் மாத்திரமே, கர்த்தருடைய மறுவருகையின் நாள் "சந்திப்பின் நாள்" என்று அழைக்கப்பட்டுள்ளது. LXX *வேதாகமத்தில் தேவன் ஆச்சரியமான மற்றும் மகிமையுள்ள வகையில் செயல்படுதலுக்கான வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலவேளைகளில், ஆண்டவருடைய சந்திப்பு என்பது அவரது மக்களின் பயனுக்கானதாக உள்ளது (யாத்திராகமம் 3:16), மற்றும் சிலவேளைகளில் அது நியாயத்தீர்ப்பிற்கானதாக உள்ளது (எரேமியா 10:15). லூக்கா 19:44ல் இயேசு, யூதர்களிடம் "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும்" தம்மை ஆண்டவர் என்று யூதர்கள் ஏற்றுக்கொள்ளாததால் [பின்விளைவு மோசமானதாயிருக்கும்] என்று கூறினார். இயேசுவின் இவ்வுலக வருகை, அவரது மாம்சப்பிரகாரமான தோற்றம் என்பது இஸ்ரவேல் மக்களுக்கு நேர்மறையான ஒரு நிகழ்வாக இருந்தது, ஆனால் அதை உணர்ந்தறிய அவர்கள் தவறிவிட்டனர். [சந்திப்பின்நாள் என்ற] இவ்வார்த்தையைப் பேதுரு பயன்படுத்தியவகையில் இது, நியாயத்தீர்ப்புக்கு ஆண்டவர் மறுபடியும் வரும்நாளைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. கிறிஸ்தவர்களைப் புறங்கூறி அவர்களைத் துன்புறுத்தியவர்களை நியாயந்தீர்க்கக் கிறிஸ்து வரும்போது, அவரால் கிறிஸ்தவர்கள் பழிச்சொல்லில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.*[5] NRSV *வேதாகமத்தில் இது* "... and glorify God when he comes to judge" *என்று சரியான கருத்துணர்வைத் தருகிறது.*

ஆட்சி செய்யும் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் (2:13-17)

இந்த நிருபத்தின் பின்தொடரும் பகுதியில் (2:13-3:7), வாழ்வின் மூன்று வட்டாரங்களில் கீழ்ப்படிதலை அப்போஸ்தலர் வேண்டிக்கேட்டுக்கொண்டார்: (1) அரசுகளுக்குக் குடிமக்கள், (2) எஜமானர்களுக்கு அடிமைகள் மற்றும் (3) கணவர்களுக்கு மனைவிகள். இந்த புத்திமதிகள், என்ற "நீங்கள் [கிறிஸ்தவர்கள்] அவர்களுக்குள்ளே [புறஜாதிகளுக்குள்ளே] நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்" என்ற 2:12ம் வசனத்தின் விரிவாக்கமாக உள்ளன. அதிகாரத்திற்குத் தக்கவகையில் மதிப்பளித்தல் என்பதை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குள்ள சமூக வாழ்வு என்பதே இவை யாவற்றிற்கும் பொதுவான அம்சமாக உள்ளது.

புதிய ஏற்பாட்டின் நிருபங்களில், வீட்டில் உள்ள பல்வேறு உறுப்பினர்களின் பொறுப்புகள் எடுத்துரைக்கப்பட்ட மற்ற இடங்களும் உள்ளன. இவை யாவையுமே, கீழான இடத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தில் இருப்பவர்களுக்குக் கீழ்ப்படிதலின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இவைகள் அடிக்கடி, "வீட்டாருக்குரிய சட்டக்கோட்பாடுகள்" என்று அல்லது ஜெர்மன் ஆர்க்கிக் வார்த்தையைப் பயன்படுத்துவதென்றால் Haustafeln (ஒருமையில் Haustafel) என்று அழைக்கப்படுகின்றன. எபேசியர் 5:22-6:9 மற்றும் கொலோசெயர் 3:18-4:1 ஆகியவை, 1 பேதுரு நிருபத்தைப் பெரிதும் ஒத்துள்ள "சட்டமுறைமைகளாக" உள்ளன, 1 தீமோத்தேயு 2:8-15 மற்றும் தீத்து 2:1-10; 3:1, 2 ஆகியவையும் சில ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன.

புதிய ஏற்பாட்டிற்குச் சமகாலத்தில் எழுதப்பட்ட, கிரேக்கரில் இருந்து யூதமார்க்கத்தைத் தழுவிய (யூதத்துவ, கிரேக்க மற்றும் இலத்தீன் பின்னணிகளைக் கொண்ட) எழுத்தாளர்களின் எழுத்துக்கள், வீட்டு உறுப்பினர்களுக்கான சட்டங்களாக, புதிய ஏற்பாட்டில் உள்ள "சட்டமுறைமைகளுக்கு" இணையான சிலவற்றை அளிக்கின்றன. பரஸ்பரம் செயல்படுதல் என்பது உலகப் பிரகாரமான இந்த எழுத்துக்களுடன் ஒப்பிடும்போது, புதிய ஏற்பாட்டில் உள்ள முதன்மை வேறுபாடுகளில் ஒன்றாக உள்ளது. புதிய ஏற்பாட்டு சட்டமுறைமைகளில், அடிமைகளைப் போன்றே எஜமானர்களும், அடிமைகளுடனான தங்கள் நடைமுறைகளில் பொறுப்பும் கடமையும் கொண்டுள்ளனர், மற்றும் மக்களைப் போன்றே அரசாங்கமும் தனக்குக் கீழ்ப்பட்டிருக்கும் மக்களுக்குச் செய்ய வேண்டிய பொறுப்புகளைக் கொண்டுள்ளன.

சட்டமுறைமைகள் மற்றும் அவற்றின் பொதுவான பண்புகள் பற்றிக் கணிசமான கலந்துரையாடல் கல்வியாளர்கள் மத்தியில் இருந்துள்ளது. புதிய ஏற்பாட்டிலும் உலகத்திலும் சட்டமுறைமைகள் பயன்படுத்தப்பட்டுள்ள வகையைப் பற்றி நாம் கற்றுக்கொள்கையில், பேதுருவின் அறிவுறுத்துதல்களினுடைய இயல்பும் மறைவான கருத்துக்களும், ஓரளவிற்குத், தெளிவாகும்.

[13]நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். [14]மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள். [15]நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. [16]சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும், உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். [17]எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்.

வசனம் 13. *நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள் என்ற பேதுருவின் வேண்டுகோள் பொதுவானதாக உள்ளது. "மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடர் (pasē̄i anthrōpinē̄i ktisei என்ற) கடினமான ஒன்றாக உள்ளது. நேரடிப்பொருளில் இது, "மனிதப்படைப்பு யாவற்றிற்கும்" என்று அர்த்தப்படுகிறது. அப்போஸ்தலருடைய வாசகர்கள், மனிதருடைய விஷயங்களில், முறையான சமூக அமைப்பை ஏற்படுத்துவதற்காக உள்ள பொருளாதார அல்லது குடிமை நிறுவன ஏற்பாடுகளுக்கு, தகுந்த வகையில் மதிப்பு தருபவர்களாகவும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும் இருக்கும்படி அவர்களை அப்போஸ்தலர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். பேதுருவின் புத்திமதி அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படிதல் என்பதுடன் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை, ஆனால் பின்தொடரும் வசனங்கள், இதில் அரசாங்கங்கள்*

உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. சிலவேளைகளில் "வீட்டு தொடர்பான சட்ட முறைமைகள்," வீட்டில் உள்ள உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் போல மதிக்கப்பட வேண்டியுள்ள வகையில் உள்ள அறிவுறுத்துதல்களை உள்ளடக்கி இருந்தன. 1 தீமோத்தேயு 2:1, 2ல் பவுல், "எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களைகளும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும் ... ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்" என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார். தீத்து 3:1ல் அவர், "துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும் ... அவர்களுக்கு நினைப்பூட்டு" என்று கூடுதலாகக் கூறினார். எபேசியர் 5:22-6:6 அல்லது கொலோசெயர் 3:18-4:1 ஆகிய பகுதிகளில் ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிதல் பற்றிய உரைகள் எதுவும் இல்லை.

பேதுருவின் வார்த்தைகள் மற்ற "வீட்டு சட்டமுறைமைகளுடன்" ஒற்றுமைத்தன்மையைப் பகிர்ந்து கொள்ளுகையில் அவரது வேண்டுகோளானது நடைமுறை மரபு மொழியாக மாத்திரமே உள்ளது என்ற வகையில் நாம் அதை ஒதுக்கி விடலாகாது. அப்போஸ்தலர் தமது வாசகர்கள் வாழ்ந்த குறிப்பிட்ட சமூகத்தின் சந்தர்ப்பப் பொருளில் தமது நிருபத்தில் இதை உரைப்பதால், 1 பேதுரு நிருபத்தில் உள்ள "சட்டமுறைமை" அது உள்ளபடியான வடிவத்தை மேற்கொள்கிறது. அவர்களின் நிலைப்பாடு வலுக்குறைந்ததாக இருந்தது. அரசு அதிகாரிகளின் ஐயப்பாட்டைத் தூண்டக்கூடிய எதையும் அவர்கள் செய்யக் கூடாது என்று அவர்களைப் பேதுரு வேண்டிக்கேட்டுக்கொண்டார். அதற்கு நேர்மாறாக அவர்களின் நடத்தையானது கண்டனத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அவர்கள் "மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும்" தங்களுடைய கீழ்ப்படிதலில் உதாரணத்துவமாக இருக்க வேண்டும். அவர்கள் "அரசராகிய இயேசுவை" அறிவித்தபடியால், கிறிஸ்தவ சூழ்நிலையின் நிச்சயமற்ற தன்மை ஒரு பகுதி வந்திருந்தது. பவுலுக்கும் அவரது துணையாளர்களுக்கும் எதிராகத் தெசலோனிக்கேய யூதர்கள் கொண்டு வந்திருந்த குற்றச்சாட்டில் உண்மை கொஞ்சம் இருந்தது: "இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்கள்" (நடபடிகள் 17:7). மேலும் "மீட்பர்" மற்றும் "சர்வவல்லவர்" போன்ற சொற்றொடர்கள் இராயனுக்கே முறைமையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. கிறிஸ்தவர்களுக்கோ இயேசு ஒருவரே மீட்பராக இருந்தார், தேவன் ஒருவரே சர்வவல்லவராக இருந்தார். கிறிஸ்தவர்களின் சொல்பதங்களே அவர்களுக்கு ஒரு அபாயத்தை முன்னிறுத்தின.

கிறிஸ்தவர்கள் அதிகாரமுள்ள ராஜாவுக்கு ... கீழ்ப்படிய வேண்டும் என்ற அப்போஸ்தலரின் வேண்டுகோள், கேள்விகளை எழுப்புகிறது: 1 பேதுரு நிருபத்தை முதலில் வாசித்த வாசகர்கள் அரசாங்கத்தின் உபத்திரங்களை அனுபவித்துக் கொண்டிருந்தனரா? இதனால்தான் அவர்கள் தங்களை ஆளுவோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அப்போஸ்தலர் வேண்டிக்கொண்டாரா? இந்த தொடக்க காலத்தில் ஆசியாவின் உள்ளூர் அரசாங்கங்களினால் கிறிஸ்தவமானது முறைப்படியான அடக்கு முறையை

அனுபவித்தது என்தற்குப் புதிய ஏற்பாட்டிலோ அல்லது அதன் சமகால உலகரீதியான ஆதாரமூலங்களிலோ சாட்சியம் எதுவும் இல்லை. ரோம ாபுரியில் இருந்து கிறிஸ்தவத்திற்கு எதிரான பிரகடனம் எதுவும் நிச்சயமாக இந்த வேளையில் இல்லை. இருப்பினும் அது, குடிமை அதிகாரிகளிடத்தில் இருந்து கிறிஸ்தவர்கள் உடனடியான அபாயம் எதையும் எதிர்கொள்ளவில்லை என்று அர்த்தப்படுவதில்லை. கிறிஸ்தவர்களுக்கும் எதிராகக் குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்பட்டபோது. அவர்கள் புறங்கூறப்பட்டனர் (2:12), அவர்கள் சுமக்க வேண்டிய அழுத்தங்களை உள்ளூர் அதிகாரிகள் கொண்டு வந்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட முடியும். பேதுருவின் வாசகர்கள் குடிமை அதிகாரிகளைக் கிறிஸ்தவர்கள் பழித்து வெறுக்கின்றனர் என்ற கருத்தை வளர்க்கக் கூடிய பகைமை உணர்வின் வளையம் எதையும் தவிர்க்க வேண்டும் என்று பேதுரு விரும்பினார்.

அரசாங்கத்துடன் கிறிஸ்தவரின் உறவு சிரமமானதாக இருக்க முடியும். அரசாங்கங்கள் இராஜரீகத்தை உறுதிப்படுத்துகின்றன. நல்விசுவாசத்தில் விசுவாசிகள் செய்ய இயலாத சில விஷயங்களை, அவர்கள் செய்யும்படி அரசாங்கங்கள் கேட்டுக்கொள்ளும் சாத்தியக்கூறு எப்போதுமே உள்ளது. கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்கக் கூடாது என்ற கட்டளையை பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் யூத அதிகாரிகள் மூலமாக எதிர்கொண்டபோது, "மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அசியமாயிருக்கிறது" என்று பேதுரு பதில் அளித்தார் (நடபடிகள் 5:29). ஒருவர், கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவராக இருந்து கொண்டே தம்மீது அதிகாரம் செலுத்தும் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிய இயலாத அசாதராணமான சூழ்நிலைகள் எழும்புகின்றன. இருப்பினும் சாதாரண சூழ்நிலைகளில், வாழ்வின் அன்றாடத் தேடுதல்களில், தகுதியான விஷயங்களைச் செய்து முடிப்பதற்கு வடிவமைப்பும் அதிகாரமும் அவசியமாக உள்ளன. "அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்" (ரோமர் 13:3). பேதுரு நிருபத்தின் வாசகர்கள் ஒருவேளை கண்டிருக்கக் கூடும்படிக்கு, அதிகாரிகள் அடக்குபவர்களாக இருக்கும்போது, அவர்களை விரோதத்துடன் பற்றிக்கொள்ளும்படியாகவோ அல்லது அவர்களுக்கு வெறும் உதடுகளினால் சேவிப்பதைத் தரும்படியாகவோ சோதிக்கப்படலாம். அது சூழ்நிலையை இன்னும் மோசமாக்குகிறது, கிறிஸ்தவர்கள் தங்களுக்காக இல்லாவிட்டாலும், "கர்த்தர் நிமித்தம்" அதிகாரிகளை மதிக்க வேண்டும் என்று பேதுரு விரும்பினார்.

வசனம் 14. "இராஜா" என்பவர் மிக உயர்ந்த அதிகாரத்தைக் கொண்டிருந்தாரென்று பேதுரு சற்றுமுன்தான் கூறியிருந்தார். ரோமர்கள் அரசர்களுடனான தங்கள் குறிப்பிடத்தக்க வரலாற்றின் காரணமாக,[6] தங்கள் ஆட்சியாளரை அரசர் என்று அழைக்கமாட்டார்கள். இருந்தபோதிலும் பேரரசர், கிழக்கத்திய எதேச்சாதிகாரி போன்றே அதிமாகச் செயல்பட்டார். வெகுஜனப் பேச்சு வழக்கில் பேரரசர் இராஜாவாக இருந்தார். விசுவாசிகள் அரசருக்குக் கீழ்ப்படிய வேண்டியது மட்டுமின்றி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். "அதிகாரிகள்" என்ற (*h□gem□n*) வார்த்தை, ரோம உயர் அலுவலர்களையும் உள்ளூர் நகர அதிகாரிகளையும் உள்ளடக்கிய பொதுவான சொற்றொடராக உள்ளது.

பேதுருவின் வாசகர்கள் சிறிய ஆசியாவின் நான்கு பெரிய ரோம மாகாணகங்களில் வாழ்ந்தனர்.[7] அவற்றில் இரண்டு மாகாணங்களான ஆசியாவும் பொந்து/பித்தினியா தேசமும், ஓராண்டு அடிப்படையில் ரோம செனெட் சபையினால் அனுப்பப்பட்டிருந்த ஆளுநர்களால் ஆட்சி செலுத்தப் பட்டிருந்தன. மற்ற இரண்டு மாகாணங்களான கலாத்தியாவும் கப்பதோக்கி.யாவும், பேரரசருக்கு நேரடியாகப் பதில் அளிக்க வேண்டும் என்பது கோட்பாட்டளவில் இருக்கையில், உண்மையில் பேரரசர் கட்டுப்பாடு செலுத்தினார். எல்லா ஆளுநர்களும் "அவராலேயே அனுப்பப்பட்டனர்" என்று கூறுதல் மிக அரிதாகவே தவறான பிரதிநிதித்துவமாக இருக்கும். ஆளுநர்கள் தங்கள் மனவிருப்பப்படி ஆளுகை செய்தனர், அவர்களுக்குப் பின்னால் ரோமாபுரியின் முழு அதிகாரமும் இருந்தது. புதிய ஏற்பாட்டில் எதிர்கொள்ளப்பட்ட இரண்டு அதிபதிகள். செர்கியு பவுல் (நடபடிகள் 13:7) மற்றும் கல்லியோன் (நடபடிகள் 18:12) ஆகியோர் மாத்திரமே. அன்றாட வாழ்வு விஷயங்களில், ஆசியாவின் குடிமக்கள், ஆளுநர்கள் போன்ற உயர் அதிகாரிகளுடன் மறைமுகாக மாத்திரமே தொடர்புகொள்ளுவார்கள். பேதுருவின் வாசகர்கள், நீதிபதிகள், காவலர்கள் போன்ற உள்ளூர் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து இருந்தபோது, அவர்கள் தங்கள் மேல் அதிகாரம் உள்ளவர்களான ஆளுநர்களுக்கும் இராஜாக்களுக்கும் கீழ்ப்படிந்தனர் என்றானது.

(இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தில்) கிறிஸ்தவர்கள் அரசு அதிகாரிகளை எதிர்ப்பவர்கள் ஆவதற்குக் காரணம் எதுவும் இருக்கவில்லை. முறையான சமூகம் என்பது நாட்டின் அந்நியரும் பரதேசிகளுமான இருப்பவர்களுக்கு அனுகூலமானதாகவே இருக்கிறது. ஆட்சியாளர்கள் கைகளில் ஒன்றும் அறியாத மக்கள் துன்புறும் தனிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கையில், அரசு அதிகாரிகள் தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படியாகவே நியமிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவர்கள் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படியாகவே நியமிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவர்கள் நன்மை செய்கிறவர்கள் மத்தியில் இருந்தனரா என்பது கேள்வியாக இருக்கவில்லை. பவுலும் இதேவகையில் வாதிட்டார். ஆள்பவர் "தேவஊழியக்காரனாயிரு" ந்தார் (ரோமர் 13:4). பேதுருவோ பவுலோ, அரசர்களின் தெய்வீக உரிமைக்காக வாதிடவில்லை. அதற்கு பதிலாக அவர்கள், கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழும் சமூகத்தில் பங்களிக்கும் உறுப்பினர்களாக இருந்தனர் என்பதில் மனநிறைவு அடைந்தனர். ஆகவே, சாதாரண சூழ்நிலைகளில், அவர்கள் முறையான அரசை ஆதரிப்பதற்காகத் தங்கள் செல்வாக்குகளையும் முயற்சிகளையும் விட்டுக்கொடுப்பார்கள்.

வசனம் 15. குடிமை அதிகாரிகளுக்குக் கிறிஸ்தவர்கள் மதிப்பு நிறைந்த வகையில் கீழ்ப்படியும்போது, பின்வரும் நேர்மறையான விளைவுகள் ஏற்படுகின்றன: (1) அவர்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்கின்றனர், மற்றும் (2) அவர்கள் புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குகின்றனர். மற்றவர்களின் அறியாமையின் மூலமாக மாத்திரமே விசுவாசிகள் மீதி பொல்லாங்கு வருகிறது என்று ஆலோசனை சொல்வதில் பேதுரு உபகாரியாக இருக்கவில்லை. கிறிஸ்தவர்களைப் புறம்பேசுபவர்கள், அறியாமை

உள்ளவர்களாகவும் அதே வேளையில் குரோதம் உள்ளவர்களாகவும் இருந்தனர். இருப்பினும் கிறிஸ்தவர்கள் மீது பகைமையின் ஆதராமுலங்களாக இருந்தவர்கள், தங்களின் சொந்தமான மிகச்சிறந்த ஆர்வம் எது என்பதை உணர்ந்தறியத் தவறினர் என்ற மறைவாக கருத்து இங்குள்ளது. நசரேயனாகிய இயேசு, நற்தன்மை மற்றும் ஞானம் ஆகிய இரண்டிற்கும் ஆதாரமூலம ாக இருக்கிறார். அவரை உலகத்தின் பொல்லாங்கும் அறியாமையுமே எதி ர்க்கின்றன. கிறிஸ்தவர்களின் நற்பெயரைக் கெடுக்கிறவர்களின், பொல் லாங்கு மற்றும் அறியாமை ஆகிய இரண்டையுமே "வாயடைத்தலுக்கு" சரியானவற்றைச் செய்வது என்பதே கிறிஸ்தவர்களுக்குள்ள வழியாகும்.

வசனம் 16. பேதுருவின் வாசகர்கள் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்தி ருக்க வேண்டும் என்று அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொண்ட அதேவேளையில் பேதுரு, அவர்களின் சுதந்தரம் பற்றியும் அவர்களுக்கு நினைவூட்டினார். கீழ்ப்படிதலும் சுதந்தரமும் ஒன்றாக நிற்கின்றன. கிரேக்க ரோம உலகத்தில், சுதந்தரமான மனிதனை அடிமையினின்று பிரித்த வித்தி யாசத்தைப் பார்க்கிலும் அதிகம் கண்டிப்பானது வேறு ஒன்றுமே இல்லை. வித்தியாசம் பற்றிக் கிறிஸ்தவர்கள் கவலைப்படவில்லை. அடிமைக்கு, "அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும் அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்" என்று பவுல் கூறினார் (எபேசியர் 6:7, 8). அடிமையின் எஜமானருக்கு "அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறார்" என்றும் அவர் கூறினார் (எபேசியர் 6:9). சுதந்தர மனிதர் கிறிஸ்துவுக்கு அடிமையாக இருந்தார், மற்றும் அடிமை தேவனுக்குச் சுதந்தரம ானவராக இருந்தார். சுதந்தரம் மற்றும் அடிமைத்தனம் ஆகியவை சுவிசேஷ வரலாற்றில் ஒரு வினோதமான உறவைக் கொண்டுள்ளன. நாசரேத்தூர் ஜெப ஆலயத்தில் இயேசு, "சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் ... பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" என்ற ஏசாயாவின் வார்த்தைகளைக் குறிப்பிட்டுக் காண்பித்தார் (லூக்கா 4:18). பவுல், "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமை" என்று நாடகத்துவமாக உறுதிப்படுத்தினார் (கலாத்தியர் 5:1). இருப்பினும் பவுல் தமது அந்த நிருபத்தை தம்மையே கிறிஸ்துவின் அடிமை (*doulos*) என்று அழைத்தே தொடங்கினார் (கலாத்தியர் 1:10). [தமிழ் வேதாகமத்தில் இவ்விடத்தில் ஊழியக்காரன் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.]

NASB வேதாகமம் இவ்வசனத்தின் தொடக்கத்தில் ஒரு வினைச்சொல்லை இட்டுள்ளது, ஆனால் அது கிரேக்க மொழி வேதாகமத்தில் இருப்பதில்லை. 2:13ன் கடைசி வார்த்தைகள் 2:16 உடன் பாராட்டத் தக்க வகையில் பொருந்துகின்றன: சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் - இருப்பினும் சுயாதீனம் உள்ளவர்கள் தேவனுக்கு அடிமைகளாயிருக்கின்றனர் - "கீழ்ப்படியுங்கள்." ஒருவர் சவுக்கினால் அடிக்கப்படுதல் அல்லது மரணம் என்பதே பதிலாக பதிலியாக இருக்கும் என்ற நிலையிலும் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியலாம். விசுவாசிகள் அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படியும்போது தங்கள் சுதந்தரத்தைக் கைவிட்டு விடவில்லை என்பதை அறிய வேண்டும். மனிதர்களின் சட்டங்களுக்கு முன்னதாகக் தேவனுடைய சட்டங்கள்

இருக்க வேண்டும் என்பதற்கு இணங்காமலே ஒருவர் சட்டங்களுக்குக் கீழ்ப்படியலாம். எப்படியிருப்பினும், கீழ்ப்படியத் தேர்ந்து கொள்ளும் நபர் சுதந்தரமானவராகவே இருக்கிறார். கிறிஸ்தவ சுதந்தரம் என்பது பின்வரும் வேண்டுகோளின் அடிப்படையில் உள்ளது; இயேசுவைக் கர்த்தராக உரிமை கொண்டவர் அவருக்குக் கீழ்ப்படிகிறார்; கிறிஸ்தவர் தமது வாழ்வின் வழியை மனதில் கொள்கிறார். இயேசுவே அவரது சொந்த சித்தமாகிறார் இயேசு மக்களைப் பார்வையற்ற கீழ்ப்படிதலுக்குக் அழைப்பதில்லை. அவர் தம்மை நேசிக்கும்படியாகவே மக்களை அழைக்கிறார். கர்த்தரை நேசிப்பவர்கள், தங்கள் சொந்த சித்தமானது அவரது சித்தத்துடன் பின்னிப் பிணைந்து விடுவதால், அவரைச் சேவிக்கின்றனர். அவர்கள் "தேவனுடைய அடிமைகள்" என்ற வகையில் சுதந்தரமான கீழ்ப்படிதலில் வாழ்கின்றனர். கட்டுப்பாடற்ற சுதந்தரத்தின் நகரத்துவ இருப்பு என்பதே இதற்குப் பதிலியாக உள்ளது.

தொடக்கத்தில் இருந்தே, கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளும் அதற்குப் புறம்பேயும், கீழ்ப்படிதலுள்ள சுதந்தரத்தின் கருத்தைப் புரிந்து கொள்ளத் தவறியவர்கள் இருந்துள்ளனர். சட்டவியத்தின் அடிமைத்தனம் என்பது சிலரின் பதில் செயலாக உள்ளது. இயேசு ஆண்டவராக இருக்கிறார் என்று விசுவாசித்தலில் சிலர், அவரது அதிகாரத்திற்குப் பயன்படுவதால் கீழ்ப்படிதலின் சுமையைச் சுமக்கின்றனர். மற்ற விசுவாசிகள், கீழ்ப்படிதலுள்ள சுதந்தரத்தைப் புரிந்துகொள்ளத் தவறுவதால், தேவனுடைய கிருபையை தவறாக யூகித்துக்கொள்கின்றனர். சுதந்தரம் என்பது உரிமத்திற்குச் சாக்குப்போக்காகிறது. உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், என்று பேதுரு எழுதியபோது அவர், இந்தப் பிந்திய வகையினருக்கு கல்விபுகட்ட விரும்பினார்.

பவுலின் விரோதிகள், பேதுரு தடைசெய்ய இந்த கிருபையின் உபதேசம் பற்றியே அவர்மீதி குற்றம் சுமத்தினர். அவர்கள், பவுலின் உபதேசம் பாவத்தை ஊக்குவிப்பதாகக் கூறினர். அவர்கள், "பாவம் எவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவுக்குக் கிருபையும் அதிகமாகும்! நாம் பாவம் செய்வோமாக அப்போதுதான் கிருபை பெருகும்" என்று வாதிட்டனர். இதற்குப் பவுல், "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" என்ற கேள்வியைக் கொண்டு பதில் அளித்தார் (ரோமர் 6:2). தன்னையே சேவித்துக் கொள்வதற்குச் சாக்குப் போக்காகவே சுயாதீனம் உள்ளது என்று உறுதிப்படுத்தச் சாயும் கிறிஸ்தவருக்கு, பவுல் ஒரு கேள்வியைக் கொண்டிருந்தார்; பேதுரு ஒரு தடையைக் கொண்டிருந்தார். இவ்விருவருமே, சுயாதீனத்தைச் செயல்படுத்துதல் என்பது, தேவனுக்கு முற்றிலுமாக சேவித்தலில் கீழ்ப்படிதலின் கட்டுப்பாடுகளுக்குள் வருகிறது என்று ஒப்புக் கொண்டனர்.

வசனம் 17. ஒரு நல்ல போதகராக இருந்தார் என்ற வகையில் பேதுரு, நான்கு கட்டளைக் கொண்டு இவ்வசனப் பகுதியைத்தொகுத்துரைத்தார்: கனம் பண்ணுங்கள், அன்புகூருங்கள், பயந்திருங்கள், கனம்பண்ணுங்கள். வினைச் சொற்களின் காலத்தில் உள்ள வினோதமான மாறுதலை ஆங்கில வாசகர் இழந்து போயிருந்தார். ஒருமுறை மாத்திரமே வரும் வினைச்சொல் கட்டளை ஒன்றைப் பயன்படுத்தி, அதைத் தொடர்ந்து மூன்று நிகழ்காலக் கட்டளைகளை அப்போஸ்தலர் இங்கு உரைத்தார். இந்த மாற்றத்திற்கு

ஏதாவது தனிச்சிறப்பு உள்ளதா இல்லையா என்பதே இங்கு கேள்வியாக இருக்கிறது. காலத்தில் மாற்றம் என்பது அர்த்தத்திற்கு ஏதேனும் பங்களிக்கிறதா? அப்படிப் பங்களிக்கிறது என்றால், அந்த மாற்றம் மொழிபெயர்ப்பில் பிரதிபலிக்கப்பட வேண்டுமே.

மொழிபெயர்ப்பாளர்கள், ஆங்கில வார்த்தைகளைத் தாங்கள் தேர்ந்து கொள்வதினால் மாத்திரம் அல்ல, ஆனால் தாங்கள் தேர்ந்துகொள்ளும் நிறுத்தற்குறிகளினாலும், மூலமொழியின் விளக்கத்தைத் தெரியப்படுத்துகின்றனர். KJV வேதாகமம் கட்டளைகளை இணையாக மொழிபெயர்க்கிறது. மொழிபெயர்ப்பாளர்கள், காலத்தின் மாற்றத்தில் கொஞ்சமே தனிச்சிறப்பைக் கண்டனர் அல்லது தனிசிறப்பு எதையும் அவர்கள் காணவே இல்லை. NASB, NRSV வேதாகமங்களும் இதையே செய்துள்ளன. இருப்பினும் NIV வேதாகமம், "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்: சகோதரரிடத்தில் அன்புகூருங்கள், தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" என்று மொழிபெயர்த்துள்ளது. REB வேதாகமமும் இதேபோன்று செய்துள்ளது. இந்தப் பிந்திய மொழிபெயர்ப்புகள், முதல் வினைச்சொல்லின் ஒருமுறை மாத்திரம் வரும் தன்மையானது, பின்தொடரும் மூன்று கட்டளைகளுக்கும் ஒரு தொகுப்புரையாக உள்ளது என்பதைப் புரிந்துகொண்டுள்ளன. இவ்வாறாக, "எல்லா மனிதரையும் கனம் பண்ணுங்கள். குறிப்பாக சகோதரரை அன்பு செய்தல், தேவனுக்குப் பயந்திருத்தல், மற்றும் இராஜாவைக் கனம்பண்ணுதல் ஆகியவற்றின் மூலமாக எல்லாரையும் கனம் பண்ணுங்கள் என்று திட்டவட்டமாக நான் அர்த்தப்படுத்துகிறேன்" என்பதே இங்கு கருத்தாக உள்ளது. இந்த மொழிபெயர்ப்பை ஆதரிக்கும் வகையில் "கனம் பண்ணுங்கள்" என்ற வினைச்சொல் இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒருமுறை பயன்படும் கட்டளைக்கும் நிகழ்காலக் கட்டளைக்கும் இடையில் உள்ள வேறுபாடு சிலவேளைகளில் அற்பமாக உள்ளது என்பது உண்மையே; இருப்பினும் இந்த இடத்தில், NIV வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு சற்றுக் சிறப்பானதாக உள்ளது. இருந்தபோதும், மாறுபாடான நிறுத்தற்குறியிடுதல் இந்த வாக்கியத்தின் அர்த்தத்தை அடிப்படையில் மாற்றுவதில்லை. எந்த விஷயத்திலும், கிறிஸ்தவர்கள் எல்லாரையும் கனம்பண்ணும்படி கூறப்படுகின்றனர்; ஆனால் கனம்பண்ணுதலுடன் கூடுதலாக, அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான தங்கள் சகோதரர்களையும் சகோதரிகளையும் அன்புகூர வேண்டும்.

கட்டளைகள் தங்களுக்குள்ளேயே அர்த்தத்தில் வளமானவையாக உள்ளன. பழங்கால உலகம், நவீன உலகத்தைக் காட்டிலும் குறைவான அளவில் சுயமேட்டிமை உடையதாக இருக்கவில்லை. மக்களினம், மொழி, இனம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் எல்லைகள் பேதுருவின் புத்திமதியில் கரைந்து போகின்றன: எல்லாரையும் கனம்பண்ணுங்கள்.[8] தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல என்பதைப் பேதுரு, பல ஆண்டுகளுக்கு முன்பே கற்றிந்திருந்தார் (நடபடிகள் 10:34). பவுல், "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" என்று எழுதினார் (கலாத்தியர் 3:28). தேவன் "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே

தோன்றப்பண்ணினார்" (நடபடிகள் 17:26) என்பதால், கனம்பண்ணுதல் என்பது எல்லாருக்கும் செலுத்த வேண்டிய கடமையாக உள்ளது. மக்கள் இனம், பால் அல்லது கலாச்சாரம் ஆகியவற்றின் காரணமாக மக்களை வகைப்படுத்துதல், சரீர அமைவு அல்லது ஊனம் ஆகியவற்றின் நிமித்தமாகப் பிரித்து வகைப்படுத்துதல் என்பது, "சகல ஜனங்களையும்" தோன்றப்பண்ணின தேவனைத் தமது தேவனாகக் கொண்டிருக்கும் எவரையும் கனவீனம் செய்தலாக உள்ளது.

எல்லா மக்களையும் கனம்பண்ண வேண்டும் என்று இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்குப் போதித்திருக்கையில், அவர்கள் தங்களுடன் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்கிறவர்களுக்குக் கனம் செய்தலைக் காட்டிலும் அதிகமானவற்றைச்செய்ய வேண்டும். அவர்கள் சகோதரரிடத்தில் அன்புகூர வேண்டும். பேதுரு இவ்விடத்திலும் 5:9லும் "சகோதரத்தும்" என்பதற்கான (*adelphotēs* என்ற) வார்த்தையைப் பயன்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் வேறு எவ்விடத்திலும் இவ்வார்த்தை காணப்படுவதில்லை. "சகோதரத்துவம்" என்பது நசரேயனாகிய இயேசுவே கிறிஸ்துவாக உள்ளார், அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று பொதுவாக அறிக்கையிடுபவர்களாக உள்ளனர்.[9] 5:9ம் வசனம் தெளிவாக்குகிறபடி, இது ஒருவர் உறுப்பினராக உள்ள உள்ளூர் சபைக்கும் அதிகமானதை அர்த்தப்படுத்துகிறார். உலகளாவிய வகையில் கிறிஸ்துவின் சபைகள் விசுவாசிகளின் ஐக்கியமாக உள்ளனர் (ரோமர் 16:16). அன்பு எல்லாருக்கும் விவரிவாக்கப்பட்டுள்ளது. விசுவாசிகளுக்கு இடையிலான அன்பின் தனிச்சிறந்த பிணைப்பு என்பது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி அக்கறைக்கு உரிய விஷயமாக உள்ளது. பேதுரு கூறிய "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்" என்பதற்கு இணையாகப் பவுல் கூறிய "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" என்பது உள்ளது (கலாத்தியர் 6:10). இயேசு, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்று கூறியிருந்தார் (யோவான் 13:35).

முதல் இரண்டு கட்டளைகளைப் போன்று, கடைசி இரண்டு கட்டளைகள் நெருக்கமான பிணைப்புக் கொண்டுள்ளன. விசுவாசி தேவனுக்குப் பயந்திருக்க வேண்டும் மற்றும் அவர் ராஜாவைக் கனம்பண்ண வேண்டும். தேவன் மீது அன்புகூருதல் என்பதே எல்லாக்கட்டளைகளிலும் மிகப்பெரியது என்று இயேசு கூறினார் (மாற்கு 12:28-30). அன்பு மற்றும் பயம் ஆகியவற்றிற்கு இடையில் சற்றே இறுக்கம் உள்ளது, ஆனால் அவைகள் பரஸ்பரம் தனிப்பட்டவைகள் அல்ல, மற்றும் அவை நிச்சயமாக எதிரானவை அல்ல. "பயம்" என்பது பல பக்கங்கள் கொண்ட வார்த்தையாக உள்ளது. ஒரு விளக்கத்தின்படி "பயம்" என்பது முடமாக்கும் வார்த்தையாக உள்ளது. ஒரு தலாந்தைப் பெற்ற மனிதன் பின்வரும் நொண்டிச் சாக்கைக் கூறினான்: "ஆகையால், நான் பயந்து, போய், உமது தலாந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்" (மத்தேயு 25:25). யோவானும் இவ்வார்த்தையே இதே கருத்தில் பயன்படுத்தினார். "அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1 யோவான் 4:18).

தேவன் கையாளும் பெரிய தடியின் மீதுள்ள பயத்தினால் மாத்திரம் கீழ்ப்படியும் ஆத்துமாவானது, சிறியளவே திருப்தியைக் கண்டறியும், எனவே அது தனது கிறிஸ்தவத்தில் நிலைத்திருக்கச் சிறிதளவே பலம் கொண்டிருக்கும்.

இன்னொரு விளக்கத்தின்படி, "பயம்" என்பது, படைத்தவரை முகமுகமாய்ப் காண்பதில் மனிகுலத்தின் நிச்சயமற்ற, மாறக்கூடிய நிலைப்பாடு என்பதாக உள்ளது. தேவனுக்குப் பயப்படுதல் என்பது அவருக்கு முன்னால் நிச்சயமற்ற தன்மையோடு, தாழ்ந்த தலையோடு, திக்கிப்பேசும் நாவோடு வருதலாக உள்ளது. அது தேவனிடத்தில் விவாதங்களையும் விளக்கங்களையும் அளிப்பதாக அல்ல, ஆனால் தேவனிடத்தில் வேண்டுகோள் விடுப்பதாக உள்ளது. "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று ஞானவான் கூறினார் (நீதிமொழிகள் 1:7). தேவனுக்குப் பயப்படுதல் என்பது நள்ளிரவில் ஆகாயத்தை உற்றுநோக்குதல் அல்லது ஒருவர் தமது சுய இருதயத்திற்குள் கண்ணோக்குதல் என்பதைத் துணையாகக் கொண்ட, அறியாமை மற்றும் நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றின் பயங்கர உணர்வாக உள்ளது. பயம் என்பது தாழ்மையுடன் நெருக்கமான பிணைப்புக் கொண்டுள்ளது. அது முரட்டுத்தனம் மற்றும் சுய-விருப்பம் ஆகியவற்றிற்கு எதிரானதாக உள்ளது. ஏசாயா தேவனைச் சந்தித்தபோது, பயம் அவரை [ஏசாயாவை] மேற்கொண்டது. "ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே" (ஏசாயா 6:5). தேவன் இரக்கம் உள்ளவராக இருந்தார் "அவர் உன்னைக் கைவிடவுமாட்டார்" (உபாகமம் 4:31), மற்றும் அவர் "பட்சிக்கிற அக்கினி"யாக இருந்தார் என்பதை இஸ்ரவேல் மக்கள் அறிய வேண்டும் என்று மோசே விரும்பினார் (உபாகமம் 4:24). விசுவாசி தேவனுடைய அன்பையும் அவருடைய கிருபையையும் தவறாக யூகித்துக் கொள்ளத் துணியக்கூடாது. கிறிஸ்தவர்கள் "கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று" துணியக்கூடாது (ரோமர் 6:1). பேதுருவின் வாசகர்கள் "தேவனுக்குப் பயந்திரு" க்க வேண்டும் என்று அவர் கூறினார்.

"ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" என்ற கடைசிக் கட்டளையினால் பேதுரு 2:13ல் தொடங்கிய புத்திமதியை முடித்து வைத்தார். கிறிஸ்தவர்கள் இராஜாவுக்குக் கீழ்ப்படிவது மாத்திரமின்றி, அவர்கள் அவரைக் கனம்பண்ணவும் வேண்டும். இருப்பினும் அப்போஸ்தலர் அப்போதுதான், கனம் பண்ணுதல் என்பது எல்லாமக்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கடனாக இருந்தது என்பதைத் தெளிவாக்கி இருந்தார். இராஜாவுக்குச் செலுத்தப்பட வேண்டிய கனம் என்பது சமரசம் செய்யப்படாதிருத்தல், குறைந்தபட்சம் தகுதியுடையதாக இருந்தது. முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் ஆசியா மைனர் பகுதியில் நடப்பட்டிருந்த கிரேக்கக் கல்வெட்டுகள் ரோம இராஜாக்களுக்கு முழுமையான தெய்வீக கனத்தைக் கொடுக்கின்றன. அவர் கடவுளாக, இரட்சகராக மற்றும் சர்வ வல்லவராக இருந்தார். பேதுருவைப் பொறுத்த மட்டில், இராஜா கனத்திற்கு உரியவராக இருந்தார், ஆனால் ஆராதனைக்கோ வழிபாட்டிற்கோ உரியவராக இருக்கவில்லை. மற்றும் தேவனுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பயத்திற்கு இராஜா உரியவரல்ல. பேதுரு தமது வாசகர்களுக்கு, குடிமை அதிகாரத்துடன்

அவர்களுக்குள்ள உறவு பற்றி இரகசியமாகவும் திறமைநிறைந்த வகையிலும் அறிவுறுத்தினார். ஆளும் ஆட்சியாளர்களுக்கு அவர்கள் கீழ்ப்படியவும் கனம் பண்ணவும் வேண்டும், ஆனால் அவர்களுக்கு அஞ்சத்தேவையில்லை. கிறிஸ்தவர்கள் தேவனுக்குப் பயப்படும் அதே வகையில் ஆட்சியாளர்களுக்குப் பயப்படுவதில்லை.

எஜமானர்களுக்குக் கீழ்ப்படிதல் (2:18-20)

[18]வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களும் கீழ்ப்படிந்திருங்கள்.
[19]ஏனெனில், தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும். [20]நீங்கள்
குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும்.

ஸ்கோபி அவர்கள் “அடிமைத்தனப் பழக்கம் பற்றி [புதிய ஏற்பாடு]என்ன கூறுகிறது என்பது, பெருமளவில் அடிமைத்தனப் பழக்கத்தைச் சார்ந்திருந்த பொருளாதாரத்தைக் கொண்ட, கிரேக்க - ரோம உலகத்தின் பின்னணிக்கு எதிராக காணப்பட வேண்டும்” என்று உற்றுக்கவனித்துள்ளார்.[10] பேதுரு எழுதியபோது, கிறிஸ்தவர்கள் சிறிய அடக்கப்பட்ட சிறுபான்மையினராக இருந்தனர். அடிமைத்தனப் பழக்கம் கிறிஸ்துவின் போதனைக்கு எவ்வளவு எதிரிடையாக இருந்தாலும் அதை உலகில் இருந்து நீக்கிப்போடும் சக்தி எதுவும் அவர்களுக்கு இல்லாதிருந்தது. புதிய ஏற்பாட்டில், ஒருவர் அடிமைத்தனப் பழக்கத்துடன் எவ்வாறு வாழ்கிறார் என்பது கேள்வியாக உள்ளது, அதை ஒருவர் எவ்வாறு துடைத்து ஒழிக்கிறார் என்பது கேள்வியாக இருக்கவில்லை. தேவன் ஒவ்வொரு நபருக்கும் கண்ணியத்தையும் தகுதியையும் தருகிறார் என்பதே எப்போதும் பதிலாக இருந்துள்ளது. கிறிஸ்துவின் மரணம் எஜமானருக்கு எவ்வாறு பயன்படுகிறதோ அவ்வாறே அடிமைக்கும் பயன்படுகிறது.

வசனம் 18. *அரசாங்கங்களிடத்தில் இருந்து கவனத்தைத் திருப்பிய பேதுரு, கீழ்ப்படிதல் என்ற கருத்தை, இன்னும் அதிகம் தனிப்பட்ட வகையிலான சமூக நிறுவனத்தின் சட்டகத்தினுள் அணுகினார்: வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.[11] பேதுரு யாருக்கு எழுதினாரோ அந்த வாசகர்களில் சிலர் இயங்கும் உடைமைப் பொருளாக இருந்தனர்; அவர்கள் மற்ற மனிதர்களால் உரிமைகொள்ளப் பட்டிருந்தனர். அடிமைத்தனப் பழக்கம் என்பது பழங்கால சமூகங்களில் வாழ்வின் வழியாக இருந்தது. அதன் ஒழுக்கத்தன்மை கேள்விகேட்கப்படாது சென்றது. ஒருவர், யுத்தத்தில் பிடிபட்டவர்கள் மத்தியில் இருக்கவோ அல்லது அவரது தாயார் அடிமையாக இருந்தார் என்றதாலோ, அடிமையாக ஆவதற்குப்*

போதிய அளவு துரதிர்ஷ்டசாலியாக இருந்த காரணத்தினால் அடிமையானார். அடிமைகளில் பலர் தமது உரிமையாளர் தம்மிடம் கோரும் வேலையின் மீதே சார்ந்திருந்தார். அடிமைகளில் மிகச்சிறிய எண்ணிக்கையானோர் உயர்ந்த திறன் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் தங்கள் உரிமையாளர்களின் குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் ஆகியிருக்கலாம் அல்லது வேறு பணிகளில் தங்கள் உரிமையாளர்களின் இல்லங்களில் சேவைசெய்து இருக்கலாம். போதிய அளவு தூரம் பராமரிக்கப்படும் வரையில், அவர்கள் தங்கள் உரிமையாளர்களுடன் நட்புறவின் ஒரு வகையைப் பகிர்ந்து கொள்ளலாம். சில அடிமைகள் நகரவைகளினால் உரிமைகொள்ளப் பட்டிருந்தனர். அவர்கள் செல்வாக்கு மிக்க பதவிகளுக்கு உயர்த்தப்படலாம், ஆனால் அந்த அடிமைகள் அசாதாரணமானவர்களாக/விதிவிலக்கானவர்களாக இருந்தனர். பெரும்பான்மையான அடிமைகள் அற்பமான முதுகை முறிக்கும் வேலைகளைக் கொண்டிருந்தனர். சுரங்கங்கள் அல்லது ஆலைகளில் வேலை செய்தவர்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு மேல் உயிர்வாழும்படி எதிர்பார்க்கப்படவில்லை. அவர்கள் பணிசெய்வதன் விலையின் பாகமாக இருந்தனர். அடிமைகள் மலிவானவர்களாயிருந்தனர். அவர்கள் ஒரு கழுதை அல்லது ஒரு வெள்ளாட்டைப்போன்று இடம் மாற்றப்படக் கூடியவர்களாக இருந்தனர்.

அடிமைகளுக்குப் பவுலின் அறிவுறுத்தலுடன் ஒப்பிடும்போது பேதுரு, எதிர்பாராத இரண்டு வார்த்தைகளைத் தேர்ந்து கொண்டார். (1) பவுல் "கட்டப்பட்ட அடிமைகள்" *(douloi)* என்ற மிகக் கடுமையான வார்த்தையை பயன்படுத்தியிருக்க (எபேசியர் 6:5; கொலோசெயர் 3:22), அவர்களைப் பேதுரு "ஊழியக்காரர்கள்" அல்லது "வீட்டு அடிமைகள்" *(oiketai)* என்று குறிப்பிட்டார். (2) பவுல் *kurioi* என்ற மென்மையான வார்த்தையை எஜமானர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தி இருக்கையில், பேதுரு "எஜமானர்கள்" என்ற கடினமான வார்த்தையை *(despotai)*, பயன்படுத்தினார். இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு மிகப் பெரிதாக இராவிட்டாலும், மிகாயேல்ஸ் அவர்கள் செய்துள்ளபடி, இலக்கிய அடிப்படையில் மாத்திரம்,[12] பேதுரு வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்த தன்மை ஒதுக்கிட ஆபத்து நிறைந்ததாக உள்ளது. வார்த்தைகளைப் பேதுரு தேர்ந்தெடுத்த விதம் ஒரு கேள்வியை எழுப்புகிறது. அவர் "கட்டப்பட்ட அடிமைகளுக்கு" *(douloi)* மாறுபட்ட வகையில் அறிவுரை வழங்கி இருப்பாரா?

கிரேக்க - ரோம உலகத்தில் அடிமைத்தனப் பழக்கத்தை, சுமாரான அளவில் தயையுள்ள நிறுவனம்[13] என்று சித்தரிக்க விரும்பியவர்கள், பழங்கால உலகில் வசதிவாய்ந்த எழுத்தாளர்கள் அடிமைத்தனப் பழக்கத்தைப் பற்றித் திரித்துக்கூறும் கண்ணோட்டம் கொண்டிருந்ததை உணர்தறியத் தவறுகின்றனர். செல்வந்தர்கள், வீட்டில் வேலை செய்த அடிமைகள், கணக்கர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடிமைப் பணியாட்கள் ஆகியோரிடத்தில் நட்புறவுடன் இணைந்திருந்தனர். அவர்களின் எழுதப்பட்ட பதிவேடுகள், நவீன காலத்து கணக்கு நிறுவனம் ஒன்றில் அந்த அடிமை வேலை செய்தல் போன்ற மனப்பதிவை விட்டுச் செல்கின்றன. விஷயம் அப்படி இருக்கவில்லை. அடிமைகளாக ஆனவர்களில் பெரும்பான்மையானவர்கள் தனித்திறன் எதுவும் கொண்டிருக்கவில்லை. பழங்காலப் பதிவேடுகள், சாதாரண அடிமை

களின் வாழ்வு பற்றிய அவ்வப்போதய சிறு துணுக்குகளைத் தருகின்றன, ஆனால் ஆலைகள் அல்லது சுரங்கங்களில் பணியமர்த்தப்பட்டவர்களுடன் மாபெரும் மனிதர்கள் சிறிதளவே தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் கால்நடைகளைப் போன்று இருந்தனர், ஒரு அடிமையின் மரணம் என்பது நிதிநிலையில் இழப்பு என்பதைத் தவிர அதிகமாக எதையும் அர்த்தப்படுத்தவில்லை. வீட்டில் வேலைசெய்த அடிமைகள்கூட, தாங்கள் வீட்டுக் கோட்டைத் தாண்டினால், ஆலைகளில் தங்கள் வாழ்வு முடியும் என்பதை அறிந்திருந்தனர். பழங்கால உலகத்தில் இருந்து வார்த்தைகளை நாம் பெறும், வசதிமிக்க ஆளும் வர்க்கம், பெரும்பாலான அடிமைகளுக்கு என்ன நடந்தது என்பதைப் பொதுவாக மற்றவர்கள் அறிய அனுமதிப்பதை விரும்பவில்லை.[14] பேதுரு, "வீட்டு வேலை செய்த அடிமைகளுக்கு" அறிவுறுத்தியதில் இருந்து மாறுபட்ட வகையில், "கட்டப்பட்ட அடிமைகளுக்கு" அறிவுரை கூறியிருக்கலாம், மிகவும் வெறுக்கத்தக்க பணிநிலைகளில் அவர்கள் இருந்தனர், அவர்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட, கொலை செய்யப்பட, அழிக்கப்பட உரிமை இருந்தது, ஆனால் அவர்கள் மதிப்பு நிறைந்த கீழ்ப்படிதலை அளிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்வது அதிக கடினமாக இருந்திருக்கும்.

NASB *வேதாகமம்* respect *என்று மொழிபெயர்த்துள்ள (phobos என்ற)வார்த்தை 2:17ல் "பயம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வினைச்சொல்லின் பெயர்ச்சொல் வடிவமாக உள்ளது; அவ்வசனம் "தேவனுக்குப் பயந்திருங்கள்" என்று கூறுகிறது. அடிமைகள் தங்கள் எஜமானர்களை, தாங்கள் தேவனை மதித்தது போன்றே மதிக்க வேண்டும் என்று பேதுரு மறைவாக உணர்த்தியிருப்பார் என்பது அரிதான விஷயமாகும். இருப்பினும் இவ்வார்த்தையை* "respect" *என்று மொழிபெயர்த்தால் அது பலவீனமானதாகவே உள்ளது. அடிமையின் பணிநிலையானது மரியாதை செலுத்துதல் என்பதை விட அதிகமானவற்றைச் செய்யும்படி எதிர்பார்க்கப்பட்டது. எஜமானர்களுக்கும் அரசாங்கங்களுக்கும் கீழ்ப்படிதல் என்பது "கர்த்தர் நிமித்தம்" செய்ய வேண்டியவையாக இருந்தன (2:13), அடிமைகள் தேவனுக்குப் பயந்ததன் காரணமாகக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பேதுரு அர்த்தப்படுத்தியிருக்க வாய்ப்பில்லை. மாறாக அவர், அடிமைகளுக்கு அவர்களின் நிச்சயமற்ற நிலைப்பாட்டை நினைவூட்டினார் எனலாம். கீழ்ப்படிதலுக்குக் குறைவான எதுவும் சுய-தோல்வியடையச் செய்தலாக இருக்கும். அவர்கள் உதவியற்றிருந்தனர். அடிமைகள் தங்கள் மதிப்பைத் தகுதிப்படுத்தும் எஜமானர்களைத் தேர்ந்து தெரிந்து கொள்ள இயலாதிருந்தனர். அவர்களின் பயம்நிறைந்த நிலைப்பாட்டின் காரணமாக, அவர்கள் நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்படிந்திருக்க வேண்டியிருந்தது.*

வசனம் 19. *பேதுரு ஏற்கனவே கீழ்ப்படிதலை சுதந்தரத்துடன் பிணைத்திருந்தார் (2:13, 16). சுதந்தரம் என்பது அடிமைகளாகக் கீழ்ப்படிந்திருந்தவர்களுக்கு அர்த்தம் எதையேனும் கொண்டுள்ளதா? ஒருவேளை சுதந்தரத்தை, தயவு (charis) என்னும் நுண்ணோக்கி வழியாகக் கண்ணோக்க முடியும் என்றால் அது அவ்வாறு எதையேனும் கொண்டிருக்கும் எனலாம். அடிமைகள் பயத்தின் காரணமாகக் கீழ்ப்படிய வேண்டியிருந்தனர்*

என்று எடுத்துக் கொள்ளலாம், ஆனால் அவர்களின் பயம் நிறைந்த நிலையானது, அவர்கள் தங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுடன் தங்கள் சிந்தையைத் தேவன் மீது ஒட்டவைக்கும் அளவிற்கு, நம்பிக்கை மற்றும் சமாதானம் ("தயவு" என்ற வார்த்தையில் இவையாவும் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது) ஆகியவற்றைக் கொண்டு மாற்றப்பட முடியும். பவுல் *charis* என்ற வார்த்தையை எடுத்து கிறிஸ்தவ விசுவாசத்தின் மிகவும் தனிச்சிறந்த போதனைகளில் ஒன்றாக அதை மாற்றினார். இதுவே பவுலின் நிருபங்கள் முழுவதிலும் "grace" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையாக இருக்கிறது. பேதுரு இதை, தம்மைச் சுற்றி இருந்த உலகம் முழுவதிலும் பயன்படுத்தும் வகையிலேயே பயன்படுத்தினார். அவர்களைத் தவறாக நடத்துதல் பற்றிக் கவனம் குவிப்பதற்குப் பதிலாக, அவர்கள் தேவன் மீது கவனம் குவிக்க வேண்டியவர்களாக இருந்தனர் என்பதால், அது அடிமைகளின் மீதான தயவை மீளவும் கட்டும் என்று அப்போஸ்தலர் உறுதிப்படுத்தினார். விசுவாசம் நிறைந்த ஒரு சமூகத்தில், அவர்கள் சுதந்தர மனிதர்கள் போலத் தங்களைத் தேவனுக்கு மனப்பூர்வமாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இப்போது *charis* என்ற முகமூடியில் உள்ள சுதந்தரம் என்பது, அவர்களின் போராட்டங்கள் வழியே அவர்களைக் கண்டது.

அடிமைகளிடம் இருக்க வேண்டும் என்று பேதுரு வற்புறுத்திய கீழ்ப்படிதல், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் இருக்க வேண்டியதாகும். "மனச்சாட்சி" (*suneidēsis*) என்ற வார்த்தையைப் பேதுரு இந்த நிருபத்தில் மூன்று முறைகள் பயன்படுத்தினார். மற்ற இரு இடங்களில் (3:16, 21), இது "நல்" என்ற வார்த்தையுடன் இணைந்துள்ளது மற்றும் சிறிதளவே சிரமத்தை முன்வைக்கிறது. இவ்வசனத்தில் "மனச்சாட்சி" என்பதன் அர்த்தம் குறைவாகவே தெளிவாக உள்ளது. நேர்ப்பொருளில் இதை மொழிபெயர்த்தால், "தேவனுடைய மனச்சாட்சி" (*suneidēsin theou*) என்றே வருகிறது. "தேவனுடைய" என்ற ஆறாம் வேற்றுமை உருபு கடினமாக உள்ளது. தேவனுடைய சொந்த மனச்சாட்சியினிமித்தம் அடிமைகள் கீழ்ப்படிய வேண்டும் என்று பேதுரு கூறியிருக்க மாட்டார் என்பது தெளிவு. *Suneid.. sis* என்ற வார்த்தை "மனச்சாட்சி" என்பதற்குரிய ஆங்கில வார்த்தையுடன் மிகச்சரியாக ஒன்றியிருப்பதில்லை. இது பகிர்ந்து கொள்ளப்பட்ட அறிவு என்ற கருத்தைச் சுமந்து வருகிறது. இந்த சந்தர்ப்பப்பொருளில், இது கிறிஸ்துவின்மீது விசுவாசத்தை வைத்த அடிமைகளுக்கும் அவர்களைப் போன்ற மற்றவர்ளுக்கும் இடையில் பகிர்ந்துகொள்ளப்பட்ட அறிவு என்பதாக உள்ளது. தேவனே பகிர்ந்து கொள்ளப்பட்ட அறிவின் கருப்பொருளாக இருக்கிறார். எனவே அடிமைகள் தங்கள் "பகிர்ந்து கொள்ளப்பட்ட தேவனுடைய மனச்சாட்சியின்" நிமித்தம் கீழ்ப்படிய வேண்டும்.[15] J. N. D. கெல்லி அவர்கள் இதை "அவரும் அவரது சக கிறிஸ்தவர்களும் தேவனுடைய பரிசுத்த மக்கள் என்ற வகையில் பகிர்ந்து கொள்ளும் தேவனுடைய அறிவினிமித்தம்" என்று பொழிப்புரை செய்தார்.[16] NIV வேதாகமம் இதை, "தேவனுடைய மனச்சாட்சியினிமித்தம்" என்று மொழிபெயர்க்கிறது, இது அதே கருத்திற்கு நெருக்கமாக உள்ளது. பேதுருவின் வாசகர்கள் பகிர்ந்து கொண்ட தேவனுடைய மனச்சாட்சியினிமித்தம், ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும்.

வசனம் 20. பேதுரு for what credit is there, என்ற தமது சொல்லாடற்கலையின் கேள்வியைத் தொடங்கியபோது, அவர் முந்திய வசனத்தில் சிந்தனையைத் தொடர்ந்தார். "கீர்த்தி" மற்றும் "சாதகம்" ஆகியவை இணையான கருத்துக்களாக உள்ளன. "what credit is there," என்பது "அதினால் என்ன சாதகம் உண்டு?" என்பதற்குச் சமமாக உள்ளது. இந்தக் கேள்வி தனது பதிலைத் தானே அளிக்கிறது. ஒன்றுமே இல்லை. இதே வார்த்தையை NASB வேதாகமம், லூக்கா 6:32ல் "பலன்" என்று மொழிபெயர்க்கிறது. "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால். உங்களுக்குப் பலன் என்ன?" மற்றும் இது 1 பேதுரு 2:20ல் "கீர்த்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தேவன் ஒரு வரவு செலவு கணக்கேட்டைப் பராமரித்து, அதில் ஒவ்வொரு நற்செயலையும் ஒவ்வொரு தீயசெயலையும் சரியாகப் பதிவு செய்கிறார் என்று இங்கு கருத்து எதுவும் இருப்பதில்லை, மாறாக, அடிமைகளாக இருந்தாலும் மற்றபடி இருந்தாலும், மக்கள் தாங்கள் பெறத்தகுதியான தண்டனையாக அடிக்கப்படும்போது - அவர்கள் அந்த மோசமான தண்டனையைப் பொறுமையோடே சகித்தாலும் - அது தேவனுக்குப் பிரியமாயிருக்காது. விளைவு எதுவாக இருந்தாலும், தேவன் பாவத்தினால் கனப்படுத்தப்படுவதில்லை.

பேதுரு விசுவாசிகளிடம் இருந்து, அற்பமான அடிமைகளிடம் இருந்தும்கூட, மிக உயர்வான ஒழுக்க மற்றும் ஒழுக்க நெறியின் நடத்தையை எதிர்பார்த்தார். ஒருவர் சகிக்கும் தண்டனைக்கு அவர் பாத்திரரா இல்லையா என்பது பிரச்சனையல்ல. சரியானதைச் செய்தல் என்பதே இங்கு கருத்தாக உள்ளது. பாவம் தேவனுக்குக் கீர்த்தியை ஏற்படுத்துவதில்லை, அதில் அவர் பிரீதியாக இருப்பதில்லை. சரியானதைச் செய்தல், கர்த்தருக்குக் கீழ்ப்படிதல், அதற்காகத் துன்புறுதல் மற்றும் அதன்பின்பு பொறுமையோடே சகிப்பதற்கான விசுவாசம் கொண்டிருத்தல் ஆகியவையே தேவனுக்குப் பிரீதியாக உள்ளன. 2:19ஐத் தொடங்கப் பயன்படுத்திய அதே வார்த்தையைக் கொண்டு பேதுரு 2:20 நிறைவு செய்தார். ஒருவர் "நன்மைசெய்து பாடுபடும்போது" அதைப் பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும் (2:20).

கீழ்ப்படிதலுக்கான வேண்டுகோள், விசுவாசிகளுக்கு முக்கியமானவையாக உள்ள மற்ற குறிக்கோள்களை அடைவதற்குத் துணைக்கருவியாக உள்ளது. கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கும்போது, அவர்கள் சமாதானம் நிறைந்த மற்றும் ஒழுங்கு முறையான சமூகம் நிலவப் பங்களிக்கின்றனர். "சந்திப்பின் நாளிலே" (2:12) தங்கள் நம்பிக்கையை நிலைநிறுத்தியவர்களாக, உலகத்தின் நகரங்களில் தற்காலிகக் குடிகள் என்ற வகையில் தங்கள் நிலையை உணர்ந்து அறிகின்றனர். அதிகாரம் உள்ளவர்களைக் கீழ்ப்படிதலுடன் மதித்தல் என்பது, அவர்கள் தங்கள் அயலகத்தவர்களுடன் சமாதானமாக வாழவும் தேவனுடைய மகிமையைத் திரும்பக் கட்டவும் பங்களிக்கும். இருப்பினும் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிதல் என்பது அடிமைகள் கீழ்ப்படியும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட அதே ஒழுங்கு முறைமையாக இருப்பதில்லை. அடிமைகள் அநீதியான மற்றும் கொடுமையான தண்டனைக்கு எளிதில் ஆட்படுபவர்களாக இருந்தனர். தண்டனை நீதியானதோ அல்லது அநீதியானதோ எப்படி இருந்தாலும்,

"கடுமையாகத் தண்டிக்கப்படுதல்" என்பது அடிமைகளுக்கு வழக்கமற்றதாக இருக்கவில்லை. பேதுரு பயன்படுத்திய *kolaphizō* என்ற வினைச்சொல் புதிய ஏற்பாட்டில் மற்றும் உலக இலக்கியத்தில் ஒரு அரிதான வார்த்தையாக உள்ளது. இது இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர் அவருக்குத் தரப்பட்ட அடிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக உள்ளது (மத்தேயு 26:67; மாற்கு 14:65). அடிமைகளின் எளிதில் தண்டனைக்கு ஆட்படும் தன்மை, குற்றமற்ற நிலையில் தண்டனை பெறுவதில் அவரது ஏற்புத்தன்மை ஆகியவை, சிலுவையின் திசைநோக்கிப் பேதுருவின் சிந்தனையை வழிநடத்தின.

சிலுவையின் மீது இயேசுவின் கீழ்ப்படிதல் (2:12-25)

[21]இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். [22]அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. [23]அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். [24]நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். [25]சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்.

அடிமைகள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும், அவசியம் நேர்ந்தால் அநீதியாகத் துன்புறவும் வேண்டும் என்ற புத்திமதி (2:18-20), கிறிஸ்தவ உபதேசங்கள் எல்லாவற்றிலும் மிகவும் விலையேறப் பெற்றதும், கிறிஸ்துவின் பாவநிவாரணப்பலி செலுத்துதலுமான, புதிய ஏற்பாட்டில் உள்ள மிகவும் நன்மையுடைய உபதேசம் ஒன்றிற்கு வழிநடத்துகிறது (2:21-25). தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் ஒப்புரவாக்குதலைக் கொண்டு வந்த சிலுவையைப் பற்றிய குறிப்பான எந்தக் கோட்பாட்டையும் பேதுரு மேம்படுத்தாது இருக்கையில், இயேசுவின் மரணம் மனித பாவத்தைச் சுமக்கும் வகையிலானதாக இருந்தது என்பதை அவர் தெளிவாக்கினார்.

வசனம் 21. இந்த நிருபத்தில் தமது வாசகர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பைப் பலமுறை நினைவூட்டினார். 2:9ல் அவர்கள் இருளில் இருந்து வெளிச்சத்திற்கு அழைக்கப்பட்டனர், 3:9ல் அவர்கள் தங்களை சபித்தவர்களுக்கு ஆசீர்வாதத்தை திரும்பக்கூறும்படி அழைக்கப்பட்டனர், 5:10ல் அவர்கள் நித்திய மகிமைக்கென்று அழைக்கப்பட்டனர். இங்கு **இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்,** அதாவது நன்மை செய்து, கிறிஸ்துவைப் போன்று பாடுகளை பொறுமையோடு சகிப்பதற்கு அவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர் (2:20). இந்த இடத்தில், அடிமைகள் என்பது துணைத்தலைப்பாக மாத்திரமே உள்ளது; இவ்வார்த்தைகள் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் உரியவையாகும். **கிறிஸ்துதாமே**

*அநீதியாகப் **பாடுபட்டார்** என்பதை ஒருவர் நினைக்கிறபோதுதான், அநீதியாக நடத்தப்படுதல் முன்னிலையில் கீழ்ப்படிதல் என்பது சகிக்கக் கூடியதாக இருக்கும். அடிமை தனது எஜமானருக்கு மேற்பட்டவர் அல்ல. மனிதர்கள் கர்த்தரை அநீதியாக நடத்தினர் என்றால், அவரைப் பின்பற்றுபவர்களையும் அவ்வாறே நடத்த வாய்ப்பு உள்ளது (மத்தேயு 10:24, 25). தேவன் மனிதராக இருத்தல் எப்படி இருக்கும் என்று ஒருக்காலும் அனுபவித்து இருக்கவில்லை என்பதால், மனிதர்களை நியாயந்தீர்க்கும் நிலைப்பாடு அவருக்கு இல்லை என்று யோபு முறையிட்டிருந்தார் (யோபு 10:4-6). இயேசு மனித மாம்ச ரூபத்தில் வந்தபோது, அந்த விவாதத்தை அமரப்பண்ணினார்.*

கிறிஸ்து பாடுபட்டார் என்பது மட்டுமல்ல. அவர் உங்களுக்காகப் பாடுபட்டார் என்று பேதுரு கூறினார். பேதுரு இந்த நிருபத்தில் பிற்பகுதியில் (3:18) செய்தது போன்றே, பவுல் "Christ died for you" *என்று அநேகமாக எழுதியிருப்பார் (ரோமர் 5:6; 1 கொரிந்தியர் 15:3). கிறிஸ்துவினிடத்தில் விசுவாசியை இழுக்கிற மற்றும் அவர் கிறிஸ்துவின் உதாரணத்தைப் பின்பற்ற வற்புறுத்துகிற விஷயங்களின் மத்தியில் நன்றியுணர்வு என்பது உள்ளது. பாவத்தினால் மனிதகுலம் கறைப்பட்டு அறியாமையினால் மூடப்பட்ட போது, தேவன் தமது இரக்கத்தில் நசரேயனாகிய இயேசு மூலமாகத் தமது படைப்பை வந்தடைந்தார். சிலுவை என்பது மனிதகுலத்தின் சார்பானதாக இருந்தது. இயேசு "உங்களுக்காகப் பாடுபட்டார்" என்பது, அவர் **உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்** என்ற உரிமைகோருதலின் சட்டப்பூர்வமான கூற்றாக உள்ளது. இயேசுவின் பாடுகள் என்ற வகையில் அவரது மரணத்தைப் பற்றிப் பேசுதலானது, காலத்தினூடே "அவர் உங்களுக்காக மரித்தார்" என்ற வெறும் கூற்றைக்காட்டிலும் அதிகம் வரைவளைவையாகச் சிலுவை நிகழ்வுகளை விரிவாக உரைக்கிறது. கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்களின் வாழ்வின்மீது கொண்டிருந்த உரிமைகோருதலைப் பேதுரு தெளிவாக்கினார். அந்த உரிமைகோருதல், எழுப்பும்படி அப்போஸ்தலர் எதிர்பார்த்த நன்றியுணர்வைக் கொண்டு மறுவலிவூட்டப்படுகிறது.*

எல்லா விஷயங்களிலும் கிறிஸ்தவ வாழ்விற்கு கிறிஸ்துவே மாதிரியாக இருக்கிறார் (மாற்கு 8:34; யோவான் 13:15; பிலிப்பியர் 2:5; 1 தெசலோனிக்கேயர் 1:6; எபிரெயர் 12:2; 1 யோவான் 2:6). மற்ற விஷயங்களுக்கு மத்தியில், அவரது பாடுகள் "ஒரு உதாரணமாக" உள்ளது, ஏனெனில் (1) அவர் சரியானவற்றைச் செய்ததால் பாடு அனுபவித்தார், மற்றும் (2) அவர் அதைப் பொறுமையாகச் சகித்தார். பாடு அனுபவித்தல் என்பது ஒருக்காலும் சந்தோஷமாக இருந்ததில்லை, ஆனால் கர்த்தர் பாடுபட்டதால், அவரது மக்கள் அவரது பங்கில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளனர். அவர் தமது மக்களுக்கு மாதிரியாக இருக்கிறார். திகைக்கச் செய்யும் ஒரு கூற்றில், "நான் உங்கள்நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" என்று பவுல் எழுதினார் (கொலோசெயர் 1:24). பாடு அனுபவித்தல் என்பது கிறிஸ்துவை ஆண்டவராக உரிமையாக்குதலின் எதிர்பார்ப்பாகவும் அத்தியாவசியமான விளைவாகவும்

உள்ளது என்று அப்போஸ்தலர் நம்பினார்.

விசுவாசிகள் **கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி** அவர் ஒரு மாதிரியை வைத்துப் போனார் என்று பேதுரு கூறியபோது, அவர் குறைவான வலியுறுத்தம் தரவில்லை. புதிய ஏற்பாடு முழுவதிலும் பார்க்கும்போது இங்கு மாத்திரமே காணப்படக்கூடிய, "மாதிரி" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*hupogrammos* என்ற) வண்ணமிகு வார்த்தை ஒன்றைப் பேதுரு பயன்படுத்தினார். இவ்வார்த்தையானது, ஒரு குழந்தை தனது எழுத்துக்களைப் பென்சிலில் படியெடுக்கும் வேலையை, வேதனையுடனும் விருவிருப்புடனும் செய்தலைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. அந்தக் குழந்தை மறு உருவாக்கியது *hupogrammos* ஆக அல்லது படியெடுக்கும் மாதிரியாக இருந்தது. பாடு அனுபவித்தல் என்பது கிறிஸ்தவ வாழ்வில் உள்ளாக இருக்கும் விஷயம் என்ற கருத்து, பேதுருவின் நிருபத்தைத் தொடர்ந்து வந்த பத்தாண்டுகளில் இன்னும் அதிக வலியுறுத்தம் பெற்றது. பேதுரு தமது இந்த நிருபத்தை எழுதி அரை நூற்றாண்டுக்குப் பின்னர், அந்தியோகியா நகரைச் சேர்ந்த இக்னேஷியஸ் என்பவர், "நாம் கர்த்தரைப் போலச் செய்பவர்களாக இருப்போமாக, மற்றும் அதிகம் தவறாக உபத்திரவப்படுதலை நாடுவோமாக, மிகவும் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதை, மிகவும் வெறுக்கப்படுவதை நாடுவோமாக" என்று வேண்டுகோள் விடுத்தார்.[17]

வசனம் 22. பாவம் செய்யாதவர் பற்றிய வார்த்தைகளை ஏசாயா 53:9ல் இருந்து பேதுரு குறிப்பிட்டுக் காண்பித்திருந்தபோதிலும், அவர் தமது வாசகர்களுக்குத் தாம் குறிப்பிட்ட அந்தத் தீர்க்கதரிசிகள் பெயரைக் கூற வேண்டிய அவசியம் எதையும் அவர் உணரவில்லை என்பது உறுதி. வரவிருந்த மீட்பர் பற்றி இஸ்ரவேலுக்குத் தேவன் ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தங்கள் பற்றிய கிறிஸ்தவப் புரிந்து கொள்ளுதல்களுக்கு ஏசாயா 53 ஒரு அஸ்திபாரமாக இருந்தது. எத்தியோப்பிய மந்திரி ஏசாயா 53ல் இருந்து வாசித்துக் கொண்டிருந்தபோது (நடபடிகள் 8:32, 33), அவருடன் இரதத்தில் ஏறியமர்ந்த பிலிப்பு, "இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தார்" (நடபடிகள் 8:35). இந்த வசனம் பற்றிக் குறிப்பிடுதல் தேவையற்ற அளவுக்கு இது, கிறிஸ்தவ மனச்சாட்சியின்/உணர்வில் ஒன்று கலந்திருந்தது என்பது சாத்தியமானதாக உள்ளது. புதிய ஏற்பாடு, கிறிஸ்தவ வாழ்விற்கு முன்மாதிரியாக இயேசுவை அறிவிப்பதோடு மட்டுமின்றி, அவரது வாழ்வு குற்றமற்றதாக, பாவமற்றதாக இருந்தது என்றும் அது உறுதிப்படுத்துகிறது (யோவான் 8:29; 2 கொரிந்தியர் 5:21; எபிரெயர் 4:15; 1 யோவான் 3:5). இயேசு பாவமில்லாதவராக இருந்ததால், தமது சீஷர்களிடம் அவர் பரிபூரணத்துவம் தவிரக் குறைவான எதையும் எதிர்பார்ப்பதில்லை (மத்தேயு 5:48). மிகச்சிறப்பான மக்களிடம் கூட இருக்கும் பூரணமற்ற தன்மையின் எதிரில், இயேசு "உங்களுக்காகப் பாடுபட்டார்" (2:21). புதிய ஏற்பாட்டில் "பாவம்" என்பது குறுநகை அல்லது புன்முறுவலுடன் பயன்படுத்தப்படக்கூடிய சொல்லாக இருப்பதில்லை. அது தேவனைக் கனவீனப்படுத்துகிறது மற்றும் பாவிக்குப் பேரழிவைக் கொண்டு வருகிறது.

ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இருந்து குறிப்பிட்ட வசனப்பகுதியானது, பேசும் விஷயங்களில் இயேசுவின் பாவமற்ற தன்மை பற்றிக் குறிப்பாகக்

கவனத்தை இழுக்கிறது. முன்னதாக அப்போஸ்தலர் தமது வாசகர்கள், சகல துர்க்குணத்தையும், கபடத்தையும் ஒழிக்க வேண்டும் என்று கூறியிருந்தார் (2:2). இப்போது அவர், இயேசுவின் பகுதியில் **அவரது வாயில் வஞ்சனை ஒன்றும் காணப்படவில்லை** என்று கூறினார். 2:2லும் இவ்விடத்திலும் ஒரே கிரேக்க வார்த்தையே "வஞ்சனை/வஞ்சகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இருந்து இவ்வார்த்தைகளை மாத்திரம் குறிப்பிட்டுக் காண்பித்ததால் பேதுரு, இருதயத்தின் குறிப்புணர்த்தும் விஷயமாகிய பேச்சை நோக்கிக் கவனத்தை ஈர்த்தார். யாக்கோபு, "நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்" என்று தைரியமாகக் கூறினார் (யாக்கோபு 3:2). இயேசு, "ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்ற தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" என்று கூறியிருந்தார் (மத்தேயு 12:37).

வசனம் 23. மற்றும் **அவர் வையப்படும்போது பதில் வையவில்லை** என்று பேதுரு கூறத்தொடர்ந்தார். இவ்வார்த்தைகள் ஒரு நேரடியான குறிப்பாக இருப்பதில்லை, ஆனால் பேதுரு தமது சிந்தனைகளை ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இருந்து தரவழைக்கத் தொடர்ந்தார்: "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை" (ஏசாயா 53:7). தீர்க்கதரிசியின் இவ்வார்த்தைகள் இயேசுவின் குற்றமற்ற தன்மையை உறுதிப்படுத்துவது மட்டுமின்றி, இவைகள் அவரது மென்மைத் தன்மையும் அவரது விசுவாசத்தையும் பற்றியும் பேசுகின்றன. ஏசாயாவின் இவ்வார்த்தைகளுக்கு மறுவலிவூட்டுவதற்காகப் புதிய ஏற்பாடு சங்கீதம் 22 மற்றும் சங்கீதம் 69 ஆகியவற்றைத் தரவழைக்கிறது. கிறிஸ்து துன்புறும் மீட்பராக இருக்க வேண்டியிருந்தார் (காண்க சங்கீதம் 22க்கு மாற்கு 15:34 மற்றும் சங்கீதம் 69க்கு மாற்கு 15:23). சபித்தலுக்கு சபித்தலையும் வெறுப்புணர்வுக்கு வெறுப்புணர்வையும் ஒருவர் திரும்பத் தரும்போது, அவர் கிறிஸ்துவின் உதாரணத்தைக் கைவிட்டுத் தம்மைத்தாமே அழித்துக் கொள்கிறார். "வைதல்" என்பது வார்த்தைகளைத் தவறாகப் பயன்படுத்திச் சுழற்றுதலாக உள்ளது. இயேசுவின் விரோதிகள், சிலுவை மரணம் என்ற அவருக்கு நேர்ந்த கொடிய தண்டனையின்போது அவரை வைத விஷயத்தில் குறிப்பாக மிகவும் வலிவாக இருந்தனர். மத்தேயுவின் சுவிசேஷ விபரம் விரிவாக உள்ளது: "அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள். சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்" (மத்தேயு 26:67, 68). பேதுரு தமது சொந்த நினைவில் இருந்து தரவழைத்தார். இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது அவர் (பேதுரு) அருகில் நின்றிருந்தார். இயேசுவின் கரங்களுக்குள் ஆணிகள் அடித்துச் செருகப்பட்டதை அவர் கண்டிருந்தார் மற்றும் கர்த்தரிடம் பேசப்பட்ட ஏளன வார்த்தைகளை அவர் கேட்டிருந்தார். இயேசு தமது விரோதிகளைப் பதிலுக்கு எதிர்த்துப் பேசவில்லை என்று பேதுரு உறுதிப்படுத்திய விஷயமானது வதந்திக்கு மிகவும் அப்பாற்பட்டதாக இருந்தது.

இவ்வேளையில் பேதுரு, அடிமைகளுக்கான தமது குறிப்பிட்ட

புத்திமதிகளைப் பின்விட்டிருந்தார் என்பது தெளிவாக உள்ளது. இவ்வசனம், அப்போஸ்தலருடைய எல்லாக் கிறிஸ்தவ வாசகர்களுக்கும் உரைக்கிறது. அடிமைகள் தங்கள் எஜமான்களிடம் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தலின் மூலம் அவர் தொடங்கினார். அடிமைகள் அநீதியாக நடத்தப்பட அதிக வாய்ப்பு உள்ளது என்பதைப் பற்றி அவர் அறியாது இருக்கவில்லை. இவ்விடத்தில் துன்புறுதல் என்ற பாடக்கருத்து அவரது அனுபவக் களத்தில் இருந்து எடுக்கப்பட்டிருந்தது. அடிமைகள் மாத்திரம் அல்ல, ஆனால் விசுவாசிகள் யாரும், தாங்கள் துன்புறும்போது, கர்த்தருடைய பாடுகளின் உதாரணத்தை கண்ணோக்க வேண்டியவர்களாக உள்ளனர். பதிலுக்குச் செய்தல் என்பது, நாகரீகமான மக்களின் மிகப்பழங்காலச் சட்டங்களில் ஒன்றாக இருந்தபோதிலும், அவர்கள் பதில் செய்யக் கூடாது இருந்தனர்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தில் பின்வருவது போன்று விளக்கப்பட்டுள்ள, பழிக்குப்பழி வாங்கும் பிரமாணமான, *lex talionis,* ல் ஒரு உள்ளான நீதி இருக்கிறது: "ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குக் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்க வேண்டும்" (யாத்திராகமம் 21:23-25). அதையே நியாயப்பிரமாணம் கூறிற்று, ஆனால் இயேசு பதிலுக்குத் தாக்கவில்லை; அவரைப் பின்பற்றுபவர்களும் அதைச் செய்யக்கூடாது. ஒருவருக்கு பதிலுக்குத் தாக்கும் சக்தி இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். அது கணக்கிற்கு அப்பாற்பட்டது. குறிப்பாக, விசுவாசிகள் வாய்மொழித் தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் செய்யக்கூடாது. வாய்மொழித் தாக்குதலுக்குப் பதில் தரும் வாய்ப்பு இருக்கலாம், மற்றும் அதில் நியாயம் ஏதேனும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் கிறிஸ்தவர்கள் அதைச் செய்யக்கூடாது. அவர்கள் இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுகின்றனர். **அவர் பாடுபட்டபோது, பயமுறுத்தும் கூற்று எதையும் கூறவில்லை, ஆனால் நீதியாய் நியாயத்தீர்க்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்து** இருந்தார்.

பதில் வைவதற்குப் பதிலாக, நம்பிக்கை வைத்தலை இயேசுவின் உதாரணம் செயல்விளக்கப்படுத்திற்று. நீதிசெய்தலைக் கைவிட்டுவிடும்படி அப்போஸ்தலர் தமது வாசகர்களிடத்தில் கேட்கவில்லை. மாறாக நீதி செய்தலைத் தேவனிடத்தில் விட்டுவிடும்படி அவர் அறிவுறுத்தினார். அவரே நியாயாதிபதியாக இருக்கட்டும். அவர்கள், "நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தது" இருந்த இயேசுவைப் போல் இருக்க வேண்டும். சில அரசியல்வாதிகளுக்கு, ஆளுகை செய்தல் என்பது, "பைத்தியம் கொள்ள வேண்டாம், பதிலுக்குப் பதில் செய்து விடு" என்பதாக உள்ளது. இராஜாவான தாவீது "பதிவுக்குப் பதில் செய்துவிடும்படி" சோதிக்கப்பட்ட சில நிகழ்வுகளைத் தமது வாழ்வில் பெற்றிருந்தார். அவருக்கு முன்பாகத் தரையில் சவுல் (படுத்துக் கிடந்து) இருந்தபோது ஒரு ஈட்டியால் அவரைக் குத்தியிருந்தாலே அதுமாத்திரமே பதிலுக்குப் பதில் செய்தலுக்குப் போதுமானதாக இருந்திருக்கும், ஆனால் தாவீது, "கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன் மேல் என் கையைப்போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்" என்று கூறினார் (1 சாமுவேல் 24:6). தாவீது நியாயமாக நியாயந்தீர்க்கும்

கர்த்தர்மீது நம்பிக்கையாயிருந்தார். தேவன் நியாயமானவற்றைச் செய்வார் என்பது பேதுருவின் உறுதிப்பாடாக உள்ளது;அவர் "who judges righteously." யாக இருக்கிறார். குற்றம் அறியாதவர்களைப் புறங்கூறுபவர்கள், ஏழைகளுக்குத் தங்கள் முதுகைத் திருப்புகிறவர்கள், உதவியற்ற மக்களை அனுகூலப்படுத்திக் கொள்பவர்கள் ஆகியோர் ஒரு நியாயாதிபதியைக் கொண்டுள்ளனர். அவர் நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்று நம்பிக்கை வைத்தலே கிறிஸ்தவர்களின் பணிப்பகுதியாக உள்ளது. "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2 கொரிந்தியர் 5:10).

வசனம் 24. அப்போஸ்தலரின் சிந்தனை, பின்பற்றுவதற்கு ஒரு உதாரணமாக இருக்கும் கிறிஸ்துவின் பாடுகளில் இருந்து, மனித மீட்பிற்காகப் பாவமற்ற அவர் பாடு அனுபவித்ததின் தனிச்சிறப்பிற்குக் கடந்து சென்றது. **சிலுவையின் மீது அவர், தாமே தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சுமந்தார்.** ஏசாயாவின் வார்த்தைகள் இந்தக் கருத்திற்கு மிகவும் நெருக்கம ாக உள்ளன: "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்" (ஏசாயா 53:5). பதிலாகச் செய்யப்பட்ட பரிகாரபலி என்பது கிறிஸ்தவ விசுவாசத்தில் மிகவும் நெஞ்சார நேசிக்கப்படும் போதனைகளில் ஒன்றாக உள்ளது. 3:18ல் இதைப் பேதுரு திரும்பவும் மேலே கொண்டு வந்தார். பாவங்களுக்குக் கிரயம் செலுத்துவதற்காகக் கிறிஸ்து [நமக்கு] பதிலாக பாடுபட்டார், மனிதகுலத்தின் பாவங்களை அவர் சுமந்தார்; ஆனால் பாவநிவாரணத்தின் இரகசியம் என்பது (நமக்கு) பதிலாக பாடுபடுதல் என்பதைவிட மிகவும் அதிகமானதாக உள்ளது. இயேசு தாமே முன்வந்து தம்மைத் தேவனுக்குக் கீழ்ப்படுத்தினார். தேவனுடைய நீதி, பாவங்கள் கணக்கிடப்படுதல் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது. இயேசு பாவமின்றி வாழ்ந்து மரித்தபோது தேவனுடைய நீதி திருப்திப்படுத்தப் பட்டது எவ்வாறு என்பது மிகச்சரியாகத் தேவனால் அறியப்படுவதாக உள்ளது. தேவன் வெளிப்படுத்தி இருப்பவற்றை, அதாவது பாவம் என்பது மனிதகுலத்தின் உலகளாவிய நடைமுறையாக உள்ளது (ரோமர் 3:23) மற்றும் மன்னிக்கப்படாத பாவம் தேவனிடத்தில் இருந்து நித்தியத்திற்கும் பிரிக்கப்படுதலை விளைவிக்கிறது (ரோமர் 6:23) என்பதை நாம் உறுதிப்படுத்து கிறோம். தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களின் பாவத்தை **இயேசு காயங்களினால்** குணமாக்குகிறார்.

NASB வேதாகமம் *xulon* என்ற கிரேக்க வார்த்தையை "சிலுவை" என்று மொழிபெயர்த்தபோது, தனது வாசகர்களுக்கு ஒரு அநீதியை இழைத்துள்ளது. ஆங்கிலத்தில், மரங்கள் மற்றும் அதில் இருந்து செய்யப்படும் பொருள்கள் ஆகியவற்றிற்குப் பல வார்த்தைகள் உள்ளன. ஒவ்வொன்றும் தத்தமது நுண்பொருளைக் கொண்டுள்ளது. "wood," "tree," "board," "lumber," "plank," "forest," மற்றும் "timber" போன்ற வார்த்தைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஆனால் வேறுபட்ட அர்த்தங்களைக் கொண்டுள்ளன. ஆங்கிலத்தில் போன்றே கிரேக்க மொழியிலும் [மரம் என்பதற்கு] ஒன்று போன்ற அர்த்தமும் ஆனால் அதே வேளையில் மிகச் சரியாக ஒரே

அர்த்தமற்றதுமான பல வார்த்தைகள் உள்ளன. உயிருள்ள மரத்திற்கு *dendron.* என்பதே கிரேக்க வார்த்தையாகும் "சிலுவை" என்பதற்கு *stauros* என்பதே தக்க வார்த்தையாகும். கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வைக் கருப்பொருளாக உரைக்கும்போது புதிய ஏற்பாடு *stauros* என்ற வார்த்தையையே பொதுவாகப் பயன்படுத்துகிறது. இவ்விரு வார்த்தைகளில் எதையும் பேதுரு இவ்விடத்தில் தேர்ந்து கொள்ளவில்லை, இவ்வசனத்தில் "சிலுவை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை மிகச்சரியாக "wood" அல்லது "tree." என்றே அர்த்தப்படுகிறது. இது சிலவேளைகளில், மரத்தில் இருந்து செய்யப்பட்ட தடிபோன்ற ஒன்றைக் குறிக்கிறது (மத்தேயு 26:47), ஆனால் இயேசு மரித்த சிலுவையானது புதிய ஏற்பாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் (xulon; நடபடிகள் 5:30; 10:39; 13:29). "மரம்" என்று அழைக்கப்பட்டுள்ளது.

பேதுரு வார்த்தைகளைத் தேர்ந்து கொண்டது தற்செயலானது என்பது மிகவும் அரிது. இந்தச் செயலினால் அவர் ஒரு முக்கியமான கூற்றை ஏற்படுத்தினார். இவ்வார்த்தை ஒரு தடி என்று அர்த்தப்படுவதாயிருக்கையில், இது மரக்கம்பு அல்லது கழுமரம் என்று அர்த்தப்படவும் கூடும். மோசேயின் நியாயப்பிரமாணத்தில், ஒரு மனிதன் குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்படையான பாவம் ஒன்றைச் செய்திருந்தபோது, அவனுக்குத் (மரத்தில் தூக்கப்படும்) தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. அவனது குற்றத்தின் பெருக்கத்தைப் பற்றிய கூற்று ஒன்றை எழுதுவதற்கு, கூர்மையாக்கப்பட்ட ஒரு மரமுளை அவனது உடலில் செருகப்பட வேண்டும், அவனது உடல் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் (உபாகமம் 21:22, 23). இவ்வாறு வைக்கப்பட்ட மனிதன் சபிக்கப்பட்டவனாக இருந்தான். செருகப்பட்ட அந்த மரமுளை அவன் மரணத்திற்குக் காரணமாக இருக்கவில்லை என்று யோசுவா 10:26, 27 வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன; மரித்த மனிதன் தான் யாராக இருந்தான் என்பதற்காகவும் தான் செய்திருந்தவற்றிற்காகவும் சபிக்கப்பட்டான் என்று அறிவிப்பதற்காக அவன் மரத்திலே தூக்கப்பட்டான்.

உபாகமம் 21:22, 23ல் உள்ள நியாயப்பிரமாணம் மற்றும் சிலுவையில் இயேசுவின் மரணம் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு தொடர்பை வெளிப்படையாகப் பவுல் ஏற்படுத்தினார்: "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" (கலாத்தியர் 3:13). NASB வேதாகமம் 1 பேதுரு 2:24ல் "சிலுவை" ஒன்று மொழிபெயர்த்துள்ள அதே வார்த்தையை கலாத்தியர் 3:13ல் "மரம்" என்று மொழிபெயர்த்துள்ளது. "மரம்" என்ற வார்த்தையைப் பவுல் என்ன காரணத்திற்காகத் தேர்ந்தெடுத்தாரோ, அதே காரணத்திற்காகவே பேதுருவும் அவ்வார்த்தையைத் தேர்ந்தெடுத்தார். இயேசு சிலுவையில் தொங்கியபோது அவர், தேவனால் தள்ளப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, சபிக்கப்பட்டதற்கு அது ஒரு நினைவூட்டுதலாக இருந்தது, தொடக்ககால கிறிஸ்தவர்கள் "மரம்" என்று அழைக்கப்பட்ட சிலுவை பற்றிக் கேள்விப்பட்டபோது, அது சிலுவையின் அர்த்தத்தை அவர்களுக்குத் தரும் ஒரு சித்திரத்தை அவர்கள் மனங்களில் தீட்டிற்று. பாவமில்லாதவரும் தேவனுடைய பிரிய குமாரனுமான

இயேசு, சிலுவையில் தொங்கியபோது, அவர் மனிதர்களின் பாவங்களுக்கு நியாயமானத் தகுதியான சாபத்தைச் சகித்திருந்தார். அவர் சாபமானார் என்பது, அவர்கள் பாவத்தில் இருந்து விடுதலையையும் வாழ்விற்காக (ஜீவனுக்காக) நம்பிக்கையையும் மகிழ்வுடன் அனுபவிக்க முடியும் என்று அர்த்தப்படுத்திற்று.

இந்த நிருபம் முழுவதிலும் பேதுரு, ஞானஸ்நான மொழிநடைக்கு வெகு அருகில் இருந்தார். இவ்வசனம் மற்றும் ரோமர் 6:2-4 வசனங்கள் ஆகியவற்றில் உள்ள வார்த்தைகளுக்கு இடையிலான ஒற்றுமை குறிப்பிடத் தக்கதாக உள்ளது. பவுல், “பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?” என்று கேட்டார் (ரோமர் 6:2); **நாம் பாவங்களுக்குச் செத்து** என்று பேதுரு எழுதினார். “நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு” என்பது கிறிஸ்தவ ஞானஸ்நானத்தின் விளைவாக உள்ளது என்று பவுல் அறிவித்தார் (ரோமர் 6:4); பேதுரு, “நாம் ... **நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு**” என்று எழுதினார். விசுவாசி ஒருவர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடன் கூட அடக்கம் பண்ணப்படும்போது, அவர் [விசுவாசி] பாவத்திற்கு மரிக்கிறார். ரோமர் 6:2-4 மற்றும் 1 பேதுருவின் இவ்வசனப்பகுதி ஆகியவற்றிற்கு இடையில் பொதுவாக இணைகருத்துக்களை விளக்கவுரைகள் காணுகின்றன; அவற்றின் கலந்துரையாடலானது எவ்வளவு அடிக்கடி ஞானஸ்நானம் பற்றிய குறிப்பு எதையும் கொண்டிருப்பதில்லை என்பது திகைப்புக்கு உரியதாக உள்ளது. 1 பேதுருவில் “நாம் ... செத்து” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, *apoginomai*, என்ற வினைச் சொல்லின் ஒருமுறை மாத்திரம் வரும் எச்சவினையாக உள்ளது, இது பவுல் பயன்படுத்திய வார்த்தையைக் காட்டிலும் பலவீனமான வார்த்தையாக உள்ளது. புதிய ஏற்பாடு முழுவதிலும் இவ்வார்த்தை இந்த ஒரு இடத்தில் மாத்திரமே “விட்டு ஒழித்தல்” அல்லது “அதனுடன் இனி ஒன்றும் செய்யாதிருத்தல்” என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. “நாம் பாவத்தைப் பின்னே தள்ளிவிட்டு, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு” என்ற மொழிபெயர்ப்பு பேதுருவின் வார்த்தைகளுக்கு நியாயம் செய்கிறது. ஞானஸ்நான மொழிநடை தெளிவாக உள்ளது. இயேசுவைக் கர்த்தர் என்று தழுவிக்கொள்ளுதலில் உள்ள ஒழுக்கரீதியான மற்றும் நெறிமுறை சார்ந்த அளவைகளைப் பேதுரு தமது வாசகர்களுக்கு முன்பாக வைப்பதில் ஒருக்காலும் தவறியதில்லை. அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது, அவர்கள் பாவத்தைத் தங்களுக்குப் பின்னால் போட்டு விட்டனர். கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வு நீதியை வற்புறுத்திக் கேட்கிறது.

வசனம் 25. 2:21-25 முழுவதிலும், ஏசாயா 53ம் அதிகாரம் பின்னணியில் ஒருக்காலும் தொலைவில் இருக்கவில்லை. ஆயினும் 2:24ன் கடைசி வார்த்தைகளான “அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்” என்பவற்றிலும் இவ்வசனத்தின் (25ம் வசனத்தின்) முதல் வார்த்தைகளிலும் ஏசாயா தெளிவாகப் பேசுகிறார்: “அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்” (ஏசாயா 53:5, 6). **சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்** என்பது பவுலினால் ஏற்படுத்தப்பட்ட அதே உபதேச

உறுதிப்பாட்டின் அளவை எட்டுகிறது. அவர் "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி," என்று எழுதினார் (ரோமர் 3:23). "சிதறுண்ட" என்ற மொழிபெயர்ப்பு கிரேக்க எச்சவினையின் நிகழ்கால வினைச்சொல்லைப் பற்றிப்பிடிக்கிறது.[18] மனிதர்களின் பாவங்களை இயேசு சுமந்தார். மனிதர்கள் தங்கள் பகுதியில் எப்போதுமே தேவனை விட்டுப் பிரிந்து சென்று, கலகத்தி லும் பாவத்திலும் இழந்து போகப்பட்டிருந்தனர்.

அப்போஸ்தலர், **இப்பொழுதோ ... திருப்பப்பட்டிருக்கிறீர்கள்** என்று கூறியபோது, அவர் தமது வாசகர்களை, அவர்களின் மனமாற்றத்தின் காலத்தை நினைவுகூறும்படி அழைத்தார். **"திருப்பப்பட்டிருக்கிறீர்கள்"** (*epistrepho*) என்ற வார்த்தை, பல ஆண்டுகளுக்கு முன்பு, கர்த்தர் பரத்துக்கேறின பின்பு வந்த வாரங்களில் எருசலேமில், பேதுரு பயன்படுத்தியிருந்த அதே வார்த்தையாக உள்ளது. மக்கள் கூட்டம் சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே கூடியபோது, அவர்களுக்குப் பிரசங்கித்த பேதுரு, அவர்களை "உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள்" என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார் (நடபடிகள் 3:20). நடபடிகள் 3:20ல் "மனந்திரும்பி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையே இவ்வசனத்தில் **"திருப்பப்பட்டிருக்கிறீர்கள்"** என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் பலவீனம ாகி தங்களின் இலக்கினுடைய உணர்வை இழக்கும் வேளையில், அவர்கள் தங்களின் ஞானஸ்நானத்தில் கர்த்தரை அணிந்துகொண்டபோது, தங்கள் இருதயங்களை நிரப்பியிருந்த அன்பு மற்றும் நன்றியுணர்வு ஆகியவற்றைச் சிந்தித்துப் பார்த்தல் அவர்களுக்கு உதவிகரமாக உள்ளது. நம்பிக்கை இழந்து ஊசலாடிக்கொண்டிருந்த எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு எழுதியபோது, அந்த [எபிரெயருக்கு எழுதிய] நிருபத்தின் ஆசிரியர், "முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே" என்று கூறினார் (எபிரெயர் 10:32). பேதுருவின் வாசகர்களும்கூட கிறிஸ்துவைத் தழுவிக்கொண்ட காரணத்தினால், "பாடுகளின் மாபெரும் போராட்டத்தை" சகித்திருந்தனர். நீங்கள் "சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள் ... இப்பொழுதோ ... திருப்பப்பட்டிருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலர் எழுதினார்.

ஆடுகள் பற்றிய உவமை உருவகம் வேதாகமத்தின் பக்கங்களில் விடாது ஆழமாக ஓடுகிறது. ஆடுகள் எளிதில் வசப்படுத்தப் படக்கூடியவையாகவும் உதவியற்றவையாகவும் இருக்கச் சாய்கின்றன, அவர்களுக்கு வழிகாட்டுதலும் பாதுகாப்பும் அளிக்கக் கூடியவர் தேவை. ஆடுகளைப் போன்று மக்கள், விபத்துக்கள், வியாதி மற்றும் மரணம் ஆகியவற்றின் முன்னிலையில் தங்கள் உதவியற்ற தன்மையை உணரச் சாய்கின்றனர். சிலவேளைகளில் அவர்கள், நயமற்ற முரட்டுத்தனம் மற்றும் சுயநிறைவு ஆகியவற்றினால் சந்தோஷப்பட்டாலும், சிந்தனையானது தாழ்மை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றிற்கு அவர்களை வழிநடத்துகிறது. பேதுரு இந்த நிருபத்தை எழுதி ய, புறஜாதிப் பின்னணி கொண்ட கிறிஸ்தவர்கள், இஸ்ரவேல் நாட்டில் பொதுவாக இருந்த ஆடுமேய்த்தல் பற்றிய அதே சொந்த அனுபவத்தைக் கொண்டிருக்க அனேகமாக வாய்ப்பில்லை, ஆனாலும் புறஜாதியில் இருந்து

மனம்மாறியவர்கள் தொடக்கத்தில் இருந்தே இஸ்ரவேல் மக்களின் இந்த மொழிநடையைக் கற்று இருந்தனர். பழைய ஏற்பாடு ஒரு கிறிஸ்தவப் புத்தகமாக இருந்தது. இங்கு கூறப்பட்ட உவமானம் பேதுருவின் வாசகர்களிடத்தில் ஒழிந்துபோகாது நிலைத்திருக்கும். "சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள் ... இப்பொழுதோ ... திருப்பப்பட்டிருக்கிறீர்கள்."

பிற்பாடு பேதுரு, சபையின் மூப்பர்களை "மேய்ப்பர்கள்" என்றும் "கண்காணிகள்" என்றும் அழைக்கவிருந்தார் (5:1-3). வார்த்தை அமைப்பில் உள்ள தொடர்ச்சியானது கிரேக்க மொழியில் உள்ளது போன்று அவ்வளவு தெளிவாக ஆங்கில மொழியில் இல்லை. 5:2ல் "மேய்த்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை மேய்ப்பர் (*poimēn*) என்ற வார்த்தையின் வினைச்சொல் வடிவமாகும், அது இவ்விடத்தில் (2:25ல்) இயேசுவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 5:3ல் உள்ள "கண்காணிப்புச் செய்யுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை, இவ்வசனத்தில் உள்ள **"கண்காணியுமானவரிடத்தில்"** (*episkopos*) என்ற வார்த்தையின் வினைச்சொல் வடிவமாக உள்ளது. "பாதுகாப்பாளர்" என்ற சொற்றொடர் "மூப்பர்" மற்றும் "கண்காணி" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சபைகளில் மூப்பர்கள் சில வழிவகைகளில், உலகளாவிய சபையின்மீது இயேசு தலைவராக இருப்பதற்கு ஒப்பான வகையில் பணியாற்றுகின்றனர். கிறிஸ்தவர்கள் துன்புறும்போது அவர்கள், தங்களைக் கண்காணித்து வழிகாண்பிப்பவர் இருக்கும் நிச்சயத்தில் தைரியத்தைக் கண்டடைகின்றனர், அவர்கள் தங்கள் "மேய்ப்பரும் கண்காணியுமானவர்" தங்களை முற்றிலும் வழிநடத்துவார் என்று தைரியமாயிருக்கின்றனர். அவர்களின் துன்பமானது "பிரதான மேய்ப்பரான" கிறிஸ்து வெளிப்பட இருக்கும் நாளைத் துரிதப்படுத்துகிறது (4:17-19; 5:4).

நடைமுறைப் பயன்பாடு

கீழ்ப்படிதல் கொண்டிருங்கள்; தேவபக்தியுடன் வாழுங்கள் (2:13-15)

பின்வருவனவற்றுள், நமக்கு அதிகம் இடர்பாட்டைத் தரும் கருத்து என்ன என்று அறிதல் கடினமாக உள்ளது: கீழ்ப்படிதலா அல்லது அதிகாரமா. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் அவர்கள், தமது காலத்தின்போது மிகவிரைவில் அடுத்த ரோமப் பேரரசராகவிருந்த வெஸ்பாசியன் என்பவரைப் பற்றி, அதிகாரத்தில் இருத்தல் மற்றும் அதிகாரத்தின் கீழ் இருத்தல் ஆகிய இரண்டையும் அறிந்திருக்க மனிதர் என்று விவரித்தார்.[19] வழிகாட்டுதல் கொடுத்தல் மற்றும் வழிகாட்டுதல் பெறுதல், அதிகாரத்தில் இருத்தல் மற்றும் அதிகாரத்தின் கீழ் இருத்தல் ஆகிய இரண்டும் வாழ்வில் பெரும் விஷயங்களைச் செய்பவையாக உள்ளன.

கீழ்ப்படிதல் என்பது கிறிஸ்தவ வாழ்விற்கு அத்தியாவசியமான ஒரு உட்கூறு என்பதைப் பேதுரு நிருபத்தின் வாசகர்கள் அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார். சபைக்குள்ளாகக் கிறிஸ்தவர்கள் முதலில் கிறிஸ்துவுக்கும், பின்பு தேவனுடைய மக்களைக் கண்காணிப்புச் செய்கிற மூப்பர்களுக்கும் தங்கள் கீழ்ப்படிதலைக் காண்பிக்க வேண்டும். சமூகத்தில் அவர்கள் தங்கள் நாட்டின்

சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும், அந்த சட்டத்தில் சில விஷயங்கள் இருக்க வேண்டிய பிரகாரம் இது என்று ஒருவர் விரும்புகிறபடி இல்லையென்றாலும்கூட அது குறிப்பிடும் விஷயங்களை அவர்கள் செய்தாக வேண்டும். வீடும் பணியிடமும் நன்கு இயங்க வேண்டும் என்றால், பொறுப்பின் பணிச்செயல் இருக்க வேண்டும். எந்த ஒரு குழுவும் நன்கு பணிசெய்வதற்கு, மக்களுக்குத் தலைமைத்துவம் தேவைப்படுகிறது. தலைமைத்துவம் செயல்விளைவு கொண்டிருப்பதற்கு, கீழ்ப்படிதல் இருக்க வேண்டும். கீழ்ப்படிதல் என்பது அதிகாரத்தின் முன்னிலையில் அச்சத்துடன் ஒடுங்குதலைக் கேட்பது இல்லை. அது முறைமை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் நிமித்தம் ஒருவர் தமது சொந்த முன்னுரிமைகளைக் கைவிடும்படி தாழ்மையுடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது.

இயேசுவுக்கான தனிப்பட்ட உரிமை கோருதல் (2:24, 25)

மனித வரலாற்றில் முற்றிலும் தனிச்சிறந்த நிகழ்வு ஒன்று இல்லாதபட்சத்தில் மனித குலத்திற்கு உலகளாவிய செய்தி எதுவும் இருக்க இயலாது. கிறிஸ்தவ அறிக்கையிடுதலானது, இயேசுவானவர் எல்லாப் போதகர்களைக் காட்டிலும் மிகவும் ஞானமிக்கவராக இருந்தார் என்ற உறுதிப்பாட்டைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. அவர் தேவனுடைய குமாரனாக இருந்தார் என்பது உரிமை கோருதலாக இருக்கிறது. அவர் ஒருவரால் மாத்திரமே நமது பாவங்களுக்கு மரிக்க முடிந்தது (2:24, 25). அவர் ஒருவர் மாத்திரமே தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்யும்படிக்கு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தார். அவர் மாத்திரமே மறுபடியும் வரவிருக்கிறார். உலகத்தின் மற்ற மார்க்கங்களில் கிறிஸ்தவ செய்திக்கு ஒப்பாகப் பேசப்படக்கூடியது ஒன்றுமில்லை, கிறிஸ்தவம் என்பது மார்க்கரீதியான சாத்தியக்கூறுகளின் மத்தியில் தேர்ந்துகொள்ளப்படக் கூடிய ஒரு விஷயமாக இருப்பதில்லை. இரட்சிக்கப்படுவதற்கு அவரது நாமமே அல்லாமல் வேறே நாமம் இல்லை (நடபடிகள் 4:12; காண்க யோவான் 14:6). "... கிறிஸ்துவின் தனித்தன்மையை மறுதலித்தல் என்பது, ஊழியத்தின் நரம்பை வெட்டி அதை மேலாக இருத்தலாக்குதல் என்பதாக உள்ளது. இதற்கு மறுபுறத்தில், அவரது தனித்தன்மையை உறுதிப்படுத்துதல் என்பது, அவரை உலகளாவிய வகையில் அறியச் செய்வதற்கான அவசரத்தன்மையை ஒப்புக்கொள்வதாக உள்ளது."[20]

குறிப்புகள்

[1]I. N. Carman, "Here We Are but Straying Pilgrims," *Songs of the Church,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [2]Charles H. H. Scobie, *The Ways of Our God: An Approach to Biblical Theology* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 2003), 506. [3]உதாரணத்திற்கு, "நான் சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தர்சுபட்டணத்து யூதன்" என்று பவுல் எழுதினார் (நடபடிகள் 21:39). [4]J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 114. [5]"சந்திப்பு" *(episkope)* என்று வார்த்தை, "கண்காணி" அல்லது "மேய்ப்பர்" *(episkopos)* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையின் அதே வேரில் இருந்தே வருகிறது. 1 தீமோத்தேயு 3:1ல் *episkope* என்பது கண்காணியின் அலுவலைக் குறிக்கிறது

மற்றும் நடபடிகள் *1:20*ல் இது அப்போஸ்தலரின் அலுவலைக் குறிக்கிறது. [6]கி.மு. 509ல் ரோமர்கள் தங்கள் கடைசி அரசரான பெருமைமிகுந்த டார்க்குயின் என்பவரைப் பதவிநீக்கம் செய்தனர். அந்த நிகழ்வினுடன் ரோமக்குடியரசு பிறந்தது. உயர்மரபு ரோமர்கள், அரசர்கள் எப்போதாவது தங்களை ஆளலாம் என்ற சிந்தனையை வெறுத்து ஒதுக்கினர். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், ரோமாபுரியானது குடியரசு இன்னமும் இருந்தது என்ற பொய்க்கதையில்தான் வாழ்ந்தது.கோட்பாட்டளவில் பேரரசர் வெறுமனே "முதல் குடிமகனாக" மாத்திரமே இருந்தார். உண்மையிலோ, பேரரசரே படையைக் கட்டுப்படுத்தினார் எனவே அதிகாரமும் அவர் கையில் தான் இருந்தது. [7]ஐந்து மாகாணங்களில் பெயர்களும் *1:1*ல் பட்டியலிடப்பட்டுள்ளன. (அறிமுகப் பகுதியில் காணவும்.) [8]NASB வேதாகமம் ஆண்பால் பெயர் உரிச்சொல்லான *pantas* என்பதை பால் உள்ளடங்கிய சொற்றொடரான "எல்லா மக்களையும்" என்பதைக் கொண்டு மொழிபெயர்த்துள்ளது என்பது ஆர்வத்திற்குரிய விஷயமாகும். இந்தப் பெயர் உரிச்சொல் நேரடி அர்த்தத்தில் "எல்லா மனிதர்களையும் (அதாவது ஆண்களையும்)" என்றே அர்த்தப்படுகிறது, இவ்வாறே KJV வேதாகமத்திலும் உள்ளது. NRSV மற்றும் NIV வேதாகமங்கள், வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களின் மிகப்பரந்த வரைவெல்லையும் பால்ரீதியான மொழியை நடைமுறைப்படுத்த முயற்சி செய்துள்ளன. "சகோதரர்" என்பதற்கான கிரேக்க வார்த்தை "சகோதரர்கள் மற்றும் சகோதரிகள்" என்று மொழிபெயர்க்கப்படும், "மனிதர்கள் [ஆண்கள்]" என்பதற்கான வார்த்தை "மக்கள்" என்று மொழிபெயர்க்கப்படும், முதலியன. NASB வேதாகமத்தின் "all people" என்பது, அப்படிப்பட்ட பழைமைவாத மொழிபெயர்ப்பும்கூட, இரு பால்களுக்கும் கிரேக்கு மற்றும் எபிரெய மொழிகள் ஆண் பால் சொல்லையே பயன்படுத்தின என்பது பற்றிச் சிந்தையின்றிப் போய்விடவில்லை என்பதை விவரிக்கிறது. ஆங்கில மொழியிலும் இதே செய்யப்பட்டுள்ளது என்று ஒருவர் விவாதிக்கலாம். கடந்த காலத்தில் ஆங்கிலத்தில் "he" என்பது சந்தர்ப்பப் பொருளைச் சார்ந்து, "he" அல்லது "she" என்று அர்த்தப்படுத்தியுள்ளது, மற்றும் "மனிதர்கள் [ஆண்கள்]" என்பது "மக்கள் [பொதுப்பால்]" என்று அர்த்தப்படுத்தியுள்ளது. கிரேக்கு மொழியின் ஆண் குறிப்புச் சொல்லை இருபாலையும் உள்ளடக்கும் சொல்லாக மொழிபெயர்ப்பது எப்போதாவது ஏற்புடையதாக இருக்கிறதா என்பது இங்கு கேள்வியல்ல. இந்த சந்தர்ப்பத்தில் NASB வேதாகமம் கூட அது அவ்வாறே உள்ளது என்றே விவாதிக்கிறது. மேற்கத்தியக் கலாச்சாரத்தின் அரசியல்ரீதியாக கட்டளையிடப்பட்டுள்ள பால் சமநிலையின் வற்புறுத்தலை இடங்கொள்ளச் செய்வதற்கு, சொல்விளக்கத்தின் பழைய வடிவங்களை ஏற்றுக்கொள்வதில் மொழிபெயர்ப்பாளர்கள் எவ்வளவு தூரம் போகக்கூடும் என்பதே இங்கு கேள்வியாக உள்ளது. [9]"அறிக்கையிடுதல்" என்பதினால் நாம் வெறும் வாய்மொழிக்கூற்று என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகிறோம். அறிக்கையிடுதல் மறைமுகமாக உரைக்கும், விசுவாசம், அன்பு, புதிய பிறப்பு, கீழ்ப்படிதல் முதலிய யாவற்றையும் நாம் அர்த்தப்படுத்துகிறோம். [10] Scobie, 847.

[11]பேதுரு *2:13*ல் செய்தது போன்று ("கீழ்ப்படியுங்கள்" என்று) கட்டளையிடாமல், இவ்விடத்தில் ("கீழ்ப்படிந்திருங்கள்") என்ற எச்சவினையை நுட்பமாகப் பயன்படுத்தி இருந்த போதிலும், சந்தர்ப்பப் பொருளானது அர்த்தத்தில் வேறுபாடு எதையும் கருத்தாகத் தெரிவிப்பதில்லை. பேதுரு எச்சவினையை கட்டளையின் வலிவுடன் பயன்படுத்தியது கல்வியாளர்கள் மத்தியில் அதிகமான கலந்துரையாடலின் பொருளாயிற்று. [12]Michaels, 138 ஐக் காணவும். [13]உதாரணத்திற்குப் பின்வரும்

புத்தகத்தில் காணவும்: Wayne A. Grudem, *The First Epistle of Peter: An Introduction and Commentary,* Tyndale New Testament Commentaries, vol. 17 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 124. [14]*நல்ல பதிவேட்டுப் படிப்பு ஒன்றிற்கு, பின்வரும் புத்தகத்தில் காணவும்:* Richard A. Horsley, "The Slave Systems of Classical Antiquity and Their Reluctant Recognition by Modern Scholars," *Semeia* 83/84 (1998): 19–66. [15]*"பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெயர் 10:2ம் வசனம் ஒரு இணைச்சொற்றொடராக உள்ளது. காண்க* Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 967. [16]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude,* Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 117. [17]Ignatius *Ephesians* 10.3. [18]"Planet" *என்ற ஆங்கில வார்த்தை கிரேக்க வினைச்சொல்லான planao, என்பதன் இனச்சொல்லாகும், இது "அலைதல்" என்று அர்த்தப்படுகிறது. நிலையாக இருக்கும் விண்மீன்கள் மத்தியில் கிரகங்கள் அலைந்து திரிந்தன என்று பழங்கால மக்கள் உற்றுக்கவனித்தனர் (யூதா 13ம் வசனத்திற்கான விளக்கங்களைக் காணவும்). அவர்கள் அடிக்கடி இந்த கிரகங்களைப் பல்வேறு தெய்வங்களுடன் இணைவுபடுத்தினர்.* [19] Josephus *Wars* 4.10.2. [20] John Stott, *The Contemporary Christian* (Leicester, U.K.: Inter-Varsity Press, 1992), 316.

5

பாடு அனுபவிக்கும் தேவ பிள்ளைகள் என்ற வகையில் நடந்து கொள்ளுதல் [பாகம் 2]

[3:1-22]

கீழ்ப்படிதல் பற்றிய கலந்துரையாடல் பேதுருவை, விசுவாசிகள் குடிமை அதிகாரிகளுக்கு மதிப்பையும் கீழ்ப்படிதலையும் காண்பிக்கும்படியும், அடிமைகள் தங்கள் எஜமனார்களை மதித்து கீழ்ப்படியும்படியும் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்ளும்படி வழிநடத்தியிருந்தது. அடிமைகளின் துன்பங்கள் அவரை, கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிச் சிந்திக்கும்படி வழிநடத்தியிருந்தது, ஆனால் 3ம் அதிகாரத்தில் அவர் கீழ்ப்படிதல் என்ற பாடக்கருத்திற்குத் திரும்பினார், இந்த வேளையில் அது மனைவியர் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பதாக இருந்தது. அடிமைகளுக்கும் மனைவியருக்கும் அவர் கொடுத்த புத்திமதிகள் வீட்டு வட்டாரத்தில் இருந்தன, ஆனால் மனைவியர் தங்கள் கணவர்களுடன் கொண்டுள்ள உறவுமுறையானது, அடிமைகள் தங்கள் எஜமானர்களுடன் கொண்டுள்ள உறவுமுறைபோன்று இருத்தல் மிகவும் அரிதாகும். உணர்வுப்பூர்வப் பிணைப்புகளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மறுபடியும் மறுபடியும் செய்யப்படும் சமூக நிகழ்வுகளும், கணவன்/மனைவி உறவுமுறையின் சிக்கலை அதிகப்படுத்துகின்றன.

மனைவியர் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் (3:1-6)

[1]அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து. [2]போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். [3]மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், [4]அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. [5]இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த

பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். [6]அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

வசனம் 1. அந்தப்படி *அதாவது, எல்லாக் கிறிஸ்தவர்களும் அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும், மற்றும் அடிமைகள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்றபடியே,* ***மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக்*** *கீழ்ப்படிந்திருங்கள் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டார். இல்லத்தில் ஒழுங்குமுறைமை மற்றும் சமாதானம் ஆகியவற்றிற்காக அவர்கள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும். இல்லத்தில் தலைமைத்துவப் பொறுப்பைக் கணவர்களுக்குத் தேவன் கொடுத்துள்ளார் என்பதே பேதுருவின் வார்த்தைகளில் உள்ள மறைமுகக் கருத்தாகும். கணவரின் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்துதல் என்பது, அதிகாரத்துவ, எதேச்சாதிகார ஆளுகையை உறுதிப்படுத்துதல் போன்றிருப்பதில்லை. பேதுருவின் அறிவுறுத்துதல்கள் கணவரை அல்ல ஆனால் மனைவியையே இலக்காகக் கொண்டுள்ளன என்பது கவனிக்கத் தக்கது. பேதுரு "கணவர்களே உங்கள் மனைவியரைக் கட்டுப்பாடு செய்யுங்கள்" என்று கூறவில்லை, ஆனால் அவர், "மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்" என்றே கூறினார். கீழ்ப்படிதல் என்பது மனவிருப்பத்துடன் தரப்படும்போது தரத்தைக் குறைப்பதில்லை. ஒரு மனைவி தனது கணவரின் தலைமைத்துவத்தையும் அதன் கருத்துள்ள அதிகாரத்தையும் மனவிருப்பத்துடன் ஏற்றுக்கொண்டால் அன்றி, அதை அவர் (கணவர்) செயல்படுத்த இயலாது - குறைந்த பட்சம் அவர் தாமே கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக வாழும் போது செயல்படுத்த இயலாது.*

கீழ்ப்படிதல் என்பது, எஜமானர்கள் தங்கள் அடிமைகள் மீது கொண்டுள்ள மேலாண்மைத்துவத்திற்குச் செய்யும் ஆவிக்குரிய அல்லது மதிநுட்பத்திற்குரிய மேன்மையைக் காட்டிலும், அதிகமான மேன்மையைப் பெண்கள் மீது ஆண்கள் கொண்டிருப்பதாக எந்த மறைமுகக் குறிப்பும் பெற்றிருப்பதில்லை. முறையான சமூக உள் செயல்பாட்டைக் கிறிஸ்தவர்கள் ஆதரித்தல் என்பதே பேதுருவின் அக்கறையாக இருந்தது. எந்த சமூக ஏற்பாட்டிலும், அது ஒரு வணிகம் அல்லது ஒரு வகுப்பறையாக இருந்தாலும்கூட, அங்கு ஓரளவிற்காவது தலைமைத்துவம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை இருந்தாக வேண்டும். செயல்படும் பொறுப்பை அல்லது அதிகாரத்தை எவரும் கொண்டிராத போது, குழப்பம் ஆளுகை செய்கிறது. கிறிஸ்தவக் குடும்பத்தில் கணவரும் தந்தையும், தமது குடும்பத்தின் ஆவிக்குரிய, உணர்வுரீதியான மற்றும் பொருளாதாரரீதியான நலவாழ்விற்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேதுருவும் பவுலும் (எபேசியர் 5:22-6:4; கொலோசெயர் 3:18-21) வேண்டிக்கேட்டுக்கொண்டபோது, அவர்கள் இருவரும் ஒரே சிந்தையாயிருந்தனர். அவர்கள் இருவருமே, ஒரு மனிதரின் தலைமைத்துவப் பணிப்பொறுப்பில் அவரது மனைவி அவரை ஆதரிக்க வேண்டும் என்பதில் மனநிறைவு அடைந்தனர்.

மனைவியர் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, நவீன மேற்கத்திய உலகத்தைக் காட்டிலும் பழங்கால

ரோமானிய உலகத்தில் மிகவும் ஆழமாக வேரூன்றி இருந்தது. [ஆணும் பெண்ணும்] சரிநிகர் சமானம் எனக் கருதும் மேற்கத்தியக் கலாச்சாரத்தில், கீழ்ப்படிதல் என்பது ஒருவரின் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்ற கருத்து, பழங்கால உலகத்தில் இருந்ததைப் போன்று ஏற்புடையதாக இராமல் அதிகம் குற்றப்படுத்தப்படுவதாக உள்ளது. நவீன வாசகர் ஒருவரின் சொந்த சமூகத்தில் உள்ள எழுதப்படாத சட்டங்களில் இருந்து வேதாகம அறிவுத்துதல்கள் கணிசமான அளவு மாறுபாடுவதால், அவற்றைத் தமது சமகால உலகில் எவ்வாறு தாம் நடைமுறைப்படுத்துவது என்று தீர்மானித்தல் அவருக்கு மிகவும் அடிக்கடி கடினமானதாக உள்ளது. இது இந்தக் கேள்வியை முற்றிலுமாக ஆய்வு செய்து பதில் அளிக்கும் இடமல்ல, ஆனால் இப்போதைக்கு நாம், புதிய ஏற்பாடு தனது வாசர்களுக்கு, சமூகக் கட்டமைவுகளின் வரிசை முறை ஒன்றை கொடுப்பதில்குறைவுபடுவதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். கணவர் மனைவிக்கு இடையில் பரஸ்பரம் மனநிறைவு தரும் நிபந்தனைகளில் செயல்படுத்தப்படக் கூடிய குடும்ப விஷயங்கள் பற்றிய கலந்துரையாடலை இந்தக் கீழ்ப்படிதல் என்பது தவிர்த்துவிடுவதில்லை. இது சில வேளைகளில் திருமணம் என்பது பலத்த சித்தமுடைய இருவரால் ஏற்படுத்தப்படுகிறது என்பதன் அங்கீகாரமாக உள்ளது. அந்த விஷயங்களில், கணவரும் மனைவியும் தங்களில் யாருடைய மனவிருப்பம் மேலோங்குகிறது என்று காண்பதற்கு ஒருவர் மற்றவரோடு போராடுகின்றனர். அப்படிப்பட்ட போராட்டமானது வாழ்நாள் முழுவதும் அல்லது விவாகரத்திற்கு வழக்கிடும்வரையில் பெரும்பாலும் தொடர்ந்து நடைபெறுகிறது. மற்ற திருமணங்களில், எவரொருவரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல் என்ற தட்டை நோக்கி அடியெடுத்து வைத்து செயல்பட மனவிருப்பம் கொண்டிருப்பதில்லை. கணவர் தலைமைத்துவத்தின் பொறுப்பைக் கொண்டிருத்தலே இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வாக உள்ளது. அதை அவர் ஏற்றுக்கொள்ளுகிறபோது அவர் தேவனைப் பிரியப்படுத்துகிறார்.

இல்லம் என்பது பேதுருவின் புத்திமதிக்குச் சந்தர்ப்பப் பொருளாக உள்ளது என்ற கருத்தை கவனிக்காமல் விடலாகாது. வணிக உலகத்தைப் பற்றியோ அல்லது மற்ற சமூக கட்டமைவுகளைப் பற்றியோ இங்கு மறைமுகமான குறிப்பு எதுவும் இல்லை. சபையில் பாலினப் பணிப்பொறுப்புகள் பற்றிய வழிகாட்டுதலுக்கு, [புதிய ஏற்பாட்டின்] வேறிடங்களுக்கு நாம் திரும்ப வேண்டும். சபையின் போதித்தல் மற்றும் அதிகாரம் செலுத்துதல் ஆகியவற்றின் விஷயங்களில் ஆண்கள் தலைமைத்துவப் பொறுப்பேற்க வேண்டும் என்று பவுல் எதிர்பார்த்தார் என்பது 1 கொரிந்தியர் 14:34, 35 மற்றும் 1 தீமோத்தேயு 2:11, 12 ஆகிய வசனப்பகுதிகளில் தெளிவாகிறது. இல்லமும் சபையும் தேவன் ஏற்படுத்தி தேவன் கண்காணிக்கும் நிறுவனங்களாக உள்ளன. இவை இரண்டிலுமே தமைமைத்துவத்தைத் தேவன் பின்வரும் அளவிற்கு எளிமைப்படுத்தியுள்ளார்: கிறிஸ்தவ ஆண்கள் உதாரணத்தை முன்வைத்து மற்றவர்களை வழிநடத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பதாக அவரே (தேவனே) கூறியுள்ளார். இருப்பினும் ஆவிக்குரிய, ஒழுக்கரீதியான அல்லது மனநிலை சார்ந்த வகையில் ஆணோ அல்லது பெண்ணோ ஒருவரைக் காட்டிலும் இன்னொருவர் மேன்மையாக உள்ளனர் என்று மறைமுகமாக உணர்த்தும் வார்த்தை எதுவும்

இல்லை. இல்லம் மற்றும் சபை தவிர, வெளியே உள்ள உறவுமுறைகளில், அது சமூகரீதியாகவோ அல்லது தெய்வீக ரீதியாகவோ இருந்தாலும், அங்கு ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இருப்பதில்லை.

மனைவியர் தங்கள் கணவர்களுக் கீழ்ப்படிய வேண்டும் என்ற பேதுருவின் புத்திமதி, வேலையாட்கள் தங்களை வேலைக்கு அமர்த்தியவர்களுக்கு அல்லது குடிமக்கள் தங்கள் நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதைக் காட்டிலும் எந்த வகையிலும் முன்னணி வகிப்பதில்லை. தற்கால மேற்கத்திய கலாச்சாரத்தில், ஒரு மனைவி கணிசமான ஊதியம் பெறலாம், வணிகம் அல்லது அரசாங்கத்தில் பொறுப்புள்ள பதவி ஒன்றை வகிக்கலாம் அல்லது அவள் மிக அற்பமான வேலை ஒன்றைச் செய்யலாம், அவள் இல்லத்தில் ஒரு முழுநேரப் பணி செய்யலாம் அல்லது தனது கணவரைச் போன்ற, எட்டு மணிமுதல் ஐந்து மணிவரை செய்ய வேண்டிய வேலை ஒன்றைக் கொண்டிருக்கலாம். அவளது பணியோ அல்லது பிற பொறுப்புக்களோ என்னவாக இருந்தாலும், கிறிஸ்தவப் பெண்ணானவள் தனது கணவரைக் குடும்பத்தின் தலைவர் என்ற முறையில் ஊக்குவித்து ஆதரிக்க வேண்டும் என்பதே கிறிஸ்தவப் பெண்ணுக்குப் பேதுரு விடுத்த வேண்டுகோளாக உள்ளது. பழங்காலப் பெண்ணுக்குப் போலவே இந்தப் புத்திமதி நவீனகாலப் பெண்ணுக்கும் ஏற்புடையதாக உள்ளது.

சிலவேளைகளில் ஒரு ஆண், கணவர் அல்லது தந்தை என்ற வகையில் தாம் கொண்டுள்ள பொறுப்பை தவறாகப் பயன்படுத்தவோ அல்லது கைவிட்டு விடவோ கூடும் என்பது உண்மையே. கணவர் கருத்தற்றவராக. பொறுப்பற்றவராக அல்லது கொடுமையானவராக இருக்கும்போது, கிறிஸ்தவ மனைவி தன்னால் முடியுமளவுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தை தனது குடும்பத்திற்கு வழங்க வேண்டும். கணவர் விசுவாசியாக இல்லாதிருந்து மனைவி விசுவாசியாக இருக்கும்போது, அவள் தனது கணவரில் காணும் நற்தன்மை எதையும் ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும், **இதன்மூலம் அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப் படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்ற வசனம் நிறைவேறும்.** "திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்" என்பது "சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்" (4:17). என்பதைப் போன்றதாகவே உள்ளது. இப்படிப்பட்ட விஷயத்தில் கணவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எவ்வித பதில் செயலும் செய்யாதவராக அல்லது அதை நேரடியாக எதிர்ப்பவராக இருப்பார். மனைவி மாத்திரம் கிறிஸ்தவளாக இருக்கும்போது, பழங்கால உலகத்தில் அவளது நிலைப்பாடு ஏற்கனவே இடர்ப்பாடு உள்ளதாக இருந்தது. ஒரு மனைவி தனது கணவரின் மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டாளேயன்றி வேறுவழியில் இருக்கும்படி எதிர்பார்க்கப்படவில்லை. கிறிஸ்தவ ம னைவியானவள் தமது சாந்தமும் ஆதரவுமுள்ள நிலைப்பாட்டின் மூலம் தனது கணவருக்கு ஒரு முன்னுதாரணத்தை அமைக்க வேண்டும் என்று பேதுரு எதிர்பார்த்தார். கிறிஸ்தவர் வார்த்தைகளினால் மாத்திரமல்ல ஆனால் நடத்தையினாலும் போதிக்கிறார்.

KJV வேதாகமம் "போதனையின்றி, ... ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்"

என்ற சொற்றொடரைத் தரவழைத்திருக்கும் ["they also may without the word be won"] விதமானது, தவறாக வழிநடத்துவதாக உள்ளது. "Word" என்ற வார்த்தைக்கு முன்னால் உள்ள "the" என்ற திட்டவட்டச் சுட்டுச்சொல்லானது தேவனுடைய வசனமே இங்கு எழுவாயாக உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கிறது. அவிசுவாசி-யான கணவரின் மனமாற்றத்தில் தேவனுடைய "வார்த்தை" எவ்வித பங்கும் வகிப்பதில்லை என்று பேதுரு கூறவில்லை. NASB வேதாகமம் இதை "without a word" என்று மொழிபெயர்த்தபோது இதற்குச் சரியான கருத்தை அளித்துள்ளது. சில விஷயங்களில், திருமணத் துணைவரில் அவிசுவாசியாக இருப்பவரின் மனமாற்றத்தில் குறிப்பிட்ட எந்த வார்த்தையும் அவரை ஆதாயப்படுத்துவதில்லை என்று பேதுரு கூறினார். மாறாக தேவபக்தியுள்ள நடக்கையினால் ஆதரிக்கப்பட்ட வார்த்தையானது அவிசுவாசியைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும். அவர் "ஆதாயப்படுத்தப்படுதல்" என்பது, ஒரே வேளையில் கிறிஸ்துவின் மகிமைக்கென்றும் கணவரின் இரட்சிப்புக்கென்றும் செய்யப்படுவதாக இருக்கும். பேதுரு கூறியதற்கு மற்ற மறைமுகமான கருத்துக்களும் இருந்தன. பேதுருவின் வாசகர்களில் கணவர்களைக் காட்டிலும் அதிகமாக மனைவியர்கள் இருந்தனர் என்பது மிகவும் சாதாரணமான விஷயமாகும். கிறிஸ்தவ மனைவியர்கள் தங்கள் கணவர்களுக்கு வசனத்தைப் போதிப்பதன் மூலம் அவர்களை ஆதாயப்படுத்தப் பொதுவாக முயற்சி செய்து கொண்டிருந்தனர். கணவர் கிறிஸ்தவராக இல்லாதபோது, மனைவியானவர் தமது கணவரைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்த முதன்முயற்சி செய்வதைப் பேதுரு தெளிவாக அங்கீகரித்தார்.

கிரேக்க - ரோம உலகத்தில் இருந்தவர்களில் அதிகாரமற்றவர்களாக இருந்தவர்கள் - அல்லது குறைந்த பட்சம் மிகக்குறைவான அதிகாரத்தைக் கொண்டிருந்தவர்கள் (ஏழைகள், பெண்கள், அடிமைகள்) - போட்டிக்கடவுள்கள் எல்லாரையும் மற்றும் போட்டித் தத்துவங்கள் யாவற்றையும் முடிவில் வெல்லக்கூடிய வல்லமையுடன் (கிறிஸ்துவைப் பற்றிய) செய்தியை அறிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. தேவனுக்கு முன்பாக எல்லா மக்களும் சமானமாக நிற்கின்றனர் என்ற செய்தியானது கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு உள்ளானதாக இருக்கிறது. மனிதகுலத்தின் மத்தியில் சமானத்தன்மை இருக்க வேண்டும் என்ற தேவன் விரும்புகிறார் என்ற உறுதிப்பாடுதான், நாசரேத்தூர் இயேசுவைச் சேவித்தலுக்குத் தப்பிக்க இயலாத விளைவாக உள்ளது. தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. அவரது மக்களும் பட்சபாதம் உள்ளவர்களாக இருக்கவேண்டியதில்லை (யாக்கோபு 2:1).

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தைத் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில், கிறிஸ்தவமானது பலத்த விமர்சனங்களைச் சந்தித்தது. அவற்றில் ஒன்று, இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த செல்ஸஸ் என்ற மனிதர் கிறிஸ்தர்களைக் கண்டனம் பண்ணி எழுதிய நீண்ட கட்டுரையாகும். காலங்கள் சென்ற போது, அந்த எழுத்தாக்கம் அழிக்கப்பட்டு மறக்கப்பட்டுப் போயிற்று. இருப்பினும் மூன்றாம் நூற்றாண்டில் எகிப்தின் அலெச்சந்திரியா என்ற நகரில் வாழ்ந்த ஓரிகன் என்ற கிறிஸ்தவர் செல்ஸஸின் எழுத்தாக்கத்தை மறுத்து எழுதினார். ஓரிகன் தமது பதிலுரையில், செல்ஸஸ் கூறுவது என்ன என்பது பற்றி ஒரு சிறந்த கருத்தை நாம் கொண்டிருக்கும் அளவுக்கு, செல்ஸஸின் எழுத்தாக்கத்தை ஓரிகன் அவர்கள் மறுபடியும் குறிப்பிட்டார்.

செல்ஸஸ் எழுதியவற்றில் ஒரு பகுதி கீழே தரப்படுகிறது:

> தனிப்பட்ட வீடுகளிலும்கூட நாம், கம்பளி வேலை செய்பவர்கள், காலணி செய்பவர்கள், சலவைத் தொழிலாளர்கள் மற்றும் மிகவும் கல்வியறிவற்றவர்கள் மற்றும் நாட்டுப்புற வேலையாட்கள் ஆகியோரை நாம் காணுகிறோம், இவர்கள் யாவரும் தங்களுக்கு மூத்தவர்களும் மிகவும் புத்தி கூர்மையுள்ளவர்களுமான தங்கள் எஜமானர்களுக்கு முன்பாக எதையும் கூறத்துணிய மாட்டார்கள். ஆனால் அவர்கள் தனிப்பட்ட வகையில் பிள்ளைகளையும் மதியீனமான பெண்களையும் தங்களுடன் கொண்டிருக்கும்போதெல்லாம், திகைப்புக்குரிய கூற்றுக்களை வெளியிடுகின்றனர், உதாரணமாக அவர்கள் தங்கள் தந்தையர்களும் பள்ளி ஆசிரியர்களும் கூறுவதைக் கவனமாகக் கேட்கக்கூடாது, ஆனால் ஆவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது போன்ற கூற்றுக்களை வெளியிடுகின்றனர்; இவர்கள் மதியீனமாகப் பேசுவதாகவும், உண்மையில் இவர்கள் எதையும் செய்ய அறிவதோ அல்லது கூடுவதோ இல்லை, ஆனால் வெற்றுப் பேச்சை மாத்திரமே மேற்கொள்கின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.[1]

இது இவர்களின் மனவிருப்பமாக இருந்திராது, ஆனால் செல்ஸஸ் மற்றும் ஓரிகன் ஆகிய இருவருமே, கிறிஸ்தவத்தின் முதல் சில நூற்றாண்டுகளில் கிரேக்க - ரோமர் உலகத்திற்குக் கிறிஸ்துவை அறியச் செய்த போராட்டத்தில், (ஏழைகள், பெண்கள், அடிமைகள் முதலிய) பலவீனமான மற்றும் அதிகாரமற்ற மக்களின் பணிப்பொறுப்பை உணர்ந்து அறிந்திருந்தனர் என்று இந்தக் குறிப்புரை சாட்சியளிக்கிறது.

வசனம் 2. கீழ்ப்படிதல் என்ற மனைவியின் **நடக்கையானது** அவளுடைய கணவரைக் கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்தலாம், இருந்தாலும் அது **பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையாக இருக்க வேண்டும்.** மனைவியர் மாத்திரமல்ல ஆனால் பேதுருவின் வாசகர்கள் யாவரும், தங்கள் சமகாலத்தில் வாழ்பவர்களுக்கு ஏற்புடைய சாட்சியமான வாழ்வின் நடக்கையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே பேதுருவின் அக்கறையாக இருந்தது (1:15; 2:12). அவர்கள் கிறிஸ்துவை அணிந்து கொண்டனர் என்பதையும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்தனர் என்பதையும் புறதெய்வ வணக்கத்து உலகம் கண்டு கேள்விப்பட வேண்டியிருந்தது. விசுவாசிகள் தங்கள் வார்த்தையினாலும் தங்கள் நடக்கையினாலும் தேவபக்தியற்றவர்களிடம் சென்று சேர வேண்டும் என்று பேதுரு எதிர்பார்த்தார். "பார்த்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*epopteuō* என்ற) வார்த்தையானது இவ்விடத்திலும் 2:12 லும் பயன்படுத்தப்பட்டுள்ளது ஆனால் புதிய ஏற்பாட்டின் வேறு எவ்விடத்திலும் இவ்வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. இது "பார்த்தல் அல்லது காணுதல்" என்பதைக் காட்டிலும் பலமான வார்த்தையாக உள்ளது. இது கணவர் தமது தலையைத் திருப்பித் தமது மனைவியின் விசுவாச அறிக்கைக்கும் அவள் நடந்துகொள்ளும் வகைக்கும் இடையில் உள்ள தொடர்ப்பைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் சித்திரம் ஒன்றைத் தீட்டுகிறது. வாழ்வில் அவளது "கற்புள்ள நடக்கை"

என்பது பாலுறவு நடத்தையில் அவள் குற்றத்திற்கு அப்பாற்பட்டவளாக இருப்பதைக் காண்பிக்கிறது, ஆனால் அந்த வார்த்தை இன்னும் அதிகமான அர்த்தம் தருகிறது. அது குற்றமற்ற தன்மையையும், ஒருமைத்தன்மை மற்றும் வேறு எதினாலும் உடன்பாடு ஏற்படுத்தப்படாத தன்மை ஆகியவற்றைக் கொண்டுள்ள, நற்தன்மையை நோக்கிய நிலைப்பாட்டையும் கருத்தாகத் தெரிவிக்கிறது. கிரேக்கர்கள், அவளது "கற்புள்ள நடக்கை" என்பது "பயத்தினால்" *(en phobōi)* ஆனதாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். (ஆனால்) மனைவியானவள் தனது கணவர் மீதுள்ள பயத்தினால் ஒழுக்கமாக வாழ வேண்டும் என்று பேதுரு அர்த்தப்படுத்தியிருக்க மாட்டார். அவர் "தேவனுக்குப் பயந்திருங்கள்" (2:17) என்ற கட்டளையில் "பயம்" என்ற வார்த்தை கொண்டிருந்த அதே அர்த்தத்துடன் தான் அவ்வார்த்தையை இங்கும் பயன்படுத்தினார். அவள் தனது கணவருக்கு தனது கணவருக்கு மரியாதையும் பணிவிணக்கமும் காண்பிக்க வேண்டும்; ஆனால் அதற்கும் மேலாக அவள், வாழ்வில் தனது தூய்மையான நிலையைக் காணும் தனது கணவர், தேவனுக்கு முன்பாகப் பயன் நிறைந்த மதிப்பு நிறைந்த நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் வகையில், அவள் தனது நடக்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். *En phobōi* என்ற வார்த்தையை NASB வேதாகமம் "மதிப்புநிறைந்த வகையில்" என்று மொழிபெயர்க்கையில் அது இவ்வார்த்தைக்குச் சரியான வகையில் நியாயம் செய்கிறது. (தமிழ் வேதாகமத்தில் இவ்வார்த்தை "பயபக்தியோடு" என்று நியாயமான வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

வசனம் 3. கிறிஸ்தவப் பெண், தான் யாராக இருக்கிறார் மற்றும் தான் கண்களுக்கு விருந்தாக இருப்பதைக் காட்டிலும் அதிகமாக எவ்வாறு நன்னடக்கை உள்ளவளாக இருக்கிறாள் என்பதைப் பற்றி அதிகம் அக்கறை கொள்ள வேண்டும் என்று பேதுரு அறிவுரை கூறினார். தேவபக்தியுள்ள பெண் தன் வாழ்வை "பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கை" யினால் அலங்கரித்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் அவளது **அலங்கரிப்பு புறம்பான அலங்காரமாயிருக்கக் கூடாது.**[2] ஒரு பெண் தனது சரீரத் தோற்றம்பற்றிச் சற்றும் கவலையற்று இருக்க வேண்டும் என்று பேதுருவின் வார்த்தைகள் அர்த்தப்படுத்துவதில்லை. எதிர்பாலினத்தவருக்கு முன்பாகப் பிரியமான வகையில் தோன்றும் வகையில் நடந்துகொள்ளுதல் என்பதே பிரச்சனையாக இருந்தது. பேதுரு பெண்களை மதித்தார் மற்றும் அவர்கள் தாங்கள் யாராக இருந்தனர் என்பதால் தங்கள் கண்ணியத்தையும் அடையாளத்தையும் கண்டறிய வேண்டும் தவிர, தங்களின் அலங்கரிப்பினால் அவற்றைக் கண்டறியத் தேடலாகாது என்றும் அவர் விரும்பினார்.

கிரேக்க - ரோம உலகத்தில் அப்போது இருந்த ஒழுக்கநெறியாளர்கள் பேதுருவின் வார்த்தைகளை எதிரொலித்தனர். J. ராம்சே மிகாயேல்ஸ் அவர்கள், பேதுருவின் காலத்தில் வாழ்ந்தவர்களில் ஒருவரான, தத்துவஞானியும் டெல்பி கோயில் பூஜாசாரியுமான புளூடார்க் என்பவரின் வார்த்தைகளை நோக்கிக் கவனத்தை இழுத்தார்: "பொன்னோ அல்லது விலையுயர்ந்த கற்களோ அல்லது இரத்தாம்பரமோ அல்ல, ஆனால் கண்ணியம், நல்ல நடத்தை மற்றும் தன்னடக்கம் ஆகியவையே அவளைக் குணவதி ஆக்குகிறது."[3] அதே போன்று பவுலும் பின்வருமாறு எழுதினார்:

> *ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையெறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும் (1 தீமோத்தேயு 2:9, 10).*

பேதுரு தமது காலத்தில் வாழ்ந்த அதிகம் தெளிவான சிந்தனையுள்ளவர்களுடன் ஒரே சிந்தையாக இருந்தார். இங்குமறைமுகமாக ஆண்களுக்கு ஒரு கட்டளையையும் பேதுரு கொண்டிருந்தார். புறம்பான அழகு மற்றும் அலங்கரிப்பு ஆகியவற்றின் மீது அக்கறை கொண்டிருந்த. பெண்களைப் போன்றே அப்படிப்பட்ட விஷயங்களினால் ஈர்க்கப்பட்ட ஆண்களும் இருந்தனர். ஒரு பெண் தனது உடல் தோற்றத்தின் அடிப்படையில் முதன்மையாகத் தன்னை முன்வைக்கும்போது, ஒரு பெண்ணிற்குள் உடல் தோற்றத்திற்கு அப்பால் சிறிதளவே காணும் மனிதர்களை அவள் ஈர்ப்பாள். உடல் தோற்றத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் உறவானது காலங்கள் செல்லும்போது நலிவடைய வாய்ப்பு உள்ளது. ஆண்கள் தங்கள் மனைவியரில் அவர்களின் அலங்கரிப்பைக் காட்டிலும் மேலானவற்றைக் காணவேண்டும் என்பதே அவர்களுக்குப் புத்திமதியாக உள்ளது.

பேதுரு மிகவும் திட்டவட்டமாக இருந்தார். **மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலில்** அலங்கரிப்பு இருக்கலாகாது என்று அவர் கூறினர். ஏறக்குறைய பேதுருவின் காலத்தில் வரையப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ள ஓவியங்கள், அந்த காலத்தில் நேர்த்தியான பெண்கள் உடை உடுத்திய வகையை விவரிக்கின்றன. பறம்பான தோற்றத்திற்கு மிக அதிகமான கவனம் செலுத்துதல் என்பது நவீனகாலக் கண்டுபிடிப்பல்ல. பேதுருவின் வாசகர்களில் சுமாரான சதவிகிதத்தினர் செல்வந்தர்களாக இருந்தனர் எனவே அவர்கள் அப்படிப்பட்ட ஆடம்பரமான உடைகளை வாங்க முடிந்திருந்தது என்று பேதுருவின் வார்த்தைகளில் ஆலோசனை எதுவும் இல்லை. தோற்றத்தைப் பற்றி அதிகம் அக்கறை கொண்டிருந்த மனநிலையை நோக்கிப் பேதுரு உரைத்தார். அந்த மனநிலையானது ஏழை மற்றும் பணக்காரர் ஆகியோர் மத்தியில் ஒன்றுபோன்றே காணப்படக்கூடும். ஒரு பெண், பொன் மோதிரத்தையும் கடகத்தையும் அணிதல், புது உடைகளை அணிதல் அல்லது தலைமுடியை ஒழுங்கமைத்தல் ஆகியவற்றைச் செய்தல் பாவமாயிருக்கும் என்று அப்போஸ்தலர் இங்கு கூறியிருக்க வாய்ப்பில்லை. மாறாக, இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பெண்கள் அதிக அக்கறையாக இருக்கும்போது, மிகவும் தீவிரமான விஷயங்களில் தங்கள் கணவர்களுக்குப் பிரியமாயிருக்கும் தங்கள் திறனைக் குறைத்துக் கொள்கின்றனர் என்றே அவர் கூறினார்.

வசனம் 4. கிறிஸ்தவ மனைவியர் தங்களின் புறம்பான தோற்றத்தின் அடிப்படையில் மாத்திரம் தங்கள் கணவர்களுக்குப் பிரியமாயிருப்பதைப் பேதுரு விரும்பவில்லை என்பது எதிர்மறையாகும்; அவர்கள் **அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியைச்** செயல்விளக்கப்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பினார் என்பது நேர்மறையாகும். கீழ்ப்படிதல் வேண்டும் என்று வற்புறுத்துவதன் மூலம் கிறிஸ்தவ மனைவியரிடத்தில் அப்போஸ்தலர் தமது வேண்டுகோளைத் தொடங்கினார், ஆனால் கணவர் யாராக இருக்கிறார் மற்றும் அவர் செய்தது என்ன என்பதால் மாத்திரம் சமமான மந்தமான வேறுபாடற்ற கீழ்ப்படிதலை அவர் எதிர்பார்க்கவில்லை என்பது தெளிவு. ஒரு

மனைவி தனது கணவர் மீது கொண்டுள்ள செல்வாக்கு அல்ல ஆனால் அவளது நடக்கையே இங்கு பொருட்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. கணவர் தமது நடத்தையினால் மனைவியை உருவாக்குவது போன்றே, மனைவியானவள் தனது வாழ்வின் நடத்தையினால் தனது கணவர் மீது செல்வாக்குச் செலுத்தி அவரை உருவாக்குகிறாள். அவள் **இருதயத்தில் மறைந்திருக்கிற குணத்தின் அடிப்படையில்** தனது கணவருக்குப் பிரியமாயிருக்கும்போது, தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருவாள். இங்கு அப்போஸ்தலர் பெண்களிடம் இதை உரைக்கையில், இது ஆண்களுக்கும் சம அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆண்களும்கூடத் தங்கள் மனைவியரைத தங்கள் இருதயத்தில் மறைந்திருக்கும் நற்குணத்தினால் பிரியப்படுத்த வேண்டும். தேவனுக்கு - பொன், வெள்ளி, உடை மற்றும் அலங்காரப்பொருட்கள் போன்ற - புறம்பான விஷயங்கள் பிரியமாயிருப்பதில்லை.

மனித இயல்பு பற்றிய நல் எதிர்பார்ப்புள்ள மதிப்பீட்டைப் பேதுரு திகைப்புக்குரிய வகையில் காட்சிப்படுத்தினார். ஒரு கணவர் புறம்பான வகையில் எவ்வித நிலைப்பாடு கொண்டிருந்தாலும், "இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே" அவரது மனைவியின் புறம்பான அலங்கரிப்புக்கு மேலாக அவளது தேவபக்தியுள்ள நடக்கையை மதிப்பிடுகிறது. இந்த உரையானது, மனைவி தனது கணவரின் ஆவிக்குரிய நலன்மீது கொண்டுள்ள பொறுப்பில் ஒரு ஆரோக்கியமற்ற பங்கை அவள்மீது வைப்பதாகக் காணப்படுகிறது. இருப்பினும் சந்தர்ப்பப் பொருளை மறுபடி ஆழ்ந்து சிந்தித்தல் என்பது வாசகரின் கருத்து நோக்கைப் புதுப்பிக்கும். பேதுரு பின்வரும் கேள்விக்குப் பதில் கொடுத்தார்: "ஒரு கிறிஸ்தவ மனைவி தனது கணவரிடத்தில் செல்வாக்குக் கொண்டிருக்கத் தன்னைத் தனது கணவருக்கு எவ்வாறு முன்வைக்க வேண்டும்?" அவர் பின்வரும் கேள்விக்கு பதில் கொடுக்கவில்லை: "சுவிசேஷத்திற்குக் கணவர் எந்தவித செய்கையும் செய்யாதிருக்கும்போது அல்லது சுவிசேஷத்தை அவர் வெறுக்கும்போது, அதற்குக் கணவரா அல்லது மனைவியா, யார் பொறுப்பாளியாக இருக்கிறார்?" சில ஆண்கள் தமது மனைவியின் நடக்கையினால் கிறிஸ்துவின் செயல்விளைவின் மீது மனம் ஈர்க்கப்படும் அளவுக்கு "இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்" கொண்டிராது இருக்கலாம், ஆனால் அவர் அதைக் கொண்டுள்ளது போன்று மனைவி செயல்பட வேண்டியிருக்கும். "இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்" இருந்தாலும் இல்லாதிருந்தாலும், அதற்காக அவள் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

"அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே ... **தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது**" என்று பேதுரு கூறினார். "தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" என்ன என்பது எல்லாக் கிறிஸ்தவ வாழ்விலும் அக்கறைக்குரிய விஷயமாக உள்ளது. ஒருவர் அணியும் பொன் அல்லது நேர்த்தியான உடை பற்றி தேவன் அக்கறை கொள்வதில்லை. "மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" (1 சாமுவேல் 16:7). "அழியாத" என்ற வார்த்தையின் பயன்பாடானது, கிறிஸ்தவ மனைவியின் நடத்தைக்கான உடனடி அக்கறையை நித்திய கருத்துநோக்கினுள் வைக்கிறது. பொன் "அழிந்துபோகிற" தாக உள்ளது (1:7); சாந்தமும்

அமைதலுமுள்ள ஆவியானது "அழியாத" தாக உள்ளது. "அழியாத" இந்த நடக்கையானது "இயேசுகிறிஸ்து வெளிப்படும்" நாள் வரையிலும் நிலைத்திருக்கும் (1:7); பொன் ஆபரணம் அப்படி இராது. "சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி" என்பதே, பெண்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேதுரு அவர்களிடம் வேண்டிக்கேட்டுக் கொண்டதும், அழியாததுமான பண்பு ஆகும்.

ஒவ்வொரு பண்புத்தொகையும் இன்னும் நெருங்கி ஆய்வு செய்யத் தகுதியுள்ளதாக உள்ளது. "சாந்தம்" அதாவது, "gentle" என்று NASB வேதாகமம் மொழிபெயர்த்துள்ள (*praus* என்ற) வார்த்தை, பாக்கியங்கள் பற்றிய இயேசுவின் பட்டியலில் உள்ளது (மத்தேயு 5:5). இது சிலவேளைகளில் "தாழ்மை" (அதாவது "meek") என்று மொழிபெயர்க்கப்படுகிறது. சாந்தமுள்ள ஆவி என்பது பலவீனமான ஆவி போன்று இருப்பதில்லை. கிறிஸ்தவ மனைவி தன் கணவருக்குத் தன்னை, மென்மையான மற்றும் அன்பாதரவு கொண்ட நிலைப்பாட்டுடன் கையளிக்க வேண்டும். இது, கீழ்ப்படிதலில் மனம் நோகாது இருக்கும் வகையிலான நிலைப்பாடாகும். தனது சொந்த வழியை வலியுறுத்திக் கொண்டு, "தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற" விஷயங்களைவிட, சுயநிறைவு பற்றி அதிக அக்கறை கொண்டுள்ள நிலைப்பாடானது, சாந்தமான, தாழ்மையான நிலைப்பாட்டிற்கு எதிரானதாக உள்ளது.

"அமைதல்" ["quiet"] என்று NASB வேதாகமம் தரவழைத்துள்ள (*hēsuchios* என்ற) வார்த்தையானது, 1 தீமோத்தேயு 2:12ம் வசனத்தில் உள்ள பெயர்ச்சொல்லின் பெயர் உரிச்சொல் வடிவமாக உள்ளது: "உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்." "அமைதலாயிருக்க" என்பது நேரடி அர்த்தத்தில் "அமைதலில் இருத்தல்" அல்லது "வாய்பேசாதிருத்தல்" என்று பொருள்படும். இவ்விரு வார்த்தைகளுமே, மனதின் தாழ்மையான, பணிவிணக்கமான வடிவமைப்பைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. பெண்களைப் பொறுத்த வரையில் அவளது கணவரின் சம்மதம் அல்லது ஆசீர்வாதம் இல்லாத நிலையில் கிறிஸ்தவளாகுதல் என்பது கிரேக்க - ரோம சமூகத்தில் மதிப்பிற்குரிய பெண் எடுத்து வைக்கும் தைரியமான அடிவைப்பாக இருக்கும். பணிவிணக்கமும் மதிப்பும் காண்பிக்க மன உணர்வுடன் ஒரு முயற்சியை மேற்கொள்வதன் மூலம் அவள் தனது சுயாதீனம் குற்றப்படுத்தப்படுவதை எதிர்த்து நிற்க வேண்டும் என்று பேதுரு வற்புறுத்தினார். கிறிஸ்தவளாகுதல் என்பது அவளது எதிர்த்து நிற்கும். சுயாதீனமான மனவிருப்பத்தின் விஷயமாக இருக்கவில்லை, ஆனால் அது அவள் தேவனைப் பிரியப்படுத்த விரும்பும் அவளது மனவிருப்பத்தின் விஷயமாகவே இருந்தது. இந்த வசனத்தில் "ஆவி" என்ற வார்த்தை அவளுக்குள்ளாக இருக்கும் அழிவற்ற ஆவியைக் குறிப்பதில்லை, ஆனால் இது அவளுடைய உள்ளான இயல்பை, அவளது நிலைப்பாட்டைக் குறிக்கிறது. (காண்க 1 கொரிந்தியர் 4:21; கலாத்தியர் 6:1 இங்கு "சாந்தமுள்ள ஆவி" என்பது சாந்தமான நிலைப்பாட்டைக் குறிக்கிறது.)

"சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி" தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாக இருப்பது ஏன்? ஏனென்றால், கணவருக்கு, எஜமானருக்கு அல்லது ஒரு காவலருக்குக் கீழ்ப்படிதலுடன் இருக்கும்படி

அழைக்கும் இதே ஆவிதான் தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் இருப்பவர்களுக்கும் தேவையாக உள்ளது. இந்த நிருபத்தில் பிற்பாடு பேதுரு, நீதிமொழிகள் 3:34ஐக் குறிப்பிட்டார்: "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (5:5). அவர், "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்றும் கூடுதலாகக் கூறினார் (5:6; காண்க யாக்கோபு 4:10). மேட்டிமைகுணம் என்பது நாட்டின் அதிகாரத்திற்கு, பணியிடத்தின் அதிகாரத்திற்கு, இல்லத்தின் அதிகாரத்திற்கு மற்றும் மீட்பரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதலை இடர்பாட்டிற்கு உள்ளாக்குகிறது. தாழ்மை மற்றும் பணிவிணக்கம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுதல் என்பது, தேவனுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் அவருடன் சமாதானமாயிருத்தல் ஆகியவற்றிற்கான பாதையாக உள்ளது. ஒருவர் - மனச்சான்றின் விஷயங்கள் உட்படுத்தப்படாத இடத்தில் - தமது சொந்த முடிவு மற்றும் கருத்திற்குக்குப் பணிவிணக்கம் காண்பிக்காத வரையில் கீழ்ப்படிதல் இருக்க இயலாது, ஏனெனில் அவர் இன்னொருவரின் அதிகாரத்தை மதிக்கிறார்.

வசனம் 5. கிறிஸ்தவப் பெண்களிடத்தில் இருக்க வேண்டிய குணம் என்று பேதுரு நாடிய குணமானது, அவர்களின் ஆவிக்குரிய முன்னோர்களிடத்தில் மாதிரியாகக் காணப்பட்ட விஷயம் என்று பேதுரு நினைவூட்டினார். **பூர்வத்தில்** என்பது ஆபிரகாமும் அவரது சந்ததியார்களும் தேவனுடைய மக்களாக இருந்த அந்தக் காலங்களாக இருந்தன (காண்க எபிரெயர் 1:1, 2). சபைக்கும் மக்களுக்குமான தொடர்பும் இஸ்ரவேல் மக்களின் எழுத்தாக்கங்களும் 1 பேதுரு நிருபத்தின் அடிப்படைப் பின்னலிலேயே வேயப்பட்டுள்ளன. வேதாகமத்தில் வரலாறு பதிவுசெய்யப்பட்டுள்ள **பரிசுத்த ஸ்திரீகள்** தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்கையில் தங்களை, சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியினால் அலங்கரித்துக் கொண்டனர். பேதுரு வேண்டுகோள் விடுத்த பெண்களின் பரிசுத்த தன்மை அவர்கள் **தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்ததில்** செயல்விளக்கப்படுத்தப்பட்டது.

பவுலின் நிருபங்களில் விசுவாசம் முக்கியத்துவப் படுத்தப்பட்டிருக்க, "பரிசுத்த ஸ்திரீகள்" "தேவனிடத்தில் விசுவாசமாயிருந்தனர்" என்று பேதுரு கூறுவார் என்று எதிர்பார்த்திருக்கலாம். கர்த்தருடைய மறுவருகையின் எதிர்பார்ப்பு, அப்போஸ்தலரின் சிந்தையில் செதுக்கப்பட்டிருந்ததால், அவர் "நம்பிக்கை" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் என்று கூற அதிக வாய்ப்புள்ளது. "தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுத்திருந்த" அவரது வாசகர்கள் (4:19), போன்றே, "பரிசுத்த ஸ்திரீகளும்" கூட "தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்தனர்." அவர்களின் கீழ்ப்படிதலில் மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் நம்பிக்கையிலும் அவர்கள் பேதுருவின் வாசகர்களுக்கு மாதிரியாக இருந்தனர். அடுத்த வசனத்தில் சாராளைக் குறிப்பாக மறைமுகமாய்க் குறித்தலானது, ஆபிரகாம். ஈசாக்கு மற்றும் யாக்கோபு என்ற முற்பிதாக்களின் மனைவியர்களையே பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று கருத்துத் தெரிவிக்கிறது. முதற்பிதாக்கள் இஸ்ரவேலின் தந்தையர்களாக இருந்திருக்கையில், சாராள், ரெபேக்காள், லேயாள் மற்றும் ராகேல் ஆகியோர் இஸ்ரவேலின் தாய்களாக

இருந்தனர். இந்தப்பரிசுத்த ஸ்திரீகள் **தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்கையில் தேவபக்தியுள்ள நடக்கையினால் தங்களை அலங்கரித்தார்கள்.**

ஒரு பரிசுத்தமான பெண் ஒரு பரிசுத்தமற்ற ஆணைத் திருமணம் செய்துகொண்டுள்ள நிலையின் போதுள்ள காலங்களைப் பற்றிப் பேதுரு கையாளவில்லை. அப்படிப்பட்ட விஷயத்தில் "சாந்தமும் அமைதலுள்ள ஆவியுடன்" கீழ்ப்படிதல் என்பது, அவள் தேவனுக்கு விசுவாசம் நிறைந்த வாழ்வை வாழத் தொடரும்படி அனுமதிக்கும் வரை முறையானதாகவே இருந்தது. கீழ்ப்படிதலைப் பேதுரு இணைத்து வைத்த - குடிமக்களுக்கு, அடிமைக்கு மற்றும் மனைவிக்கு என்ற - இந்த மூன்று பகுதிகளிலும் அவர் நன்கு முறைப்படுத்தப்பட்ட யூகங்களை ஏற்படுத்தினார். பொதுவாக அரசாங்கம், அமைதியான மக்கள் தங்கள் அன்றாட அலுவல்களைச் செய்தல் பற்றி கண்டனம் செய்யவில்லை. பொதுவாக எஜமானர் தமது அடிமை தமது உடமை என்ற காரணத்தைத் தவிர வேறு எதற்காகவும் அந்த அடிமையைத் தவறாகப் பயன்படுத்தியதில்லை. பேதுரு இங்கு உரைத்திருந்த, கணவரும் மனைவியும் கிறிஸ்தவர்களாக இருந்த அல்லது கணவர் கிறிஸ்தவரல்லாதிருந்த குடும்பத்திற்கான விதியானது அந்தக் குடும்பத்திற்கு ஆதரவாகவே இருந்தது. நடபடிகள் 5:28, 29ல் பேதுரு தாம், எருசலேமில் இருந்த அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியக் கூடாதிருந்த வேளையொன்றைக் கண்டறிந்தார். ஒரு அடிமை தனது எஜமானருக்கோ அல்லது ஒரு மனைவி தனது கணவருக்கோ கீழ்ப்படிய வேண்டாத சூழ்நிலைகளைக் கற்பனை செய்தல் கடினமல்ல.

எவரொருவரும், ஒரு குடிமகன், ஒரு வேலைக்காரன் அல்லது ஒரு மனைவி என்ற வகையில் கீழ்ப்படிய இலேசில் மறுத்துவிடக் கூடாது என்று பேதுரு விவாதித்தார். நல்ல, தேவபக்தியுள்ள வாழ்வை வாழ விரும்புகிறவர்களை, அதிகாரத்தின் முறைப்படியான சங்கிலி போன்ற அமைப்பு பொதுவாக ஆதரிக்கிறது. பின்வரும் இரண்டில் ஒரு காரணத்திற்காக ஒருவர் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய மறுக்கலாம்: (1) அவர் செய்யும்படி அவருக்கு மேல் உள்ள அதிகாரம் அவரிடத்தில் கேட்டுக் கொண்டதைச் செய்யக்கூடாதிருக்கும்படி தேவனால் அறிவுறுத்துதல் பெற்றிருக்கலாம். (2) அவர் தாம் என்ன செய்ய விரும்புகிறாரோ, அதைச் செய்யத் தமது சொந்த மனவிருப்பங்களை உறுதிப்படுத்திப் பின்பற்றுதல் தவிர வேறு மேன்மையான காரியங்கள் அவரிடத்தில் இல்லாதிருக்கலாம். அதிகாரத்திற்கான இந்தப் பிந்திய வகையிலான பதில் செயலானது, கிறிஸ்தவ வாழ்வின் பாகமாக இருக்க முடியாது என்று பேதுரு கூறினார்.

வசனம் 6. "பூர்வத்தில்" இருந்த "பரிசுத்த ஸ்திரீகள் தங்களை அலங்கரித்த" வகைக்கு, **சாராள்** என்ற பெண்மணியின் நடத்தை, ஒரு விவரிப்பாக உள்ளது. குறைந்த பட்சம் இந்த விஷயத்திலாவது, சாராளின் நடக்கை கிறிஸ்தவ நடத்தைக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது என்பதால், அவளது நடக்கைக்குப் பேதுருவின் புத்திமதியில் வலிவு கூட்டப்பட்டது. சாராள் தனது கணவருக்குக் கீழ்ப்படிந்து நடந்த விஷயம் ஆதியாகமத்தில் ஒரு குறிப்பிட்ட நிகழ்வைத் தரவழைக்கிறது. ஆபிரகாமின் குடும்பத்தார் மம்ரே என்ற சமவெளியில் கூடாரத்தில் குடியிருந்தபோது, மூன்று மனிதர்கள் அங்கு தோன்றினர். அவர்களுக்கு ஏற்ற உபசரிப்பு அந்த முற்பிதா காண்பித்த பின்பு,

சாராள் விரைவிலேயே ஒரு மகனைப் பெறுவாள் என்று அவர்கள் அவருக்கு வாக்களித்தனர். அவர்கள் கூறியதை மறைந்து இருந்து கேட்டுக்கொண்டிருந்த சாராள் அந்தக் கருத்தைப் பற்றிச் சிரித்தாள். ஆபிரகாம் மற்றும் சாராள் போன்ற முதிர் வயதான தம்பதியர் ஒரு குழந்தையைப் பெற முடியும் என்பது கற்பனைக்குக்கூட எட்டாத விஷயமாக இருந்தது. இந்த சந்தர்ப்பப்பொருளில் தனக்குத்தானே பேசிக்கொண்ட சாராள், ஆபிரகாமை "என் ஆண்டவன்" என்று குறிப்பிட்டாள் (ஆதியாகமம் 18:12). பேதுரு வலியுறுத்த விரும்பிய கருத்தை "என் ஆண்டவன்" என்ற சொற்றொடர் விவரிக்கிறது. சாராள் **ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி** தனது கீழ்ப்படிதலைச் செயல்விளக்கப்படுத்தினாள்.

விசுவாசியான ஒரு மனைவி, அவிசுவாசியான ஒருவருக்குத் திருமணம் செய்விக்கப்பட்ட நிலையில் இருக்கும் சாத்தியக்கூற்றைப் பேதுரு ஆழ்ந்து சிந்தித்திருந்தாலும், அப்படிப்பட்ட கணவரை ஆதாயப்படுத்திக்கொள்ளும் "பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கை" பற்றிய கருத்தை அவர் ஏற்கனவே தெரிவித்திருந்தாலும், அவிசுவாசியான கணவர்களைக் கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்திக் கொள்ளுதல் என்பது இங்கு பேதுருவின் பாடக்கருத்தாக இருக்கவில்லை. கிறிஸ்தவ மனைவிகள் தங்கள் கிறிஸ்தவக் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருத்தல் என்பதே அவரது பாடக்கருத்தாக இருந்தது. கிரேக்க - ரோம இல்லங்களில் ஆண் ஆதிக்கம் என்பது எழுதப்படாத சட்டமாக இருந்தது என்பதைக் கவனிக்கையில், பெரும்பான்மையான விஷயங்களில் மனைவியர் கிறிஸ்தவ விசுவாசத்தைத் தழுவிக் கொள்வதில் தங்கள் கணவர்களைப் பின்பற்றியிருப்பார்கள் என்று யூகிக்க வேண்டும். சாராள் தன் "கணவரை ஆண்டவன் என்று அழைத்து" அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் என்ற உதாரணம், திருமணத் துணைவர்கள் இருவருமே விசுவாசிகளாக இருந்த சாதாரண சூழ்நிலையை எடுத்துரைத்தது. சில கிறிஸ்தவ மனைவியர்கள், ஆண்களும் பெண்களும் இரட்சிப்பில் சமமான நிலையைப் பகிர்ந்து கொள்வதால், பொருளாதாய உறவிலும் சமான நிலை நிலவிற்று என்று யூகித்திருக்கலாம். விஷயம் அதுவல்ல என்று அப்போஸ்தலர் கூறினார். மனைவியர்கள் சாராளின் உதாரணத்தைப் பின்பற்றித் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று அவர் வேண்டிக் கேட்டுக்கொண்டார்.

ஒப்புவித்தலுக்கும் கீழ்ப்படிதலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு மிகச்சிறியதாக இருக்கையில், சாராள் ஆபிரகாமுக்கு "ஒப்புவித்து இருந்தாள்" என்று கூறுவதற்கு மாறாக, சாராள் ஆபிரகாமுக்குக் **கீழ்ப்படிந்திருந்தாள்** என்று பேதுரு கூறவேண்டும் என்பது எதிர்பாராததாக உள்ளது. பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிகின்றனர், அடிமைகள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிகின்றனர், மற்றும் குடிமக்கள் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகின்றனர், ஆனால் மனைவியர்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று சாதாரணமாக புத்திகூறப்படவில்லை. ஒருவேளை அப்போஸ்தலர், தலைபலத்த சில கிறிஸ்தவப் பெண்கள் வலிவார்ந்த கிறிஸ்தவர்கள் இடர்பாடு அடையக்கூடிய வகையில், இல்லத்தில் சுதந்தரம் வேண்டும் என்று வாதிட்டதால், பின்வாசல் வழியாக, "ஒப்புவித்தல்" என்பதற்கு மாறாக "கீழ்ப்படிதல்" என்ற மிகப்பலமான வார்த்தையைத் தவறாக இங்கு போட்டு விட்டாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

யூதர்கள், குடும்ப வழித்தோன்றல் காரணமாக ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் பிள்ளைகளாக இருந்தனர். கிறிஸ்தவர்கள், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்து இருப்பதால், தீர்க்கதரிசிகள் வழியாக ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொண்டதாக உரிமைகோரினர். அவர்கள் விசுவாசத்தினாலே ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் வாரிசுகளாக இருந்தனர். புறஜாதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் முன்னோர் வரிசையை ஆபிரகாமை நோக்கி தடம் காணக் கூடாதிருந்தபடியால், அவர்கள் ஆபிரகாம் மற்றும் சாராள் ஆகியோரின் பெயரைத் தரித்துக்கொள்ளுதல் என்ற உரிமையானது குறைவான உண்மையாக இருக்கவில்லை. யோவான் ஸ்நானன் கூற்று சரியானதாகவே இருந்தது. தேவன் கல்லுகளில் இருந்தும் கூட ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டாக்கக் கூடியவராக இருந்தார் (மத்தேயு 3:9). புறஜாதிக் கிறிஸ்தவ மனைவியர் சாராளைப் போன்று வாழும்போது, அவர்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்து சரியானவற்றைச் செய்யும்போது, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர் என்று அவர்களுக்குப் பேதுரு கூறினார். அவர்கள் சாராளின் பிள்ளைகளாக இருப்பதற்கு நிபந்தனை அம்சம் ஒன்றிருந்தது. **நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.** அவர்கள் சாரளைப் போன்று நடந்து கொண்டால் அவள் பிள்ளைகளாக இருப்பார்கள்.

கிறிஸ்தவ மனைவியர்களுக்குப் பேதுரு தமது புத்திமதியை ஒரு குழப்பமான கூற்றுடன் முடித்தார். அவர்கள் நன்மை செய்து **ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தார்களானால்** அவர்கள் சாராளின் பிள்ளைகளாக இருப்பார்கள் என்று அவர் கூறினார். இந்த இடத்தில் "பயம்" என்ற வார்த்தை வந்தது ஏன்? இன்னமும் சாராள் அப்போஸ்தலருடைய சிந்தையில் இருந்தாளா? அப்படி என்றால், பயப்படாதிருக்கும்படி கிறிஸ்தவ மனைவியருக்குப் போதிக்கும் சாராளின் உதாரணம் பற்றிய விஷயம் என்ன? மற்றும், இந்தக் கிறிஸ்தவ மனைவியரைப் பயமுறுத்தியது என்னவாக இருந்திருக்கும்? சாராளைப் பற்றிய கேள்விக்கு நாம் பதில் அளிக்க முடியும். அவள் தைரியம் மற்றும் அச்சமின்மை ஆகியவற்றிற்கு உதாரணமாகக் காணப்படுவதில்லை என்பதால், இப்போது அவள் சித்தரிப்புக்கு வெளியே இருக்கிறாள் என்று கூறுதல் பாதுகாப்பானது. இன்னமும்கூட, இந்தக் சொற்றொடரைக் கொண்டு பேதுரு அர்த்தப்படுத்தியது என்ன என்பது நிச்சயமற்றதாகவே உள்ளது.

"ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால்" என்பது சாத்தியமான மூன்று அர்த்தங்களைக் கொண்டுள்ளது: (1) ஒருவேளை பேதுரு, கிறிஸ்தவ மனைவியர்கள் தங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட்டு, விஷயங்களைத் தேவனுடைய பராமரிப்பின் கீழ் விட்டுவிட வேண்டும் என்று கூறியிருக்கலாம். இந்த உலகத்தோடு மட்டுப்படுத்தப்படக் கூடியவையாக உள்ள, கவலையும் நிச்சமற்ற தன்மையும் தரும் விஷயங்களைப் பற்றிப் பயப்பட வேண்டாம். நம்பிக்கை மற்றும் நம்பிக்கை வைத்தல் ஆகியவற்றைப் பற்றிய நேர்மறையான கூற்று ஒன்றை அளித்தல் என்பது வழக்கமாக திடீரென்று தோன்றும் வழியாக இருக்கையில், அதுவே பேதுரு கூறியதாக இருந்தது. (2) ஒருவேளை இது, அவிசுவாசிகளான கணவர்களிடம் இருந்து கிறிஸ்தவ மனைவிகள் எதிர்பார்க்கக்கூடிய எதி

ர்ப்புப் பற்றிய தெளிவற்ற குறிப்பாக இருக்கலாம். பேதுருவின் நிருபத்தைப் பெற்றுக்கொண்டவர்களில் பெருமளவு எண்ணிக்கையில் இருந்தகிறிஸ்தவ பெண்கள், அவிசுவாசிகளான கணவர்களைக் கொண்டிருந்தனர் என்ற கருத்து எதுவும் இவ்வசனப்பகுதியில் இல்லை. சில வசனப்பகுதிகள் இதை நிச்சயமாக்கியுள்ளன. இருப்பினும் சாராள் ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்து இருந்தாள் என்ற உதாரணத்தைப் பேதுரு பயன்படுத்தியபோது, விசுவாசிகளாக இருந்த கணவர்களுக்குக் கிறிஸ்தவ மனைவிகள் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கொண்டதையே அது சுட்டிக்காண்பித்தது. (3) பேதுருவின் வாசகர்கள் எல்லாருமே துன்புற்றுக் கொண்டிருந்தனர் என்பது இந்த நிருபம் முழுவதிலும் தெளிவாகத் தெரிகிறது. கிறிஸ்தவ மனைவியர் எல்லா விசுவாசிகளுடனும் தங்களுக்குள்ளதைப் பங்கிட்டுக் கொண்ட காரணத்தினால், எல்லா விசுவாசிகளையும் பயப்படுத்திய எதிர்ப்பு மற்றும் சோதனைகள் ஆகியவற்றிற்குப் பயப்படத் தேவையில்லை என்று பேதுரு அர்த்தப்படுத்தி இருக்கலாம். தேவன் எல்லாவற்றையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருந்தார். அவர், "அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து" (3:14); "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" (4:7); "இவ்வுலகத்தின் பாடுகள் உங்களை அமிழ்ந்துபோகப் பண்ண அனுமதிக்காதீர்கள்" என்று கூறினார்.

கணவர்களால் மனைவியர் கனப்படுத்தப்படுதல் *(3:7)*

[7]அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.

கணவர்களுக்குப் புத்திமதியானது மனைவியருக்குக் கூறப்பட்டதைக் காட்டிலும் அதிகம் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது, ஆனால் இந்த சில வசனங்களில் மாபெரும் பொருள் கையாளப்பட்டுள்ளது. குடும்பத்தில் தலைமைத்துவம் என்பது அதனுடன் பொறுப்பையும் கொண்டுள்ளது. கணவர் குடும்பத்தில் சர்வாதிகாரியாக இருக்க அனுமதி எதுவும் அவருக்குத் தரப்படவில்லை. அவர் தமது மனைவி கூறுவதைக் கவனிக்கவும், அவளைக் கனப்படுத்தவும் மதிக்கவும் வேண்டும்.

வசனம் 7. கீழ்ப்படிதலுக்கான முந்திய இரண்டு புத்திமதிகளும், அரசாங்கங்களுக்கும் எஜமானர்களுக்கும் இணையான பொறுப்பைக் கொண்டிருப்பதில்லை. கிறிஸ்தவ மனைவிகள் கீழ்ப்படிய வேண்டும் என்ற ஒன்று மாத்திரமே, கிறிஸ்தவ **கணவர்கள்** தங்கள் **மனைவியரிடத்தில்** அக்கறை காண்பித்து அவர்களை மதிக்க வேண்டும் என்ற கட்டளையினால் சமானப்படுத்தப்படுதலை இணைப்பாகக் கொண்டுள்ளது. பழங்கால சமூகத்தைக் கிறிஸ்துவின் போதனைகள் எதிர்கொண்ட போது, அவைகள் பெண்களின் நிலையைக் கணிசமான அளவுக்கு உயர்த்தின.

ஆண்கள் பெண்களைக் கண்ணோக்கிய கீழ்நோக்கிய வகை பற்றி செயல்விளக்கப்படுத்தும் பல உதாரணங்கள் பழங்கால இலக்கியங்களில் இருந்து அதிகமாகத் தரப்படமுடியும். உதாரணமாக, யூதவரலாற்றாளரான யோசிப்பஸ் அவர்களால் உரைக்கப்பட்ட கூற்று ஒன்று, அவரது ரோம வாசகர்களுக்கு யூதப்பிரமாணம் பற்றிய தகவலை விவரிக்கிறது. இரண்டு அல்லது மூன்று சாட்சிகளினால் ஒரு செயலுக்கான சாட்சியம் நிலைநாட்டப்படலாம் என்று அவர் கூறினார், பின்பு அவர் "ஆனால் பெண்பாலின் சிறுமைத்தனம் மற்றும் முனைப்பு ஆகியவற்றின் நிமித்தம், பெண்களின் சாட்சியம் அனுமதிக்கப்படலாகாது" என்று அவர் கூடுதலாகக் கூறினார்.[4] இன்னொரு இடத்தில் அவர் "எல்லா விஷயங்களிலும் ஒரு பெண் தனது கணவரைவிடத் தாழ்ந்தவளாக இருக்கிறாள்"[5] என்ற கூற்றிற்கு வேதவசனத்தைக் காரணம் கற்பித்துக் கூறினார், ஆனால் வேதவசனம் இப்படிப்பட்ட எதையும் கூறுவதில்லை. எந்த மதிப்பீட்டின்படியும், இப்படிப்பட்ட கூற்றுக்களில் பெண்ணுக்குச் சிறிதளவு மதிப்பே காண்பிக்கப்பட்டது. இதற்கு நேர்மாறாக, கணவர்கள் தங்கள் மனைவிகளும் **அவர்களோடே நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யவேண்டும்** என்று அறிவுறுத்தினார்.

மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது பாடப்பொருளாக இருந்துள்ளதால், **அந்தப்படியே** என்பது, மனைவி கணவருக்குக் கீழ்ப்படிகிறவாறே கணவர் மனைவிக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கலாம், ஆனால் அது இங்கு அர்த்தமல்ல. *Homoios* என்ற கிரேக்க வார்த்தை இங்கு "மேலும்" அல்லது "அத்துடன் கூடுதலாக" என்று அர்த்தப்படுகிறது. மனைவி தனது பகுதியில் தனது கணவருக்குக் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும், மற்றும் கணவர் தமது பகுதியில் அவளுடன் **விவேகத்தோடு வாழ வேண்டும்.** "சக சுதந்தரவாளி என்ற வகையில் அவளுக்கு மதிப்பளித்தல்" என்ற அளவிற்கு அவர் அதைச் செய்கிறார். இல்லத்தில் கணவர்களும் மனைவியர்களும் ஒருவரையொருவர் கண்ணியத்துடனும் இரக்கத்துடனும் நடத்த வேண்டும் என்ற கருத்தை அப்போஸ்தலர் இங்கு ஏற்படுத்தினார்.

கிறிஸ்தவக் கணவர்களும் மனைவியர்களும் ஒரே மீட்பையும் ஒரே நம்பிக்கையையும் பகிர்ந்து கொள்கின்றனர். இல்லத்து வட்டாரத்தில் மனைவியர்கள் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும் என்பது, அவர்கள் தேவனுக்கு முன்பாக [தங்கள் கணவர்களுக்கு] சமமாக இருக்கின்றனர் என்பதைத் தவிர வேறு எந்தக் கருத்தையும் தெரிவிப்பதில்லை. **மனைவியானவள் பெலவீனபாண்டமாயிருக்கிறபடியினால்**[6] என்று பேதுரு கணவருக்குக் கூறியபோது,தெளிவாகத் தெரியும் பின்வரும் விஷயத்தை அவர் உரைத்தார்: சாதாரணமாக ஒரு பெண், ஆணைப்போன்று அவ்வளவு பலசாலியாக இருப்பதில்லை. கணவர் தனது மனைவியின் மீது அதிகாரம் செலுத்த வேண்டும் என்று நினைத்தால், அவர் அவ்வகையான நபராக இருந்தால், அவ்வாறு அவர் செய்யக்கூடும். அவர் உடல்ரீதியாகத் துன்புறுத்துபவராக இருக்கக் கூடும். சாராம்சத்தில் பேதுரு, "உங்கள் மனைவியைத் துன்புறுத்த உங்களுக்குப் பலம் உண்டு, ஆனால் அப்படிப்பட்ட

விஷயம் கிறிஸ்தவ நடத்தையின் எல்லைகளுக்கு முற்றிலும் புறம்பே உள்ளது" என்றே கூறினார். கணவர் தமது மனைவியுடன் "விவேகத்தோடு" - அதாவது அறிவின்படி, மதிப்புக் காண்பித்து - வாழும்போது அப்படிப்பட்ட செயல்கள் நடக்காது. ஒழுக்கரீதியாகவோ அல்லது ஆவிக்குரிய கருத்திலோ பெண் "பலவீனமாக" இருப்பதில்லை. 3:1 வசனம் பெண்ணைப் பற்றி ஏதேனும் கருத்துத் தெரிவிக்கும் என்றால் அது, குறைந்த பட்சம் பல சூழ்நிலைகளில் பெண்ணானவள் தனது கணவரைக் காட்டிலும் ஆவிக்குரிய வகையில் அதிகம் பலசாலியாகவே இருக்கிறாள் என்பதே ஆகும். அவள் தனது கணவரைத் தேவனிடத்தில் நெருக்கமாக நடத்தும் சந்தர்ப்பத்தைக் கொண்டிருக்கலாம்.

கிறிஸ்தவக் கணவர் மனைவிக்கு "செய்யவேண்டிய கனத்தைச் செய்ய வேண்டியது" ஏன் என்பதற்கு, அப்போஸ்தலர் இரண்டு காரணங்களைக் கொடுத்தார்: (1) ஏனென்றால் மனைவியர்கள் தங்கள் "கணவர்களுடன் சேர்ந்து நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களா" க இருக்கின்றனர் மற்றும் (2) [கணவரின்] **ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு** இதைச் செய்ய வேண்டும். 1:4ல் அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு, பரலோகத்தில் அழியாத சுதந்தரம் வைக்கப்பட்டுள்ளதை நினைவூட்டினார். மனைவியை "சக சுதந்தரவாளி" என்று அவர் அழைத்தபோது, தேவனுடனான ஒருவரின் உறவுக்கு, பரலோக சுதந்தரம் பற்றிய ஒருவரின் நம்பிக்கைக்கு, அவரது பால்தன்மை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை என்றே கூறினார். இருப்பினும் இன்னமும் கிறிஸ்தவ கணவர் தமது மனைவியைத் தவறாக நடத்துதலைத் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட நிலையிலேயே கொண்டு இருந்தார், கணவர் தமது மனைவியைத் தவறாக நடத்தினால், அது அவர்மீது தேவன் பிரியமற்றவராக இருக்கச் செய்துவிடும் மற்றும் அவரது ஜெபங்களுக்குத் தடை ஏற்படும். கணவர் தமது மனைவியின் கீழ்ப்படிதலை, அவளைத் தவறாக நடத்துவதற்கு அனுகூலமான விஷயமாக எடுத்துக்கொள்ளும்போது, அவர் தேவனுடன் தொடர்புகொள்ளுதல் கடினமாகிறது, அது சுமையானதாகக் கூட ஆகிவிடுகிறது.

இவ்வசனப்பகுதிக்கும் 1 கொரிந்தியர் 7:5க்கும் உறவு ஒன்று உள்ளது: "உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்." இல்லத்தில் வாழ்வும் தேவனுடன் வாழ்வும் நேர்த்தியாக ஒன்றில் ஒன்றாகப் பின்னப்பட்டுள்ளது. ஒரு ஆண் தமது மனைவியை, கனப்படுத்துதலுக்குக் குறைவாக எப்படி நடத்தினாலும், அவர் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்கிறார். இல்லத்தில் இசைவிணக்கம் இல்லாதபோது, மார்க்க நடவடிக்கைகளில் மிகவும் அத்தியாவசியமான ஜெபம் தடைப்படுகிறது. மனைவியைத் தவறாக நடத்துதல் என்பது ஆணுக்கும் தேவனுக்கும் இடையிலான தொடர்புக்கயிறு அறுந்துபோகக் காரணமாகிறது. மனைவியைத் தவறாக நடத்தும் கணவர் தமது செயல்களுக்குக் கணக்கு ஒப்புவிக்கும்படி தேவன் கேட்டுக்கொள்வார் என்று கூறுதல் அநாவசியமான பலமுள்ள கூற்று அல்ல.

இல்லத்தில் வாழ்வு என்பது இன்னொரு வழியில் ஒருவர் தேவனுடன்

கொண்டுள்ள உறவில் பிரச்சனைகளுக்குக் காரணமாகலாம், இது 1 கொரிந்தியர் 7ல் பவுலினால் உரைக்கப்பட்டுள்ளது. கணவரோ அல்லது மனைவியோ தமது வாழ்வில், தமது துணையுடன் நெருக்கமான உடல், உணர்வு மற்றும் சமூக உறவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். அது நடக்கிறது என்று தம்பதிகள் நம்புவார்கள் என்றால், அவ்விருவரும் தேவனுடன் தொடர்பு கொள்வதற்காக, தங்களை ஜெபத்தில் ஒப்புக்கொடுப்பதற்காக, சற்றுக்காலம் ஒருவரிடம் இருந்து ஒருவர் பிரிந்திருக்கும்படி பரஸ்பரம் ஒப்புக்கொண்டு அவ்வாறு இருக்கலாம் என்று பவுல் கூறினார். இங்கு 1 பேதுரு 3:7 மற்றும் 1 கொரிந்தியர் 7 ஆகிய இரு விஷயங்களிலுமே, ஆவிக்குரிய வாழ்வும் இல்லத்து வாழ்வும் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்டுள்ளது தெளிவாகிறது.

தேவன் ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்நாள் முழுவதற்குமான திருமணபந்தத்தை ஏற்படுத்துதல் என்பதே தேவனுடைய சித்தமாகும் என்று விவாதிக்கப் பேதுரு நேரம் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. எல்லாத் தரப்புகளின் பகுதியிலும் ஒப்புமை இருக்கும்போது அதைப் பற்றி விவாதிப்பது அவசியமில்லை. ஒருதாரத் திருமணம் என்பது வேதாகமத்தின்படி திருமணத்திற்கான தர அளவையாக உள்ளது. பாலுறவு என்பது தேவனிடத்தில் இருந்து வந்த கொடையாகும். மற்ற கொடைகளைப் போன்றே இதுவும் மகிழ்வுடன் அனுபவிக்கப்படவேண்டும். அதே வேளையில், பாலுறவு என்பது மன இச்சைகளைப் பூர்த்தி செய்தல் என்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. ஆண்களும் பெண்களும் தங்கள் பாலுறவு விருப்பங்களை, திருமணத்தின் உறுதிப்பாட்டுப் பிணைப்புகள் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் வெளிப்படுத்தும் போது, அங்கு அதிக வலுமிக்க இன்பநுகர்ச்சி என்று எதுவும் இருப்பதில்லை. பாலுறவு என்பது வெறும் கேளிக்கை ஆகிறபோது, விரைவிலேயே அது கேளிக்கையாகக் கூட இராது போகிறது. ஒரு நபர் இன்னொருவரைத் தமது வரம்பு கடந்த பாலுறவு இச்சையைத் திருப்திப்படுத்தப் பயன்படுத்துகிறபோது, பிணைப்பு, அன்பு மற்றும் உறுதிப்பாடு/ஒப்புவித்தல் எதுவும் இல்லாதபோது, சிறுமைப்படுத்துதலும் வெறுப்புணர்வுமே விளைவாக உள்ளது. ஒருவேளை தேவன் கொடுத்த வேறு எந்தக் கொடையிலும் பாலுறவில் உள்ளது போன்று நன்மைக்கான மாபெரும் வலிவு இல்லை என்றே கூறலாம். ஒருவேளை இந்த உறவில் நெருக்கம் மற்றும் உறுதிப்பாடு/ஒப்புவித்தல் விலக்கப்பட்டிருக்கும்போது, பொல்லாங்கு செய்தலுக்கு இதைக்காட்டிலும் அதிக வலிவான கொடை வேறு எதுவும் இல்லை என்றும் கூறலாம்.

ஆதியிலே மனிதன் தனிமையாக இருந்தபோது, அவனுக்காக, அவனது துணையாளியாக இருக்கத் தகுதியானவளாகப் பெண்ணைத் தேவன் உண்டாக்கினார். தேவன் பெண்ணைப் படைத்த போது, மனிதனின் பாலுறவு திருப்தி என்பதே அவரது (தேவனுடைய) அடிப்படை அக்கறையாக இருந்திருக்கும் என்றால், அவர் பெண்கள் நிறைந்த ஒரு அந்தப்புறத்தைப் படைத்திருப்பார். ஏதேன் தோட்டத்தில் பலதாரத் திருமணம் இல்லாதிருந்தது. தோட்டத்தில் முதல் தம்பதியர் இருக்கத் தொடங்கினர். அங்கு தேவன், மனித குடும்பத்தை எந்நாளும் வழிநடத்தச் சட்டத்தை முன் அமைத்து வைத்தார்: “இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன்

மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதியாகமம் 2:24).

நீதிக்காகத் துன்புறுவோர்கள் மீது ஆசீர்வாதம் (3:8-17)

தேவனுடைய ஆசீர்வாதங்களினால் வேண்டப்படும் பரிசுத்தமான வாழ்வு (3:8-12)

[8]மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்க முள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, [9]தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். [10]ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, [11]பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன். [12]கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள்வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது.

__வசனம் 8.__ இவ்வசனத்தில் பேதுரு, கீழ்ப்படிதல் பற்றிக் கூறப்பட்ட யாவற்றையும் தொகுத்துக் கூற விரும்புகிறார். இவ்வார்த்தைகள், அடிமைகள் அல்லது எஜமானர்கள், மனைவியர் அல்லது கணவர்கள், காவலர்கள் அல்லது தனிக்குடிமக்கள் என்று யாராக இருந்தாலும் எல்லா விசுவாசிகளுக்குமாக உரைக்கப்பட்டன. இதற்கு முந்திய வசனங்களில் பேதுரு, அவிசுவாசிகளிடத்தில் விசுவாசிகளின் நடக்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்று உரைத்திருந்தார். ஒருவர் தமது சக மனிதர்களிடம் நடந்துகொள்ளும் வகையில் இருந்துதான் தேவனுடன் சரியான உறவுமுறை வளருகிறது, ஆனால் கிறிஸ்தவருக்கும் கிறிஸ்தவருக்குமான பிணைப்பு விசேஷித்த கவனத்தைக் கேட்கிறது (காண்க கலாத்தியர் 6:10). கொலோசெயர் 3:12-14ல் பவுல், கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவருடன் நடந்து கொள்ளும் வகைபற்றி அவர்களை வழிநடத்தும் நெறிமுறைகள் பற்றிய மிக விரிவான பட்டியல் ஒன்றை அளித்திருந்தார். பேதுரு நமது பங்கிற்கு ஏற்கெனவே மக்கள் ஒருவர் மற்றவருடன் நடந்து கொள்ளும் வகை பற்றி அவர்களை வழிநடத்தும் மறுவுருவாக்கம் செய்யாத நடக்கை மாதிரிகளின் பட்டியல் ஒன்றை அளித்திருந்தார்: துர்க்குணம், கபடம், வஞ்சகங்கள், பொறாமைகள், புறங்கூறுதல் (2:1). விசுவாசிகள் அடங்கிய சபையாகிற சரீரத்திற்குள் நடந்துகொள்ளும் நடக்கையானது மிகவும் வேறுபட்டதாக இருக்க வேண்டியுள்ளது. பேதுரு பயன்படுத்தும் ஒவ்வொரு வார்த்தையும் உறுதிப்பாட்டை/அர்ப்பணிப்பை வேண்டுகிறது.

இரட்சிக்கப்பட்டவர்களின் சமூகத்தில் கீழ்ப்படிதல் உள்ள விசுவாசிகள் ஒன்றுகூடி வாழ்வதில், அவர்கள் **ஒருமனப்பட்டவர்களாக** இருக்க வேண்டும். அவர்கள் ஒரே சிந்தை கொண்டிருக்க வேண்டும். "ஒரே சிந்தையுள்ளவர்களாக இருத்தல்" என்று நேரடியாக அர்த்தப்படும் *homophron* என்ற கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாடு முழுவதிலும் இந்த ஒரே இடத்தில்தான் காணப்படுகிறது. விசுவாசிகளின் மத்தியில் ஐக்கியம் என்பது புதிய ஏற்பாட்டில் ஒருபோதும் முடியாத ஆய்வுக்கருத்தாக உள்ளது. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சபை நடத்துனராக இருந்த இக்னேஷியஸ் என்பவர் தமது வாசகர்கள், "யாழ் என்ற இசைக்கருவியானது எவ்வாறு கம்பிகளுடன் ஒத்திசைவு கொண்டுள்ளதோ, அவ்வாறே அவர்கள் கட்டளைகளுடன் ஒத்திசைவு கொண்டு" இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியதன் மூலம் இந்த வேண்டுகோளை மாதிரிப்படுத்தினார்.[7] கிறிஸ்தவர்கள் "ஒருமனப்பட்டவர்களாக" இருக்க வேண்டும் என்பதற்கான பேதுருவின் அழைப்பானது, பொதுவான நிலைப்பாட்டில் உள்ளதாக, சபையின் மகிழ்வை அனுபவித்தல் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றைக் களவு செய்யும் சிறு சிறு சில்லறைச் சண்டைகளின் வகைகளுக்குத் தங்கள் முதுகைத் திருப்பிக் காண்பித்தல் ஆகியவற்றிற்கான வேண்டுகோளாக இருந்தது. சபை எதிர்கொண்ட ஒவ்வொரு பிரச்சனையையும் ஒரேமாதிரியாக நினைக்கும்படிக்கு விசுவாசிகளுக்கான அழைப்பாக இது இருந்திருக்கக்கூடும் என்பது அரிது. மாறாக இது மதித்தலுக்கான புத்திமதியாகவும், அறிக்கையிடுதலிலும் கிறிஸ்தவ வாழ்வை நடைமுறைப்படுத்துதலிலும் ஒருவரை ஒருவர் ஆதரித்தல் என்ற முடிவைக் கொண்டுவருதலுக்குமான புத்திமதியாகவும் இருந்தது.

இரக்கமுள்ளவர்கள் என்பதற்கான ஆங்கில வார்த்தை *sumpathes* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது. பேதுரு தமது வாசகர்கள் ஒருமனப்பட்டவர்களாக இருக்கும்படி மாத்திரமல்ல, ஆனால் அவர்கள் இருதய அளவில் ஒரே வகையான உணர்வுப்பூர்வப் பிணைப்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் விரும்பினார். நமது பிரதான ஆசாரியராகிய இயேசு, மனிதரின் பலவீனங்களைக் குறித்துப் பரிதபித்தார் என்று எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் கூறினார் (4:15). பரிதபித்தல் என்பது அங்கீகாரத்திற்கான மறைமுகப்பொருள் எதையும் கொண்டிருப்பதில்லை. ஒருவர், இன்னொருவரின் நடத்தையானது அவரையும் கர்த்தருடைய மக்களின் சபையையும் கனவீனப்படுத்துகிறது என்று நம்பி இணங்கும் அதே வேளையில், அவருடைய பலவீனங்களுக்காகவும் போராட்டங்களுக்காகவும் அவர் மீது பரிதபிக்கலாம். முந்திய வார்த்தைகளைப் போன்றே இந்த வார்த்தையும், அதன் பெயர்ச்சொல் வடிவத்தில் புதிய ஏற்பாட்டில் இந்த ஒரே இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது.

சகோதர என்று NASB வேதாகமம் மொழிபெயர்த்துள்ள (*philadelphos* என்ற) வார்த்தையானது, இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிடுபவர்களைப் பண்புப்படுத்தும், "சகோதர அன்பு" அல்லது "சகோதரப் பரிவு" என்ற பண்பைக் கொண்டிருக்கும்படி அழைக்கிறது. இதேபோன்ற வார்த்தையைப் பேதுரு 1:22ல் பயன்படுத்தினார் என்றாலும், இந்த வடிவத்தில் இவ்வார்த்தை, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது. இந்தப்

பெயர் உரிச்சொல் இதற்கு முந்திய வார்த்தையை முன்னோக்கி எடுத்துச் சென்று வலுப்படுத்துகிறது. விசுவாசிகள் ஒருவர் மற்றவரின் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளுதல் மட்டுமின்றி, அவர்கள் தங்கள் வாழ்வு, நம்பிக்கைகள் மற்றும் நல்வாய்ப்புகள் ஆகியவை ஒன்றாகக் கூட்டிக் கட்டப்பட்டுள்ள தங்கள் சகோதர சகோதரிகளின் நல்வாழ்வையும் நாட வேண்டும். கிறிஸ்தவர்கள் ஒரு குடும்பமாக உள்ளனர்.

பழங்காலத்து மக்கள் அடிக்கடி இருதயத்தையல்ல ஆனால் தங்கள் வயிற்றையே உணர்வுகளின் மையமாக நினைத்தனர். அப்போஸ்தலர் பயன்படுத்திய அடுத்த பெயர் உரிச்சொல்லானது, விசுவாசிகள் ஒருவர் மற்றவரிடத்தில் “ஆரோக்கியமான குடல்களை” *(eusplanchnos)* கொண்டு இருக்கும்படி வேண்டிக்கொண்டது. NASB வேதாகமத்தில் **kindhearted** என்றுள்ளது, [தமிழ் வேதாகமத்தில் இது மனஉருக்கம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] இவ்வார்த்தை பழங்கால மருத்துவ இலக்கியங்களில் ஒரு நபர் ஆரோக்கியமான குடல்களைக் கொண்டிருத்தலை நேரடியாகக் குறித்தாலும், இவ்விடத்தில் இது ஒரு நல்ல மொழிபெயர்ப்பாகவே உள்ளது. புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை இவ்விடத்திலும் எபேசியர் 4:32லும் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது, இருப்பினும் “இரக்கம்” அல்லது “இரக்கத்தன்மை” என்று அர்த்தப்படும் மற்ற வார்த்தைகள் சாதாரணமாக உள்ளன. பேதுரு தொடர்ந்து, தமது வாசகர்களின் ஆத்துமாக்களை ஆராய்ந்து பார்த்து, ஆண்களையும் பெண்களையும் ஒன்றுகூட்டும் மிக ஆழமான உணர்வுப்பூர்வமான பிணைப்புகளை விளைவிக்குமாறு அவர்களை அழைத்தார்.

இந்தப் பெயர் உரிச்சொற்களின் பட்டியலில் கடைசியாக உள்ள *tapeinophron* என்ற வார்த்தை விசேஷித்த வகையில் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. NASB வேதாகமம் இதை **humble in spirit** என்று மொழிபெயர்க்கிறது. தமிழ் வேதாகமத்தில் இது இணக்கமுள்ளவர்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உலகப்பிரகாரமான கிரேக்க - ரோம உலகமானது சிந்தையில் தாழ்மை என்ற கருத்தின் மீது மதிப்புச் செலுத்தவில்லை. அந்த நாளில் நன்கு வசதியாகப் பிறந்தவர்கள் வெளிப்படையான உரிமைகோருதலைச் செயல்முனைப்புடன் நாடினர். அவர்கள் தங்கள் சாதனைகளை பிரசித்தப்படுத்துதல் பற்றிக் கூச்சப்படவில்லை.[8] மேற்கத்தியக் கலாச்சாரத்தில், ஒருவேளை ஒருவர் மேட்டிமை பாராட்டுதல் பற்றி மிகவும் மறைவாக இருப்பதை ஒருவர் அறியலாம். நாம் மிகவும் தாழ்மையாக இருக்கக் கற்றிருக்கிறோமா என்பது சந்தேகமாக உள்ளது. தாழ்மை என்பது, ஒருவர் சரியான விஷயத்தை, அது தமக்குக் கொண்டுவருதலை உரிமைகோருதலுக்காக இன்றி, அதன் உள்ளான மதிப்புக்காக மாத்திரம் செய்தலாக உள்ளது. சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை நோக்கி ஒருவரின் நிலைப்பாடு திசைதிருப்பப்பட வேறுவார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால், இது உள்ளான கண்ணோக்குக்கு அழைக்கிறது. கிறிஸ்தவர் தமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளும் மற்றவர்களின் நலன் நோக்கிச் செயல்படுபவராக இருக்க வேண்டும்; அவர் நற்சான்று அல்லது உரிமை கோருதல் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளுதல் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

வசனம் 9. அப்போஸ்தலரின் சிந்தனையானது, அவிசுவாசிகளுடன் கிறிஸ்தவர்கள் தொடர்புகொள்ளும் வகையின் திசை நோக்கித் திரும்பத் தொடங்கிற்று. சில வசனங்களுக்குப் பின்பு (3:13) அவர், அடக்கியாளும் உலகத்தை நோக்கி விசுவாசிகளின் நிலைப்பாட்டைப் பற்றிக் குறிப்பிடுவார். முந்திய வசனத்தில் இணைக்கப்பட்ட பண்புகள் யாவும் **தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும்** சரிக்கட்டாமல் என்பதுடன் முழுமையற்றவையாக இருந்தன, ஆனால் விசுவாசிகளிடத்திலும் அவிசுவாசிகளிடத்திலும், கிறிஸ்தவர் இப்படிப்பட்ட நடக்கையைக் கொண்டிருத்தலை மறுதலிக்க வேண்டும். அதே வகையாக பதில் செயல் செய்தல் என்பது கிறிஸ்தவரின் விளம்பரப்பகுதியாக ஒருக்காலும் இருக்க இயலாது. ஏற்கனவே பேதுரு, இயேசுவை முன்மாதிரியாகச் சுட்டிக்காண்பித்திருந்தார்: "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (2:23). ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்" என்று புத்திமதி கூறியிருந்தார் (ரோமர் 12:14). மேலும் அவர், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்" என்றும் கூடுதலாகக் கூறியிருந்தார் (ரோமர் 12:17). ரோமருக்கு எழுதிய நிருபம் மற்றும் 1 பேதுரு நிருபம் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள இணைகருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

பழைய ஏற்பாடு, பழிவாங்குதலைத் தேவனுடைய கவனிப்பில் நியமிக்கிறது என்பது உண்மையே (உபாகமம் 32:35; நீதிமொழிகள் 20:22), ஆனால் அது பழிவாங்குதலின் சட்டமாகிய *lex talionis*, என்பதைக் கொண்டு பக்குவமாக உறுதிப்படுத்தப்படுகிறது: "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்க வேண்டும்" (யாத்திராகமம் 21:24, 25). சவக்கடலில் கிடைக்கப்பெற்ற சுருள்களில் ஒன்று, "ஒளியின் மக்கள் எல்லாரையும் நேசியுங்கள் ... மற்றும் இருளின் மக்கள் எல்லாரையும் வெறுத்து விடுங்கள்"[9] என்று (கும்ரான்) சமூக மக்களை ஊக்குவித்ததை ஏர்னெஸ்ட் பெஸ்ட் அவர்கள் சுட்டிக்காண்பித்தார். பழிவாங்குதலை ஒழுங்கு நடத்தையின் குறி என்று ஏற்றுக்கொள்ளாமல் அதை இயேசு புறக்கணித்து இருந்தார் (மத்தேயு 5:39). பேதுருவும் இதையே செய்தார். புறங்கூறுதலும் அவமதித்தலும், சபையை அடக்கிப் பணியச் செய்வதற்கான முயற்சியில் புறதெய்வ வணக்கத்தார் பயன்படுத்திய குற்றப்படுத்தும் ஆயுதங்களாக இருந்தன. மிகவும் கொடுமையான புறங்கூறுதல் பரப்பப்பட்டது. கர்த்தருடைய நாளில் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடியபோது, அவர்கள் இரத்தத்தைக் குடித்தனர் என்ற கதை பரப்பப்பட்டது. அவர்கள் ஒரு குழந்தையைப் பலி செலுத்தி மனித மாம்சம் உண்பவர்களாக ஆயினர் என்று சிலர் கூறினர், கிறிஸ்தவர்கள் இதற்கு இதே வகையில் பதில் செயல் செய்திருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட எதிர்த்தாக்குதல் எதையும் அவர்கள் செய்யக்கூடாது என்று பேதுரு கூறினார்.

கிறிஸ்தவர்கள், தீமைக்குத் தீமை செய்தல் என்ற பதில் செயலைத்

தவிர்த்தல் மட்டுமின்றி, அவர்கள் தீமைக்கு நன்மை செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். சபிக்கப்பட்டு அவமதிக்கப்படும்போது, கிறிஸ்துவின் ஆவியைத் தமதாக்கிக் கொண்டுள்ள ஒருவர் அதற்குப் **பதிலாக ஆசீர்வதிக்க வேண்டும்.** இதேபோன்றே "தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திரும்பிக்கொடு" என்று இயேசுவும் உரைத்தார் (மத்தேயு 5:39). குற்றம் இழைத்தவர் மீது ஆசீர்வாதத்தை உரைத்தல் என்பது எவ்வித மாறுபாடும் காண்பிக்காமல் இருத்தலைக் காட்டிலும் அதிகமானதை அர்த்தப்படுத்துகிறது. அது, அந்த நபரின் நலத்தை விரும்பி மேம்படுத்துதலை அர்த்தப்படுத்துகிறது. அது, அவர் ஆறுதலாக வாழும்படியான விஷயங்களான - நீண்ட ஆயுளும், நல்ல உடல் நலமும் வளமையும் பெறும்படி வாழ்த்துதலை அர்த்தப்படுத்துகிறது. இதை எதிர்மறையாக உரைத்த பேதுரு, கிறிஸ்துவைப் போன்று வாழுதலை ஊட்டும் விஷயங்களுடன் கசப்பான விஷயங்கள் எதுவும் தங்கிவிடக்கூடாது என்று பேதுரு மறைமுகமாக உணர்த்தினார். "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" என்று பவுல் எழுதினார் (ரோமர் 12:21).

அவமதிக்கப்படும்போது "ஆசீர்வாதத்தை" பதிலாகத் தருதல், தீமையை நன்மையினால் வெல்லுதல் என்பது, கிறிஸ்தவ நடைமுறையின் விளம்பில் நிற்பதில்லை. அது மையமாக உள்ளது. அப்போஸ்தலர் தமது வாசர்களுக்கு **நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்** என்று நினைவூட்டினார். "இயேசுகிறிஸ்து வெளிப்படும்" நிகழ்வை நோக்கி ஒரு பார்வை கொண்டவராகப் பேதுரு, விசுவாசிகளுக்கு அவர்களின் சுதந்தரமானது (1:4) அவர்கள் தீமைக்கு நன்மை திரும்பச் செய்யும் இயல்பின் பாகமாக உள்ளது என்று அவர்களுக்கு நினைவூட்டினார். ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்குத் தங்களை அவர்கள் ஒப்புக்கொடுத்தபோது, அவர்கள் தழுவிக்கொண்ட வாழ்வின் முக்கியமான பாகமாக அவர்களின் சுதந்தரம் இருந்தது. கிறிஸ்தவர்கள் ஆசீர்வதிக்கும்போது அவர்கள் பதிலுக்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். வாழ்வில் கிறிஸ்துவைப் போன்று வாழும் வழியானது நித்திய ஆசீர்வாதத்தின் முன்னுரையாக இருப்பதில்லை; நித்திய ஆசீர்வாதத்திற்குச் செலுத்த வேண்டிய விலையானது மிகவும் குறைவாக உள்ளது. கிறிஸ்தவ வாழ்வே ஒரு ஆசீர்வாதமாக உள்ளது.

வசனம் 10. மேலே உரைக்கப்பட்ட சத்தியத்தை ஆதரிக்கவும், இந்த சத்தியத்தை இன்னுமொரு மேல்மட்டத்திற்கு உயர்த்தவும், அப்போஸ்தலர் சங்கீதம் 34:12-16ஐ மேற்கோள் காண்பித்தார். இந்த மேற்கோள் காண்பித்தலின் பிரதான கருத்தானது, பேதுரு இந்த நிருபத்தில் குறிப்பிட்ட கிரேக்க மொழிபேசும் உலகத்தில் பழக்கத்தில் இருந்த எபிரேயமொழி பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான LXX, ல் இருந்து வந்துள்ளது. 34ம் சங்கீதம் முழுவதுமே, அடக்கப்பட்டவர்களுக்கு, தேவன் தமது மக்களை விடுவிக்கிறார் என்று மறு உறுதிப்படுத்துகிறது, இதுவே பேதுரு, அடக்கப்பட்டிருந்த தமது வாசகர்களுக்கு எடுத்துரைக்க விரும்பிய செய்தியாக இருந்தது. ஏற்கனவே அவர் சங்கீதம் 34:8ன் வார்த்தைகளைத் தரவழைத்திருந்தார்: "கர்த்தர் தயையுள்ளவரென்பதை

நீங்கள் ருசிபார்த்ததுண்டானால்" (2:1). சங்கீதத்தில் உள்ள **நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி,** நீடித்த நாட்களை அபேட்சிக்கிற என்பது, இந்த நிகழ்காலத்தில் வாழப்படும் வாழ்வைக் குறிக்கிறது. பேதுருவும் கூட, இந்த காலத்தில் ஒருவர் நல்ல வாழ்வைக் கொண்டிருக்க விரும்பினால், **அவர் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத்தன் உதடுகளையும் விலக்கிக்காத்து இருக்க வேண்டும்** என்று நம்பினார்; ஆனால் பேதுரு இதைக் காட்டிலும் அதிகமானவற்றைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார். விசுவாசம் பார்வையில் இருக்கும் காலம் வரையில், கிறிஸ்தவர் எப்போதுமே தமது கண்களால் முனைந்து முயற்சி செய்கிறார். 1:6-9 மற்றும் 4:12-14ல் உள்ளபடி, விசுவாசிகள் "இயேசு கிறிஸ்து வெளிப்படும் வேளைக்காக" காத்திருக்கின்றனர், ஆனால் அதே வேளையில் அவர்களின் சந்தோஷம் சொல்லி முடியாததாக உள்ளது. ஜீவனும் நல்ல நாட்களும் இப்போது உள்ளன, ஆனால் அவை வரும்படி காத்திருக்கவும் செய்கிறோம்.

ஒருவருடைய வாழ்வில் தேவபக்திக்கான அளவுக்கருவியாக நாவு உள்ளது என்பது பற்றிப் பேதுருவும் யாக்கோபுவும் ஒரே சிந்தை கொண்டிருந்தனர். யாக்கோபு, "ஒருவர் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்" என்று கூறினார் (யாக்கோபு 3:2). நாவு கட்டுப்படுத்தப்படாதபோது, ஜீவனும் நல்ல நாட்களும் இருக்க முடியாது என்று பேதுரு குறிப்பிட்ட சங்கீதம் உறுதிப்படுத்துகிறது. புறங்கூறப்படுதல் மற்றும் கெட்ட சிந்தை ஆகியவற்றினால் கிறிஸ்தவர்கள் பாடு அனுபவிக்கும்போது, நாவைக் கட்டுப்படுத்துதல் என்பது தேவபக்தியுள்ள வாழ்விற்கு மிகவும் இன்றியமையாததாக ஆகிறது. தீமையாகப் பேசப்படுதல் மற்றும் வஞ்சனை ஆகியவற்றை அவர்கள் மீளக்கட்டினால், அவர்கள் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறாமற்போவது மாத்திரமல்ல, ஆனால் புறதெய்வ வணக்கத்தவரான தங்கள் அயலகத்தினரிடம் இருந்து கூடுதலாகத் தயவற்ற செயல்களையும் பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது.

வசனம் 11. கிறிஸ்து தமது மக்கள் வாழும்படி அழைத்துள்ள வாழ்விற்கு, தக்க வகையில் நாவைக் கட்டுப்படுத்திப் பயன்படுத்துதல் என்பது எவ்வளவு முக்கியமானதாக உள்ளதோ, அந்த அளவிற்கு மற்ற அம்சங்களும் உள்ளன. தேவனுடைய மக்கள் (அவர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும்), **பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்கின்றனர்** என்று சங்கீதம் கூறுகிறது. அதுவும்கூட "நல்ல நாட்களைக் காண" விரும்பும் மனிதரின் நலத்திற்கான விதிகளின் பாகமாக உள்ளது. இயேசு "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" என்று கூறுகையில், குறிப்பிடத்தக்கதான முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரை ஒன்றை அளித்தார் (யோவான் 12:24, 25). சுயத்தை நாடும் மனிதர், "தமது வாழ்வை நேசிக்கிற" ஒருவர், அதை இழந்து போகிறார். எதிர்மறையாக, ஒருவர் ஜீவனைக் கொண்டிருக்க விரும்பினால், அவர் "பொல்லாப்பை விட்டு நீங்க வேண்டும்." நேர்மறையாக அவர் "நன்மை

செய்ய வேண்டும்."

ஒருவர் சமாதானத்தை நாடும்போது ஜீவன் விளைகிறது. சங்கீதக்காரருக்கும் பேதுருவுக்கும், சமாதானம் என்பது சந்தேகமற்ற கிறிஸ்தவர் மீது அமையப்பெற்ற மந்தமான பண்பாக இருக்கவில்லை. **சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்** *என்ற வார்த்தைகளில் செயல்துடிப்புள்ள, உக்கிரமானதாகக் கூட உள்ள, மிதமிஞ்சிய முயற்சி காணப்படுகிறது. LXX, வேதாகமத்தில் உள்ள eirene என்ற கிரேக்க வார்த்தை, shalom. என்ற எபிரெய வார்த்தையின் மொழியாக்கமாக உள்ளது. சங்கீதம் 34:14ல் எபிரெய மொழியினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்த கிரேக்க வார்த்தை (MT, வேதாகமத்தில் 34:15, LXX, வேதாகமத்தில் 33:14), முழுமை, ஆரோக்கியம் மற்றும் ஒருவர் இந்த தமது உலகத்துடன் இசைவிணக்கமான உறவு கொண்டிருத்தல் ஆகிய கருத்துக்களையும் கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் யூதர்களாக இருந்தனர் (லூக்கா இதற்கு விதிவிலக்கு). "சமாதானம்" என்பது அவர்களைப் பொறுத்தமட்டில், எபிரெய மொழிப்பயன்பாட்டைப் பின்பற்றுவதென்றால், வாழ்த்துதல் மற்றும் பிரியாவிடை கூறுதல் ஆகியவற்றிற்கான வார்த்தையாக இருந்தது. சமாதானத்தை வாழ்த்தாகக் கூறுதல் என்பது, ஒருவரின் வாழ்வில் நன்மைகள் மூடிக்கவிய வேண்டும் என்பதற்கான வாழ்த்தாகவும் ஜெபமாகவும் இருந்தது.*

சமாதானம் என்பது கலகம் இல்லாத நிலை என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. அது, உள்ளாக இருக்கும் சமாதானம் என்பதைக் காட்டிலும் அதிகமான, தேவனுடைய பிரசன்னமும் வல்லமையும் தமது பக்கம் உள்ளது என்பதை அறிதலில் இருந்து வருதலாக உள்ளது. சமாதானத்திற்கு எப்போதுமே சமூக அம்சம் ஒன்றுள்ளது. அது மற்றவர்களுடன் சமாதானமாயிருத்தல் என்பதாகும். பாவம் சமாதானத்தை எடுத்துப் போட்டு விடுகிறது. சமாதானமும் நீதியும் சகோதரிகளாக உள்ளன. ஒருநபர் மற்றொருவரைத் தவறாக நடத்த அதிகாரம் கொண்டுள்ளபோது, சமூகத்தின் விதிகளும் சட்டங்களும் அநீதியை நெடுகப் பேணும் வகையில் அமைக்கப்படும்போது, சமாதானம் தவறுகிறது. சமாதானத்திற்கான ஏக்கம் என்பது, மனிதப் பிரச்சனைகளில் நீதி, ஏழைகளை நியாயமாக நடத்துதல், சமூகத்தினால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் வளங்களில் எல்லாரும் பங்கேற்றல் ஆகியவற்றைப் பற்றிய கிறிஸ்தவ அக்கறைக்குச் சாட்சியாக உள்ளது. சமாதானம் என்பது தேவனுடைய மக்களின் சிந்தையில் இருந்து தொலைவில் ஒருக்காலும் இருப்பதில்லை என்பதுவே இங்கு கருத்தாக உள்ளது. பேதுரு, "உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக" என்று எழுதி தமது இந்த நிருபத்தை முடித்தார் (5:14). 2 பேதுரு நிருபத்தின் முடிவிற்கு அண்மையில் அவர், "... சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" என்ற புத்திமதியை அளித்தார் (2 பேதுரு 3:14). யோவான் தமது மூன்றாவது நிருபத்தை, "உனக்குச் சமாதானம் உண்டாவதாக சிநேகிதர் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். சிநேகிதரைப் பேர்பேராக வாழ்த்துவாயாக" என்ற வார்த்தைகளுடன் முடித்தார் (3 யோவான் 15).

இவ்வார்த்தையைப் பேதுரு, வாழ்த்துக்கள் (1:2) மற்றும் ஆசீர்வாதம் (5:14), ஆகியவற்றைத் தவிர, இங்கு மாத்திரமே பயன்படுத்தினார்.

இவ்வார்த்தையை அவர் இங்கு பயன்படுத்தியது விருப்ப நோக்கம் உடையதாக உள்ளது. "சமாதானம்" என்பது கிறிஸ்தவ வாழ்வின் தற்செயலான உபரி உற்பத்தியாக இருந்ததில்லை என்பதைத் தெளிவுபடுத்த அவர் விரும்பினார். இதற்குப் பவுல் முழு கருத்து ஒருமையில் இருந்தார். "ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கக்தக்கவைகளையும் நாடக்கடவோம்" (ரோமர் 14:19). விசுவாசிகள் மத்தியில் சமாதானம் பற்றிப் பவுல் அக்கறை கொண்டிருந்தார், ஆனால் விசுவாசிகளான அயலகத்தார்களுடன் கிறிஸ்தவர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் சமாதானம் பற்றிப் பேதுரு அக்கறை கொண்டிருந்தார். சமாதானம் தற்செயலாக வந்து விடுவதில்லை. இயேசு, "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:9). கிறிஸ்தவர்கள் சமாதானத்திற்கு நேர்மறையான ஊக்குவிப்பாளர்களாக இருக்க வேண்டும் என்பதே உயர்கொள்கையாக உள்ளது, அவர்கள் "கிறிஸ்துவுக்குள் எல்லா ஆண்களையும் பெண்களையும் ஒப்புரவாக்கும்படி ஊழியம் செய்கின்றனர், ஏனெனில் அந்தச் செயல்பாட்டின் மூலமாகத்தான் அவர்கள் மிகச்சிறப்பாகத் தேவனைப் போன்று செய்கின்றனர் மற்றும் தேவன் கிறிஸ்துவுக்குள் தொடங்கியதை முன்னெடுத்துச் செல்கின்றனர் மற்றும் ஆவிக்குள்ளாகத் தொடருகின்றனர்."[10]

பவுல் தமது வாசகர்கள், தங்களுக்கும் மற்ற எல்லா மனிதர்களுக்கும் இடையில் பெரும்பாலும் நற்சிந்தையை விளைவிக்கக் கூடியதான செயல் முனைப்புள்ள வியூகம் ஒன்றை நாடும்படி, அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொண்டார். செயல்முனைப்புள்ள வியூகத்திற்கு, நாவைக் கட்டுப்படுத்துதலும் ஒழுக்கரீதியாக நேரான வாழ்வும் தேவைப்படுகின்றன. எதிர்மறையாக இது, ஒருவர் "பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து" இருத்தலைக் கேட்கிறது. நேர்மறையாக இது, ஒருவர் "நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடருதலை" கேட்கிறது. தேவனுடைய ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்தல் என்பது இதன் விளைவாக உள்ளது (3:9).

வசனம் 12. பேதுருவின் வாசகர்களை சங்கீதம் 34 மறு உறுதிப்படுத்திற்று. அவர்கள் கிறிஸ்துவைத் தழுவிக்கொண்டு இருந்தனர் மற்றும் தாங்களும் தங்கள் பிதாக்களும் அறிந்து சேவித்துக் கொண்டிருந்த பழைய கடவுள் யாவரையும் புறக்கணித்திருந்தனர்.விஷயங்கள் கசப்பாக மாறியது ஏன்? இந்த அண்டத்தின் ஒரே தேவன் அவர்களைப் பராமரிக்காமற் போனது ஏன்? "தேவன் உங்களை மறக்கவில்லை" என்று சங்கீதம் கூறுகிறது. விசுவாசம் நிறைந்தவர் சரியானதைச் செய்யும்போது அதைத் தேவன் கண்ணோக்குகிறார். அவர்களின் ஜெபங்களைத் தேவன் கேட்கிறார். மற்றும், **"தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது."** நியாயத்தீர்ப்புச் செய்யக் கர்த்தர் திரும்ப வரும்போது, நீதிமான்களை அடக்கி ஒடுக்கியவர்கள் கணக்கு ஒப்புவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள். கர்த்தர் பொல்லாங்கு செய்பவர்களுக்கு எதிராக உள்ளார். நாம் விசுவாசத்தை விட்டுவிடவோ அல்லது இழந்துபோகவோ கூடாது. சங்கீதத்தில் "கர்த்தர்" என்பது தேவனைக் குறிக்கிறது. பேதுருவைப் பொறுத்த மட்டில், பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய தேவனுக்கும் இடையில் வரையப்பட்ட நேர்த்தியான பிரிவுக்கோடு என்று எதுவும் இருப்பதில்லை. கர்த்தர்

தமது ஒருமைத்தன்மையில், "தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது." கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட வகையிலான எதிர்த்துத் தாக்குதலுக்கு மாறாக, தேவன் தமக்கே உரிய காலத்தில் இந்தப் பொல்லாத யுகத்திற்கு நீதியைக் கொண்டுவருவார் என்று நம்ப வேண்டும்.

கிறிஸ்துவை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் (3:13-17)

13நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்? 14நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து; 15கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். 16கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். 17தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.

பேதுருவின் வாசகர்கள் உதாசனத்தையும் தீமையையும் அநுபவித்திருந்தனர் என்பதே 3:9ன் கருத்தாக உள்ளது. அவர்கள் அநுபவித்த தீமையின் எதிரில் அவர்கள் தேவபக்தியுள்ள வாழ்வை வாழவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்வதற்காக அவர் சங்கீதம் 34ஐக் குறிப்பிட்டிருந்தார், ஆனால் அந்த சங்கீதம் தனது சொந்தக் கேள்விகளை எழுப்புகிறது. அது பேதுருவின் வாசகர்களை, "தேவன் நம்பக்கம் இருந்தால், நாம் ஏன் இவ்வாறு பாடு அநுபவிக்கிறோம்? எங்கள் வாழ்வைப் பரிதபிக்கப் படத்தக்கதாக ஆக்குபவர்களை நாங்கள் ஆசீர்வதிக்கும்படி நீங்கள் எதிர்பார்க்கக் கூடுவது எப்படி?" என்று கேட்கும்படி அழைக்கிறது. இந்தக் கேள்விகளுக்கு அப்போஸ்தலர் அடுத்துத் திரும்பினார்.

வசனம் 13. *இரண்டாம் முறையாக (காண்க 1:6-9) பேதுரு, தமது வாசகர்களின் உபத்திரவம் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட்டார். இந்தப் பகுதி (3:13-17) யானது சொல்லாட்சித் திறன் வாய்ந்த கேள்வியுடன் தொடங்குகிறது; பதில் யூகிக்கப்படுகிறது.* ***நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் என்று யாரும் இருக்க மாட்டார்கள்.*** *இருந்தபோதிலும் இந்தக் கருத்திற்கும் இதைப் பின்தொடரும் கூற்றிற்கும் இடையில் சற்றே இறுக்கம் உள்ளது. அவர்கள் சகித்து இருந்த "பற்றியெரிகிற அக்கினி" போன்ற உபத்திரவம் (4:12) மற்றும் "கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்" அவர்கள் பெற்ற நிந்தனை (4:14) ஆகியவை, வெறுப்பூட்டவில்லை என்று யூகிக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தைப் பற்றிப் பேதுரு பிற்பாடு பேசுவார், ஆனால் இந்த வேளையில் அவர், தமது வாசகர்களுக்கு, நேரான, தேவபக்தியுள்ள வாழ்விற்கு வழிநடத்தும் சில*

கொள்கைகளைப் பற்றி உரைக்க விரும்பினார். அவர்களுக்கு அவர் பிற்பாடு ஆறுதல் அளித்து மறு உறுதிப்படுத்துவார், ஆனால் இப்போது, அடக்க முறையின் முகத்தில் அவர்கள் தேவபக்தியுள்ள நடக்கையால் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதே பேதுருவின் அக்கறையாக இருந்தது.

சாதாரண சூழ்நிலைகளில், உலகத்தின் ஆளும் அதிகாரங்கள், மக்களை உண்மை பேசுவதற்காகவோ, நேர்மையற்ற தன்மையைப் புறக்கணிப்பதற்காகவோ, ஒருவர் தம் குடும்பத்தைப் பொறுப்புள்ள வகையில் பேணுவதற்காகவோ மற்றும் "நன்மையான விஷயங்கள் குறித்து வைராக்கியமாய் இருப்பதற்காகவோ" அவர்களை அடக்கிக் கொடுமைப் படுத்துவதில்லை. இங்குள்ள வார்த்தைகள் ஏசாயா 50:9ன் எச்சங்களாக உள்ளன: "இதோ, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?" ஆட்சியாளர்கள் "தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நம்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி" யாகவும் அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர் என்று பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டியபோது, அவர் ஏற்கனவே இதைப்பற்றி அதிகமாகக் கூறியிருந்தார் (2:14). இன்னமும் அப்போஸ்தலர் நிலைநாட்ட விரும்பிய கொள்கையானது, கிறிஸ்தவர் ஒருக்காலும் அநியாயமாய்த் துன்புற மாட்டார்கள் என்பதாக இருப்பதற்குப் பதிலாக, கிறிஸ்தவர்கள் மோசமாக நடத்தப்படுவதினால் ஒருக்காலும் சினம் கொள்ளக் கூடாது என்பதாகவே இருந்தது. "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது" (4:15) என்று பிற்பாடு அவர் கூறவிருந்தார். "புறஜாதிகளுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்" (2:12) என்று ஏற்கனவே அவர் கூறியிருந்தார். கிறிஸ்தவர்கள் அனுபவிக்கும் தீமையானது, அவர்கள் சலித்து வெறுப்படையும்படியானதும் தீமைக்குத் தீமை செய்யும்படியானதுமான சந்தர்ப்பமாக அவர்களுக்கு ஒருக்காலும் இருக்கக் கூடாது (3:9).

வசனம் 14. கிறிஸ்தவர் ஒருவர், நன்மையைச் செய்வதற்காகத் துன்புறும் வழியில் ஒருக்காலும் விழுவதில்லை என்ற மறைமுகக் கருத்துக் கொண்ட முந்திய வசனத்தில், பேதுரு கேட்டிருந்த கேள்வியானது, ஒரு மிகைக்கூற்றாக இருந்தது என்பது தெளிவு. அப்போஸ்தலர் அப்போதுதான் கூறியிருந்ததை மறைவாக ஆதரித்தார், ஆனால் அவர் அவர் நேர்மை யான நடத்தைக்கான எதிர்பார்ப்பைப் பின்னால் விட்டுவிடவில்லை. அவர் புதிய ஏற்பாட்டில் அரிதாகக் காணப்படும் இலக்கணக் கருவி ஒன்றுடன் தொடங்கினார். **நீங்கள் பாடுபட்டால்** என்ற வார்த்தைகள் தேர்ந்துகொள்ளும் மனப்பாங்கின் பயன்பாட்டை ஏற்படுத்துகின்றன. இது, நடைபெறச் சாத்தியமற்ற சில விஷயங்களைக் கருத்தாகத் தெரிவிக்க விரும்புகிறபோது கிரேக்க எழுத்தாளருக்குக் கிடைக்கும் ஒரு கருவி-யாக இருந்தது. J. N. D. கெல்லி அவர்கள் இதை, "இருந்தபோதிலும், நன்மைக்கான உங்கள் அர்ப்பணிப்பு உங்களை இடர்ப்பாட்டில் இறங்கச் செய்யும் ..." என்று பொழிப்புரை செய்தார்.[11] "நன்மைக்கான அர்ப்பணிப்பு" பேதுருவின் வாசகர்களில் சிலரை இடர்ப்பாட்டில் இறங்கச் செய்திருந்தது

என்பது உறுதி. அறியாமை, மூடநம்பிக்கை, விரோதம் அல்லது அரசியல் செல்வாக்கு என்பவை சிலவேளைகளில், ஒன்றும் அறியாத மக்களை உபத்திரவங்களுக்கு உள்ளாக்குகின்றன. உலகத்தில் அந்தக் குணங்களுக்குப் பஞ்சம் இல்லாதிருக்கையில், அவற்றைக் கிறிஸ்தவர் எதிர்கொள்ளும்போது நேர்மையான நடத்தையே அவரது உடனாளியாக உள்ளது.

நீதி என்பதே பேதுருவின் முதன்மையான அக்கறையாக இருந்தது. "பாடுகள் வரவேண்டும் என்றால், அது நன்மை செய்தலுக்காக வருவதாக இருக்கட்டும், வேறு எந்தக் காரணத்திற்காகவும் அது வரவேண்டாம். தீமை செய்தலுக்காகப் பாடுகள் ஒருக்காலும் வரவேண்டாம்" என்று பேதுரு வலிறுத்தினார். இது நாம் முன்பே கண்டபடி (2:24) 1 பேதுருவில் "நீதி" என்பது "ஒழுக்க நேர்மையும், நல் நடத்தையும்" என்றே அர்த்தப்படுகிறது. இது பவுலின் கருத்தில் குற்றம் சுமத்தும் நீதியாக இருப்பதில்லை (உதாரணமாக, ரோமர் 4:3-5). எதிர்மறையாக இது, "நீதி" என்பது "ஆத்துமாவுக்கு எதிராகப் போர் செய்யும் மாம்ச இச்சையில் இருந்து விலகி இருத்தல்" என்பதை அர்த்தப்படுத்துகிறது (2:11). "நீதியினிமித்தம்" பாடுகள் வரும்போது, **நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்** என்று பேதுரு தமது வாசகர்களுக்கு உறுதிப்படுத்தினார். அவர்களை அடக்கித் துன்புறுத்தியவர்களுக்கு வெட்கம் உண்டாகும்படியாக இந்த ஆசீர்வாதம் இருந்தது (3:16).

பாக்கியவான்களாயிருப்பீர்கள் என்பதற்குப் பின்னால் உள்ள *makarios* என்ற கிரேக்க வார்த்தை, 3:9ல் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையல்ல. அங்கு ஆசீர்வாதமாகப் பேசப்பட்ட வார்த்தை பற்றிய குறிப்பு இருந்தது; இங்கு இது விசுவாசி தாமே கண்டறிகிற ஆசீர்வாதத்தின் நிலையைப் பற்றிய குறிப்பாக உள்ளது. இது பாக்கியங்களின் வார்த்தையாக உள்ளது, எட்டாவது பாக்கியம் "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" என்று கூறுகிறது (மத்தேயு 5:10). விசுவாசிகளுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதத்தில் அடங்கியுள்ளது என்ன? (1) இது, மனித மீட்பை விளைவித்த பாடுகளில் கர்த்தருடன் பங்கேற்கக் கூடியதாக இருப்பதால் வரும் ஆசீர்வாதமாக உள்ளது (4:13). பவுலின் கவனத்திற்குரிய வார்த்தைகளில் இது, "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை ... என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" என்பதாக உள்ளது (கொலோசெயர் 1:24). (2) இது, தேவன்மீது நம்பிக்கை வைத்து அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் மீது தேவன் பிரியமாயிருக்கிறார் என்ற உறுதிப்பாட்டில் இருந்து வருகிற ஆசீர்வாதமாக உள்ளது (1:22, 23). (3) இது, "உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்" (1:9) என்ற வாக்குத்தத்தத்தில் நம்பிக்கையைக் கண்டடைகிற ஆசீர்வாதமாக உள்ளது.

நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து என்ற கடைசிச் சொற்றொடர் கடினமானதாக உள்ளது. மிகவும் நேரடியாக மொழிபெயர்க்கப்பட்ட இந்தக் கிரேக்கச் சொற்றொடர், "அவர்கள் பயத்திற்கு நீங்கள் பயப்படாதிருங்கள்" என்று வாசிக்கப்படுகிறது. NRSV மற்றும் NIV வேதாகமங்களில் "அவர்கள் பயப்படும் விஷயங்களுக்கு நீங்கள் பயப்படாதீர்கள்" என்றுள்ளது, இது NASB வேதாகமத்தின் கருத்தில் இருந்து கணிசமாக மாறுபடுவதாக உள்ளது. ஏசாயா 8:12ன் கடைசி வார்த்தைகளைப் பேதுரு தழுவியிருப்பதாகக் காணப்படுகிறது.

ஏசாயா, இஸ்ரவேல் மக்களைச் சுற்றிலும் இருந்த மக்களினங்கள் பயப்பட்ட விஷயங்களுக்கு இஸ்ரவேல் மக்கள் பயப்படுவதை விரும்பவில்லை, ஆகையால் இது NRSV மற்றும் NIV வேதாகமங்களின் மொழிபெயர்ப்பை ஆதரிக்கிறது. இருப்பினும், மூடநம்பிக்கைகளுக்கும் அவிசுவாசிகள் அஞ்சிய தேவர்களுக்கும் பயப்படாது இருக்க வேண்டும் என்ற புத்திமதியானது, பேதுருவின் சிந்தனைவரியில் அழகற்ற வகையில் பொருந்துகிறது. இவ்வசனத்தை இதற்குச் சமமாக, நேரடியாக மொழிபெயர்க்கக் கூடிய இன்னொரு வழியும் உள்ளது: "அவர்களின் பயத்திற்கு நீங்கள் பயப்படாதிருங்கள்," இது "அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்" என்று கூறும் இன்னொரு வழியாக உள்ளது. அதுவே NASB வேதாகமத்தின் மொழிபெயர்ப்பிற்குப் பின்னால் உள்ள விளக்கமாக இருக்கிறது. சந்தப்பப் பொருளானது, NASB வேதாகமத்தின் வார்த்தையமைப்பையே தேர்ந்துகொள்ளத் தக்கதாக்குகிறது. கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஆசீர்வாதமானது, பயமுறுத்துதல்கள் வரும்போது அவர்கள் **கலங்காமல்** இருப்பதற்கு உறுதிப்பாட்டையும் சமாதானத்தையும் தருகிறது.

வசனம் 15. கிறிஸ்தவராக இருத்தல் என்பது, ஒருவர் "வேதாகமம் போதிப்பது என்ன?" என்று கேட்பதற்கு முன்னர், அவர் "இயேசு போதித்தது என்ன?" எனக் கேட்க வேண்டும், "இயேசு போதித்தது என்ன?" என்று கேட்பதற்கு முன்னர், அவர் "இயேசு யாராக இருந்தார்"? எனக் கேட்க வேண்டும் "இயேசு யாராக இருந்தார்?" என்று கேட்பதற்கு முன்னர், அவர் "இயேசு யாராக இருக்கிறார்?" என்று கேட்க வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துகிறது. **கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்** என்று பேதுரு கூறியபோது, அவர் ஏற்கனவே இதில் உள்ள கடைசிக் கேள்விக்குப் பதில் அளித்திருந்தார். நசரேயனாகிய இயேசு என்ற நபரின் மீதுதான் கிறிஸ்தவர்களின் விசுவாசம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பேதுருவைப் பொறுத்த மட்டில், நசரேயனாகிய இயேசுவும் கர்த்தராகிய கிறிஸ்துவும் ஒருவராகவே இருந்தார். அவர் பொந்திய பிலாத்துவினால் சிலுவையில் அறையப்பட்ட வரலாற்றுப்பூர்வம் கொண்ட போதகராயிருந்தார், மற்றும் இப்போது தேவனுடைய வலது புறம் அமர்ந்து ஆளுகை செய்யும் ஆண்டவராக இருக்கிறார். ஆபிரகாமைப் போல (ரோமர் 4:1-5), இயேசு விசுவாசத்திற்கு முன்மாதிரியாக மாத்திரம் இருப்பதில்லை, அவரே விசுவாசத்தின் மையப்பொருளாகவும் இருக்கிறார். அவர் ஆண்டவராக, கிறிஸ்துவாக மற்றும் தேவனாக இருக்கிறார். "கிறிஸ்துவைக் கர்த்தராகப் பரிசுத்தம் பண்ணுதல்" என்பது, அவரைப் பரிசுத்தராக ஒருவர் தமது உள்ளான இருப்பிற்குள் பற்றிக்கொள்வதாக உள்ளது; இது அவருக்குக் கீழ்ப்படிதலையும் அன்பையும் தருவதாக உள்ளது. தேவபக்தியுள்ள நடக்கை என்பது இன்னும் பேதுருவின் சிந்தையில் மிகமுக்கியமானதாக இருந்தது. உபத்திரவப்படுதலிலும்கூட, அது "நீதியின் நிமித்தமாக" இருக்கையில், பயமுறுத்துபவர்களிடம் பயப்படும்படி தூண்டுவதாக இருப்பதில்லை; அதற்குப் பதிலாக இது, "கிறிஸ்துவே ஆண்டவர்" என்ற உறுதிப்பாட்டைப் புதுப்பிக்க அழைக்கிறது.

உபத்திரவத்திற்குப் பதில்செயல் செய்தல் என்பது இரு மட்டங்களில் இருந்து வருகிறது. முதலாவது, உபத்திரவப்படுகிறவர், கிறிஸ்துவுக்குத்

தமது பதில்செயல் எவ்வாறு இருக்கும் என்று தீர்மானம் செய்ய வேண்டும். உபத்திரவப்படுகிறவர் "கிறிஸ்துவைப் பரிசுத்தம்பண்ண வேண்டும்" என்று பேதுரு கூறினார். உபத்திரவப்படுகிறவர் நீதியாக வாழவேண்டும் என்ற தமது தீர்மானத்தைப் புதுப்பிக்கும்போது அதைச் செய்கிறார். இரண்டாவது, உபத்திரவப்படுகிறவர், தம்மைக் கொடுமைப் படுத்துபவர்களுக்குத் தமது பதில்செயல் என்னவாக இருக்கும் என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டும். எதிர்மறையாக அவர், "தீமைக்குத் தீமையை" *(3:9)* பதிலாகச் செய்யக்கூடாது, அல்லது பயப்படவும் கூடாது, ஆனால் ஒரு நேர்மறைப் பதில் செயலும் உள்ளது. அவர் தம்மிடத்தில் **விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க** வேண்டும். கிறிஸ்தவர் தவறுசெய்திராதிராமல் உபத்திரவப்படுகையில் அவர் தீர்மானமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதை, துன்புறுத்துபவர்கள் கவனிக்கும்போது, அது அவர்களின் ஆர்வத்தை எழுப்பும் என்பதே இங்கு மறைவாக கருத்தாக உள்ளது. கிறிஸ்தவர் சேவிக்கும் ஆண்டவரைப் பற்றி, அவர் பகிர்ந்துகொள்ளும் ஐக்கியம் பற்றி மற்றும் அவர் கொண்டிருக்கும் நம்பிக்கை பற்றி அவர்கள் கேள்விகேட்டுத் தெரிந்து கொள்ள வாய்ப்புள்ளது.

விசுவாசி தமக்குள் இருக்கும் **நம்பிக்கையைக் குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும்** பதிலுரை கூற எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும், அதாவது அவர் தாம் எதை விசுவாசிக்கிறார், ஏன் அதை விசுவாசிக்கிறார் மற்றும் அதைச் செய்கிறபோது அவர் ஏன் ஜீவிக்கிறார் என்பவற்றைக் குறித்து விளக்கம் அளிக்க அவர் தயாராக இருக்க வேண்டும். "உத்தரவு சொல்லுதல்" என்பது [ஆங்கிலத்தில் இது "defense" என்று உள்ளது] நீதிமன்றத்தில் வழக்கில் பேசும்போது கூறும் உரையாக இருப்பதில்லை, மாறாக இது **விசாரித்துக் கேட்கிற யாவருக்கும்** கூறப்பட வேண்டியதாக உள்ளது. பேதுரு இங்கு, "defense" (*apologia*) என்ற வார்த்தையை, பவுல் சிலவேளைகளில் பயன்படுத்திய அதே முறைசாராக் கருத்திலேயே பயன்படுத்தினார், உதாரணமாக, "என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தரமாவது" *(1 கொரிந்தியர் 9:3)*. இவ்வார்த்தை நீதிமன்ற செயல்முறைகளைக் குறிப்பதாக இருந்தாலும், இவ்விடத்தில் "மாறுத்தரம் (அல்லது) உத்தரவு" என்பது ஒரு விளக்கம் என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. பகுத்தறிதல் என்று மறைமுக அர்த்தம் தரும், *logos,* என்ற ஒரு வார்த்தை (இது கிரேக்க மொழி) "கணக்கு ஒப்புவித்தல்" என்று மொழிபெயர்க்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள "நம்பிக்கை" பற்றிய பகுத்தறிவுக்கேற்ற விளக்கமானது சிலரை இணங்கச் செய்து மற்றவர்களை வாயடைக்கச் செய்யும் என்று பேதுரு யூகித்தார். கிறிஸ்தவர்கள் பெறும்படி ஆவலாய் ஏங்கும் தூய பாலானது நியாயமான அல்லது பகுத்தறிவு உள்ள பாலாக இருந்தது *(2:3)*.

அப்போஸ்தலர், கிறிஸ்தவரின் தற்காப்பு விஷயத்தை மாத்திரமல்ல ஆனால் அதைச் செய்யும் விதத்தையும் இங்கு உரைத்தார். கிறிஸ்தவரைக் குற்றப்படுத்தி கொடுமைப்படுத்துபவர் கேள்வி கேட்கும்போது, கிறிஸ்தவர் **சாந்தத்தோடும் வணக்கத்தோடும்** பதில்கூற வேண்டும். **வணக்கத்தோடு** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *phobos,* என்ற வார்த்தை பெரும்பாலும்

“பயம்” என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. NIV வேதாகமத்தில் “gentleness and respect.” என்றுள்ளது. அதுபோல, “அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு” பேச வேண்டும் என்று விசுவாசிகளைப் பவுல் வேண்டிக் கேட்டுக்கொண்டார் (எபேசியர் 4:15). “தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே” (எபேசியர் 4:14) அடிக்கப்பட்டுப் போகும் அபாயத்தை நோக்கி விசுவாசிகள் அணுகுமுறை இருந்துவிடுமோ என்பதுதான் பவுலின் கவலையாக இருந்தது, மற்றும் அவிசுவாசிகளிடத்தில் பேசும் விசுவாசிகள் அவர்களிடம் மாறுபாட்டுடனும் தேவனுக்கு மதிப்புடனும் இருந்து விடுவார்களோ என்பது பேதுருவின் கவலையாக இருந்தது, இவ்விரு மனிதர்களுமே, கட்டுப்பாடு, அமைதித்தன்மை மற்றும் நல்ல சிந்தை ஆகியவற்றை மாறுபட்ட கண்ணோக்குடன் அணுகுபவர்களிடத்தில் வேண்டுகோள் வைத்தனர். சத்தியத்தைப் பேசுதலோ அல்லது தற்காப்பு வாதம் செய்வதோகூட போதுமானதல்ல. பேசும் விதமானது விஷயத்தைப் போன்றே முக்கியம ானதாக உள்ளது.

வசனம் 16. NASB வேதாகமத்தின் நிறுத்தற்குறியீடு, “சாந்தத்தோடும் வணக்கத்தோடும்” என்பதை “தற்காப்பு வாதம் ஒன்றை ஏற்படுத்தி” என்ற வினையாலணையும் சொற்றொடராக இருக்கும்படி மாற்றியமைக்க அனுமதிக்கிறது, அதாவது ஒருவர் தமது விசுவாசத்தை சாந்தமும் வணக்கமுமான வகையில் விளக்க வேண்டும். NASB, NRSV, NIV, REB, வேதாகமங்களும் மற்ற மொழிபெயர்ப்புகளும் இதையே செய்கின்றன. இருப்பினும் இந்தச் சொற்றொடர் மாறுபட்ட வகையிலும் பொருள் உணர்த்தலாம். ஒருவேளை பேதுரு தமது வாசகர்கள் தங்களில் உள்ள “நம்பிக்கையைப் பற்றி தற்காப்பு வாதம்” ஏற்படுத்துதல், கிறிஸ்துவினிடத்தில் சாந்தமும் வணக்கமும் உடைய நிலைப்பாட்டைக் காண்பிக்கும்படி அவர்களைத் தகுதிப்படுத்திற்று என்று அவர்களுக்கு விளக்கி இருக்கலாம். அது சாத்தியமானதுதான் ஆனால் இங்கு அதற்கு வாய்ப்பில்லை. அப்போஸ்தலர் தமது வாசகர்களை, அவர்களைத் துன்புறுத்துபவர்களிடம் தேவபக்தியுள்ள வகையில் நடந்துகொள்ளும்படி ஊக்குவித்தார். தீமைக்குத் தீமை செய்வதற்கு மாறாக, அவர்கள் ஆசீர்வதிக்க வேண்டியவர்களாக இருந்தனர் (3:9). இந்தச் சொற்றொடரை, அவமதிப்புகளுக்கு ஆசீர்வாதங்களைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற பேதுருவின் புத்திமதியினுடைய விரிவாக்கமாக எடுத்துகொள்ளுதல் மிகவும் சிறந்ததாக இருக்கும், அதாவது, அவரது வாசகர்கள் தங்களில் உள்ள “நம்பிக்கையை” சாந்தத்தோடும் வணக்கத்தோடும் எடுத்துரைத்து, தங்களைத் துன்புறுத்துபவர்களிடம் மோசமான சிந்தை கொண்டவர்களாக இராதபடி எதிர்பார்க்கப்பட்டனர்.

பேதுரு **நல்மனச்சாட்சி** (*suneidēsis*) என்ற வார்த்தையை மூன்று முறை பயன்படுத்தினார் (2:19; 3:16, 21). இது பவுலின் நிருபங்களில் பொதுவான வார்த்தையாக உள்ளது.[12] மேற்கத்தியக் கலாச்சாரத்தின் மிகமுனைப்பான தனிநபர் உரிமைத்துவமானது, “மனச்சாட்சி” என்பதைப் பற்றிய புரிந்து கொள்ளுதலை முற்றிலும் தனிப்பட்ட வகையிலான நிபந்தனைகளில் வழிநடத்தியுள்ளது. இது ஒருவரின் செயல்பாடுகளைக் கண்டனம் பண்ணவோ அல்லது அங்கீகரிக்கவோ அவருக்குள்ளாக இருக்கும் குரலாகும். மனச்சாட்சி என்பது தனிப்பட்ட விழிப்புணர்வாக இருந்தது என்பது மேற்கத்திய

பிரபலமான பயன்பாட்டிற்கு இணையான கிரேக்கக் கருத்தாகும். பழங்கால மக்கள் இதை மற்றவர்களுடனான உறவுமுறையில் தனிப்பட்ட விழிப்புணர்வு என்பதாகப் புரிந்துகொண்டனர் என்பதே வேறுபாடாக உள்ளது. ஒருவர் தம்மை மற்றவர்கள் எவ்வாறு அங்கீகரிக்கின்றனர் அல்லது அங்கீகரிக்காமல் இருக்கின்றனர் என்பது பற்றிய அவரது மன உணர்வாக இருந்தது. **நல் "மனச்சாட்சி"** கொண்டிருத்தல் என்பது, ஒருவர் தம்மீது தேவனும் தம் சமகாலத்தவர்களும் சாதகமான முடிவை உரைக்கும்படி எதிர்பார்த்து அதற்கேற்ற வகையில் நடந்து கொள்ளுதல் என்பதாக இருந்தது. "மனச்சாட்சி" என்பதன் ஒழுக்கரீதியான உருவளவு, வடிவமைக்கப்பட்டு சமுதாயத்தில் தேவனுடனும் மற்றவர்களுடனும் நிலவுவதாக உள்ளது. ஒழுக்கரீதியான விழிப்புணர்வு என்ற வகையில் "மனச்சாட்சி" என்ற கருத்து *ex nihilo* ("ஒன்றும் இல்லாமை") யில் இருந்து தனிநபருக்குள் குதித்து எழும்புகிறது என்ற கருத்து பேதுருவுக்கு அந்நியமானதாக இருந்தது. அப்போஸ்தலர் இங்கு, விசுவாசிகள் தங்களைத் தூஷிப்பவர்கள் வெட்கப்படுதலை விளைவிக்கும் "நல்மனச்சாட்சி" கொண்டிருக்க வேண்டும் என்று உறுதிப்படுத்தினார். அவர்களைக் குற்றம் சாட்டுபவர்கள் வெட்கப்படுத்தப்படுதல் என்ற நோக்கத்தைக் கொண்டிருக்கும் "நல்மனச்சாட்சி" உடையவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் இங்கு கூறவில்லை.[13]

விசுவாசியின் "நல்மனச்சாட்சி" அவரை ஆதரித்து அவர் "தற்காப்பு வாதம் ஏற்படுத்த" அழைக்கப்படும்போது அவருக்குத் தைரியத்தைக் கொடுக்கிறது. அவர் தமக்கு எதிராகத் தொடுக்கப்படும் தீமையான குற்றச்சாட்டுகள் யாவும் புறங்கூறுதலைத் தவிர அதிகமானவைகளாக இருப்பதில்லை என்பதை அறிகிறார். 1 பேதுரு 2:12உடன் பல வினை இணைச்சொற்கள் உள்ளன. இவ்விடத்தில் அப்போஸ்தலர், கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் புறஜாதியார் தொடுக்கும் புறங்கூறுதலின் இயல்பைப் பற்றிய குறிப்பு எதையும் நமக்குத் கொடுக்கவில்லை, ஆனாலும் இதை யூகிப்பது சிரமமாக இருப்பதில்லை. நூற்றாண்டுகள் விரிகையில், கர்த்தருடைய இராப்போஜனத்துடன் தொடர்புடைய கிறிஸ்துவின் மாம்சம் மற்றும் இரத்தம் என்ற கருத்து, கிறிஸ்தவர்கள் தங்கள் சபை கூடுகைகளில்காமக்களியாட்டம் மனித மாமிசம் உண்பவர்கள் என்ற குற்றச்சாட்டிற்கு வழிநடத்திற்று. கிறிஸ்தவர்கள் தங்கள் சபை கூடுகைகளில் காமக்களியாட்டம் நிகழ்த்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். மற்றவர்கள் ஆராதித்த கடவுள்களை அவர்கள் ஆராதியாமல் இருந்ததால் அவர்கள் நாத்திகர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டனர். கடவுள்களுக்கு ஆராதனையும் பலிகளும் செலுத்தப்பட்ட பொது விழாக்களில் பங்கு பெற அவர்கள் மறுத்ததால், அவர்கள் மனித குலத்தை வெறுத்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டனர். அவமதிப்பு மற்றும் புறங்கூறப்படுதல் பற்றிய பேதுருவின் குறிப்பு, அவரது வாசகர்களின் துன்பங்கள் வாய்மொழியால் ஏற்பட்டது என்பதை, அதாவது குறைந்த பட்சம் அந்த வேளையிலாவது, அது சிறையில் அடைக்கப்படுதலாகவும் கொல்லப்படுதலாகவும் இல்லாதிருந்தது என்று கருத்துத் தெரிவிக்கிறது.

கிறிஸ்தவர்களின் **"நல்ல நடக்கை"** யானது, புறங்கூறப்படுதலுக்கு எந்தச் சான்றும் இராதபடிக்கு சுய உறுதிப்பாடு வாய்ந்ததாக இருக்கும் என்பதே இங்கு எதிர்பார்ப்பாக உள்ளது. அவர்கள் **"நல்மனச்சாட்சி"**

கொண்டிருக்கும்போது, **கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் ... வெட்கப்படும்படிக்கு** என்பதே விளைவாக இருக்கும். "மனச்சாட்சி" என்பதைப் போன்றே "வெட்கப்படுதல்" என்பதன் கருத்தும், நவீன மேற்கத்திய உலகத்தில் செய்வதைக் காட்டிலும் அதிகமாக கிரேக்க - ரோமானிய நாடுகளின் பழங்கால மக்களுக்கு மிகப்பலத்த சமூக அளவீட்டைக் கொண்டிருந்தது. "வெட்கம்" என்பது தவறுக்கு வருந்தும் அல்லது சுயகுற்றம் சாட்டிக்கொள்ளும் உள்ளான குணமாக இருக்கவில்லை. மாறாக அது, ஒருவர் தமது சமகாலத்தில் வாழ்பவர்களால் பொதுவாக வெறுக்கப்படும் விஷயங்களைச் செய்ததால் விளைந்த நிலைப்பாடாக இருந்தது. "வெட்கம்" அடையாதிருத்தல் என்பது "நல்மனச்சாட்சி" கொண்டிருத்தல் போன்றதாகவே இருந்தது இப்படிப்பட்ட விஷயத்தில் ஒருவர் தமது சககுடிமக்களை, தமது நடக்கைக்காக மன்னிப்பு எதுவும் கேட்டிராத கண்களுடன் கண்ணோக்கினார். கிறிஸ்தவர்களின் **"கிறிஸ்துவுக்கேற்ற நல்ல நடக்கையை"** அவிசுவாசிகள் எவ்வளவு அதிகமாக உற்றுநோக்கினார்களோ, அவ்வளவு அதிகமாக அவர்களின் சொந்த நடக்கை பற்றிய அவர்களின் விழிப்புணர்வு, அவர்களின் சமகாலத்தவர்களால் நியாயந்தீர்க்கப் பட்டபடி, வெட்கக்கேடானதாக இருந்தது. இதுவே விசுவாசிகள் தங்கள் விரோதிகளை வாயடைக்கும் வழியாக இருந்தது. அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் புறங்கூறியவர்களை அவமதித்தல் என்பது இயேசு விட்டுச் சென்றிருந்த மாதிரியின்படி இல்லாத நிலையாக இருந்தது (2:23).

வசனம் 17. பேதுரு தமது வாசகர்கள் காட்சிப்படுத்த வேண்டிய நேர்மையான நடத்தையை, வெட்கக்கேடு இல்லாத வகையில் வாழுதலைப் பின்வைத்துப் போகமாட்டார். ஒரு புதிய மார்க்கம் பட்சபாதமற்ற வகையில் கேள்விப்படுதலை ஆதாயப்படுத்துதல் எப்போதுமே சிரமமாக உள்ளது. புதிய மார்க்கம் ஒன்றிற்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள், சமூகத்தில் தவறாகப்போகும் அற்ப விஷயங்களுக்கு முதலாய்க் குற்றஞ்சாட்டப்படுதலைப் பெறுகின்றனர். கிறிஸ்தவர்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. அவர்கள் உண்மையிலேயே தவறாக நடந்து அதனால் தங்களைச் சுற்றிலும் இருந்த அவிசுவாசிகளின் சமூகத்தினால் துன்புறுத்தப்படும் சந்தர்ப்பம் ஒன்றை ஒருக்காலும் அவர்களுக்குக் கிறிஸ்தவர்கள் தரக்கூடாது என்பதைப் பற்றியே பேதுரு அக்கறையாக இருந்தார். **தேவனுக்குச் சித்தமானால்** பாடுகள் வரும் என்று அவர் கூறினார்; ஆனால் அதில் உண்மையின் துணுக்கு சிறிதளவைக் கூடப் புறங்கூறுபவர்கள் கொண்டிருக்க அவர் விரும்பவில்லை. பெஸ்ட் அவர்கள், "துன்புறுத்துபவர்கள் பெரும்பாலும் தாங்கள் யாரைத் துன்புறுத்துகின்றனரோ அவர்களால் கோபப்படுகின்றனர் மற்றும் அவர்களின் நல்நடக்கையால் வெற்றிகொள்ளப்படுவதில்லை" என்று விளக்கம் கூறினார்.[14] விஷயம் அப்படி இருந்தாலும்கூட, உங்கள் "நல்மனச்சாட்சி" யானது, **தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், ... நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்** என்று சாட்சி கூறட்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டார்.

விசுவாசிகள் "தீமை செய்து பாடநுபவிப்பதிலும் நன்மை செய்து பாடநுபவிக்கும்படி" இவ்வசனம் அழைக்கும்போது, இதில் குறைந்தபட்சம் இரண்டு சாத்தியமான அர்த்தங்கள் உள்ளன. கிறிஸ்தவர்களின்

மீதான குற்றச்சாட்டுகள் உண்மையாயிருக்கும்பட்சத்தில், அவர்கள் எதிர்த்து நிற்கும்போது, அது அவிசுவாசிகள் அதிகம் துன்பம் தரும் சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது (காண்க 2:20; 3:9). தீமைக்குத் தீமை செய்தல் என்பது தவறைக் கூட்ட மட்டுமே செய்யும். விஷயம் அப்படி இருக்கும்போது, தவறாகத் துன்புறுத்தப்படுதலைச் சகித்து அநுபவித்தலே மேன்மையானது, அவசியமானால் எந்த எதிர்ப்பும் இன்றி அதைச் செய்ய வேண்டும். அப்போஸ்தலர் 2:12ல் தாம் கூறிய **"நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்"** என்பதை இங்கு வேறு வார்த்தைகளில் விளக்கப்படுத்தி இருக்கலாம்.

தீமை செய்து அதற்காக, இனி வரவிருக்கும் உலகத்தில் பாடநுபவிப்பதைக் காட்டிலும், நன்மை செய்து அதற்காக இந்த உலகத்தில் பாடநுபவித்தல் மேன்மையானது என்று பேதுரு எச்சரிக்கை செய்திருக்கும் சாத்தியக்கூறும் இங்கு உள்ளது. பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, கர்த்தருடைய மறுவருகை என்பது அவரின் சிந்தையில் இருந்து தொலைவில் இல்லை என்ற காரணத்தினால், பிந்திய இந்த விளக்கம் ஈர்ப்புள்ளதாக இருக்கிறது.[15] இவற்றிற்கு இடையில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்து கொள்ளுதல் என்பது கடினமாக உள்ளது, ஆனால் முந்திய விளக்கம் அதிகம் சாத்தியமானதாக உள்ளது. அப்போஸ்தலர், தமது வாசகர்கள் குற்றம் சாட்டப்படுதலுக்கு மேலான வாழ்வின் வழியை முன்வைக்க வேண்டும் என்றும் புறஜாதியாருக்கு முன்பாக தேவபக்தியுள்ள உதாரணத்தை வைக்க வேண்டும் என்றும் அக்கறையாயிருந்தார்.

கிறிஸ்தவர், தமது மார்க்கரீதியான காட்சிப்படுத்துதலைச் செய்வதில், மனிதர்களிடம் இருந்து புகழ்ச்சியைப் பெறுதல் (காண்க மத்தேயு 6:1) மற்றும் எல்லாருக்கும் முன்பாக நேர்மையாயிருத்தல் பற்றிய தமது நடக்கை குறித்து அக்கறையாயிருத்தல் ஆகியவற்றிற்கு இடையில் கவனம் நிறைந்த சமானத்தன்மை ஒன்றைப் பராமரிக்க வேண்டும். விசுவாசி தமது நற்பெயர் பற்றி அக்கறை கொண்டிருத்தல் ஏற்புடையதே. ஒரு யூத ஞானி கூறியபடி, "உங்கள் (நற்) பெயர் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்; அது ஆயிரம் பொற்குவியல்களைக் காட்டிலும் அதிகநாட்கள் உங்களை வாழவைக்கும்."[16]

நமது பாவங்களுக்காக நேர்ந்தது கிறிஸ்துவின் மரணம் (3:18-22)

[18]ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். [19]அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். [20]அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள். [21]அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானம ானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும்

நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது; [22]அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

அநீதியான மனிதகுலத்தின் பாவங்களுக்குப் பதிலாக இயேசு பட்ட பாடுகள் பற்றிய நேரடியான கூற்றுடன் பேதுரு, புதிய ஏற்பாட்டின் மிகக் கடினமான வசனப்பகுதிகளில் ஒன்றை அறிமுகப்படுத்தினார். இருப்பினும் நாம், அவர் முன்வைத்த நேர்த்தியான கருத்துக்கள், அவரது வார்த்தைகளின் முழுமையான வலிவாக்கம் தெளிவாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்றபோது பாவத்தில் இருந்து இரட்சிக்கப்படுகின்றனர். அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாக தேவனுடைய வலதுபுறத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்பவரின் ஆசீர்வாதங்களில் பங்கு பெறுகின்றனர். தம்முடைய ஜனங்களை இரட்சிப்பதற்காக சிலுவையில் மரித்த அதே கிறிஸ்து இப்போது வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும் கொண்டவராக இப்போது தமது ஆளுகை செய்கிறார். இதனால், இப்போது பாடநுபவிப்பவர்கள் மகிழ்ச்சி கொள்ள முடியும்.

***வசனம் 18.** இது, **கிறிஸ்துவின்** பாடுகளைப் பற்றிச் சிந்திக்காமல் பாடநுபவித்தலைப் பற்றிப் பேதுருவினால் சிந்திக்க இயலாதிருந்தது போன்றுள்ளது, மற்றும் கிறிஸ்து **பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்** என்பதைப் பற்றிச் சிந்திக்காமல் அவரது (கிறிஸ்துவின்) பாடுகளைப் பற்றி அவரால் [பேதுருவினால்] சிந்திக்க இயலாதிருந்தது. 2:19, 20ல் அடிமைகளின் உபத்திரவங்கள் சிந்தனையின் இதே வரிசைக்கு வழிநடத்தியிருந்தன. இயேசுவின் வாழ்வு முழுவதுமே பாடுகளினால் பண்புப் படுத்தப்பட்டுள்ளது என்பதில் ஒரு கருத்து உள்ளது, ஆனால் மனிதரின் பாவத்திற்காக அவர் பாடநுபவித்தது என்பதே இங்கு பேதுரு ஆர்வம் காண்பித்த விஷயமாக உள்ளது. மனிதகுலத்தின் பாவங்களுக்குப் பதில்பலியாக இயேசு மரித்தார் என்ற கருத்து புதிய ஏற்பாட்டில் ஆழமாக ஓடுகிறது. இதைப் பவுல் பின்வருமாறு சொற்கலையுடன் விவரித்தார்: "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21).*

*2:21-25 வசனப் பகுதியில் பேதுரு, கிறிஸ்துவின் முன்னுதாரணத்தின் மீது கவனம் குவித்திருந்தார், ஆனால் இவ்வசனத்தில் அவரது உதாரணம் அதைவிட குறைவான விஷயமாயிருந்தது. இயேசுவின் சீஷர்கள் (பின்பற்றுபவர்கள்), **அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப்** பாவங்களினிமித்தம் **ஒருதரம்** பாடுபட்டார் என்ற கர்த்தருடைய உதாரணத்தைப் பின்பற்றவேண்டும் என்று பேதுரு எதிர்பார்க்கவில்லை. இயேசுவின் சீஷர்கள் அநுபவிக்க வேண்டிய பாடுகள் எதுவாக இருந்தாலும், இயேசு பாவங்களைச் சுமந்தது போன்று அவர்கள் சுமக்க மாட்டார்கள் (2:24), அல்லது அவர் **ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்** என்பது அவர்களுக்கு நடைபெறாது. பேதுரு தமது வாசகர்களுக்கு, எப்படி பாடுபடவேண்டும் என்பதை இயேசு காட்டினார் என்பதைக் காட்டிலும் **நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி** இயேசு*

மரித்தார் என்பதை நினைவூட்டுதலே இவ்வசனத்தில் பேதுருவின் நோக்கமாக இருந்தது. இயேசு ஒரேதரம் எல்லாருக்காகவும் மரித்தார் என்பது எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் அடிக்கடி கூறிய ஆய்வுக்கருத்தாக உள்ளது (எபிரெயர் 7:27; 9:12, 26, 28; 10:10, 14).

பாவங்களுக்காகக் கிறிஸ்துவின் மரணம் என்பதில் ஒரு தனித்தன்மையும் முடிவுத்தன்மையும் உள்ளது. அதுவே **"கிறிஸ்துவும் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்"** என்பதன் மறைபொருளாக உள்ளது. பாவியானவர் தேவனுடன் ஒப்புரவாகுதலுக்கு, மனித பாவங்களுக்காகக் கூடுதலான பாடநுபவித்தல் எதுவும் தேவைப்படுவதில்லை. சிலுவையே முழுவதும் போதுமானதாக உள்ளது.[17] எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ஆரோனின் ஆசாரியத்துவத்தில் செய்யப்பட்டது போன்று, ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்து பலிசெலுத்துவதில்லை; மாறாக அவர் "அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு" தம்மையே கையளித்தார் என்று வாதிட்டார் (எபிரெயர் 9:24-28). எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில், இயேசு ஆசாரியராகவும் பலிப்பொருளாகவும் கூறப்பட்டுள்ளார். 1 பேதுரு நிருபத்தில், அவர் ஒப்புயர்வற்ற வகையில் பலியாக, களங்கமற்ற பலியாக, "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப்" பலியானார் என்று கூறப்படுகிறது.

பேதுருவின் தொடக்ககால வாசகர்களும் தொடர்ந்து வரும் மற்ற எல்லா வாசகர்களும் **"அநீதியுள்ளவர்கள்"** என்ற தலைப்பின்கீழ் இருக்கின்றோம். பவுலும் பேதுருவும் ஒரே உறுதிப்பாட்டை ஏற்படுத்தினர்: "எல்லாரும் பாவஞ்செய்து" [இருக்கிறோம்] (ரோமர் 3:23). கிறிஸ்து பாவமற்றவராயிருந்து பட்ட அவரது பாடுகளின் காரணமாக, அவரால் **"நம்மைத் தேவனிடத்தில் சேர்க்க"** முடிகிறது. பேதுரு இதை 2:24, 25ல் கூறியிருந்தார், ஆனால் இங்கு அப்போஸ்தலர் இன்னும் சற்று தூரம் சென்றார். சிலுவையில் கிறிஸ்துவின் பாடுகளும் மரணமும் அவ்வரவாற்றின் முடிவாக இருக்கவில்லை. சிலுவை என்பது தோல்வியாக இருக்க வில்லை. அவர் **மாம்சத்திலே மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டாலும்** தேவன் சிலுவையை வெற்றியாகத் திருப்பினார் அவர் **"ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்."** இந்த இரண்டாவது கூற்றைப் பேதுரு கூறுவதை நாம் சற்றும் எதிர்பார்ப்பதில்லை. இயேசு **"மாம்சத்திலே கொலையுண்டார்"** என்பது மாத்திரமல்ல, ஆனால் அவர் "மாம்சத்தில் உயிர்ப்பிக்கவும்பட்டார்." கர்த்தரின் உடலில் ஆணியால் உண்டான காயத்துளைகளில், தோமா தமது விரல்களை இட்டுப்பார்க்கும்படி அவரைக் கர்த்தர் அழைத்தபோது இதைத் தெளிவாக்கினார் (யோவான் 20:25, 27). மாம்ச உடலில் இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிப் பேதுரு எதுவும் உரைக்கவில்லை. அவரது கருத்து வேறுபட்டதாயிருந்தது. இயேசு, தம்மைச் சிலுவையில் அறைந்த மனிதர்களின் கைகளில், "மாம்சத்தில்" மரித்தார். அவர் "ஆவியிலே" உயிர்ப்பிக்கப்பட்டார்.

இந்த வார்த்தைகளுடன் பேதுரு, புதிய ஏற்பாட்டில் மிகவும் கடினமான வசனப்பகுதிகளில் ஒன்றிற்கு, இந்த நிருபத்தில் நிச்சயமாகவே மிகவும் கடினமான வசனப்பகுதிக்குக் கடந்து சென்றார். 1930ம் ஆண்டில் J. A. மெக்குல்லோக் அவர்கள் இவ்வசனப்பகுதியையும் மற்றவற்றையும் ஆராய்ச்சி செய்தார். இவ்வசனப்பகுதிகள் தொடக்ககால சபையில், இயேசு தமது

சிலுவை மரணத்திற்குப் பின்பு மரித்தவர்களின் உலகத்திற்குச் சென்றார் என்ற பிடிவாதமான பாரம்பரியக் கொள்கைக்குத் தொடர்புடையவையாக இருந்ததால், அவர் இதைச் செய்தார்.[18] மெக்குல்லோக் அவர்களின் புத்தகம் வெளியிடப்பட்ட நாளில் இருந்து, கல்வியாளர்கள் இவ்வசனப் பகுதிக்குக் கணிசமான ஆற்றலை அர்ப்பணித்துள்ளனர். பேதுருவின் இந்த வார்த்தைகளுக்குப் பல விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் உள்ளடங்கியிருக்கும் பிரச்சனைகள் சிக்கலானவை. அவற்றை முழுவதும் வகைப்படுத்துதல் சிரமமாக இருக்கும். NASB வேதாகமம் "ஆவியிலே" (Spirit) என்ற வார்த்தையின் முதல் எழுத்தைப் பெரிய எழுத்தில் இடுவதில்லை என்பது இந்த இடத்தில் கவனிக்கத் தக்க விஷயம ாக உள்ளது. Spirit என்ற வார்த்தை பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது என்று மொழிபெயர்ப்பாளர்கள் முடிவு செய்யும் இடங்கள் எல்லாவற்றிலும், இவ்வார்த்தையின் முதல் எழுத்தைப் பெரிய எழுத்தில் இடுவது என்பது மொழிபெயர்ப்பாளர்கள் சீராகச் செய்துள்ள விஷயமாகும். NASB வேதாகமத்தைப் போலின்றி NIV வேதாகமம் "Spirit" என்று குறிப்பிட்டுள்ளது. இவ்விடத்தில் பேதுரு பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிட்டார் என்று NIV வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் நம்பினர். கிரேக்க மொழியில் "Spirit" பெரிய எழுத்துக்களில் இடப்படவில்லை. இது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறதா அல்லது வேறு ஏதேனும் கருத்தில் ஆவி என்பதைக் குறிக்கிறதா என்பதைச் சந்தர்ப்பப் பொருள்தான் தீர்மானம் செய்ய வேண்டும். NASB மற்றும் NIV ஆகிய இரு மொழிபெயர்ப்புகளுமே "spirit" அல்லது "Spirit" என்ற வார்த்தையைத் தேர்ந்துகொள்ளும்போது அதற்கு ஒரு விளக்கத்தை அளிக்கின்றன.

வசனம் 19. இவ்வசனம் உடனடியாகக் கேள்விகளை எழுப்புகிறது. முதலில் வரும் **அந்த** என்ற சொற்றொடரில் உள்ள வினையாலணையும் பெயர்ச்சொல் தெளிவற்றதாக உள்ளது. இதற்கு நெருங்கியதாக முந்திய வசனத்தில் "ஆவி" என்ற பெயர்ச்சொல் உள்ளது, இதை NIV வேதாகமம் பரிசுத்த ஆவியானவர் என்பதாக எடுத்துக்கொள்கிறது. எனவே "அந்த ஆவியிலே" என்பதற்குப் பதிலாக NIV வேதாகமம் "அவர் மூலமாக" என்ற வார்த்தைகளை அளிப்பதில் வியப்பு எதுவுமில்லை. NIV வேதாகமத்தைப் பின்பற்றினால், இயேசு பரிசுத்த ஆவியானவர் மூலமாக **போய் பிரசங்கித்தார்**, அதாவது அவர் பரிசுத்த ஆவியானவர் அளித்த வல்லமையினால் சென்றார் என்று ஒருவர் புரிந்து கொள்வார். NIV வேதாகமம் இதை வலிவாய் நியாயப்படுத்துகிறதா? *En* என்ற கிரேக்க முன்னிடைச் சொல்லை "மூலமாக" என்று மொழிபெயர்த்தல் ஒரு சாத்தியக்கூறாக உள்ளது, மற்றும் இவ்வசனத்தின் இலக்கணம், முந்திய வசனத்தில் உள்ள "ஆவி" யை இந்த கிரேக்கப் பிரதிப்பெயர்ச்சொல் குறிக்க அனுமதிக்கிறது. விஷயம் அவ்வாறு இருந்தால், "அவர் மூலமாக" என்பது விரும்பித் தேர்ந்து கொள்ளப்படா விட்டாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக உள்ளது. இது பேதுரு கூற விரும்பிய விஷயமாக இருந்ததா இல்லையா என்பது தான் கேள்வியாக உள்ளது. NIV வேதாகமம் ஆங்கில வாசகருக்கு சாத்தியமான விளக்கத்தை அளித்துள்ளது, ஆனால் அந்த மெ ாழிபெயர்ப்பு அவ்வசனத்தை சரியாக விளக்கப்படுத்தியுள்ளதா என்பது கேள்விக்குரியதாக உள்ளது.

"Which" அல்லது "whom" என்ற பிரதிப்பெயர்ச்சொல்

பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடலாம், ஆனால் அது அவசியமாய் அப்படி இருக்க வேண்டியதில்லை. மொழிபெயர்ப்புகள், அதுவும் விசேஷமாகச் சமீப காலத்திய மொழிபெயர்ப்புகள், அத்தியாவசியமாகப் பிரதிபலிக்காதிருந்தாலும், “in which” (“இதிலே”) என்பதற்கான (*en hoi* என்ற) கிரேக்கச் சொற்றொடர், 1 பேதுரு நிருபத்தில் மற்ற நான்கு இடங்களில் (1:6; 2:12; 3:16; 4:4) காணப்படுகிறது. NASB வேதாகமம் இதை “இதிலே” அல்லது “விஷயத்தில்” என்று சீர்பொருத்தமாக மொழிபெயர்க்கிறது. மற்ற இடங்களில் இந்தச் சொற்றொடர், அதாவது இந்தப் பிரதிப்பெயர்ச்சொல்லானது, அவ்விடத்துச் சந்தர்ப்பப்பொருளினால் தரப்பட்ட அதற்கு முந்திய சிந்தனையைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. இவ்வாறாக 1:6ல் பேதுரு “இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்” என்று எழுதும்போது, “இதிலே” என்ற பிரதிப்பெயர்ச்சொல், 1:4, 5ல் விவரிக்கப்பட்டுள்ள எல்லா சூழ்நிலைகளிலும் சந்தோஷம் அடைவதைக் குறிக்கிறதே தவிர, வேறு தனிப்பட்ட விஷயம் எதையும் குறிப்பதில்லை. அதுபோன்றே, நமக்கு முன்பாக உள்ள இவ்வசனத்தில், “**அந்த**” என்பது “ஆவியை” குறிக்காமல், கிறிஸ்துவைப் பற்றிய முந்திய விவரிப்பை, அதாவது அவர் மரித்து பின்பு உயிர்ப்பிக்கப்பட்டதை, குறிப்பதாக இருக்கலாம். ஒருவேளை பேதுரு, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுடன் இணைந்திருந்த நிகழ்வுகளின் ஓட்டத்தில், அவர் “பிரசங்கித்தார்” என்று கூறியிருக்கலாம். அப்படியென்றால் பின்வருபவை தேர்ந்து கொள்ளப்படக் கூடிய விஷயங்களாக உள்ளன: (1) பரிசுத்த ஆவியானவர் என்ற முகமையினால் இயேசு சென்றார் என்று பேதுரு கூறியிருக்கலாம், அல்லது (2) அவர் ஆவிக்குரிய வகையில் சென்றார் என்றோ அல்லது (3) அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் அடைப்பிடப்பட்ட நிகழ்வுகளின் ஓட்டத்தில் அவர் சென்றார் என்றோ அவர் குறிப்பிட்டிருக்கலாம். இவற்றில் முதல் மற்றும் இரண்டாம் தெரிவுகளில், பிரதிப்பெயர்ச்சொல்லுக்கு முன்னால் வரும் வார்த்தை “ஆவி” என்பதாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. முதல் நிகழ்வில் இது (NIV வேதாகமத்தில் உள்ளது போன்று) பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதாக உள்ளது; இரண்டாவதாக வரும் ஆவி என்ற சொல்லில் இது (NASB வேதாகமத்தில் உள்ளது போன்று) பொதுவாக “ஆவிக்குரிய வகையில்” என்று அர்த்தப்படுவதாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. “அந்த” என்ற முன்சொல் “ஆவியானவரை” அல்லது “ஆவியை” குறிப்பதாக இருக்கலாம், அல்லது அது கிறிஸ்து மரித்து உயிர்த்த நிலையின் சூழ்நிலையைக் குறிப்பதாக இருக்கலாம். ஒருவர் எடுத்துக் கொள்ளும் விளக்கம் எதுவாக இருந்தாலும், வசனப்பகுதியின் எஞ்சியவற்றைப் புரிந்துகொள்ளும் வழியில் அது பெரிதும் செயல்விளைவை ஏற்படுத்தும்.[19] இவ்வசனங்களினால் எழுப்பப்பட்டுள்ள மற்ற பிரச்சனைகளை ஆராய்ந்து பார்க்கும் வரையில், இந்தச் சாத்தியக்கூறுகளுக்கிடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ளுதலை நாம் தாமதிப்போம்.

கேள்விகள் தொடருகின்றன. “அவர் போய் … பிரசங்கித்தார்” என்பது நேரடியாகவோ அல்லது உருவக நடையிலோ புரிந்துகொள்ளப்படலாம், வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் இயேசு தாமே நபர்த்துவத்தில் சென்றிருக்கலாம், அல்லது உடலற்ற வகையில் அல்லது பிரதிநிதித்துவமாகச் சென்றிருக்கலாம். எப்படியிருப்பினும், இயேசு **போய்க் காவலிலுள்ள**

ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று பேதுரு கூறியபோது, "காவலிலுள்ள ஆவிகள்" என்பதற்கு உருவக ரீதியான வாசித்தல் ஒன்று தேவைப்படுகிறது. கம்பிகளையும் காவலர்களையும் உடைய உண்மையான ஒரு சிறைச்சாலை, ஆவிகளைப் பிடித்து வைத்துள்ளது என்பது கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும். ஆவிகள் ஏதோ ஒரு வகையான சிறைச்சாலையில் இருந்தன, ஆனால் அது மனிதர்கள் அறிந்துள்ளது போன்றதல்ல. NASB வேதாகமம் "உள்ள" [இப்பொழுது அதாவது "now"] என்ற வார்த்தையைச் சாய்வெழுத்துக்களில் இட்டுள்ளது, அது இவ்வார்த்தை கிரேக்க மொழி வேதாகமத்தில் இல்லை என்பதை அர்த்தப்படுத்துகிறது. NASB வேதாகமம் "now" என்ற வார்த்தையை உட்செருகும்போது, அது இயேசு அந்த ஆவிகளுக்குப் பிரச்கித்தபோது அவைகள் "காவலில்" இருக்கவில்லை, ஆனால் பேதுரு இதை எழுதியபோது அவைகள் காவலில் இருந்தன என்ற கருத்தைத் தருகிறது. "Now" என்ற வார்த்தையை உட்செருகியதன் மூலம் NASB வேதாகமம் நன்கு செயல்பட்டுள்ளதா இல்லையா என்பதை, வேதாகமத்தை வாசிப்பவர், சந்தர்ப்பப் பொருளின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும்.

இயேசு பிரசங்கிப்பதைக் கேட்ட "ஆவிகள்" அந்த வேளையில் காவலில் இல்லை என்றால், அவைகள் எங்கே இருந்தன? "காவலில்" என்பது அர்த்தப்படுத்துவது என்ன? இக்கேள்விகளுக்கான பதில்கள், இயேசு பிரசங்கிப்பதைக் கேட்ட "ஆவிகள்" யாராக இருந்தன என்பதைச் சார்ந்துள்ளது. 3:20ன்படி, அந்த ஆவிகள் நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாமற் போனவைகளாக இருந்தன. இது, வெள்ளப்பெருக்கிற்கு முன்னால் வாழ்ந்த பொல்லாத தூதர்கள், ஆதியாகமம் 6:1-4ல் உள்ள "தேவகுமாரர்" ஆகியோரைப் பற்றிய குறிப்பாகும் என்று சிலர் வாதிடுகின்றனர். ஆதியாகமம் 6:1-4ல், "மனுஷகுமாரத்திகளை" மனைவிகளாக்கிக் கொண்ட "தேவ குமாரர்" என்பதில் அசாதாரணமான சமகாலத்திய ஆர்வம் இருந்தது என்பது உண்மையாக இருக்கையில், அந்த "தேவ குமாரர்" (அவர்கள் யாராக அல்லது என்னவாக இருந்தாலும்) அவர்களைப் பற்றிப் பேதுரு ஆர்வம் கொண்டிருக்கவில்லை. பேதுரு தமது நாட்களில் இருந்த மக்கள் மீது தேவன் கொண்டு வரும் நியாயத்தீர்ப்பு பற்றி அக்கறை கொண்டவராக இருந்தார். தூதர்கள் மீது வரும் நியாயத்தீர்ப்பு பற்றி அவர் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. அவரது சொந்த நாட்களில் கீழ்ப்படியாமற்போன மக்களைப் போன்றே, நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாமற்போன மக்களும் தேவனுடைய கோபத்தைத் தூண்டினர். "மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்று ... கர்த்தர் கண்டு" (ஆதியாகமம் 6:5). நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாமற்போன "ஆவிகள்" அந்தத் தலைமுறையில் இருந்த பொல்லாத மக்களாவர்.

மக்களை "ஆவிகள்" என்று குறிப்பிடுதல் வழக்கத்திற்கு மாறானதாகும், ஆனால் நீண்ட நாட்களுக்கு முன்னரே மரித்துப் போனவர்களுக்கு அப்போஸ்தலர் வேறு எந்தப் பெயரைக் குறிப்பிடுவார்? வார்த்தையின் சாதாரணக் கருத்தின்படி அவர்கள் இனியும் மக்களாக, அதாவது மாம்சத்தில் உள்ள மக்களாக இருக்கவில்லை. நோவா உட்பட அக்காலத்தில் வெள்ளப் பெருக்கிற்குத் தப்புவிக்கப்பட்டு உயிர் வாழ்ந்திருந்த மக்களை, "ஆத்துமாக்கள்" (psuchai, 3:20) என்று வார்த்தையைப் பேதுரு

இவ்விடத்தில் பயன்படுத்துதலானது, "ஆவிகளின் பிதா" வானவர் "சரீரத்தின் தகப்பன்மார்களுக்கு" மேலாக வைக்கப்பட்டுள்ள இடமான எபிரெயர் 12:9ல் உள்ளதைப் போன்றதாகும். பேதுருவைப் போன்றே எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரும் "ஆவிகள்" என்ற வார்த்தையை, (இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தில்) மாம்சத்தில் உயிரோடே இராத (அதாவது மரித்துப்போன) மனிதர்களுக்குப் பயன்படுத்தினார். "ஆவிகள்" "காவலில்" இருந்தன என்று பேதுரு கூறியபோது நோவாவின் நாட்களில் கலகம் செய்திருந்த மக்கள், இப்போது மாம்சத்தில் இல்லை என்றாலும், மரித்தவர்களின் வட்டாரத்தில் அடைக்கப்பட்டிருந்தனர் என்று அவர் உறுதிப்படுத்தினார். "ஆவிகள்" என்பது நோவாவின் தலைமுறையில் கீழ்ப்படியாமற்போன மக்களைக் குறிக்கிறது. பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, அவர்கள் பாதாள வட்டாரத்தில் இருந்தனர். அதுவே அவர்களின் சிறையாக இருந்தது. தீர்க்கதரிசனம் பற்றிப் பழகி அறிந்துள்ளவர்களுக்கு, சிறைச்சாலை என்ற வகையில் பாதாள வட்டாரத்தைக் குறிப்பிடுதல் அந்நியமான கருத்தாக இருப்பதில்லை. உதாரணமாக, எசேக்கியேல் தீர்க்கதரிசி, எகிப்தின் பராக்கிரமசாலிகள், சிறைச்சாலை போன்றுள்ள நிழலான வட்டாரமான பாதாளத்திற்கு இறங்கிச்சென்றிருந்தனர் என்று விவரித்தார் (எசேக்கியேல் 32:18-32). பேதுரு "காவல்" என்று குறிப்பிட்டது எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தில் உள்ள "பாதாளம்" என்பதற்குச் சமமானதாகும்.

இதைத் தொகுத்துரைப்பதென்றால், மரித்தோரின் உலகத்திற்கு, குறிப்பாக நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாமற் போனவர்களிடத்திற்கு இயேசு சென்று "பிரசங்கித்தார்" என்றாகிறது. இயேசு ஒரு செய்தியை அறிவித்தார். *Kerusso* என்ற வார்த்தை, ஒரு செய்தியை அறிவிப்பதற்கான பொதுவான வினைச்சொல்லாக உள்ளது. 4:6ல் பேதுரு, "சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்" என்று அர்த்தப்படும் *euangelizo* என்ற வினைச்சொல்லைப் பயன்படுத்துவார், ஆனால் இங்கு அல்ல. மரித்தவர்களுக்கு இயேசு பிரசங்கித்தது அல்லது அறிவித்தது என்ன? மரித்தவர்களுக்கு எதையாவது அறிவிக்க வேண்டும் என்று அவர் விரும்பியது ஏன்? இந்தக் கேள்விகளைக் கையாள்வதற்கு நாம் இவ்வசனத்தைப் பற்றி முதலில் எழுப்பிய பிரச்சனைக்குப் பின்செல்ல வேண்டும். பிரதிப்பெயர்ச்சொல்லுக்கு முன்னால் வரும் வார்த்தை என்ன? "அந்த" என்பதன் அர்த்தம் என்ன?

கிரேக்க வேதாகமம் மற்றும் NASB வேதாகமம் ஆகிய இரண்டிலும் 3:18 வசனத்தின் கடைசியில் உள்ளது "ஆவி" என்ற வார்த்தையாகும். இது இயேசு மாம்சத்தில் அடங்கியிருந்த வட்டாரத்தின் வேளையில் அவர் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார்; மற்றும் அவர் ஆவியின் வட்டாரத்தில் இருந்தபோது உயிர்ப்பிக்கப்பட்டார் என்று அர்த்தப்படுகிறது. இயேசு உயிர்ப்பிக்கப் பட்டார் என்று எளியவகையில் பேதுரு கூறாதது ஏன்? அவர் "ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்று கூற வேண்டியது ஏன்? "ஆவிக்கேற்ற மாளிகை" மற்றும் "ஆவிக்கேற்ற பலிகள்" என்பவற்றை அப்போஸ்தலர் குறிப்பிடும் 2:5ம் வசனத்தில் சற்றே உதவி இருக்கலாம். அங்கு அவர், மாளிகை மற்றும் பலிகள் என்பவை பொருள்சார்ந்தவையல்ல என்று அர்த்தப்படுத்துவதாகக் காணப்பட்டது. அவைகள் "ஆவிக்கேற்ற" விஷயங்களாக இருந்ததால், அவைகள் தேவனுடைய சந்தோஷத்திற்காகவும் தேவனுடைய அங்கீகாரத்திற்கு

ஏற்றவைகளாகவும் இருந்ததாக அர்த்தப்படுத்தின என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் அவைகள் பொருள்சார்ந்தவையாக இருக்கவும் இல்லை. "ஆவி" என்பது மாம்சமற்றதை அர்த்தப்படுத்தக் கூடுவது போன்றே, ஆவிக்கேற்ற என்பது நேரடியானதல்ல என்று அர்த்தப்படக்கூடும். 2:5ல் "ஆவிக்கேற்ற" என்பதன் பயன்பாடு, இயேசு மரணத்தை வெற்றிகொண்டதை பேதுரு புரிந்து கொண்டதற்கு ஒரு குறிப்பாக உள்ளது. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்பு அவரைத் தேவன் உயிர்ப்பித்தார். "ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்பதன் பொருள் சார்பற்ற, மாம்சமற்றதான அம்சம், 3:19ல் உள்ள "அந்த" என்பதன் பயன்பாட்டில் கொண்டுவரப்படுகிறது. மாம்சத்தில் இருப்பதற்கு ஆவியில் இருப்பதற்கும் இடையிலான வித்தியாசம் ஒன்றைப் பவுல் ஏற்படுத்தினார் (கொலோசெயர் 2:5). ஒருவர் நேரடியாக, சரீரரீதியாக இங்கிராதபோது, அவர் (ஆவிக்குரிய வட்டாரத்தில்) "ஆவியில்" இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

இயேசு "ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்று கூறியுள்ள நிலையில் பேதுருவின் சிந்தனை திசை மாறிற்று. அவர் கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியம், பாவங்களுக்காக அவர் மரித்தது மற்றும் அவரது உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் இருந்து, கிறிஸ்தவர்களை அடக்கிக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கும் உலகத்தின் கண்களில் கிறிஸ்தவர்கள் பழியினின்று விடுவிக்கப்பட்ட விஷயத்திற்குக் கடந்து சென்றார். பேதுருவின் சிந்தையானது, கர்த்தர் வெளிப்படுதலுக்கும் அவரது வெளிப்பாட்டில் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிற்கும் திரும்பிற்று. நியாயத்தீர்ப்பு பற்றிய இந்த ஆய்வுக்கருத்துதான் அவரை நோவாவினிடத்திற்கு எடுத்துச் சென்றது. தேவன், மனிதகுலத்தின்மீது உலகளாவிய வகையில் நியாயத்தீர்ப்பு கொடுத்திருந்த இன்னொரு வேளை இருந்தது. நோவாவின் காலத்தில் தரப்பட்டிருந்த நியாயத்தீர்ப்பு கிறிஸ்து இல்லாத நிலையில் நடைபெற்றிருக்கவில்லை என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பேதுரு விரும்பினார். ஆவிக்குரிய வகையில், பொருள்சார்பற்ற வகையில் நோவா தமது தலைமுறை வாழ்ந்திருந்த மக்களுக்குப் பிரசங்கித்தபோது, அவர்களுக்காக அவர் தேவனுடைய செய்தியை அறிவித்தபோது, நோவாவின் மூலமாகக் கிறிஸ்துவே பேசினார். மோசேயின் அல்லது ஏசாயாவின் நாட்களில் இருந்த உலகத்தைத் தேவன் நியாயந்தீர்த்து இருந்ததால், நோவா மூலமாகப் பேசினார் என்பதே இங்கு பொருத்தமானதாக உள்ளது. அந்த நாளில் தேவன், தம்மையும் தமது வல்லமையையும் தமது நோக்கத்தையும் வெளிப்படுத்தினார். பேதுருவுக்கும் அவரது வாசகர்களுக்கும் அவர்களுக்கு உலகப்பிரகாரமான நியாயத்தீர்ப்பு விதித்து அவர்களை அடக்கியவர்களுக்கும் கூடத் தேவன் தம்மை வெளிப்படுத்துவார். இயேசு ஆவிக்குரிய வகையில் நோவா மூலமாகப் பேசினார் அப்போது நியாயத்தீர்ப்பு வந்தது. அவ்வாறே இயேசு ஆவிக்குரிய வகையில் பேதுரு மற்றும் அப்போஸ்தலிக்க சாட்சியங்கள் மூலமாகப் பேசினார். அவர்களின் அறிவித்தலைத் தொடர்ந்து நிச்சயமாகவே நியாயத்தீர்ப்பு வரும்.

வசனப்பகுதிகளை இவ்வாறு புரிந்துகொள்ளுதல், அகுஸ்தீன் காலத்திற்கு (கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுற்கு) பின்திரும்பிச் செல்லுகிறது என்று கூறப்படுதலே நிலைத்துள்ளது, மற்றும் இது நவீன காலத்து பலமான

கல்வியாளர்களால் தற்காக்கப்படுகிறது. இயேசு சென்று அறிவித்தல் என்பது பொருள் வகையில் செல்லுதல் என்பதாயிராமல் ஆவிக்குரிய வகையில் நிகழ்ந்ததாகப் புரிந்து கொள்ளுதலே மிகச்சிறந்ததாகும். தேவனுடைய நியயாத்தீர்ப்பு உடனடியாகவும் உலகளாவிய வகையிலும் வரவிருந்த வேளையில், தேவனுக்காகப் பேசியவரான நோவா என்ற நபர்வழியாக இயேசு பேசினார். நோவா பேசியபோது இயேசு பேசினார்; பேதுரு பேசியபோது இயேசு பேசினார்.

3:19ஐப் பற்றிய இன்னொரு விளக்கமும் ஆழ்ந்த சிந்தனைக்குத் தகுதியானதாக உள்ளது. இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு இடையில், அவர் நேர்ப்பொருளில் மரித்தவர்களின் உலகத்திற்குச் சென்றார் என்ற உபதேசம், Descensus என்று அழைக்கப்படுகிறது, இது பழங்கால சபையில் பொதுவாக உரைக்கப்பட்டது. பாதாள உலகத்திற்கு அவர் சென்றதற்கான நோக்கம் என்ற வகையில் பல்வேறு விளக்கங்கள் இருந்தன. ஒருவேளை அது வெற்றியை அறிவிப்பதற்காக, விசுவாசிகளை மறு உறுதிப்படுத்தி அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவதற்காக மற்றும் துன்மார்க்கருக்கு ஆக்கினையை அறிவிப்பதற்காக நடந்திருக்கலாம். இந்த உபதேசத்தை ஆதரிக்க, நடபடிகள் 2:27 மற்றும் எபேசியர் 4:9 போன்ற வசனப்பகுதிகள் காண்பிக்கப்படுகின்றன. ரூஃபினுஸ் காலத்தில் (கி. பி. 360) இருந்து தொடங்கப்பெற்ற அப்போஸ்தலர் உபதேசத்தின் பிந்திய வடிவம் "அவர் நரகத்திற்கு இறங்கிச் சென்றார்" என்ற சொற்றொடரைக் கொண்டுள்ளது. காலத்தின் முடிவிற்காகக் காத்திருக்கும் ஆத்துமாக்கள் உள்ள வட்டாரத்திற்கு இயேசு இறங்கிச் சென்றார் என்றும், இதுவே இயேசுவும் கள்வனும் சிலுவையில் அறையப்பட்ட பின்பு சென்ற இடமாகும் என்றும் வாதிடப்படுகிறது (லூக்கா 23:43), இங்கு கீழ்ப்படிந்திருந்த மற்றும் கீழ்ப்படியாமற்போன ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்பிற்காகக் காத்துள்ளன.

சிலர் Descensus என்பதை "இரண்டாவது வாய்ப்பு" இறையியலாகக் காண முயற்சி செய்கையில், அது இந்த உபதேசத்தின் மறைவான கருத்தாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இயேசு பாதாளத்திற்கு இறங்கிச் சென்றதற்கு மற்ற காரணங்கள் உள்ளன. இயேசு தமது சிலுவை மரணத்திற்குப் பின்பு, அவர் ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டபோது, ஆவிஜீவிகளுக்கு அல்லது மரித்தோரின் ஆவிகளுக்குப் பிரசங்கிப்பதற்காகச் சென்றார் என்று நேர்ப்பொருளில் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டினார் என்பது கருதுவதற்கு கடினமான விஷயமாக உள்ளது. இருப்பினும் அதுவே பேதுரு அர்த்தப்படுத்துவதாக இருந்தால், உடனடியாகத் தொடரும் சிந்தனைக்கான அவரது வார்த்தைகளின் ஏற்புடையமையைக் காணுதல் கடினமானதாக உள்ளது. பாதாள உலகத்திற்கு இயேசு இறங்கிச் சென்றது என்பது தொடர்பற்ற சிந்தனை போன்று இந்த சந்தர்ப்பப் பொருளில் பொருந்துகிறது. மற்றும், பிரசங்கிப்பதற்காக இயேசு பாதாள உலகத்திற்கு இறங்கிச் சென்றார் என்ற கருத்தானது, புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியில் இருந்து மிகச்சிறந்த வகையில், தெளிவற்ற ஆதரவையே பெறுகிறது. இப்படிப்பட்ட ஒரு இறங்குதலைப் பேதுரு குறிப்பிட்டார் என்பது நினைத்துப் பார்க்க இயலாததாக உள்ளது, இது இவ்வாறு இருக்கச் சாத்தியக்கூறு இல்லை, "அந்த" என்ற பிரதிப்

பெயர்ச்சொல்லின் முன்வரும் சொல் "ஆவி" என்று நாம் முடிவு செய்கிறோம், இதுவே முந்திய வசனத்தின் கடைசிப்பகுதியில் வந்துள்ளது, மற்றும் அந்த ஆவி என்ற ஆவி சொல் சிற்றெழுத்தில் உச்சரிக்கப் பட்டுள்ளது. "அந்த" என்ற வார்த்தையே பேதுரு பயனப்படுத்தியுள்ள மற்ற இடங்களில், இப்பிரதிப் பெயர்ச்சொல்லானது இது வரும் இடத்திற்கு முந்தியுள்ள சந்தர்ப்பப் பொருளைக் குறிப்பதாகக் காணப்படுகிற, ஆனால் இச்சொற்றொடர் இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது விதிவிலக்கானதாக உள்ளது. இச்சொல் வரும் ஒவ்வொரு இடமும் அதன் சொந்தத் தகுதியைக் கொண்டு சிந்திக்கப்பட வேண்டும். 3:19ல் பிரதிபெயர்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள வழியானது, அது தன் அருகாமையில் உள்ள முன்சொல் குறிப்பிடுவதை அல்ல ஆனால் "ஆவியை" யே குறிப்பிடுகிறது என்று புரிந்துகொள்ளுதல் இயல்பானதாக உள்ளது.

வசனம் 20. *பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, பாதாள உலகத்தில் இருந்த அந்த மக்களாகிய ஆத்துமாக்கள், [முன்பு] ஒருகாலத்திலே, கிறிஸ்து பிரசங்கித்தபோது* **கீழ்ப்படியாமற்போனவைகள்.** *நோவாவின் காலத்தில் வாழ்ந்திருந்தவர்களின் கீழ்ப்படியாமைபேதுருவின் நாட்களில் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களின் கீழ்ப்படியாமைக்கு இணையாக இருந்தது. இவ்விரு விஷயங்களிலும், கீழ்ப்படியாதவர்கள் "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" (4:5). பெருவெள்ளத்திற்கு முன்பிருந்த உலகத்தைத் தேவன், மக்களின் துன்மார்க்கத்திற்கான முழங்கால் சறுக்கிய பதில்செயல் என்ற வகையில் அழிக்கவில்லை.* **நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களில், தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தது** *போன்றே, பேதுருவின் நாட்களிலும் அவர் பொறுமையோடே காத்திருந்தார். இந்த அப்போஸ்தலர் தமது இரண்டாம் நிருபத்தில், "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என்று கூற இருந்தார் (2 பேதுரு 3:9). நோவா தமது தலைமுறையில் இருந்த மக்கள் உயிரோடிருக்கையில், அவர்களுக்குப் பிரசங்கித்தபோது, அவர் மூலமாகக் கிறிஸ்துவே அவர்களுக்குப் பிரசங்கித்தார். அந்தப் பிரசங்கத்தை நோவாவின் தலைமுறையினர் விசுவாசிக்கவில்லை. கடைசியில் நோவா குற்றமற்றவர் என்று மெய்ப்பிக்கப்பட்டார்; அவிசுவாசிகள் நியாயந்தீர்க்கப்பட்டனர். பேதுருவின் தலைமுறையிலும் அவ்வாறே இருக்கும்.*

பெருவெள்ளத்திற்கு முந்திய காலத்தின் மக்களுக்கு, "நீதியைப் பிரசங்கித்தவனாகிய" (2 பேதுரு 2:5) நோவாவின் வார்த்தைகள் மூலமாக, கிறிஸ்து எச்சரிக்கை தந்த வேளையாவற்றிலும், உணர்ந்து அறியத் தக்க மற்ற எச்சரிக்கைகளைத் தேவன் கொடுத்துக் கொண்டிருந்தார். நோவா **பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே** *பிரசங்கித்துக் கொண்டிருந்தார். கிறிஸ்துவுக்காகப் பேசிய நோவாவைப் போன்றே, பேதுருவும் தமது தலைமுறையில் இருந்த மக்களுக்கு காணக்கூடிய எச்சரிக்கைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலிக்க சாட்சியங்களின் பிரசங்கித்தல் மூலமாக, சபை நிலைநாட்டப்பட்டது. முன்னதாக அப்போஸ்தலர், சபையை "ஆவிக்கேற்ற மாளிகை" என்று*

அழைத்திருந்தார் (2:5). நோவாவின் சந்ததியில் இருந்தவர்களில் சிலர் தங்களைச் சுற்றிலும் இருந்த துன்மார்க்கத்திற்குத் தப்பும்படியான அடைக்கலத்தை நாடியவேளையில், அவர்கள் காக்கப்பட்டனர், அதுபோன்றே பேதுருவின் சந்ததியில் இருந்தவர்களில் சிலர், தேவனுடைய ஆவிக்கேற்ற மாளிகையில் அடைக்கலம் நாடியபோது மீட்கப்பட்டனர். பேதுரு இதை யாருக்கு எழுதினாரோ அந்தக் கிறிஸ்தவர்கள், தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்போது தாங்கள் தங்கியிருக்கக் கூடிய பேழை ஒன்றைக் கொண்டிருந்தனர். 3:20ல் உள்ள "பேழை" என்பது பேதுருவின் வாசகர்களுக்கு, 2:5ல் உள்ள "ஆவிக்குரிய மாளிகை" மற்றும் "பரிசுத்த ஆசாரியத்துவம்" என்பவற்றைப் போன்றதாகவே உள்ளது. கிறிஸ்தவர்கள் சிறிய எண்ணிக்கையில் உள்ளனர் என்பது உண்மையே, ஆனால் நோவா தமது பேழையைக் கட்டியபோது, **சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம்** பாதுகாக்கப்படும்படி அதனுள் கொண்டுவரப்பட்டனர். பேதுருவின் காலத்தில் இருந்த சந்ததியில் சிலர் மாத்திரமே பாதுகாப்பைக் கண்டடைவார்கள் என்பது திகைப்புக்குரிய விஷயமாக இருக்கக் கூடாது.

நோவா, பேழை பற்றிய ஒப்புவமையும் (இது ஏறக்குறைய உருவகம் போன்று உள்ளது) நோவாவின் தலைமுறையில் இருந்த துன்மார்க்கமும் இந்தக் கருத்திற்கு நேர்த்தியாகப் பணிசெய்துள்ளன. இருப்பினும், நோவாவின் தலைமுறையில் எட்டுப்பேர் **(தண்ணீர் மூலமாக) காக்கப்பட்டார்கள்** என்று பேதுரு கூடுதலாகக் கூறுகையில், [இங்கு 1 பேதுரு 3:20ல் ஆங்கில வேதாகமங்கள் யாவற்றிலும் மற்றும் கிரேக்க வேதாகமத்திலும் கூட, "were brought safely through the water" என்றுள்ளது, ஆனால் தமிழ் வேதாகமத்தில் இது **"காக்கப்பட்டார்கள்"** என்று மாத்திரம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது,] நாம் கவனமாகக் கடந்து போக வேண்டும். இது ஒரு விநோதமான கூற்றாக உள்ளது. இவ்வசனமானது எட்டுப்பேர் மாத்திரம், "தண்ணீர் மூலமாக" அல்ல ஆனால் "தண்ணீரில் இருந்து காக்கப்பட்டனர்" என்று கூறுவதையே ஒருவர் எதிர்பார்க்க முடியும். நிச்சயமாகவே அவர்கள் வெள்ளப்பெருக்கின் வழியாகப் பாதுகாக்கப்படவில்லை, அல்லவா? ஒருவேளை அந்த எட்டுப்பேர் தங்கள் காலத்தில் வாழ்ந்த மற்றவர்களுக்குக் கிடைத்த நியாயத்தீர்ப்பை, அவர்கள் பெறாதிருக்கும்படி அதிலிருந்து காக்கப்பட்டனர் என்று பேதுரு இங்கு அர்த்தப்படுத்தி இருக்கலாம். இது அவரது அர்த்தமாக இருக்கும் என்றால், அவர்களைத் தண்ணீரே காப்பாற்றிற்று எனலாம். பூமியின்மீது மனிதகுலத்தின் பாவங்களைத் தண்ணீர் கழுவிப்போட்டது மற்றும் கீழ்ப்படியாதவர்கள் அனுபவித்த அதே நியாயத்தீர்ப்பினின்று எட்டுப்பேரைக் காப்பாற்றிற்று. தண்ணீரினால் கழுவப்படுதல் இல்லாதிருந்தால், அவர்கள் தங்களைச் சுற்றிலும் இருந்த துன்மார்க்கத்தில் தாங்களும் அகப்பட்டிருக்கக் கண்டிருப்பார்கள்.

பேதுரு "தண்ணீர்" என்ற சொல்லை இங்கு கொண்டு வந்தது ஏன் என்று கேட்பது பொருத்தமற்றதாக உள்ளது. பின்தொடரும் வசனம் இதைத் தெளிவுபடுத்துகிறது. நோவாவின் தலைமுறையில் இருந்த எட்டுப்பேரின் இரட்சிப்பு என்பது அவரது பாடக்கருத்தாக இருந்ததால் அவர் இதைக் கொண்டுவந்தார். அப்போஸ்தலரின் வாசகர்களுடைய இரட்சிப்பு என்பதே தொடர்ந்து வரும் பாடப்பொருளாக இருந்தது, பேதுரு இதை முதலாவது

யாருக்கு எழுதினாரோ அந்தக் கிறிஸ்தவர்கள், நோவாவின் நாட்களில் எட்டுப்பேரைப் போன்றே, (1) தேவன் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்தபோது மற்றும் (2) தண்ணீர் மூலமாக, தங்கள் சமகாலத்திய மக்களில் இருந்து மீட்கப்பட்டனர். இந்த ஒப்புவமை முழுமையும் நேர்ப்படாது என்றாலும், கடந்த காலத்தில் தேவன் செயல்பட்ட விதம், மற்றும் பேதுருவின் வாசகர்களிடத்தில் தேவன் செயல்படும் விதம் ஆகியவற்றிற்கு இடையில் இணைகருத்துக்கள் இருந்தன என்று பேதுருவின் வாசகர்களுக்கு உறுதியளிக்க இது போதுமானதாக உள்ளது. அவர்கள் அழியாத வித்தினாலே "மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டனர்" என்று முன்னரே பேதுரு கூறியிருந்தார். அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது மறுபடியும் பிறந்திருந்தனர் (1:3, 23 ஆகியவற்றிற்கான விளக்கங்களைக் காணவும்). தண்ணீரில் அவர்கள் பெற்ற ஞானஸ்நானம், அவரை அவர்கள் அணிந்துகொண்டனர் (கலாத்தியர் 3:27), அவரது மக்களாயினர், மற்றும் சுதந்தரத்தில் பங்கு பெற்றனர் என்ற கருத்தைக் கொடுத்தது. நோவாவின் நாட்களில் எட்டுப்பேர்களின் இரட்சிப்பு என்பது பேதுருவின் வாசகர்களின் இரட்சிப்புடன் பல அம்சங்களில் இணைபடுகிறது. நோவாவின் நாட்களில், நோவாவும் அவரது குடும்பத்தாரும் தங்கள் தலைமுறையில் வாழ்ந்த மற்றவர்களின் செல்வாக்குச் செலுத்தும் நிலைகளில் இருந்து விடுதலையாகும்படிக்கு, பூமியின் மோசம் போக்கும் நடத்தைகள் யாவற்றையும், தண்ணீர் கழுவிப் புறம்பே போட்டது. பேதுருவின் வாசகர்கள் தண்ணீர் ஞானஸ்நானத்தில், தங்கள் பாவங்களை இயேசுவின் இரத்தம் எடுத்துப் போட்டதை அனுபவித்திருந்தனர். அவரது வாசகர்களுக்கு ஞானஸ்நானம் அர்த்தப்படுத்திய பொருளின் நிமித்தமாக, அவர்கள் "தண்ணீர் மூலமாக" இரட்சிக்கப்பட்டது போன்றே, நோவாவின் வாய்மூலமாக கிறிஸ்து பிரசங்கித்து இருந்ததைக் கேட்ட மக்களில் கீழ்ப்படிந்தவர்கள், "தண்ணீர் மூலமாக" கப்பாற்றப்பட்டனர் என்பதை [தமது வாசகர்கள்] காண வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார்.

வசனம் 21. இந்த நிருபம் முழுவதிலும், இந்த ஒரு இடத்தில்தான் **ஞானஸ்நானம்** என்ற வார்த்தை வெளிப்படையாகக் காணப்படுகிறது; இவ்வசனப்பகுதியில் இதன் தனிச்சிறப்புப் பற்றிய சந்தேகம் எதுவும் இல்லை. **அதற்கு ஒப்பனையான** என்பதற்கான NASB வேதாகம மொழிபெயர்ப்பு, பேதுருவின் வார்த்தைகளினுடைய வலிவைப் பலவீனப்படுத்துகிறது, மிகநேரடியாகச் சொல்வதென்றால், தண்ணீர் ஒரு "முன்மாதிரியாக" (*antitupos*) இருந்தது என்றே அவர் கூறினார். புதிய ஏற்பாடு முழுவதிலும் இவ்வார்த்தை இவ்விடத்தில் இரண்டாவது முறை வருகிறது, மற்றொன்று எபிரெயர் 9:24ஆகும். இரட்சிப்பு என்பது பாடக்கருத்தாக உள்ளது. நோவாவின் நாட்களில் தண்ணீரானது, அவர்களைச் சுற்றிலும் இருந்த மோசமான தலைமுறையில் இருந்து எட்டுப்பேர்களைக் காத்தபோது, அது **இப்பொழுது நம்மையும் இரட்சிக்கும்** "ஞானஸ்நானத்திற்கு" ஒரு "மாதிரியாக" இருந்தது.

அப்போஸ்தலரின் வாசகர்கள் ஏற்கனவே "ஞானஸ்நானத்தின்" தனிச்சிறப்பைப் பற்றிப் பயிற்றுவிக்கப் பட்டிருந்தனர் என்று அப்போஸ்தலர் யூகித்தார். அது இனியும் ஒரு இயந்திரத்தனமான செயலாக இருப்பதில்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். அதன் நன்மை விளைவிக்கும் ஆற்றலானது "நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப்

பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்ட" (3:18) கிறிஸ்துவின் ஊழியத்தில் இருந்து பாய்ந்தோடி வருகிறது. இரண்டாவது அது, அவரது வாசகர்களின் விசுவாச பதில் செயலில் இருந்து பாய்ந்தோடி வருகிறது. "ஞானஸ்நானம்" என்பது இரட்சிப்புக்குப் பின்னால் சேர்க்கப்படும் துணைப்பொருள் அல்ல என்பது தெளிவாக உள்ளது; அது "உள்ளான கிருபைக்கான புறம்பான பதில்செயல்" அல்ல. கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவர் செயல்பட்டது போன்றே, ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போதும் செயல்பட்டு பாவங்களை எடுத்துப் போடுகிறார். "ஞானஸ்நானம்" என்பது மனித செயலாக உள்ளது, ஆனால் அது ஒரு தெய்வீக செயலாகவும் உள்ளது. மனஸ்தாபப்பட்ட பாவி ஞானஸ்நானம் பெறும்போது இரட்சிக்கப்படுகிறார் (ரோமர் 6:3, 4). கால்வின், சுவிங்கிலி மற்றும் பிற சீர்த்திருத்தக்காரர்கள், ரோமன் கத்தோலிக்கம் பற்றிய தங்களின் விமர்சனங்கள் பலவற்றிலும் சரியாக இருந்தனர், ஆனால் ஞானஸ்நானத்தில் விசுவாசம் வெளிப்படுத்தப்படுகையில் தேவன் செயல்படுகிறார் என்ற கருத்தை அவர்கள் புறக்கணித்த விஷயத்தில் அவர்கள் தவறு செய்தனர்.

D. A. கர்ஸன் அவர்கள், கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் வரலாற்றுரீதியான வேர்கள் எதுவுமன்றி, கிறிஸ்துவின் சபைகள் ஞானஸ்நானம் பற்றிய வினோதமான கண்ணோக்கைக் கொண்டுள்ளன என்று கருத்துத் தெரிவித்ததில் தவறானவராக இருந்தார்.[20] கிறிஸ்தவத்தின் தொடக்க நூற்றாண்டுகளில், ஞானஸ்நானம் பெறாமல் எவரொருவரும் கிறிஸ்துவுக்குள் இருப்பதாகக் கற்பிதம் செய்யவில்லை.[21] ஃப்ரெட் கீலி அவர்கள் பின்வருமாறு எழுதியதில் சரியானவராகவே இருந்தார்:

> ஞானஸ்நானம் என்பது, நித்திய ஜீவனுக்கு மனிதர்கள் செயல்வலிவாக அழைக்கப்படும் வேளையாக உள்ளது. [இது] உலகத்தில் இருந்து சபைக்குச் செல்லும் மார்க்கரீதியான வழியாக உள்ளது, இது தற்கால துன்மார்க்க உலகில் இருந்து தேவகுமாரனுடைய அன்பின் இராஜ்யத்தில் மறுபடி பிறத்தலாக, இந்த உலகில் இருந்து கிறிஸ்தவரை செயல்வலிவுடன் பிரித்து சபையில் அவரை நிலைநாட்டுதலுக்கான வெளிப்படையான அறிக்கையின் செயலாக இருந்தது.[22]

ஏராளமான குறிப்புகளைத் தரமுடியும். ஞானஸ்நானம், மனந்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்பு ஆகியவை பிரிக்க இயலாத வகையில் இணைக்கப்பட்டுள்ளதாக, கிறிஸ்துவின் சபைகளுடன் தொடர்பற்ற வேதாகமக் கல்வியாளர்கள் பலரும் சுட்டிக்காண்பித்துள்ளனர். அவர்கள் ஒருவேளை, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களின் நடைமுறைகளினால் நவீன சபையானது வழிநடத்தப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம், ஆனால் ஞானஸ்நானம் பெறாதிருந்த கிறிஸ்தவர்கள் என்பது போன்ற விஷயம் தொடக்ககால சபையில் இருந்ததில்லை என்பதைப் பலர் புரிந்துகொண்டனர். பேதுரு. **"ஞானஸ்நானமானது ... இப்பொழுது நம்மையும் ... இரட்சிக்கிறது"** என்று கூறியபோது அதைத் தெளிவுபடுத்தினார். பவுல், "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ,

அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்று எழுதியபோது (கலாத்தியர் 3:27), கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறாதவர்கள் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளவில்லை என்பதை மறைமுகமாய் உணர்த்தினார் என்பது தெளிவு. கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்கள் மாத்திரமே, கிறிஸ்தவ சுதந்தரத்தில் பங்கடைகின்றனர் என்பது சம அளவு தெளிவாக உள்ளது.

பேதுரு தெளிவுபடுத்தினார். "ஞானஸ்நானம்" என்பதன் தனிச்சிறப்பு அந்த சரீரப்பிரகாரமான சடங்கில்தான் உள்ளது என்று யூகிக்கும் எவரும், புதிய ஏற்பாட்டுப் போதனையைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார். எட்வர்டு கோர்டன் செல்வின் அவர்களின் வார்த்தைகளில் கூறுவதென்றால், ஞானஸ்நானம் என்பது, "உடலைச் சுத்திகரிக்கும் செயலல்ல, ஆனால் கிறிஸ்துவில் வெளிப்பட்ட தேவனுக்கு மனிதன் தன்னை முழுவதும் ஒழுக்கரீதியாக ஒப்புவிக்கும் செயலாக உள்ளது."[23] அதுபோல, "ஞானஸ்நானம்" என்பது தேவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான உடன்படிக்கையின் வெறும் அடையாளமாக இருப்பதும் இல்லை. இதற்கு நேர் எதிராக, விருத்தசேதனம் என்பது, உடன்படிக்கையின் அடையாளமாகப் பணிசெய்த உடல்ரீதியான செயல்பாடாக இருந்தது. எட்டு நாட்களான பிள்ளை ஒருவனுக்கு விருத்தசேதனம் செய்வித்தபோது, தேவன் அதில் செயல்படவில்லை. விருத்தசேதனத்திற்கு முன்பேகூட, யூதக்குழந்தையானது தனதுபிறப்பினாலேயே ஏற்கெனவே தேவனுடைய மக்களில் ஒருவனாக எண்ணப்பட்டது. ஒரு விசுவாசி ஞானஸ்நானம் பெறுவதினால் **தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின்** வேண்டுகோள் விடுக்கும்போது, கிறிஸ்து "பாவங்களினிமித்தம் மரித்துள்ளதால்" (3:18), தேவன் அங்கு செயல்படுகிறார்; **இயேசுகிறிஸ்து** [தமது] **உயிர்த்தெழுதலினால்** வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளதால் அவர் [தேவன்] செயல்படுகிறார். ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறபோது, அவர் தமது புதிய பிறப்பின் காரணமாக, நெறிமுறைப்படி தேவனுடைய மக்களின் அங்கமாகிறார்.

ஞானஸ்நானம் என்பது, "நல்மனச்சாட்சிக்கு" இயேசு சிலுவையில் செலுத்திய விலைக்கிரயத்தை வேண்டி விண்ணப்பித்தலாக/தேவனுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளுதலாக உள்ளது. "மனச்சாட்சி" என்பது நவீனப் பேச்சு வழக்கில் பயன்படும் அதே அர்த்தத்தில் இங்கு பேதுருவினால் பயன்படுத்தப்படவில்லை. "மனச்சாட்சி" என்பது இங்கு உள்ளிருந்து ஒலிக்கும் மெல்லிய ஒலி அல்ல, மாறாக இது, ஒருவர் தமது சகமனிதருடனும் தேவனுக்கு முன்பாகவும் நிற்குதல் என்ற கருத்தாக உள்ளது. ஒருவர் ஞானஸ்நானம் பெற்றுள்ளதால், அவருடைய "நல் மனச்சாட்சி" தன்னுடனும், தேவனுடனும் மற்றும் அவருடைய சக மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அறிவாய் இருக்கிறது. இது அவருக்கு, தாம் தேவனுடைய சொந்த ஜனமாக, அவர் [கிறிஸ்து] தரிசனமாகும்போது வெளிப்படவிருக்கும் சுதந்தரத்திற்கு உரிமையாளராக இருக்கிறார் என்ற தைரியத்தையும் உறுதிப்பாட்டையும் அவருக்குத் தருகிறது. பேதுருவின் உலகத்தில் "மனச்சாட்சி" என்பது, இன்றைய நாட்களில் மக்களிடையே உள்ளதைக் காட்டிலும் அதிக கனமான சமூக அளவீட்டைக் கொண்டிருந்தது.

"ஞானஸ்நானம்" என்பது உடலைக் கழுவுதலாக இருக்க வேண்டும் என்று

பேதுரு புரிந்து கொண்டார் என்பது உற்றுநோக்கப்பட வேண்டும். இதன் தனிச்சிறப்பானது, கழுவுதல் பற்றிய சில செயல்களாக உள்ளது. ஞானஸ்நானம் என்பது தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பதாக இருக்கும் என்று நாம் புரிந்துகொண்டால், அவரது ஒப்புமை முறிபடுகிறது. "ஞானஸ்நானம்" என்பது "நல்மனச்சாட்சியுடன்" ஞானஸ்நானம் பெறுபவர் பகுதியில் விடப்படும் "வேண்டுதலாக"/தேவனுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளுதலாக உள்ளது என்று கூடுதலாகப் பேதுரு கூறினார். ஞானஸ்நானம் பெறும் ஒருவர் தாமே இந்த வேண்டுகோளை ஏறெடுக்கும்படி/உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளும்படிக்கு போதுமான அளவு பக்குவம் உள்ளவராக இருக்கிறார் என்பது இங்கு மறைவாக உணர்த்தப்படும் கருத்தாகும். [ஆங்கில வேதாகமங்களில் "appeal" மற்றும் "answer" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன; தமிழ் வேதாகமத்தில் இது "உடன்படிக்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.] ஒருவர் தாம் இழந்து போகப்பட்டுள்ள நிலையை உணர்ந்தறியப் போதுமான அளவு வயது வந்தவராக இருக்கும்போது, அவர் முழுக்காட்டப்படுதலே ஞானஸ்நானம், அவ்வாறு செய்யும் போது அவர் நல்மனச்சாட்சிக்காக வேண்டுதல் செய்ய முடியும்.

வசனம் 22. சங்கீதங்களின் புத்தகத்தைக் காட்டிலும் அதிகமாகப் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி சான்று காண்பிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டுப் புத்தகம் வேறு எதுவும் இல்லை,[24] மற்றும் சங்கீதம் 110ஐக் காட்டிலும் அதிகமாகச் சான்று காண்பிக்கப்பட்ட சங்கீதம் வேறு எதுவும் இல்லை, மற்றும் "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்" (சங்கீதம் 110:1) என்ற பகுதியைக் காட்டிலும் அதிகமாகக் குறிப்பிடப்பட்ட வேறுபகுதி எதுவும் சங்கீதம் 110ல் இல்லை. இயேசு கிறிஸ்து **பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்** என்பதைப் பேதுருவின் வாசகர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். இயேசு கிறிஸ்துவுக்கு வரலாற்று அளவீடு ஒன்றுள்ளது. அவர் ஒரு மனிதராக இருந்தார், கன்னிப் பெண்ணிடம் இருந்து பிறந்தார், நாசரேத்தூரில் வளர்ந்தார், ஒரு பிரசங்கியாராக, ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். உண்மையிலேயே காலத்தினூடே இயேசு பார்வையற்ற மனிதரைக் குணமாக்கினார், அற்புதமாய் ஐயாயிரம் பேருக்கு உணவளித்தார், தமது சீஷர்களில் மூவர் முன்னிலையில் மறுரூபமாக்கப்பட்டார். பொந்தியு பிலாத்துவின் கீழ் மற்றும் (தமது சொந்த ஜனங்களான) யூதர்களால் வற்புறுத்தப்பட்டு, ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்டார். மூன்றாம் நாளில் அவர் தேவனுடைய வல்லமையால் உயிர்ப்பிக்கப்பட்டார். கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அடிப்படையான இந்த நிகழ்வுகளும் இன்னும் மற்ற நிகழ்வுகளும் உண்மையிலேயே காலத்தினூடே நடைபெற்றன, ஆனால் இதுவே எல்லாமுமாக இருப்பதில்லை. கிறிஸ்துவின் அனுபவத்திற்கு, பழங்காலத்தைப் பற்றிய அறியும் வெறும் வினோதப்பிரியம் மாத்திரம் போதுமானதல்ல. இயேசு இப்போது அரசாளுகிறார். அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்றார், **தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்படிக்கிறது**. இயேசு மனிதராக இருந்தார் என்பதைக் காட்டிலும் அதிகமான விஷயங்களில் பேதுரு ஆர்வம் கொண்டிருந்தார்; அவர் [இயேசு] தேவனுடைய குமாரன் என்பதிலும் அவர்

[பேதுரு] ஆர்வமாயிருந்தார்.

"வலது பாரிசத்தில்" அமருதல் என்பது தனக்கே உரிய அடையாளத்துவத்தைக் கொண்டுள்ளது. "வலது பாரிசம்" என்பது நெருக்கத்தையும் அதிகாரத்தையும் உடனடியாகத் கருத்தாய்த் தெரிவிக்கிறது. பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையிலான உறவில் அடங்கியுள்ள யாவற்றையும் புரிந்துகொள்ள முயற்சி செய்தல் வீணான விஷயமாக உள்ளது. அவர்கள் ஒன்றாயிருக்கின்றனர், ஆனால் அதே வேளையில் பிதாவாகிய தேவன் அரியணையில் வீற்றிருக்கின்றார், மற்றும் அவரது வலது பாரிசத்தில் குமாரன் இருக்கின்றார். பேதுரு இங்கு திரித்துவம் என்ற பாடக்கருத்தின் நுட்பமான விஷயங்களைக் கையாளவில்லை. படைப்பில் உள்ள வேறு எவருடனும் ஒப்பிடப்பட இயலாத வகையில், மேன்மையான உறவு ஒன்றை இயேசு தேவனுடன் கொண்டிருந்தார் என்பதை அறிக்கையிடுதலும் உறுதிப்படுத்துதலுமே பேதுருவின் அக்கறையாக இருந்தது. தூதர்களானாலும் பூமிக்குரிய யாரானாலும், யாவரும் அவரது கட்டளையின் கீழ் உள்ளனர், சலக "அதிகாரங்களும் வல்லமையும்" அவருக்குத் தரப்பட்டுள்ளன. மேலும் அவர் தமது மக்களின் மேல் ஆளுகை செய்கிறார். அவர்களை அவர் பராமரிக்கிறார், சிட்சித்து வழிநடத்துகிறார். அவர்களுக்கு அவர் அன்பான அரசராக இருக்கிறார்.

நடைமுறைப் பயன்பாடு

ஜீவனை விரும்புகிறவர்களுக்கு (3:8-12)

வெறுப்புணர்வு, வன்முறை, சாபங்கள் மற்றும் கோபம் ஆகியவை கொண்ட உலகத்தில் வாழும் மக்கள் நம்மைச் சுற்றிலும் உள்ளனர். அவர்களை அருவருத்துத் தள்ளுவதா அல்லது அவர்கள் மீது பரிதாபம் கொள்வதா என்பது பற்றி எவரும் நிச்சயமான கருத்துக்கொண்டிருப்பது இல்லை. வாழ்வின் அவ்வகையைப் பேதுருவின் பின்வரும் வார்த்தைகளுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பாருங்கள்:

> மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள் (1 பேதுரு 3:8, 9).

பேதுரு கூறாதது என்ன என்பதை நாம் கவனித்தல் முக்கியமானதாக உள்ளது. வாழ்வின் நன்மையும் நிறைவும், ஒருவர் எவ்வளவு செல்வம் சேர்த்து வைக்கிறார் என்பதன் உற்பத்தியாக இருப்பதில்லை. அல்லது அது மக்கள் எவ்வளவு அதிகாரம் நிறைந்தவர்கள் ஆகின்றனர் என்பதன் உற்பத்தியாகவும் இருப்பதில்லை. பலமான ஒரு மனிதர் எவ்வளவு பேர்களுக்குக் கட்டளையிட முடியும் என்பது நல்ல வாழ்வின் அளவாக இருப்பதில்லை. திருப்தி செய்யும், நல்ல வாழ்வு என்பது அவ்வாறு வருவதில்லை. கிறிஸ்துவை அறிந்துள்ள பல

மக்கள் வாழும் வழியைக் கற்றுள்ளனர்.

கிறிஸ்தவர்கள் பரலோகத்தின் சந்தோஷத்திற்காக ஏங்குகின்றனர்; ஆனால் இயேசு, தம்மைத் தழுவிக்கொள்ளுபவர்களுக்காக, தமது இராஜ்யமான பரலோக ராஜ்யம், மனிதகுல வரலாற்றில் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக்கினார். இன்னும் உணர்ந்தறியக்கூடிய சில விஷயங்கள் உள்ளன, ஆனால் கிறிஸ்துவுக்குள் பரலோக ராஜ்யம் நம்மிடையே உள்ளது. அந்த இராஜ்யத்தை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு கிறிஸ்தவர்கள் கர்த்தரின் மறுவருகை வரையிலும் காத்திருக்கத் தேவையில்லை (காண்க லூக்கா 17:20ஆ, 21).

கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது வரவிருக்கும் உலகத்திற்காக மாத்திரமானதல்ல. இந்தக் காலத்திலேயே வாழ்வின் திறவுகோலைத் தேவன் தமது மக்களுக்குக் கொடுத்துள்ளார். பேதுருவின் முறையான கூற்று போதுமான அளவு எளிமையாகத் தொடங்குகிறது.

முதலாவது, இரக்கமுடன் இருக்க வேண்டும் என்பதை நினையுங்கள். இரக்கம் என்பது சிறு விஷயங்களில் அன்பு என்பதாக உள்ளது. அது ஒரு புன்சிரிப்பை அளிப்பதாக, ஒரு கதவைத் திறந்து பற்றிக் கொண்டிருப்பதாக, வயதான பெண்மணி ஒருவருக்கு வாசிக்கக் கற்றுக்கொடுத்தலில் உதவுவதாக, தரையைத் துடைப்பதாக, இன்னொரு நபரின் பிரச்சனைகளைக் கவனிப்பதாக, கரத்தைப் பற்றிக்கொள்வதாக உள்ளது. இரக்கத்தில் அடக்கமும் மரியாதையும் அடங்கியுள்ளது.

மற்றவர்கள் காண்கையில், நம்மில் பலர் பெருந்தன்மையுடையவர்களாக, சிந்தனை உடையவர்களாக, மற்றும் அடக்கம் உடையவர்களாக இருக்க முடியும்; காவலற்ற தருணங்களில் நாம் நமது சுயத்தை வெளிப்படுத்துகிறோம். இரக்கம் என்பது அவ்வப்போது வரும் கட்டளை ஒன்றிற்குக் கீழ்ப்படிதல் அல்ல; அது வாழ்வின் வலையில் பின்னப்பட்டுள்ளது. இரக்கம் ஒருக்காலும் முடிவதில்லை.

பேதுரு, இயேசுவின் வாழ்வையும் ஊழியத்தையும் தொகுத்துக் கூற விரும்பியபோது, கர்த்தரின் எளிய இரக்கத்தைப் பற்றிப் பேசிய வார்த்தைகளை அவர் பயன்படுத்தினார்: "அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றுத்திரிந்தார்" (நடபடிகள் 10:38ஆ). மாற்கு சுவிசேஷத்தில், இயேசுவினிடத்தில் ஒரு தொழுநோயாளி வந்து, முழந்தாள்படியிட்டு, "உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" என்று கெஞ்சினார். இயேசு மனதுருகி, அம்மனிதரைத் தொட்டு அவரை முழுமனிதராக்கினார் (மாற்கு 1:40, 41). இயேசு தொழுநோயாளியைக் குணமாக்கியபோது, அவரது அற்புத வல்லமை பற்றிக் கூறப்பட்டது என்னவாக இருந்தாலும், அது இரக்கத்தின் ஒரு எளிய செயலாக இருந்தது என்பதாகவே இருந்தது.

இரண்டாவது, தீமைக்கு நன்மை செய்தல் என்பது பரலோக இராஜ்யத்தை மகிழ்வுடன் அனுபவிக்கும் வழியாக உள்ளது. அவர் சிந்தனையைத் தொடர்ந்து: "தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்" (1 பேதுரு 3:9). இந்த விதிப்படி கிறிஸ்தவர் எவ்வளவாக வாழ்கிறாரோ, அவ்வளவுக்கு

அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்காகக் காத்திருக்கத் தேவையில்லை. அவர்களிடையே இராஜ்யம் உள்ளது.

முன்னதாகப் பேதுரு தமது நிருபத்தில், கிறிஸ்துவின் பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிட்டு இருந்தார்: "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:23). இயேசு முன்னுதாரணத்தை வைத்தார். கர்த்தர் தூஷிக்கப்பட்டார், வையப்பட்டார், ஆனால் அவர் ஒருக்காலும், தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டவில்லை. அதற்குப்பதிலாக அவர் இரக்கம் காண்பித்தார்.

பழிக்குப்பழி என்பது மனிதகுலத்தின் சட்டத்தினுடைய மிகவும் அடிப்படை விதிகளில் ஒன்றாக உள்ளது. இதை "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்று பழைய ஏற்பாடு விளக்கப்படுத்துகிறது (லேவியராகமம் 24:19, 20). தேவனுடைய இராஜ்யத்தில் மக்கள், தீமைக்குத் தீமை செய்யக்கூடாது என்று கூறுகிற வேறுபட்ட விதியைக் கொண்டு வாழ்கின்றனர். பேதுரு மக்களினங்களின் நாட்டுச் சட்டங்களை உரைக்கவில்லை. அவர் தமது வாசகர்களைத் தனிநபர்கள் என்ற வகையில் வைத்துப் பேசினார். "பழிவாங்குதல் உங்களைப் பட்சிக்க அனுமதிக்காதிருங்கள்" என்று அவர் கூறினார். "தேவனுடைய இராஜ்யம்" என்ற சொற்றொடரை அப்போஸ்தலர் இவ்விடத்தில் பயன்படுத்தவில்லை. மாறாக அவர் வாழ்வைப் பற்றிப் பேசினார். வாழ்வு என்பதே தேவனுடைய இராஜ்யமாக உள்ளது. பழிக்குப்பழி என்பது ஒருவரது வாழ்வில் முக்கியமானதாயிருந்தால், அவர் வாழ்வைக் கொண்டிருக்கமாட்டார்.

பேதுருவின் இந்த நிருபத்தை வாசித்த கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்காகப் பாடநுபவித்தல் என்றால் என்ன என்பதை அறிந்திருந்தனர். அவர்கள் பாடநுபவித்த சில சிஷயங்களில் அதைச் சரிக்கட்டும் வல்லமையையும் அவர்கள் கொண்டிருந்தனர். சில ஆண்டுகளுக்கு முன்னர், டெக்ஸாஸ் நகரில் ஒரு பெண் இருந்தாள், அவள் ஓரளவு செல்வம் கொண்டவளாக இருந்தாள், அவளது கணவர் இன்னொரு பெண்மேல் நோக்கமாயிருப்பதை அவள் கண்டறிந்தாள். அவள் ஒரு ஹோட்டலில் வெளிப்புறத்தில் காத்திருந்து, அவர் வெளியே வந்தபோது, அவள் தனது காரை இயக்கி அவர் மீது ஏற்றினாள். அவர் இறந்துபோனார். அவள் பழிவாங்கிவிட்டாள். அந்தப் பழிவாங்குதல் தனக்கு என்ன மகிழ்வைத் தரும் என்று அவள் கற்பனை செய்தாள்? அநீதியை மனதில் பேணுபவர்களாக அநேகர் இரவு வேளையில் தங்கள் படுக்கையில் கிடக்கின்றனர். அவர்கள் அதைப் பற்றி என்ன செய்யலாம் என்று கற்பனை செய்கின்றனர், எப்படி பழிவாங்குவது என்று நினைக்கின்றனர். இப்படிப்பட்ட வட்டாரத்தில் உள்ள மனங்கள் தேவனுடையை இராஜ்யத்தில் இருந்து தொலைவில் விலக்கப்பட்டு இருக்கின்றன.

ஒரு நபர், குற்றப்படுத்தும் வார்த்தையை, அவமானத்தை, சுவையற்ற குறிப்பு ஒன்றை, கூறப்படாதது போன்று பக்கமாகச் சரிய அனுமதிக்கக் கூடியவராக இருக்கும்போது, அது ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாக உள்ளது. ஒரு நபர், தமக்கு இழைக்கப்பட்ட நிந்தைக்குப் பதிலாக ஆசீர்வாதத்தைத் திருப்பிக்கொடுக்கக் கூடும்போது, அது அவருக்கு ஒரு வெகுமதியாக உள்ளது. நமது விரோதியைத் தீர்த்துக்கட்ட இயேசு செயல்விளைவு மிக்க

வழியொன்றைப் போதிக்கிறார். அவரை நண்பராக்கிக் கொள்ளுங்கள்.

மூன்றாவது, உங்கள் நாவைக் கட்டுப்படுத்துங்கள், பேதுரு, 1 பேதுரு 3:10, 11 வசனங்களை எழுதும்போது, அந்த அப்போஸ்தலர் சங்கீதம் 34:12, 13 வசனங்களை நினைவூட்டினார்: "நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்? உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்." இயேசு, "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" என்று கூறினார் (மத்தேயு 12:36, 37). தாங்கள் நாவைக் கட்டுப்படுத்தத் தவறுகிறவர்களிடம் இருந்து தேவனுடைய இராஜ்யம் தப்பிச்சென்றுவிடும்.

தொகுப்புரை. உலகத்தின் துயரம் மற்றும் வேதனை மத்தியில், வாழ வழியை அறிந்த மக்களை கண்டறிய முடியும். அவர்களின் குடும்பங்கள், அவர்களுக்கு அளிக்கப்படும் மரியாதை, அவர்களைக் குறித்து மற்றவர்கள் பேசுவது, அவர்கள் அணிந்துள்ள புன்னகை - இவையாவும், வாழ்வின் சமாதானத்திற்கும் சந்தோஷத்திற்கும் சாட்சிகளாக உள்ளன. கிறிஸ்துவின் வாழ்வில் பங்களித்த மூன்று முக்கியமான விஷயங்களைப் பேதுரு இங்கு அளித்தார். அவை. (1) இரக்கமுள்ளவர்களாக இருக்க நினையுங்கள், (2) தீமைக்கு நன்மை செய்யுங்கள் மற்றும் (3) நாவைக் காவல் செய்யுங்கள்.

பதில் பரிகாரம் (3:18)

பதிலாக சிலவற்றைச் செய்தல் என்பது இன்னொருவரின் அனுபவங்களின் மூலமாக அதைச் செய்தலாக உள்ளது. இயேசு தாம் செய்திராத பாவங்களுக்காகச் சிலுவையில் பாடுபட்டார் என்பது கிறிஸ்தவத்தின் மிகவும் அடிப்படையான உபதேசங்களில் ஒன்றாக உள்ளது. இயேசுவைப் பற்றி யோவான், "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை" என்று கூறினார் (1 யோவான் 3:5). இயேசு பாவமற்றவராக இருந்ததால், நாம் செய்துள்ள பாவங்களுக்காக நமக்குப் பதிலாக அவர் பாடுபட முடிந்தது. அவ்வாறு நமது பாவங்களுக்கான கிரயம் செலுத்தப்பட்டது. பாவத்திற்கு எதிரான தேவனுடைய கோபமும், நியாயத்திற்கான அவரது விதியும் சிலுவையில் திருப்தி செய்யப்பட்டது. நாம் விரோதிகளாக இருந்தபோதிலும், மன்னிக்கப்பட்டவர்களாக அவரது பிரசன்னத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளோம். இயேசுவினால் நமக்குக் தரப்பட்டுள்ள இந்த வாழ்வில் நிகழ்காலத்தில் நாம் பங்கடைகிறோம், மற்றும் கர்த்தர் தமது முழுமகிமையில் திரும்பி வருவார் என்பது நமது நம்பிக்கையாக உள்ளது. அப்போது தேவனுடைய ஆசீர்வாதங்களின் பரிபூரணம் யாவும் பங்கேற்கும்படி அவரது மக்களுக்குரியதாக இருக்கும்.

குறிப்புகள்:

[1]Origen *Contra Celsum* 3.55. [2]"அலங்கரிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள

kosmos என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் அடிக்கடி எதிர்மறை அர்த்தம் தரும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது "உலகப்பிரகாரமான" அல்லது அதுபோன்ற அர்த்தம் கொண்டுள்ளது. இவ்வசனத்தில் அது அப்படிப்பட்ட கருத்து எதையும் கொண்டிருப்பதில்லை. கிரேக்கர்கள், தாங்கள் வாழ்ந்த உலகமானது அழகானது என்றும் நன்கு விகிதமுள்ள அளவில் உள்ளது என்றும் நினைத்தனர். இவ்வாறாக இவ்வார்த்தை, அழகுநிறைந்த மற்றும் நன்கு அலங்கரிக்கப்பட்ட எந்த விஷயத்திற்கும் ஒரு குறிப்பு பெயராயிற்று. [3]J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 159; Plutarch *Moralia* 141E. [4]Josephus *Antiquities* 4.8.15. [5]Josephus *Against Apion* 2.25. [6]NASB வேதாகமம் இந்தக் கிரேக்கச் சொற்றொடரின் கருத்துணர்வை நன்கு படம்பிடிக்கிறது. அதிக இலக்கியத்துவமாகக் கண்ணோக்கினால், இவ்வார்த்தைகள் "பெண் என்ற பாத்திரம் மிகவும் பலவீனமானது" என்றே கூருவதாக உள்ளன. "மனைவியானவள்" என்று தமிழ் வேதாகமத்திலும் "பெண்" என்று ஆங்கில வேதாகமத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள *(gunaikeios* என்ற) கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாடு முழுவதிலும் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணக்கிடைக்கிறது. "பாத்திரம்" *(skeuos)* என்ற வார்த்தை பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு வகையான பொருளைக் குறிக்கிறது, சிலவேளைகளில் ஒரு ஜாடியை அல்லது கலனைக் குறிக்கிறது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளபடி, 1 தெசலோனிக்கேயர் 4:5ல் செய்கிறபடியே, பெண்ணின் இயல்பான உடலைக் குறிக்கிறது. [7]Ignatius *Philadelphians* 1. [8](கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட) இளைய பிளீனிக்கு எழுதிய ***கடிதங்களில்,*** கூச்சப்படாத சுபாவத்துடன் ரோம மனிதர்கள் தங்கள் சுய மகிமையைத் தேடிய நிலையைப் பற்றி விவரிக்கும் குறிப்புகளை ஏற்படுத்தினார். தமது நண்பரான மேக்ஸிமஸ் என்பவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் அவர், தலா மூன்று தினேரியங்களுக்கு (நயமான கூலி) கூலிக்கு அமர்த்தப்பட்ட இரு அடிமைகள் பார்வையாளர்கள் மத்தியில் அமர்ந்து ஒரு குறிப்பிட்ட பேச்சாளர் பேசியபோது கைதட்டியதைக் குறிப்பிட்டார். என்ன கூறப்பட்டது என்பதைப் பற்றிய கருத்து எதுவும் அந்த அடிமைகளுக்குத் தெரியவில்லை மற்றும் "அவர்களின் பாராட்டுதலை பற்றிய காலமானது, குறிப்பு எதுவும் காட்டப்படவில்லை என்றால் வீணானதாக இருக்கும்" என்றும் கூறினார். (Pliny the Younger *Letters* 2.14.) [9]Ernest Best, *1 Peter*, The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 130; *The Community Rule* (1QS) 1.4. [10]Carroll Stuhlmueller, Dianne Bergant, et al., eds. *The Collegeville Pastoral Dictionary of Biblical Theology* (Collegeville, Minn.: Liturgical Press, 1996), 714.

[11]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude,* Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 141. [12]"மனச்சாட்சியுடமை" என்ற கருத்தில் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டிருத்தலுக்கு 2:19ன் மீதான விளக்கங்களைக் காணவும். [13]3:16ல் (வெட்கப்படும்) "படிக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *hina* என்ற வார்த்தையானது சிலவேளைகளில் விளைவை விளக்கப்படுத்துகிறது. பின்வரும் புத்தகத்தில் இதைக் காணவும்: Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 477. [14]Best, 134. [15]இந்த விளக்கத்திற்கான விஷயம் Michaels, *191-92* என்ற புத்தகத்தில் நன்கு உரைக்கப்பட்டுள்ளது. [16]Sirach 41:12 (REB). [17]பரலோகத்தில் கிறிஸ்துவின் பலி என்றென்றைக்கும் நடைபெறுவதாக, அதாவது திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்போது இயேசு உண்மையிலேயே பாடநுபவிக்கிறார்

என்ற கருத்தை ரோமன் கத்தோலிக்க இறையியல் பற்றிக்கொண்டுள்ளது. பேதுருவின் நிருபம் மற்றும் எபிரெயருக்கு எழுதிய நிருபம் ஆகியவை இந்த உபதேசத்தை ஒயப்பண்ணுகின்றன. See "Eucharist" in The *Oxford Dictionary of the Christian Church,* 2d ed., ed. F. L. Cross and E. A. Livingstone (Oxford: Oxford University Press, 1974), 475–77. [18]பாதாள உலகத்திற்கு இயேசு இறங்கிச் சென்றது பற்றி, மெக்குல்லோக் அவர்கள், "குறைந்த பட்சம் இரண்டாம் நூற்றாண்டில் இருந்து, பாதாளத்திற்கு இறங்குதல், மரணம் மற்றும் பாதாளத்தை ஜெயித்தல், மரித்தோருக்குப் பிரசங்கித்தல் மற்றும் ஆத்துமாக்களை விடுவித்தல் ஆகியவை உள்ளடக்கிய நம்பிக்கையைக் காட்டிலும், மிகவும் நன்கு அறியப்பட்டதும் பிரபலமானதுமான நம்பிக்கை வேறு எதுவும் இல்லை" என்று எழுதினார். (J. A. MacCulloch, *The Harrowing of Hell: A Comparative Study of an Early Christian Doctrine* [Edinburgh: T. & T. Clark, 1930], 45.) [19]*En hoi* என்ற சொற்றொடர் மற்ற வழிகளிலும் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. மேலே பட்டியல் இடப்பட்டுள்ள மாற்றுக்கருத்துகள் மிகப்பலத்த ஆதரவைக் கொண்டுள்ளன. இங்கு உள்ள இலக்கணரீதியான பிரச்சனைகளை விவாதிக்க இது இடமல்ல. ஆர்வம் உள்ளவர்கள் *Michaels,* 205 என்ற புத்தகத்தில் காணலாம். [20]D. A. கர்ஸன். "Reflections on the Book *I Just Want to be a Christian* by Dr. Rubel Shelly." இந்த உரைத்தாளை www.mun.ca/rels/restmov/texts/rmeyes/carson.html என்ற வலைத்தளத்திலும் காணமுடியும் கர்ஸன் அவர்கள், "அதேவேளையில் இது [அமெரிக்க மீளக்கட்டுவித்தல் இயக்கம்] ஞானஸ்நானம் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை மேம்படுத்திற்று, இந்தக் கண்ணோட்டம், அமெரிக்க மீளக்கட்டுவித்தல் இயக்கத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சபைக்குழுமங்களின் வட்டாரத்திற்குப் புறம்பே ஏறக்குறைய வேறு எந்தக் குழுமத்தினாலும் தழுவப்படவில்லை" என்று எழுதினார். ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது தேவன் செயல்பட்டு கீழ்ப்படியும் விசுவாசியின் பாவங்களைப் புறம்பே நீக்கிப்போடுகிறார் என்ற கோட்பாட்டை அமெரிக்க மீளக்கட்டுவித்தல் இயக்கம் கொண்டிருந்ததாக கர்ஸன் புரிந்துகொண்டிருந்தார் என்பதே இங்கு யூகிக்கப்பட்ட கண்ணோட்டமாக உள்ளது. உண்மையில் இந்தக் கண்ணோட்டம், சபை வரலாற்றின் பழங்காலம் தொடங்கி தற்காலம் வரையிலும் மற்றும் பலதரப்பட்ட கிறிஸ்தவப்பாரம்பரியங்களாலும் பதிவு செய்யப்பட்டதாகும்.

[21]எவரெட் ஃபெர்கூஸன் அவர்கள், பாவமன்னிப்புக்கென்றே ஞானஸ்நானம் உள்ளது என்ற புரிந்துகொள்ளுதல் உள்ள காலகட்டத்தைக் காண்பிக்கும் சபையினுடைய பரவலான பதிவேடுகளை இரண்டாம் நூற்றாண்டுப் புத்தகங்களில் இருந்து எடுத்துச் சேர்த்துள்ளார். இது புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலகட்டத்திற்கு முன்பே நிலவிய உபதேசமாகும். அவர், "ஞானஸ்நானம் பற்றி இரண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கூறப்பட்ட உரைகளின் வலிவும் ஒன்றிப்பும், சபையின் தொடக்ககாலத்தில் இருந்தே ஞானஸ்நானத்திற்கும் பாவமன்னிப்பிற்கும் இடையில் நேரடியான உறவு இருந்தது என்று காண்பிக்கின்றன" என்று எழுதினார். (Everett Ferguson, *Early Christians Speak* [Austin, Tex.: Sweet Publishing Co., 1971], 38.) [22]Fred Gealy, "The First and Second Epistles to Timothy and the Epistle to Titus, Introduction and Exegesis," in *The Interpreter's Bible,* ed. George A. Buttrick (New York: Abingdon Press, 1955), 11:453. [23]Edward Gordon Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text, with Introduction, Notes, and Essays,* Thornapple Commentaries, 2d ed. (London: Macmillian & Co., 1947; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 83. [24]"சான்று காண்பித்தல்" என்பதன் மூலம் ஒருவர் அர்த்தப்படுத்துவது

என்ன என்பது பிரச்சனைக்குரியதாக உள்ளது. ஐக்கிய வேதாகம சங்கத்தார்களால் வெளியிடப்பட்டுள்ள கிரேக்க மொழி புதிய ஏற்பாட்டில் மிகப்பழைய பதிப்புகளில், பிற்சேர்க்கை ஒன்று “மேற்கோள்களின் அகரவரிசை” என்பதாக உள்ளது. சான்று காண்பித்தல் என்பது மேற்கோள் காட்டுதல் என்பதற்குச் சமமானதாக நாம் கருதினால், சங்கீதங்களின் புத்தகத்தில் இருந்துதான் பெரும்பான்மையும் சான்றுகாண்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய வேதாகம சங்கத்தாரின் மிகச்சமீபத்திய பதிப்பு ஒன்றில், “மேற்கோள்களின் அகரவரிசை” என்பதற்குப் பதிலியாக “மறைவான கருத்துக்கள் மற்றும் வாய்மொழி வார்த்தைகளின் இணைகருத்துக்கள்” என்ற பிற்சேர்க்கையைக் கொண்டுள்ளது. விரிவான வகைப்பாட்டைப் பயன்படுத்தினால். சங்கீதங்களின் புத்தகத்தைக் காட்டிலும் அதிகம் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட மற்ற பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களும் உள்ளன.

6

பாடு அனுபவிக்கும் தேவ பிள்ளைகள் என்ற வகையில் நடந்து கொள்ளுதல் [பாகம் 3]

(4:1-11)

மாம்சத்திற்கு விரோதமாக ஆயுதம் அணிந்து கொள்ளுதல் (4:1-3)

[1]இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்.
[2]ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.
[3]சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டதுபோதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்.

3:13-18ல் அப்போஸ்தலர், தமது வாசகர்களின் பாடுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அவர்கள் தங்கள் துன்பங்களை, கிறிஸ்துவுக்காகப் பாடநுபவித்தல் என்ற பின்னணிக்கு எதிராகக் கண்ணோக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். பேதுருவின் நாட்களில் வாழ்ந்தவர்கள் நியாயத்தீர்ப்பை எதிர்கொண்டிருந்தது போன்றே, தேவனுடைய நியாயத்தீர்ப்பை எதிர்கொண்டிருந்த நோவாவின் நாட்களில் இருந்த மக்களுக்கு இயேசுவினால் அறிவிக்கப்பட்ட பிரசங்கத்தை, ஆண்டவரின் பாடுகள் அவருடைய சிந்தைக்குக் கொண்டுவந்தன. இடைப்பிறவரலுக்கான 3:19-22ன் குறிப்புகளுக்குப் பின்பு அப்போஸ்தலர், கிறிஸ்துவின் பாடுகளுக்குத் திரும்பச் சென்றார். ஆண்டவருடைய பாடுகள், பேதுருவின் வாசகர்கள் தங்கள் சொந்த வாழ்வில் கண்ட நிலைகுலைவு பற்றி அவர்களுக்குப் போதிக்கச் சிலவிஷயங்களைக் கொண்டிருந்தன என்பதை அவர்கள் அறியவேண்டும் என்று பேதுரு விரும்பினார்.

வசனம் 1. இயேசு "பாவங்களுக்காக மரித்தார்" என்று 3:18ல் பேதுரு கூறியிருந்தார். இப்போது அவர், **கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே**

பாடுபட்டபடியால் என்று கூறினார். ஒருவேளை பேதுரு, "பாடுபட்ட" என்ற சொற்றொடரைக் கொண்டு, கிறிஸ்து தமது மனித அவதாரத்தில் பெற்ற பாடு முழுவதையும் குறிப்பிட்டிருக்கலாம். அவரது பாடுகளில், அவர் பக்குவமடைய வளர்ந்தது, தமது சொந்த மக்களால் புறக்கணிக்கப்பட்டது, மற்றும் மக்கள் கூட்டத்துடன் அவரது நீண்ட நேரங்கள், அவர்களுக்குப் போதித்து நோயாளிகளைக் குணமாக்கியது ஆகியவை உள்ளடங்கி இருக்கலாம். கிறிஸ்தவர்கள் பாடுகளை எதிர்கொள்ளுகையில், கிறிஸ்துவின் பாடுகளைப் பேதுரு அவர்களுக்கு நினைவூட்டி, அவரது பிறப்பு முதல் இறப்பு வரையில் அவர்களுக்கு உதாரணமாக முன்வைத்திருப்பார். எல்லா விஷயங்களிலும் அவர்கள் "அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து" (2:21) செல்ல வேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் பாடநுபவிக்கும்போது, அவர்கள் கர்த்தரைக் கண்ணோக்கி அவரது உதாரணத்தில் இருந்து தைரியத்தை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர். பேதுருவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள இது சாத்தியமான ஒரு வழியாக உள்ளது, ஆனால் இன்னொரு வழியும் உள்ளது.

பேதுரு, சிலுவையில் கிறிஸ்து பெற்ற மீட்கும் மரணத்தை நோக்கிக் குறிப்பாகத் தமது வாசகர்களின் கவனத்தை இழுத்தார் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. அவ்விஷயத்தில், கிறிஸ்து "மாம்சத்தில் பாடநுபவித்தார்" என்ற குறிப்பானது, அவர் "பாவங்களுக்காக மரித்தார்" (3:18) என்று கூறும் இன்னொரு வழியாக உள்ளது. அது பேதுருவின் கருத்தாயிருந்தால், இங்கு விஷயமாக இருந்தது, கிறிஸ்து தமது ஊழியத்தின்போது அவர்களுக்கு முன்வைத்த உதாரணம் அல்ல. மாறாக அப்போஸ்தலர் தமது வாசகர்கள் தங்கள் முந்திய பாவவாழ்விற்குத் தங்கள் முதுகுகளைத் திருப்பத் தேவையான ஏவுதலைப் பெற, கிறிஸ்துவின் மீட்பின் ஊழியத்தைக் கண்ணோக்க வேண்டும் என்று அவர் [பேதுரு] விரும்பினார். இயேசு தமது மானிட வாழ்வின் ஓட்டத்தின்போதும் சிலுவையின் துன்பத்தின்போதும் சகித்திருந்த பாடுகளுக்கு இடையில் நேர்த்தியான ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துதல் தேவையற்றதாக இருந்தது. நாம் ஒரு தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தியாக வேண்டும் என்றால், அது மீட்பிற்காகக் கிறிஸ்து பாடநுபவித்தல் என்பதே பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதாகவே இருக்கச் சாத்தியமுண்டு. சிலுவையின் மீது கிறிஸ்துவின் பாடானது, உச்சநிலை அடைந்தது, செறிவூட்டப்பட்டது மற்றும் கனிதரும் நிலைக்கும் கொண்டுவரப்பட்டது. கிறிஸ்து [நமக்குப்] பதிலாக பலியானது என்பதே அப்போஸ்தலரின் சிந்தையினுடைய மையமாக இருந்தது (2:24; 3:18).

ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள் என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை கிரேக்க மொழியில் *hoplizo* என்ற வினைச் சொல்லின் இடை வினைச்சொல்லாக உள்ளது. நேரடியான அர்த்தத்தில் இவ்வார்த்தை "உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்" அல்லது "ஆயத்தமாயிருங்கள்" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் இவ்வார்த்தை இராணுவக் குறிப்பால் உணர்த்தும் அர்த்தம் கொண்டுள்ளது. இராணுவ சந்தர்ப்பப் பொருள்களில் இது "போர் செய்ய உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்" என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இவ்வார்த்தையின் வினைச்சொல் வடிவம், புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மாத்திரமே காணப்படுவதாயிருக்க, இதன் *hoplon*

என்ற பெயர்ச்சொல் வடிவமானது, ஆவிக்குரிய யுத்தத்தின் ஆயுதங்களைப் பற்றிக் குறிப்பிடப் பவுலினால் பயன்படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 13:12; 2 கொரிந்தியர் 6:7; 10:4).

பேதுருவைப் பொறுத்தமட்டில், கிறிஸ்தவ வாழ்வு என்பது பொல்லாங்கை எதிர்த்து அமைதியாகச் சிறு சண்டை இடுதல் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக இருந்தது. அது எல்லா வகையிலும் யுத்தம் செய்வதைக் கொண்டிருந்தது. எபேசியர் 6:11ல் பவுல் வேறு ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியபோது கருத்து ஒன்றாகவே இருந்தது: "பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்" (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:8). கிறிஸ்தவர், தமது சிந்தையில் (ennoia) தமது புரிந்துகொள்ளுதலில், கிறிஸ்து அளித்துள்ள ஆவிக்குரிய வள ஆதாரங்களை ஆயுதமாகத் தரித்துக் கொள்ள வேண்டும் என்று பேதுரு கூறினார். NASB *வேதாகமத்தில்* ***அப்படிப்பட்ட*** **(same purpose)** *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள்,* NIV *வேதாகமத்தில்* "same attitude" *என்றும்* NRSV *வேதாகமத்தில்* "same intention" *என்றும் தரவழைக்கப்பட்டுள்ளன. விசுவாசிகள் தங்களுக்கு முன்பாக அமைத்து வைக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் உதாரணத்தைப் பின்பற்றி, தாங்கள் பாடு அநுபவிக்கும்போது அதே சிந்தை நிலையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ள வேண்டும். இயேசு அளித்த ஆயுதங்கள் அவர்களை எதிர்கொண்ட பாடுகளின் கடுமையான வேதனையினூடே அவர்களைத் தாங்கி வழிநடத்தும்.*

கிறிஸ்து உதாரணப்படுத்திய அதே சிந்தையை, கிறிஸ்தவர் தமது ஆயுதமாகத் தரித்துக் கொள்ள வேண்டியது ஏன் என்பதை விளக்குவதற்கு, முடிவில்லாத கலந்துரையாடலைத் தோற்றுவித்த பின்வரும் சொற்றொடரைப் பேதுரு அளித்தார்; ***ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் ... பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.*** [*இது தமிழ் வேதாகமத்தில் 2ம் வசனமாகத் தரப்பட்டுள்ளது*]. NASB *வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு நேரடியானதாக உள்ளது, ஆனால் இது கடினமான கேள்விகளை எழுப்புகிறது. ஒருவர் கிறிஸ்தவராயிருக்க வேண்டுமென்றால் அவர் பாடு அநுபவித்தல் அவசியமானது என்று பேதுரு இங்கு மறைமுகமாய் உணர்த்துகிறாரா? "மாம்சத்தில்" பாடநுவித்தல் என்பது பாவத்தைத் தடைசெய்வதாக உள்ளது என்று அப்போஸ்தலர் கூறினாரா? பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், தாங்கள் "பாவங்களை விட்டோய்ந்திருப்பதாக" உரிமைகோரத் தைரியம் கொண்டிருக்க மாட்டார்கள். பூரணமடைதல் என்பது இனிவரும் வாழ்க்கைக்கு உரியதே தவிர இந்த வாழ்விற்கு உரியதல்ல. யோவான், "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" என்று எழுதினார் (1 யோவான் 1:8). இந்த ஆழ்சிந்தனைகள், எல்லாக் கிறிஸ்தவர்களும் அல்லது "மாம்சத்திலே பாடுபடுகிறவர்கள்" மாத்திரம் கூட, கிறிஸ்துவை உரிமையாக்கிக் கொண்டால் அதன் பின்பு ஒருக்காலும் பாவம் செய்ய மாட்டார்கள் என்று அப்போஸ்தலர் அர்த்தப்படுத்தினார் என்ற கருத்தைச் சாத்தியமற்றதாக்குகின்றன.* NIV *வேதாகமம், தெளிவிற்காக நேரடியான மொழிபெயர்ப்பைத் தியாகம் செய்யத்தயாராக உள்ளது. இது* "be-

cause he who has suffered in his body is done with sin" [*ஏனெனில் தனது மாம்சத்தில் பாடநுபவிக்கிறவன் பாவத்தைத் தீர்த்து வைக்கிறான்*] *என்று மொழிபெயர்த்தலின் மூலம் இவ்வசனப்பகுதியின் கருத்தைப் பிடிக்க முயற்சிசெய்கிறது.* NRSV *வேதாகமம் இதை,* "for whoever has suffered in the flesh has finished with sin" [*ஏனெனில் தனது மாம்சத்தில் பாடநுபவிக்கிறவன் பாவத்தை முடித்து வைக்கிறான்*] *என்று தரவழைக்கிறது.*

வெய்ன் A. *குரூடெம் அவர்கள் பின்வரும் பொழிப்புரையைக் கொண்டு "பாவங்களை விட்டோய்ந்திருப்பான்" என்ற சொற்றொடரின் அர்த்தத்தை உரித்தெடுத்து வைத்தார்: "சரியானதைச் செய்தமைக்காகப் பாடு அநுபவித்துள்ள எவரும், தாம் பாடு அநுபவித்தாலும் தொடர்ந்து தேவனுக்குக் கீழ்ப்படிந்து சென்றிருந்தால், பாவத்தை தெளிவாக முறித்துப் போடுதலைச் செய்திருக்கிறார்."*[1] *மனந்திரும்புதல் என்பது ஒருமுறைக்கு அதிகமான துணிவான செயலாக உள்ளது. இது பாவத்துடன் ஒரு தெளிவான முறிவைக் கொண்டுள்ளது. இது ரோமர் 6:3-7ல் உள்ள சிந்தனையைப் போன்றதாக உள்ளது. ஒருவர் கிறிஸ்தவர் என்ற வகையில் பாடு அநுபவிக்கும்போது, அவரது வாழ்வில் அதற்குமுன் பாவம் பெற்றிருந்த பிரியமான இடத்தை இனியும் பெற்றிராது. பாடு அநுபவித்தல் என்பது சுத்திகரிக்கும் செயல்விளைவைக் கொண்டுள்ளது (1:7) அது தற்செயலான விசுவாசத்துடன் உடன்பட்டு இருப்பதில்லை. முற்றான கருத்தில் கிறிஸ்தவர்கள் பாவத்தை விட்டு ஓய்ந்திருப்பதில்லை என்று இருக்கையில், அவர்கள் விசுவாசத்திற்கு விலை செலுத்தும்போது, பாவம் தனது பிடியைத் தளர்த்துவதாகிறது. கிறிஸ்துவின் நாமத்திற்காகப் பாடு அநுபவிப்பவர்கள் தேவனுடைய சித்தத்தை மீறுதலில் இனியும் இலேசாய்ப் பங்கேற்றலை ஒருக்காலும் அவர்களால் செய்ய முடியாது. கிறிஸ்துவின் பாடுகள், கிறிஸ்தவரின் ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்தமான வாழ்வு ஆகிய யாவும் பேதுருவின் சிந்தனைகளில் இருந்தன.*

வசனம் 2. *கிறிஸ்துவுக்காக வாழுதல் என்பது வாழ்நாள் முழுவதற்குமான உறுதிப்பாடாக உள்ளது. ஆத்துமாவானது தேவனைப் பற்றி ஒன்றும் அறியாதிருக்கும்போது, அப்படிப்பட்ட ஆத்துமாவைக் கொண்டவருடைய வாழ்வு மாம்ச இச்சைகளை மனம் போனபடி பின்பற்றிக் கொண்டிருக்கும் வேளையில், அவர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு அதற்குக் கீழ்ப்படிகிறார், அவர் வாழ்வின் புதிய பாதையொன்றைத் தழுவிக்கொள்கிறார். கிறிஸ்தவர்களின் வாழ்வு இரு வித்தியாசப்பட்ட காலகட்டங்களாக அமைந்துள்ளது: (1) அவரது ஞானஸ்நான மறுஜென்மத்திற்கு முந்திய வாழ்வு மற்றும் (2) மறுபடியும் பிறந்தபின்பு அவரது வாழ்வு (காண்க எபேசியர் 4:22-24; தீத்து 3:3-5). விசுவாசி தமது வாழ்வைக் கிறிஸ்துவுக்குக் கொடுத்துள்ள நிலையில், "பாவத்தை விட்டு ஓய்ந்திருப்பார்." அவர்* **இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் … தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாக** *தம்மை அர்ப்பணித்துள்ளார். கடந்தகாலத்தை மாற்ற முடியாது. ஆகையால் அதனைப் பற்றி அதிகமாய்ச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. இன்னமும் கிறிஸ்தவர், தமது வாழ்வின் பழைய வழி தமக்குப் பின்னால் இருந்தாலும் அதை வெட்கத்துடனே கண்ணோக்குகிறார். பூமியில் அவர் இனிப் பிழைத்திருக்கும் எஞ்சியகாலம், நிமிடங்களில் அல்லது பத்தாண்டுகளில் எப்படி கணக்கிடப்பட்டாலும், அவர்* **மாம்சத்திலிருக்கும்** *காலம்வரைக்கும்*

போதுமானவற்றைக் கொண்டிருக்கிறார். பாவம் என்பது வாழ்வை மதிப்புக் குறைவாக்கி மனிதப்பண்பை போக்குகிறது.

பேதுருவின் சக விசுவாசிகள் தங்கள் விசுவாசத்திற்காகப் பாடு அநுபவிக்கும்போது பேதுரு கவலை கொண்டார், ஆனால் குறைந்த பட்சம் அவர்கள் **மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல்** இருக்க வேண்டும் என்று அவர் கவலைகொண்டார். ஒருவர் சொந்த நடத்தையின் விளைவாக மாத்திரமே பாடுகள் வரலாம். நாசரேத்தூர் இயேசுவைப் பற்றி அறிந்தவர்களுக்கு இவ்வாறு ஒருக்காலும் நடைபெறக்கூடாது. புறதெய்வ வணக்கத்தவரான அயலகத்தார் முன்பாகக் கிறிஸ்தவர்கள் முன்னுதாரணமான வாழ்வு வாழ வேண்டும் என்று அப்போஸ்தலர் வேண்டிக்கேட்டுக் கொண்டார். பாடநுபவித்தல் வரவேண்டியதிருந்தது என்றால், அது கிறிஸ்தவர்கள் சாந்தம் மற்றும் நற்தன்மைக்குத் தங்களை ஒப்புவித்திருக்கையில் நடக்கட்டும். இந்தப் பாடக்கருத்து இந்த நிருபத்தில் இதற்கு முன் வந்துள்ளது. அரசுகளும் நீதிமன்றங்களும் அநீதியானவைகளாக இருக்கலாம், ஆனால் "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" என்ற கட்டளையை விசுவாசிகளுக்குப் பேதுரு கொடுத்தார் (2:17). அடிமைகள் தவறாக நடத்தப்பட்டனர், ஆனால் பேதுரு "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு?" என்று எழுதினார் (2:20). அவிசுவாசிகள் தாங்கள் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு குற்றத்தினாலும் கிறிஸ்தவர்களை அநீதியாகக் குற்றம்சாட்டினர். இருந்தாலும் அப்போஸ்தலர், "தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" என்று வாதிட்டார் (3:17), பிற்பாடு பேதுரு "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது" என்று கூற இருந்தார் (4:15).

NIV வேதாகமம், *sarx* என்ற வார்த்தையை "பொல்லாத மனுஷருடைய இச்சைகள்" என்று மொழிபெயர்க்கிறது. அது இவ்வார்த்தையை வேறொரு இடத்தில் "பாவம் நிறைந்த இயல்பு" என்று மொழிபெயர்க்கிறது. ஆங்கில மொழி வாசகர்கள் ஒரு உவமானத்தைப் புரிந்துகொள்ள இவ்விடத்தில் மொழிபெயர்ப்பாளர்கள் சிறிதளவே திறன் கொடுத்தனர் என்பது துரதிஷ்டவசமானது. பவுல் பேதுரு ஆகிய இருவருமே தெளிவாக *sarx* என்ற வார்த்தையை, மாம்சரீதியான, பாவம் நிறைந்த வழக்கம் கொண்ட மனவிருப்பங்களை அர்த்தப்படுத்தப்படுத்தப் பயன்படுத்தினர். இந்த உவமானத்தை நிற்க நாம் அனுமதித்தால், ஆங்கில வாசகர் "மாம்சம்" என்ற இந்த வார்த்தை கிரேக்க வாசகருக்கு அர்த்தப்படுத்தியதைப் புரிந்து கொள்ளக் கூடியவராகத் தம்மைக் காண்பார். "மாம்சம்" என்பது தீயஉணர்வுரீதியான மனவிருப்பம் என்று புரிந்து கொள்வதற்கு முழுமையான இறையியல் கல்வி தேவைப்படுவதில்லை. பேதுருவின் வாசகர்கள், மாம்ச இச்சைப்படியான வாழ்வுகளான, தங்கள் முந்திய வாழ்விற்குத் தங்கள் முதுகுகளைத் திருப்பிக்காண்பித்து, தங்கள் எஞ்சிய வாழ்நாளில் தேவனுடைய சித்தத்தைச்

செய்வதில் கவனம் குவிக்க வேண்டும் என்று பேதுரு விரும்பினார்.

வசனம் 3. யூதராக இருந்தாலும் கிறிஸ்தவராக இருந்தாலும், இஸ்ரவேலின் தேவனை ஆராதித்தவர்கள், கிரேக்க - ரோம ஒழுக்கத்தின்மீது பெரிதும் மதிப்புக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் நல்ல காரணங்களைக் கொண்டிருந்தனர். பேதுருவின் வாசகர்களில் பெரும்பான்மையானவர்கள், யூதரற்ற பின்னணியில் இருந்து கிறிஸ்துவினிடத்தில் வந்திருந்தனர் அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு முன்னர், கிரேக்க ரோம வாழ்வு உருவாக்கத்தில் அவர்கள் முழுமையாகப் பங்கேற்றிருந்தனர். அதன் பாலுறவு ரீதியான எழுதப்படாத ஆனால் கலாச்சாரரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த விதிகளையும் அதன் பொதுப்பண்டிகைகளையும் அவர்கள் தழுவிக் கொண்டிருந்தனர். அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆனபோது, அவர்களின் பழைய உலகம் தொடர்ந்து அவர்களுக்கு எதிர்நின்றது. நண்பர்களும் குடும்பமும் தாங்கள் எப்போதும் வாழ்ந்திருந்தவாறே அவர்களும் வாழ வேண்டும் என்று எதிர்பார்த்தனர். ஒருவேளை அவர்களில்சிலர் தங்களின் பழைய வாழ்வைக் கைவிடுதலில் மிகவும் தாமதமாகச் செயல்படுபவர்களாக இருந்திருக்கலாம். பேதுரு **சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டதுபோதும்;** என்று கூறியபோது அவரது வார்த்தைகள் சுடுசொல்லாக இருந்திருக்கலாம். போதுமான அளவு செய்தாயிற்று! "நீ இதை போதிய அளவு நீண்ட காலம் செய்திருக்கிறாய்" என்று ஒரு குழந்தையை அதன் பெற்றோர் கண்டிக்கலாம், இது போதுமான அளவைவிட நீண்டதாக இருப்பதாக அர்த்தப்படுகிறது. இந்தக் கருத்தில்தான் நாம் பேதுருவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர், "சென்ற வாழ்நாட் காலத்திலே ... நடந்துகொண்டபோதும்" என்று கூறியபோது, அது போதுமான அளவைவிட அதிகமாயிருந்தது என்று அவர் அர்த்தப்படுத்தினார். எந்த ஒரு கிறிஸ்தவரும் "புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி" தொடர்ந்து நடந்துகொள்ளக் காரணம் எதுவும் இருக்கவில்லை.

யூதராயிராத எவரொருவரும், யூதர்களுக்கு "புறஜாதியாக" இருந்தனர். வரையறைக்குட்பட்ட கட்டளை கொடுத்து இயேசு சீஷர்களை அனுப்பியபோது, அவர்களிடத்தில் அவர், "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும்" செல்லுங்கள் என்று கூறினார் (மத்தேயு 10:5). அவர்கள் யூதரல்லாதவர்களுக்குப் போதிக்கக் கூடாதிருந்தனர் என்பது தெளிவாக உள்ளது. இருப்பினும் சபையே உண்மையான இஸ்ரவேலாக இருந்ததை அது புரிந்துகொண்டிருந்தது. சபையே இப்போது இஸ்ரவேலாக இருப்பதால், கிறிஸ்தவ வட்டாரங்களில் "புறஜாதியார்" என்பது கிறிஸ்தவரல்லாதவர்களை அர்த்தப்படுத்துவதாயிற்று. இவ்வாறாகப் பவுல், தெசலோனிக்கேயருக்கு, அவர்கள் "தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல் மோக இச்சைக்குட்படாமல்" (1 தெசலோனிக்கேயர் 4:4) என்று கூறியபோது, அவர் தமது கிரேக்க கிறிஸ்தவ வாசகர்கள், கிறிஸ்துவை அணிந்து ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவை அணிந்துகொண்ட பின்னரும்கூட, இன்னமும் கிரேக்க இனத்தாராகவே இருந்தனர், ஆனால் அவர்கள் அஞ்ஞானிகளாக/ புறஜாதியாராக இருக்கவில்லை. புறஜாதியார் என்பவர்கள் கிறிஸ்தவரல்லாதவர்களாக இருந்தனர். பவுல் 1 தெசலோனிக்கேயர் 4:4ல் செய்தது போன்றே பேதுருவும் "புறஜாதி

யார்" என்ற சொற்றொடரை இங்கு பயன்படுத்தினார். இவ்வார்த்தையை நாம் மொழிபெயர்க்கும் வகையைப் பொறுத்து இது மறைகருத்துக்களைக் கொண்டுள்ளது. ஆங்கிலத்தில் "Gentile" அல்ல ஆனால் "pagan" என்ற வார்த்தையே புறதெய்வ வணக்கத்தவரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. எனவே NIV வேதாகமம் *1 பேதுரு 4:3ல்* இதை "pagan" என்று நல்ல காரணத்துடனேயே மொழிபெயர்த்துள்ளது.

விசுவாசிகள் தங்களுக்குப் பின்விட்டுச் செல்ல வேண்டிய பண்புகளின் பட்டியலை *1 பேதுரு 2:1ல்* அப்போஸ்தலர் அளித்திருந்தார். *4:3ல்* அவர் கணிசமான அளவில் மாறுபட்ட பட்டியல் ஒன்றை அளித்தார். முந்திய வசனங்களில், கிறிஸ்தவ சமூகத்திற்குள்ளாக இருந்த பாவங்கள் என்பது பிரச்சனையாக இருந்தது. *4:3ல்* புறதெய்வ வணக்க வாழ்வுப் பாணி என்பது கவனத்தின் கீழ் உள்ளது. புறதெய்வ வணக்க வாழ்வின் பண்புகள் என்ற வகையில் பேதுரு முன்வைக்கும் பாவங்களின் பட்டியல், வேறு நிருபங்களில் உள்ள இப்படிப்பட்ட பட்டியல்களைப் போன்றதாக உள்ளது. *4:3, ரோமர் 13:13, மற்றும் கலாத்தியர் 5:19-21 ல்,* களியாட்டுப் பழக்கங்கள் (குடித்தல் மற்றும் பாலுறவு ரீதியான மோசமான நடக்கை) ஆகியவை மேலான செல்வாக்குப் பெறுகின்றன. ஒவ்வொரு வார்த்தை பற்றிய சுருக்கமான ஆய்வு ஒன்று உதவிநிறைந்ததாக இருக்கும்.

காமவிகாரம் (*aselgeia*) என்பது, பாலுறவு ரீதியான கட்டுப்பாட்டைக் கைவிடுதல் என்று அர்த்தப்படுகிறது. இது தேவனோ அல்லது மனிதரோ, தகுந்த அல்லது ஏற்புடைய நடக்கை என்ற வகையில் அளிக்கும் விளக்கத்தைப் பற்றி அக்கறையெதுவும் காண்பிக்காத நடத்தையைக் குறிக்கிறது. ஒருவர், விளைவுகளைப் பற்றிய நினைவு எதுவுமின்றி, மிருகம் போன்று காம உணர்வு சார்ந்த விருப்பங்களுக்கு தம்மை ஒப்புக்கொடுக்கும்போது, அவர் இந்தப் பாவத்தைச் செய்த குற்றமுள்ளவராக இருக்கிறார். **துர்இச்சைகள்** *(epithumia)* (ஆங்கிலத்தில் **lusts**) என்பது தன்னிலே ஒரு நடுநிலை வார்த்தையாக உள்ளது. இதன் ஆங்கில கிரேக்க மொழி அர்த்தத்தின்படி இது, நல்ல அல்லது மோசமான விருப்பங்களைக் குறிப்பிடலாம். சந்தர்ப்பப்பொருள்தான் *1 பேதுரு 4:3ல்* உள்ள "துர் இச்சைகள்" [lusts] என்பதன் அர்த்தத்தை முடிவு செய்கிறது. சில விருப்பங்கள் நல்லவையாக உள்ளன. NASB வேதாகமம் இதே கிரேக்க வார்த்தையை, *பிலிப்பியர் 1:23ல்* "desire" [தமிழில் "**ஆசை**"] என்று மொழிபெயர்க்கிறது: **"தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு."** இவ்வார்த்தையை சட்டவிரோதமான விருப்பங்களை, விசேஷமாக பாலுறவு இயல்பாக இருந்தவை பற்றி அர்த்தப்படுத்துவதற்காகப் பேதுரு இங்கு பயன்படுத்தினார். **மதுபானம்பண்ணுதல்** (*oinophlugia*) என்பதற்கு சிறிதளவே விளக்கம் தேவைப்படுகிறது. குறிப்பிட்ட இந்த கிரேக்க வார்த்தை, அளவுக்கு மீறி மதுபானம் அருந்துதல் பற்றி, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழங்கால உலகத்திலும் நவீன உலகத்திலும், பாலுறவுரீதியான ஒழுக்கக்கேடு, நெறிமுறையற்ற வாழ்வு மற்றும் மதுபானம் அருந்துதல் ஆகியவை யாவும் இணைந்துள்ளன.

களியாட்டு (*kōmos*) என்பது கிரேக்க தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட விழாக்களுடன் இணைவு கொண்டிருந்த கேளிக்கைக் கூத்தாட்டத்தைக் குறிக்கிறது. தியோனிசஸ் என்ற கடவுளை ஆராதித்தலில் இப்படிப்பட்ட

கொண்டாட்டங்கள் குறிப்பாக இணைந்திருந்தன. ஒரு விருந்து நடைபெறும்போது, கிறிஸ்தவர் தமது தோழமையைத் தேர்ந்தெடுத்தலின் அவசியம் குறித்து இங்கு அவருக்கு நினைவூட்டப்படுகிறது. **வெறி** (*potos*) என்பது முந்திய வார்த்தையுடன் நெருங்கிய உறவு கொண்டதாகும், ஆனால் அதில் மார்க்கரீதியான அர்த்தம் எதுவும் இல்லை. இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் இந்த இடத்தில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் மார்க்கம் சாராத பொது உலகத்தில் இது, தாராளமாகத் தரப்படும் விருந்துகளைக் குறித்தது. மதுபானம் பண்ணுதல் மற்றும் பாலுறவுரீதியான ஒழுக்கக் கேடுகள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள நெருங்கிய தொடர்பு மீண்டும் எதையும் பலனாகத் தரத் தகுதியற்றதாக உள்ளது. **அருவருப்பான விக்கிரகாராதனை** என்ற வார்த்தையைக் கொண்டு, விசுவாசிகள் தவிர்க்க வேண்டிய குற்றங்களின் பட்டியலைப் பேதுரு முடித்து வைத்தார் என்பது தற்செயல் நிகழ்வு அல்ல. இவையாவையும் விக்கிரக ஆராதனையில் இருந்து வந்திருந்தன. கிரேக்க - ரோமக் கடவுள்களை ஆராதித்தலானது, ஒழுக்கவீன நடத்தையைக் கட்டுப்படுத்துதலில் இருந்து தூரத்தில் இருந்தது, மேலும் இது ஒழுக்கவீனத்திற்கு ஆதாரவளமாக, பிறப்பிடமாக இருந்தது. விக்கிரக ஆராதனை வெட்கக் கேடானதாக இருந்தது; அது படைப்பின் தேவனை கனவீனப்படுத்தியதால் “அருவருப்பானதாக” இருந்தது. இத்துடன் கூடுதலாக, இது மனிதரை இழிவுபடுத்தும் நடத்தையை அனுமதித்து அதை ஊக்குவிப்பதாக இருந்தது. பிள்ளைகளை மோக இச்சைக்காகக் காட்சிப்படுத்துதல் முதல் வாளேந்திய வீரர் போட்டிகள் வரையிலும், பாலுறவு ரீதியான கொண்டாட்டங்கள் வரையிலும், இவை யாவையும் கிரேக்கர்களின் உலகத்தில் இடம் பெற்றிருந்தன, இவைகள் அவர்களின் கடவுள்களிடம் இருந்து கண்டிக்கும் வார்த்தை எதையும் கொண்டிருக்கவில்லை.

புறதெய்வ வணக்கக் கணக்கொப்புவிப்பு (4:4-6)

4 அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள். 5 உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள். 6 இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன் முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

பேதுருவின் சிந்தை, அவரது வாசகர்கள் முன்பு ஆரத்தழுவியிருந்த, புறதெய்வ வணக்க சமூகத்தைப் பண்புப்படுத்திய தேவபக்தியற்ற வாழ்வில் இருந்து, விக்கிரக ஆராதனை மற்றும் ஒழுக்கக்கேடுகள் ஆகியவற்றில் விசுவாசிகள் தொடர்ந்து பங்கு பெற வேண்டும் என்ற புறதெய்வ வணக்கத்தாரின் வலியுறுத்திற்குத் திரும்பிற்று. புறம்தள்ளப்பட்ட வாழ்வைப் பெற்றவர்கள், தங்கள் வாழ்வின் நடத்தையை, அதில் பங்கேற்பதன் மூலமாக மற்றவர்கள் உறுதிப்படுத்தவில்லை என்றால் ஆறுதல் அடைவதில்லை என்பது நேர்மாறானதாக உள்ளது. புறதெய்வ வணக்கத்தாரின் ஒழுக்கவீனங்களில் பங்கேற்க விசுவாசிகள் மறுத்தபோது, அவர்கள் காயீனைப் போன்று

விசுவாசிகளைத் தாக்கினர் (1 யோவான் 3:12), அவர்கள் தங்கள் சொந்த வாழ்வைக் குற்றம் சாட்டும் வகையில் நல்ல வாழ்வு வாழ்ந்த விசுவாசிகளை வெறுத்தனர்.[2]

வசனம் 4. நெருக்கமாகப் பிணைந்திருந்த கிரேக்க நகரங்களில் பொதுவாழ்வு என்பது பண்டிகைகள், விளையாட்டுகள் மற்றும் தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சடங்குகள் ஆகியவற்றைச் சுற்றிச் சூழ்ந்திருந்தன. பொதுப்பண்டிகைகளில் களியாட்டுச் செய்தவர்கள், பேதுரு இங்கு கண்டனம் செய்திருந்த - மதுபானம்பண்ணுதல் மற்றும் காமவிகாரம் என்ற - செயல்களை நடப்பித்து இருந்தனர். இவ்விதமான வாழ்வில் இருந்து கிறிஸ்தவர்கள் விலகித்தெளிவாக இருந்தனர் என்பது (4:1) பல குடிமை நிகழ்வுகளில் அவர்கள் பங்கேற்றலைச் சாத்தியமற்றதாக ஆக்கியிருந்தது. அவிசுவாசிகள் அதை குற்றப்படுத்தும் செயலாக கண்டனர், கிறிஸ்தவராகுதல் என்ற செயலேகூட சிறிதளவே ஆர்வத்தைத் தூண்டியிருக்க வாய்ப்பிருந்தது. கிறிஸ்தவர்கள் தங்கள் மார்க்கம் குறித்து பகுத்தாய்தல் மாத்திரம் கொண்டிருந்தால், அவிசுவாசிகள் தங்கள் அயலகத்தில் ஒருவர் அல்லது தங்கள் உறவினர் ஒருவர் இயேசுவை தேவன் என்ற வகையில் ஆராதிக்கத் தேர்ந்துகொள்ளுதல் பற்றிக் குற்றப்படுத்துவதாகக் கண்டறிதல் அரிதாகவே இருந்திருக்கும். கிரேக்கக் கலாச்சாரத்தில் எப்போதுமே இன்னொரு தெய்வத்திற்கு இடம் இருந்தது. இருப்பினும், அதே மக்கள் பொது நிகழ்வு ஒன்றிற்கான அழைப்பை மறுத்தபோது, அவர்களின் பழைய பாரம்பரியங்கள் மற்றும் பழைய தெய்வங்கள் யாவும் ஒன்றுமே இல்லை என்பது போன்று அவர்கள் அவற்றில் இருந்து விலகி நின்றபோது, புறதெய்வ வழிபாட்டுக்காரர்கள் **ஆச்சரியப்பட்டனர்**. ஒரு புதிய தெய்வம் அவர்களைக் குற்றப்படுத்தவில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள் ஏற்படுத்திய உரிமைகோருதலில் அவர்கள் [புறதெய்வ வணக்கக்காரர்கள்] குற்றப்பட்டனர்: தேவன் ஒருவரே தவிர வேறில்லை. பழைய தெய்வங்கள் ஒன்றும் இல்லை. குடிமை நிகழ்வுகளில் கலந்துகொள்ள அவர்களின் அயலகத்தவர்களும் நண்பர்களும் மறுத்தபோது, அது குற்றப்படுத்துதலாக இருந்தது. இதைவிட மேலாக, அது அவமானப்படுத்துதலாக இருந்தது.

கிறிஸ்தவம் என்பது எதிர்க்கலாச்சாரச் செயல்தாக்கம் உள்ளதாக இருந்தது மற்றும் அவ்வாறே இன்னும் தொடருகிறது. நசரேயனாகிய இயேசுவின் போதனைகள், காமவிகாரமான மக்களின் ஒழுக்கக் கேடு மற்றும் அநீதி ஆகியவற்றிற்கு அறைகூவல் விடுத்தன. இயேசுவை உதடுகளால் மாத்திரம் துதித்தலுக்கு ஆதரவு தெரிவித்துப் பேதுரு எழுந்து நிற்கமாட்டார். ஒருவர் கிறிஸ்துவை உரிமையாக்கிக் கொண்டே, தாம் முன்பு செய்திருந்தபடி, புறதெய்வ வணக்கத்தாரோடே கூட **அந்தத் துன்மார்க்க உளையிலே** விழுந்து கிடக்க முடியாது. "உளை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *anachusis* என்ற வார்த்தை நேரடியாக "வெள்ளம்" என்று அர்த்தப்படுகிறது. புறதெய்வ வணக்க சமூகத்தைப் பண்புப் படுத்திய [அவர்கள்] கைவிட்டிருந்த கண்மூடித்தனமான வாழ்வு என்ற அதே வெள்ளத்தில் அவர்கள் பேராவலுடன் ஒரு நபர் "தங்களுடன் அடித்துச் செல்லப்படாது" இருந்ததைக் கண்டு "ஆச்சரியப்பட்டனர்," இவ்வசனத்தில் "dissipation" *(asōtia)* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையை, எபேசியர் 5:18ல் பவுல்

பயன்படுத்தினார். பேதுருவைப் போல் பவுலும் இவ்வார்த்தையை மதுபானம் பண்ணுதலுக்கு இணைவித்துள்ளார்.

சாதாரணமானது என்று இந்த உலகம் ஏற்றுக்கொள்ளும் நடத்தையைக் குற்றம்சாட்டும் வகையிலான வழியில் கிறிஸ்தவர்கள் வாழ வேண்டும் என்று பேதுருவின் வார்த்தைகள் அவர்களுக்கு அறைகூவல் விடுக்கின்றன. மக்கள் தங்கள் சொந்த வாழ்வையும் மற்றவர்களின் வாழ்வையும், மதுபானம், போதைப்பொருள்கள், பாலுறவுரீதியான ஒழுக்கக் கேடு மற்றும் வன்முறை ஆகியவற்றைக் கொண்டு மலிவுபடுத்தி அழிக்கும்போது தேவன் அதில் பிரியப்படுவதில்லை. இப்படிப்பட்ட செயல்களில் தேவனுடைய மக்கள் ஈடுபடக்கூடாது. உலகத்தைக் குற்றப்படுத்துதல் பகைமைக்கு அழைப்பு விடுவிக்கும் என்று அஞ்சுபவர்களுக்கு இயேசுவின் பின்வரும் வார்த்தைகள் நினைவுபடுத்தத் தகுதியானவையாக உள்ளன: **"எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்"** (லூக்கா 6:26).

விசுவாசிகள் இந்த உலகத்தைக் குற்றப்படுத்தும் வகையில் வாழும்போது, அவர்கள் இந்த உலகம் புறம்கூறித் தூற்றுவதை எதிர்பார்க்கலாம். கிரேக்க மொழியில், **உங்களைத் தூஷிக்கிறார்கள்** என்ற சொற்றொடர் ஒரே ஒரு வார்த்தையாக மாத்திரமே உள்ளது. மிகவும் நேர்ப்பொருளில் இது (*blasphemeo* என்பதில் இருந்து வரும் வார்த்தையான) "தேவதூஷனம் கூறுதல்" என்று வாசிக்கப்படுகிறது. இவ்வார்த்தை, தூயதும் பரிசுத்தமுமானதைப் பழித்துரைத்தல் என்று அர்த்தப்படுகிறது. ஒருவர் தேவனுடைய நாமத்தைத் தூற்றுகிறபோது அவர் தேவதூஷணம் கூறுகிறார், ஆனால் தேவனுடைய மக்களின் நாமத்தைப் பழித்துரைத்தல் தேவனேயே பழித்துரைத்தலாக இருக்கும் அளவுக்குத் தேவன் தமது மக்களுடன் மிகவும் அதிகமாக ஐக்கியம ாயிருக்கிறார். இதை நடபடிகள் 9:4 வசனப்பகுதி வெளிப்படுத்துகிறது. தர்சு பட்டணத்து சவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தார், ஆனால் தமஸ்கு செல்லும் சாலையில் அவரிடம் பேசிய இயேசு, **"சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?"** என்று கேட்டார் (நடபடிகள் 9:4). அவிசுவாசிகள் தேவனுடைய மக்களை பழிதூற்றும்போது அவர்கள் தேவனேயே தூஷிக்கின்றனர் என்று கூறப் பேதுரு தயங்காதிருந்தார்.

வசனம் 5. பேதுரு இந்த நிருபத்தை முதன்முதலாகப் படிக்கும்படி யாருக்கு எழுதினாரோ, அந்தக் கிறிஸ்தவர்கள், தங்கள் அயலகத்தவர்களாக இருந்த அவிசுவாசிகளிடத்தில் இருந்து தாங்கள் பெற்ற அநீதியான குற்றச்சாட்டுகள் குறித்துக் கவலைப்பட அவசியம் இல்லாதிருந்தது. திருப்பித் தூற்றுதல் என்பது அவர்களின் தனிச்சலுகையாக இருக்கவில்லை. **"பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார்"** (ரோமர் 12:19). அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கே **கணக்கொப்புவிப்பார்கள்.** அவர் நீதியின்படியே ஒவ்வொரு நபருக்கும் **நியாயத்தீர்ப்புக்கொடுப்பார்** மற்றும் தகுதியான தீர்ப்பையே அவர் கொடுப்பார். தேவனை எதிர்த்து நிற்பவர்களும் அவரது மக்களுக்குக் கொடுமை செய்பவர்களும் தாங்கள் செய்யும் செயல்கள் பற்றிக் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

புதிய ஏற்பாடு முழுவதிலும் ஒரு தயக்கமற்ற ஆய்வுக்கருத்து உள்ளது:

தேவனுடைய நியாயத்தீர்ப்பு தற்போதைய இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவரும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஓரளவிற்கு ஏற்கனவே தொடங்கி உள்ளது. பாவத்தில் வாழ்பவர்கள் இந்த வாழ்விலேயேகூட பாவத்தின் விளைவுகளைச் சுமந்தாக வேண்டும். இன்னும் இந்த உலகத்தில் நியாயம் எப்போதுமே மேலோங்கி இருப்பதில்லை; கர்த்தருடைய நாளில் அது மேலோங்கி இருக்கும். பேதுருவைப் பொறுத்த மட்டில், நிச்சயமாய் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு, "மனிதர் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நிலையை வலியுறுத்துகிறது மற்றும் இங்கு இப்போதுள்ள வாழ்வின் பகுதியாக உள்ள தவறுகள் எல்லாவற்றின் மீதும், நியாயத்தின் நிச்சயத்தன்மையானது நிறைவில் வெற்றிபெற்று ஓங்கும்."[3]

தூஷணம் செய்பவர்கள் நிச்சயமாகவே "கணக்கு ஒப்புவிப்பார்கள்," அவர்கள் எப்போது கணக்கு ஒப்புவிப்பார்கள் என்பது இன்னொரு காரியம். கர்த்தர் விரைவிலேயே திரும்ப வருவார் என்று பேதுரு எதிர்பார்த்திருந்தார். இயேசு நியாயாதிபதியாகப் பூமிக்குத் திரும்பத் **தயாராக** நின்றார் (காண்க 4:7). அது எப்போது நடைபெற இருந்தது என்பதை மிகச்சரியாகக் கூறும் சுகவீன ஆலோசனைத் தீர்க்கதரிசனம் எதையும் அப்போஸ்தலர் கொண்டிருக்கவில்லை, அவர் தற்காலப் பிரசங்கியார்கள் நன்கு பின்பற்றக்கூடிய வகையில் தன்னடக்கமாக இங்கு உரைத்தார். கர்த்தர் வரும் நேரத்தைத் திட்டவட்டமாக அறிதலைக் காட்டிலும் அவர் வருகையை எதிப்பார்த்து வாழுதல் கிறிஸ்தவர்களுக்கு அதிக முக்கியமாக உள்ளது. பூமியின்மீது வாழ்வு என்பது முழுமையாக மலர்ந்து இருக்கையில் கர்த்தர் மறுபடியும் வருவார். பெருவெள்ளத்திற்கு முன்பு நோவாவின் காலத்தில் மக்கள் உண்டு குடித்து, பெண்கொண்டு பெண்கொடுத்து வாழ்ந்த நாட்கள் போலவே இதுவும் இருக்கும் (லூக்கா 17:27). தேவன் **உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும்** நியாயத்தீர்ப்புக் கொடுப்பார். அவர் மறுபடியும் வருவதற்கு முன்னர் மரிப்பவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு ஆவிக்குரிய உடல்களில் ஐக்கியப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:44). அவர் மறுபடியும் வரும்போது உயிரோடு இருப்பவர்கள் மறுரூபம் அடைந்து (1 தெசலோனிக்கேயர் 4:17) ஆவிக்குரிய உடல்களில் ஐக்கியப்படுவார்கள். தேவனுடைய மக்களை அநியாயமாய்க் குற்றம்சாட்டி அவர்களுக்குத் தீங்கு விளைவித்தவர்கள் "கணக்கு ஒப்புவிப்பார்கள்."

வசனம் 6. இவ்வசனம் பல்வேறு வகையான விளக்கங்களின் விளைவாக ஏற்படும் சிரமங்களை முன்வைக்கிறது. பின்வரும் விளக்கங்கள் அந்த சிரமங்கள் யாவற்றையும் ஆழ்ந்து சிந்திக்க முயற்சி மேற்கொள்வதில்லை.அதற்குப்பதிலாகஅவைகள்.அதிகம்சாத்தியமாகஉள்ளஇரண்டு சிரமங்கள் மீது கவனம் செலுத்துகின்றன. இவ்வசனத்தை விளக்கப்படுத்துவதற்கு ஏற்படும் முதல் சிரமம் இதன் சந்தர்ப்பப் பொருளில் இருந்து உதிக்கிறது. கிறிஸ்து **"உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிரு"** ந்தார் என்பதை அப்போஸ்தலர் உற்றுக்கவனித்திருந்தார் (4:5). மற்றும், பேதுருவும் அவரது வாசகர்களும் கர்த்தர் விரைவில் திரும்ப வருவார் என்று எதிர்பார்த்து இருந்தனர் (4:7).

தெசலோனிக்கே நகரில் இருந்தவர்கள் மத்தியில் எழும்பி இருந்த

அதே கேள்விகள் (1 தெசலோனிக்கேயர் 4:13-18). பேதுருவின் வாசகர்கள் மத்தியிலும் எழும்பி இருக்கலாம். அவர்களில் சிலர் இறந்திருந்தனர், இன்னமும் கர்த்தர் திரும்பி வந்திருக்கவில்லை. கர்த்தர் திரும்பி வருவதற்கு முன்பு மரித்தவர்கள், அவர் திரும்பி வரும்போது உயிருடன் இருப்பவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் அதே இரட்சிப்பில் பங்கடைவார்களா? மரித்திருந்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பு என்ற கருத்து கேள்விகளை எழுப்பி இருந்ததால், தேவபக்தியின்றி வாழ்ந்து மரித்தோர் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று கர்த்தர் வற்புறுத்தும்போது, விசுவாசநிறைவில் வாழ்ந்து மரித்தோரை அவர் இரட்சிப்பாரென்று பேதுரு தமது வாசகர்களுக்கு மறு உறுதிப்படுத்தினார். **இதற்காக** (இயேசு துன்மார்க்கரை நியாயந்தீர்க்கும் அதே வேளையில் மீட்கப்பட்டோரை இரட்சிப்பார் என்ற நோக்கத்திற்காக) **அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது** என்று எழுதியதன் மூலம் அவர்களுக்கு அவர் மறு உறுதி அளித்தார்.

குறிப்பிட்ட எந்த நபருக்காவது பிரசங்கித்தல் என்ற கருத்தை அப்போஸ்தலர் தமது சிந்தையில் கொண்டிருந்ததாகக் காணப்படவில்லை. NASB வேதாகமம், ஒருமுறை மாத்திரம் நிகழும் செயலைக் குறிப்பிடும் செயப்பாட்டு வினைச்சொல்லை (*euēngelisthē*) நபர்த்துவமற்றதாக மேற்கொள்கிறது, இது "சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது" (தமிழ் வேதாகமத்தில் "**சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது**") என்ற மொழிபெயர்ப்பை விளைவித்துள்ளது, ஆனால் சிலர் இந்த மொழிபெயர்ப்பில் திருப்தி அடைவதில்லை. அவர்கள் சந்தர்ப்பப் பொருளைக் கவனிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து, இயேசுவின் பிரசங்கித்தலையே பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று விவாதிக்கின்றனர். 4:5ல் இயேசுவே நியாயந்தீர்க்கப்போகிறவராயிருந்தார். ஆகையால் 4:6ல் (விவாதம் இவ்வாறு செல்வதால்) இயேசுவே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவராயிருந்தார். இவ்வசனம் "இந்த நோக்கத்திற்காகவே சுவிசேஷம் மரித்தோருக்கும்கூட *இயேசுவினால்* பிரசங்கிக்கப்பட்டது" என்ற கருத்துள்ளது என்று அவர்கள் எடுத்துக்கொள்கின்றனர். 4:6ம் வசனம் 3:19ல் பேதுருவின் உறுதிப்படுத்துதலைப் பெருக்கமாக்குகிறது என்பதே இங்கு விவாதமாக உள்ளது. அங்கு பேதுரு "**அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்**" என்று கூறினார். இவ்விரு வசனப்பகுதிகளுமே, இயேசு சிலுவையில் தாம் பெற்ற மரணத்திற்குப் பின், தமது உயிர்த்தெழுதலுக்கு முன்பு, தாமே நேரடியாக மரித்தோரின் உலகத்திற்குச் சென்றார் என்ற கருத்தை ஆதரிக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

3:19ன் மீதான விளக்கங்களின்படி, *Descensus* என்று அழைக்கப்படும் உபதேசமானது, வேதாகமத்தில் வேறு இடங்களில் நிலைநாட்டப்பட்டுள்ள உபதேசங்களுக்கு நேரெதிர் கருத்துக்கள் எதையும் அளிப்பதில்லை. இருப்பினும் இயேசு, தமது திருஅவதாரத்திற்கு முற்பட்ட காலத்தில், [தேவன் மீது] விசுவாசத்துடன் வாழ்ந்திருந்தவர்களுக்கு, சிலவகையான அறிவித்தல்களை கொடுக்கும் நோக்கத்துடன். பாதாளத்திற்குப் பயணம் மேற்கொண்டார் என்று 4:6ம் வசனம் யூகிக்கும் என்பது குறைந்தபட்சம் கேள்விக்கு உரியதாகவாவது உள்ளது. 3:19ல் *kērussō* என்ற வார்த்தை "பிரசங்கித்தார்" அல்லது "அறிவித்தார்" என்று மொழிபெயர்க்கப்பட்டு

இருக்கையில், 4:6ல் *euangelizō* என்ற வார்த்தையே "அறிவிக்கப்பட்டது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்" என்று அர்த்தப்படுகிறது. வெற்றியை அறிவிக்கவே இயேசு பாதாளத்திற்குச் சென்றார் என்பது எண்ணிப்பார்க்க இயலாததாக இருப்பதில்லை, ஆனால் பாவிகளின் இரட்சிப்புக்கு இரண்டாவது வாய்ப்பை அளிப்பதற்காக இயேசு, மரித்தோரின் அந்த உலகத்திற்குச் சென்றிருப்பார் என்பது எண்ணிப்பார்க்க இயலாததாக இருக்கிறது. சாதாரணமாக, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்பது இரட்சிப்பை அளித்தல் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. பேதுரு தமது நிருபத்தின் வேறொரு பகுதியில், இந்த உலகில் ஒருவரது விசுவாசம் மற்றும் வாழ்வு ஆகியவற்றின் விளைவாகவே இரட்சிப்பு உள்ளது என்று தெளிவுபடுத்தினார் (1:9, 17).

KJV, NASB மற்றும் NIVஆகிய வேதாகமங்களில் காணப்படும் வினைச்சொல் மாற்றம், இவ்வசனத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. கடந்த காலத்தில் "சுவிசேஷம் ... இப்போது மரித்து இருப்பவர்களுக்கு ... அறிவிக்கப்பட்டது." வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் இப்போது மரித்துள்ளனர், ஆனால் அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோது அவர்கள் மரித்திருக்கவில்லை. இந்த உலகத்தில் கிறிஸ்துவுக்குத் தங்கள் முதுகைத் திருப்பிக் காண்பிப்பவர்களுக்கு அவர்கள் மரித்த பின்பு மீட்பு அளிக்கப்படும் என்ற போதனை எதையும் புதிய ஏற்பாடு அளிப்பதில்லை. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று தெளிவாக்கியுள்ளார் (எபிரெயர் 9:27). NRSV வேதாகமத்தின் மிகநேரடியான மொழிபெயர்ப்பை நாம் தழுவிக்கொண்டாலும்கூட, அது "For this is the reason the gospel was proclaimed even to the dead" என்றே உள்ளது, இப்போது மரித்து உள்ளவர்களுக்கு [அவர்கள் உயிரோடு இருந்த] ஒரு காலத்தில் பிரசங்கிக்கப்பட்டது என்பதே மறைகருத்தாக உள்ளதே ஒழிய, மரித்தோருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்ற மறைகருத்து இங்கு இருப்பதில்லை. இயேசு சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட தமது காலத்தை எங்கு செலவிட்டார் என்பது பற்றிய வாசகர்களின் கேள்விகளுக்குப் பேதுரு பதில் எழுதிக்கொண்டிருக்கவில்லை. கர்த்தர் வெளிப்படுத்தப்படும்போது அவர்கள் **ஆவியிலே பிழைத்திருப்பார்கள்** என்பதை அவர்களுக்கு மறு உறுதிப்படுத்தவே அவர் இதை எழுதினார்.

பேதுருவின் வாசகர்கள் சிலுவையின் செய்தியைக் கேள்விப்பட்டிருந்ததில் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். அவர் இங்கு, கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் கட்டுப்படுத்தப்பட்ட வகையில், "சுவிசேஷம்" என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை, ஆனால் இரட்சிப்பைக் கொண்டுவரும் கிறிஸ்துவைப்பற்றி செய்தி என்ற பரந்த கருத்தில் பயன்படுத்தினார். தேவன் மக்களைத் தமக்காக மீட்டுக் கொள்வதற்காக தம் குமாரனை அனுப்பினதன் மூலம் தம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் என்ற செய்தியே சுவிசேஷமாக உள்ளது. இயேசுவைக் குறித்து பேசிய பிரசங்கித்தலே நல்ல செய்தியான சுவிசேஷமாக இருந்தது. இது "சுவிசேஷம் ... இப்போது மரித்திருப்பவர்களுக்குக் கூட பிரசங்கிக்கப்பட்டிருக்கிறது"

என்று வாசிக்கப்பட்டால், இந்த மொழிபெயர்ப்பை மேம்படுத்தும். அப்போஸ்தலர் இங்கு "மரித்தோர்" என்று குறிப்பிடும் மனிதர்கள், தங்களுக்கு இயேசு பிரசங்கிக்கப்பட்டபோது மரித்திருக்கவில்லை, ஆனால் அவர்கள் கர்த்தர் நியாயாதிபதியாக திரும்பி வருவதற்கு முன்னர் மரித்தனர். அங்கு மறு உறுதிப்பாட்டிற்கான தேவை கிடக்கிறது. பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்த "மரித்தோர்" என்பவர்கள் குறிப்பாக, மரித்திருந்த கிறிஸ்தவர்களாவர். 4:6ன் கருத்துக்கள் யாவும் விசுவாசிகளுக்கு மறு உறுதிப்பாடாக உள்ளது.

1 பேதுரு 4:6ம் வசனம் மூன்றில் ஒரு வழியில் 3:19 உடன் உறவுபடலாம்: (1) நோவா என்ற நபரில் இயேசு மரித்தோருக்குப் பிரசங்கித்தார் என்று 3:19ம் வசனம் அர்த்தப்படும் என்றால், இவ்வசனம் அந்த ஒப்புவமையை விரிவாக்குகிறது எனலாம். இவ்விஷயத்தில் நாம், பழைய ஏற்பாட்டில் தீர்க்கதிரிசிகளும் ஏவுதல் பெற்றவர்களும் செய்த உபதேசம் மற்றும் பிரசங்கம் யாவும் ஒரு கருத்தில், கிறிஸ்துவே மக்களுக்கு "சுவிசேஷத்தை" பிசங்கித்தார் என்று புரிந்துகொள்ள வேண்டும். இயேசு யாருக்கு "அறிவித்தாரோ" (3:19) அவர்கள் இந்த வசனத்தில் "மரித்தோரானவர்கள்" ஆக இருக்கின்றனர். இவ்வசனங்களின் இந்த விளக்கமே பேதுரு தமது வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று மனவிருப்பம் கொண்டிருந்த விளக்கம் என்று நாம் நம்புகிறோம். (2) இயேசு தாம் சிலுவையில் அறையப்பட்டது மற்றும் உயிர்த்தெழுந்தது ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலத்தில் மரித்தோரின் உலகத்திற்குச் சென்றார் என்று 3:19ம் வசனம் அர்த்தப்படுத்துமென்றால், கடந்த காலத்தில் இருந்து விசுவாச நிறைவுடன் வாழ்ந்திருந்தவர்களுக்குக் கிறிஸ்து, சிலுவையின் மீது தமது வெற்றியை அறிவித்தார் என்பதே 4:6ன் அர்த்தமாக உள்ளது எனலாம். கடந்தகாலத்தில் மரித்தவர்கள் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும், ஆகவே அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படும்படி, அவர் தமது வெற்றியை அவர்களுக்கு அறிவித்தார். மரித்தோர் யாவரும் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு அதன் மூலம் இரட்சிக்கப்பட்டனர் என்பதோ அல்லது கீழ்ப்படியாதவர்களுக்குக் கூட இரண்டாவது வாய்ப்பு தரப்படும் என்பதோ இங்கு போதனையாக இருப்பதில்லை. மாறாக, கிறிஸ்து மரிப்பதற்கு முந்திய காலகட்டத்தில் விசுவாசத்துடன் வாழ்ந்திருந்தவர்கள் கேள்விப்பட்டு, விசுவாசித்து, இரட்சிக்கப்படக் கூடியவர்களாக இருப்பார்கள் என்பதே அர்த்தமாக உள்ளது. பூமியில் வாழ்ந்திருந்த காலத்தின்போது விசுவாசமாக வாழ்ந்திருந்தவர்கள் கேள்விப்பட்டு, விசுவாசித்து, இரட்சிக்கப்படக் கூடியவர்களாக இருப்பார்கள் என்பதே அர்த்தமாக உள்ளது. பூமியில் வாழ்ந்திருந்த காலத்தின்போது விசுவாசமாக வாழ்ந்திருந்தவர்களுக்கு ஜீவனின் நியாயத்தீர்ப்பை விளைவித்த, மரித்தோருக்கான அதே நியாயத்தீர்ப்பு, தங்கள் பூமிக்குரிய வாழ்வில் அவிசுவாசமும் கீழ்ப்படியாமையும் கொண்டிருந்தவர்களுக்கு மரணத்தின் நியாயத்தீர்ப்பாக இருக்கும்.

மரித்தோரைக் குறித்து, **மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தவர்களுக்கு,** அவர்கள் **"ஆவியிலே பிழைக்கும்படியாக"** இயேசு பிரசங்கித்தார் என்று பேதுரு கூறினார். "மனுஷர்முன்பாக மாம்சத்திலே

ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருத்தல்" என்பது அதை அர்த்தப்படுத்துகிறது? NASB வேதாகமம், "மனுஷர்முன்பாக" (*kata anthrōpous*) என்ற சொற்றொடர் "மனிதர்களின் வழக்கப்படியே" அல்லது "மனிதர்முறைமைப்படி" என்று அர்த்தப்படுவதாக எடுத்துக் கொள்கிறது. கிறிஸ்தவர்கள் மரணத்தை அனுபவித்தல் என்ற மனிதகுலத்தின் பொதுப் பங்கில் பங்கடைந்தாலும், மரணம் என்பது அவர்களுக்கு எல்லா விஷயங்களின் முடிவாக இராது என்று கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு உறுதிப்படுத்தினார். பாவத்தின் விளைவாக எல்லா மக்களும், அதாவது கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவரல்லாதவர்களும் ஒன்றுபோலவே மரிக்கின்றோம். விசுவாசிகள் மற்ற எல்லா மனிதர்களையும் போல மரணத்தை அனுபவித்தாலும், கிறிஸ்து வெளிப்படும்நாளில் அவர்களை அவர் மீட்டுக்கொள்வார் என்பதே விசுவாசிகளுக்கு மறு உறுதிப்பாடாக உள்ளது. NRSV வேதாகமம் இங்கு அதிகமான சொற்களைப் பயன்படுத்துகிறது என்றாலும், அது கருத்தை நல்ல முறையில் பிடித்துக் காண்பிக்கிறது: "... ஒவ்வொருவரும் நியாயந்தீர்க்கப்படும் வகையில் அவர்கள் மாம்சத்தில் நியாயந்தீர்க்கப் பட்டிருந்தாலும், தேவன் வாழ்வது போன்று அவர்கள் ஆவியில் வாழ்வார்கள்." கிறிஸ்தவர்கள் "மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டனர்" என்பது, எல்லா மக்களைப் போலவே அவர்களும் மரித்தனர் என்றே அர்த்தப்படுகிறது. அவிசுவாசிகள் மீது போன்றே விசுவாசிகள் மீதும் அதே உரிமைகோருதலைப் பாவம் ஏற்படுத்துகிறது. இருப்பினும் விசுவாசிக்கு அது வரலாற்றின் முடிவாக இருப்பதில்லை. கிறிஸ்து நியாயாதிபதியாக இருப்பதால், அவர்கள் தேவனுடைய சித்தத்தின்படி ஆவியிலே பிழைப்பார்கள்.

முடிவு சமீபமாயிற்று (4:7-11)

**7 எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து,
ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். 8 எல்லாவற்றிற்கும் மேலாக
ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை
மூடும் 9 முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள். 10 அவனவன்
பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள
ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல,
ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். 11 ஒருவன் போதித்தால் தேவனுடைய
வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன்
தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும்
இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக;
அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக
ஆமென்.**

பேதுருவின் வாசகர்களைக் கடந்தகாலத்தில் பண்புப்படுத்தியிருந்த பாவங்களில் இருந்து அவர்கள் திரும்ப வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக் கொண்டார். அவர்களை கொடுமைப்படுத்தியவர்கள், ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கும் ஒருவருக்குப் பதில் அளிக்கவேண்டும் என்பதை அவர்களுக்கு அவர் நினைவூட்டியிருந்தார். மேலும் அவர்கள்

(பேதுருவின் வாசகர்கள்) மரணத்திற்கு உட்பட்டவர்களாக இருந்தபோதிலும், இயேசு அவர்களை ஆவியில் பிழைக்கச் செய்வார் என்பதை அவர்களுக்கு அவர் மறு உறுதிப்படுத்தினார். இப்போது அவர்களுடைய ஊழியத்தின் அவசரத்தன்மையை அவர்களுக்கு அவர் மறு உறுதிப்படுத்தினார். இப்போது அவர்களுடைய ஊழியத்தின் அவசரத்தன்மையை அவர்களுக்கு நினைவூட்டும் வேளையாக இருந்தது. கிறிஸ்து வெளிப்படுவதற்கான வேளை சமீபித்திருந்தது, ஆனால் அதே வேளையில் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குப் பாத்திரராகும் வழியில் வாழ வேண்டியிருந்தது. வாழ்வு என்பது சேவை, ஒருவர் மற்றவர் மீது அன்புகூருதல் மற்றும் தேவனை மகிமைப்படுத்துதல் ஆகியவற்றினால் பண்புப்படுத்தப்பட்டிருக்க வேண்டியிருந்தது.

வசனம் 7. தெளிவற்ற, நிச்சயமற்ற எதிர்காலத்தில் கர்த்தர் மறுபடியும் தோன்றுவார் என்ற மன உறுதிப்பாட்டிற்கும், அவரது மறுவருகை நிச்சயமானதாக உள்ளது என்ற மன உறுதிப்பாட்டிற்கும் இடையில் கணிசமான வேறுபாடு உள்ளது. முதல் கிறிஸ்தவர்களுக்கு, கர்த்தருடைய வருகை சமீபமாயிருந்தது (1 கொரிந்தியர் 7:29; பிலிப்பியர் 4:5; யாக்கோபு 5:8). எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. இவ்வசனத்தை ஆன்மீக மயமாக்கும் முயற்சி இதற்கு அநியாயம் செய்வதாக உள்ளது. இதில் தனிநபரான விசுவாசிக்கு மரணத்தின் சமீபத்திற்கான குறிப்பு இருப்பதில்லை. “எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று” என்றும் “ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் சாகலாம்” என்றும் கூறுதல் முற்றிலும் வேறுபட்ட கூற்றுகளாக உள்ளன. **“எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று”** என்று மக்கள் நம்பும்போது, அவர்கள் முற்றிலும் வேறுபட்ட வகையில் வாழ்கின்றனர்.

பேதுருவும் அவரது வாசகர்களும் தேவ எக்காளம் முழங்கப்போவதை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் (1 தெசலோனிக்கேயர் 4:16). இரவில் திருடன் வருகிறவிதமாய் கர்த்தர் தோன்றும் வேளை “சமீபமாயிருந்தது” என்று விசுவாசித்திருந்தனர் (1 தெசலோனிக்கேயர் 5:2; 2 பேதுரு 3:10). சமகாலக் கிறிஸ்தவர்கள் சிலர் அந்தக் கருத்தைப்பற்றச் சங்கடம் அடைந்தனர், ஏனென்றால் பேதுரு தவறாகக் கூறியது போன்று தோன்றுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து விட்டன, மற்றும் அவர் இன்னும் வரவில்லை. இப்படிப்பட்ட சிந்தனையானது இவ்வசனப்பகுதியின் கருத்தைத் தவறவிடுகிறது. ஒவ்வொரு காலத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள் எதிர்பார்த்தலில் வாழ வேண்டியுள்ளது. ஜான் முர்ரே அவர்கள், “இறுதித்தீர்ப்பு பற்றிய கண்ணோக்கைக் கொண்டு, பொருள்கள் உலகப்பிரகாரமானவை மற்றும் தற்காலிகமானவை என்பதை, நமது எண்ணப்போக்கு எப்போதும் பண்புப்படுத்த வேண்டும்” என்று கூறியபோது இதை நன்கு விளக்கப்படுத்தினர்.[4] “நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும்” (தீத்து 2:13) எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் பரிசுத்தமான வாழ்வை வாழும்படி ஏவப்படுகின்றனர். அவரது வருகை சமீபித்து இருக்கிறது என்ற மன உறுதிப்பாடு இல்லாமல், விசுவாசிகள் எவ்வாறு எதிர்பார்ப்பில் வாழ முடியும்? “மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்” (வெளிப்படுத்தின விஷேசம் 22:20).

மத்தேயு 24; 25ம் அதிகாரங்களில், "ஒலிவமலை உரையாடல்" என்று அழைக்கப்படும் பகுதியில், இயேசு தமது மறுவருகையைப் பற்றித் தமது சீஷர்களிடத்தில் பேசினார். மிகச்சரியான வேளை எது என்று யூகித்தல் பயனற்றது என்று எச்சரித்தபின்பு (மத்தேயு 24:26) அவர், உவமைகளின் வரிசையொன்றை அளித்தார். அவற்றில் ஒன்று, வேலைக்காரன் எதிர்பாராத வேளையில் அவனது எஜமானர் திரும்ப வந்தது பற்றியதாகும். அந்த எஜமானர் திரும்ப வந்ததை, கர்த்தர் தமது சொந்த மறுவருகைக்கு ஒப்பாக எடுத்துக்கொண்டு, சிலர் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மிக அதிகவேகமாகப் பூமிக்குரிய விஷயங்களின் முடிவு வரலாம் என்று எச்சரித்தார் (மத்தேயு 24:45-51). இதற்கு மறுபுறத்தில் அவர் தமது மறுவருகையைத் தாமதப்படுத்தலாம்.

அடுத்த உவமை ஞானமுள்ள ஐந்து மற்றும் மதியீனமான ஐந்து கன்னிகைகளைப் பற்றியதாக உள்ளது. மணவாளன் வருகையின் நேரம் கிறிஸ்துவின் மறுவருகையின் வேளைக்கு ஒப்புமைப்பட்டு இருப்பதாகத் தோன்றுகிறது. முந்திய உவமையில் போலின்றி, இது சிலர் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் தாமதமாகக் கர்த்தர் தோன்றலாம் என்று போதிக்கிறது (மத்தேயு 25:1-13). இந்த பிந்திய உவமையை இயேசு முந்தியது போன்றே முடித்தார்: "மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்" (மத்தேயு 25:13). தேவனுடைய நியாயத்தீர்ப்பு உடனடியாக வருதல் மற்றும் தாமதமாகுதல் ஆகிய இரண்டிற்கும் இடையில் உள்ள இறுக்கமானது வேதாகமம் முழுவதிலும் மிக நுண்மையாகப் பராமரிக்கப்பட்டுள்ளது. கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது (ஏசாயா 56:1; செப்பனியா 1:12; யோவேல் 3:14), இருப்பினும் நியாயத்தீர்ப்பு தேவன் தெரிந்துகொள்ளும் நிச்சயமற்ற எதிர்காலம் ஒன்றிற்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இயேசுவின் கட்டளைகளைப் பின்பற்றிய பேதுரு, "எல்லாவற்றிற்கும் முடிவு" எப்போது நடக்கும் என்ற யூகம் எதையும் அளிக்கவில்லை. அவரது மறுவருகையை எதிர்பார்த்து, முன்னெதிர்நோக்கி கிறிஸ்தவர்கள் வாழ வேண்டும் என்று மாத்திரமே அவர் கூறினார். கர்த்தர் திரும்பவருவார் என்பதல்ல, ஆனால் கர்த்தர் சீக்கிரம் திரும்பவருவார் என்பதே சபையின் உபதேசமாக உள்ளது; கிறிஸ்தவர்கள் கடைசி நாட்களில் வாழ்கின்றனர். சில மணி வேளையில் இயேசுவைக் காண்பதை அவர்கள் எதிர்பார்க்கலாம். விஷயம் அவ்வாறு இருக்க, அவர்கள் நற்பண்பு மற்றும் பரிவிரக்கம் கொண்ட பரிசுத்த வாழ்வை வாழ்கின்றனர்.

காலத்தில் முடிவு பற்றிப் பேதுரு குறிப்பிட்டபோது, பூமியின் மீது ஒரு அரசாட்சியில் ஆயிரம் ஆண்டுகள் இயேசு ஆளுகைசெய்வார் என்பதற்குக் குறிப்புகள் எதையும் ஏற்படுத்தவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். உபத்திரவம், அந்திகிறிஸ்து அல்லது அர்மெகதோன் பற்றிய குறிப்பிடுதல் எதுவும் இங்கில்லை. கர்த்தர் "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிற" போது அவரது வெளிப்பாடு இருக்கும் (4:5). அது "எல்லாவற்றிற்கும் முடிவு" அதாவது பொருள்ரீதியான இந்த வாழ்வின் முடிவு என்பதாக இருக்கும். அல்லது இப்போது நாம் அறிந்துள்ளபடி மனித வாழ்வின் முடிவாய் இருக்கும். மனிதகுலத்தின் மீட்பிற்கான தேவனுடைய திட்டம் இப்போது

முடித்துவைக்கப்பட்டுள்ளது, கிறிஸ்து மனித வரலாற்றில் தோன்றி இருக்கிறார். மகிமையில் அவரது இரண்டாம் வருகை மாத்திரமே எஞ்சியுள்ளது. அவரது வெளிப்பாட்டில் முழங்கால் யாவும் முடங்கும் நாவுகள் யாவும் அறிக்கையிடும் (பிலிப்பியர் 2:10).

"Eschatology" [இறுதிநாள் இயல்] என்பது, கடைசி விஷயங்கள் (கர்த்தருடைய மறுவருகை, நியாயத்தீர்ப்பு மற்றும் அதைத் தொடர்ந்து வரவிருக்கும் நித்தியம்) பற்றிய படிப்பிற்கான நுட்பத்தி ற்குரிய சொற்றொடராக உள்ளது. புதிய ஏற்பாட்டில் கடைசிக் காலங்கள் பற்றிய படிப்பு, எதிர்காலம் வைத்துள்ளது என்ன என்பதைப் பற்றி ஆர்வத்திற்குரிய வெறும் யூகமாக மாத்திரம் இருப்பதி லை. அப்படிப்பட்ட யூகத்தில் நம் காலத்தை செலவிடுவதில் மதிப்பில் மாறாக இது கர்த்தருடைய மறுவருகை மற்றும் அவருடைய மறுவருகையுடன் இணைந்துள்ள, தேவபக்தியான வாழ்வின் அவசரத்தேவை ஆகியவை பற்றிய ஆழ்ந்த சிந்தனையாக உள்ளது. கர்த்தருடைய மறுவருகை "சமீபமாக உள்ளது" என்பதால், கிறிஸ்தவர்கள் **தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க விரும்புவார்கள்.** புதிய ஏற்பாட்டில் இறுதிநாளியில் என்பது எப்போதுமே ஒழுக்கரீதி யான விஷயங்களுக்குப் பயன்படுகிறது. இது தேவபக்தியுள்ள வாழ்வை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

"ஆரோக்கியமான வகையில் முடிவெடுப்பவர்களாயிருந்து" (*sōphroneō*) மற்றும் "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து" (*nēphō*) என்பவை, அர்த்தத்தில் ஒன்றுபோல் உள்ள இரண்டு கிரேக்கக் கட்டளை வாக்கியங்களின் மொழிபெயர்ப்புகளாக உள்ளன. காலத்தின் முடிவுபற்றிய சிந்தனையானது, கிறிஸ்தவர்கள் கருத்தறிவும் தெளிந்த சிந்தனையும் சுயகட்டுப்பாடும் உள்ளவர்களாக இருந்தலை விளைவிக்கும். 1 பேதுரு 1:13ல் அப்போஸ்தலர், "செயல்பாட்டிற்கு உங்கள் மனங்களைத் தயார் செய்யுங்கள்" என்று எழுதினார், இது அதிக நேர்ப்பொருளில் கூறும்போது "நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு" என்று உள்ளது (KJV மற்றும் தமிழ் வேதாகமங்கள்). அங்குகூடப் பேதுரு "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து" என்ற வினைச்சொல்லைப் பயன்படுத்தினார். "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்பதால், ஒருவர் தமது வாழ்விலிருந்து பாவத்தைப் புறம்பே போடுதலுக்கான காலமாக இருந்தது; தேவபக்தி ஆளுகை செய்ய அனுமதிக்கும் வேளையாக இருந்தது. வேறொரு இடத்தில் அப்போஸ்தலர் எழுதியபடி, "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (2 பேதுரு 3:11).

தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருப்பதற்கான வேண்டுகோளானது ஜெபத்திற்கான முன்னுரையாக உள்ளது - இது "ஜெபத்தி ன் நோக்கத்திற்கானதாக" உள்ளது. தேவனுடனான நமது உறவு தீவிரமான விஷயமாக உள்ளது என்பதற்கு ஒரு நினைவூட்டுதலாக[5] பேதுருவின் வார்த்தைகள் உள்ளன. பேரழிவு அச்சுறுத்தும் வேளையில் மாத்திரம் தப்பித்துக் கொள்வதற்கான வழியாக மாத்திரம் தேவனைப் பயன்படுத்துதல் என்பது தேவபக்தியுள்ளவர்களாயிருத்தலில் விளையாடுதலாக உள்ளது. தேவனை

ஆராதனையில், துதியில் மற்றும் ஜெபத்தில் அணுகுதலுக்கு, குறைந்தபட்சம் தியானம் மற்றும் பயபக்தி ஆகியவற்றிற்காக அழைப்பவையாகப் பேதுருவின் வார்த்தைகள் உள்ளன. ஜெபத்தின் நோக்கம் மற்றும் பணி ஆகியவற்றின் மீதான முறைப்படியான சிந்தனைப் பிரதிபிலிப்பு எதையும் வேதாகமம் முன்வைப்பதில்லை. மாறாக அது, ஜெபித்த மக்கள் மற்றும் அவர்கள் ஏறெடுத்த ஜெபங்கள் ஆகியவற்றை நமக்கு முன்வைக்கிறது. மேலும் அது, ஜெபத்தைக் கவனிக்கிற மற்றும் தமது மக்களின் வேண்டுதல்களுக்குப் பதில் அளிக்கிற தேவனை முன்வைக்கிறது. "அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்" (ஏசாயா 65:24).

தேவனுக்கு முன்பாக வருதல் என்பது தீவிர கவனத்திற்குரிய விஷயமாக உள்ளது, இது பயத்திற்குரிய வேளையாக, உள்நோக்கிக் கண்ணோக்கும் வேளையாக உள்ளது. "தீவிரகவனம்" என்பது மனதிற்கு வரும் முதல் வார்த்தையாக இல்லாத நிலையில், தேவனுடைய மகிமையை உரிமைகோரும் சபைகூடுகைகள் உள்ளன. இருபத்தியோராம் நூற்றாண்டில், அமெரிக்கப் பொழுதுபோக்குத் தொழில்துறையானது, தன்னைத்தானே சபைகூடுகையாக வஞ்சகமாக அறிவித்துக்கொண்டது. பலருடைய மனங்களில் ஆராதனை என்பது ஒரு இசைநிகழ்ச்சி போன்று மன எழுச்சியும் கேளிக்கையும் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆராதனை ஒரு சந்தோஷத்திற்குரிய விஷயமே, ஆனாலும் சந்தோஷம் என்பது முற்றிலும் கேளிக்கை போன்றதாக இருப்பதில்லை. தேவனுடைய மக்களிடத்தில் பேதுரு வேண்டிக்கேட்டுக்கொள்ளும் தெளிந்த சிந்தையும் நல்ல முடிவும் கொண்டு, ராக் இசைக்குழுக்கள், எலக்ட்ரிக் கிட்டார்கள் மற்றும் இசைக்கேற்ப கைதட்டுதல்கள் மற்றும் இப்படிப்பட்ட கூடுகைகளில் சிலவேளைகளில் இணைவுபெறும் அசைந்தாடுதல்கள் ஆகியவற்றுடன் அவர்கள் (தேவனுடைய மக்கள்) ஒப்புரவாகுதல் கடினமாக உள்ளது. ஏதோ ஒருவகையில், மனந்திரும்புதல், சிந்தித்துப்பார்த்தல், நினைவுகூருதல் மற்றும் நன்றிசெலுத்துதல் ஆகியவற்றைத் தொடுகிற ஆராதனையானது, "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" என்று பேதுரு கூறுகையில் தேவனுடைய மக்கள் மத்தியில் காண அவர் ஆவல்மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள உணர்வுக்கு அதிகம் பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

வசனம் 8. அவ்வப்போது ஏற்புடையதாக உள்ள நிச்சயமான பாதுகாப்பு மனப்பான்மை உள்ளது. இது கிறிஸ்தவ வாழ்வு முழுவதையும் பண்புப்படுத்துவதில்லை, ஆனால் அதன் பாகமாக உள்ளது. விசுவாசிகள் இந்தப் பாதுகாப்பு மனநிலையின்றி தாக்கப்படும்போது சிலவேளைகளில் அவர்கள் ஆதரவிற்காக ஒன்றுகூடி இறுக்கமாக இணைகின்றனர். 8ம் வசனத்தில் பேதுரு தமது கவனத்தைத் திருப்பும் சமூகம் ஒன்றுகூடி இறுக்கமாக இணைந்துள்ள, ஒருவர் மற்றவர் மீது அன்புகூருகிற சமூகமாக உள்ளது.

அவிசுவாசிகள், "இந்தத் துன்மார்க்க உளையிலே" அவர்களோடேகூட, கிறிஸ்துவின் சீஷர்கள் விழாதிருப்பதினால் ஆச்சரியப்படுகின்றனர் (4:4). விசுவாசிகள் அவ்வப்போது, "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு

அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" என்பதைத் தங்களுக்குத் தாங்களே நினைவூட்டிக் கொள்ளுதல் ஏற்புடையதாக உள்ளது (4:5). கடைசியில் நியாயமே மேற்கொள்ளும். ஒரு புறத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் விரோதி களிடத்தில் இரக்கமும் மதிப்பும் காண்பிக்க விரும்புகின்றனர், ஆனால் மறுபுறத்தில் அவர்கள், கர்த்தராகிய கிறிஸ்துவுடன் விசுவாசிகள் வெற்றி அடைவார்கள் என்பதன் நிச்சயத்தைக் கொண்டு தங்களை ஆறுதல்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. கிறிஸ்து வெளிப்படும்போது அவர்களை நியாயந்தீர்ப்பார். கர்த்தர் தேவபக்தி இல்லாதவர்களைத் தமது சமூகத்தில் இருந்து நீக்கிப்போடுவார், கிறிஸ்தவரின் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளாதவர் பற்றிக் கிறிஸ்தவரின் நிலைப்பாடு, மிகவும் தெளிவற்ற தன்மையைத் தன்னுடன் இணைத்துள்ளது. அவர் தமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளாதவரின் வாழ்வு முறையை விட்டுத் தம்மைப் பிரித்துக்கொண்டிருக்க வேண்டும், ஆனால் அவர்களும் தேவனுடைய அன்பிற்குரிய படைப்புகளே என்பதை அவர்கள் அறியவேண்டும் என்று அவர் விரும்ப வேண்டும்.

புறம்பே இருப்பவர்களுக்குச் சற்றுக் குழப்பம் உள்ளது, ஆனால் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்பவர்களுக்குள் இது இல்லை. விசுவாசிகளிடத்தில் பேதுரு, **ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்** என்று வேண்டுகோள் விடுத்தார். J. N. D. கெல்லி அவர்கள் இந்தக் கட்டளையை, "எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் ஒருவரிலொருவர் கொண்டிருக்கும் அன்பை முழு பலமுள்ளதாகக் காத்துக்கொள்ளுங்கள்" என்று மொழிபெயர்த்தார்.[6] கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள அன்பு, கிறிஸ்துவின் மீதான அவர்களின் பொதுவான அன்பில் இருந்து வளருகிறது. 1:8ல் அப்போஸ்தலர், "அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்" என்று கூறினார். பேதுருவின் வாசகர்களின் அத்தியாவசியத் தேவையாக இருந்தது சரியான உபதேசம் அல்ல.[7] கிறிஸ்து யாராக இருந்தார் என்பதையும் தங்களுக்கு அவர் என்ன செய்திருந்தார் என்பதையும் அவர்கள் அறிந்தி ருந்தனர் (2:21-25). கர்த்தர் மறுபடியும் வருவார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், மற்றும் அந்த நாள் வரும்வரையில் தாங்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். இவையாவையும் உண்மையாக இருக்கையில், கிறிஸ்துவின் இராஜ்யம் அவர்கள் மத்தியில் உணர்ந்தறியப்பட்டிருந்தது. அவர்கள் எவ்வளவாக ஒருவர் மற்றவர் மீது தவறாத அன்பை நடைமுறைப்படுத்தினரோ, அவ்வளவாய்க் கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களில் பங்கு பெற்றனர். விசுவாசிகள் ஒருவர்மீதொருவர் அழியாத அன்புகொண்டவர்களாக சரீரத்தில் (சபையில்) வாழும்போது, பரலோகத்தின் முன்சுவையானது உணர்ந்தறியப்படுகிறது. இயேசுவே கூட, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்று கூறியிருந்தார் (யோவான் 13:35).

பேதுரு, **அன்பு திரளான பாவங்களை மூடும்** என்று கூடுதலாகக் கூறினார். இந்தக் கூற்றின் அர்த்தம் முற்றிலும் தெளிவானதாக இருப்பதில் லை. மனிதகுலத்தின்மீது தேவனுடைய அன்பானது, அவர் கிறிஸ்துவை இரட்சகராக அனுப்பக் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்று பேதுரு

அர்த்தப்படுத்தி இருக்கலாம், நியாயத்தீர்ப்பின் நாளில் கிறிஸ்துவின் பாவநிவாரண பலியின் மூலமாக, தேவன் திரளான பாவங்களை மூடுவார்.[8] பேதுரு 4:2ல் பாவத்தைப் பற்றிய தமது குறிப்பைப் பின்பற்றி இருக்கலாம் என்ற இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது. பாவம் பற்றிய விஷயத்தைக் கிறிஸ்தவர்கள் (தமது கடந்த காலத்தில்) போதிய அளவுக்குக் கொண்டிருந்தனர். 4:8ல் பேதுரு, கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகள் மீது கொள்ளும் அன்பு, ஒரு கிறிஸ்தவர் பாவத்தைத் தமக்குப் பின்னால் விட்டுச் செல்வதற்குத் தேவையான பலத்தைக் கொடுக்கும் என்று பேதுரு அர்த்தப்படுத்தி இருக்கலாம். அன்பு பாவங்களை மூடும் என்பது, ஒருவரின் வாழ்வில் இருந்து பாவம் துடைத்தெறியப்படும் என்ற கருத்தில் இருக்கலாம், அன்பின் நிமித்தமாக ஒருவர் தமது வாழ்வில் பாவத்திற்குத் தமது முதுகைத் திருப்பித் காண்பிக்க வேண்டியுள்ளது.[9] இவ்விரு விளக்கங்களுமே கருத்துடையவையாக இருக்கையில், இதைக் காட்டிலும் மேன்மையான வேறொரு விளக்கமும் உள்ளது. கிறிஸ்துவின் சமூகத்தில் விசுவாசிகள் ஒருவர் மீது மற்றவர் கொண்டுள்ள அன்பைக் காண்பிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் புத்திகூறிய உடன் பின்பு இந்தக் கூற்று கூறப்பட்டுள்ளது. "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்ற கூற்றை விசுவாசிகள் மத்தியில் வெளிப்படுத்தப்பட வேண்டிய பரஸ்பர அன்பை விவரிக்கும் வழியாக எடுத்துக் கொள்ளுதல் மிகச்சிறப்பானதாக இருக்கிறது. நவீன காலக் கிறிஸ்தவர்களைப் போன்றே பேதுருவின் வாசகர்களும், ஒருவர் மற்றவரின் நடவடிக்கைகளை உற்றுநோக்குகையில், உபகார முடிவுகளின் தேவையைத் தங்களுக்குள் கண்டனர்.

மற்ற கிறிஸ்தவர்களின் தோழமையின்றி கிறிஸ்தவராக இருக்க வழியெதுவும் இல்லை. கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தல் என்பது உள்ளாகவே சமூக அனுபவமாக உள்ளது. ஒருவர் மற்றவர் மீது தவறாத அன்பு காண்பித்தல் என்பதைக் காட்டிலும், கிறிஸ்து நம்மிடையே இருக்கிறார் என்பதை அதிகம் குறிப்புணர்த்துவதான வேறு எந்த பரீட்சையும் அநேகமாக இல்லை என்றே கூறலாம். மக்கள் எப்போதெல்லாம் ஒருவர் மற்றவருடன் நெருக்கமாக வாழ்கின்றனரோ, அப்போதெல்லாம் அவர்கள், ஒருவரிலொருவர் தங்களை எரிச்சல் மூட்டும் பண்புகளைக் காண்பார்கள் என்பதில் எவ்வித மாறுபாடான கருத்தும் இருப்பதில்லை. விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளும் மற்ற விசுவாசிகளிடத்தில் உள்ள இப்படிப்பட்ட எரிச்சல் மூட்டும் குணங்களைக் கையாள்வது எவ்வாறு? பேதுரு பின்வருமாறு பதில் தருகிறார்: "அன்பு திரளான பாவங்களை மூடும்." சபையானது சமாதானத்தில், இசைவிணக்கத்தில் மற்றும் நற்சிந்தையில் வாழவேண்டும் என்றால், கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் "திரளான பாவங்களை" மூட வேண்டும்.

கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடியிருக்கையில், யாரேனும் ஒருவர் குற்றப்படுத்தப்படுவதாக உணராது இருக்கும் வேளை எதுவும் இல்லை என்றே கூறலாம். செம்மையற்ற, உணர்வற்ற நடத்தைக்குச் சாக்குப் போக்கு எதுவும் இருப்பதில்லை, இருப்பினும் குற்றப்படுத்தப்படுவதாக விரைவிலேயே எடுத்துக் கொள்ளுபவர்களும் உள்ளனர். இயேசுகிறிஸ்துவின் சபைக்குள், தங்கள் சட்டைக் கைகளுக்குள்ளாகத் தங்கள் உணர்வுகளை அணிந்து கொண்டிருப்பவர்களுக்கு இடம் இருப்பதில்லை. ஒவ்வொரு கிறிஸ்தவருமே

காலத்தைப் பொறுத்து, குற்றப்படுத்துபவராக அல்லது குற்றப்படுத்தப் பட்டவராக இருப்பார். வார்த்தைகள் தடைகள் எதையும் கட்டி எழுப்ப அனுமதிக்காமல், சிந்தனையற்ற வார்த்தைகளைக் கூறக் கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரை அனுமதிக்கின்றனர். "உயர் பராமரிப்பு" கொண்ட கிறிஸ்தவர்கள் எப்போதுமே தொந்தரவாகவே உள்ளனர். தங்கள் தேவைகள் குறித்து ம ற்றவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நினைப்பவர்கள், மற்ற எவரொருவரின் பாவங்களையும் மூடத் தகுதியுள்ளவர்களாக இருப்பதில்லை. கிறிஸ்துவின் சமூகத்திற்குள் அன்பு என்பது "திரளான பாவங்களை மூடும்," ஏனென்றால், கிறிஸ்தவர்கள் தங்கள் திரளான பாவங்களை மூடும் வண்ணம ாகத் தங்கள் மீது அன்புகூர்ந்த ஒரு கர்த்தரைக் கொண்டுள்ளனர். மற்றவர்களில் உள்ள பலவீனங்கள், பக்குவப்பட்ட கிறிஸ்தவர்கள் ஒருவர் மீது மற்றவர் கொள்ளும் அன்பைக் குறைத்துப் போடுவதில்லை. அவர்கள் கர்த்தரிடத்தில் இருந்து தாங்கள் அனுபவித்துள்ள அதே மன்னிப்பு மற்றும் தயாள சிந்தையை, மற்றவர்களின் குறைபாடுகளை நோக்கிய தங்கள் எண்ணப்போக்கிலும் காண்பிப்பார்கள்.

கர்த்தருடைய மக்களுக்கான அவரின் ஆணைகளில் பெரும்பாலானவற்றில் உள்ளது போன்றே, "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்ற கூற்றும் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடும். விபசார உறவு கொண்டிருந்த ஒரு மனிதனைக் கொரிந்துவில் இருந்த சபையானது சகித்துக்கொண்டிருந்ததைப் பவுல் அறிந்தபோது, அவர் குற்றஞ்சாட்டுதல் எதுவுமின்றி, அன்பு திரளான பாவங்களை மூடும் என்பதால் அதைக் காணாமல் விடும்படி அவர்களுக்குக் கூறவில்லை (1 கொரிந்தியர் 5). பாவம் செய்யும் சகோதரர் அல்லது சகோதரியை எதிர்த்து நின்று மனந்திரும்பும்படி வலியுறுத்துதல் என்பது அன்பிற்குச் சிலவேளைகளில் தேவைப்படுவதாக உள்ளது. சிலவேளைகளில் அன்புக்குக் கடிந்து கொள்ளுதல் தேவைப்படுகிறது. ஞானமுள்ள சகோதரர் அல்லது சகோதரி அந்தக் கடிந்துகொள்ளுதலை இருதயத்தில் ஏற்றுக்கொள்வார். பேதுருவின் மேற்கண்ட கூற்றானது பாவம் செய்தலுக்கான அனுமதியாக ஒருக்காலும் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.

வசனம் 9. பழங்கால மத்திய தரைக்கடல் பகுதி உலகத்தில், உபசரிப்பு என்பது உயர்வாக புகழப்பட்ட நெறியாக இருந்தது. இது புதிய ஏற்பாட்டில் திரும்பத் திரும்ப வருகிறது. ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் பற்றி இயேசு, "அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்" என்று கூறினார் (மத்தேயு 25:35). சீமோனின் வறிய உபசரிப்பிற்காக அவரைக் கர்த்தர் கடிந்து கொண்டார் (லூக்கா 7:44-47). நள்ளிரவில் உபசரிப்பை நாடி வந்த நண்பர் பற்றிய உவமையை அவர் கூறினார் (லூக்கா 11:5-8). ரோமாபுரியில் இருந்த விசுவாசிகள் உபசரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பவுல் புத்திகூறினார் (ரோமர் 12:13). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்" என்று கூடுதலாகக் கூறினார் (எபிரெயர் 13:2). யோவானின் மூன்றாவது நிருபம் முழுவதுமே உபசரிப்புக் காண்பித்தல் பற்றியதாக உள்ளது, இவ்வார்த்தைகள் யாவற்றிற்கும் பேதுரு, **ஒருவரையொருவர் உபசரியுங்கள்** என்று பங்களித்தார். "ஒருவரையொருவர்" என்பதைப்பற்றி அப்போஸ்தலர், குறிப்பாக விசுவாசிகளைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார், ஆனால் உபசரிப்பு எல்லாருக்கும் விரிவாக்கப்பட

வேண்டியதாக இருந்தது.

அநேகமாக விசுவாசிகள் தங்கள் இல்லங்களில் ஒருவர் மற்றவரிடம் செயல்விளக்கப்படுத்த வேண்டிய சாதாரண கிறிஸ்தவ ஈகை குணத்தை அப்போஸ்தலர் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். அவர் அநேகமாக, தமது வாசகர்கள் மத்தியில் சமூக உறவை ஊக்குவித்திருக்கலாம். இருப்பினும், உபசரிப்பு என்பது சமூக விஷயங்களைக் காட்டிலும் அதிகமானவற்றைச் செய்ய வேண்டிய இருந்த வேளைகள் இருந்தன. சபைகளுக்குப் போதித்து அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக, பயணம் செய்யும் போதகர்களும் தீர்க்கதரிசிகளும் இருந்தனர். தேமேத்திரியு அப்படிப்பட்ட போதகர்களில் ஒருவராயிருந்தார் (3 யோவான் 12). பவுலும் அவரது உடன் ஊழியர்களும் அவர்களில் இருந்தனர். அவர்கள் ஊழியம் செய்த சபையின் ஆதரவும் ஊக்குவித்தலும் அவர்களுக்குத் தேவைப்பட்டது. கள்ளத் தீர்க்கதரிசிகளும் (1 யோவான் 4:1) கள்ள போதகர்களும் (2 பேதுரு 2:1) கூட இருந்தனர். அவர்களுக்கு உபசரிப்புக் காட்டுதல் என்பது அவர்களின் துர்க்கிரியைகளில் பங்கேற்றலாக இருந்தது (2 யோவான் 11).

உபசரிப்பு என்பது செல்வாக்கு மிக்க மேற்கத்தியக் கலாச்சாரத்தைக் காட்டிலும் பேதுரு இந்த நிருபத்தை யாருக்கு எழுதினரோ அந்த ஏழை மக்களுக்கு அதிகம் அவசியமானதாக இருந்தது. ஏழை விதவை இரண்டு காசுளைக் கொடுத்தல் அவளுக்கு அதிக கடினமாக இருந்தது போன்றே (மாற்கு 12:41-44), செல்வந்தர்கள் விலையுயர்ந்த கொடைகளைத் தருதலும் கடினமான விஷயமாக இருந்தது, அதிகமான செல்வங்களைக் கொண்டிருந்தவர்களைக் காட்டிலும் பேதுருவின் வாசகர்களுக்கு உபசரிப்பு காண்பித்தல் என்பது அதிகம் கடினமானதாக இருந்தது. இருப்பினும் மனதில் வெறுப்புணர்வுடன் கொடுத்தல் என்பது கொடுக்காமலே இருத்தலுக்குச் சமானமானதாக உள்ளது. **முறுமுறுப்பில்லாமல் கொடுக்கும்படி** பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறினார். கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் கொடுக்கும் போது, அவர்கள் தேவனுக்கென்று கொடுக்கின்றனர். தாராளமாகக் கொடுக்கக் கூடியவர்களாக இருத்தல் என்பது செல்வந்தர்களுக்கு மாத்திரமே முன்குறித்து வைக்கப்பட்டுள்ள ஈகைப்பண்பல்ல. ஏழைகளும்கூட தாராளமாகவும் சுயாதீனமாகவும் கொடுக்கலாம் (2 கொரிந்தியர் 8:1, 2).

வசனம் 10. பவுலைப் போன்று (ரோமர் 12:6-8; 1 கொரிந்தியர் 12:7-11; எபேசியர் 4:11) பேதுரு, தேவனிடத்தில் இருந்து விசுவாசிகள் பெற்றிருந்த பல்வேறு கொடைகளை அவர்களுக்கு நினைவூட்டுவதற்கு சந்தர்ப்பத்தைக் கண்டறிந்தார். தெய்வீக சக்தியினால் தனிநபர் தாம் பெற்றுக்கொண்டிருந்த **விசேஷித்த வரங்களைப்** பற்றி அப்போஸ்தலர் இவ்விடத்தில் பேசினார். இதே வார்த்தையைப் பவுல் 1 கொரிந்தியர் 12:4ல், பரிசுத்த ஆவியானவரால் தரப்படுவதாகத் தாம் குறிப்பிட்ட வரங்களைப் பற்றிக் கூறுவதற்குப் பயன்படுத்தினார். நோயாளிகளைக் குணமாக்குதல், பல்வேறு வகையான அற்புதங்கள் செய்தல் மற்றும் சாதாரண வழிமுறைகளின் மூலம் கற்றறிந்திராத மொழிகளில் பேசுதல் ஆகிய வரங்களைக் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்தனர். பவுலைப் போல் இல்லாமல் பேதுரு பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ரோமர் 12:6ல் பவுல் இதே வார்த்தையைப் பயன்படுத்தியும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ரோமர்

12:6-8ல் உள்ள, தீர்க்கதரிசனம் போன்ற சில கொடைகள் இயற்கைக்கு அப்பாற்பட்டவையாகத் தோன்றுகின்றன, அதே வேளையில், உபசரித்தல் மற்றும் போதித்தல் போன்ற மற்றவை இயற்கையான ஈவுகளாகத் தோன்றுகின்றன. நமக்கு முன்பாக உள்ள வசனப்பகுதியில், ஒருவருடைய கொடையானது சாதாரண இயற்கையான ஈவாக இருப்பதாகத் தோன்றுகிறது, இவ்விஷயத்தில் பேசுதல் அல்லது உபசரித்தல் பற்றிக் கூறப்படுகிறது. **அவனவன் பெற்ற** என்ற வார்த்தைகளில் அப்போஸ்தலர், தாம் குறிப்பிட்ட இரண்டு வரங்கள் தமது வாசகர்கள் கொண்டிருந்த வெவ்வேறு திறன்களில் சில என்று கருத்துத் தெரிவித்தார்.

பேதுருவோ அல்லது பவுலோ, இயல்பான ஈவுகளுக்கும் ஆவியானவரால் தரப்பட்ட இயற்கைக்கு மேலான கொடைகளுக்கும் இடையில் சுலபமாகப் பகுத்தறியும் வித்தியாசத்தை வரைந்திருக்க வாய்ப்பில்லை. வரங்களைப் பயன்படுத்துதலில் ஒருவரின் பொறுப்பு என்ற விஷயம் வரும்போது நிச்சயமகவே அங்கு எந்த வித்தியாசமும் இருப்பதில்லை. ஒருவர் எந்தத் திறன்களைக் கொண்டிருந்தாலும், அவைகள் தேவனால் தரப்பட்டவையாக உள்ளன மற்றும் அவை தேவனுடைய மகிமைக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். தேவனை மகிமைப்படுத்த அவற்றைப் பயன்படுத்துதல் என்பது, **ஒருவருக்கொருவர் உதவிசெய்ய** அவற்றைப் பயன்படுத்துதல் என்பதாக உள்ளது என்று பேதுரு கூறினார், "அவனவன் பெற்ற வரத்தின்படியே" அவரவர் அதைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இயேசு போதித்தபடி (மத்தேயு 10:8), அவர் (விசுவாசி) இலவசமாய்ப் பெற்றபடியால் இலவசமாய்க் கொடுக்க வேண்டியுள்ளது.

இயற்கையான திறன்கள் தேவனால் கிறிஸ்தவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் **நல்ல உக்கிராணக்காரர்போல** அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று பேதுரு கூறினார். லூக்கா 16:1-9ல் இயேசு, ஒரு "உக்கிராணக்காரனை" கொண்டிருந்த செல்வந்தர் பற்றிய உவமையொன்றைக் கூறினார், அந்த உக்கிராணத்காரனிடத்தில் அவர், பெரிய பொறுப்பைக் கொடுத்திருந்தார். இங்கு உக்கிராணக்காரன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *oikonomos*, என்ற அதே வார்த்தைதான், 1 பேதுரு நிருபத்திலும் (4:10) "உக்கிராணக்காரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உக்கிராணக்காரர் என்பவர் (வழக்கமாக இவர் ஒரு அடிமையாக இருப்பார்) செல்வந்தர் ஒருவருடைய சகல செல்வத்திற்கும் பொறுப்பாளராக வைக்கப்பட்டார். உக்கிராணக்காரர் என்பவர், மேலாண்மை செய்பவராக இருக்கிறார், ஆனால் இவ்வார்த்தை கணக்கு ஒப்புவித்தலையும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. பேதுருவின் வாசகர்கள் தங்கள் வசமாய் ஒப்புவிக்கப்பட்டுள்ள விஷயங்களைப் பொறுப்புடன் மேலான்மை செய்ய வேண்டும் என்று அவர் விரும்பினார். கிறிஸ்தவர்களின் பொறுப்பாக இருந்த இயற்கையான ஈவுகளைத் தேவன் கிறிஸ்தவர்களிடத்தில் ஒப்புவித்திருந்தார். அவர்கள் தேவன் தங்களிடம் ஒப்புவித்தவற்றைப் பயன்படுத்தும் வழி பற்றி கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருந்தனர். அப்போஸ்தலர், தமது வாசகர்கள் தங்கள் கொடைகளை ஞானமாகப் பயன்படுத்த வேண்டும் என்று புத்தி கூறினார்.

கிறிஸ்தவர்களின் தொகுப்பான இயற்கையான ஈவுகளைப் பேதுரு, தேவனுடைய **பற்பல கிருபையுள்ள ஈவுகள்** என்று அழைத்த விஷயம்

ஆர்வத்திற்குரியதாக உள்ளது. "கிருபை" என்பது, மனித குலத்திற்குத் தேவன் தமது நல்ல வரங்களைத் தரும் பலவகையான வழிகள் யாவற்றிற்கும் ஒரு குடைச் சொற்றொடராராக உள்ளது. பவுலைப் பொறுத்தமட்டில் கிருபை என்பது இரட்சிப்பு உணர்ந்தறியப்பட்ட வழிமுறையாக இருந்தது (எபேசியர் 2:8). இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுதல் தேவனுடைய கிருபையின் உச்சபட்சமான உணர்ந்தறிதலாக இருந்தது என்று பேதுரு கூறினார் (1:13). கர்த்தர் மறுபடியும் வருமளவும், அவர் தமது மக்களுக்குத் தயவு செய்வதற்குப் பயன்படுத்தும் ஆசீர்வாதங்களின் பரந்த வரிசையில் தேவனுடைய கிருபை உணர்ந்தறியப்படுகிறது.தேவனுடைய வசனத்தை ஒருவர் பேசுகிறபோதோ அல்லது அவர் தமது அயலகத்தவருக்கு சேவை செய்கிறபோதோ, அவர் தேவனுடைய கிருபை வரங்களை அனுபவித்து அவற்றைப் பொறுப்புடன் பயன்படுத்துகிறார். சபையை ஒரு சரீரமாக, ஒவ்வொரு உறுப்பினரும் அந்த சரீரத்தின் மற்ற உறுப்பினர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் வரங்களில் மகிழ்வு அடைபவராக இருக்கும் வகையிலான ஒப்புவமையைப் பேதுரு மேம்படுத்தி வளர்க்காது இருக்கையில், ஒருவேளை அது இவ்விடத்தில் மறைமுகமாக உணர்த்தப் பட்டிருக்கலாம். வரங்கள் பலவகைப்படும். எந்த ஒரு கிறிஸ்தவரும் மற்றொருவரால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் வரங்கள் பற்றிப் பொறாமை அடையக்கூடாது அல்லது தமது சொந்த வரத்தைப் பழித்துரைக்கக் கூடாது.

வசனம் 11. பேதுரு **ஒருவர் போதித்தால்** என்று எழுதியபோது, தேவனுடைய குடும்பத்திற்குள் பேசுதலுக்கான விசேஷித்த ஊழியம் ஒன்று இருந்ததை அவர் மறைமுகமாக உணர்த்தினார். பெரும்பான்மையான மக்கள் பேசும் திறன் கொண்டிருக்கிறோம் ஆனால் எல்லாருமே சபைக்குத் தங்கள் பேச்சு மூலம் நன்கு ஊழியம் செய்யக்கூடியவர்களாக இருப்பதில்லை (காண்க யாக்கோபு 3:1). முந்திய வசனத்தில் அப்போஸ்தலர், கிறிஸ்தவர்களுக்குரிய வரங்கள் வேறுபடுகின்றன என்பதைத் தெளிவுபடுத்தியிருந்தார். ஒருவர் பேசுதலுக்கான இயற்கையான வரத்தைக் கொண்டிருக்கும்போது, அவர் அதைப் பயன்படுத்த வேண்டும். தேவனுடைய வசனத்தைப் பகிரங்கமாக அறிவித்தல் என்பதே பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்த பேச்சு என்பதாக இங்கிருக்கலாம். ஒருவேளை அவர், சபை கூடிவந்திருக்கும்போது அதற்கு முன்பாக நின்று அறிவித்தல் என்பதைத் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். பேசும் சாதனை செய்பவர்கள் அதை **தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்** என்பதோடு இணைக்க வேண்டிய பொறுப்பு உள்ளதை உணர்ந்தறிய வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார்.

"வாக்கியங்கள்" *(logia)* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, தேவனுடைய கூற்றுக்களையே சாதாரணமாகக் குறிக்கிறது. நடபடிகள் 7:38 மற்றும் ரோமர் 3:2 ஆகிய வசனங்களில், இவ்வார்த்தை பழைய ஏற்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சபைக்கு முன்பாகப் பேசுபவர் எடுத்துரைக்கும் வார்த்தைகள், வேதாகமத்தின் வார்த்தைகளுடைய அதிகாரத்திற்கும் வல்லமைக்கும் சமமானவை அல்ல. இருப்பினும், கிறிஸ்தவ போதகர்கள் மற்றும் சுவிசேஷ ஊழியர்கள் ஆகியோரால் பேசப்படும் வார்த்தைகள் தேவனுடைய வெளிப்படுத்துதலில் இருந்தே தரவழைக்கப்படுகின்றன,

அவைகள் வெளிப்படுத்துதலின் பண்புகளையே தமக்குள் பங்கேற்றுக் கொள்கின்றன. கிறிஸ்தவப் பேச்சாளர்கள், தங்கள் பொறுப்புக்களின் ஈர்ப்பை உணர்ந்தறிய வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டார். அவர்கள் பேசுகையில், அவர்களின்வார்த்தைகள் அப்போஸ்தலிக்கச் செய்தி யோடு சபையைக் கட்டி எழுப்பும் வகையில் அவர்கள் தங்கள் வார்த்தைகளைக் கவனமாய்ப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பினார்.

சரீரத்தைக் கட்டியெழுப்பக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் பல்வகை வரங்களைப் பற்றிய பவுலின் பட்டியல்கள், பேதுருவினுடையதைக் காட்டிலும் அதிக விபரமாக இருக்கின்றன. பேதுரு இரு பெரிய தலைப்புகளாக பேசுதல் மற்றும் உதவி செய்தல் ஆகியவற்றை மாத்திரமே குறிப்பிட்டார். இருப்பினும் அவை ஒவ்வொன்றின்கீழும், அந்த வரங்கள் வெளிப்படுத்தப்படுவதற்கான குறிப்பிட்ட வழிகள் ஏராளமாக வருகின்றன. பேசுதல் என்பதில் வெளியரங்கமான அல்லது தனிப்பட்ட உபதேசம், பிரசங்கித்தல், ஊக்குவித்தல், ஜெபம் மற்றும் ஒருவேளை பாடுதல் ஆகியவை உள்ளடங்கலாம். உதவி செய்தல் என்பது செயல் பரப்பெல்லையில், பேசுதலைக் காட்டிலும் அதி க விரிவானதாக உள்ளது. அப்போஸ்தலர், **ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்** என்று எழுதினார். உதவிசெய்தல் என்பதைப் பவுல், கொடுத்தல் மற்றும் இரக்கம் செய்தல் என்பது போன்ற இருவிஷயங்களாகப் பிரித்தார் (ரோமர் 12:8), ஆனால் உதவிசெய்தல் என்பது ஒருவர் கிறிஸ்துவைப் போலச்செய்தலில் விஷயங்களின் மாபெரும் வகையை உள்ளடக்கியதாக இருக்கும். இயேசு மாபெரும் நியாயத்தீர்ப்புக்காட்சியை மத்தேயு 25:31-46ல் முன்வைத்தபோது, பசியோடிருந்தவர்களுக்கு உணவளித்தவர்கள், நோயாளிகளைச் சந்திக்கச் சென்றவர்கள், நிர்வாணிகளை உடுத்துவித்தவர்கள் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்டார். உதவிசெய்தல் என்பது தரையைக் கூட்டுதல் போன்ற அடிநிலை விஷயமாகவோ அல்லது வேதசாட்சியாக மரித்தல் என்ற வகையில் காட்சிப்படுத்தும் விஷயமாகவோ இருக்கலாம்.

ஒருவர் எதைச் செய்தாலும், அது பேசுதலோ அல்லது உதவிசெய்தலோ எதுவாக இருந்தாலும், அவர் தமது ஊழியத்திற்கான ஆதாரவளத்தைத் தேவனுடைய கிருபையுள்ள கொடுத்தலில் கண்டடைகிறார். அவரது பேசுதல் தேவனுடைய செய்தியின்படியானதாக இருக்க வேண்டும்; அவரது உதவிசெய்தல் "தேவன் தந்தளும் பெலத்தின்படி" இருக்க வேண்டும். தேவன் தமது மக்களுக்குக் கட்டளையிடுவதோடு, அவர்களைப் பலப்படுத்தவும் செய்கிறார். தேவன் பலத்தைக் கொடுக்கிறார். வேறொரு இடத்தில் பவுல், "எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று எழுதினார் (பிலிப்பியர் 4:12ஆ, 13). ஒரு விசுவாசி மகிழ்வுடன் அனுபவிக்கும் வரங்கள் அவரது சொந்த மகிமைக்கானவை அல்ல. ஒருவர் **"தேவனுடைய வாக்கியங்களின்படி"** போதிக்கும்போது மற்றும் அவர் **"தந்தளும் பெலத்தின்படி"** உதவிசெய்யும்போது, **எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படுதல்** என்பதே விளைவாக இருக்க வேண்டும். குமாரன் மூலமாகச் செய்யப்படாத எதிலும் தேவனு

க்குத் துதி, மகிமை தரப்படுவதில்லை. "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று இயேசு கூறினார் (யோவான் 14:6; காண்க நடபடிகள் 4:12).

பேதுரு தமது நிருபத்தின் இந்தப் பகுதியை ஒரு துதிப்பாடலுடன் முழுமையாக்கினார். இது வழக்கமற்றதாக உள்ளது ஆனால் எதிர்பாராதது அல்ல. ஒரு நிருபத்தின் மத்தியில் இப்படிப்பட்ட துதியைப் காண்பது வழக்கமானதே ஆகும். துதிகள் குறுகியவையாக, தேவனுக்குத் துதியில் முறைப்படியான சொல்விளக்கங்களாக உள்ளன. அவைகள் அடிக்கடி, அந்தக் கணத்தினால் உருவாக்கப்பட்ட ஆற்றலின் அரை உடனடியான வெளிப்படுதலாகக் காணப்படுகின்றன. அவைகள் கணிசமான அளவு வேறுபாட்டை அனுமதிக்கையில், அவைகள் தேவனுடைய மகிமை, வல்லமை மற்றும் நெறிமுறை ஆகியவற்றின் மீது கவனம் குவிக்கும் பண்பைப் பகிர்ந்து கொள்கின்றன. சங்கீதங்களில் இவைகள் பொதுவாக உள்ளன, ஆனால் இவைகள் வேதாகமம் முழுவதிலும் காணப்படுகின்றன. துதிப்பாடல்கள் குறிப்பாக, ஒரு நிருபத்தின் முடிவுப்பகுதிக்கு ஏற்புடையவையாக உள்ளன, அப்பகுதியில் அதனை எழுதியவர் தமது நிருபத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறார் (ரோமர் 16:27; பிலிப்பியர் 4:20; 1 தீமோத்தேயு 6:15, 16; 1 பேதுரு 5:11; 2 பேதுரு 3:18; யூதா 24, 25). இருப்பினும் சில வேளைகளில் துதிகள், ஒரு எழுத்தாளர் தமது நிருபத்தை முடிவுக்கும் முன்னரே நன்கு எழும்புகின்றன (ரோமர் 11:36; எபேசியர் 3:21). பேதுரு தமது நிருபத்தில் துதிப்பாடல் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பது எதிர்பாராததாக உள்ளது, ஆனாலும் இது முன்னுதாரணம் எதுவும் இல்லாதது அல்ல. இருப்பினும் குறிப்பிட்ட இந்த இடத்தில் இத்துதிப்பாடலை வைத்திருத்தலானது 1 பேதுரு நிருபத்தைப் பற்றி எழும்பி இருக்கும் இன்னொரு கேள்விக்குப் பங்களிக்கிறது.

அறிமுக உரையில் நாம் கவனித்தபடி, 1 பேதுரு நிருபமானது அப்போஸ்தலரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற நிருபத்தைக் காட்டிலும் சற்றே வேறுபட்டதாகத் தொடங்கிற்று. இது ஒரு நிருபமாக இருப்பதற்கு முன்னர், இந்தப்பதிவேடு, ஞானஸ்நானம் பெற விரும்புபவர்களுக்கு அல்லது புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு ஒரு அறிவுறுத்துதல் கையேடாக இருந்தது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இந்த ஞானஸ்நானக் கையேட்டை இரண்டாம் நூற்றாண்டு சபையானது ஒரு நிருபப் படிமுறையாக்கி தழுவியமைத்தது என்பதே விவாதமாக உள்ளது. இது மிகப்பரவலாகப் படிக்கப்படும்படிக்கு அவர்கள் அதில் பேதுருவின் பெயரை இட்டனர். இந்த நிலைப்பாட்டைப் பராமரிக்கும் சிலர், 1 பேதுரு 4:12-5:14 வசனப்பகுதியானது, ஞானஸ்நானக் கையேட்டுடன் பிற்காலத்தில் இணைக்கப்பட்ட உண்மையான நிருபமாக உள்ளது என்று விவாதித்துள்ளனர். விஷயம் அவ்வாறு இருந்தால், 1 பேதுரு என்று நாம் அழைக்கும் பதிவேடு உண்மையில் இரண்டு தனித்தனிப் பதிவேடுகளாகத் தோற்றம் பெற்றன, அவற்றில் முதலாவது ஞானஸ்நானம் பெற்றுக்கொள்பவர்களுக்கான அறிவுறுத்துதல் பதிவேடு ஒரு நிருப வடிவத்திற்கு மெல்லியதாகத் தழுவப்பட்டது (1:3-4:11) மற்றும் இரண்டாவது உண்மையிலேயே ஒரு நிருபமாக இருந்தது (4:12-5:14). இவ்விதமான விவாதமானது இந்தப் பதிவேட்டின் எந்தப்பகுதியும் பேதுருவினாலேயே எழுதப்பட்டன என்ற உரிமைகோருதலை நீக்கிப் போடுகிறது.

இந்தக் கோட்பாட்டை மறுப்பதற்கு காரணங்கள் உள்ளன (இந்தப் புத்தகத்தின் தொடக்கத்தில் உள்ள *அறிமுகம்* என்ற பகுதியில் காணவும்). இருப்பினும் இன்னமும், இவ்விடத்தில் இந்தத் துதிப்பாடல் காணப்படுதலானது இந்த நிருபத்தின் ஒருமைப்பாடு பற்றி கேள்விகளை எழுப்புகிறது. மற்றும் 4:12ல் பேதுரு, கிறிஸ்தவரின் உபத்திரவங்களைப் பற்றிய கேள்வியைப் புதுப்பிக்கப்பட்ட அவசரத்தன்மையுடன் மேல் எடுத்தார் என்பது தெளிவாக உள்ளது. நிருபத்தின் இந்த அம்சங்களை விளக்கப்படுத்த இரண்டு தனித்தனிப் பதிவேடுகள் தேவை என்று யூகித்தல் அரிதாகவே அவசியமாக உள்ளது. பேதுரு தமது ஊக்குவிக்கும் முயற்சிக்கு மத்தியில் துதிப்பாடல் வடிவில் ஒரு துதியைச் செலுத்தச் சற்றே இடைநின்றிருக்கலாம். ஒருவேளை அவர், தமது நிருபத்தை எழுதச் சிலமணி நேரங்கள் அல்லது சில நாட்கள் கழித்துத் திரும்பி இருக்கலாம், அப்போது அவர் தமது வாசகர்களின் உபத்திரவங்கள் மீது திரும்பவும் தமது கவனத்தைச் செலுத்தி இருக்கலாம். இப்படிப்பட்ட செயல்முறையானது திட்டவட்டமாகவே, கற்பனைக்கு அப்பாற்பட்டதல்ல.

1 பேதுரு நிருபம் இரண்டு தனித்தனிப் பதிவேடுகளாகத் தோன்றியது என்ற அடிப்படை முடிவை மீண்டும் வகைப்படுத்தாமலே, 4:11 மற்றும் 4:12 ஆகிய வசனங்களுக்கிடையே தொனியில் எதிர்பாராத மாற்றம் உள்ளது என்பதை நாம் ஒப்புக்கொள்ளலாம். அப்போஸ்தலர் இந்த இடத்தில் தம் நிருபத்தை முடிக்கும் மனவிருப்பம் கொண்டு இந்தத் துதிப்பாடலை எழுதியிருக்கலாம். அவர் நிருபத்தைப் பக்கமாக வைத்துவிட்டு, அடுத்துக் கிடைக்கும் செய்திகொண்டுசெல்பவர் மூலமாக அதை அனுப்ப மனவிருப்பம் கொண்டிருந்து இருக்கலாம். ஒருசில நாட்கள் அல்லது ஒருசில வாரங்கள் கடந்திருக்கலாம். இதே வேளையில் பேதுரு அந்த நிருபத்தை அனுப்பும் வாய்ப்பை பெறுமுன்னர், தமது வாசகர்களின் உபத்திரவ நிலை பற்றிக் கூடுதல் தகவல்களைப் பெற்றிருக்கலாம். ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களின் ஆபத்து நிறைந்த சூழ்நிலைகள் மிகமோசமானவையாக மாறியிருக்கலாம். கிறிஸ்தவர்கள் மீது நீரோவின் வெறுப்பு அல்லது ஒருவேளை பவுல் மரணதண்டனைக்கு உட்பட்டது என்பது, பேதுருவின் வாசகர்களின் உபத்திரவம் மிகமோசமானதாக மாறிற்று என்று பேதுரு நம்புவதற்குக் காரணத்தைக் கொடுத்திருக்கலாம் என்று ஆன்ட்ரூ F. வால்ஸ் அவர்கள் கருத்துத் தெரிவித்தார். பிந்திய ஒரு வேளையில் அப்போஸ்தலர் அமர்ந்து 4:12-5:14 பகுதியைப் புதிய தகவல்கள் மற்றும் வளர்ச்சிகள் ஆகியவற்றிற்குப் பதிலுரையாகக் கூட்டியிருந்தார் என்றால், அது பின்தொடரும் வசனங்களில் உத்தேசிக்கப்படும் அவசரத்தன்மைக்குக் காரணமாயிருக்கும்.[10]

நடைமுறைப்பயன்பாடு

கருத்துநோக்கின் விஷயம் (4:7-11)

உள்ளூர் ஆரம்பப் பள்ளி பெண் ஆசிரியர் ஒருவர் ஒருநாள் பணிமுடிந்து வீடு சென்றுகொண்டு இருந்தார். அவர் தன்னுடன் ஐந்து வயதான தனது மகளான சிறுமியுடன் சென்று கொண்டிருந்தார். பக்கத்துத் தெருவில் இருந்து வந்த ஒரு வாகனம் கனவேகத்தில் வந்து, நிறுத்தும் கோட்டின்மீது ஓடி அந்தப் பெண் ஆசிரியரின் விலாப்பக்கத்தில் இடித்து, அவர்

உடனடியாகக் கொல்லப்பட்டார். அந்தச் சிறுமி மிகமோசமான நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டாள். நிறுத்தும் கோட்டின்மீது ஓடிய அந்த வாகனம் பதினெட்டு வயதான ஒரு பையனால் ஓட்டப்பட்டது. அந்தக் காரில் நான்கு இளைஞர்கள் இருந்தனர், ஏராளமான சாராயத்தைக் காவல்துறையினர் கண்டுபிடித்தனர்.

இப்படிப்பட்ட விபரங்களை நாம் வாசிக்கும்போது - கவலை, சீற்றம் குழப்பம், உதவியற்ற நிலை, கோபம் போன்ற - பல உணர்வுகள் நம்மில் பெரும்பான்மையானவர்களின் சிந்தனையில் பெருக்கெடுக்கின்றன. அந்தச் சிறுமியைத் தாயற்றவளாக விட்டுச்செல்ல நேர்ந்த, ஒன்றுமறியாத இப்பெண்ணின் கருத்தறிவற்ற மரணத்திற்குக் காரணமானது யாரோ அவர் மீது சட்டம் தனது கடமையைச் செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் - அவர் தமக்கு உரிய தண்டனையைப் பெற வேண்டும். அதற்குக் காரணமானவர்கள் நீண்டகாலம் சிறையில் அடைக்கப்படப் பாத்திரராக உள்ளனர்.

இந்த விபத்து நடந்து சில மணிநேரம் கழித்து, நகரின் வேறொரு இடத்தில் ஒரு காட்சி அரங்கேறுகிறது. ஒரு தாயும் தகப்பனும் இருந்த வீட்டின் கதவு தட்டப்படுகிறது. தட்டியது காவல்துறையினர். அவர்களின் மகனோ அல்லது மகளோ நிறுத்துக்கோட்டின்மீது ஓடியிருந்ததை அவர்கள் அறிந்தனர். விளைவுகள் பரிதாபகரமானவையாக இருந்தன. சாராயம் உள்ளடங்கியிருந்தது. ஒரு இளம் தாய் மரித்துப்போயிருந்தாள்.

இந்த விபத்து கருத்துநோக்கைச் சார்ந்து மாறுபட்டுக் காணப்படுகிறது. இந்த மூன்று மனிதர்களும் இந்நிகழ்வினை எவ்வாறு கருதுவார்கள் என்று கற்பனை செய்து பாருங்கள்: (1) ஒரு கணவர் தமது மனைவியும் சிறுமியான மகளும் வீடு திரும்புவார்கள் என்று காத்திருக்கிறார், (2) தங்கள் காரின் சாவியை பதினெட்டு வயதான தங்கள் மகனிடம் கொடுத்திருந்த பெற்றோர் மற்றும் (3) நான், காலைச் செய்தித்தாளில் விபத்து பற்றிய செய்தியை புதிரான மனதுடன் வாசித்துக்கொண்டு, அவநம்பிக்கையுடன் தலையை அசைத்துக் கொண்டிருக்கிறேன். ஒருவர் எவ்வாறு ஈடுபடுகிறார் என்பதைப் பொறுத்து ஒரே செய்தி மாறுபட்ட வகையில் காணப்படுகிறது.

1 பேதுரு 4:7-11ல் அப்போஸ்தலரின் செய்தி கருத்து நோக்குப் பற்றியதாக உள்ளது. பேதுருவின் முதல் வாசகர்கள் உபத்திரவத்தை மிகுதியும் சகித்திருந்தனர். அவர்கள் கிறிஸ்துவைக் கர்த்தர் என்று அறிக்கையிட்டபின், அவர்களின் வாழ்வை, அவர்களது முன்னாள் நண்பர்களும் அயலகத்தவர்களும் மிகவும் பரிதாபமாக்கி விட்டனர். அவர்களின் நண்பர்கள் புரிந்துகொள்ளவில்லை. முதலாவது அவர்கள் சீற்றம் கொண்டிருந்தனர், பின்பு அவர்கள், யூதர்களில் பலஸ்தீனத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் புதிய தேவனை ஏளனம் செய்தனர். அவர்கள் கிறிஸ்தவர்களின் வாழ்வைப் பரிதாபமாக்கினர். அவர்கள் அறிந்த யாவும் உண்மையாக இருந்தன என்று பேதுரு கூறினார்: "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்" (1 பேதுரு 4:4).

பேதுரு தமது வாசகர்களை, அவர்களின் வேதனையையும் புறக்கணிக்கப்படுதலையும் கருத்து நோக்கில் வைக்கும்படி வேண்டிக் கேட்டுக்

கொண்டார். கிறிஸ்தவர்கள் அந்நியர்களின் கருத்துநோக்கில் நிகழ்வுகளைக் கண்ணோக்குகின்றனர். உலகத்தின் அக்கறை மற்றும் கவலைகள் மற்றவர்களில் இருந்து மாறுபட்டவைகளாகக் கிறிஸ்தவர்களுக்குத் தெரிகின்றன. உலகத்தின்மீது அன்புகூருபவர்கள் இந்த யுகத்தைச் சார்ந்துள்ளனர்; கிறிஸ்தவர்களோ கடந்து செல்பவர்களாக மாத்திரமே இருக்கின்றனர். மனிதகுலத்தின் எஞ்சியுள்ள பிரிவினர் அறியாதவற்றை அவர்கள் அறிந்துள்ளனர்.

(1) *"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்பதால்* (1 பேதுரு 4:7), *கிறிஸ்தவக் கருத்துநோக்கு மாறுபட்டுள்ளது.* அப்போஸ்தலர், "ஏதாவது ஒரு வேளையில், எப்போது என்று நாம் அறியாத வேளையில், ஆனால் கர்த்தர் மறுபடியும் வருவார். இது அவ்வளவு அவசரமல்ல. நாம் இதை மனதில் இருந்து வெளியேற்றிவிட்டு நமது வேலையைப் பார்க்கச் செல்வோமாக" என்று எழுதவில்லை. கர்த்தர் சீக்கிரம் திரும்பி வருவார் என்ற விசுவாசத்திற்கும் அவர் திரும்பி வருவார் என்பதை சாவகாசமாக ஏற்றுக்கொள்வதற்கும் இடையில் மாபெரும் வேறுபாடு உள்ளது. அப்போஸ்தலரும் அவரது வாசகர்களும் முன்னெதிர்நோக்குதலில் வாழ்ந்தனர். கர்த்தர் திரும்பவும் வருதல் என்பது தேவையற்றவைகளைப் போட்டுவைக்கும் இடத்தில் தள்ளப்படத்தக்க பாடக்கருத்தல்ல.

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருக்கிறது என்பது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் பொதுவான கண்ணோக்கக் கருத்தாக உள்ளது; "நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" (யாக்கோபு 5:8); "மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்" (மத்தேயு 25:13). கர்த்தருடைய மறுவருகையானது தங்கள் உடனடியான எதிர்காலத்தில் நிகழும் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கும்போது, அவர்கள் வேறுவகையில் வாழ்கின்றனர். பேதுரு இதைத்தான் இங்கு கூறினார். கர்த்தர் மறுபடியும் வருவார் என்று விசுவாசிப்பதற்கும் அவர் விரைவில் மறுபடியும் வருவார் என்று விசுவாசிப்பதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது.

கர்த்தர் மறுபடியும் வருவார் என்று எல்லா மக்களும் விசுவாசிப்பதில்லை. சிலர் தாங்கள் அறிந்துள்ள இந்தப் பொருளாதாய உலகம் மாத்திரமே என்று நம்புகின்றனர். பொருளாதாயவாதிகள், பொருளும் இயக்கமுமே இந்த அண்டத்தில் உள்ள யாவுமாகும் என்று நம்புகின்றனர். அவர்கள் தாங்கள் நம்புவதை சீர்பொருத்தமாகப் பின்பற்றினால், தாங்கள் சொந்த இருப்பிற்குப் பின்வரும் இரண்டு சாத்தியமான வழிகளில் ஏதாவது ஒன்றில் பதில் செயல் செய்வர். (1) சில பொருளாதாயவாதிகள் திரிந்த நிலை கொண்டவர்களாக உள்ளனர். வாழ்வு என்பது ஒரு பிரபஞ்ச நகைச்சுவையாக உள்ளது. அது ஒருவர் தமக்காக விரும்பி ஏங்கும் சிறு விஷயங்கள் தவிர வேறு அர்த்தம் எதையும் கொண்டிருப்பதில்லை. (2) மற்றவர்கள் குறைகாணும் இயல்பு கொண்டவர்களாக உள்ளனர். "புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம்" (1 கொரிந்தியர் 15:32) என்பதே அவர்களின் தத்துவமாக உள்ளது. நாம் எவ்வளவு கேளிக்கைகளைக் கொண்டிருக்க முடியும் என்பதைக் கொண்டே வாழ்வின் வெற்றி அளவிடப்படுகிறது.

பேதுருவைப் பொறுத்தமட்டில், திரிந்தமனநிலை கொண்டிராத நிலையில் வாழ்வு என்பது அக்கறை கொள்ள வேண்டியதாக உள்ளது; இது அற்ப

சிந்தையற்ற நிலையில் சந்தோஷமானதாக உள்ளது. கர்த்தர் இந்த உலகத்தை நியாயந்தீர்க்கத் திரும்பவும் வருகிறார் என்பதால், அப்போஸ்தலர் "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்" என்று கூறினார். நாம் என்ன கூறுகிறோம் மற்றும் என்ன செய்கிறோம் என்பதில் கவனமிக்கவர்களாக இருக்க வேண்டும். மனிதத் தேர்ந்துகொள்ளுதல்களும் செயல்களும் பொருட்படுத்தப்பட வேண்டியவையாக உள்ளன. ஆகவே கிறிஸ்தவர்கள் ஜெபிக்க வேண்டும்.

யூதத்துவம் மற்றும் இஸ்லாம் ஆகிய இரண்டிலுமே, நாள் முழுவதிலும் பரவலாக்கப்பட்ட ஜெப வேளைகள் உள்ளன. இஸ்லாமிய நாடுகளில், விசுவாசிகளை ஜெபிக்க அழைக்கும் புலம்பல் போன்ற கதறல்களை நீங்கள் கேட்க முடியும். (பள்ளிவாசல்களில் ஒலிப்பெருக்கியை வைத்துக் கெண்டு தொழும் நேரங்களில் மக்களை அழைப்பதற்கு உரத்த குரலில் ஒருவர் புலம்புதலைத்தான் இது குறிக்கிறது.) பள்ளிவாசல் கோபுரங்களின் உச்சியில் இருக்கும் ஒலிப்பெருக்கிகளின் வழியே அந்த சத்தங்கள் வருகின்றன, அவை நகரங்கள் மற்றும் பெருநகரங்களில் சிதறி ஒலிக்கின்றன. மக்கள் நிற்கின்றனர், முழங்காற்படியிட்டு தொழுகின்றனர். கிறிஸ்தவர்கள் ஜெபத்திற்கென்று குறிப்பிட்ட நேரம் எதையும் கொண்டிருப்பதில்லை. எல்லா வேளைகளிலும் ஜெபித்தல் என்பதே கிறிஸ்தவ உயர்கொள்கையாக உள்ளது (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:17). கர்த்தருடைய மறுவருகையின் மீதான கிறிஸ்தவக் கருத்துநோக்கு, விசுவாசிகளை ஜெபிக்கும்படி போதிக்கிறது. வாழ்வு என்பது அக்கறைக்குரிய விஷயமாக இருப்பதால் எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருப்பதால், இயேசு பரலோகத்தில் இருந்து ஆளுகை செய்வதால், அவர்கள் ஜெபிக்கின்றனர்.

(2) கர்த்தர் விரைவில் திரும்பவும் வருவார் என்று கிறிஸ்தவப் பரதேசிகள் அறிந்திருப்பதால், அவர்களின் கருத்துநோக்கமானது ஒருவர் மற்றவரை அன்பில் ஏற்றுக்கொள்ளும் கிருபையை அவர்களுக்கு தருகிறது. "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" (1 பேதுரு 4:8). பிரச்சனை கொண்டுள்ள ஒரு சகோதரரை அல்லது பொய்யராக அல்லது களவு செய்பவராக உள்ள ஒரு சகோதரரைக் கிறிஸ்தவர்கள் காணாது விட்டுவிட வேண்டும் என்று பேதுரு கூறவில்லை. கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக உள்ளனர். பேதுருவின் வார்த்தைகள் பாவத்திற்கு அழைப்பு விடுவிப்பவையாக இருப்பதில்லை. கிறிஸ்தவர்கள் சிந்தனையற்ற வார்த்தைகளைக் கூறுவதற்கும் இலேசாக நடந்து கொள்வதற்கும் சாக்குப்போக்கு கூறலாம் என்ற கருத்து எதுவும் இங்கில்லை. எவரொருவரும் தமது பாவங்களைப் பிறர் வந்து மூடுவார்கள் என்று எதிர்பார்க்கும் உரிமை கொண்டிருப்பதில்லை.

மக்கள் ஒருவர் மற்றவர் மீது அன்புகூரும்போது, பாவம் பற்றிய அவர்களின் கருத்து நோக்கு, சுய அக்கறையில் இருந்து மாறுபடுகிறது. என்று பேதுரு கூறிக் கொண்டிருந்தார். கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களும் சகோதரிகளும் ஒருவர் மற்றவரைத் தூக்கிச்செல்ல மறுக்கின்றனர். மாறாக அவர்கள் ஒன்றிணைந்து, பாவியை அவரது வெட்கக் கேட்டில் இருந்து தூக்குகின்றனர். அவர்கள் அவருக்கு எதிராகத் திரும்புவதில்லை; அவர்கள் அவர் பக்கம் இருக்கின்றனர். விசுவாசத்தின் இப்பக்கத்தின் மீதான கருத்துநோக்கு வேறுபட்டுள்ளது.

பேதுரு "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று கூறியபோது, கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவர் மீது கொள்ள வேண்டிய நிலைப்பாட்டைப் பற்றி அவர் எடுத்துரைத்தார். அவர்கள் ஒரு சகோதரர் அல்லது சகோதரி செய்யத் தாங்கள் காணும் விஷயத்தின்மீது சரியான நோக்கங்களை வைக்க மனத்துடிப்புடன் இருக்கின்றனர். அவர்கள், ஒரு சகோதரர் அல்லது சகோதரி பேசும் வார்த்தைகளின்மீது கனிவுடன் கண்ணோக்குகின்றனர், அதே வார்த்தைகள் பிறரால் பேசப்பட்டால் அவர்களை அது புண்படுத்தி இருக்கலாம். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஒரு நபர் அறிக்கையிட்ட உடனே, அதாவது அவர் மரித்தோரில் இருந்து எழுந்தார் என்றும் அவர் மறுபடியும் வருவார் என்றும் விசுவாசித்த உடனே - அதாவது இயேசுவில் உள்ள கட்டுக்களை நாம் பகிர்ந்துகொண்ட உடனே - நான் அவரை வேறுவிதமாகக் கண்ணோக்குகிறேன். அவரது நோக்கங்களை நியாயந்தீர்ப்பதில் நான் மெதுவாகச் செயல்படுவேன். அவரது நெறிமுறைகளைக் காண்பதிலும் அவற்றைப் பாராட்டுவதிலும் நான் விரைவாகச் செயல்படுவேன். பவுலோ அல்லது பேதுருவோ பின்வரும் பாடக்கருத்தின்மீது ஒருக்காலும் களைப்பு அடைந்ததே இல்லை: "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" (கலாத்தியர் 6:10); "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; ... சினமடையாது, தீங்கு நினையாது" (1 கொரிந்தியர் 13:4, 5).

(3) *கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரை அவரவர் கொண்டுள்ள வேறுபாட்டிற்காக மதிக்கக் கற்றுக்கொள்ளுவதால், கிறிஸ்தவக் கருத்துநோக்கமானது மாறுபட்டதாக உள்ளது.* நாம் யாவரும் ஒன்று போல் இருப்பதில்லை. தேவன் வெவ்வேறு வரங்களை அருளுகிறார். பேதுரு பின்வருமாறு எழுதினார்:

> அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவர் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன் ... (1 பேதுரு 4:10, 11அ).

நாம் யாவருமே மாறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கிறோமே. சிலர் உணர்வுரீதியாக அமைதியானவர்களாக உள்ளனர்; மற்றவர்கள் பேசிக்கொண்டிருப்பவர்களாக உள்ளனர். சிலர் விரைவில் முடிவெடுக்கும் திறன் கொண்டுள்ளனர், மற்றவர்கள் நிதானமானவர்களாக நம்பகத்தன்மை வாய்ந்தவர்களாக உள்ளனர். கிறிஸ்தவர்கள் தங்கள் ஆண்டவரை அறிதலில் இருந்து வருகிற கருத்து நோக்கைக் கொண்டுள்ளபோது, அவர்கள் தங்கள் சக விசுவாசிகளை அன்பின் ஆரோக்கியமான அளவுடன் மதிப்பீடு செய்கின்றனர். ஒரு நபர் நல்லவராக இருப்பதாக அறிதல், அவரது அல்லது அவளது வாழ்வில் ஆவியின் கனியைக் கண்டிருத்தல் ஆகியவை உள்ள நிலையில் சீஷர்கள் ஒருவர் மற்றவரை உபகார உணர்வுடன் கையாளுகின்றனர். அது பாவத்தை கண்டித்து உணர்த்துதல் போன்றதாக இருப்பதில்லை. அது தவறுகள் இருந்தாலும்

அன்புகூருதல் என்பதாக உள்ளது.

விசுவாசிகள் ஒருவர் மற்றவரில் தாங்கள் காணும் வேறுபாடுகளுக்காக நன்றி செலுத்த வேண்டும் என்றும் தங்கள் சொந்த வரங்களில் இருந்து மாறுபட்ட வரங்களைக் கொண்டுள்ள மற்றவர்களை மதிக்க வேண்டும் என்றும் விசுவாசிகளைப் புதிய ஏற்பாடு அடிக்கடி வேண்டிக் கேட்டுக்கொள்கிறது (காண்க 1 கொரிந்தியர் 12:12, 13). அன்பு நம்மிடத்தில் நம்மால் இயலாதவற்றை வற்புறுத்திக் கேட்பதில்லை. அது நாம் எல்லாரும் ஒரே வகையான தனிநபர்களின் இணைவை மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டும் என்று கேட்டுகொள்வதில்லை. நாம் மற்றவர்களைக் காட்டிலும் சிலரிடம் அதிகமாகவே பொதுவான விஷயங்களைக் கொண்டிருக்கிறோம். சிலர் தங்களுக்கு விசேஷமாய் அன்புடையவர்களாக இருப்பதால் கிறிஸ்தவர்கள் தவறாக இருக்கிறார்கள் என்று அர்த்தமல்ல, ஆனால் கிறிஸ்து இதைக்காட்டிலும் பெரியவர்களாக இருக்கும்படி நம்மிடத்தில் கேட்டுக்கொள்கிறார். எல்லா மக்களையும் மதிக்கும்படியும், நமது சகோதரர்கள் சகோதரிகளை கனிவுடன் கண்ணோக்கும்படியும், குற்றப்படுத்துதல் மற்றும் விமர்சித்தல் ஆகியவற்றை நிதானித்துச் செய்யும்படியும் நம்மிடத்தில் அவர் கேட்டுக்கொள்கிறார்.

இங்கு பேதுருவின் அடிப்படைக் கோடுள்ளது. நமது சுய மகிமையைக் காட்டிலும் தேவனுடைய மகிமை மிகவும் முக்கியமானதாக உள்ளது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும் என்று அவர் கூறினார். நமது உணர்வுகள் புண்படுத்தப்பட்ட நிலையில் நாம் நிலைநிற்க முடியும். அதை நாம் சமாளித்து வெளிவரவும் முடியும். நாம் விரும்பாத சிலவிஷயங்களைக் கூறியது நல்ல மனிதரா அல்லது நல்ல பெண்ணா என்பதை நமக்கு நாமே நினைவுபடுத்திக் கொள்ளவும் நம்மால் முடியும். நற்தன்மை என்பது அவர்களின் வாழ்வில் உள்ளது, கிறிஸ்தவர்கள் “எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்” (1 பேதுரு 4:11ஆ) என்ற வசனத்திற்கிணங்கச் செயல்படுகின்றனர்.

முடிவுரை. சபை என்பது உங்களையும் என்னையும் பற்றிய விஷயமல்ல, அது தேவனையும் அவரது மகிமையையும் பற்றிய விஷயமாக உள்ளது. சிலுவையினிமித்தம் இயேசு உங்களுடைய மற்றும் என்னுடைய பாவங்களைக் (மன்னிக்க) கண்ணோக்காமல் (மன்னித்து) விடக்கூடும் என்றால், நாம் ஒருவர் மற்றவரின் பாவங்களை கண்ணோக்காமல் (மன்னித்து விட்டு) இருக்க முடியும். நம்மில் பெரும்பான்மையானவர்களின் வாழ்வில் மேம்படுத்தப்பட வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. ஒருவர் குறைகளை ஒருவர் பொறுத்துக்கொள்ளுதல் என்பது, எவரொருவரும் நமது தவறுகள் பற்றி நம்மிடம் எதுவும் கூறக்கூடாது என்று அர்த்தப்படுத்துவதில்லை. நமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் குறைவுபடுகிற சில பகுதிகளைப் பற்றிக் கூறவரும் சகோதரர் ஒருவர் நம்மை அன்புடன் அணுகி நம்மை மதித்து பேசுகிறார் என்றால், நாம் அதைத் தாங்கி நிற்க முடியும். அன்பு திரளான பாவங்களை மூடும் என்பது, நாம் ஒரு தவறை வெற்றிகொள்ள நமக்கு உதவலாம் என்று யாரேனும் ஒருவர் நினைக்கும் ஒவ்வொரு வேளையிலும் நாம் சீற்றம் கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை.

குறிப்புகள்

[1]Wayne A. Grudem, *The First Epistle of Peter: An Introduction and Commentary,* Tyndale New Testament Commentaries, vol. 17 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 167. [2]*இரண்டாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் வாழ்ந்த சொல்லாடற் கலைஞரான, ஐலியுஸ் அரிஸ்டைடஸ் என்பவர், தமது கால உலகத்தின், குறைகாணும் தத்துவஞானிகளை எதிர்த்துத் தாக்கி, பின்பு தமது தாக்குதலை புதிய மதமான கிறிஸ்தவத்தின் மீது திருப்பினார். குறைகாணும் தத்துவ ஞானிகளைப்பற்றி அவர்; "அவர்களின் நடத்தையும்கூட பலஸ்தீனத்தில் இருந்த தேவதூஷணம் செய்யும் மக்களின் வாழ்வைப் போன்றே இருந்தது. இவர்களும்கூட (அதாவது கிறிஸ்தவர்களும்கூட) தங்களுக்கு மேலாக உள்ளவர்களிடம் தாங்கள் அங்கீகரியாத தெளிவான அடையாளங்களினால் தங்கள் தேவபக்தியற்ற தன்மையை காட்சிப்படுத்துகின்றனர், மற்றும் அவர்கள் கிரேக்கர்களிடத்தில் இருந்தும் நன்மையான எல்லாவற்றிடம் இருந்தும் தங்களைத் தாங்களே பிரித்துக் கொண்டுள்ளனர்" என்று கூறினார்.* (Aelius Aristides *Orations* 46.) *பேதுருவின் காலத்திற்கு அண்மையில் வாழ்ந்தவரான அரிஸ்டைடஸ், இந்த அப்போஸ்தலர் கருத்தாகத் தெரிவித்த அதே காரணத்திற்காகவே கிறிஸ்தவர்கள் மீது குற்றச்சாட்டுகளைக் குவித்தார்: "அவர்களுடன் நீங்களும் அதே இழிவான நடத்தை என்ற வெள்ளத்தில் மூழ்காது இருக்கிறபடியால், உங்களை வினோதமானவர்களாக அவர்கள் இணைக்கின்றனர்" (1 பேதுரு 4:4).* [3]Leon Morris, *The Biblical Doctrine of Judgment* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 72. [4]John Murray, *Principles of Conduct: Aspects of Biblical Ethics* (London: Tyndale Press, 1957), 72. [5]*1:13 ன் மீதான விளக்கங்களைக் காணவும்.* [6]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude*, Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 176. [7]*இது சரியான உபதேசத்தை முக்கியத்துவம் அற்றதாக்குவதல்ல. சரியான உபதேசம் என்பது கலாத்தியக் கிறிஸ்தவர்களின் தேவையாக இருந்தது. அது 2 பேதுரு நிருபத்தில் குறிக்கப்பட்ட விசுவாசிகளின் தேவையாகவும் இருந்தது.* [8]*கெல்லி இந்த கண்ணோக்கை ஆதரித்தார்* (Kelly, 178.) [9]J. *இராம்ஸே மிக்காயேல் அவர்கள் இவ்வசனப்பகுதியை இவ்வாறுதான் புரிந்துகொண்டுள்ளார்.* (J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 [Waco, Tex.: Word Books, 1988], 247.) [10]Alan M. Stibbs and Andrew F. Walls, *The First Epistle General of Peter,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 57.

7

கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல்: உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள் (பாகம் 1)

(4:12-19)

இந்த நிருபத்தில் இதற்கு முன்பு இருமுறை, பேதுரு தமது வாசகர்களின் உபத்திரவங்களை வெளிப்படையாகக் குறிப்பிட்டிருந்தார் (1:6-9; 3:13-17). 4:12ல் உள்ளது போன்றே 1:6-9 வசனப்பகுதியின் மொழிநடையும் "அக்கினியால்" சோதிக்கப்படுதலைப் பற்றிப் பேசுகிறது என்பது உண்மையே. இருப்பினும் பின்வரும் வார்த்தைகள் உபத்திரவம் என்னும் கருத்தைப் புதிய மட்டத்திற்கு எடுத்துச்செல்லுகையில், அவை தெளிவானவையாகவும் அவசரத்தன்மை கொண்டவையாகவும் இருக்கும் வகையில் அவற்றின் மனப்பதிவிற்கு நாம் தப்பித்துக்கொள்ளுதல் என்பது அரிதாகவே உள்ளது.

கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல் (4:12-16)

*[12]பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில்
பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,
[13]கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து
மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால்
சந்தோஷப்படுங்கள். [14]நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்
நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய
ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்;
அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்.
[15]ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது,
திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில்
தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது.*

[16]ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.

வசனம் 12. *இவ்வசனங்களில் மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டுள்ள உபத்திரவங்களின் வலிவுத்தன்மை 1:6-9 வசனப்பகுதியில் இருந்து அதிகம் மாறுபட்டிருப்பதில்லை.[1] அவ்வாறு இதை எடுத்துக்கொண்ட நிலையில் 4:12-16 வசனப்பகுதியின் வார்த்தைகள் 3:13, 14ல் இருந்து கட்டியெழுப்பப்பட்டுள்ள வலிவுத்தன்மையை நிரூபிக்கின்றன என்பது தெளிவாக உள்ளது. 3:13, 14ம் வசனங்களில் பேதுரு தமது வாசகர்கள் தங்களுக்கு உபத்திரவங்கள் வந்தால் திகைப்படைய வேண்டும் என்று கூறினார். "நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்?" என்று அவர் கேட்டார். "ஒருவருமே இல்லை" என்பதுதான் எதிர்பார்க்கப்பட்ட பதிலாக இருந்தது, அப்போஸ்தலர் 3:13, 14ல் நீதியினிமித்தம் உபத்திரவப்படுதலுக்கான சாத்தியக்கூறைத் திறந்ததாக விட்டுவைத்திருக்கையில், அப்படிப்பட்ட ஒரு விஷயம் எதிர்பார்க்க மிகவும் அரிதானது என்பதை அவர் தெளிவாக்கியிருந்தார். இப்போது 4:12ல் அப்போஸ்தலர் அதே வாசகர்களுக்கு,* ***உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், இருங்கள்*** *என்று கூறினார். வலியுறுத்தலில் உள்ள மாற்றத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டியுள்ளது? 3:13ல் இருந்து 4:16வரையில் பேதுருவின் சிந்தனை ஓட்டத்தைப் பின்பற்ற மேற்கொள்ளப்படும் நல்ல விசுவாச முயற்சியானது, 3:13, 14 மற்றும் 4:12-16 ஆகியவற்றிற்கிடையே உள்ள மன இறுக்கமானது முதலில் தோன்றுவது போன்று அவ்வளவு பெரிதாக இருப்பதில்லை என்பதைச் செயல்விளக்கப்படுத்தும்.*

3:9ல் பேதுரு தமது வாசகர்களை ஒருக்காலும் "தீமைக்குத் தீமை செய்யாமல்" தேவபக்தியுடன் வாழும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் தமது வாசகர்களின் பதில் செயலை முன்னெதிர் நோக்கியிருந்தார். தேவபக்தியுள்ள வாழ்விற்கு மறுசெயலாக அவர்கள் புறதெய்வ வணக்க சமூகத்தில் இருந்து துக்கத்தை மாத்திரமே பெற்றனர். சிலவேளைகளில் அது அப்படி நடக்கலாம் என்று அப்போஸ்தலர் ஒப்புக்கொண்டார், ஆனால் அது சாதாரண எதிர்பார்ப்பாக இருக்கவில்லை. பொதுவாக புறதெய்வ வணக்கம் செய்யும் அயலகத்தவர்கள், இரக்கத்தையும், தனிப்பட்ட நேர்மையையும் சுயகட்டுப்பாட்டையும் மதிப்பார்கள். இருப்பினும், கிறிஸ்தவர்கள் நடக்கத் தேர்ந்துகொண்ட தேவபக்தியுள்ள பாதைக்குப் புறதெய்வ வணக்கத்தாரின் எதிர்ப்பு இருக்கும். கிறிஸ்தவர்கள் தங்கள் பழைய கிறிஸ்தவமற்ற வாழ்வின் குணமான அந்த துன்மார்க்க உளைக்குத் தங்கள் அயலகத்தவர்களுடன் திரும்பாமல் இருக்கும்போது, அவர்கள்மீது புறதெய்வ வணக்கத்தார் வெறுப்புக் கொள்வார்கள் (4:4). பேதுருவின் வாசகர்கள் தழுவிக்கொண்ட பரிசுத்த வாழ்வானது புறதெய்வ வணக்கத்தவரின் துன்மார்க்க உளையைக் குற்றப்படுத்துவதாக இருக்கும் என்பதைப் பேதுரு உணர்ந்தறிந்தார். அவர்களைச் சிலர் வெறுத்து தூஷிப்பார்கள் என்பதே விளைவாக இருக்கும்.

ஒழுக்கரீதியாக நேர்மறையான வாழ்வைத் தழுவிக் கொண்டதைத் தவிர வேறு எதுவும் அதிகமாகச் செய்யாதிருந்தும், கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த சோதனைகளின் காரணம் பற்றி பேதுருவைக்

காட்டிலும் யோவான் அதிகம் வெளிப்படையாக விளக்கம் அளித்தார். காயீன் கொலைசெய்ததைப் பற்றி யோவான் "அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே. என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்." என்று கூறினார் (1 யோவான் 3:12ஆ, 13). இவையாவும் உண்மையாயிருக்கும் நிலையில், கிறிஸ்தவர்கள் தங்களைக் கர்த்தர் அழைத்துள்ள ஒழுக்கக் கொள்கைகளைப் பின்பற்றியதற்காகச் சுய பச்சாதாபப்படும்படிக்கோ அல்லது சமரசம் செய்துகொள்ளும்படிக்கோ சோதிக்கப்படலாம். இவ்விரண்டையுமே பேதுரு அனுமதிக்க மாட்டார். அதனால்தான் அவர் 1 பேதுரு 3:13, 14ல் எழுதியது போன்று இங்கு எழுதினார்.

சாதாரணமாக கிறிஸ்தவர்கள், கனத்திற்குரிய வாழ்வை வாழ்வதற்காகத் துன்புற மாட்டார்கள். கிறிஸ்தவ நடக்கையானது இந்த உலகத்தாரைக் குற்றப்படுத்துவதாக இருந்தாலும் கூட மேற்கூறிய விஷயம் உண்மையானதாக உள்ளது. 3:13, 14ல் உரைக்கப்பட்ட கற்பிதமான சூழ்நிலைக்கு நேரெதிரான வகையில், 4:12ல் அப்போஸ்தலர் தமது வாசகர்களால் கண்டுணரப்பட்டிருந்த கடினமான உண்மை நிலையை நேருக்கு நேர் எதிர்கொண்டார். 2:11ல் அவர் செய்திருந்தது போன்றே இங்கும் அவர் பாசமிக்க சொற்றொடரான **பிரியமானவர்களே** (இது *agapētos* என்பதிலிருந்து வருகிறது) என்பதைக் கொண்டு இப்பகுதியைத் தொடங்கினார். சில நிகழ்வுகளில் கிறிஸ்தவர்கள் சரியானதைச் செய்தமைக்காகத் துன்புற வேண்டும் என்பதை அவர் ஒத்துக்கொண்டார், ஆனால் அது அவர்களின் விசுவாசத்திற்கு அறைகூவல் விடுக்கும் சந்தர்ப்பமாகக் கூடாது. "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே" (4:4) அவர்களின் அயலகத்தவர்கள் ஆச்சரியப்படுதலை அறிந்த நிலையில், அவர்கள் தங்கள்மீது வந்த "பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து" திகைப்படையக் கூடாது.

பேதுருவின் வாசகர்களுடைய உபத்திரவம் பற்றிய அவரது சித்தரிப்பிற்கும், இரண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்திருந்த பிளீனி என்ற ரோமானிய அலுவலரின் பதிவேட்டிற்கும் இடையில் ஆர்வத்திற்குரிய ஒற்றுமைகள் உள்ளன. இவர் வழக்கமாக இளைய பிளீனி என்று குறிப்பிடப்பட்டார், இது அவரது சிற்றப்பாவும் அவரது சமகால புவியியல் வல்லுனருமான மூத்த பிளீனி என்பவரில் இருந்து இவரை வித்தியாசப்படுத்திற்று. பித்தினியா என்ற ரோம ஆட்சிக்கு உட்பட்ட பகுதிக்கு, பேரரசர் ட்ரேஜன் என்பவரால், இளைய பிளீனி அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார், அங்கு சென்று அவர் அந்த நகரங்களில் நிதிநிலைகளையும் உள்விவகாரங்களையும் முறைப்படுத்த வேண்டியிருந்தது, பிளீனி அவர்கள் ஆளுநர் என்ற வகையில் தமது கடமைகளைச் செயல்படுத்திக் கொண்டிருந்தபோது, தாம் சந்தித்த அறைகூவல்களை விவரித்தும் அறிவுரை வேண்டியும் பேரரசர் ட்ரேஜனுக்கு பல கடிதங்கள் எழுதினார். அவரது கடிதங்கள் ஒன்றில் அவர், கிறிஸ்தவ அச்சுறுத்தல் என்ற வகையில் தாம் கண்டவற்றை விவரித்தார்.[2]

புறதெய்வ வணக்கக் கோவில்கள் கவனிக்கப்படாமலும் அடிக்கடி பயன்படுத்தப் படாமலும் இருந்த சூழ்நிலையைப் பிளீனி எதிர்கொண்டார்,

புறதெய்வ வணக்கத்தவர்களில் மிகப்பலர் கிறிஸ்துவினிடமாய் திரும்பி இருந்ததால் அந்த புண்ணியத்தலங்கள் பழுதடைந்து வீழ்ந்திருந்தன. கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடுவதைக் தாம் தடுத்திருந்ததாக ஆளுநர் அவர்கள் ட்ரேஜனுக்குக் கூறினார். அப்போது புறதெய்வங்களின் கோவில்களில் மறுபடியும் அடிக்கடி மக்கள் கூடுவதைக் கண்டு அவர் ஊக்குவிக்கப்பட்டார். இருப்பினும், குறிப்பிட்ட குற்றம் எதையும் கிறிஸ்தவர்கள் செய்தனர் என்று தாம் கண்டறிய இயலாததால், அவருக்கு பேரரசரிடம் இருந்து அறிவுரை தேவைப்பட்டது. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொள்ளுதல் என்பது தன்னிலேயே போதுமான குற்றமாயிருந்ததா? ஒருவர் கிறிஸ்தவராக இருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டபோது, அவர் குற்றப்படுத்தப்பட்டவரைத் தமக்காகப் பேசும்படி கேட்டுக்கொண்டார். அவர் கிறிஸ்தவராக இருப்பதை மறுத்தால் அல்லது தாம் கடந்த காலத்தில் கிறிஸ்தவராக இருந்ததாகவும் இப்போது அப்படியில்லை என்றும் கூறினால், அவர் செசார் ராயனை வழிபடும்படி பிளீனி கேட்டுக்கொண்டார், அவ்வாறு செய்தவுடன் அவர் விடுதலை செய்யப்படுவார். குற்றம் சாட்டப்பட்டவர் தாம் ஒரு கிறிஸ்தவராக இருப்பதாக அறிக்கை செய்தால் பிளீனி தமது கேள்வியை மூன்று முறை திரும்பத் திரும்பக் கேட்பார் - குற்றம் சாட்டப்பட்டவர் மறுப்பு எதுவும் தெரிவிக்காதிருந்தால், அவரைத் தூக்கிலிடும்படி ஆளுநர் ஆணையிடுவார்.

பிளீனியின் கடிதம் 1 பேதுரு நிருபம் எழுதப்பட்டு வெறும் ஐம்பது ஆண்டுகள் பிற்பாடு எழுதப்பட்டதாகத் தேதி இடப்பட்டுள்ளது. மேலும் பேதுருவின் நிருபத்தினுடைய முதல் வாசகர்கள் வாழ்ந்திருந்த அதே ம ாகாணப்பகுதிகள் ஒன்றில் இருந்து எழுதப்பட்டிருந்தது. ஆளுநரின் கடிதம் கேள்விகளை எழுப்பப் கருத்துக் கொடுக்கிறது. மற்ற ரோம ஆளுநர்கள் அங்கிருந்தனரா? அல்லது பிளீனியைப் போன்றே அதே நடவடிக்கைகளை உள்ளூர் நகர அலுவலர்கள் மேற்கொண்டிருந்தனரா? எந்த வேளையில் கிறிஸ்தவமானது குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக ஆளும் அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டது? பிளீனி விவரித்தது போன்று அவ்வளவு கடுமை யான அலுவர்களின் துன்புறுத்துதல் நடந்த ஒரு சூழ்நிலையைப் பேதுரு குறிப்பிட்டிருக்கச் சாத்தியக்கூறும் இல்லாதிருக்கையில், ஆளுநரின் கடிதம், புறதெய்வ வணக்க சமூகமானது கிறிஸ்தவர்களை மதிக்க வந்த வழியைப் பற்றி, ஆர்வத்திற்கு உரிய ஒரு உட்கண்ணோக்கை நமக்குத் தருகிறது. அவர்கள் நிலைநாட்டப்பட்டிருந்த மதங்களுக்கு அந்நியராக, அவற்றைத் தகர்ப்பவர்களாக மற்றும் ஒரு அச்சுறுத்தலாக இருந்தனர். அவர்களின் வழிகள் ஒதுங்கி நிற்கும் போக்குள்ளவையாகவும் குற்றப்படுத்துபவையாகவும் இருந்தன. இந்த புதிய மார்க்கம் அல்லது புறதெய்வ வணக்க அலுவர்கள் கண்ணோக்கியபடி இந்த மூடநம்பிக்கை பொருத்தமாகவில்லை.

பேதுருவின் வாசகர்களால் சந்திக்கப்பட்ட "பற்றியெரிகிற அக்கினி" என்பது ஒன்றுக்கு மேற்பட்ட முன்னணியில் இருந்து வந்திருக்க வேண்டும் என்று பிளீனியின் கடிதம் கருத்துத் தெரிவிக்கிறது. ஒருபுறத்தில், அது சபையுடன் மங்கலான பழக்கம் மாத்திரமே வைத்துக் கொண்டிருந்த உள்ளூர் மக்களினால் சுட்டிக்காட்டப்பட்டமையும் அலுவலகரீதியற்ற சகிக்காத தன்மையையும் உள்ளடக்கி இருக்க வாய்ப்பு இருந்தது. இதற்கு மறுபுறத்தில், அலுவலகத் துறைகளில் இருந்து அடக்கு முறையும் இதில்

உள்ளடங்கி இருக்கலாம். அது கூறப்பட்ட நிலையில், கிறிஸ்தவர்களைக் குறித்து அலுவலக ரீதியான ரோமானியக் கொள்கை எதுவும், குறைந்தபட்சம் இந்த முந்திய தேதிக்காலத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை. சந்தேகத்திற்குரிய கிறிஸ்தவர்களை செசார் ராயனின் சிலைக்கு முன்பாக வந்து பலி செலுத்தும்படி பிளீனி கேட்டுக்கொண்டபோது, அவர் தமக்கு முன்னிருந்தவர்களின் உதாரணத்தைப் பின்பற்றி இருக்கலாம், ஆனால் அவர் இந்த நடைமுறையைத் தொடங்கியிருக்கவும் சாத்தியம் உள்ளது.

பேதுரு தமது வாசகர்களின் உபத்திரவங்களை 1:6-9ல் மேற்கொண்டு வந்தபோது, அவர்கள் "(தங்களின்) விசுவாசம் சோதிக்கப்படுவதற்காக" துன்பங்களை அனுபவித்திருந்தனர் என்று கூறினார். இவ்விடத்திலும் கருத்து அதேபோன்றே உள்ளது. அப்போஸ்தவரின் வாசகர்கள் சந்தித்த "பற்றி எரிகிற அக்கினி" அவர்களை **சோதிக்கும்படி** இருந்தது என்று அவர் கூறினார். அவர்களுக்குத் துன்பங்களைத் தேவன் எதேச்சையாக அனுப்பவில்லை. மாறாக விசுவாசிகள் முன்பு இருந்ததைக் காட்டிலும், விசுவாசத்தில் அதிக திடன் கொண்ட கிறிஸ்தவர்களாவும் தாங்கள் தேர்ந்துகொண்ட வாழ்விற்கு அதிகம் ஒப்புக்கொடுத்தல் உள்ளவர்களாகவும் ஆகும்படிக்கே சோதனைகள் வர தேவன் அனுமதித்தார். அவ்வகையில்தான் அது அவர்களை **"சோதிக்கும்படி"** இருந்தது. அவர்கள் சோதனையின் மூலம் சோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு வெளிவந்தனர். பேதுருவின் வாசகர்கள் தங்கள் சோதனைகளைப் பின்வரும் இருகாரணங்களினிமித்தம் **புதுமையென்று** கருதக்கூடாதிருந்தது: (1) அவர்கள் வாழ்வின் நற்தன்மையானது புறதெய்வ வணக்கத்தவர்களின் கவனமற்ற வாழ்விற்காக அவர்களைக் குற்றப்படுத்துவதாக இருந்தது. (2) அவர்களின் விசுவாசம் சோதிக்கப்பட்டு, சகலமும் பலம்பொருந்தியதாகும்படிக்கு சோதனைகளைத் தேவன் அனுமதித்தார்.

வசனம் 13. இயேசு வாழ்ந்த வாழ்வைத் தழுவிக்கொள்ளுதல் என்பது துன்புறுதலை இணைவுபடுத்தி இருக்கும் என்பது கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்கும் ஒருவிஷயம்தான். இயேசு, **"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:11). பவுல், "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்"** என்று கூறினார் (கொலோசெயர் 1:24). மேய்ப்புப்பணியில் அவர் வகைப்பாடு கொண்டுள்ளார்: **"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்"** (2 தீமோத்தேயு 3:12). தேவனுக்குப் பிரியமான வாழ்வை வாழ்வதை இயேசு தேர்ந்து கொண்டதால், தேவபக்தியற்ற மக்களிடம் இருந்து வந்த துன்பத்தை இயேசு அனுபவித்தார் என்றால், அவரைப் பின்பற்றுபவர்கள் அதேபோன்று துன்புறுதலை எதிர்பாராது இருத்தல் அரிது. "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப் படுத்துவார்கள் ..." (யோவான் 15:20). துன்புறுதல் சந்தோஷத்திற்கு வலுக்கூட்டுகிறது

என்று பேதுரு உரிமைகோரினார், அது சந்தோஷத்தை ஒருக்காலும் குறைப்பதில்லை. எனவே பேதுரு **அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள் என்று** எழுதியதில் வியப்பு எதுவும் வருவதில்லை.

நடபடிகள் 1:7ல் உள்ளபடி, பவுலின் வாசகர்கள் கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவங்கள், அவர்கள் கிறிஸ்துவுக்குப் பங்காளிகளாக இருந்தனர் என்பதற்கு உத்தரவாதமாக இருந்ததாக அவர்களுக்குப் பவுல் நினைவூட்டினார். அவரோடு பாடுபடுதல் என்பது, **கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக** வகை ஏற்படும் என்பதற்கு ஒரு உறுதிப்பாடாக இருந்தது. இங்கு அப்போஸ்தலர் "களிகூர்ந்து" "மகிழும்படியாக" என்று இருவிதமாக அவ்வார்த்தையைப் பயன்படுத்தினார், அப்போது **"கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக"** இருக்கும் என்று அவர் கூறினார். இருப்பினும் இந்த யுகத்தில் விசுவாசி அனுபவிக்கும் சந்தோஷம், கர்த்தர் வெளிப்படும்போது அனுபவிக்க இருக்கும் சந்தோஷத்துடன் ஒப்பிடப்படுதல் மிகவும் அரிதாகும். பேதுரு வினைச்சொற்களைக் குவித்தார். கர்த்தர் மறுபடியும் வரும்போது, சந்தோஷம் என்பது ஏராளமான சந்தோஷமாக - **மகிழும்படியாக** இருக்கும். இங்கு மாத்திரம் அல்ல, ஆனால் மத்தேயு 5:12 லும் வெளிப்படுத்தின விசேஷம் 19:7 லும் **"களிகூர்ந்து"** (*chairō*) மற்றும் **"மகிழும்படியாக"** (*agalliaō*) என்ற வினைச்சொற்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. **"மகிழும்படியாக"** என்பது "சந்தோஷமாயிருத்தல்" அல்லது "மிகவும் மகிழ்வடைதல்" என்றும் கூட மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சந்தோஷம் என்பது பேதுரு தமது வாசகர்கள் அனுபவிக்க வேண்டும் என்று விரும்பிய ஒரே உணர்வாக மிகவும் அரிதாக இருந்தது. வெற்றியும் கூட அங்கு இருந்தது. உபத்திரவத்தில் இயேசு வெற்றி கொண்டது போல, விசுவாசியும் வெற்றிகொள்ளுவார். ஏராளமான சந்தோஷம் என்பது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டபோது கிடைத்த பேரம்பேச இயலாத வெற்றியின் உற்பத்திப் பொருளாக உள்ளது, தற்கால யுகத்தில் உபத்திரவத்தில் உணர்ந்தறியப்படும் சந்தோஷமாக இருந்தாலும் அது மகிமையின் முன்சுவையாக உள்ளது. கிறிஸ்தவர், பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் மீது வெற்றி பெற்ற சந்தோஷத்தில் கிறிஸ்துவுடன் ஏற்கனவே பங்காளியாக இருக்கிறார், இருப்பினும், இன்னும் வந்திராத அதிகமான சில விஷயங்கள் உணர்ந்தறியப்பட வேண்டியவையாக உள்ளன. விசுவாசிகள், "அவருடைய மகிமை வெளிப்படுதலின் எதிர்பார்ப்பிலும், அவர்களின் மகிழ்ச்சியின் உச்சகட்ட முடிவிலும் வாழ்கிறார்கள்". பவுல் **"... கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்"** என்று எழுதியபோது, அவரது சிந்தனை பேதுருவின் சிந்தனையில் இருந்து தூரத்தில் நீக்கிவைக்கப்படவில்லை (ரோமர் 8:17).

வசனம் 14. உபத்திரவப்படுதல் என்பது அதினிமித்தமாகவே ஒரு நெறிமுறையாக உள்ளது என்று சில கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் போதித்துள்ளன. துன்புறுதலினாலோ அல்லது சந்தோஷமான விஷயங்களை மறுத்தலினாலேயோ ஒருவர் அதனிமித்தமாகத் தமது பரிசுத்த தன்மை

யை உயர்த்திக்கொள்ளலாம் என்பதற்கான குறிப்பு எதையும் பேதுரு தரவில்லை. ஒருவர் கிறிஸ்துவை அறிந்து, இவ்வாறு கனத்திற்குரிய மற்றும் நேர்மையான வாழ்வை வாழும்போது, அவர் **கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால்** அவர் சந்தோஷப்படலாம். இந்த உலகத்தின் ஓட்டத்தைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்தவர்களைப் பற்றிப் பொல்லாத விஷயங்களைப் பேசுகிறபோது, தேவனுடைய மக்கள்மீது சாட்டத் தகுதியற்ற குற்றச்சாட்டுகளை அவர்கள்மீது கூறுகிறபோது, அவர்கள் கிறிஸ்தவர்களின் கர்த்தரை நிந்திக்கையில் கிறிஸ்தவர்களை நிந்திக்கும்போது, இவ்விதமான விஷயங்களைக் கிறிஸ்தவர்கள் சகிக்கும்போது, அங்கு பாக்கியம் உள்ளது.

"கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்" என்ற சொற்றொடர் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. பழங்கால மக்களுக்கு, ஒரு நாமம் என்பது வசதியான பட்டி மற்றும் பழக்கப்பட்டவர் மீது தொங்குவது என்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாக இருந்தது. இன்னொருவர் நாமத்தில் எந்தச்செயலையும் செய்தல் என்பது, அந்த நாமம் குறிக்கப்பட்ட நபரை அந்த நடவடிக்கைக்குள் கொண்டுவருதலாக இருந்தது. யாரேனும் ஒருவருடைய நாமத்தைப் பயன்படுத்தி சாபம் ஒன்றைக் கூறுதல் என்பது, அந்த சாபம் எழுப்பிய விளைவைக் கொண்டுவருதலுக்கு வல்லமையை வலுவாய் வெளியிடுதலாக இருந்தது என்று அவர்கள் நம்பினர். நாமங்கள் ஒரு உருவத்தை எழுப்புதலைக் காட்டிலும் அதிகமானவற்றைச் செய்தன; ஒரு நாமம் என்பது சில மாயாவாத வழியில் ஒருவரின் சொந்த நபர்த்துவத்தின் விரிவாக்கமாக இருந்தது. இந்த உலகக் கண்ணோட்டத்தின்படி நினைத்தால், "கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால்" என்பது கிறிஸ்துவுக்காக நிந்திக்கப்படுதலாக இருந்தது.

செல்வந்தர்களைப் பற்றி, "உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்?" என்று கேள்வி எழுப்பியபோது பேதுருவைப் போன்று யாக்கோபுவும், நாமத்துடன் முக்கியத்துவத்தைப் பற்றி விவரித்தார் (யாக்கோபு 2:7). வேதாகம எழுத்தாளர்கள் ஒரு நாமத்துடன் அவர்கள் இணைத்த முக்கியத்துவத்தில் தனிமையாயிருப்பதில்லை. இளைய பிளீனி, கிறிஸ்தவர்கள் செய்திருந்த குற்றங்களுக்காக அவர்கள் குற்றம் சாட்டப்பட வேண்டுமா, அல்லது அவர்கள் அந்த நாமத்தைத் தரித்திருந்ததே போதிய அளவு குற்றமாக இருந்ததா என்று அறிய விரும்பினார் (4:12ன் மீதான் விளக்கங்களைக் காணவும்). பேதுரு தமது வாசகர்களுக்குப் பழக்கமான, புறதெய்வ வணக்கக்காரர்கள், அந்த நாமத்தை அவர்கள் (கிறிஸ்தவர்கள்) சூடிக்கொண்டிருந்த விஷயத்தினாலேயே குற்றப் படுத்தப்பட்டதாக உணர்ந்ததாகப் பேதுரு மறைமுகமாகக் குறிப்பிட்டார். இப்படிப்பட்ட மக்களைப் பற்றி முன்னதாக அவர், "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" என்று கூறியிருந்தார் (4:5). தேவபக்தியுள்ள விசுவாசிகள் "கிறிஸ்துவின் நாமத்தை" சூடிக்கொண்டதற்காக நிந்திக்கப்படும்போது, அதில் ஆசீர்வாதம்/பாக்கியம் இருந்தது.

4:14ன் கடைசிப்பகுதி, ஆங்கில மொழிபெயர்ப்பில் வாசகர்களுக்கு மென்மையானதாக இருந்தாலும், கிரேக்க மொழியில் இது அழகற்ற சொற்றொடராக உள்ளது. நேரடி அர்த்தத்தில் இது, "மகிமையும் ஆவியானவரும் உங்கள்மேல் தங்கியிருப்பதால்" என்று கூறுகிறது. இங்கு

“the” (*to*) என்பது நடுநிலை ஒருமைச் சுட்டுச் சொல்லாக உள்ளது. இங்கு “மகிமையின் விஷயமும் தேவனுடைய ஆவியானவரும்” என்பது கருத்தாக இருக்கலாம். மற்ற மொழிபெயர்ப்புகளுடன் [மற்றும் தமிழ்] வேதாகமமும், சுட்டுச்சொல் திரும்ப வருதலைப் புறக்கணித்தல் மூலமாகவும் **தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்** என்று தரவழைத்தல் மூலமாகவும் இலக்கணரீதியான பிரச்சனையைத் தீர்த்து வைக்கிறது. முந்திய எழுத்தாளர் ஒருவரால் ஒருவேளை இந்தக் கூடுதல் சுட்டுச்சொல் சேர்க்கப்பட்டது எனலாம். அது பெரும்பாலான மொழிபெயர்ப்புகளின் யூகமாக உள்ளது, ஆனால் கையெழுத்துப்பிரதிகளின் ஏராளமான ஆதாரம் இவ்விரு சுட்டுச்சொற்கள் இங்கிருப்பதை ஆதரிக்கிறது.

“தேவனுடைய மகிமையும் அவரது ஆவியானவரும் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்” என்று இந்த வார்த்தைகள் தரவழைக்கப்பட வேண்டும் என்று எட்வர்டு கோர்டன் செல்வின் அவர்கள் வாதிட்டுள்ளார்.[3] அவர், இந்தச் சொற்றொடரைப் பேதுரு யூத சமயப்பற்றின்மீது வரைந்தார் என்ற கருத்தைப் பராமரித்தார். பேதுருவின் காலத்திற்கு முன்னர் இருந்த ரபீக்கள், அசாதாரணப் பரிசுத்த விஷயங்களில் தேவனுடைய தெய்வீகப் பிரச்சன்னத்தைக் குறிப்பதற்கு *Shekinah* என்ற வார்த்தையை உருவாக்கி இருந்தனர். மோசே தமது கரங்களில் நியாயப்பிரமாணம் எழுதப்பட்ட கற்பலகையைத் தூக்கிக்கொண்டு, சீனாய் மலையில் இருந்து இறங்கி இஸ்ரவேல் மக்கள் பாளையம் இருந்த இடத்திற்குத் திரும்பி வந்தபோது, அவரைச் சுற்றிலும் தேவனுடைய *Shekinah* சூழ்ந்திருந்ததாகக் கூறப்பட்டது (காண்க யாத்திராகமம் 34:29, 30). பேதுருவின் வாசகர்கள்மீது தேவனுடைய சொந்த மகிமையுள்ள பிரசன்னமும் தேவனுடைய ஆவியானவரும் இருந்தனர் என்று பேதுரு கூறினார் என்பதாக செல்வின் விவாதித்தார்.

இதற்கு மறுபுறத்தில் மிக்காயேல்ஸ் அவர்கள், கிறிஸ்துவுக்குப் பொதுவாக நடைமுறைப்படுத்தப்படும் ஏசாயா 11:1, 2 வசனங்களில் இருந்து மொழிநடையைப் பேதுரு இங்கு கிறிஸ்தவர்களுக்குத் தழுவியமைத்தார் என்ற கருத்தைப் பராமரித்தார்.[4] செல்வினின் விளக்கத்திற்கு, ரபீத்துவ விளக்கப்பள்ளிகளில் பேதுரு நேர்த்தியாக இணக்கப்பட்டிருத்தல் தேவைப்படுகிறது, ஏனெனில் அங்குதான் சிறிதளவு இதற்கு ஆதரவு உள்ளது. மிகாயேலின் விளக்கத்திற்கு, ஏசாயா 11:1, 2ல் மேற்கொள்ளும் கிறிஸ்தவ விளக்கத்தைப் பேதுரு கணிசமான அளவு மாற்றியிருத்தல் தேவைப்படுகிறது, இது உய்த்துணரக்கூடிய மிகச்சிறந்த தீர்வாக உள்ளது. பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகளின் நடைமுறையைப் பின்பற்றுதல் என்பதே இந்தப் பிரச்சனைக்கு அதிக திருப்திகரமான தீர்வாக உள்ளது. இந்த வாசிப்பில், வசனப்பகுதிக்குள் வந்த இரண்டாவது சுட்டுச்சொல் தொடக்ககாலப் பிரதி எடுப்பவர் ஒருவரால் தவறாய் உட்செருகப்பட்டதாக உள்ளது.

கிறிஸ்துவினிமித்தம் ஒரு விசுவாசி கடிந்துகொள்ளப்படும்போது அல்லது நிந்திக்கப்படும்போது, அவர்மீது ஏதாவது ஒருவகையில் அல்லது விஷயங்களின் சாதாரண நிலைக்குச் சற்று அளவு அப்பால், தேவனிடத்தில் இருந்து தயவு அல்லது ஆசீர்வாதம் வந்திறங்கும் என்று பேதுரு கூறுவதாகக் காணப்படுகிறது. ஒருவேளை அவர், கிறிஸ்தவரின் ஆவிக்குரிய

ஆதாரவளங்களுக்கான தேவை வளருகையில், அந்தக் தேவைகளை அளிப்பதற்குத் தேவன் பிரசன்னமாகிறார் என்று அர்த்தப்படுத்தி இருக்கலாம். தேவன் தமது மக்களிடம் கீழ்ப்படிதலுக்கான கட்டளை இடுதல் மட்டுமின்றி, அவர்கள் கீழ்ப்படிதலுடன் இருப்பதற்கு வல்லமையையும் அவர்களுக்கு அவர் அளிக்கிறார். மனிதருடைய ஆவி மற்றும் தேவனுடைய ஆவி ஆகியவற்றிற்கு இடையில் இருக்கும் உள்விளையாட்டின் மனோதத்துவம் விளக்கத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளது, ஆனால் வாக்குத்தத்தம் தெளிவாக உள்ளது. அதே வேளையில், எந்தக் கிறிஸ்தவரும் தம்மை, தமது சொந்த உருவாக்கமான பாவத்தின் வலையிலிருந்து தேவனுடைய கிருபை சிக்கறுத்துக் காக்கும் என்று தவறாக யூகித்துவிடக்கூடாது. மனித பொறுப்பும் தேர்வும், தேவனுடைய ஆவியுடன் விசுவாசிக்குள் எவ்வாறு இடையிடுகிறது என்பது தேவனுடைய ஞானத்திற்கு விடப்பட்டுள்ள விஷயங்களில் இன்னொன்றாக உள்ளது.

வசனம் 15. இந்த நிருபம் முழுவதிலும் பேதுரு, தமது வாசகர்கள், பொல்லாங்கான குற்றச்சாட்டு எதுவும் தங்களுக்கு எதிராகச் சாட்டப்பட்டு மெய்ப்பிக்கப்பட்டுவிடாதபடிக்கு அவ்வளவு முன்னுதாரணமான வாழ்வை வாழ வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார் (2:12, 20; 3:17), மனித பலவீனம் தனது நிலையில், அவமானப்படுத்தப்படும்போது அல்லது புறங்கூறப்படும்போது, அதே வகையில், திருப்பித்தாக்குதலையே இயல்பாகக் கொண்டுள்ளது. முன்னதாகப் பேதுரு, இயேசுவின் உதாரணத்தைச் சுட்டிக்காண்பித்திருந்தார். அவர் வையப்பட்டபோது, *“பதில் வையாமலும், … தம்மை ஒப்புவித்தார்” (2:23).* மேலும் கிறிஸ்துவுக்கென்று மனமாறிய ஒவ்வொருவரும், பரிசுத்தத்திற்கான தமது உறுதிப்பாட்டை விரும்பத்தக்க அளவு தீவிரமானதாக எடுத்துக்கொள்வார் என்பது சாத்தியமற்றதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் குற்றமறியாது இருக்கையிலேயே துன்புறும்போது, அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தைச் சொந்தமாக்கிக் கொண்டதற்காகவும் கர்த்தருடைய உரிமை வேண்டு கோள்களின்படி வாழ்ந்திருந்தமைக்காவும் துன்புறும்போது, அங்கு மகிமை உள்ளது. இருப்பினும், கிறிஸ்தவர்கள் என்று அறிவித்துக்கொண்டு, கிறிஸ்துவுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு, அவர்கள் தங்கள் பொல்லாத நடக்கையை நியாயப்படுத்துதல் என்பது வெட்கக் கேடானதாக உள்ளது. “நீங்கள் உலகத்திற்கு முன்வைக்கும் உங்கள் உதாரணம் பற்றி உணர்வுள்ளவர்களாக இருங்கள்” என்றே பேதுருவின் வார்த்தைகள் மறைமுகமாய் உணர்த்துகின்றன. “நீங்கள் தவறு செய்யும்போது, உங்கள் உதாரணம் விசுவாசிகளின் முழு அமைப்பையும், மற்றும் அவ்விஷயத்தில் கர்த்தரையேகூட பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்பதை நினைவில் வையுங்கள்.”

பேதுரு திட்டவட்டமாகக் கூறினார். கிறிஸ்தவர்கள் குற்றப்படாதிருக்க வேண்டிய நான்கு விஷயங்களின் பட்டியலை அவர் இங்கு அளித்தார். இந்தப்பட்டியலில் உள்ளடங்கியுள்ள செயல்களின் விரிவளவு குழப்புவதாக உள்ளது. **உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது,** என்று அப்போஸ்தலர் எழுதினார், இங்கு கூறப்பட்டுள்ள, கொலை மற்றும் திருட்டு என்ற பாவங்கள், இவற்றைக் குறிப்பிடுதல் அவசியம் என்று அரிதாகவே காணப்படுகிற, வெறுக்கத்தக்க பாவங்களாக உள்ளன.

கிறிஸ்தவர்களிலேயே மிகவும் கவனக்குறைவாக இருப்பவர் எவராவது கூட, கொலையையும் திருட்டையும் நியாயப்படுத்த முயற்சி செய்வாரா? **பொல்லாங்கு செய்தவனாயாவது** என்ற மூன்றாவது விஷயம் சிறிதளவே அர்த்தத்தை தருகிற அளவுக்கு மிகவும் பொதுவானதாக உள்ளது. நான்காவது விஷயமான **அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது** என்பது பேதுருவினால் சொல்லுருவாக்கம் செய்யப்பட்டதாக இருக்கலாம். இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்திற்கு முந்திய கிரேக்க இலக்கியங்கள் எதிலும் இது காணப்படுவதில்லை. பேதுரு இந்த நிருபத்தை எழுதி இரண்டு நூண்றாண்டுகளுக்குப் பின்பு, இவ்வார்த்தை "அநாவசியமாகத் தலையிடுபவர்" என்பதை அர்த்தப்படுத்துவதற்கு சில முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இங்கு பேதுரு அர்த்தப்படுத்தியது என்ன என்பது உறுதியான வெளிப்பாட்டிற்குத் தொலைவில் உள்ளது.

இது சிறிதளவே முக்கியத்துவம் கொண்டிருக்கலாம், ஆனால் [மூலமொழி வேதாகமத்தின்படி] பேதுரு "as" *(hōs)* என்ற வார்த்தையைக் கடைசி விஷயத்திற்கு முன்னர் திரும்ப எழுதினார், பிற மொழிபெயர்ப்புகளில் இது பெரும்பாலும் பிரதிபலிப்பதில்லை. ஒருவேளை இது நாகரீகபாணியாக மாத்திரம் உள்ளது எனலாம், ஆனால் "as" என்ற வார்த்தை திரும்ப எழுதப்படுதல் என்பது, பேதுரு தமது வாசகர்கள் இவ்விஷயத்தில் விசேஷித்த கவனம் செலுத்தவேண்டும் என்று விரும்பியதாக அர்த்தப்படலாம். உண்மையில் முதல் மூன்று விஷயங்களின் இயக்க இயல்பு, அவைகள் ஜன்னல் உடைகளாக இருந்தன, இவற்றின் தோழமையில் அவர் கடைசி வார்த்தையைப் பொருத்த விரும்பினார் என்று சுட்டிக்காண்பிக்கலாம். பேதுருவின் வாசகர்களில் யாரும் **"அந்நியகாரியங்களில் தலையிட்டுக்கொண்டவ"**ராக இருக்கக் கூடாது என்பதை அவர்கள் கவனிக்கும்படி அப்போஸ்தலர் விரும்பினார் என்பது உண்மையான விஷயமாக உள்ளது. மற்ற மொழிபெயர்ப்புகளில் "meddler" (NIV) மற்றும் "mischief maker" (NRSV) என்றுள்ளன.

பேதுருவின் நான்காவது வார்த்தையான **"அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது"** என்பது, *allotriepiskopos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. இது இரண்டு கிரேக்கவார்த்தைகளில் இருந்து தரவழைக்கப்பட்ட ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தையின் முதல் பகுதியானது, ஒரு பொருளை யாருக்கேனும் உரியது என்ற வகையில் விவரிக்கும் பெயர் உரிச்சொல் என்ற வகையில் உள்ள *allotrios* என்ற சொல்லில் இருந்து கடன் பெறப்பட்டுள்ளது. மாற்று வகையில் இது, அயல் நாட்டவராக அல்லது விரோதியாகக் கூட இருக்கும் ஒருவரையும் குறிக்கலாம். இவ்வார்த்தையின் இரண்டாவது பகுதியான *episkopos* என்பது, 1 பேதுரு 2:25ல் "கண்காணி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பிலிப்பியர் 1:1; 1 தீமோத்தேயு 3:2 மற்றும் வேறொரு இடம் ஆகியவற்றில் இவ்வார்த்தையை KJV வேதாகமம் "bishop" என்று மொழிபெயர்க்கிறது. NASB மற்றும் NIV ஆகிய வேதாகமங்கள் இதை "*overseer*" என்று தரவழைக்கத் தேர்ந்துகொள்கின்றன. கிரேக்க இலக்கியத்தில் *episkopos* என்பவர், வெற்றிகொண்டவரின் சார்பாகக் கண்காணிக்கும்படி அல்லது வழக்கத்தில் இருந்த அரச கட்டளையை நிறைவேற்றும்படி ஒரு சூழ்நிலைக்குப் பொறுப்பாளராக

நியமிக்கப்பட்ட நபராக இருந்தார். அவர் படையெடுத்தலினால் அல்லது ஒரு பூமி அதிர்ச்சியினால் அழிக்கப்பட்ட ஒரு நகரத்திற்குப் பொறுப்பாளராக வைக்கப்படலாம். அவ்விடத்து அரசுப்பணியையும் நகரத்தின் கட்டுமானங்களை மறுபடியும் கட்டியெழுப்புதலையும் கவனித்தல் என்பது அவரது பொறுப்புப்பணியாக இருக்கும்.

இவ்விரு சொற்றொடர்களையும் இணைத்ததன் மூலம் பேதுரு, தமது வாசகர்கள் தங்கள் சொந்த அலுவல்கள் மீது சிந்தையாயிருக்கும்படி அவர்களுக்குப் புத்தி கூறியிருக்கலாம். ஒருவேளை அவரது வாசகர்கள் அதிகமான வைராக்கியம் உள்ளவர்களாக, தெருமுனைகளிலும் பொது இடங்களிலும் நின்று கொண்டு, தங்களைச் சுற்றிலும் அவர்கள் கண்ட விக்கிரக ஆராதனையையும் ஒழுக்கவீனத்தையும் சபித்திருக்கலாம். "தங்களைத் தாங்களே பொதுஜன ஒழுக்கத்தின் பாதுகாவலர்களாக ... கருதிய கிறிஸ்தவர்களை அவர் அறிந்திருக்கலாம்."[5] இப்படிப்பட்ட நடக்கையானது, புறதெய்வ வணக்கத்தாரின் எதிர்ப்பை நன்கு வலுப்படுத்தியிருக்கும். அது விசுவாசிகளுக்கு அநாவசியமான பாடுகளை விளைவித்திருக்கும். இருப்பினும், *allotriepiskopos* என்ற வார்த்தை **"பொல்லாங்கு செய்தவனாயாவது"** அல்லது **"அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது"** என்ற வார்த்தையுடன் ஒப்பிடும்போது, சார்பளவில் அதிகம் பவமானதாக இருக்கலாம். இவ்வார்த்தை கலகம் செய்பவர், களங்கப்படுத்துபவர் அல்லது புரட்சியாளர் என்று நாம் அழைக்கும் வார்த்தைகளுடன் அதிகம் உறவுபடுகிறது.

பேதுருவும் அவரது வாசகர்களும், மேற்கொள்ளும் அரசு அதிகாரம் பற்றிப் பேரார்வம் குறைந்தவர்களாக இருந்தனர் என்பதற்குக் குறிப்புகள் உள்ளன. 2:13-17ல் அப்போஸ்தலர், தமது வாசகர்கள் அரசு அதிகாரங்களை மதிப்பவர்களாகவும் கீழ்ப்படிபவர்களாகவும் இருக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுதல் அவசியம் என்று உணர்ந்தார்.[6] இது கடமையினால் கட்டுவிக்கப்பட்டிருந்த கிறிஸ்தவர்கள் எப்போதெல்லாம் முடியுமோ அப்போது ரோம அதிகாரத்தை எதிர்த்து நிற்க வேண்டும் என்று அந்தச் சிலர் நினைத்தனர் என்பதற்குக் குறிப்பாக உள்ளதா? மற்றும் 5:13ல் பேதுரு பாபிலோனில் இருந்த "சபையில்" இருந்தும் வாழ்த்துக்களை அனுப்பினார். பாபிலோன் என்பது ரோமாபுரி என்பதாகப் பேதுருவின் வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்த்திருந்தார் என்றால், ரோம உலகம் மற்றும் ரோம அரசு ஆகியவற்றைப் பற்றித் தமது மற்றும் அவர்களது கருத்துக்களைப் பற்றிய குறிப்பிடத்தக்க உரையையும் அவர் ஏற்படுத்தி இருக்க வேண்டும். பேதுருவின் வாசகர்கள் தவிர்க்கும்படி அவர் குறிப்பிட்ட நான்கு செயல்பாடுகளின் சாத்தியக்கூறு பற்றி முழு கவனம் தரப்பட வேண்டும், கடைசி வார்த்தையைக் குறித்துக் குறிப்பான அறிவுறுத்துதல் அவர்களுக்குத் தேவைப்பட்டது. மற்றும், அவர்கள் தாங்கள் எந்த அரசின்கீழ் வாழ்ந்தார்களோ அந்த அரசைக் களங்கப்படுத்தக் கூடாது என்ற அறிவுத்துதலும் அவர்களுக்குத் தேவைப்பட்டது. அந்த அரசாங்கங்கள் அவர்கள் யாவருக்கும் மிக ஆழ்ந்த வகையில் சுவையற்றதாக இருந்தாலும், நியமிக்கப்பட்ட அரசாங்கங்கள் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாகவே உள்ளன.

வசனம் 16. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களைக் குறிப்பிடுவதற்கு **கிறிஸ்தவன்** என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் மூன்று முறைகள்

காணப்படுகிறது. இங்குள்ளதைத் தவிர மற்ற இரு முறைகளும் இது நடபடிகள் புத்தகத்தில் உள்ளது. சிரியாவின் அந்தியோகியாவில் இருந்த சபையானது பெரிதும் புறஜாதி மக்களைக் கொண்ட சபை தனது இளமைப் பருவத்தில் இருந்த போது (கி. பி. சுமார் 45ம் ஆண்டு), **"முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று"** என்று லூக்கா பதிவு செய்தார் (நடபடிகள் 11:26). "வழங்கிற்று" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, ஆங்கிலத்தில் "called" (*chrēmatizō*) என்று உள்ளது, இது "தெய்வீகமாக அழைக்கப்படுதல்" என்று அர்த்தப்படக்கூடும். அங்கு வாழ்ந்த தீர்க்கதரிசிகளில் ஒருவர் மூலமாகத் தேவன் இந்தப் பெயரை வெளிப்படுத்தி இருக்கலாம். பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்பு, அகிரிப்பா அரசருக்கு முன்பாகப் பவுல் தற்காப்பு வாதம் செய்தார். அப்போஸ்தலருடைய கேள்விக்கு, **"நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்"** என்று அகிரிப்பா பதில் கூறினார் (நடபடிகள் 26:28). ஒருவேளை அரசர் ஏளனம ாய்ப் பேசியிருக்கலாம், ஒருவேளை இந்தக் குறிப்பானது ஒரு கேள்விச் சொற்றொடராக்கப்பட்டிருக்கலாம் அல்லது ஒருவேளை இது உண்மைத் தன்மையுடன் பேசப்பட்டிருக்கலாம். அர்த்தம் தெளிவற்றதாக உள்ளது. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதிக்கு முற்பட்ட காலம் வரையிலும், "கிறிஸ்தவர்" என்ற வார்த்தை விசுவாசிகளுக்குப் பொதுவான குறிப்புச்சொல்லாக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது. இக்னேஷியஸ் அவர்கள் தமது கடிதங்களில் பலமுறைகள் இவ்வார்த்தையைப் பயன்படுத்தினார்,[7] மற்றும் Didache என்ற உபதேச நூலில் இவ்வார்த்தை ஒருமுறை காணப்படுகிறது[8] - இவையாவும் பொதுவாக கி. பி. 115க்கு முந்தி எழுதப்பட்டதாகத் தேதியிடப்பட்டுள்ளன. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், டேசிட்டஸ், சுயூட்டோனியஸ் மற்றும் பிளீனி போன்ற கிறிஸ்தவரல்லாத இலத்தீன் எழுத்தாளர்களும் இவ்வார்த்தையைத் தாராளமாகப் பயன்படுத்தினர். "கிறிஸ்தவர்" என்பது தொடக்க நாட்களில் புறதெய்வ வணக்கத்தவர்களால், அவப்பெயர் என்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். எப்படியிருந்தாலும், விசுவாசிகள் தயக்கமின்றி இப்பெயரைத் தழுவிக்கொண்டனர்.

இதில் வெட்கம் ஒன்றுமில்லை, மாறாக ஒருவர் கிறிஸ்தவர் என்ற வகையில் துன்புற வேண்டும் என்ற போது, அதில் ஆசீர்வாதம் உள்ளது. பேதுரு தமது வாசகர்கள், ஒரு மார்க்கத்தை எடுத்துக் கொண்டதிலும், அதை வாழ்வின் வழியாக்கிக் கொண்டதிலும், இடர்ப்பாடான நிலையில் இருந்தனர், அது அவர்கள் சமகாலத்தில் வாழ்ந்தவர்களிடம் அவர்கள் வினோதமானவர்களாகவும் சமூக உறவு அற்றவர்களாகவும் தோன்றும்படி செய்திருந்தது என்பதை அறிந்திருந்தார். பழங்கால மக்களாக இருந்தாலும் சரி, நவீனகால மக்களாக இருந்தாலும் சரி, மார்க்கம் என்பது மக்களின் வாழ்வில் மிகவும் பழமைத்துவமான சக்திகளாக இருந்துள்ளது. புதிய ம ார்க்கத்தைத் தழுவிக்கொள்பவர்கள் சந்தேகம் மற்றும் அவநம்பிக்கைக்கு இலக்காகும் முதன்மை மக்களாக இருக்கின்றனர். சமூகத்தீமைகள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஆகியவையும்கூட அவர்களின் வீட்டுவாற்படிகளில் போடப்பட்டன. ஒருவர் பாடு அனுபவிக்க வேண்டும் என்றால் அது எதி

ர்பார்க்கப்பட வேண்டும் என்று பேதுரு கூறினார். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், தவறு செய்ததாக மற்றவர்கள் எவரும் நியாயமாகக் குற்றம்சாட்ட இயலாதபடிக்கு, நமது வாழ்வை மிகவும் உதாரணத்துவம் உள்ளதாகக் காத்துக்கொள்ள வேண்டும். நமது ஒழுக்கரீதியான வாழ்வில், நமது குடிமைப் பொறுப்புகளில், நமது அரசு அதிகாரிகளுக்கு மதிப்பு அளிப்பதில், நமது குடும்ப வாழ்வில் - நாம் செய்யும் எல்லாவற்றிலும் நாம், பிறர் நம்மை வெறுர்க்க அல்லது தவறாக நடத்தக் காரணம் எதையும் எவருக்கும் விட்டுவிடக் கூடாது. இவையாவற்றையும் நாம் செய்திருக்கும் நிலையில் பாடு அனுபவித்தால் நாம் **வெட்கப்பட வேண்டியதில்லை.**

கிறிஸ்தவர் துன்புற வேண்டி இருக்கும்போது, **அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்** என்பதே அவரது பதில் செயலாக இருக்க வேண்டும். அவரது அறிக்கையும் அவரது நடக்கையும் உலகத்தின் மீது ஒரு செயல்தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதற்குத் துன்புறுதல் ஒரு சாட்சியமாக உள்ளதால் அவர் தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும். இயேசு, **“எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்”** என்று கூறினார் (லூக்கா 6:26). உலகத்தின் நம்பிக்கைகளும் நடத்தையும் உள்ளாகப் பயமுறுத்தும் கொள்கைளின்மீது ஒருவர் தமது வாழ்வை உருவாக்கியிருக்கும்போது, எதிர்ப்பு எதையும் காணக்கூடாது என்று எவரும் எதிர்பார்க்க இயலாது. தன்னில் தானே ஒரு முடிவு என்றவகையில் பாடு அனுபவித்தல் என்பது மதிப்புள்ளதாக இருப்பதில்லை; தேவபக்திக்காகச் சாட்சியாயிருத்தல் என்ற வகையில் பாடு அனுபவித்தல் என்பது “தேவனை மகிமைப்படுத்த” ஒரு வாய்ப்பாக உள்ளது. இது மனிதர் மத்தியில் தேவனுடைய இராஜ்யம் உணர்ந்தறியப்பட்டுள்ளது என்று அர்த்தப்படுகிறது.

4:14ல் பேதுரு, “கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்” நிந்திக்க அல்லது கடிந்து கொள்ளப்படுபவர்கள் பாக்கியவான்கள் என்று உரைத்திருந்தார். அவர் தேவனை மகிமைப்படுத்த வேண்டிய “இந்த நாமம்” என்பது, கிறிஸ்துவின் பெயருக்கு ஒரு குறிப்பாக உள்ளதா அல்லது ஒருவேளை இது தேவனுடைய நாமத்திற்கே ஒரு குறிப்பாக உள்ளதா? சாத்தியக்கூறான வகையில் கையில் மிக நெருக்கமாக உள்ளது “கிறிஸ்தவன்” என்ற நாமமே ஆகும். பேதுருவின் குறிப்பு, கி. பி. 60களின் மத்தியின்போது, விசுவாசிகள் இந்த நாமத்தைத் தழுவத் தொடங்கி மாத்திரம் இருந்தனர் என்று கருத்துத் தெரிவிக்கிறது. இந்தப் புதிய மார்க்கத்தைப் பற்றிக்கொண்டு இதனைப் பின்பற்றியவர்களை முற்றிலும் விரோதத்துடன் கண்ணோக்கிய யூதர்களும் புறதெய்வ வணக்கத்தவர்களும் இருந்தனர். அவர்களுக்கு “கிறிஸ்தவர்” என்ற வார்த்தை, அவிசுவாசத்துடன் தலையைக் குலுக்குதலை அல்லது முகத்தில் கோபம் கொப்பளிக்கக் கண்ணோக்குவதை விளைவித்தது. பேதுருவுக்கு, இது வெட்கப்படக் காரணமாக இருக்கவில்லை. “இந்த நாமத்தில்” விசுவாச அறிக்கைக்காகப் பாடு அனுபவிக்கும்போது அவரும் அவரது வாசகர்களும் தேவனை மகிமைப்படுத்துவார்கள்.

உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு ஆத்துமாவை ஒப்புக்கொடுத்தல் (4:17-19)

[17]நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? [18]நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? [19]ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.

நிகழ்காலம் பாடு அனுபவித்தலைத் தவிர்க்க இயலாதது ஆக்குகிறது; எதிர்காலம் மகிமையை வாக்குத்தத்தம் செய்கிறது. காலத்தின் முடிவு பற்றிய அப்போஸ்தலரின் வேண்டுகோளோ, கிறிஸ்தவத் துன்பங்களுக்கு அவரது சீர்பொருத்தமான பதிலாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் இறுதிநாள் பற்றிய கோட்பாடு, கிறிஸ்தவ வாழ்வின் நிகழ்கால வற்புறுத்துதல்கள் மற்றும் வரவிருக்கும் காலத்தில் உள்ள வாழ்வின் நம்பிக்கை ஆகியவற்றிற்கு உதவுகிறது. பேதுருவுக்கும் அவரது வாசகர்களுக்கும், வரவிருக்கும் காலம் என்பது கோட்பாட்டளவானதாக இருக்கவில்லை. அது ஏற்கனவே இந்த உலகத்தில் தொடங்கி இருந்தது, கர்த்தருடைய வருகை சமீபமாக இருந்தது (4:7).

வசனம் 17. புதிய ஏற்பாட்டில் பரலோக இராஜ்யம் தற்கால யுகத்தில் தொடங்கி வளரும் நிலையில் இருக்கையில் அதைப் பற்றிய உணர்வறிவுடன் விசுவாசிகள் வாழ்ந்தனர், இராஜ்யத்தைப் பற்றிய முழுமையான உணர்ந்தறிதல் விரைவில் அவர்கள் மீது இருக்கும். மற்றும், அக்காலத்தில் தேவனுடைய இஸ்ரவேல் மக்கள் ஆயத்தமாயிருக்கும்படி, மணவாளனுக்காகக் காத்திருக்கும் "கற்புள்ள கன்னிகை" போன்று (2 கொரிந்தியர் 11:2) அவர்களைத் தேவன் நேர்த்தியாக்கிக் கொண்டும் சுத்திகரித்துக் கொண்டும் இருந்தார். **நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது** என்று பேதுரு கூறினார். இந்த யுகத்தில் தேவன், தமது நற்தன்மைக்கும் பரிசுத்தத்திற்கும் சாட்சியாகப் பணி செய்யும்படி, மக்களை அழைத்து உருவாக்குவதில் அக்கறையாக இருக்கிறார் என்று பேதுரு கூறினார். கிறிஸ்தவர்கள் பாடு அனுபவிக்கும்போது, ஒரு கருத்தில் அது, தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் மீது விழுந்துள்ளது என்பதாக இருந்தது. விசுவாசம் மற்றும் தேவபக்தி ஆகியவற்றிக்குப் புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டுடன் இருத்தல் என்பதே, விசுவாச நிறைவுடன் இருப்பதன் விளைவாக இருக்கும்.

ஆங்கில வேதாகமத்தில் "household" ["வீட்டார்"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, கிரேக்க மொழியில் "வீடு" *(oikos)* என்று மாத்திரமே உள்ளது என்பது கவனிக்கத் தக்கதாக உள்ளது. இந்த உருவகமானது தேவனுடைய மக்களை வீட்டார் என்று அல்ல, ஆனால் வீடு என்றே கூறுகிறது. [தமிழ் வேதாகமத்தில் இது "வீட்டிலே" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது], இதில் வேறுபாடு ஒன்றுள்ளது. பேதுரு கிறிஸ்தவர்களைத் தேவனுடைய வீட்டார் என்று அழைத்திருந்தால், அது விசுவாசிகளின் பரஸ்பரம் சார்ந்திருக்கும் தன்மையை, குடும்ப அமைவில்

இருந்து வருகிற இதமான சூழ்நிலையைச் சிந்தைக்குக் கொண்டு வந்திருக்கும். இருப்பினும், பேதுருவின் சிந்தை அவ்விடத்திற்குச் செல்லவில்லை. பேதுரு தாம், 2:5ல் பயன்படுத்தியிருந்த தேவாலய (ஆவிக்கேற்ற மாளிகை என்ற) உருவகத்தைவிட்டு விலகி வரவில்லை. விசுவாசிகள் தேவனுடைய பரிசுத்த ஆலயமாக, தேவனுடைய வீட்டிற்குள் ஒன்றாகக் கட்டப்படுகின்றனர். 1 பேதுரு நிருபத்தில் "சபை" என்ற வார்த்தை இல்லை என்றாலும்கூட, இங்கு கவனத்தில் உள்ள விஷயம் சபையே ஆகும். பவுல் 1 தீமோத்தேயு 3:15ல், **"தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே** [*oikos*] **நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச்** [*ekklēsia*] **சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது"** என்று பயன்படுத்தியது போன்றே பேதுருவும் இங்கு "வீடு" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்.

தேவன் தமது சபையில் அன்புகூர்ந்து, இஸ்ரவேல் மக்கள் மத்தியில் தாம் உலாவினது போன்றே சபையின் மத்தியிலும் உலாவுகிறார். அவர் தமது மக்கள் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர்கள் அவருடையவர்களாக இருக்கின்றனர் என்பதற்கு, அவர்களை அவர் நியாயந்தீர்த்ததே சாட்சியாக உள்ளது. அவர்களைச் சுற்றிலும் இருந்த மக்களினத்தவர்கள் செய்த போது அவர் புறக்கணித்திருந்த அதே செயல்களைத் தமது மக்கள் செய்தமைக்காக அவர்கள் மீது அவர் சிட்சிக்கும் அக்கினியை அனுப்பினார். அந்த மக்களினங்களைப் போல் அவர்கள் ஆவதற்கு அனுமதிக்க அவர் மறுத்துவிட்டார். **"மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனைசெய்து, அஞ்ஞானிகளைப்போலவும் தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே; உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை"** (எசேக்கியேல் 20:32). தேவன் இஸ்ரவேல் மக்களைப் புடமிட்டதுபோல, இப்போது தாம் அழைத்துள்ளவர்களை அவர் புடமிடுகிறார். இந்த நிருபத்தில் பேதுரு இவ்விடத்தில் மாத்திரமே "நியாயத்தீர்ப்பு" (*krima*) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார், இருப்பினும் இதன் தொடர்புடைய வினைச்சொல்லான "நியாயந்தீர்த்தல்" என்பதை அதில் அவர் பலமுறைகள் பயன்படுத்தினார். பாடு அனுபவித்தல் என்பது (1) தேவன் தமது மக்கள் மூலமாக இந்த உலகத்தின் மீது செயல்தாக்கத்தை ஏற்படுத்துகிறார் மற்றும் (2) அவர் தமது மக்களைத் தமது பரிசுத்த சாயலுக்கு ஏற்ப உருவாக்குகிறார் என்பவற்றிற்குச் சாட்சியமாயிருப்பதால், அது சந்தோஷப்படுதல் மற்றும் தேவனுக்கு மகிமை செலுத்துதல் ஆகியவற்றிற்கான சந்தர்ப்பமாக உள்ளது.

அப்போஸ்தலர், தமது வாசகர்கள் மீது தேவன் கொண்டுவரும் பாடுகளைக் காட்டிலும், கீழ்ப்படியாதவர்கள் மீது அவர் கொண்டு வரும் பாடுகள் எவ்வளவு பெரிதாயிருக்கும் என்பதை அவர்கள் (பேதுரு நிருபத்தின் வாசகர்கள்) கற்பனை செய்துகொள்ளும்படி விட்டுவிட்டிருந்தாலும், அவரது விவாதமானது சிறியதில் இருந்து பெரியதற்குச் செல்லுதலாக இருந்தது. தேவன் தாம் அன்புகூருபவர்களை நியாயந்தீர்த்துப் புடமிடுகிறார் என்றால், **தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?** தற்கால யுகத்தில் தேவன் தமது மக்களுக்குப் பாடுகளை அனுமதிக்கிறார், அவர்களைப் புடமிட்டுத் துய்மைப்படுத்துகிறார், அதே

வேளையில் அவர் கீழ்ப்படியாதவர்களைப் புறக்கணிக்கிறார். "கிறிஸ்துவின் மகிமைவெளிப்படும்போது" (4:13; மற்றும் 1:7; 5:1ஐயும் காண்க), அவர் புடமிட்டவர்களுக்கு, கற்பனைக்கு அப்பாற்பட்ட சந்தோஷம் கிடைக்கும், மற்றும் "தேவனுடைய சுவிசேஷத்திற்கு" தங்கள் முதுகைத் தி ருப்பிக்காட்டியவர்களுக்கு கற்பனை செய்ய இயலாத வருத்தங்கள் ஏற்படும். "தேவனுடைய சுவிசேஷம்" என்பது, தேவன் தமது வாக்குத்தத்தங்களின்படி தமது குமாரனை அனுப்பியிருக்கிறார், அந்தக் குமாரன் மனிதரின் பாவங்களுக்காக மரித்தார், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது மூலமாக, அவரைத் தமது குமாரன் என்று தேவன் அறிவித்துள்ளார் என்ற செய்தியாக உள்ளது. இது பவுலினால் 1 கொரிந்தியர் 15:1-4ல் செறிவூட்டப்பட்ட சுவிசேஷமாக உள்ளது.

வசனம் 18. பேதுரு நீதிமொழிகள் 11:31ஐக் குறிப்பிட்டதன் மூலம் தமது விவாதத்திற்கு மறுவலியூட்டினார். இந்தக் குறிப்பு, ஒரே சிறு பாகம் விடப்பட்டது தவிர, செப்துவஜிந்த் வேதாகமத்தில் (LXX) இருந்து சொல் லுக்குச் சொல் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது. இது, பேதுரு தமது கருத்தை ஆதரித்து நிற்கும்படி கூடுதலாக இணைத்த, பேதுருவின் பிந்திய சிந்தனையாக இருந்திருக்க வாய்ப்பில்லை. 4:12ல் தொடங்கிய சிந்தனைச் சங்கிலியுடன் அப்போஸ்தலர் இவ்வசனத் தொடக்கத்தில் வழிநடத்தப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. இவ்வாழ்வில் துன்புறுதல் என்பது தேவனுடன் ஜீவனில் இருக்கும்படி தேர்ந்து கொண்ட மக்களை அடிப்படையாக ஆயத்தப்படுத்துகிறார் என்பதற்கு நிரூபணமாக இருந்தது, கீழ்ப்படியாதிருந்த மக்கள் அதிகம் கடுமையாகத் துன்புறும்படியான நிலையை நியாயத்தீர்ப்பு விளைவிக்கும்.

KJV வேதாகமம் இவ்வசனத்தை, "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?" என்று மொழிபெயர்க்கிறது. இவ்வார்த்தை அமைப்பு தன்னில்தானே தவறான புரிந்துகொள்ளுதலுக்கு வழிநடத்துகிறது. நீதிமானே இரட்சிக்கப்படுவது மிகவும் கடினம் என்ற இவ்வசனப்பகுதியை வாசகர் (தவறாகப்) புரிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட கருத்து எதையும் ஏற்படுத்தப் பேதுரு விரும்பவில்லை. மாறாக அவர், நீதிமான் இரட்சிக்கப்படுவதற்கு, கடினம ான காலங்களினூடே வாழ்ந்தாக வேண்டும் என்றே கூறினார். தேவனு டைய மகிமை வெளிப்படுகிறபோது மற்றும் அவரது நியாயத்தீர்ப்பு நடைபெறுகிறபோது, துன்புறுதல் என்பது எதிர்பார்க்கப்பட்டது. விஷயம் அவ்வாறு இருந்ததால், அவர் சொல்லாடற்கலை மிகுந்த பின்வரும் கேள்வியை முன்வைத்தார்: "தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு தேவன் எவ்வளவு அதிகம் முனைப்பான துன்புறுதலை வைத்திருப்பார்? என்று ஒருவர் யூகிக்கலாம்." முடிவில் நீதிமான்கள் இரட்சிக்கப்படுவார்கள். அந்த வாதத்தில் சந்தேகம் எதுவும் இல்லை. **பக்தியில்லாதவனும் பாவியும்** ஆக உள்ளவர்களுக்குத் தேவன் வைத்துள்ள பாடுகளின் அளவு நிச்சயமற்றதாக உள்ளது. இவ்வசனத்தில் வரும் பக்தியில்லாதவரும் பாவியும் என்பவர்கள், முந்திய வசனத்தில் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத அதே மக்களாகவே உள்ளனர். நீதிமொழிகளில் இருந்து வருகிற வசனப்பகுதி, நிறைவில் விடுவிக்கப்படும் விசுவாசிகளுக்கு உடனடி ஊக்குவிப்பைத் தரும்

வார்த்தையாகவும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு எச்சரிப்பு வார்த்தையாகவும் உள்ளது.

வசனம் 19. புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களில் போன்றே, பரவசவியல் என்பது ஒழுக்கத்திற்கு உதவுகிறது. கர்த்தருடைய மறுவருகை மற்றும் பரிசுத்தவான்களையும் பாவிகளையும் அவர் நியாயந்தீர்த்தல் ஆகியவற்றைப் பற்றிய குறிப்பிடுதல், தேவனுடைய மக்களுக்கு இந்தக்காலத்தில் இருக்க வேண்டிய பரிசுத்தம் பற்றிய நினைவூட்டுதலாகச் செயல்படுகிறது. விசுவாசிகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறாரோ, அவ்வகையான மக்களாக இருப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை அவர்கள் இரட்டிப்புச் செய்யட்டும். பேதுரு தமது இரண்டாம் நிருபத்தில், பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு கடைசி நியாயத்தீர்ப்பு பற்றிய விரிவான விளக்கத்தை உரைக்கத் தொடர்ந்தார்; "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (2 பேதுரு 3:11).

இயேசு பாடு அநுபவித்தபோது, தேவபக்தியற்றவர்களால் அவர் வையப்பட்டபோது, அவர் "நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:23). அவரது சீஷர்களும் அதையே செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். **தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவித்தல்** என்பது, இயேசு குற்றம் செய்யாமலே பாடு அனுபவித்தது போன்று, நாமும் குற்றம் செய்யாமலிருக்கும்போதே பாடு அனுபவித்தலாக உள்ளது. தேவன் தம்மிடத்தில் ஆத்துமாக்களை ஒப்புவிப்பவர்கள் பாடு அனுபவித்தலை அரிதாகவே விரும்புகிறார், அதுவே முடிவாக இருப்பதில்லை. பாடு அனுபவித்தல் என்பது தேவனுடைய சித்தமல்ல, மாறாக அவரது பரிசுத்தவான்களின் வாழ்வானது, இந்த உலகத்தை அச்சுறுத்துவதாக, உலகத்தாரின் தேவபக்தியற்ற நடக்கையின் பின்னனியில் அவர்களின் பாவங்களைக் காட்சிப்படுத்துவதாக உள்ளது. பரிசுத்தவான்கள் அவ்வாறு செய்யும்போது, அவர்களுக்கு உலகத்தார் துன்பம் தருகின்றனர். இப்படிப்பட்ட துன்புறுதல் "தேவனுடைய சித்தத்தின்படி" யானதாகவே இருக்கிறது. இந்த துன்புறுதல் கொஞ்சக்காலமே இருக்கிறது. இந்த சூழ்நிலைகளின்கீழ் விசுவாசிகள் துன்புறும்போது தேவன் மகிமைப்படுகிறார்.

கிறிஸ்தவர்கள் தேவனுடைய மகிமை வெளிப்படுதலை முன்னெதிர்நோக்கி வாழ்வதால், அது விரைவில் நடக்கவிருப்பதால், அவர்கள் கிறிஸ்துவைப் போன்றே, **தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கின்றனர்.** இங்கு "ஆத்துமாக்கள்" என்பது அவர்களின் நபர்த்துவத்தை மாத்திரம் குறிப்பதாக உள்ளது. "ஆத்துமா" என்பது "சரீரத்திற்கு" எதிராக அமைக்கப்பட்டிருப்பதில்லை. "ஒப்புவித்தல்" *(paratithēmi)* என்ற வினைச்சொல், இயேசு சிலுவையில் தொங்கிய போது கூறிய "பிதாவே. உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்ற வசனத்தில் பயன்படுத்திய அதே வார்த்தையாக உள்ளது (லூக்கா 23:46). இருப்பினும் பேதுரு தமது சிந்தையில் இயேசுவின் இக்கூற்றைக் கொண்டவராக இவ்வார்த்தையைத் தேர்ந்தெடுத்து இருப்பாரா என்பது உறுதிப்பாட்டிற்குத் தொலைவில் உள்ளது. அப்போஸ்தலரின் வாசகர்கள், **நன்மைசெய்கிறவர்களாய்** "தங்கள் ஆத்துமாக்களை ஒப்புவிக்க" வேண்டும்

என்பதே அவருக்கு முக்கியமான விஷயமாக இருந்தது.

பழைய ஏற்பாட்டில், படைப்பில் தேவனுடைய பணிப்பொறுப்பு என்பது பொதுவான ஆய்வுக்கருத்தாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மாத்திரமே தேவன் **"சிருஷ்டிகர்த்தா"** என்று அழைக்கப்பட்டுள்ளார் என்பதைக் கவனித்தல் வியப்புக்குரியதாக உள்ளது. அண்டத்தையும் மனிதகுலத்தையும் படைத்திருந்த ஒருவர், கீழ்ப்படியாதவர்களுக்கு நியாயத்தீர்ப்பு தர வல் லவராக இருந்தார் என்பதன் நிச்சயத்தைப் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டவே, இங்கு தேவனை சிருஷ்டி கர்த்தர் என்று அழைத்திருக்க வாய்ப்புள்ளது. அவர் "உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாக" இருக்கிறார் என்பது மறு உறுதிப்பாட்டை அளிக்கிறது. தேவன் தமது வாக்குத்தத்தங்களில் ஒருக்காலும் தவறியது இல்லை. "உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தர்", தமது சொந்த மக்களை மீட்கவோ அல்லது தமது நாமத்தை அணிந்துள்ளவர்களை அநீதியாகத் துன்புறுத்துபவர்களை நியாயத்தின் முன்பு கொண்டு வரவோ ஒருக்காலும் தவற மாட்டார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெகுவிரைவில் வெளிப்பட வேண்டும் என்று பேதுருவும் அவரது வாசகர்களும் எதிர்பார்த்தனர். புதிய ஏற்பாட்டு சூழல் முழுவதிலும் எதிர்பார்ப்பு உள்ளது. அந்த எதி ர்பார்ப்பு உணர்ந்தறியப்படாமலேயே அவர்கள் வாழ்ந்து மரித்தனர். இந்த யுகம் உட்பட, ஒவ்வொரு யுகத்திலும் உள்ள விசுவாசிகள், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் வாழ்ந்த தங்கள் சகோதர சகோதரிகளைப் போன்று செயல்பட வேண்டும் என்றால், (நாம் உட்பட) அவர்களும் அதே எதிர்பார்ப்புடன் வாழ வேண்டும். பேதுருவின் வாசகர்களுடைய வாழ்நாள் காலத்தின்போது, தேவன் நியாயத்தீர்ப்பு தரும்படி தோன்றவில்லை என்பதால். அவர் தமது வாக்குத்தத்தத்தில் தவறிவிட்டார் என்று இது கூறுவதில்லை. கிறிஸ்தவ வாழ்வின் வழிகாட்டும் நட்சத்திரமாக விளங்குவது, உணர்ந்தறிதல் அல்ல, ஆனால் எதிர்பார்ப்பே அவ்வாறு விளக்குகிறது. தேவன் சொந்தமாகத் தேர்ந்து கொண்ட ஒருநாளிலே, வரலாறு முடிவுக்கு வரும். கர்த்தர் வெளிப்படுவார். அந்த வேளைய எப்போது வரும் என்பது தேவன் தீர்மானிக்க வேண்டிய விஷயமாக உள்ளது. அவரது மக்களில் ஏராளமானவர்கள் எதிர்பார்ப்பில் வாழ வேண்டியுள்ளது. நூற்றாண்டுகள் கடந்து போகும் நிலையில் அந்த எதிர்பார்ப்பைப் புதியதாகக் காத்துக்கொள்ளுதல் கடினமாக உள்ளது என்று சிலர் விவாதிக்கலாம். இயேசுவைத் தங்கள் வாழ்வில் துணைவராக ஏற்படுத்திக் கொண்டு, அவரது நாமத்திற்காகப் பாடு அனுபவிப்பவர்களின் விஷயத்தில் இவ்வாறு நடப்பதில்லை. பாடு அனுபவித்தல் என்பது கர்த்தர் திரும்பவும் வருவார் என்பதற்கு அவரது சாட்சியமாக உள்ளது. கர்த்தர் மறுபடியும் வருவார் என்று எதிர்பார்த்தலுக்கும், கர்த்தர் விரைவில் திரும்ப வருவார் என்று எதிர்பார்த்தலுக்கும் இடையில் பெரிய வேறுபாடு உள்ளது. பிந்திய எதிர்பார்பே விசுவாசிகள் உண்மையுடனும் சகிப்புத்தன்மையுடனும் இருக்கும்படி அவர்களைத் தூண்டுகிறது.

குறிப்புகள்

[1]J.இராம்ஸே அவர்களால் ஏற்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டிற்கு நேர்மாறான வகையில், 4:12ம் வசனத்தின் அவசரத்தன்மையை ஒப்பிடும்போது, 1:6-9 வசனப்பகுதியின் வலிவுத்தன்மையானது, 4:7-11 வசனப்பகுதியில் உள்ள கனிவான புத்திகூறுதல்கள் மற்றும் துதி ஆகியவற்றின்மீது சிறிதளவே தொடர்பு கொண்டுள்ளன. 4:12ம் வசனம் தொடங்குகையில் எச்சரிப்பின் எதிர்பாராத முன்னரை ஒன்றுள்ளது. காண்க J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 258. [2]Pliny *Letters* 10.96. [3]Edward Gordon Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text, with Introduction, Notes, and Essays,* Thornapple Commentaries, 2d ed. (London: Macmillan & Co., 1947; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 222–24. [4]Michaels, 264–65. [5]Ibid., 267. [6]அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்ற புத்திமதி, இலக்கியத் தொனியைப் பேதுரு தழுவிக் கொண்டார் என்பதால் நீக்கப்பட இயலாது. பழங்கால உலகத்தில் வீட்டாருக்குரிய சட்ட முறைமைகளின் தொனி பற்றி கணிசமான அளவு நிச்சயமற்ற தன்மை உள்ளது. ஆனால் இந்தத் தொனியைப் பேதுரு பயன்படுத்தினார் என்று நாம் எடுத்துக்கொண்டால், அவர் தமது வாசகர்கள், கிறிஸ்தவ நடக்கை கொண்டு தங்கள் சமூக உலகில் போராட்டங்களைச் சந்திக்கையில் அவர்களுக்குப் புத்திகூறுவதற்கு ஏற்புடையவையாக இருந்த சட்டமுறைமைகளின் கூறுகளைத் தேர்ந்தெடுத்தார். [7]For example, Ignatius *Romans* 3.2; *Magnesians* 4.1; *Ephesians* 11.2. [8]*Didache* 12.4.

8

கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல்: உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள் [பாகம் 2]

[5:1-11]

நிருபத்தில் இவ்விடத்தில் பேதுரு, தாம் 2:13ல் தொடங்கியிருந்த கட்டளைகளுக்குத் திரும்பினார். 2:13ல் இருந்து 3:7 வரையிலும் அப்போஸ்தலர், அரசாங்கங்களுக்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும், எஜமானர்களுக்கு அடிமைகள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும், மற்றும் கணவர்களுக்கு மனைவிகள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்று கிறிஸ்தவர்களுக்குப் புத்திகூறினார். 5ம் அதிகாரத்தில் அவர், இளைஞர்கள் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவதன் மூலம் அறிவுரையின் அந்த வடிவமைப்பைத் தொடர்ந்தார். இந்த தற்போதய புத்திகூறுதலானது, மேற்கண்ட மூன்றில் மற்ற இரண்டைக்காட்டிலும், கணவர்களுக்கு மனைவிகள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல்களுடன் (3:1-7) அதிகம் ஒத்துப்போவதாக உள்ளது. மனைவிகள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்று ஊக்குவித்தபின்னர், பேதுரு கணவர்களுக்கு அறிவுறுத்தும் வார்த்தைகள் சிலவற்றை அளித்தார். அதற்கு இணையான வார்த்தைகளை அவர், அரசாங்கங்களுக்கோ அல்லது அடிமைகளின் எஜமானர்களுக்கோ அளித்திருக்கவில்லை. இப்போது நாம் படிக்கும் வசனப்பகுதியில் அப்போஸ்தலர், கீழ்ப்படிதலுடன் இருக்கும்படி இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதற்கு முன்னர், மூப்பர்களுக்கு அறிவுறுத்துதலின் வார்த்தைகளை அளித்தார். மற்றும் இவ்விஷயத்தில், அவர் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டிய இளைஞர்களுக்கு அளித்ததைக் காட்டிலும் கணிசமான அளவு அதிகமான அறிவுறுத்துதல்களை மூப்பர்களுக்கு அளித்தார். இது, மூப்பர்கள் கவனிக்க வேண்டிய பொறுப்புகளை ஏற்ற வகையில் நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்துவதாகத் தோன்றுகிறது. இளைஞர்கள் தங்கள் பங்குக்குக் கீழ்ப்படிதலை நிறைவேற்றுதலானது, தக்கவகையில் நடந்துகொள்ளும் மூப்பர்களைப் பொறுத்தது என்று

தோன்றுகிறது.

முதியவர்களுக்கு ஊக்குவிப்பு (5:1-4)

[1]உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: [2]உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், [3]சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். [4]அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.

வசனம் 1. "மூப்பர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*presbuteros* என்ற) வார்த்தை பொது அர்த்தத்தில் ஒரு வயது முதிர்ந்த மனிதரைக் குறிப்பிடுவதாக இருக்கலாம் (யோவான் 8:9; நடபடிகள் 2:17; 1 தீமோத்தேயு 5:1), அல்லது இது சபையில் அலுவலகரீதியான தலைமைத்துவப் பணிப்பொறுப்பில் செயல்பட நியமிக்கப்பட்டு இருப்பவர்களைக் குறிப்பதாக இருக்கலாம் (நடபடிகள் 11:30; 14:23; 20:17; தீத்து 1:5; யாக்கோபு 5:14). எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு வார்த்தை எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைச் சந்தர்ப்பப் பொருள்தான் தீர்மானிக்க வேண்டும். பேதுரு, **I exhort the elders among you,** என்று எழுதி, இந்த மூப்பர்களை "மந்தையை மேய்க்கும்படி" வேண்டிக் கேட்டுக்கொண்டு தொடர்ந்தபோது, இங்குள்ள இவ்வார்த்தை சபையின் நடத்துவத்துவ அலுவல் ஒன்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு. 1 தெசலோனிக்கேயர் 5:12, 13 வசனப் பகுதியில் பின்வருமாறு பவுல் வேண்டுகோள் விடுக்கும் மக்களும் இவர்களே: "அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்."

தனிநபர் ஒருவர் நியமனத்தினால் "மூப்பர்" பணியைப் பற்றிக்கொள்ள வந்தார் (நடபடிகள் 14:23; தீத்து 1:5). இவ்வாறு ஏற்படுத்தப்படும் மனிதர் வயதானவராகவோ அல்லது இளைஞராகவோ இருக்கலாம் என்பது தெளிவு. வயதானவராக இருக்கும்படி எவரும் நியமிக்கப்பட இயலாது. இருப்பினும், இந்தப் பணியைச் செய்பவர்கள் "மூப்பர்" என்று அழைக்கப்படும்போது, அவர்கள் முதிர்வயதான மனிதர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்து உள்ளது, இருப்பினும் அது விவரிக்கப்பட வேண்டும். "வயதானவர்" யார் என்ற கருத்தில் சற்றே வளையும் தன்மை இருக்கையில், இச்சொற்றொடர் முடிவில்லாத வகையில் வளையும் தன்மை கொண்டிருப்பதில்லை. பதினெட்டு வயதான அல்லது முப்பது வயதான ஒருவரை "முதிர் வயதான மனிதர்" என்று எவரும் கருதுவது இல்லை. சபையில் நடத்துனர்களாகப் பணிசெய்ய வேண்டியவர்கள் அதன் "மூப்பர்கள்" என்று அழைக்கப்படுகையில், அவர்கள்

முதிர் வயதான மனிதர்களாக இருக்க வேண்டும் என்ற மறைகருத்து உள்ளது.

"ஆசாரியர்" என்று ஆங்கில வார்த்தை, "மூப்பர்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தையுடன் சொல் இலக்கண வகையில் பிணைக்கப்பட்டுள்ளது, ஆனால் புதிய ஏற்பாட்டில் மூப்பர்களாகப் பணி செய்தவர்கள், இன்றைய நாட்களில் சில சபைகளில் பணிசெய்கிற குருக்கள் போன்றவர்களாக இருந்தது இல்லை. மேலும், இளைஞர்களை "மூப்பர்கள்" என்று குறிப்பிடும் நவீன கால நடைமுறை எதுவும் வேதாகம ரீதியான ஆதாரம் கொண்டிருப்பதில்லை. மனிதர்கள் மூப்பராக நியமிக்கப்படுகிறபோது, வயது மாத்திரமே ஒரே ஒரு காரணியாக இருப்பதில்லை, ஆனால் வயது பொறுத்தமற்றதாக இருப்பதும் இல்லை. புதிய ஏற்பாட்டுப் பயன்பாட்டில், மூப்பர் பணியைச் செய்யும் ஒருவர் தமக்காகப் பதிவு ஒன்றை நிலைநாட்டப் போதிய அளவுக்கு வயதானவராக இருந்தார். அவரது பதிவானது அவரது நேர்மைக்கும் நற்தன்மைக்கும் சான்றளிக்கப் போதுமானதாக இருந்தது. வயதில் இளையவரான ஒரு மூப்பர் ஒரு முரண்தொடையாக இருக்கிறார். வழிகாட்டுதல் மற்றும் அதிகாரம் ஆகியவை கொண்ட அலுவல்களில் பணியாற்ற, சமுதாயங்கள் தங்களின் முதிர்வயதான மனிதர்களைக் கண்ணோக்கியது யூதத்துவத்தில் மட்டும் அல்ல, பிற சமூகங்களிலும் காணப்பட்டது. ரோமானியர்கள் குறைந்த பட்சம் குடியரசுக் காலத்தில், செனேட் என்ற மாமன்றத்தினால் பெரிதும் ஆளப்பட்டனர். "செனேட்டர்" என்ற வார்த்தை நேரடிப்பொருளில் "ஒரு முதிய மனிதர்" என்றே அர்த்தப்படுகிறது. இதே லத்தீன் வேர்வார்த்தையில் இருந்துதான் "செனைல்" என்ற வார்த்தையும் வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் அமைப்பில், பிரதிநிதிகளில் அலுவலகத்தில் பணியாற்றுபவர்களைக் காட்டிலும் செனேட்டர்களாகப் பணியாற்றுபவர்கள் அதிகம் வயதுடையவர்களாக இருக்க வேண்டும் என்றுள்ளது தற்செயலானதல்ல.

வயதில் முதிய மனிதர்கள் நடத்துனர்களாகப் பணியாற்றுதல் என்ற பாரம்பரியம், இஸ்ரவேல் வரலாற்றில் ஆழமாக ஓடுகிறது. போவாஸ் ஒரு சுதந்தரித்துக் கொள்ளுதலின் விஷயத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்பியபோது, அவர் பட்டண வாசலில் நகரத்து மூப்பர்களுடன் அம ர்ந்தார் (ரூத் 4:2), அவர்கள் அந்த நகரின் ஒழுக்கரீதியான விஷயங்களுக்கும் சட்டப்பூர்வமான விஷயங்களுக்கும் நடத்துனர்களாக இருந்தனர். இஸ்ரவேலின் மூப்பர்கள்தாம், அந்த மக்களுக்கு ஒரு அரசரை நியமிக்கும்படி சாமுவேலிடம் கேட்டுக்கொள்ள ஒன்றுகூடினர் (1 சாமுவேல் 8:4, 5). மூப்பர்கள் என்பவர்கள் இஸ்ரவேலில் நடத்துவத்துடன் ஒருபொருள் கொண்டிருந்தனர் என்று கூறுதல் பாதுகாப்பானதாக உள்ளது. சுவிசேஷங்கள் மற்றும் நடபடிகள் ஆகிய புத்தகங்களில், மூப்பர்கள் என்பவர்கள் யூதர்கள் மத்தியில் தலைவர்களாக இருந்தனர் (உதாரணத்திற்கு, மத்தேயு 15:2; 16:21; மாற்கு 8:31 ஆகிய வசனங்களை காண்க). இந்தப் பின்புலத்திற்கு எதிரில்தான் சபையில் மூப்பர்கள் பணிசெய்தனர். அவர்கள் அதன், முதிர்வயதான, ஞானமுள்ள மனிதர்களாக இருந்து, தங்கள் சமூகத்தில் மரியாதையைச் சம்பாதித்து இருந்தனர். ஒரு கருத்தில் மூப்பர்கள் உதிக்கின்றனர். சமூகமானது, அறிவுரைக்காக அவர்களிடமாய்த் திரும்புகையில், அவர்கள் மூப்பர்கள் என்ற வகையில் பணிசெய்கின்றனர், மற்றும் அவர்கள் தங்கள் பணியைத் தொடர

நியமிக்கப்படும்போது, அலுவலகரீதியான அங்கீகரிப்பைப் பெறுகின்றனர்.[1] யாக்கோபு நிருபத்தில் உள்ள யூதத்துவ வாசனையைக் கருத்தில் கொண்டு காணும்போது, இந்த அலுவல் செய்பவர்களை "மூப்பர்கள்" என்று கர்த்தருடைய சகோதரர் அழைக்க வேண்டியிருந்தது திகைப்புக்குரியது என்பது அரிது (யாக்கோபு 5:14).

பேதுரு **"உங்களிலுள்ள மூப்பருக்கு"** என்று புத்திகூறியபோது, சபையில் நடத்துவத்துவப் பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டு அதை ஏற்றுக்கொண்டிருந்த வயது முதிர்ந்த மனிதர்களுக்கு அதைக் கூறினார். புதிய ஏற்பாட்டில், மூப்பர்கள் தங்களை நியமித்த சமூகத்துடன் பணிசெய்தனர். எபேசு சபையில் பணிசெய்த மூப்பர்கள் இருந்தனர் (நடபடிகள் 20:17) மற்றும் எருசலேம் சபையில் பணிசெய்த மூப்பர்கள் இருந்தனர் (நடபடிகள் 11:30). மூப்பர்கள் தாங்கள் பணியாற்றிய சமூகத்திற்குப் புறம்பே எந்த ஒரு தலைமைத்துவத்தை அல்லது அதிகாரத்தைச் செயல்படுத்தியதாகக் குறிப்பு எதுவும் இல்லை. பெரிய அளவு மூப்பர்கள் என்று யாரும் இருக்கவில்லை. அந்த ஆழ்ந்த சிந்தனை ஒரு கேள்வியைக் கொண்டுவருகிறது. பேதுரு தம்மை **உடன் மூப்பர்** என்று அழைத்துக்கொண்டபோது, அவர் ஏதேனும் குறிப்பிட்ட ஒரு சபைக் குழுமத்திற்கு மூப்பராகப் பணிசெய்தார் என்று அது கருத்துத் தெரிவித்ததா?

ஒருவேளை பேதுரு, அப்போஸ்தலர் என்ற தமது திறத்தில், பணிசெய்த சமூகம் மற்ற எந்த சபைக்குழுமத்தைக் காட்டிலும் பெரிதாக இருந்திருக்கலாம். இதற்கு மறுபுறத்தில், பேதுரு எருசலேமில் அல்லது ரோமாபுரியில் இருந்த சபையின் மூப்பர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கலாம். ஒருவேளை இந்தப் பணித்திறத்தில் அவர் தம்மை "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும்" என்று அழைத்திருக்கலாம். மூப்பர் என்ற வகையில் பேதுருவின் பணி என்பது சாதாரணப் பணியைவிட அப்பால் சென்றது என்பது தெளிவாக உள்ளது. மூப்பர்கள் தங்கள் நடத்துவத்துவத்தையும் தங்கள் ஊழியத்தையும் தங்களை மூப்பராக நியமித்த, தாங்கள் பணிசெய்த சமூகத்தின் எல்லைக்குள் செயல்படுத்தினர்.

மூப்பர்களைப் பேதுரு "உடன் மூப்பர்" என்று குறிப்பிட முடிந்தது, ஆனால் அவர்களின் அதிகாரத்துவமும் நடத்துவத்துவமும் அவர்களுக்கு அப்பால் சென்றது என்ற வகையிலும் அவர்களை அவர் குறிப்பிட்டார். அவர் ஒரு அப்போஸ்தலராக இருந்தார், அது மற்ற விஷயங்களின் மத்தியில் அவர் **கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியாக** இருப்பதைத் தகுதிப்படுத்திற்று. சுவிசேஷப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள, பேதுரு மற்றும் இயேசு ஆகியோருக்கு இடையில் உள்ள வளமான வரலாற்றுடன் கண்ணோக்கும்போது, கர்த்தருடன் அப்போஸ்தலர் கொண்டிருந்த தமது தனிப்பட்ட உறவைப் பற்றி மறைமுகக் கருத்து எதையும் ஏற்படுத்தாது இருத்தல் வினோதமானதாக உள்ளது. 2 பேதுரு நிருபத்தில், அவர் இதைச் செய்தார் (2 பேதுரு 1:16-18), ஆனால் இந்த நிருபத்தில் அவ்வாறு செய்யவில்லை. சிலுவையில் அறையப்பட்டது தவிர, இயேசுவின் வாழ்வில் இருந்து நிகழ்வு எதையும் அப்போஸ்தலர் குறிப்பிடாது இருக்கையில், அவர் தம்மைக்குறித்து "பாடுகளுக்குச் சாட்சி" என்று குறிப்பிட்டார். விஷயம் அவ்வாறு இருக்க, திறவு வார்த்தைகளில் ஏற்படுத்தப்பட்ட உரிமை கோருதலுக்கு இது பலத்த ஆதரவைக் கூட்டுகிறது. இந்த நிருபம் சுவிசேஷப்

புத்தகங்களில் இருந்து நாம் அறிகிற அப்போஸ்தலரின் கையில் இருந்து வருகிறது.

J. N. D. கெல்லி அவர்கள் (லுத்தரையும் கால்வினையும் ஆதரித்து) "கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சி" என்பதன் மூலம் எழுத்தாளர் [பேதுரு], தாம் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்கத் தொடர்ந்ததாக அர்த்தப்படுத்தியதாக விவாதித்தார். கிறிஸ்துவின் பாடுகளில் பங்காளியாக இருந்தார் என்ற கருத்தில் அவர் ஒரு சாட்சியாக இருந்தார்.[2] இதற்கு முன்னும் பின்னும் உள்ள சொற்றொடர்கள், இந்த எழுத்தாளர் தமது வாசகர்களின் நிகழ்வுகளுக்குப் பங்காளியாக இருந்ததைப் பற்றிக் கவனத்தை ஈர்க்கின்றன என்பது உண்மையே. இந்தச் சொற்றொடரிலும்கூட, பேதுரு தமது வாசகர்களுக்கு, தாமும் அவர்களும் பாடு அனுபவித்தல் மூலம் கிறிஸ்துவின் பாடுகளில் ஒன்றாகப் பங்கேற்றதை - ஒன்றாகச் சாட்சியாயிருந்ததை - நினைவூட்டி இருக்கலாம். இருப்பினும் "சாட்சி" (*martus*) என்ற வார்த்தை பொதுவாக, நிகழ்வுகள் பற்றிய வாய்மொழி சாட்சியத்தினால் தொடரப்படுவதாக உள்ளதான, ஒருவர் அனுபவிக்கும் நிகழ்வுகளைக் குறிக்கிறது. இந்த நிருபத்தில் அப்போஸ்தலர், கிறிஸ்து பாடு அனுபவித்த வகைக்கு ஏற்கனவே சாட்சி அளித்திருந்தார் (2:21-24). இந்தச் சொற்றொடரானது, எழுத்தாளர் தாம் கிறிஸ்துவின் பாடுகளைத் தாமே கண்டதை வாசகர்கள் அறிய விரும்பினார் என்று அர்த்தப்படுவதாக எடுத்துக் கொள்வதே சிறந்ததாகும்.

அப்போஸ்தலரின் வார்த்தைகள் பொதுமையில் இருந்து குறிப்பானதாகச் செல்கின்றன, மற்றும் பொதுமைக்குத் திரும்புகின்றன. மூப்பர் என்ற வகையில் அவர் மற்ற மூப்பர்களைக் குறிப்பிட்டார், ஆனால் அவர், கண்ணால் கண்ட சாட்சி மற்றும் அப்போஸ்தலர் என்ற வகையில் இதை திட்டவட்டமாகச் செய்தார் (1:1). மிகவும் முக்கியமாக அவர், அவர்களை சகவிசுவாசிகள் என்ற வகையில், **இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிறதாகக்** குறிப்பிட்டார். பேதுருவும் கூட, தமது வாசகர்களைப் போன்றே கர்த்தருடைய மறுவருகையை, அவரது மகிமையான வெளிப்பாட்டை மற்றும் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை முன்னெதிர் நோக்கினார். அப்போஸ்தலர் ஒரு புறம்பான மனிதர் போன்று அறிவுரை தரவில்லை அல்லது அவர் தாம் வாழ்வின் வசதிகளை மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டு, பாடு அனுபவித்தவர்களுக்கு அறிவுரை தரவில்லை. அவர்களில் அவரும் ஒருவராயிருந்தார். அவர் ஒரு உடன் மூப்பராக இருந்தார், மற்றும் அவர்களைப் போன்றே அவரும் தமது ஆத்துமாவை, உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு ஒப்புக்கொடுத்திருந்தார்.

வசனம் 2. ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றைப் பயன்படுத்துதல் என்பது சிலவேளைகளில், கிரேக்க மொழியில் தெளிவாக உள்ள வார்த்தைகளின் உறவைக் காண்பதில் சிரமத்தை ஏற்படுத்துகிறது. உதாரணமாக, **மேய்த்து** என்ற கட்டளை வினைச்சொல்லானது, *poimainō* என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *Poimēn* என்ற பெயர்சொல் எபேசியர் 4:13ல் "மேய்ப்பர்" , "போதகர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேய்ப்பராகச் செயல்படுதல் என்பது ஒரு ஆடுமேய்ப்பவராக இருத்தல் என்பதாக உள்ளது. இவ்வசனத்தின் தொடக்கப்பகுதியை ஒருவர், மந்தைக்கு "மேய்ப்பராக" அல்லது "மேய்ப்பவராக" இருக்க வேண்டும் என்றும் மொழிபெயர்க்க முடியும். மேய்ப்பரின் பணியைச் செய்ய வேண்டும் என்று பேதுரு வேண்டிக்

கேட்டுக்கொண்டிருந்தவர்கள், ஏற்கனவே அவரது உடன் மூப்பர்கள் என்று அழைக்கப்பட்டிருந்தனர். நமக்கு முன்பாக உள்ள வசனப்பகுதி மாத்திரமல்ல, ஆனால் புதிய ஏற்பாட்டின் வேறொரு இடத்திலும், "மூப்பர்கள்" என்பவர்கள் "மேய்ப்பர்களுக்கு" சமமானவர்கள் என்பது தெளிவாக உள்ளது. வார்த்தைகளை ஒன்றுடன் ஒன்று கலக்கும் இதே செயல் நடபடிகள் 20ம் அதிகாரத்திலும் காணப்படுகிறது. எபேசு சபையில் இருந்த மூப்பர்களை மிலேத்துவுக்கு வரும்படி பவுல் ஆள் அனுப்பினார் (நடபடிகள் 20:17). மற்ற விஷயங்களுடன் அவர், அவர்களிடம் தேவனுடைய சபையை "மேய்க்கும்படி" புத்திகூறினார் (நடபடிகள் 20:28). பேதுரு 5:2ல் உள்ள "மேய்த்தல்" என்ற அதே கிரேக்க வினைச்சொல், நடபடிகள் 20:28லும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சபையின் ஆவிக்குரிய நடத்துனர்களாகப் பணியாற்ற வேண்டியிருந்தவர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட எல்லா வார்த்தைகளிலும் ("மூப்பர்கள்," "மேய்ப்பர்கள்" அல்லது "கண்காணிகள்"), "மேய்ப்பர்கள்" என்பதைக் காட்டிலும் அதிகம் வண்ணமிக்கதோ அல்லது அதிகம் விவரிப்பானதோ வேறு எதுவும் இல்லை. இஸ்ரவேல் மக்களைப் பொறுத்தமட்டில், மேய்ப்பன் தனது மந்தையை மேய்த்தல் என்பது அவர்களின் புராதன காலத்திலிருந்தே அறியப்பட்டதாக இருந்தது, மேய்ப்பனாக இருந்து அரசரான தாவீது, தேவனுடைய மக்கள் இளையவர்களாகவும் பெருகுபவர்களாகவும் இருந்த காலத்தை நோக்கிப் பின்னோக்கிச் சென்றார். சங்கீதம் 23, தேவனை அவரது மக்களாகிய இஸ்ரவேலின் மேய்ப்பர் என்ற வகையில் கண்ணோக்கிற்று சாலொமோனின் உன்னதப்பாட்டு இஸ்ரவேலின் காதல் பாடல்கூட மேய்ப்பனின் உருவகத்தினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டு இருந்ததை விவரிக்கிறது, மிகவும் நினைவுகூரத்தக்கதான இயேசுவின் உவமைகளில் சில, பல நூற்றாண்டுகளாக வளர்ந்து பெருகியிருந்த மரபுவழிக் கதைகளின் மீது வரையப்பட்டன. மேய்ப்பன் தனது மந்தையோடு நாள் முழுவதும் வாழ்ந்து வந்தான். அவற்றில் ஒன்று இழந்துபோகப்படும்போது அல்லது வியாதிப்படும்போது அதை அவன் அறிந்திருந்தான். அவற்றை அவன் பாதுகாத்து அவற்றின் மீது கவனம் கொண்டிருந்தான். அப்போது அவைகள் அவனது பிழைப்புக்கு அடுத்தவையாகவும் அவனது பிரியத்துக்கு உரியவையாகவும் இருந்தன.

மேய்ப்பன் மற்றும் அவனது ஆடுகள் என்ற மாதிரியானது சபையின் ஆவிக்குரிய நடத்துவத்துவத்தில் உணர்ந்தறியப்படும்போது, மூப்பர்கள் தாங்கள் மேய்க்கும் **மந்தையின்** ஆவிக்குரிய, உணர்வுப்பூர்வமான மற்றும் உடல்சார்ந்த தேவைகளை அறிவார்கள். அவர்கள் அவற்றை நீதி மற்றும் சத்தியத்தின் பாதைகளில் நடத்தி வழிகாட்டுவார்கள். அவர்கள், பிரதான மேய்ப்பரான இயேசுவின் மீது சார்ந்திருப்பார்கள் (5:4; 2:25), மற்றும் அவர்கள் சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும், தேவபக்தியின் மாதிரியாக இருப்பார்கள். மேய்ப்பர் எந்த வேளையிலும் ஓய்ந்திருப்பதில்லை. அவர் எப்போதும் அங்கிருக்கிறார், எப்போதும் தனது பொறுப்புகள் பற்றிக் கவலை கொண்டிருக்கிறார், எப்போதும் அவற்றைப் பாதுகாப்பவராகவும் குணமாக்குபவராகவும் இருக்கிறார். அவரது பொறுப்பில் உள்ள ஒருவர் பலவீனமாகும்போது, அவரது ஆவிக்குரிய காயங்களைக் கட்டுவதற்கு மேய்ப்பர் அங்கு இருக்கிறார். மூப்பர்கள் கூட மிகவும் அடிக்கடி தங்கள்

மாதிரியை, தங்கள் மந்தைகளை மேய்க்கும் மேய்ப்பர்கள் உள்ள வயல் வெளிகளில் காண்பதற்கு மாறாக, இயக்குனர்களின் கூட்டுறவுக் கழகத்தில் காணுதல் என்பது துரதிர்ஷ்டவசமானதாக உள்ளது.

சபையில் ஆவிக்குரிய நடத்துனர்களாக இருக்க வேண்டியவர்கள் பற்றியும் "மூப்பர்" மற்றும் "மேய்ப்பர்" என்ற வார்த்தைகளில் அவர்கள் எவ்வாறு பணிசெய்ய வேண்டும் என்பது பற்றியும் பேதுரு சிலவற்றைக் கூறியிருந்தார். இந்தப் பண்புகளுக்குப் பின்னால்தான் அவர், **கண்காணிப்புச் செய்யுங்கள்** என்பதைக் கூடுதலாகக் கூறினார், இதன் வினைவடிவம் கிரேக்க மொழியில் நுட்பம் சார்ந்த வகையில் ஒரு எச்சவினையாக இருக்கையில், இது "மேய்ப்பராக இருங்கள்" என்பதற்கு இணையான ஒரு கட்டளையாகப் புரிந்துகொள்ளப்படுதல் என்பது, இலக்கணரீதியாகச் சாத்தியமற்றதாக உள்ளது. இந்த விஷயத்தில், மொழிபெயர்ப்பானது "Be a shepherd to the flock of God which is among you and exercise the oversight." என்று இருக்கும். "கண்காணிப்புச் செய்யுங்கள்" என்ற சொற்றொடரானது, *episkopeo.* என்ற கிரேக்க வினைச்சொல்லின் எச்சவினைக்குரிய வடிவமாக உள்ளது. இவ்வார்த்தையின் பெயர்ச்சொல் வடிவமான *episkopos* என்பது, நடபடிகள் 20:28, 1 தீமோத்தேயு 3:2 மற்றும் வேறொரு இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. KJV வேதாகமம் இந்தப் பெயர்ச்சொல்லை "bishop," என்று மொழிபெயர்த்துள்ளது, ஆனால் NASB மற்றும் NIV ஆகிய வேதாகமங்கள் இதை "overseer." என்று மொழிபெயர்த்துள்ளன.[3] பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் மாத்திரம் பவுல் தமது வாழ்த்துரையில் "கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார் (பிலிப்பியர் 1:1).

கிறிஸ்துவின் சபையை வழிநடத்த வேண்டியவர்களைக் குறிப்பதற்கு, ("மூப்பர்," "மேய்ப்பர்," "கண்காணி" என்ற) மூன்று வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவைகள் ஒரு ஆர்வமிக்க வண்ணத்தை வரைகின்றன. "கண்காணி" என்ற வார்த்தை, சபையை வழிநடத்துபவர்கள் அதிகாரம் செலுத்த வேண்டும் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. அவர்களின் அதிகாரம் என்பது, பட்டயங்கள் அல்லது துப்பாக்கிகளினால் ஏற்படுவதல்ல, ஆனால் அதற்கு மாறாக, அவர்களின் ஆவிக்குரிய மற்றும் ஒழுக்கரீதியான உதாரணத்தினால் ஏற்படுவதாகும். கடினமான கலந்துரையாடல்கள் ஏற்படவேண்டிய வேளைகள் சபையில் உள்ளன. அந்த வேளைகள் வரும்போது, சபையின் கண்காணியானவர் தேர்வுகளை ஏற்படுத்தும்படி நியமிக்கப்படுகிறார். அவர்களை சபையானது ஊக்குவிக்கவும் ஆதரிக்கவும் வேண்டும். பவுல், "அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்" என்று எழுதினார் (1 தெசலோனிக்கேயர் 5:12, 13).

சபையில் மூப்பராகப் பணிசெய்தலுக்கு கணிசமான அளவு ஆற்றலையும் நேரத்தையும் ஒப்புக்கொடுத்தல் தேவைப்படுகிறது. சிலவேளைகளில் இது ஒரு நன்றிக்குரியது அல்லாத வேலையாக உள்ளது. மூப்பர்கள் சில வேளைகளில் சபையினால் நிதி ஆதரவு பெறுகின்றனர், ஆனால் வழக்கமாக அவர்கள் அவ்வாறு பெறுவதில்லை. அவர்கள் அன்பினால் ஊழியம் செய்கின்றனர்.

அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்தவும் அவரது மக்களைக் கட்டியெழுப்பவும் விரும்புவதால், தாங்கள் செய்யும் பொறுப்பை மேற்கொள்கின்றனர். மனிதர்களின் ஆத்துமாக்களை மீட்பதில் கர்த்தருக்குப் பங்காளிகளாக இருக்க அவர்கள் விரும்புகின்றனர். அது **கட்டாயமாய் மேற்கொள்ள வேண்டிய** பணியல்ல. தேவபக்தியுள்ள மனிதர்கள், ஊழியத்தை மனவிருப்பத்தோடும், ஊக்கத்தோடும் **மனப்பூர்வமாயும்** மேற்கொள்கின்றனர். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி" என்று கூறினார் (எபிரெயர் 13:17). நல்ல மனிதர்கள் மூப்பத்துவத்தின் ஊழியத்தை ஏற்றுக்கொள்ளத் தவறுகிறபோது, குறைவான தகுதி உடையவர்களுக்கு அவர்கள் கதவைத் திறந்து விடுகின்றனர். இவ்வாறு நடக்கையில் பெரும்பாலும் விளைவு மோசமானதாக உள்ளது.

மூப்பர்கள் சபைகளினால் நிதி உதவிகொண்டு ஆதரிக்கப்படுதல் என்பது நவீனகாலத்தில் அசாதாரணமானதாக இருந்தாலும், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் அது சாதாரணமானதாக இருந்தது. மூப்பர் என்பவர் "இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவரா" க இருக்கக்கூடாது என்று தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறினார் (1 தீமோத்தேயு 3:3). உதவிக்காரர்கள் "இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களா" க இருக்கக்கூடாது (1 தீமோத்தேயு 3:8), மற்றும் மூப்பர்களும் அதுபோல் இருக்கக்கூடாது (தீத்து 1:7). மூப்பர்களும் உதவிக்காரர்களும் தாராளமனப்பான்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று மாத்திரம் இவ்வார்த்தைகள் அர்த்தப்படுத்துகையில், மூப்பர்கள் மற்றும் ஒருவேளை உதவிக்காரர்களும்கூடத் தங்கள் ஊழியத்திற்குக் கைமாறு அளிக்கப்பட வேண்டும் என்பது பொதுவான விஷயமாக இருந்தால் பவுல் அவர்களுக்கு இவ்வாறு எழுதினார். வேறொரு வேலை செய்தல் போல சபையிலும் மூப்பர்கள் பணிசெய்வதைப் பவுல் விரும்பவில்லை.

மூப்பர்கள் நிதி உதவியைப் பெறவேண்டும் என்று பவுல் எதிர்பார்த்தார் என்பதற்கு இன்னொரு குறிப்பு 1 தீமோத்தேயு நிருபத்தில் பிற்பாடு வருகிறது. பிரசங்கித்தலும் போதித்தலிலும் கடினமாக உழைக்கும் மூப்பருக்கு இரட்டிப்பான கனம் கொடுக்கும்படி பவுல் தமது உடன் ஊழியக்காரரும் இளைஞருமான தீமோத்தேயுவுக்கு புத்திகூறினார். பிரசங்கியார்களுக்கு உதவிசெய்தல் என்ற பாடக்கருத்தைக் கொரிந்தியர்களுக்கு எழுதியபோது பயன்படுத்திய அதே மொழிநடையை அவர் இங்கு பயன்படுத்தினார். "போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக" என்ற உபாகமம் 25:4ஐ அப்போஸ்தலர் மேற்கொள் காண்பித்தார், பின்பு அவர் "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்று கூடுதலாகக் கூறினார் (1 தீமோத்தேயு 5:18; காண்க 1 கொரிந்தியர் 9:9, 14). 1 கொரிந்தியர் நிருபத்தில் பவுல், பிரசங்கியார்களைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார்; 1 தீமோத்தேயு நிருபத்தில் அவர் மூப்பர்களைப் பற்றிப் பேசினார். இவ்விரு விஷயங்களிலும் உழைப்பவர் தமது கூலிக்குப் பாத்திரராக இருக்கிறார்.

பவுலைப்போன்றே பேதுருவும், மூப்பர்கள் கர்த்தருக்கென்று பிரயாசப்படுகையில் நிதி உதவி பெற வேண்டும் என்று எதிர்பார்த்ததாகக் காணப்படுகிறது. மூப்பர்கள் **அவலட்சணமான ஆதாயத்திற்காக** ஊழியம் செய்யக்கூடாது என்று அவர் கூறியது ஏன் என்பதை அது விளக்கப்படுத்தும். அதற்குப்பதிலாக அவர்கள் **உற்சாக மனதோடு** ஊழியம் செய்ய வேண்டும்.

சபையானது தனது மூப்பர்களுக்கு நிதி உதவியைக் கட்டாயம் தரவேண்டும் என்று முடிவை நாம் தரவழைத்துவிடக்கூடாது. இருப்பினும், அந்த நடைமுறை நல்லதே என்று பவுலும் பேதுருவும் நியாயமான வகையில் தெளிவாக்கினர். இல்லையென்றால், ஆதாயத்திற்காக ஊழியம் செய்தல் பற்றிய புத்திமதிக்கு இங்கு எவ்வித காரணமும் இருக்காது. மூப்பர்கள் தங்கள் ஊழியத்திற்காக நிதி உதவி பெறுதல் என்பது சாதாரணமானதாக இருந்ததால் இந்த புத்திமதி ஏற்புடையதாகவே இருந்தது. நவீன கால சபையும் இதையே செய்ய வேண்டுமா? பவுலும் பேதுருவும் எழுதிய வேளையில் இருந்ததைப் போன்றே, அது சூழ்நிலைகளைப் பொறுத்ததாக உள்ளது. முழுநேர ஊழியம் செய்ய வேண்டி இருந்தது என்றால், மற்றும் அந்தப்பொறுப்பை மேற்கொள்ள மூப்பர் ஒருவர் முன்வருவார் என்றால், அவருக்கு உதவி அளிக்க வேதாகம முன்னுதாரணம் தெளிவாக உள்ளது. சில விஷயங்களில், சுவிசேஷகரும்கூட மூப்பரின் பணியில் ஊழியம் செய்யலாம். மூப்பரோ அல்லது பிரசங்கியாரோ, அவருக்கு ஊழியம் செய்ய முழுநேரப் பொறுப்புத் தரப்படுகையில், "வேலை செய்பவர் கூலிக்குப் பாத்திரராக இருக்கிறார்."

நவீன காலங்களில், பிரசங்கியார்கள் அல்லது மூப்பர்கள் (மூப்பர்கள் ஊழியம் பெறுகிறபோது) ஐக்கிய அமெரிக்க நாட்டின், ஊதியம் கவன ஈர்ப்பில் இருக்கும்போது, அவர்கள் அளவீட்டில் உயர்ந்த பகுதியில் இருக்கவில்லை. அவர்களில் பெரும்பான்மையானவர்கள், ஒருசில பிரச்சனைகளை மாத்திரம் கொண்டிருந்து மற்றொரு தொழிலில் பயிற்றுவிக்கப்பட்டிருந்தால் கணிசமான அளவு அதிக ஊதியம் பெற்றிருக்க முடியும். ஒருவேளை அது மிகச்சிறந்த வழியாக இருக்கலாம். யோவான் சுவிசேஷப் புத்தகத்தில், கூலியாளுடன் ஒப்பிடப்பட்ட மேய்ப்பன் பற்றிய உவமை ஒன்றை இயேசு கூறினார் (யோவான் 10:11-15). ஊதியத்திற்காக மாத்திரம் ஊழியம் செய்பவர்களுக்குத் தேவனுடைய இராஜ்யத்தில் இடமில்லை. வயது முதிர்ந்த பிரசங்கியார்களிடம் அவர்களின் ஊதியம் பற்றி யாரேனும் கேள்வி கேட்டபோது, அவர்கள் (ஊழியக்காரர்கள்) அவமானப்படுத்தப் பட்டிருக்கின்றனர். உடனே அவர்கள் தாங்கள் ஊதியத்தை அல்ல, மாறாக உதவியையே பெறுவதாக அறியச்செய்வர். "நான் பிரசங்கிப்பதற்கு யாரேனும் எனக்கு ஊதியம் தரமுடியும் என்றால், நான் பிரசங்கியாதிருப்பதற்கும் அவர்கள் ஊதியம் தர முடியுமே" என்று அவர்கள் கூறுவார்கள். ஊதியத்திற்கும் உதவிக்கும் இடையே உள்ள வித்தியாசம் உண்மையில் ஒரு மழுப்புதலாகத் தான் உள்ளது என்று சிலர் விவாதிப்பார்கள். ஒருவேளை, ஆனால் பவுலும் பேதுருவும், சபையில் ஊழியம் செய்பவர்கள் வாரக்கடைசியில் ஒரு ஊதியக் காசோலைக்குப் பதிலாக அதிக நிலைப்பாடுள்ள விஷயத்திற்காக உழைக்க வேண்டும் என்று விரும்பினர்.

வசனம் 3. அரசியல்ரீதியான அலுவலகப்பணி, வியாபார நிறுவனம் அல்லது சபை ஆகியவற்றில் தனிநபரின் கைகளில் அதிகாரம் வைக்கப்படும்போது, தவறாகப் பயன்படுத்துதலுக்கு வலிவான வாய்ப்பு உள்ளது. அதிகாரம் கையளிக்கப்படவில்லை என்றால் அதிகாரம் இன்றி நடத்துவத்துவம் என்பது சாத்தியமற்றதாகும். சிலவேளைகளில் இந்த அதி காரம் என்பது, தனிநபர் தமது சொந்த நோக்கத்திற்குச் செயல்படும்படி பயன்படுத்தப்படக்கூடும். பொறுப்பான நடத்துவத்துவம் இன்றி எதையும் செய்தல் என்பது கடினமானது மற்றும் சாத்தியமற்றது என்பவற்றிற்கு

இடையில் எங்கோ இருப்பதால், சபையானது தன்னை, பொறுப்புள்ள தகுதிநிலைகளுக்குத் தான் தேர்ந்தெடுத்தவர்களிடம் ஒப்புவிக்கிறது. அதனால்தான் பேதுருவின் எச்சரிக்கை அவசியமாக இருந்தது. மூப்பர்கள் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட ***சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக*** *இருக்கக் கூடாது என்று அப்போஸ்தலர் கூறினார்.*

மூப்பர்கள் முதலாளிகள் அல்ல. தங்களைக் கிரயத்திற்குக் கொண்ட கர்த்தருக்கு முதலாவது ஒப்புக்கொடுத்தல் உள்ள ஆவிக்குரிய குடும்பத்தை அவர்கள் வழிநடத்துகின்றனர் (1 கொரிந்தியர் 6:20). அரசியல் தலைவர்கள் செய்வது போன்று மூப்பர்கள் காவல்துறை அதிகாரத்தின் செல்வாக்குப் பெற்றிருப்பதில்லை. ஒரு வியாபார நிறுவனத்தில் செய்வது போல அவர்கள் சபையைப் பணத்தைக் கொண்டு கட்டுப்படுத்துவதில்லை. அவர்கள் தங்களின் ஒழுக்கரீதியான நெறிமுறை மற்றும் ஆவிக்குரிய பிரசன்னம் மற்றும் இயேசுதங்களுக்குக்கொடுத்ததயவுள்ளஅதிகாரத்தினால்சபையைவழிநடத்துகின்றனர். மூப்பர் பணியை ஏற்றுக்கொள்ளுதல் என்பது ஒரு பிரபுவாக ஆவதல்ல; அது ஒரு ஊழியக்காரர் ஆவதாகும். பேதுரு கர்த்தர் பின்வருமாறு கூறியதன் அடிப்படையில் இந்தப் புத்திமதியை மூப்பர்களுக்குக் கூறியிருக்கக் சாத்தியக்கூறு உள்ளது:

> *புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன் (மாற்கு 10:42, 43).*

இயேசு மற்றும் பேதுரு ஆகிய இருவருமே "இறுமாப்பாய் ஆளுகிறார்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட இடத்தில் (katakurieu.. என்ற) அதே கிரேக்க வார்த்தையையே பயன்படுத்தினர்.

"உங்களிடத்திலுள்ள" ["your charge"] *என்பதன் அர்த்தம் பற்றிக் கணிசமான அளவு கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. மூப்பர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட* "charge" [*பொறுப்பு*] *என்பதன் இயல்பு என்னவாக உள்ளது?* "Your" *என்ற வார்த்தை* NASB *வேதாகம மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தறிதலுடன் இந்த சிரமம் மிகவும் தெளிவாகிறது, மற்றும்* "charge" *என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை* "charges" (*tōn klērōn*) *என்று பன்மைச் சொல்லாக உள்ளது. இவ்வார்த்தை நேரடியாக "சீட்டுகள்" என்று அர்த்தப்படுகிறது, உதாரணமாக, யூதாஸின் இடத்திற்கு அப்போஸ்தலராக இருக்கும்படி மத்தியா தேர்ந்துகொள்ளப்பட்ட வேளையில் சீட்டுப் போடப்பட்டது (நடபடிகள் 1:26). இது "ஒப்புவிக்கப்பட்ட பகுதி" என்பதை அர்த்தப்படுத்த உவமை வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஒருவேளை இது சுதந்தரமாகக் கிடைத்த சொத்து அல்லது பொறுப்பு வட்டாரத்தில் ஒப்புவிக்கப்பட்ட பகுதி என்பதைக் குறிப்பிடலாம்.[4] இவ்வார்த்தையானது, உள்ளூர் சபைக்குழுமம் ஒன்றில், மூப்பர்கள் உறுப்பினர்களைப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொருவரும் குழுவிற்குப் பொறுப்பாளிகளாக இருந்தனர் என்று கருத்துத் தெரிவிப்பதாகச்*

சிலர் நினைத்துக் கொண்டுள்ளனர். அந்த அர்த்தம் சாத்தியப்பொருத்தம் அற்றதாக உள்ளது, வேறு காரணம் எதுவும் இல்லை என்றாலும்கூட, புதிய ஏற்பாட்டின் வேறு ஏதாவது இடத்தில் ஒரு பயன்பாடு அறியப்படாததாக இருக்கிறது என்ற ஒரு காரணமே இதற்குப் போதுமானது. இந்த முழு உலகத்தையும் கர்த்தருடைய சபையின் கோளம் என்று பேதுரு கருதியிருக்க அதிக வாய்ப்புள்ளது (5:9). மூப்பர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட "பொறுப்புகள்" என்று பேதுரு குறிப்பிட்டது, "பல்வேறு மூப்பர்கள் அல்லது மூப்பர்களின் குழுக்களின் பராமரிப்பின்கீழ் விடப்பட்ட உலகளாவிய மந்தையின் பகுதிகளை" குறிப்பதாக உள்ளது.[5]

மூப்பர்கள், "தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட மந்தையை இறுமாப்பாய் ஆளாமல்" தங்களை **மந்தைக்கு மாதிரிகளாக** நிருபிக்க வேண்டும். நல்ல நடத்துனர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதற்குரிய பண்புகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னர் அவர்களே அதைத்தங்கள் வாழ்வில் செயல்படுத்துதல் என்பது அவர்களின் உள்ளார்ந்த குணமாக இருக்கிறது. "மாதிரி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை 2:21ல் மாறுபட்டிருந்தாலும், சிந்தை ஒன்றாகவே உள்ளது. எல்லாக் கிறிஸ்தவர்களையும்போல, மூப்பர்களும் கிறிஸ்துவுக்குள் ஒரு மாதிரியைக் கொண்டுள்ளனர், ஆனால் அவர்கள் மூப்பர்களாக இருப்பதால், மாதிரியாயிருக்க விசேஷித்த பொறுப்பைக் கொண்டுள்ளனர். மூப்பர்கள் தங்களின் ஜெபவாழ்வில், வேதவாக்கியங்கள் பற்றிய தங்களின் அறிவில், இழந்து போகப்பட்டுள்ளவர்களுக்காகத் தாங்கள் கொண்டுள்ள அக்கறையில், தங்களின் பொறுமையும் நீடிய பொறுமையுமான வழியில், தங்களின் கண்ணியமிக்க பண்பில், தங்களின் பராமரித்தலுக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ள மக்களுக்கு "மாதிரியாக" (*tupos*) இருக்க வேண்டும். தெசலோனிக்கேயருக்குப் பவுல், அவர்கள் மீதான தமது உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள மறுத்தபோது, சபைக்கு மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்ததாகக் கூறினார் (2 தெசலோனிக்கேயர் 3:9). கிறிஸ்தவத் தலைமைத்துவத்திற்கு, "அதிகாரம்" என்பது இயக்கும் வார்த்தையல்ல; "ஊழியம் செய்தல்" என்பதே இயக்கும் வார்த்தையாகும். "அல்ல ..., [ஆனால்] இவ்வாறு ..." என்பதன் அடிப்படையில் சொற்றொடர்களைப் பேதுரு பயன்படுத்தியது இது மூன்றாவது முறையாகும். மூப்பர்கள் (1) கட்டாயமாய் அல்ல ஆனால் மனப்பூர்வமாக ஊழியம் செய்ய வேண்டும், (2) அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல ஆனால் உற்சாக மனதோடு ஊழியம் செய்ய வேண்டும், மற்றும் (3) இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல ஆனால் மாதிரிகளாக ஊழியம் செய்ய வேண்டும்.

வசனம் 4. மூப்பர்களுக்குக் கிறிஸ்துவே மாதிரியாக இருந்தார் என்று பேதுரு நினைவூட்டினார். அவர்கள் மேய்ப்பர்களாக இருக்கையில், அவர் [கிறிஸ்து] **பிரதான மேய்ப்பர்** ஆக இருந்தார். பேதுரு இயேசுவை ஏற்கனவே "உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவர்" என்று அழைத்திருந்தார் (2:25). மூப்பர்கள் மந்தையைப் பராமரிக்கின்றனர், ஆனால் இயேசு மேய்ப்பர்களின் மேய்ப்பராக இருக்கிறார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இயேசுவை, "ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தர்" என்று விவரித்தார் (எபிரெயர் 13:20). இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்களை வழிநடத்துதல், மேய்த்தல் மற்றும் போஷித்தல் என்ற தமது

பொறுப்பை உண்மையுடன் நிறைவேற்றுகையில், கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றும்படி மூப்பர்களிடம் பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டார்.

ஒரு கிறிஸ்தவர் எவ்விதமான வரங்களைக் கொண்டிருந்தாலும், அவருக்குக் கர்த்தர் எந்த வாய்ப்புகளைத் திறந்தளித்தாலும், அவர் தமது ஆசீர்வாதங்களைத் தாம் பயன்படுத்தும் வகை குறித்துப் பொறுப்பாளியாக இருக்கிறார். இயேசு, **"எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்"** என்று கூறினார் (லூக்கா 12:48). மூப்பர்களுக்குத் தேவன் மாபெரும் ஆசீர்வாதங்களையும் மாபெரும் பொறுப்புக்களையும் கொடுக்கிறார். மூப்பர்கள் தங்கள் கடமைகளை உண்மையுடன் தாங்கள் செய்யும்போது, தங்களுக்கு "பிரதான மேய்ப்பர்" வெகுமதி அளிப்பார் என்பதை நினைவூட்டப்படுகின்றனர், அவரிடத்தில் இருந்து அவர்கள் **மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவார்கள்.**

புதிய ஏற்பாட்டில் இரண்டு வார்த்தைகள் "கிரீடம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மிகவும் பொதுவானதாக உள்ளது *stephanos* என்பதாகும், இது "வெற்றியாளரின் தலையணி" என்று அர்த்தப்படுகிறது. கிரேக்க மொழிபேசும் எல்லா நகரங்களில் ஏறக்குறைய எல்லா நகரங்களும் தங்கள் சொந்த விளையாட்டு வீரர்கள் அயலக நகரங்களின் வீரர்களுக்கு எதிராக போட்டியிடும் விளையாட்டுகளில் உதவிசெய்தன. இத்துடன் கூடுதலாக, எல்லா கிரேக்கர்களுக்குமான "Pan-Hellenic" என்று அவர்கள் அழைத்த விளையாட்டு நடைபெற்றன. இந்த விளையாட்டுகள் நடந்த பழைமையான இடம் ஒலிம்பியா. அங்கு இரண்டாவது பரிசு என்று எதுவும் இருக்கவில்லை. விளையாட்டு நடக்கும் இடத்தில் விளையும் பாரம்பரியமான பசுஞ்செடிகொடிகளினால் செய்யப்பட்ட தலையணியை வெற்றியாளர் பெற்றார். கிரீடம் என்று மொழிபெயர்க்கப்பட்ட இரண்டாவது வார்த்தை "crown" என்பதாகும், இது வெளிப்படுத்தின விசேஷத்தில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது *diadēma* என்பதாகும். இவ்வார்த்தை "ஆட்சியாளரின் கிரீடம்" என்றே அதிகம் ஏற்புடைய வகையில் அர்த்தமாகிறது. இது பொருள் வளம் மற்றும் அதிகாரம் ஆகியவற்றைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. இவ்விரு வார்த்தைகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் எப்போதுமே நேர்த்தியாக வரையப்படுவதில்லை. இவ்வாறாக வெளிப்படுத்தின விசேஷம் 14:14ல் இயேசு பொன்னால் ஆன கிரீடத்தை (*stephanos*) அணிந்துள்ளார், ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 19:12ல் அவர் அநேக கிரீடங்களை (*diadēma*) அணிந்துள்ளார்.

இயேசுவுக்கு சூட்டப்பட்ட முள்கிரீடம் *stephanos* என்பதாக இருந்தது (மத்தேயு 27:29). யூதப்போர்ச்சேவகர்கள் அவருக்கு முன்னால் வணங்கி அவரை "யூதரின் அரசர்" என்று அறிவித்துக் கேலி செய்தனர். அந்த சந்தர்ப்பப்பொருளில் "கிரீடம்" என்பது ஆட்சிசெய்பவரின் கிரீடம் என்று புரிந்துகொள்ளப்பட்டது என்பது தெளிவு. தக்க வகையில் பேசுவது என்றால், ஆட்சியாளரின் கிரீடம் *diadema* என்பதாகும், ஆனால் சில சந்தர்ப்பப்பொருளில் வார்த்தைகள் எவ்வாறு ஒன்றுக்குப்பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதைக் காணுதல் சிரமமானதல்ல. விசுவாசிகளுக்குப் பரலோகத்தின் வெகுமதி என்பது பொருளாக இருக்கும்போது, "கிரீடம்" என்ற வார்த்தையின் அர்த்தம் வெறும் கல்விசார் ஆர்வமாக மாத்திரம் இருப்பதில்லை. கிறிஸ்தவர்கள்

ஆவலுடன் நம்பியிருக்கும் வெகுமதியானது, கிறிஸ்தவ வாழ்வின் மதிப்புகளையும் உயர்கொள்கைகளையும் பற்றிப் பெரிதும் கூறும் அளவுக்கு மாபெரும் தன்மை கொண்டுள்ளது. இவ்வார்த்தை, விளையாட்டுகளில் தரப்படும் "தலையணி" அல்லது ஒரு அரசர் அணியும் "கிரீடம்" என்ற இரண்டில் எதை அர்த்தப்படுத்தினாலும், அது வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. அது முதல் அர்த்தம் கொண்டிருந்தால், கிறிஸ்தவர்களின் "கிரீடம்" வெற்றியை அடையாளப்படுத்துகிறது. கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசி, பாவம் மரணம் ஆகியவற்றின் மீது வெற்றி சிறக்கிறார். இவ்வார்த்தை "மணிமகுடம்," அதாவது ஆட்சி செய்பவரின் கிரீடம் என்ற அர்த்தம் கொண்டிருந்தால், பரலோக வட்டாரங்களில் ஐசுவரியம் மற்றும் வல்லமை ஆகியவற்றை மகிழ்வுடன் அனுபவித்தலே கிறிஸ்தவர்களின் நோக்கமாயிருக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கிறது.

பேதுரு, "பிரதான மேய்ப்பர் மகிமையுள்ள வாடாத கிரீடத்தை" கொடுப்பார் என்று கூறியது கவனிக்கத் தக்கதாக உள்ளது. அரசாளுபவரின் மணிமகுடம் வாடும் என்று எவரும் எதிர்பார்க்க மாட்டார்கள். அது அழுக்காகலாம், ஆனால் அது வாடிப்போவதில்லை. இதற்கு மறுபுறம், பசுங்கொடிகளால் செய்யப்பட்ட தலையணி விரைவில் வாடிப்போகும், பேதுருவைப் போன்றே பவுலும், பரலோகத்தின் வெகுமதியைப் பற்றி அழிவில்லாத கிரீடம் என்று குறிப்பிட்டுப் பேசினார் (1 கொரிந்தியர் 9:25). பசுங்கொடியானது எளிதில் அழியக்கூடியது, அது விரைவில் அழுகிப்போகக் கூடியது. பேதுரு அல்லது பவுல், விசுவாசிகளுக்குப் பரலோகத்தின் வெகுமதி என்ற வகையில் கிரீடத்தைப் பற்றிப் பேசியபோது, அவர்கள் இருவருமே, ஆளுகை பற்றியதல்ல ஆனால் வெற்றியைப் பற்றியதான சிந்தனையைத் தரவிரும்பினர். இந்த உலகத்தில் மற்றவர்கள் மீது பிரபுத்துவ அதிகாரம் செலுத்துதலைக் கிறிஸ்தவர்கள் குறிக்கோளாகக் கொண்டிருக்கவில்லை என்றால், வரவிருக்கும் யுகத்தில் அவர்கள் பிரபுக்களாக இருக்க விரும்பவேண்டியது ஏன்? கிரீடத்தின் கருத்து செல்வ வளம் மற்றும் வல்லமை என்றிருக்கையில், அது கிறிஸ்தவரின் சிந்தனையில் பின்னிப்பிணைந்துள்ளது. விசுவாசிகள் தங்கள் பாடல்களிலும் தங்கள் ஜெபங்களிலும் அதைப் பிரதிபலிக்கின்றனர், ஆனால் அது தவறான உயர்நோக்கம் ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பரலோக வட்டாரம் எதைப்போன்று இருந்தாலும், சமாதானத்தின் பிரபுவினால் தரப்படும் வெகுமதியானது "ஒரு கட்டிடம், ஒரு உடை மற்றும் ஒரு கிரீடம்" ஆகியவற்றினால் அடையாளப்படுத்தப்படுதல் மிகவும் அரிதானது. அது இளைப்பாறுதல், வெற்றி மற்றும் ஊழியம் செய்தல் ஆகியவற்றினால் அடையாளப்படுத்தப்படுகிறது.

தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் (5:5-8)

5அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். 6ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். 7அவர்

உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். [8]தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.

மூப்பர்கள் [சபையை] வழிநடத்துவதற்கு, பின்பற்ற மனவிருப்பம் கொண்ட மக்கள் இருக்க வேண்டும். சபையானது ஒரே சிந்தைகொண்ட மக்களைக் கொண்ட இராஜ்யமாக உள்ளது, அவர்கள் தேவனுக்கும் அவர் தங்களுக்கு முன்வைத்துள்ள உயர்கொள்கைகளுக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இருக்கின்றனர். பலவந்தம் பண்ணுதலோ அல்லது கட்டாயப்படுத்துதலோ அங்கு இருப்பதில்லை, மேட்டிமையும் முரட்டுத்தனமும் தேவனுக்கு எதிரான சிந்தையின் கட்டமைப்பிற்கு அடிப்படையாக உள்ளன என்பது உண்மையானால்,[6] தாழ்மையும் கீழ்ப்படிதலும் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட சிந்தைக்கு முன்தேவைகளாக உள்ளன என்பது தொடருகிறது. கீழ்ப்படிதல் என்பது எரிச்சல் மூட்டுவதாக இருக்கலாம், கீழ்ப்படிவதற்கு ஒருவர், பிறருக்குத் தமது முடிவை பணிவிணக்கத்துடன் காண்பிக்க, அவ்வப்போதாகிலும் மனவிருப்பம் கொண்டிருக்க வேண்டும். அரசுகளுக்குக் கீழ்ப்படிதல் *(2:13-17)*, எஜமானர்களுக்கு அடிமைகள் கீழ்ப்படிதல் *(2:18-20)* மற்றும் கணவர்களுக்கு மனைவிகள் கீழ்ப்படிதல் *(3:1-7)* ஆகியவற்றைப் பற்றிப் பேதுரு ஏற்கனவே எழுதி இருந்தார். இங்கு அவர், மூப்பர்களுக்கு இளைஞர்கள் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார். கிறிஸ்தவர்களுக்கு கீழ்ப்படிதல் தரப்பட்டுள்ளது, அது கட்டாயப்படுத்தப்படுவதில்லை. அது தேவனுக்கு முன்பாகத் தாழ்மையுடன் நிற்பதன் இயல்பான விளைவாக உள்ளது. அது, வாழ்வு மாயையானது, பிறப்பு, இறப்பு அல்லது இவற்றிற்கு இடையில் உள்ள பல விஷயங்கள் ஆகியவற்றின்மீது நாம் கட்டுப்பாடு எதையும் செலுத்த இயலாது என்பதை அங்கீகரித்தலாக உள்ளது. இது, தேவன் கட்டுப்படுத்துகிறார் என்பதை அறிக்கையிடுதலாக உள்ளது.

வசனம் 5. "மூப்பர்கள்" என்பது சபையின் நடத்துனர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சொற்றொடர்களில் ஒன்றாக இருப்பதால், கீழ்ப்படிதல் பற்றிய தமது அறிவுறுத்தலைப் பேதுரு **இளைஞர்களை** நோக்கித் திருப்பியது இயல்பானதாகவே உள்ளது. சபையின் நடத்துவத்துவம் ஆண்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இங்கு மறைவான கருத்தாக உள்ளது. முதிர் வயது உள்ள ஆண்கள் நடத்தவேண்டும் என்பதால், சபை ஆளுகை பற்றிய விஷயங்களில் கீழ்ப்படிதலுக்கான புத்திகூறுதல் இளைஞர்களை நோக்கித் திருப்பப்பட்டுள்ளது. நவீன மேற்கத்திய கலாச்சாரத்தில் பெண்கள், குடிமை, பொருளாதார மற்றும் சபை வாழ்வில் அதிகம் செயல்துடிப்பு கொண்டுள்ளனர், கீழ்ப்படிதலுக்கான அதே அழைப்பு அவர்களுக்கும் நடைமுறைப்படுகிறது.

பேதுரு "இளைய மனிதர்களுக்கு" ["young men"] (*neos*) அல்ல, ஆனால் "மற்றவர்களைக் காட்டிலும் இளைய மனிதர்களுக்கு" ["younger men"] (*neōteros*) இதை உரைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது

ஆகும், ஒருவேலை அப்போஸ்தலர், தமது சொற்றொடர்கள் முற்றிலும் இணையானவையாக இருக்கவில்லை என்பதை உணர்ந்தறிந்தவராக, ஒப்புமைப் பெயர் உரிச்சொல்லைப் பயன்படுத்தியிருக்கலாம். “Younger” என்பது ஆண்டுக்கணக்கீட்டின்படி வயதைக் குறிப்பதாக உள்ளது, ஆனால் “மூப்பர்” என்பது சபையில் உள்ள ஒரு பணிநிலையைக் குறிப்பதாக உள்ளது.[7] **மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள்** என்பது, வம்சவழி கருத்தில் வயது முதி ர்ந்தவர்களை அல்ல, ஆனால் சபையின் பணிநிலையைக் குறிப்பிடுகிறது என்பதில் சிறிதளவே சந்தேகம் இருக்க முடியும். “மூப்பர்கள்” அல்லாத கிறிஸ்தவர்கள், தங்களின் நடத்துனர்களுடைய முடிவிற்கு இசைவிணக்கம் காண்பிக்கும்படி, அவர்கள் ஏற்படுத்தும் முடிவுகளில் அவர்களை ஆதரிக்கும்படி, அவர்களின் ஊழியத்தின் நிமித்தம் அவர்களை மதிக்கும்படி மற்றும் அவர்களின் சார்பாக தேவனிடம் ஜெபங்களை ஏறெடுக்கும்படி பேதுரு அழைத்தார்.

கீழ்ப்படிதல் என்பது வற்புறுத்தப்படுவதாக உள்ளது என்று கருதுபவர்களுக்கு அல்லது தங்கள் கருத்துக்கள், தங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மூப்பர்களின் கருத்துக்களை விட மேலானவை என்று கருதுபவர்களுக்கு, தாழ்மை என்பதே நெறிமுறையாக இருந்தது என்று பேதுரு நினைவூட்டினார். நீங்களெல்லாரும் **ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்.** எல்லா விசுவாசிகளும் தங்கள் உறவுமுறையில் பண்புப்படுத்த வேண்டிய சிந்தையின் சட்டகத்தினுடைய விரிவான குடையின்கீழ் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பதை அப்போஸ்தலர் வைத்தார். “அணிந்துகொள்ளுங்கள்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*enkomboomai* என்ற) வார்த்தை, மிகவும் அரிதானதாக, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுவதாக உள்ளது. குறிப்பாக இது, ஒரு நபரைச் சுற்றிலும் பிணைத்து அணியச்செய்யும் மேலங்கி அல்லது உள்ளாடையைப் பாதுகாக்க வெளியே அணியப்படும் உடை என்பதைக் குறிக்கிறது. இவ்வார்த்தை, இயேசு தாழ்மையைப் போதித்ததோடு அதைச் செயல்விளக்கமும் செய்து காண்பித்தார் என்பதற்கு ஒரு நினைவூட்டுதலாக உள்ளது. அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தின இரவில், அவரும் சீஷர்களும் ஒரு மேல் வீட்டில் கூடியிருந்தபோது, இயேசு தமது மேல் அங்கியைக் களைந்து புறம்பே வைத்துவிட்டு, தண்ணீர்ப் பாத்திரம் ஒன்றை எடுத்துக்கொண்டு, பன்னிருவரின் பாதங்களைக் கழுவினார். “ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்” என்று கூறி அவர் இந்த நிகழ்வை முடித்து வைத்தார் (யோவான் 13:14, 15). “நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்” என்ற பேதுருவின் புத்திமதிக்கு இயேசுவின் வாழ்வே விளக்கமாக உள்ளது.

பேதுரு இந்த நிருபத்தில் மற்ற இடங்களில் செய்திருந்தது போன்ற (1:24, 25; 2:6-8; 3:10-12), இங்கும் வேதவசனத்தில் இருந்து ஒரு மேற்கோளுடன் தமது புத்திமதியை ஆதரித்து மறுவலியூட்டினார். இது நீதிமொழிகள் 3:34ல் இருந்து வருகிறது: **பெருமையுள்ளவர்களுக்குத் தேவன்**

எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார், இதே வசனப்பகுதியை யாக்கோபும் சுட்டிக் காண்பித்தார் (யாக்கோபு 4:6), இது பேதுருவின் முதல் நிருபத்திற்கும் கர்த்தருடைய சகோதரரின் நிருபத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றிய ஆர்வமிக்க பல விஷயங்களில் ஒன்றாக உள்ளது. நீதிமொழிகளிலிருந்து வரும் மேற்கோளானது "பெருமை" என்பது "தாழ்மை" க்கு எதிரிடையானது என்பதை சுட்டிக்காட்டுகிறது. இருப்பினும், சமகாலத்திய பயன்பாட்டில், "பெருமை" என்பது நன்கு செய்யப்பட்ட ஒரு வேலையில் திருப்தியை அல்லது சுயமதிப்பு பற்றிய கருத்தைச் சிலவேளைகளில் குறிக்கிறது. "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" என்ற மொழிபெயர்ப்பு, பேதுருவின் கட்டளையினுடைய கருத்தறிவைப் பெற்றுத் தருகிறது. "தாழ்மையுள்ளவர்கள்" என்பது மூப்பர்களுக்கு "கீழ்ப்படிந்திருக்க" மனதுள்ளவர்களைக் குறிக்கிறது, ஆனால் இந்த மேற்கோளானது கீழ்ப்படிதலை இன்னொரு மட்டத்திற்கு எடுத்துச் செல்கிறது. இது தேவனுடைய மக்கள் மற்றவர்களின் தேவைகளைக் கண்ணோக்கத் தங்கள் சிந்தைகளை எடுத்துச் செல்லுதலைப் பண்புப்படுத்துகிறது. "ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்" (ரோமர் 12:16).

வசனம் 6. பேதுரு இங்கு குறிப்பிட்டது போன்று, சபைகளில் பின்வருமாறு கூறுதல் போன்ற பழமொழி ஒன்று இருந்திருக்கும்: **ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.** இந்த வார்த்தைகள் பழமொழி சார்ந்தவைகளாக இருந்தன என்றால், அது யாக்கோபு இதே சொற்றொடரைப் பயன்படுத்தியது ஏன் என்பதை விளக்கப்படுத்துவதாக இருக்கும் (யாக்கோபு 4:10). ஒருவர் தம்மையே தாழ்த்த விரும்புதல் என்பது அவர் கீழ்ப்படிதல் உள்ளவராக இருக்க விரும்புகிறார் என்பதுடன் தொடர்புடையதாக இருப்பதில்லை. எந்த மட்டத்திலும் (குடிமை அரசு, இல்லம் அல்லது சபை) கீழ்ப்படிதல் என்பது ஒருவர் தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் இருக்க மனவிருப்பம் கொண்டுள்ளாரா என்பதைப் பொறுத்ததாக உள்ளது. தேவனுக்கு எதிராக மனிதரின் கலகத்தினுடைய வேர் என்பது "தேவனுடைய பலத்த கைக்குள்" அடங்கி இருக்க மனவிருப்பம் இல்லாமை என்பதாகவே இருந்துள்ளது என்று கூறுவது தவறல்ல. இவ்வசனப்பகுதி, தேவன் தமது மக்களைச் செயல்துடிப்பற்ற, விருப்பமற்ற வகையில் கீழ்ப்படிதல் என்பதைக் காட்டிலும் அதிகமானதற்கு அழைக்கிறார் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது என்று ஆலன் ஸ்டிப்ஸ் அவர்கள் உற்றுநோக்கியது சரியே. தேவன் தமது மக்களிடம், செயல்துடிப்பான பங்கேற்பையும், அவர்களின் மனப்பூர்வமான நம்பிக்கையையும், அவர்களின் விசுவாசத்தையும் விரும்புகிறார்.[8] ஒருவர் தேவனுக்கு முன்பாகத் தம்மை உயர்த்தி அவரது நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ளுதல் என்பதே இதற்கு மாற்றானதாக உள்ளது.

முரண்பாடு போலத் தோன்றினாலும், மேன்மையடைதலுக்கான வழி கீழ்ப்படிதல் மூலமானதே. மனிதகுலத்தின் பொதுவான அனுபவம், பின்வரும் கொள்கைக்குச் சாட்சியைச் சுமக்கிறது: "தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன்

அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" (யோவான் 12:25). தமது சொந்த படைப்புயிர் சந்தோஷங்களுக்காகத் தமது ஆற்றல்களை அர்ப்பணித்துள்ள ஒருவர், ஜீவன் வழங்கக் கூடிய நன்மை யாவற்றையும் இழந்து போகிறார். சுய மேன்மைப்படுத்திக் கொள்ளுதல் ஒருக்காலும் வேலைக்கு ஆவதில்லை. தாவீது, உறங்கும் தமது எதிரியின் மேலாக நின்றுகொண்டு, செயல்விளைவில் "தேவன் இவரைத் தேர்ந்துகொண்டுள்ளார். இவரை உயர்த்துவதோ அல்லது தாழ்த்துவதோ தேவனுடைய செயலாக உள்ளது. கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவருக்கு எதிராக நான் எனது கையை உயர்த்த மாட்டேன்"என்று கூறியபோது இருந்ததைக் காட்டிலும் அதிகம் தேவபக்தி உடையவராக வேறு எந்த வேளையிலும் இருக்கவில்லை (காண்க 1 சாமுவேல் 26:9-11). திருமண விருந்திற்குச் சென்று மிகவும் உயர்ந்த இடத்தைக் கண்டறியத் தேடிய ஒரு மனிதர் பற்றிய உவமையை இயேசு கூறினார். பேதுருவின் வார்த்தைகள் இயேசு தமது உவமையின் முடிவில் பயன்படுத்திய வார்த்தைகளைப் போன்றே உள்ளன: "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக்கா 14:11).

வசனம் 7. *சுயமேன்மைக்கு எதிரான கருத்தானது, ஒருவர் தன்மையே தாழ்த்திச் செல்லும் வழியாக உள்ளது, இது (ஒருவர் தமது)* ***கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடு****தலாக உள்ளது.* KJV *வேதாகமத்தின் தரவழைப்பான* "casting all your care upon him" *என்பது சற்றே தவறாக வழிநடத்துவதாக உள்ளது. நவீன ஆங்கிலத்தில்* "care" *என்பது ஒருவர் மற்றவர் மீது காண்பிக்கும் அக்கறையாக உள்ளது. அக்கறைப்படுதல் நல்லதுதான். பேதுரு பயன்படுத்திய (merimna)* ***"கவலை"*** *என்ற வார்த்தை ஒரு நல்ல விஷயமல்ல என்பதை அர்த்தப்படுத்துகிறது. வாழ்வில் நிச்சயம ற்ற தன்மைகளினால் அழுத்திக் கீழ்த்தள்ளப்பட்டு, ஏக்கமும் கவலையும் கொண்டிருக்கச் சாய்தல் என்பது மனித சூழ்நிலையின் உள்ளாகவே கட்டப்பட்டுள்ளது. இது "மனிதரின் அன்றாட வாழ்வில் அவர்மீது வீழ்கின்ற ஏழ்மை, பசி மற்றும் பிற தொந்தரவுகள் ஆகியவற்றிற்கு அவரது இயல்பான பதில்செயலாக உள்ளது. மனிதர் தம்மீது சுமத்தப்படுகிற சுமைகளினால் அழுத்தப்பட்டு, தாம் ஆற்றலற்று முன்நிற்கும் வலிய விதிக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டுள்ளதாகக் கற்பனை செய்கிறார்."[9] பேதுரு தமது வாசகர்களுக்கு, அவர்கள் விதிக்கோ அல்லது தற்செயலுக்கோ ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தினார். தேவன் இந்த உலகத்தின் மீது கட்டுப்பாடு செலுத்துகிறார்; அவர்மீது நாம் நமது இடர்பாடுகளை வைத்து விடலாம்.*

பேதுரு தமது வார்த்தைகளுக்கு நேரடியாக மேற்கோள் காண்பிக்கவில்லை என்றாலும், சங்கீதம் 55:22ஐச் சார்ந்திருப்பதாகக் காணப்பட்டார்: "கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்." வற்புறுத்தும் புத்திமதிகளைப் பல சங்கீதங்கள் அளிக்கின்றன, இவை பேதுருவின் இந்த அழைப்பில் மறுவலியூட்டப்படுகின்றன, உதாரணமாக "தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (சங்கீதம் 145:18). வார்த்தை அமைப்பு நெருக்கமாக இல்லாதிருக்கையில், மத்தேயு 6:25-34 ன்

கருத்தும் இதைப்போன்றே உள்ளது: "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?" (மத்தேயு 6:25). பேதுரு மற்றும் இயேசு ஆகிய இருவருக்குமே, "கவலை என்பது, தேவன் நமது நலத்தைக் காணக்கூடாதவர் அல்லது அதைச் சாய்க்கக் கூடாதவர் என்ற உள்ளுணர்வை ஆழமாய்ப் பதிக்கக் கூடிய விஷயமாக இருந்தது."[10]

கர்த்தருடைய மக்கள் தங்கள் கவலைகளைத் தைரியமாய் அவர்மேல் வைக்கலாம் என்பது ஏன் என்பதற்கு நல்ல காரணம் ஒன்றுள்ளது. அப்போஸ்தலர், **அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால்** என்று கூறியதன் மூலம் தமது வாசகர்களுக்கு மறு உறுதிப்பாடு அளித்தார். பேதுருவின் நிருபத்தினுடைய முதல் வாசகர்கள் அனுபவித்தது போன்று, கிறிஸ்துவின் நாமத்தை அணிந்து கொண்டதற்காக, துன்புறுத்தப்படுதலை ஒருவர் எதிர்கொண்டாலும் அல்லது நிதிநிலைப் பாதுகாப்பு இன்மை அல்லது வியாதி மற்றும் மரணம் ஆகியவற்றை எதிர்கொண்டாலும்- கிறிஸ்தவர் மீது எவ்விதமான கவலை வீழ்ந்தாலும் அவர், தம்மைத் தேவன் பராமரிக்கிறார் என்ற தைரியத்தில் அவற்றைத் தாங்க முடியும். இயேசு கிறிஸ்து மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட தேவன் தமது மக்களைக்குச் சொந்தமான பிதாவாக இருக்கிறார். அவர் வானத்தையும் பூமியையும் படைத்துவிட்டுப் பின்பு அதில் இருந்து பின்வாங்கிப்போன ஆர்வமற்ற ஆர்வலராக இருப்பதில்லை. அவர் தமது மக்களின் வாழ்வில் ஜீவிக்கிறார். அவரது அருளிரக்கமுள்ள பராமரிப்பு எப்போதுமே செயல்படுகிறது. "தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" (1 யோவான் 4:16). சாலொமோனின் ஞானம் என்று அழைக்கப்படுகிற தள்ளுபடி ஆகமங்களில் ஒரு புத்தகம் இதே சிந்தனையை அளிக்கிறது: "எல்லா மக்களையும் பராமரிக்கும் வேறு எந்த கடவுளும் உனக்கு முன்பாக இல்லை."[11]

வசனம் 8. விசுவாசிகள் தங்கள் பொறுப்புக்களைத் தாங்களே மேற்கொள்ள வேண்டும், மற்றும் அவர்களின் அடைவிடங்கள் அதைச் சார்ந்தே தீவிரமாயுள்ளன என்ற புத்திமதியானது வேதவாக்கியங்களில் பொதுவாக உள்ளது. **தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்** என்று பேதுரு எழுதினார். **"தெளிந்த புத்தி"** (*nēphō*) என்ற வார்த்தை, தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் போன்றே, கிரேக்க மொழியிலும், போதையற்ற நிலையில் இருத்தலையே நேர்ப்பொருளில் அர்த்தப்படுத்துகிறது. இருப்பினும், இது நன்கு சமப்படுத்தப்பட்ட மற்றும் சுயகட்டுப்பாடு கொண்ட நிலையில் இருத்தல் என்ற கருத்திற்கும் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது, எனவே இது தீவிரமான மற்றும் சிந்தனை நிறைந்த வகையில் இருத்தல் என்றாகிறது. "தெளிந்த புத்தி" கொண்டிருத்தல் என்பது, மனச்சோர்வு, இணக்கமற்றநிலை, ஒருக்காலும் புன்முறுவல் பூக்காத நிலை, வாழ்வில் மகிழ்ச்சியே காணாத நிலை ஆகியவற்றைப் போன்று இருப்பதில்லை. மனித வாழ்வு சிலவற்றை அர்த்தப்படுத்துகிறது என்பதையே இது அர்த்தப்படுத்துகிறது. வாழ்வு என்பது தீவிரமாய்ச் சிந்திக்க வேண்டிய விஷயமாக உள்ளதே.

பழங்கால மற்றும் தற்கால உலகில் உள்ள புறதெய்வ வணக்கத்தாரின் கூக்குரல்கள், எந்த மனித வாழ்வும் சிறியதே என்று தொகுக்கும் அளவுக்கு மனித இருப்பைக் குறைத்து மதிப்பிட்டுள்ளன. பலதெய்வ வணக்கம் கொண்ட கிரேக்க - ரோம உலகத்தில் பலர், விதியானது எல்லாரையும் ஆண்டது என்று நினைத்தனர். மரணம் என்பது நிர்மூலமாகுதல் அல்லது நிழலான மறைவு உலத்திற்குக் கடத்தப்படுதல் என்றே அர்த்தப்படுத்திற்று. ஸ்தேயிக்கப் போதகர்கள், வண்டியொன்றின் பின்னால் கட்டப்பட்ட நாய் ஒன்றைப் பற்றிய கதையைக் கூறினர். உரிமையாளர் ஒருவர் தமது வண்டியை பக்கத்து நகருக்கு ஓட்டிச் செல்ல முடிவெடுத்தபோது, நாயானது தான் போவதில்லை என்று முடிவெடுத்தது. அதை வண்டி இழுத்துச் சென்றது, பாறைகளுக்கு எதிராக அது குதித்து மோதிற்று, இரத்தம் பீறிட்டு அடிபட்டு அடைவிடம் சென்று சேர்ந்தது. செயல்விளைவில் ஸ்தோயிக்கர்கள், "பாருங்கள், வண்டியின் பின்னால் சென்றாலும் செல்ல விருப்பம் அற்றிருந்தாலும், நாயானது நியமிக்கப்பட்ட அந்த இடத்திற்குச் சென்றேயாக வேண்டியிருந்தது. அந்த நாயைப்போன்றே, உங்கள் வாழ்வும் விதியானது நியமித்துள்ள இடம் எதுவோ அதில் சென்று முடிந்தேயாக வேண்டும். அங்கு நீங்கள் எவ்வாறு செல்ல விரும்புகிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் பயணம் அமையும். வண்டியின் பின்னே நிதானமாய்ச் செல்லுங்கள். அலைபாயாதீர்கள், அப்போது வாழ்வு மேன்மையாக இருக்கும். உங்கள் சுய விருப்பத் தேர்வுகளைத் தீவிரம ாய் எடுத்துக் கொள்ள வேண்டாம். எதிலும் அதிகமான நம்பிக்கையை வைக்க வேண்டாம் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதோ எதை நம்புகிறீர்கள் என்பதோ முக்கியமானதல்ல" என்றே கூறினார்கள்.

பழங்கால உலகத்தோடு ஒப்பிடுகையில், நவீன காலங்களில் வலியுறுத்தம் மாறுபட்டுள்ளது. இப்போது விதியல்ல ஆனால் தற்செயல் என்பதே ஆளுகை செய்கிறது. மனிதவாழ்வு என்பது பரிணாம செயல்முறையின் உற்பத்தியாக உள்ளது என்ற கருத்தைக் கொண்டவர்களுக்கு அறிவியலே கடவுளாக உள்ளது, வேறு எதுவும் இல்லை. மனிதன் என்பவன் மற்ற ஜீவிகளுக்கு எதிராகத் தனது பெருவிரலைக் கொண்டுள்ளமை மற்றும் தமது மூளையின் சாம்பற்பகுதி யில் அதிகமான வளைவுகளைக் கொண்டுள்ளமை ஆகியவற்றினால் மற்ற உயிரினங்களில் இருந்து மாறுபடுத்தப்படுகிறான். இது ஒரு கரப்பான் பூச்சி கடினமான மேலுறையும் ஆறுகால்களும் கொண்டதால் மாறுபடுத்தப்படுதல் போன்றதாக உள்ளது. இவ்விரண்டுமே மற்ற உயிரிகள் மத்தியில் உள்ள உயிரிகளாக உள்ளன. வாழ்வு என்பது மனிதனைக் காட்டிலும் ஒரு கரப்பான் பூச்சிக்குத் தீவிரமானதாக இல்லை. ஒருவர் மரிக்கிறார், அடுத்த தலைமுறை எழும்பி அவரது இடைத்தைப் பிடிக்கிறது. இதற்கு நேர்மாறாகப் பேதுரு, "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்" என்று கூறினார். "நீங்கள் தேவனால் படைக்கப்பட்டவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் விசுவாசிப்பது மற்றும் செய்வது என்ன என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது" என்று கூறினார்.

வாழ்வை ஒருவர் தீவிரமானதாக எடுத்துக்கொள்ளுகையில், அவர் "தெளிந்த புத்தி உள்ளவராக" இருக்கையில், **அவர் விழித்திருக்க வேண்டும்** என்பதும் அதைத் தொடர்கிறது. **உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்** என்பதால், விழித்திருத்தல் என்பது அவசியமானதாக

உள்ளது. "பிசாசானவன்" பற்றிய குறிப்பு 1 பேதுரு நிருபத்தில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது. "சாத்தான்" என்ற வார்த்தை இந்த நிருபத்தில் காணப்படுவதில்லை. தேவனையும் மனிதனையும் எதிர்த்து நிற்கும் ஒரு தனிப்பட்ட ஜீவியைப் பற்றிப் பேதுரு எச்சரிப்பதாகக் காணப்படுகிறது. "பிசாசானவன்" (diabolos) என்ற வார்த்தை "அவதூறு செய்பவன்" என்று அர்த்தப்படுகிறது. சிலவேளைகளில் இது புதிய ஏற்பாட்டில் பொதுவான அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது (2 தீமோத்தேயு 3:3; தீத்து 2:3). இது Satan என்ற எபிரெய வார்த்தையைப் போன்றே, "எதிராளி" அல்லது "குற்றம் சாட்டுபவன்" என்ற அதே அர்த்தம் கொண்டுள்ளது. 1 பேதுரு நிருபத்தில் பிசாசானவன் எதிராளியாக இருக்கிறான். அவன் மனிதகுலத்திற்குத் துன்பம் வருவதையே நாடுகிறான். அவன் ஆத்துமாக்களைப் பட்சிக்கிறான், அவைகளை நித்திய அழிவிற்கு வழிநடத்துகிறான். பிசாசானவன் இங்கு ஒரு சிங்கத்திற்கு ஒப்பிடப் பட்டுள்ளான் என்பது ஆர்வத்திற்குரியதாக உள்ளது, ஏனெனில் இயேசுவும்கூட, "யூதா கோத்திரத்துச் சிங்கம்" என்றே இருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 5:5).

தனிப்பட்ட வகையிலான சோதனை மற்றும் பாவம் ஆகியவற்றில் பிசாசானவனுடைய பங்கைப் புரிந்துகொள்ளுதல் கடினமானதாக உள்ளது. சோதனை என்பது, ஒருவர் தமது சொந்த இச்சைகளினால் இழுக்கப்படுதல் என்று யாக்கோபு கூறினார் (யாக்கோபு 1:14). நியாயப்பிரமாணத்தை மீறுதலே பாவம் என்று யோவான் கூறினார் (1 யோவான் 3:4), இது ஒருவர் செய்வதைத் தேர்ந்து கொள்கிறார் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது.

வேதாகமத்தில் பாவம் செய்யும்படி சோதித்து மக்களை இழுப்பவர்களாகச் சாத்தானும் பிசாசானவனும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதைப்போன்ற வசனப்பகுதிகள் அதைச் செய்வதைக் கடினமாக்குகின்றன. பிசாசானவன் என்பது, பாபிலோனியக் காலகட்டத்தின்போது யூதர்கள் மத்தியில் எழும்பிய மாயாவாதக் கற்பனைக் கருத்து என்று சிலர் அதை விலக்கிப் போட விரும்புகின்றனர். அதுவும்கூட தனது சிரமங்களைக் கொண்டுள்ளது. பிசாசானவனைப் பற்றிக் கிறிஸ்தவர் கூறவிரும்புவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவன் தனிப்பட்ட ஜீவியமாக இருப்பதாகத் தோன்றுகிறான், அவன் தேவனால் படைக்கப்பட்ட மனிதனைச் சோதித்து, அந்த மனிதன் தேவனையும் அவரது செய்கையையும் மறுதலிக்கச் செய்யவும் தேவனைக் கனவீனப்படுத்தவும் மனிதனை வளைக்கிறான். இது நிச்சயமாக உள்ளது: பிசாசானவன் பொல்லாத கடவுள் அல்ல, அவன் படைத்தவருடன் சமானமாகவோ அல்லது சம நித்தியமானவனாகவோ இருப்பதில்லை. அவனது வல்லமை தேவனுக்குக் கீழ்ப்பட்டதாக உள்ளது. சந்திப்பின் நாளிலே, கர்த்தர் திரும்ப வரும்போது அவன் தோற்கடிக்கப்படுவான்.

உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே (5:9-11)

[9]விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள்

நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. [10]கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக; [11]அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்.

அப்போஸ்தலர் தமது நிருபத்தின் முடிவுக் குறிப்புரைக்குத் திரும்பினார். அவரது வாசகர்களின் பாடுகள் எப்போதும் அவருக்கு முன்பாக இருந்தன, எனவே அப்போஸ்தலர் ஊக்கமூட்டும் வார்த்தைகளுடன் இந்த நிருபத்தை முடித்தல் என்பது ஏற்புடையதாக இருந்தது. ஏதோ ஒருவகையில், அவர்களின் பாடுகள் சாத்தானால் ஏவப்பட்டிருந்தன. அவர்கள் அவனை எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது, மற்றும் தாங்கள் அனுபவித்த பாடுகள் ஏராளமான தங்கள் சகோதரர்களால் பகிர்ந்துகொள்ளப்பட்டன என்ற அறிவில் அவர்கள் ஆறுதல் கண்டடைய வேண்டியதிருந்தது. மற்றும் அவர்கள், தேவன் இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவரும்போது தங்களுக்குக் காத்திருக்கும் மகிமை பற்றி நினைவூட்டப்பட்டனர்.

***வசனம் 9.** யாக்கோபு மற்றும் பேதுரு ஆகிய இருவருமே, பிசாசானவன் எதிர்த்து நிற்கப்பட வேண்டியவன் என்று எழுதினர், ஆனால் யாக்கோபு இந்த எதிர்ப்பை தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் நேரடியாகத் தொடர்பு படுத்தினார் (யாக்கோபு 4:7). **விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்** என்று பேதுரு கூறியபோது, அவரது சிந்தனை வெகு தொலைவில் இல்லை. விசுவாசி ஒருவர், விசுவாசத்தின் சமூகத்துடன் சேர்ந்து தமது விசுவாசத்தை உறுதிப்படுத்தும்போது, அவர் பிசாசானவனை எதிர்த்து நிற்கிறார் (1:17-19). "எதிர்த்து நிற்றல்" என்பது "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது" (1:7) விசுவாசம் நிறைந்தவர்களாகக் காணப்படுதல் என்று அர்த்தப்படுகிறது. இது உங்களைப் பற்றிப் பொல்லாதவற்றைப் பேசுபவர்களைக் குறித்துப் பொல்லாதவற்றைப் பேச மறுத்தல் என்று அர்த்தப்படுகிறது (2:23; 3:9). இது ஒருவர் தமது வாழ்வை உயர் ஒழுக்கத் தளத்திற்கு ஒப்புக்கொடுக்கத் தொடருதல் என்று அர்த்தப்படுகிறது (4:3, 4). கிறிஸ்துவை அறிக்கையிடுதலுக்கு முயற்சி, எதிர்த்து நிற்றல் மற்றும் உறுதிப்பாடு ஆகியவை தேவைப்படுகின்றன. கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கையிட்டு, அவரது நாமத்தில் முழுக்காட்டுப் பெறுதலுடன் தொடங்கும் கிறிஸ்தவ வாழ்வு நண்பர்களிடம் இருந்து ஆதரவையும் உணர்வுப்பூர்வம ான மன எழுச்சியையும் பெறுகிறது. அதன்பின் உண்மைநிலை அமைகிறது. விதைப்பவன் உவமையில் கூறப்பட்டுள்ளபடி, சிலவேளைகளில் மண்ணின் ஆழம் சிறிதளவே இருக்கலாம். பலர் உலகப்பிரகாரமான வாழ்விற்குத் தி ரும்பிச் சென்றுள்ளனர். பிசாசானவனை முடிவு வரையிலும் எதிர்த்து நிற்க, விசுவாசத்தில் உறுதியாயிருத்தல், ஜெபம், சகிப்புத்தன்மை மற்றும் சகவிசுவாசிகளிடம் ஆதரவு ஆகியவை தேவைப்படுகின்றன.*

இந்த நிருபத்தில் நான்காவது முறையாக இவ்விடத்தில் பேதுரு, தமது வாசகர்களின் பாடுகளைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட்டார் (1:6-9; 3:13-17; 4:12-19; 5:9, 10). ஒருவர் பாடு அனுபவிக்கும்போது, அந்தக் கடினமான விஷயத்தில் பங்கேற்கும் மற்றவர்களும் இருக்கின்றனர் என்று

அறிதல் சற்றே ஆறுதலைத் தருவதாயிருக்கிறது. அப்போஸ்தலரின் வாசகர்கள் **உலகத்திலுள்ள [தங்கள்] சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி [வந்தது]** என்பதை அறிய வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். வரலாற்று ரீதியான கேள்விகளின்மீது தாங்குதலைக் கொண்டுள்ள அதிகம் குறிப்பிடத்தக்க விஷயங்களுக்கு இந்த நிருபத்தில் இதைக்காட்டிலும் அதிக விசேஷித்த வசனம் வேறு எதுவும் இல்லை என்றே கூறலாம். கர்த்தருடைய மரணத்திற்குப் பின்பு சுமார் முப்பத்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிற்பாடாக, விசுவாசிகளின் உலகளாவிய சகோதரத்துவம் பற்றிப் பேதுரு எழுத முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

சிதறடிக்கப்பட்ட நிலையில் கிறிஸ்தவர்கள், ஒருவர் மற்றவரைக் காத்துக்கொண்டும் ஒருவர் மற்றவரை ஆதரித்தும் இருந்தனர். அவர்கள் ஒரு ஐக்கியமாக. சகோதரத்துவமாக, பரப்பெல்லையில் உலகளாவியவர்களாக இருந்தனர். ஜான் ஸ்டாட் அவர்கள், "வேதாகமத்தின் அதிகாரத்துவம் பெற்ற கிறிஸ்தவம், பாதுகாப்பான, மனநிறைவான, வசதியான, தப்பிக்கொள்ளக்கூடிய சிறு மார்க்கமாக இருப்பதில்லை .... அது வெடித்துச் சிதறும் இயல்புள்ள, நமது சுய மையத்தன்மையில் இருந்து நம்மை வெளியே இழுத்துப்போடும் மையவிலக்குவிசையாகவும், தேவனுடைய உலகத்தில் சாட்சியளிக்கவும் ஊழியம் செய்யவும் நம்மை உந்தித்தள்ளுவதாகவும் உள்ளது" என்று சரியாகவே விளக்கம் அளித்தார்.[12]

மற்ற விஷயங்களுக்கு மத்தியில் அப்போஸ்தலர், உலகத்தில் வளர்ந்து அதை வென்றுகொண்டிருந்த ஒரு இயக்கத்தின் வெட்டுமுனையின்மீது தமது வாசகர்கள் இருந்தனர் என்பதை அவர்களுக்கு நினைவூட்ட விரும்பினார், கொலோசெயருக்குப் பவுல், அவர்கள் விசுவாசித்திருந்த சுவிசேஷம் அவர்கள் மத்தியில் செயல்பட்டது போன்றே உலகம் முழுவதிலும் "பரம்பி பலன் தருகிறது" என்று எழுதினார் (கொலோசெயர் 1:6; காண்க ரோமர் 10:18). பவுல், "எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும்" சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது மட்டுமின்றி (ரோமர் 15:19), அவர் ஸ்பானியா தேசத்திற்குச் செல்ல வேண்டும் என்றும் எண்ணியிருந்தார் (ரோமர் 15:24). பவுலின் ஊழியப் பணியைப் பற்றி நாம், அவரது நிருபங்களில் இருந்தும் நடபடிகள் புத்தகத்தில் இருந்தும் சிறிதளவு அறிகிறோம். பேதுருவின் ஊழியம் பற்றி நாம் இன்னும் குறைவானதையே அறிகிறோம் மற்றும் பேரரசு முழுவதிலும் நபருக்கு நபர் கிறிஸ்துவின் செய்தியைப் பரப்பிய ஏராளமான பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் பற்றி உண்மையில் நாம் எதுவுமே அறிவதில்லை.

வசனம் 10. புறதெய்வ வணக்கத்தார்கள் மத்தியில் வாழ்ந்து, கிறிஸ்துவை அறிக்கையிட்டதால் பாடு அனுபவித்த கிறிஸ்தவர்கள், பின்வருவன போன்ற கடினமான கேள்விகளைத் தங்களுக்குள்ளும் மற்ற கிறிஸ்தவர்களிடத்திலும் கேட்டிருக்க வேண்டும். "நாம் திரும்பி ஆராதிக்கும் தேவன் நம்மைக் காக்கக் கூடியவராக இருந்தாரா? ஏன் அவர் அதைச் செய்யவில்லை?" அவர்கள் தங்கள் நண்பர்களும் குடும்பத்தவர்களும் சேவித்த கடவுள்களை ஆராதித்தபோது ஏளனத்தையும் தப்பெண்ணத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்ததில்லை. இந்த விஷயங்கள் நடக்கும்படி தேவன் அனுமதித்தது ஏன்? அவைகள் நீண்ட நாட்களுக்குத் தொடராது என்பதே பேதுருவின் பதிலாக இருந்தது. **தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற ... தேவன்தாமே கொஞ்சக்காலம்**

பாடநுபவிக்கிற உங்களுக்கு ... கிறிஸ்து இயேசுவுக்குள் தமது நித்திய மகிமையை [உங்களுக்கு அருளுவார்] இதற்கு முன்பும் அப்போஸ்தலர் இதே பதிலைக் கொடுத்திருந்தார் (1:8). பாடுகளை எதிர்கொண்டிருந்த வேளையில் பேதுரு, "தொடுவானத்தின் மீது உங்கள் கண்களைப் பதியுங்கள்" என்று கூறினார். பல ஆண்டுகளுக்கு முன்பு, சங்கீதக்காரர்களும் தங்கள் பாடுகளை இதே விதமாகவே புரிந்து கொண்டிருந்தனர். பொல்லாங்கை எதிர்கொண்ட வேளையில் அவர்கள், அது தற்காலிகமானதே என்பதை உய்த்து உணர்ந்திருந்தனர். நிறைவாக தேவனே வெற்றிபெறுவார். சங்கீதக்காரர் தமது எதிரிகளைப் பற்றி, "நிச்சயமாகவே நீர அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர்" என்று எழுதினார் (சங்கீதம் 73:18). தொடர்ந்து சங்கீதக்காரர், "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" என்றும் எழுதினார் (சங்கீதம் 73:25).

பேதுருவின் சொற்றொடர்கள் ஒவ்வொன்றும், சுருக்கமான விளக்கத்திற்கு நம்மை அழைக்கின்றன. **சகல கிருபையும்** பொருந்திய தேவனுடைய பராமரிப்பிற்கு அவர்கள் தங்களை ஒப்புவித்திருந்தனர். 4:10ல் அப்போஸ்தலர், "தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப்" பற்றிக் குறிப்பிட்டிருந்தார். கிருபை என்பது இயேசு கிறிஸ்துவின் தேவனுக்குள் அதன் மிக உயர்வான அளவில் உணர்ந்து அறியப்படுகிறது. கிருபை என்பது தேவனோடு ஒருக்காலும் முடிந்து போவது இல்லை; அவரது இருப்பிற்கு அது அத்தியாவசியமானதாக உள்ளது. பேதுருவின் நிருபத்தைப் பெற்றவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் தங்கள் பாவங்களில் இருந்து மீட்கப்பட்டபோது அவரது கிருபையானது அவர்களால் உணர்ந்தறியப்பட்டது (3:21). அவர்கள் அவரது கிருபைக்குள் வாழ்ந்தனர்; இருந்தபோதிலும், கிருபை என்பது இன்னும் உணர்ந்தறியப்பட வேண்டியதாக இருந்தது. அவர்கள் அந்த நாளை முன்னெதிர்நோக்கி வாழ்ந்தனர்.

"தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற ... தேவன்" என்ற வார்த்தைகள், இந்த நிருபத்தின் தொடக்க வசனங்களை நினைவுக்குக் கொண்டுவருகின்றன. அப்போஸ்தலர் தமது வாசகர்களை "தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகள்" என்று விவரித்திருந்தார். அவர்கள் "கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும்" தேவனால் "முன்னறி"யப் பட்டிருந்தனர். அவர்கள் "இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக மறுபடியும் ஜெநிப்பிக்கப்" பட்டிருந்தனர். பேதுரு குறிப்பிட்டிருந்த மகிமை கிறிஸ்தவர்களுக்குத் தொடங்கி இருந்தது, ஆனால் மகிமை என்பது அவர்கள் மகிழ்வுடன் அனுபவித்து இருந்த மொத்த ஆசீர்வாதங்களைக் காட்டிலும் அதிகமானதாக இருந்தது. அது "நித்திய மகிமை"யாக இருந்தது. வசனங்கள் சுட்டிக்காண்பிக்கும் மகிமையானது தரத்தி லும் அளவிலும் இனி இன்னும் அதிகமாக உணர்ந்தறியப் படவேண்டியதாக இருந்தது. மகிமையின் பின்திரைக்கு எதிரே புரிந்துகொள்ளப்படும்போது பாடுகளின் கனம் சுமக்கத்தக்கதாக உள்ளது.

நான்கு எதிர்கால வினைச்சொற்களுடனும், அவற்றின் உறுதிப்பாட்டின் வலிவுடனும், "நித்திய மகிமையின்" முழுமையான உணர்ந்தறிதல்

வரும்வரையிலும் நீடியபொறுமையுடன் இருக்கும்படி பேதுரு தமது வாசகர்களுக்குப் புத்திமதி கூறினார். தற்காலத்தில் தேவன்தாமே அவர்களை **சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவார்** என்று அப்போஸ்தலர் வாக்குறுதி அளித்தார். "உங்களை அழைத்திருக்கிற தேவன்தாமே இவற்றைச் செய்வார் என்பதில் நீங்கள் நிச்சயமாய் இருக்கலாம்" என்று செயல்விளைவில் கூறுகிற வலிவான பெயர் உரிச்சொல் ஒன்று கிரேக்க மொழியில் கூடுதலாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் வித்தியாசப்பட்ட அர்த்தங்கள் பெரிதும் மாறுபாட்டை ஏற்படுத்தா விட்டாலும், ஒவ்வொரு வார்த்தையும் தனக்கே உரிய நுட்ப வேறுபாட்டைக் கொண்டுள்ளது. இவ்வினைச்சொற்களை இவ்வகையில் ஒன்றுகூட்டிக் காணும்போது, தேவன் தாம் அழைத்த மக்களைத் தமது மகிமை வெளிப்படும்வரையிலும் பாதுகாக்க முழுமையான வல்லமை கொண்டுள்ளார் என்பதை அடிக்கோடிட்டுக் குறிப்பிட முடிகிறது.

"சீர்ப்படுத்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*katartizo* என்ற) வார்த்தை, NIV வேதாகமத்தில் "restore" என்று தரவழைக்கப்பட்டுள்ளது. மத்தேயு 4:21ல் செபதேயுவின் குமாரர்கள் தங்கள் வலைகளைப் "பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறபோது" என்று கூறுவதற்கு இந்த வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய மக்கள் தடுமாறுகிறபோது தேவன் அவர்களைப் பழுதுநீக்குகிறார் என்பதே இங்கு கருத்தாக உள்ளது; அவர்களின் பாவங்களை அவர் மன்னிக்கிறார். அவர்களை "மீளக்கட்டுவிக்க" மற்றும் அவர்களை "ஸ்திரப்படுத்தக்" கூடியவராக அவர் இருக்கிறார். "ஸ்திரப்படுத்த" என்ற வார்த்தை (*stērizō*) ஒருபொருளை ஏதொன்றினாலும் அசைக்க இயலாதபடிப் பாதுகாப்பாக நிலைநிறுத்துவதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. ஐசுவரியவான் மற்றும் லாசரு ஆகியோரைப் பற்றிய உவமையில் "பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது" என்பதை விவரிக்க இயேசு இதே வார்த்தையைப் பயன்படுத்தினார் (லூக்கா 16:26). "பலப்படுத்தி" என்று தரவழைக்கப்பட்டுள்ள வார்த்தை (*sthenoō*) முந்தின வார்த்தையுடன் நெருங்கி அர்த்தம் கொண்டதாக உள்ளது. இது புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. "நிலைநிறுத்துதல்" என்ற கடைசி வார்த்தை "உறுதியான அஸ்திபாரத்தின்மீது கட்டுதல்" என்று அர்த்தப்படுகிறது. தேவன் கிறிஸ்தவர்களை, நன்கு கட்டப்பட்ட ஒரு நகரம் அல்லது ஒரு மாபெரும் வீடு போன்று, உறுதியான அஸ்திபாரத்தின்மீது கட்டுவார்.

வசனம் 11. இது, 4:11ல் அப்போஸ்தலர் எழுதியதைக் காட்டிலும் சுருக்கமான துதியாக உள்ளது. 4:11ல் இயேசுவே பாடப்பொருளாக இருந்தார், மற்றும் இங்கு தேவன் பாடப்பொருளாக இருக்கிறார். மற்றவர்களை மகிமைப்படுத்துபவரை வார்த்தைகள் இங்கு மகிமைப்படுத்துகின்றன. இதன் கிரேக்க வாக்கியத்தில் வெளிப்படையான வினைச்சொல் கிடையாது. NASB வேதாகமம், கட்டளை அல்லது விருப்பத்தேர்வுப் பாங்கில் வினைச்சொல் ஒன்றை இவ்விடத்தில் தருகிறது: **அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.** வினைச்சொல்லை சுட்டிக்காட்டும் பாங்கில் தரும்போது இந்தத் துதி இன்னும் பெலமானதாக உள்ளது: **"அவருக்கு**

மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருக்கிறது. ஆமென்" இதற்குச் சற்று முன்னர் தாம் பேதுரு நான்கு வினைச்சொற்களை எதிர்கால வகையில் பயன்படுத்தியிருந்தார் என்பதால், அதே சுட்டிக்காண்பித்தல் இங்கும் தக்கவைக்கப்பட்டிக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

குறிப்புகள்

[1]முறைப்படி மூப்பர்கள் நியமிக்கப்படுதல் மற்றும் அவர்களின் பணி பற்றிய மற்ற கருத்துக்களுக்கு, பின்வரும் புத்தகத்தில் காணவும்: Everett Ferguson, *The Church of Christ: A Biblical Ecclesiology for Today* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996), 295–98, 310–27. [2]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude,* Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 198–99. [3]"Bishop" என்ற ஆங்கில வார்த்தையானது *episkopos* என்ற கிரேக்கவார்த்தையின் மோசமான வடிவமாகும். KJV வேதாகம மொழிபெயர்ப்பாளர்களை வழிநடத்திய அறிவுறுத்துதல்கள் மத்தியில், அவர்கள் சபைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற விஷயமும் இருந்தது. இங்கிலாந்து சபையில் இருந்த சபைகளின் பொறுப்பு அலுவலர்கள் "bishops" என்று அழைக்கப்பட்டதால், இந்த கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்பதற்கும் அதே வார்த்தை பயன்படுத்தப்பட்டது. [4]*(klēronomia என்ற) இவ்வார்த்தையின் கூட்டு வடிவம் 1 பேதுரு 1:4 மற்றும் வேறு இடத்தில் "சுதந்தரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [5]J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 286. [6]C. S. Lewis, *Mere Christianity* (New York: Macmillan Co., 1961), 94. [7]கிரேக்க மொழியில் இதற்கு, "இளைஞர்கள்" மற்றும் "மூப்பர்கள்" என்ற இணை பெயர் உரிச்சொல்கள் உள்ளன. இந்தப் பெயர் உரிச்சொற்கள் ஆண்பால் பன்மைச் சொற்களாக இருப்பதால், கருத்தை ஏற்படுத்த இளைஞர் என்பதற்குப் பின்னால் "மனிதர்கள்" [அதாவது "younger" என்பதற்குப் பின்னால் "men" என்பதை] மொழிபெயர்ப்பாளர்கள் கூடுதலாகச் சேர்த்தனர், ஆனால் "மூப்பர்கள்" என்ற சொல்லின் விஷயத்தில் இந்தக் கூடுகை அவசியம் அற்றதாக உள்ளது. [8]Alan M. Stibbs and Andrew F. Walls, *The First Epistle General of Peter,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 170. [9]J. Goetzmann, "Care, Anxiety," in *The New International Dictionary of New Testament Theology,* ed. Colin Brown (Grand Rapids, Mich.: Zondervan, 1976), 1:277. [10]R. E. Enlow, "Anxiety," in *Evangelical Dictionary of Biblical Theology,* ed. Walter A. Elwell (Grand Rapids, Mich.: Baker Books, 1996), 28.

[11]Wisdom of Solomon 12:13 (NRSV). [12]John Stott, *The Contemporary Christian* (Leicester, U.K.: Inter-Varsity Press, 1992), 335.

9

முடிவுக் குறிப்புகள்

(5:12-14)

[12]உங்களுக்குப் புத்திசொல்லும்படிக்கும், நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சியிடும்படிக்கும், நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி, எனக்குத் தோன்றுகிறபடி உண்மையுள்ள சகோதரனாகிய சில்வானுவின் கையிலே கொடுத்து அனுப்பியிருக்கிறேன். [13]உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும், என் குமாரனாகிய மாற்கும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள் [14]ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக. ஆமென்.

வசனம் 12. *நிச்சயமாக இல்லாவிட்டாலும், இந்த* ***சில்வானு*** *என்பவர் நடபடிகள் புத்தகத்தில் கூறப்படும் சீலா என்பவராக இருந்திருக்க வாய்ப்பு உண்டு. பவுல் தமது நிருபங்களில் சீலாவின் பெயரைக் குறிப்பிடவில்லை, ஆனால் மூன்று இடங்களில் அவர் சில்வானு என்று குறிப்பிட்டார் (2 கொரிந்தியர் 1:19; 1 தெசலோனிக்கேயர் 1:1; 2 தெசலோனிக்கேயர் 1:1). இவர் நடபடிகள் புத்தகத்தில் விவரிக்கப்பட்ட அதே பயணத் துணைவர்தாம் என்பது நிச்சயம். "சீலா" என்ற வார்த்தையை NIV வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் தரவழைத்தபோது, அவர்கள் அது ஒரே நபராக இருப்பதாக எடுத்துக் கொண்டனர்.[1] இந்தப் பெயரே இலத்தீன் பெயராக உள்ளது. ரோமப் புராணக்கதைகளில், "சில்வானு" என்பது வன முனையின் கடவுளாயிருந்தார். ரோம விவசாயிகள் நிலத்தைச் சுத்தம் செய்து வனத்தைப் பின் திருப்பி ஓட்டும்போது. சிலவேளைகளில் அவர்கள் அந்தக்கடவுளின் எல்லைப் பகுதியில் தாங்கள் அத்துமீறி நுழைந்ததற்காக அவருக்கு ஏற்பட்ட சினத்தைத் தணிப்போம் என்ற நம்பிக்கையில், தாங்கள் உழுத நிலத்தின் முனைப்பகுதியில் இந்தக் கடவுளைக் கனப்படுத்த ஒரு சிறு கோவிலைக் கட்டுவது உண்டு. ரோமர்கள், "டிரான்ஸில்வேனியா" என்று அழைக்கப்பட்ட ஒரு மாகாணத்தைக் கொண்டிருந்தனர், இது வனப்பகுதிக்கு அப்பால் இருந்த பகுதியாகும். பவுலின் பயணத்துணைவரான சீலாதான் இந்த "சில்வானு" என்றிருக்கிறது என்றால், ஒரு நல்ல யூதருக்கு ரோமக்கடவுளின் இந்தப் பெயர் அவரது பெற்றோரால் தரப்பட்டதாயிருக்கும் (நடபடிகள் 15:32) என்பது ஆர்வத்திற்குரிய விஷயமாக உள்ளது. இருப்பினும் இப்படிப்பட்ட விஷயம் தேவதூஷணமல்ல என்பதை நவீனப் பழக்க வழக்கங்கள் விவரிக்கின்றன. ஒரு தாய் தனது பெண்குழந்தைக்கு டயானா என்று பெயரிடுகையில், அவள் அதே பெயரைக் கொண்டுள்ள ரோமப்*

பெண்தெய்வத்தின் மீது ஆர்வமாக இருக்கக் சாத்தியக் கூறு இல்லை. அப்படி ஒரு பெண்தெய்வம் இருந்ததை அவள் அறியாதுகூட இருக்கலாம். நவீனகாலத் தாயினால் டயானா என்ற பெயர் சூட்டப்படுவது போன்றே, "சில்வானு" என்பதும் இந்தத் தீர்க்கதரிசியின் யூதத் தாயினால், அறியாமையில் சூட்டப்பட்ட பெயராக இருக்கலாம். "சில்வானு" என்பது யூதப்பெண்ணை மணம் செய்திருந்த யூதனல்லாத தந்தையால் கொடுக்கப்பட்ட பெயராக இருக்கக் கூடும். இந்த தீர்க்கதரிசியின் தாய் ஒரு யூதப் பெண்ணாக இருந்திருந்தால், இவரும் ஒரு யூதராகவே இருந்திருப்பார். "சில்வானு" ரோமக்கடவுளின் பெயரைக் கொண்டிருப்பதால் இவர் நடபடிகள் புத்தகத்தில் வரும் சீலா தவிர வேறொருவர் என்று யூகிக்கக் காரணம் எதுவும் இல்லை.

சில்வானுதான் இந்த நிருபத்தை எடுத்துச் சென்றவர் என்பதை *dia* என்ற முன்னிடைச் சொல் அர்த்தப்படுத்துகிறது என்று வேய்ன் A. க்ரூடெம் அவர்கள் பலமாகக் குறிப்பிட்டார். பழங்கால எழுத்தாளர்கள், கடிதம் ஒன்றை எடுத்துச் செல்பவர்களைக் குறிப்பிட இவ்வார்த்தையைப் பயன்படுத்திய பல நிகழ்வுகளை அவர் குறிப்பிட்டுக் காட்டினார்.[2] அவரது சாட்சியத்தை ஒதுக்கித் தள்ளுதல் சிரமமாக உள்ளது. இருப்பினும், இந்த நிருபத்தின் மிக உயர்வான கிரேக்க எழுத்துப்பாணி பற்றிய விபரத்திற்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய அவசியத்தில் ஒருவர் விடப்படுகிறார். சிறிதளவே முறையான கல்வியறிவு பெற்றிருக்கக்கூடிய பின்வனப்பகுதியின் மீனவராகப் பேதுரு இருந்தார் என்ற விஷயத்தைக் காணாது விடுதல் தவறாக உள்ளது என்று குரூடெம் அவர்கள் விவாதித்தார்.[3] ஆனால் ஒருவேளை, இந்த நிருபத்தில் இருந்து 2 பேதுரு நிருபம், எழுத்து நடையில் கணிசமான அளவுக்கு வேறுபட்டுள்ளது எனலாம். இவ்விரு நிருபங்களையும் பேதுரு தாமே எழுதினாரா? மற்றும், பேதுருவும் அவரது மீன்பிடித் தொழில் கூட்டாளிகளும் கணிசமான அளவுக்கு வழிமுறைகள் கொண்டிருக்கையில், அவர் நிருபங்கள் எழுதுதலைக் கற்றுத் தேர்ந்தவர்கள் என்று அது விவாதிப்பதில்லை. நடபடிகள் 4:13ம் வசனம், அவர்கள் அவ்வாறு இருந்ததில்லை என்று கருத்துத் தெரிவிக்கிறது. பேதுரு கூறியவற்றை சில் வானு எழுதியிராவிட்டால், வேறு யாரேனும் எழுதியிருப்பார் என்பது உறுதி. "சில்வானு" இந்த நிருபத்தை [பேதுரு கூற] எழுதியவராகவும் அதைக் கொண்டு சென்றவராகவும் இருந்தார் என்று கருத்து தெரிவித்தல் கராணமற்றதாக உள்ளது என்று கூறுவது மிகவும் அரிதாகும்.

அப்போஸ்தலர் இந்த நிருபத்தைத் தாம் எழுதியது ஏன் என்ற நோக்கத்தை அடையாளப்படுத்துகிறார். அவர்களிடத்தில் அவர், **உங்களுக்குப் புத்திசொல்லும்படிக்கும், நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சியிடும்படிக்கும், நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி**னேன் என்று கூறினார். புத்திசெல்லுதல் என்பது ஒரு செயல் ஓட்டத்தில் யாரேனும் ஒருவரைத் தொடர்ந்து உறுதியாக நிலைத்து இருக்கும்படி வேண்டிக்கேட்டுக்கொள்ளுதலாக உள்ளது. பேதுருவின் புத்திமதிகள் இந்த நிருபம் முழுவதிலும் காணப்பட முடியும். அவர்கள் பரிசுத்தமாக இருக்கும்படி (1:14, 15), கீழ்ப்படிந்திருக்கும்படி (2:13, 18; 3:1; 5:5), தாழ்மையாக இருக்கும்படி (5:6) அவர் புத்திசொன்னார், மற்றும் விசுவாசம் தொடர்பான பல நெறிமுறைகளையும் நடக்கைகளையும்கூட அவர் கூறினார்.

"சாட்சியிடும்படிக்கு" என்ற இரண்டாவது சொற்றொடர்

குறிப்பான ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. இது 5:1ல் **"சாட்சியும்"** என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தைக் குடும்பத்தின் பகுதியான *epimartureō* என்ற கூட்டு வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது. சாட்சிகள் சாட்சிகூறக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஒருவேளை இவ்வார்த்தையைப் பேதுரு தேர்ந்தெடுத்தது, கர்த்தருடன் அவர் இருந்திருந்தார் என்பதால், தாம் அவரைக் குறித்துத் தனிப்பட்ட, கண்ணால் கண்ட சாட்சியத்தை அளிக்க முடியும் என்று தமது வாசகர்களுக்கு மறைமுகமாக உணர்த்துவதற்காக இருந்திருக்கலாம். 5:1ல் மட்டுமின்றி 2:23, 24லும்கூட, பேதுரு தாம் கர்த்தருடன் இருந்திருந்தார் மற்றும் அவர் போதித்தவற்றைக் கேட்டும் அவர் மரித்ததைக் கண்டும் இருந்தார் என்று பேதுரு தம் வாசகர்களுக்குக் கூற முடிந்தது. மேலும், அதற்கும் மேலாக அவர் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தமையின் வல்லமைக்குப் பேதுருவே சாட்சியாயிருந்தார். சகோதரர் என்ற முறையில் மாத்திரமல்ல, ஆனால் சாட்சி என்ற முறையிலும் பேதுரு தமது வாசகர்களுக்கு, **"நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபைதானென்று"** கூற முடிந்தது. நாசரேத்தூர் இயேசுவுக்குள் தேவன், தமது கிருபையின் சகல ஐசுவரியங்களையும் வெளிப்படுத்தியுள்ளார். பாவம் செய்ததை மாத்திரமே தங்கள் பகுதியில் கொண்டிருந்த மக்களுக்கு அவர் தமது இறவாத அன்பைச் செயல்விளக்கப்படுத்தினார். இயேசுவுக்குள், தேவன் மன்னிப்பையும் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையையும் பாதுகாத்து வைத்தது மட்டுமின்றி, தமது மக்கள் நல்ல மனநிறைவான வாழ்வை வாழ வழியையும் காண்பித்துள்ளார். அவரில் நம்பிக்கை கொள்வோருக்கு, அவர் தற்காலத்தில் "ஏற்கனவே" தமது இராஜ்யத்தின் ஐசுவரியங்களைக் கொடுத்துள்ளார் மற்றும் "இன்னும் வெளிப்படுத்தப்படாத" நித்திய மகிமையை விசுவாசிகளுக்கென்று அவர் பாதுகாத்து வைத்துள்ளார்.

அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு நிறைவான புத்திமதி ஒன்றையும் கூடுதலாகக் கொடுத்தார்: **நீங்கள் நிலைகொண்டு [நில்லுங்கள்]**. கிறிஸ்தவர்கள் **"தேவனுடைய மெய்யான கிருபை"** யில் நிலை கொண்டு நிற்க வேண்டும் என்று பேதுரு வேண்டிக்கேட்டுக்கொண்டார். புறதெய்வ வணக்கத்தாரிடம் இருந்து வருகிற சோதனைகள், சக விசுவாசிகளின் நடக்கையினால் ஏற்படும் ஏமாற்றங்கள் மற்றும் விசுவாசிகளுக்குள்ளாகவே இருக்கக் கூடிய பாவத்தின் கவர்ச்சி ஆகியவை அவர்களை அமைதலின்றி அலையச் செய்யக்கூடும், அவ்வாறே செய்கின்றன. பாவத்தை எதிர்த்து நிற்பதிலும் கிறிஸ்துவுக்குள் "நிலைகொண்டு" நிற்பதிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் சுயவிருப்பத் துணிவாற்றலைச் செயல்படுத்த வேண்டும். ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, ஜீவனில் சந்தோஷம் மற்றும் நம்பிக்கையில் பங்கேற்று, பின்பு ஆர்வமின்மை அல்லது உற்சாகக்குலைவு ஏற்பட்டதால், தாங்கள் தப்பி வந்திருந்த வழிக்கே திரும்பிச் சென்ற ஆத்துமாக்கள் ஏராளமாக உள்ளன (2 பேதுரு 2:20).

வசனம் 13. மறைபொருள் கொண்ட சொற்றொடருடன் பேதுரு இந்த நிருபத்தை முடித்தார். இவ்வசனம் "பாபிலோனில் உள்ள "The" உங்களை வாழ்த்துகிறான்" [The in Babylon greets you] என்று நேரடியாக

மொழிபெயர்க்கப்படுகிறது. கிரேக்க மொழியில் “The” என்ற வார்த்தை பெண்மைப் பெயர்ச்சொல்லுக்கு முன்னால் குறிப்பிடப்படுகிறது. சில சந்தர்ப்பப் பொருள்களில் இது “பாபிலானில் உள்ள பெண்” என்று அர்த்தப்பட்டு இருக்கலாம், ஆனால் இப்படிப்பட்ட ஒரு சொல்விளக்கத்தைக் கொண்டு, பேதுருவின் வாசகர்கள் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய அளவுக்கு நன்கு அறியப்பட்ட யாரோ ஒரு பெண், பேதுருவுடன் இருந்திருக்கச் சாத்தியக்கூறு இல்லை. “சபை” என்பதற்கான (*ekklesia* என்ற) கிரேக்கப் பெயர் பெண்மைப் பெயர்ச்சொல்லாகும், மற்றும் பவுல், சபையைக் கிறிஸ்துவின் மணவாட்டி அல்லது மனைவி என்று குறிப்பிட்டார். புதிய ஏற்பாட்டு மாணவர்களின் பெரும்பான்மையானவர்கள், பேதுரு பாபிலோனில் இருந்த சபையையே இவ்விடத்தில் குறிப்பிட்டார் என்று நம்புகின்றனர். இருப்பினும் NASB வேதாகமம், **she who is in Babylon** என்று மொழிபெயர்ப்பதன் மூலம், ஆங்கில வாசகர்களுக்கு இன்னொரு விளக்கத்திற்கான சாத்தியக்கூறை விட்டுச் செல்ல முயற்சிக்கிறது. KJV வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் இந்தச் சொற்றொடரை “The church that is at Babylon” என்று தரவழைத்தபோது, “church that is” என்ற வார்த்தைகள் கிரேக்க மொழியில் இல்லை என்பதைக் குறிக்க அவற்றைச் சாய்வெழுத்துக்களில் இட்டபோதிலும், மிகுந்த தைரியமாகவே மேற்கண்ட சொற்றொடரைத் தரவழைத்தனர். NRSV வேதாகமத்தில் “Your sister church in Babylon” என்றுள்ளது.

பேதுரு தாம் இருந்த நகரில் சபையில் இருந்து வாழ்த்துதல்களை அனுப்பி இருக்கச் சாத்தியம் உள்ளது. இதைக் கூறியுள்ள நிலையில், “பாபிலோன்” என்பதன் மூலம் அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை இன்னமும் வாசகர்களே முடிவுசெய்தாக வேண்டும். பொதுவாக ஒரு வார்த்தையானது அதன் அடிப்படை மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இந்தப் பெயரானது “எருசலேம்” என்பது அந்தப் பெயர்கொண்ட நகரத்தைக் குறிப்பதுபோன்றே, பாபிலோன் என்ற நகரை குறிப்பிடும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இருப்பினும் சிலவேளைகளில் வார்த்தைகள் உருவகமாகப் பயன்படுத்தப்படுகின்றன - அவைகள் நேரடி அர்த்தத்திற்கு அப்பால் தாங்கள் கொண்டுள்ள தனிக்குறிப்பை உணர்த்துகின்றன. ஒரு வார்த்தை உருவகக் கூற்றாகவா அல்லது நேரடியாகவா, எப்படி பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைச் சந்தர்ப்பப்பொருளே தீர்மானிக்க வேண்டும். “பாபிலோன்” என்பதை ரோமாபுரிக்கு ஒரு உருவகச் சொல்லாகப் பேதுரு பயன்படுத்தினார் என்று கருத்துத் தெரிவிக்க நல்ல காரணங்கள் உள்ளன.

உருவகக் கூற்றைப் பேதுரு பயன்படுத்தினார் என்று நாம் முடிவு செய்தால், “ரோமாபுரியை ‘பாபிலோன்’ என்று குறிப்பிடும்போது அவர் ரோமாபுரியைப் பற்றி என்ன கூறமுனைந்தார்?” என்று நாம் கேட்டாக வேண்டும். பழைய ஏற்பாட்டின் பாபிலோனை நன்கு அறிந்துள்ள எவருக்கும், அந்தப் பெயரானது, தேவனுடைய மக்களின் அழிவு, தேவனுடைய ஆலயத்தின் அழிவு மற்றும் தேவனுடைய நகரத்தின் அழிவு ஆகியவற்றை அர்த்தப்படுத்துவதாக இருக்கும். பாபிலோனின் தரிசு நிலத்தில் இருந்த வேளையில், எருசலேமுக்கு நிகழ்ந்தவற்றைப் பற்றிய யூதர்களின் மனச்கசப்பானது, **“பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப்போகிறவளே, நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப்**

பதில் செய்கிறவன் பாக்கியவான். உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்" என்று சங்கீதக்காரர் எழுதியபோது உச்சத்திற்குக் கொண்டுபோகப்பட்டது (சங்கீதம் 137:8, 9). "பாபிலோனை" போன்றே ரோமாபுரியைப் பற்றியும் பேதுரு, தேவனுடைய மக்களின் பேரழிவிற்கான ஆதாரமூலமாக நினைத்திருப்பார் என்பது உறுதி.

ரோமாபுரியை "பாபிலோனுடன்" அடையாளப்படுத்தும் விதத்திற்கு வரலாற்றுப் பூர்வமான இரண்டு கேள்விகள் உள்ளன. முதலாவது, பேதுருவின் வாசகர்களால் அனுபவிக்கப்பட்ட சோதனைகள் மற்றும் பாடுகள் ஆகியவற்றில் ரோம அதிகாரிகள் ஏதாவது ஒரு வகையில் ஈடுபட்டிருந்தனரா? 60களின் மத்தியகாலத்தில் பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, பேரரசர் தமது பேரரசு முழுவதிற்கும் கிறிஸ்தவத்திற்கு எதிரான ஆணையைப் பிறப்பித்திருக்கச் சாத்தியக்கூறு இல்லாது இருக்கையில், மாகாணங்களின் இருந்த ரோம அதிகாரிகள் விசுவாசிகளின் வாழ்வைப் பரிதாபத்திற்கு உரியதாக ஆக்குவதற்கு, உள்ளூர் சார்ந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்வதில் பங்கேற்றல் மற்றும் அவற்றை அங்கீகரித்தல் ஆகியவற்றைச் செய்திருப்பார்கள் என்பது யோசனைக்கு அப்பாற்பட்டு இருப்பதில்லை. நவீன படிப்புகள் அனுமதிக்கச் சாயும் அளவுக்கு மேலாகவே, பேதுரு நிருபத்தின் முதல் வாசகர்களால் அனுபவிக்கப்பட்ட பாடுகளுக்கு ரோம அலுவலகம் அதிக பங்களித்திருக்கும்.

ரோமாபுரி "பாபிலோனுடன்" அடையாளப்படுத்தப்படுவதால் எழும்பும் இரண்டாவது கேள்வி, ரோம அதிகாரத்தின் தொடர்பாக விசுவாசிகள் தங்களை எவ்வாறு காணச்சாய்ந்தனர் என்பது பற்றி அக்கறை கொண்டுள்ளது. ரோமர்கள் பேரரசை ஆட்சி செய்த வழி பற்றி அவர்கள் என்ன நினைத்தனர்? அது கனிவான ஏற்றுக்கொள்ளுதலாக இருந்ததா அல்லது ரோம அரசை தேவபக்தி இல்லாமை மற்றும் உணர்ச்சிப்பெருக்கான பொல்லாங்கு செய்தல் ஆகியவற்றின் ஆதாரமூலமாகக் கண்ணோக்கும் நிலை அவர்களின் அடிமனங்களில் நிலவியதா? பழைய ஏற்பாட்டில் "பாபிலோன்" என்பது தேவனுடைய மக்களை அழிப்பதாக மாத்திரமல்ல, ஆனால் அந்த நகரமே உணர்ச்சியால் செய்யப்படும் பாவங்கள் மற்றும் விக்கிரக ஆராதனை ஆகியவற்றிற்கு அடையாளமாகவும் இருந்தது. கிறிஸ்தவர்கள் ரோமாபுரியைப் பற்றி மங்கலான கண்ணோட்டம் கொண்டிருந்தால், மற்றும் அவர்களின் கண்ணோட்டமானது, இந்தப் புதிய மார்க்கத்தைப் பழித்துரைத்தவர்கள் மத்தியில் பரவலாக அறிப்பட்டிருந்தால் அது, ரோமாபுரிக்கு இந்த புதிய மார்க்கத்தை அடக்கி ஒடுக்குவதற்கான காரணியாக இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

அரசாங்க அதிகாரிகளுக்கு விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டும் என்று வேண்டிக்கேட்டுக்கொள்ளும் 2:13-17 உடன் இணைத்துப் பார்க்கும்போது, இவையாவும் குறிப்பாக ஆர்வத்திற்கு உரியதாக இருக்கின்றன. 5:13ன் "பாபிலோன்" என்பது **"மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும்"** (2:13) என்ற பரப்பெல்லைக்குள் விழுகிறது, இவை இரண்டும் மிகச்சரியாக சமானப்படுத்தப்படாது இருந்தாலும் இது இவ்வாறே விழுகிறது. பேதுரு, **"நீங்கள் பாபிலோனுக்குக் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள்"** என்று கூறியிருந்தால் என்னவாகி இருக்கும்? ரோமாபுரியைப் பேதுரு "பாபிலோன்"

என்று அழைத்தபோது அவர், கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் கிறிஸ்தவ உயர்கொள்கைகள் ஆகியவற்றின் மீது பேரரசின் தாக்கம் பற்றித் தமது வாசகர்களுடன் ஒரு எதிர்மறை முடிவை வெளிப்படுத்தினார். மற்றும் இந்த எதிர்மறை முடிவானது. ரோம உலகில் கிறிஸ்தவ விசுவாசம் பரவத்தொடங்கிய தொடக்க நாட்களிலேயேகூட அதற்கு ரோமாபுரியின் பதில் செயலுக்கான ஒரு காரணியாக இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

பேதுரு தமது இந்த நிருபத்தின் வாசகர்களை, **"தெரிந்துகொள்ளப்பட்ட [பரதேசிகளுக்கு]"** என்று அழைத்து இதை எழுதத் தொடங்கினார். இங்கு முடிவுப் பகுதியிலும்கூட அதே வார்த்தை ஏற்புடையதாக உள்ளது. பாபிலோனில் இருந்த சபையானது அவர்களுடனே கூட **தெரிந்துகொள்ளப்பட்ட**தாக இருந்தது. பவுலைப் போலவே பேதுருவும், முன்பு இஸ்ரவேல் மக்களினத்திற்கு குறிப்பிடப்பட்ட சொற்றொடரை தேவனுடைய புதிய இஸ்ரவேலருக்கு நடைமுறைப்படுத்தினார். உலகம் முழுவதிலும் உள்ள சகோதகர்களின் சகோதரத்துவமானது சாத்தியப்படும் போதெல்லாம் ஒருவர் மற்றவருக்கு **வாழ்த்துக்களை** அனுப்புகின்றனர். உலகத்தில் தேவன் மகிமைப்படுத்தப்படும்படிக்கு விசுவாசிகள் கொண்டுள்ள பொதுவான நோக்கத்தினால், மொழி மற்றும் மக்களின் எல்லை ஆகிய தடைகள் மூழ்கடிக்கப்படுகின்றன.

பேதுருவுடன் இருந்த சகோதரர்களில் **மாற்கும்** "வாழ்த்துதல்" கூறினார் என்று அவரை மாத்திரம் தனிப்படக் குறிப்பிடப்படுதல் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. "மாற்கு" என்பது பொதுவான ரோமாபுரிப் பெயராக இருக்கையில், இந்தப் பெயர்கொண்ட சுவிசேஷத்தை எழுதியவர் இவர்தாம் என்பதில் சிறிதளவே சந்தேகம் உள்ளது. தொடக்க நாட்களில் எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள் மாற்குவின் தாயான மரியாளின் வீட்டில் முறையாகக் கூடிவந்தனர் (நடபடிகள் 12:12). பவுலின் முதல் சுவிசேஷப் பயணத்தில் மாற்குவும் அவரது இனத்தாரான பர்னபாவும் (கொலோசெயர் 4:10) பவுலுடன் கூடப் பயணம் சென்றனர், ஆனால் அப்பயணம் முடியும் முன்னரே அவர் [மாற்கு] திரும்பிச் சென்று விட்டார் (நடபடிகள் 13:13). பவுல் மற்றும் பேதுரு ஆகிய இருவரின் மரணத்திற்கும் முன்பு ஒரு சில ஆண்டுகள், அவர்கள் இருவருக்குமே மாற்கு உதவி செய்திருந்தார் என்பதைக் காண்பது ஆர்வத்திற்கு உரிய விஷயமாக உள்ளது (2 தீமோத்தேயு 4:11). இவரைப் பேதுரு மிகவும் பிரியத்துடன் **என் குமாரனாகிய மாற்கு** என்று குறிப்பிட்டார்.

வசனம் 14. இயேசுவினால் கூறப்பட்ட "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" (யோவான் 13:35) என்ற வார்த்தைகளைப் பற்றிக் கிறிஸ்தவ சமூகத்தினர் உணர்வுள்ளவர்களாக இருந்தனர். அவர்களைச் சுற்றிலும் இருந்த புறதெய்வ வணக்கக் கூட்டத்தவர்கள், விசுவாசிகள் ஒருவர் மற்றவர் மீது காண்பிக்கும் ஆதரவு மற்றும் பிரியம் ஆகியவற்றினால் மனம் ஈர்க்கப்பட்டனர். பேதுரு, **ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள் என்று** கூறி தமது நிருபத்தை முடித்தார். பவுல் சில வேளைகளில் தமது நிருபத்தை இதேபோல வாழ்த்துக்களுடன் முடித்தார் (ரோமர் 16:16; 1 கொரிந்தியர் 16:20; 2 கொரிந்தியர் 13:12; 1 தெசலோனிக்கேயர் 5:26).

இந்தப் பழங்காலப் பதிவேடுகளின் வார்த்தைகள், தங்கள் மூல வரலாற்று மற்றும் இலக்கியக் காட்சி அமைவில் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை மாத்திரமின்றி, நூற்றாண்டுகளுக்குப் பாலம் இட்டு இவ்வார்த்தைகள் நவீன வாழ்விற்கு நடைமுறைப்படுத்துவது என்ன என்பதையும், நவீன வாசகர்களுக்கு வேதவசனங்களின் விளக்கம் எடுத்துரைக்க வேண்டியதாக உள்ளது. பேதுருவும் பவுலும் தங்கள் வாசகர்களுக்கு "ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள்" என்று கட்டளை இட்டனர். இது "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (நடபடிகள் 2:38) என்பது போன்று தெளிவாக இருந்தாலும், ஒரு சில கிறிஸ்தவர்கள் இதை நேரடிப்பொருளில் எடுத்துக்கொண்டு, கிறிஸ்தவ வாழ்விற்கு இது ஒரு அத்தியாவசியத்தேவை என்பது போல் நினைக்கின்றனர். முதல் நூற்றாண்டில் சமூக வாழ்வில் ஆளுகை செய்த சமூகப் பழக்க வழக்கங்களை மனதில் கொண்டு, "அன்பின் முத்தத்தோடே" என்ற கட்டளையை நீக்கிப்போடுதலே பொதுவான வழக்கமாக உள்ளது. "அன்பின் முத்தத்தோடே" என்பதற்குப் பதிலாக, சாதாரண வாழ்த்தான, கை குலுக்குதல் போன்ற பழக்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே பலருக்கு மனநிறைவு அளிக்கும் விஷயமாக உள்ளது. இதமான வாழ்த்து என்பதே முக்கியமான விஷயம் என்பதைப் பகுத்தறிய வேண்டும்.

இந்தப் பகுத்தறிதல் கருத்தை ஏற்படுத்துகிறது, ஆனால் ஒரு பிரச்சனையை அறிமுகப்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட கட்டளைக்குக் கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த சமூகப்பழக்கங்களை வைத்துக்கொள்ளலாம் என்ற கொள்கை தழுவிக் கொள்ளப்பட்டபின்பு, அந்த கொள்கை எவ்வளவு தூரத்திற்கு நடைமுறைப்படும்? இந்தப் கேள்வி சிக்கலானது மற்றும் இதை இங்கு முழுமையாக விவாதிக்க இயலாது. இருப்பினும், வேதாகமத்தின் ஒவ்வொரு கட்டளையும், நவீன கிறிஸ்தவ வாழ்வின் தகுதியின்றி அப்படியே நடைமுறைப்படுத்தப்பட இயலாது என்பது தெளிவு. வேதாகமத்தில் உள்ள சில கட்டளைகள் உலகளாவியவையாகவும் அவைகள் தரப்பட்ட காலத்தில் இருந்த சமூகத்தின் சந்தர்ப்பப் பொருளின் செயல்விளைவு அவற்றில் கொஞ்சமே உள்ளன. மற்ற கட்டளைகள் அவைகள் தரப்பட்ட கலாச்சாரத்துடன் நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பழக்கவழக்கங்களில் வெளிப்பாட்டைக் காணுதலை ஒரு கொள்கையாகச் சில கட்டளைகள் கொண்டுள்ளன. குறிப்பிட்ட பழக்கவழக்கங்கள் மாறுபடலாம். ஒரு கை குலுக்குதல் அல்லது "அன்பின் முத்தம்" என்பது விசுவாசிகள் ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள மதிப்பையும் பிரியத்தையும் வெளிப்படுத்துகிறது.

அப்போஸ்தலரின் கடைசி வார்த்தைகள் பண்பான ஆசீர்வாதமாக உள்ளன. **கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக.** என்று அவர் எழுதினார். பேதுருவும் அவரது வாசகர்களும் "கிறிஸ்துவுக்குள்" இருந்தனர் என்பது அவர்களுக்கு மிகவும் மதிப்புள்ள விஷயமாக இருந்தது. "கிறிஸ்துவுக்குள்" இருத்தல் என்பது அவரது மக்கள் சமூகத்தின் பகுதியாக இருத்தல் என்பதாகும்; அது அவரது சபையின் உறுப்பினராக இருத்தல் என்பதாகும். அது மீட்டுக்கொள்ளப்பட்டதாக இருந்தது, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் ஒருவரின் பாவங்கள்

எடுத்துப்போடப்பட்டது. பேதுருவின் நம்பிக்கையையும் அவரது விசுவாசத்தையும் பகிர்ந்து கொண்டவர்களுக்கு **“சமாதானமுண்டாவதாக”** என்று அவர் வாழ்த்தினார், இது நன்றாக இருத்தல், நல்ல ஆரோக்கியம் மற்றும் ஒருவர் தமது அயலகத்தவருடன் இசைவிணக்கமாயிருத்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது. அவர்களும் அவரும் இந்த உலகம் தங்களுக்கு என்ன துன்பத்தை அளித்தாலும் அவற்றின் ஊடே கடந்து வந்து கிறிஸ்துவின் மகிமையான வெளிப்படுதலின் இளைப்பாறுதலைக் காண்பார்கள்.

குறிப்புகள்:

[1]NIV வேதாகமம், வேறுபாடு ஒன்றைத் தக்கவைக்கச் சந்தர்ப்பப்பொருள் ரீதியான காரணம் ஏதேனும் இல்லாதபட்சத்தில், வேதாகமப் பாத்திரங்களின் பெயருக்கு ஒரே எழுத்துக்குறிப்பை மாத்திரம் பயன்படுத்துதல் என்ற நடைமுறையைத் தழுவியுள்ளது. இவ்வாறாக, எபிரெய மொழியில் இருந்து ஒலி மாற்றம் செய்யப்பட்ட பெயர்களும் கிரேக்க மொழியில் இருந்து ஒலிமாற்றம் செய்யப்பட்ட பெயர்களும் ஒரேவிதமாகவே உச்சரிக்கப்பட்டன. மற்றும் பல்வகைப் பெயர்களைக் கொண்ட பாத்திரங்கள், [உதாரணமாக கேபா, பேதுரு சீமோன்] பெரும்பாலும் ஒரே பெயரைக் கொண்டே குறிப்பிடப்பட்டன, இது அவர்களை ஆங்கில வாசகர்கள் சுலபமாக அடையாளம் கண்டுகொள்ளப் பயன்பட்டது. [2]Wayne A. Grudem, *The First Epistle of Peter: An Introduction and Commentary,* Tyndale New Testament Commentaries, vol. 17 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 23–24. [3] Ibid., 25–31.



ஆசியா மைனர் பகுதியில் 1 பேதுரு நிருபம் சுற்றுக்கு விடப்படுதல்